இடுதிரை, s. A curtain, திரைச்சீலை.

இடுமருந்து, s. A philter, வசமாக்கிடுமருந்து.

இட்டறுதி, s. A fixed time or limit, நியமித்தவெல்லை. 2. A critical time. இரண்டுக்குத்தகாலம் 3. Destitution, extreme want, வறுமை.

இட்டுக்கட்டிக்கொள்ள, inf. To disparage, asperse, to bring reproach upon.

முன்னிட்டுப்போக, inf. To go forward.

பின்னிட்டுப்போக, inf. To go backward.

இடுகை, v. noun. Bestowing, ஈகை. 2. s. Gift, கொடை.

இடுகு, கிறது, இடுகினது, ம், இடுக, v. n. To become slender, strait, confined, சுருங்க. (p.)

இடுகிடைமடவார். Slender-waisted women.

இடுகு, v. noun. Narrowness, closeness, ஒடுக்கம்.

இடுக்கண், s. Suffering, affliction, distress, adversity, straits, tribulation, persecution, துன்பம்.

இடுக்கட்படுத்த, inf. To afflict, oppress, persecute, துன்பப்படுத்த.

இடுக்கு, s. The claws of a lobster, scorpion, &c., கொடுக்கு. 2. A small hole, nook or corner—as the parting between the fingers or teeth, the arm-pit, any parting where a thing becomes infixed, confined, pressed, &c., a recess, சந்து. 3. Narrowness, trouble, துன்பம்.

பல்லிடுக்கிலேயகப்பட்டுக்கொண்டது. It has stuck between the teeth.

இடுக்கணி, s. [prov.] A corner, nook where a thing may be held—as under the arms, between the fingers, under the hams, or where a person or thing may become confined, jammed in, wedged in, &c.

இடுக்குமரம், s. A narrow passage through posts to a field, for men, which cattle cannot pass, கடவைமரம்.

இடுக்குமுடக்கு—இடுக்குமுடுக்கு, s. A close, confined place, a narrow corner, முட்டுச்சந்து. 2. Straits, difficult circumstances, embarrassment, difficulty, கஷ்டம். (c.)

இடுக்குவழி, s. A narrow way or lane.

இடுக்குவாசல், s. A strait gate.

இடுக்கு, கிறேன், இடுக்கினேன், வேன், இடுக்க, v. a. To press as between two boards, நெருக்க. 2. To pinch, இமிழ்ப்பிடிக்க. 3. To take between the fingers, toes, &c., to grasp—as a crab, with its claws; to lay hold of—as with pincers, to take under arms or between two things, குறடுமுதலியவற்றாலிடுக்க.

அவள்பிள்ளையையிடுக்கிக்கொண்டுவந்தாள். She came with her child on the hip, holding him under the arm.

பொருளையிடுக்கிப்பிடிக்கிறான். He holds his property very stingily, tenaciously.

இடுக்கி, s. Pincers, tongs, forceps, tweezers, nippers, குறடு. 2. A stingy, parsimonious person, a niggard, உலோபி.

முள்ளிடுக்கி, s. Pincers to draw out thorns from the feet.

இடுக்கிடை, s. Closeness, narrowness, நெருக்கம்.

இடுக்குதடி, s. A double stick used to press things with—as that of a toddy-drawer to press the flower or fruit-stem of the palmyra, &c.

இடுக்குபனை, s. [prov.] Palmyra trees from which toddy is drawn.

இடுக்குபிள்ளை, s. A child in arms carried on the hip, கக்கத்திலிடுக்கும்பருவமுடையபிள்ளை.

இடுக்குமரம், s. A kind of oil-press, எண்ணெயூற்றுமரம்.

இடுக்கம், v. noun. Closeness, confinement, narrowness, நெருக்கம். 2. Affliction, adversity, straits, இடுக்கண்.

இடுக்கப்பட, inf. To become narrow, close, confined, ஒடுக்கப்பட. 2. To be oppressed, be persecuted, to suffer, துன்பப்பட.

இடுக்கப்படுத்த, inf. [caus.] To make narrow, close, &c., நெருக்க. 2. To oppress, persecute, distress, துன்பப்படுத்த.

இடுப்பு, s. The hip, sides, மருங்குல். (c.)

இடுப்புவலி, s. The lumbago, pain in the loins.

இடும்பன், s. The name of an inferior deity—one of the generals in Skanda's army, குமாரசேனைவல்செய்வோன். 2. The name of a giant, இராக்கதன்.

இடும்பி, s. A giantess, the sister of இடும்பன், இராக்கதி.

இடும்பிகொழுநன், s. Bhima—one of the Pandavas, வீமன்.

இடும்பு, s. Haughtiness, arrogance, அகந்தை. 2. Audacity, impudence, சேட்டை. 3. Disesteem, disdain, contumely, அவமதிப்பு. 4. Cruelty, oppression, tyranny, persecution, கொடுமை.

இடும்பர், s. Haughty persons, the arrogant, செருக்குடையோர். 2. As இராக்கதர், which see.

இடும்பி, s. A haughty woman, செருக்குடையாள்.

இடும்பை, s. Suffering, affliction, distress, calamity, துன்பம். 2. Evil, தீமை. 3. Fear, அச்சம். 4. Poverty, வறுமை. 5. Pride—as one of the eight evil dispositions, விகாரமெட்டிலொன்று.

வேண்டுதல்வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கியாண்டுமிடும்பையில. To those who have adored, at the feet of him who is without desire or aversion, there shall be no suffering for eternity.

*இடுலி, s. A female turtle, பெண்ணாமை. Wils. p. 360. Duli. (p.)

இடுவந்தி, s. Calumny, defamation, false accusation, அபாண்டம். 2. Oppression, extortion, அடாவரி. 3. Injustice, அநீதி.

இடுவந்திக்காரன், s. A calumniator.

இடை, s. Middle, midst, centre, நடு. 2. The middle of a body, the waist, மருங்குல். 3. As இடைச்சொல்—a particle. 4. Interval of time, &c., நடுநேரம். 5. (p.) Place, room, space, position, situation, இடம். 6. A form of the seventh or locative case, ஏழனுருபு. 7. The side of a thing, place, quarter, region, பக்கம். 8. An elephant, யானை. 9. Interim, opportunity, con-

venient season, season, சமயம். 10. The full moon, பௌர்ணை. 11. A measure of length, breadth, thickness, &c., நீட்டலளவையிலொன்று. 12. One of the three நாடி, or passages for the breath—that through the left nostril, the lunar nerve or vessel, திரிநாடியிலொன்று. 13. One of the (நாடி) nerves or arteries, தசநாடியிலொன்று. (See நாடி.) 14. (misused for எடை.) Weight, gravity நிறை. (See சுழிமுனை, and பிங்கலை.)

நல்லாரிடைப்புக்கு. Associating with the good.

இடைகலை, *s.* The breath of the left nostril—as சந்திரகலை. See பிங்கலை.

இடைக்கட்டு, *s.* A girdle, sash. 2. The allowance made for the weight of a vessel before weighing any thing in it.

இடைக்காடன், *s.* A Rishi or சித்தன்—one of the eighteen.

இடைக்கிடை. Here and there, interspersed, நடுநடுவே. 2. Of like weight, even weight, equilibrium, நிறைக்குநிறை.

இடைக்குலநாதன், *s.* Vishnu as brought up by shepherds.

இடைக்குறை, *s.* [*in grammar.*] A word shortened in the middle, syncope, elision; as ஒதி for ஓந்தி, camelion. (See விகாரம்.) 2. An island, blank space in a river, &c., ஆற்றிடைக்குறை.

இடைக்கொள்ளை, *s.* Pillaging, plunder, free booty, plundering without regard to either party, நடுக்கொள்ளை. 2. (*in Agastiar.*) The ravages of an epidemic disease, கொள்ளைநோயான்வருமழிவு.

இடைசுருங்குபறை, *s.* A small drum tapering in the middle, உடுக்கை.

இடைசூரி, *s.* [*prov.*] Gold or silver-beads interspersed here and there between sacred or other beads, உருத்திராக்கமுதலியவற்றிற்கிடையிற்கோர்த்திடுவது.

இடைச்சனி—இடையெழுஞ்சனி, *s.* The eleventh lunar asterism, in which Saturn is considered very malignant. See கடையெழுஞ்சனி and முதலெழுஞ்சனி.

இடைச்சன், *s.* The second child, இரண்டாம்பேறு. (*c.*)

இடைச்சாதி, *s.* The second or middle tribe of வைசியர்—the third caste.

இடைச்சேரி, *s.* A shepherd's village.

இடைத்தட்டு, *s.* Getting profit indirectly by interposing between parties, &c. or by purchasing goods of one and selling them again from a distance.

இடைநடு, *s.* The middle emphatically (a pleonasm in rhetoric.)

இடைநரை, *s.* Hair or beard growing grey here and there.

இடைநிலை, *s.* In verbs generally, the characteristics of tense, வினையிடைநிலை. 2. A neutral state, neutral or middle state, stagnation in business transactions, இருபுறத்திலுஞ்சாராமலிற்கை. 3. In some compound nouns, one of the component parts, பெயரிடைநிலை.

இடைநிலைத்தீபகம், *s.* One of the beauties of poetry, விளக்கணிமூன்றிலொன்று. See தீபகம்.

இடைநிலைமயக்கு, *s.* [*in orthography.*] The proper combination of letters in the middle of a word, மொழியிடைமெய்யெழுத்து மயக்கிநிற்கை—if the same consonant be repeated in the middle of a word, it is called, உடனிலைமெய்ம்மயக்கு; if otherwise, it is called, வேற்றுநிலைமெய்ம்மயக்கு.

இடைநீரினிற்க, *inf.* [*prov.*] To swim with the body erect and the water only up to the waist.

இடைப்பட, *inf.* To interpose, happen in the interim, come in, between, among, &c., to happen, இடையிலுண்டாக.

இடைப்படுதானம், *s.* Giving of a secondary order, bestowing through pity on the poor, the blind, மத்திமதானம்.

இடைப்பழம், *s.* Ripe fruits interspersed among the unripe.

இடைப்பழம்பழுத்தல், *v. noun.* Ripening as fruits here and there.

இடைப்பிறவரல், *v. noun.* Words intervening between any one word and another with which it makes sense—as between the noun and its attribute, &c., எழுவாய்முதலிய தொடரினுள் இடையிலேற்ற பிறசொல்வரல்.

இடைப்புழுதி, *s.* Land in a state for sowing, neither very moist nor very dry, காய்ந்துங்காயாதிருக்கிறபுழுதி.

இடைப்புள்ளி, *s.* Marks scattered here and there—as in tobacco leaves, &c., fruits, &c.

இடைப்பூட்டு, *s.* A truss, girdle, அரைப்பூட்டு.

இடைப்போகம், *s.* An interior crop, out of season, இடையிற்புன்பயிர்விளைவு.

இடைமடக்கு, *s.* Silencing one by vociferation, இடையிற்றடுக்கை. 2. Haughty speaking, இடக்குமடக்கானபேச்சு. 3. [*in prosody.*] The repetition of a word in the middle of a line with a varied meaning. See மடக்கு.

இடைமுள், *s.* Small, new eruptions about a healing ulcer or bile, மறுமுளைப்பாய்கை. 2. A disease, a kind of eruption, ஓர்கரப்பன்.

இடைமேடு, *s.* Rice-land of moderate height, நடுத்தரமானமேடு.

இடையற, *inf.* To cease or terminate suddenly.

இடையறுவன்பு, *s.* Never-ceasing love.

இடையன், *s.* (*fem.* இடைச்சி.) A shepherd—as occupying a middle position.

இடைப்புத்திபிடரியிலே. The shepherds have their wit in their nape; i. e. they have none.

இடையன்கால்வெள்ளி, *s.* [*prov.*] The star Aldabaran in the constellation Aries, ஓர்விண்மீன்.

இடையாந்தரம், *s.* An intermediate space or time.

அந்தவேலை யிடையாந்தரத்திலே கெட்டுப்போயிற்று. The business was interrupted, spoiled in the interim.

இடையாயர், *s.* Persons of a middling class in piety, excellence, &c. See தலை and கடை.

இடையிட, *inf.* To intervene, be interspersed, to have intermediate spaces either of time or place, to intermit, happen intermediately, நடுவிற்சேர.

இடையிட்டுவந்தசெல்வம், *s.* Acquired wealth and prosperity, obtained during life, not derived from ancestors.

இடையிட்டெதுகை, *s.* The எதுகை or rhyming of the third letter in every other line.

இடையிடை. From time to time, at intervals, intervening space.

இடையிலேகொண்டுபோக, *inf.* To take by theft or force, to plunder fruits, furniture, &c. 2. To take off property at one's death—as persons who are not heirs. 3. To seize and carry off property from one who has stolen it—as a constable from a thief. (*c.*)

இடையிலேவயிறுவளர்க்க, *inf.* To get a living at the expense of others, not reducing one's own stock. (*c.*)

இடையினவெதுகை, *s.* One of the இனவெதுகை—that in which the second letter of each line is any of the medial letters.

இடையீடு, *s.* Obstacle, impediment, frustration, விக்கினம். 2. Equivalent, equilibrium, சமம்.

இடையூறு, *s.* Frustration, interruption, disappointment, obstruction, hinderance, mishap, casualty, contingence, misfortune, disaster, இடர். (*c.*)

இடையெண், *s.* A poem increasing and decreasing like the waves of the sea, அம்போதரங்கத்தொன்று.

இடையொடுகடைமடக்கு, *s.* A figure in Rhetoric, repetition of a word or phrase in the middle and end of a line with different meanings, மடக்கணியிலொன்று.

இடைவழக்கு, *s.* [*prov.*] A suit at law instituted by a new claimant while the previous one is going forward, கிளைவழக்கு.

இடைவழக்காளி, *s.* An intervening party in a law-suit.

இடைவழி, *s.* Midway.

இடைவள்ளல், *s.* A term common to the second of the three classes of kings famed for liberality. (*p.*)

இடைவாய், *s.* The degrees marked upon a steel-yard.

இடைவிட, *inf.* To intermit, suspend, interrupt, leave intermissions, interstices, &c.

இடைவிட்டுவிட்டு. Every other one.

இடைவிடாமழை, *s.* Incessant rain.

இடைவிடாமல், *neg. v. part.* Incessantly, constantly, without intermission.

இடைவெட்டுப்பணம், *s.* A clipped or imperfectly stamped coin, மாறுமுத்திரைவிழுந்தபணம். 2. [*prov.*] Profit made indirectly, பொறுக்கிப்பெற்றபணம்.

இடைவெட்டுப்பேச்சு, *s.* Derision, ridicule.

இடைவெளி, *s.* An intervening space, நடுவெளி.

எட்கிடை—எள்ளிடை, *s.* The thickness of a rape-seed. (*c.*)
நான்குவிரற்கிடை—நான்குவிரலிடை. Four fingers-breadth, thickness.
முதலிடைகடை. Beginning, middle and end.

இடை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To recede, go out of one's way, ஒதுங்க. 2. To retreat—as before a foe, பின்னிட. 3. To be reduced in circumstances, to become poor, தாழ.
கதிரெதிரிருள்போலிடைந்தவப்பொழுதில். While (his army) was scattered before the enemy—as darkness by the sun.

இடைஞ்சல், *s.* Narrowness, இடுக்கு. 2. Closeness, நெருக்கம். 3. Oppression, tyranny, persecution, உபத்திரவம். 4. Obstruction, தடை. (*c.*)
எனக்கிடைஞ்சலாயிருக்கிறது. I am driven to straits, I am obstructed in the way.
அதற்கிடைஞ்சலாய்நின்றேன். I was a hinderance to it.
இடைஞ்சற்பட, *inf.* To suffer oppression, persecution, calamity.
இடைஞ்சற்பண்ண, *inf.* To molest, frustrate, obstruct, retard, oppose.

இடோலி, *s.* (*Tel.* డోలి.) A dooly, a litter, ஓர்வகைச்சிவிகை.

இடோல், *s.* (*Tel.* డోలు.) A kind of drum, ஓர்பறை.

இட்டடை, *s.* [*prop.* இட்டிடை.] Poverty, misery, calamity, துன்பம்.

*இட்டம்—இஷ்டம், *s.* Voluntariness, freedom of choice, option, one's own pleasure, பிரியம். 2. Desire, wish, choice, opinion, approbation, விருப்பம். 3. Kindness, friendship, love, attachment, affection, அன்பு. Wils. p. 134. Ishta. 4. Manumission of a slave, அடிமைவிடுதலை. 5. [*in astrology.*] Indication of good or evil from the planets according to their position, கிரகநிலையாலாகும்பலாபலன். 6. [*in astronomy.*] The longitudinal difference between தருவம், and the end of a sign.
இட்டகாமியம்—இஷ்டகாமியம், *s.* What delights, satisfies the mind.
இட்டங்கட்ட—இட்டம்வைக்க, *inf.* To construct a plan, or lay down the situations of the stars, in entering on astrological calculations, இராசிநிலைவரைய.
இட்டசட்டம்—இஷ்டசட்டம், *s.* Voluntariness, freedom from constraint, free choice, யதேச்சை.
இஷ்டதேவதை, *s.* The family or guardian deity, தான்வழிபடுதெய்வம். Wils. p. 134. Ishtadevata.
இஷ்டபிரசாதம், *s.* A gift from benevolence, free grace, கைம்மாறுவேண்டாக்கொடை. 2. Free grace of God, தேவகிருபை. 3. Boiled rice offered to the idols and eaten joyfully by the offerers, தேவபிரசாதம்.—*Note.* Among christians it is often used for the eucharist.
இஷ்டபோகம், *s.* Enjoyment of wished for pleasure, gratification, விரும்பினபடியநுபவிக்கை.
இஷ்டம்பண்ண, *inf.* To emancipate a slave (commonly இட்டமாக்க.) 2. To make friendship with one, to ingratiate one's self with another, சந்தோஷம்பண்ணிக்கொள்ள.
இட்டம்வைக்க, *inf.* To love, set the affections on one.

இட்டலி, *s.* A kind of cake, pie, ஓர்சிற்றுண்டி.

இட்டளம், *s.* Affliction, pain, sorrow, துன்பம், (நிக.) 2. Weakness, languor, lassitude, தளர்வு.

இட்டறுதி, *s.* See under இடு.

இட்டி, *s.* A spear, lance, ஈட்டி. (சது.)

*இட்டி—இஷ்டி, *s.* A sacrifice, any sacrificial rite, யாகம்; [*ex* இஷ, to desire.] Wils. p. 134. Ishti.

*இட்டிகை, *s.* Bricks, செங்கல். Wils. p. 134. Ishtika. 2. A narrow way, இடுக்குவழி. 3. A mixture of wax, resin, &c., used by gold-smiths, கூட்டுமெழுகு.

இட்டிடை, *s.* Smallness, minuteness, சிறுமை. 2. Straits, adversity, தரித்திரம். 3. [*prov.*] A vise in the turner's lathe, கடைச்சற்கருவியினுறுப்பு.

இட்டிடைஞ்சல், *s.* [*prov.*] Injustice, oppression, persecution, துன்பப்படுகை. 2. Adversity, straits, great extremity, extreme necessity, வறுமை.
இது இட்டிடைஞ்சல்வருங்காலத்திலுதவும். This will render assistance at the time of extreme necessity.
யாதொரு இட்டிடைஞ்சலும் வராமற் காப்பாற்றினர். He protected me from all oppressions.

*இட்டு—இஷ்டு, *s.* Desire, wish, விருப்பம். Wils. p. 134. Ishtu.

இட்டு. [*ex* இடு.] A particle sometimes employed as a component of verbs, அசைச்சொல்—as வந்திட்டான், he is come.

இட்டு, *s.* A little, small thing, சிறிது.
ஆகாறளவிட்டிதாயினும். Though the income be small. (குறள்.)

இட்டுறுதி, *s.* Firmness, severity, rigor, கண்டிதம்.

இட்டேற்றம், *s.* [*prov.*] Tyranny, cruelty, injustice, கொடுமை. 2. A gross falsehood, false accusation, முழுப்பொய்.
இப்படி இட்டேற்றம்பேசுகிறதாகாது. It is not good to speak such a gross falsehood.
ஏனிப்படி இட்டேற்றம்பண்ணுகிறய்? Why do you do so unjust an action?

இட்டோடு, *s.* Disunion, discord, separation, பிரிவு.

இட்டோட்டு, *s.* [*prov.*] Vexation, trouble, அலைக்கழிவு.

இணக்கம், *s.* Agreement, union, congeniality, conformity, congruity, conjunction, connection, friendship, familiarity, acquiescence, acceptableness, உடன்பாடு. 2. Fitness, suitableness, acceptableness, பொருத்தம். 3. Adjustment, correction, amendment, திருத்தம்.
இணக்கமறிந்திணங்கு. Make friendship with the worthy.
நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும். Alliance with the unworthy will cause mutual pain.
இணக்கப்படுத்த, *inf.* To bring about a reconciliation between two parties.
இணக்கம்பேச, *inf.* To try to reconcile two parties.
இணக்கோலை, *s.* A deed of cession, agreement, reconciliation, உடம்படிக்கைப்பத்திரம்.

இணக்கு, கிறேன், இணக்கினேன், வேன், இணக்க, *v. a.* To cause to agree, to unite, connect, adjust, fit, correct, confirm, rectify, bring over, persuade, reconcile, conciliate, உடன்படுத்த.

இணங்கன், *s.* Salt-petre, வெடியுப்பு.

இணங்கு, *s.* A devil, பிசாசம். (*p.*)

இணங்கு, கிறேன், இணங்கினேன், வேன், இணங்க, *v. n.* To agree, consent, yield, comply with, to be reconciled; to acquiesce in, be agreeable to, &c., உடன்பட.
அதற்கவனிணங்கவில்லை. He has not acquiesced in, or been satisfied with it.
இணங்கலர்—இணங்கார், *s.* Enemies, பகைவர்.
இணங்கி, *s.* A lady's female friend or companion, தோழி.

இணர், *s.* A cluster of flowers, பூங்கொத்து. 2. A blossom, a blown flower, பூமலர். 3. Filaments of a flower, பூந்தாது. 4. The கிச்சிலி tree, Citrus, *L.*
இணரெரி, *s.* A large fire consisting of many flames, பலசுடருள்ளநெருப்பு.
இணரெரிதோய்வன்னவின்னாசெயினும். Though one causes affliction as cruel as that effected by fire of many flames. (குறள், வெகுளாமை.)

இணுட்டு, *s.* [*prov.*] Fish-gills, மீன்செவுள். 2. A small piece of ola, ஓலைத்துண்டு.

இணுப்பு, கிறேன், இணுப்பினேன், வேன், இணுப்ப, *v. a.* [*prov. as also* அணுப்பு.] To deceive, cheat, disappoint, entice, ஏய்க்க.
இணுப்பு, *v. noun.* Deceit, cheating, defrauding, ஏய்ப்பு.

இணி, *s.* [*prop.* அணி.] A row of squares in a rice-field, கண்ணறை. 2. Boundary, limit, எல்லை. 3. A ladder, ஏணி.

இணுக்கு, *s.* Twig as formed on branches, வளார். 2. A handful of cocoanut leaves, &c., or of fruit from a tree plucked off, கைப்பிடியளவிணுக்கப்பட்டது. (*c.*) 3. The interstices between the separate olas of the palm leaf, இரண்டோலைகளினிடைவெளி. 4. The fork or joining of the twig to its larger twig or branch, கிளைமுதலியவைகளினிடைச்சந்து.

இணுக்கு, கிறேன், இணுக்கினேன், வேன், இணுக்க, *v. a.* As இணுங்கு.

இணுங்கு, கிறேன், இணுங்கினேன், வேன், இணுங்க, *v. a.* To pull off with force, split off—as a twig from a branch—a down from a feather—palm leaves, &c., from a tree; to tear off with force, இசிக்க.

இணை, *s.* Union, conjunction, communion, fellowship, இசைவு. 2. Comparison, parallel, similitude, resemblance, ஒப்பு. 3. (*p.*) Two things of a kind, a pair, couple, brace, துணை. 4. A companion, associate, partner, escort, protector, துணைவன். 5. Desire, இச்சை. 6. Women's hair, கூந்தல்.
இணையிலெஞ்சமே. O! mind, debased beyond comparison. (வைராக்.)

இறைகழலிணைமேவியவிமலர். Holy men who unite themselves to the feet of the Supreme Being.

இணைக்கயல், s. A couple of carp-fish, figures of which in gold, silver, &c., form one of the eight auspicious articles placed on special occasions as good omens, also as pleasing to the gods, அட்டமங்கலத்தொன்று. 2. One of the emblems of royalty, அரசசின்னத்தொன்று.

இணைக்கல்லை, s. Two leaf-plates—as set before a religious mendicant or pandarum, while feeding him.

இணைக்குப்போக, inf. [prop. இணையாகப்போக.] To walk with another, to walk abreast.

இணைக்குறளாசிரியப்பா, s. A kind of ஆசிரியப்பா, some of whose middle lines are shorter than the first or last line.

இணைமணிமாலை, s. A poem consisting either of the kind verses called வெண்பா and அகவல், or வெண்பா and கலித்துறை, in hundred verses and composed in accordance with the rule of அந்தாதி—one of the பிரபந்தம்.

இணைமுரண்டொடை, s. [in poetry.] A kind of rhyme where the first two feet in a line are opposed to each other either in word or meaning, ஓர்தொடை—as சிறடிப்பேரகலல்குல்.

இணைமோனைத்தொடை, s. A species of rhyme in which the first letters of each of the first two feet are the same. See தொடை.

இணையசை, s. A compound metrical syllable, நிரையசை.

இணையடி or கழலிணை, s. The two feet.

இணையடிசூட, inf. To adorn, crown one's self with the feet (of the deity or guru) regarding them as flowers.—*Note.* To place the feet of another on one's head, is a figurative form for expressing great reverence, devotedness, respect, &c.

இணையளபெடைத்தொடை, s. A verse in which the first letter of the first two feet is protracted.

இணையிட்டுப்பார்க்க, inf. To compare one thing with another.

இணையியைபுத்தொடை, s. The repetition of the same letter in the last two feet of any line. See தொடை.

இணையெதுகைத்தொடை, s. [in poetry.] The rhyming of the second letters of the first two feet in each line.

இணையெழுத்து, s. A substituted letter, போலியெழுத்து.

இணைவிழைச்சு, s. Unchastity, unchaste desire, கற்பில்லாமை. (நீதிநெறி.) 2. Sexual desires, காமம். (p.)

கண்ணிணை, s. A pair of eyes.

இணை, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To join, unite, coalesce, சேர. 2. To harmonize, agree, be suitable to, acquiesce, இசைய. 3. To be like, similar, ஒவ்வ. 4. To copulate, சையோகஞ்செய்ய.

இணைவு, v. noun. Union, conjunction, connexion, copulation, புணர்ச்சி.

இணை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To join, unite, conjoin, adjust, combine, சேர்க்க. 2. To couple, join in pairs, fasten together, connect, கூட்ட. 3. To compose verses, sentences, &c., வாசகமிணைக்க.

இண்டர், s. Shepherds, இடையர். (p.)

இண்டு, s. (also இண்டஞ்செடி, the final உ being dropped and அம் added.) A thorny creeper—as ஈகைக்கொடி, Mimosa rubicaulis, *L.*

செவ்விண்டு, s. The red species.

வெள்ளிண்டு, s. The white species.

இண்டை, s. The இண்டு creeper. 2. The lotus, தாமரை. 3. The முல்லை, a flowering shrub. 4. A garland, மாலை.

இதணம்—இதண், s. A high shed with a platform secure from wild beasts, for watching a field, காவற்பரண். 2. A scaffold, a raised platform, பரண். (p.)

*இதமியம், s. Pleasure, satisfaction, sweetness, இன்பம். [ex இதம்.] (p.)

*இதம், s. That which is acceptable, pleasant, agreeable, delightful, gratifying, welcome, இன்பமானது. 2. A good, benefit, நன்மை. Wils. p. 975. HITA. 3. Taste, gust, relish, இனிமை. 4. That which belongs, உரிமை. 5. Word, சொல்.

இதக்கேடு, s. Tastelessness, insipidity.

இதஞ்சொல்ல—இதம்பேச, inf. To give good advice, give appropriate counsel. (அரிச்சந்.) 2. To speak good things. 3. To speak kindly, sweetly, acceptably.

இதம்பண்ண, inf. To please, gratify a person, &c., இன்பஞ்செய்ய.

இதாகிதம், s. Good and evil, நன்றுதீது. [in usage இதமகிதம்.] Wils. p. 975. HITAHITA.

வாய்க்கிதம், s. Being pleasant to the taste.

இதயம், s. The mind, heart. See இருதயம், of which it is a contraction.

*இதரம், s. That which is different or foreign, another, அன்னியம். 2. Vileness, lowness, ஈனம். Wils. p. 130. ITARA. 3. Ruin, evil, injury, தீங்கு. (பாரதம்.) 4. Quicksilver, பாதரசம்.

இதரபதார்த்தம், s. Other things, other objects, வேறுவஸ்துகள்.

இதரபதார்த்தானவச்சின்னவான்மா, s. The soul undetached, universal spirit undivided by union with a body, தேகப்பிணிப்பில்லாதவாத்துமா.

இதரர், s. Strangers, foreigners, aliens, அன்னியர். 2. Inferiors, persons of no worth or character, ஈனர்.

இதரவிதரம்—இதரேதரம்-இதரேதரவுவமை, s. [in rhetoric.] A reciprocal comparison—as கவிக்குங்கயல்போலுநின்கணின்கண்போற்கவிக்குங்கயலும். Your eyes resemble the carp-fish, and the carp resembles your eyes. [தண்டியலங்காரம்.]

இதலை, s. The navel, கொப்பூழ். (p.)

இதல், s. A partridge, கவுதாரி. 2. The bird called காடை, a quail.

இதவு, s. That which is pleasant, agreeable, gratifying—as இதம். (சது.)

இதழி, s. The கொன்றை tree, Cassia, *L.*

இதழ், s. The petals of a flower, பூவிதழ். 2. Lip, the lips, உதடு. 3. The eyelids, கண்ணிமை. 4. A palmyra leaf, a palm leaf, பனையேடு. 5. A strip of palm leaf or other materials for making baskets, mats, &c., வகிர்ந்தவோலை. 6. The strips in venetian windows, &c., கதவினிலை. 7. A square or diamond in braiding mats, பாயினிதழ். 8. Sheath of flowers, &c., பாளை. 9. Leaf, இலை.

மீதிழிதழுறப்பம்மப்பிறக்கும். The letters ப, and ம, are produced by the lower lip coming in contact with the upper one. (நன்.)

இதழவிழ, inf. To open as a flower, மலர.

இதழ்குவிக்க, inf. To close as flowers. 2. To join the lips conically, &c. 3. (fig.) To shut the eyes.

இதழ்குவிவு, v. noun. Joining as the lips conically in sounding the letters, உ, ஊ, ஒ, ஓ, ஔ.

இதழ்கூட்ட, inf. To join the lips for speaking. 2. To join the lips—as infants when they begin to make articulate sounds.

இதழ்விள்ள, inf. To open as a flower, மலர. 2. To open the mouth, வாய்திறக்க. 3. To speak, பேச.

இதள், s. Quick-silver, இரசம்.

இதி, s. A devil, பிசாசம். 2. Strength, steadiness, firmness, உறுதி. (சது.)

*இதிகாசம், s. Ancient heroic history—a class of ancient books including the B'harata and Ramayana—one of the sixty-four கலைஞானம். Wils. p. 130. ITIHASA.

*இதியாசம், s. An example, an authority—as உதாரணம்.

இது, s. This, this thing, it, சுட்டுச்சொல்.

இதுகாரியமாய்வந்தான். He has come on this account.

இதற்குள். Within this. 2. Ere this, by this time, within or before this time.

இதை-இதால்-இத்துடன். Oblique forms of இது. occasionally found in approved writings as well as in common use.

இதோ, This! lo! behold!

இதோபார். Lo! see.

இதோவந்தான். See, he is come.

இதை, s. A kind of pulse used as food, காராமணி. 2. An enclosure newly cultivated, புதுக்கொல்லை—as விதைப்புனம். 3. The sail of a vessel, மரக்கலப்பாய். 4. A plough, கலப்பை. (p.)

இத்தி, s. A species of tree, one of the nine kinds of sacrificial fire-wood, கல்லால், Ficus virens, *L.*

இத்திநடையம், s. The snail, நத்தை.

இத்து, s. A kind of grass, காவட்டம்புல், Andropogon, *L.*

இத்துரு, s. Sand containing tin ஈயமணல்.

இந்தை, s. A poetic expletive joined to verbs of the second person, முன்னிலையசைச்சொல்.
 நீபொன்றுபாடிந்தை. Sing something.

இந்த. This, a demonstrative prefix, சுட்டு.
 இந்தக்காரியம், s. This thing.

இந்தம், s. The tamarind tree, புளியமரம். Tamarindus indica. (p.)

இந்தளம், s. A censer-stand, தூபக்கால். 2. A tune or musical mode, ஓர்பண்; [ex இந்த, to kindle.]

*இந்தனம், s. Fuel in general, விறகு. Wils. p. 133. IND'HANA. 2. Incense, நறும்புகை. 3. Above, high, மேல். 4. Flame சுவாலை. (p.)

இந்தா, [vul. honorifically இந்தாரும்.] A word signifying, take this, இதைவாங்கிக்கொள். 2. Come here, இங்கேவா.

இந்தி, s. A cat, பூனை. (p.)

இந்திகோபம், s. Lead, ஈயம். (M. Dic.)

இந்தியம், s. The senses—a contraction of இந்திரியம்.

*இந்திரகம், s. An assembly room, a hall, சங்கமெடுமேடை. Wils. p. 131. INDRAKA. (p.)

*இந்திரகிலம், s. The mandara mountain, மந்தரமலை. Wils. p. 131. INDRAKELA.

இந்திரபம், s. A tree, வெட்பாலை, Wrightia antidysentirica.

இந்திரபாஷாணம், s. One of the thirty-two kinds of prepared arsenic.

இந்திரபுஷ்பம், s. A medicinal plant, ஓர்பூடு. Wils. p. 132. INDRAPUSHPA.

*இந்திரம், s. An organ of sense—as இந்திரியம். 2. [in comp.] Excellency, what is best, மேன்மை. Wils. p. 131. INDRA. (p.)

 இந்திரகோபம், s. A scarlet insect appearing after rain, the cochineal, தம்பலப்பூச்சி, Coccinella; [ex இந்திர, best, கோ, light, et ப, which nourishes.] Wils. p. 131. INDRAGOPA.

 இந்திரசாலம், s. Conjuring, juggling—one of the sixty-four கலைஞானம்; [ex சாலம், net.] Wils. p. 132. INDRAJALA.

 இந்திரமாசாலம், s. The art of producing supernatural and wonderful appearances, இந்திரசாலம்.

 இந்திரநீலம், s. Sapphire. Wils. p. 132. INDRANEELA.

 இந்திரவல்லி, s. The கொத்தான் plant or creeper, Cassyta filiformis, L. 2. The பிரண்டை creeper.

 இந்திரவாசம், s. The நெய்தல் plant, Nymphæa pubescens, L.

*இந்திரன், s. Indra, king of the Devas or genii who inhabit Swerga, lord of the clouds, rain, seasons, crops, and worshipped at the seasons of sowing and reaping. வாசவன். In composition it signifies chief, prime, supreme, &c. Wils. p. 131. INDRA. 2. The fifth constellation of the Hindus, மிருகசீரிடம். (p.)

 இந்திரசித்து, s. The conqueror of Indra, the son of Ravana, மேகநாதன். Wils. p. 132. INDAJIT.

 இந்திரசிற்பம், s. A work on architecture, சிற்பநூலிலொன்று.

 இந்திரதனு—இந்திரவில், s. The bow of Indra, the rainbow, வானவில்; [ex தனு, bow.]

 இந்திரதிசை—இந்திரி, s. The east, கிழக்கு.

 இந்திரபதம், s. The world of Indra, இந்திரலோகம்.

 இந்திரபிரகரணம், s. Indra's thunderbolt, இடி. Wils. p. 132. INDRAPRAHARAN'A.

 இந்திரப்பிரஸ்தம், s. Ancient Delhi, பாண்டவர்நகரம். Wils. p. 132. INDRAPRASTHA.

 இந்திரவியாகரணம், s. A Sanscrit grammar, said to be written by Indra.

 இந்திரனுள், s. The eighteenth lunar mansion—the day in which Indra was born, கேட்டைநாள்.

 இந்திரன்மைந்தன், s. The son of Indra, சயந்தன். 2. Arjuna, அருச்சுனன்.

 இந்திராணி, s. Wife of Indra, இந்திரன்மனைவி; [ex அணி, she who is united.] Wils. p. 132. INDRAN'I.

 இந்திராவரசன்—இந்திரானுசன், s. Vishnu the younger brother of Indra, விட்டுணு. Wils. p. 132. INDRAVARAJA and INDRANUJA.

 கசேந்திரன், s. The name of the chief elephant, that was delivered by Vishnu, from the mouth of an alligator.

 உபேந்திரன், s. Vishnu, விட்டுணு.

 நரேந்திரன், s. The king of men. 2. A lord, superior, இறைவன்; [ex நர, men.]

 தேவேந்திரன், s. The king of the Devas.

 முனீந்திரன், s. The chief among the munis.

*இந்திரியம், s. [contracted into இந்தியம்.] An organ of sense, or organ of the body, பொறி; [ex இந்திர, the soul or self, or what is with difficulty restrained by the soul.] There are three kinds of இந்திரியம், or sensual organs; viz.: those of perception, those of action and the intellectual organs. Wils. p. 133. INDRYA. I. ஞானேந்திரியம், the organs of sense or perception are five; viz.: 1. சக்கு, சட்சு or கண், the eye, the organ of sight having உருவம் or visible forms as its object. 2. சோத்திரம் or செவி, the ear, the organ of hearing, having சத்தம், (sound) as its object. 3. ஆக்கிராணம் or மூக்கு, the nose, the organ of smelling, having கந்தம், (odors) as its object. 4. சிங்குவை or நா, the tongue, the organ of tasting, having இரசம், (flavors) as its object. 5. தொக்கு or துவக்கு or உடம்பு, the surface of the body, the organ of feeling, having பரிசம், (touch or contact) as its object. II. கன்மேந்திரியம், or organs of actions are five; viz.: 1. வாக்கு, the mouth or organ of speech. 2. பாதம், the feet. 3. பாணி, the hands. 4. பாயுரு, the anus. 5. உபஸ்தம், the genitals. III. அந்தக்கரணம் or அகநிந்திரியம், the intellectual powers are four, viz.: 1. மனம், the organ of thought or perception, emotion. 2. புத்தி, understanding, conception, reason, intellect—the organs of examination, investigation, reflection, comparison, device, experiment. 3. ஆங்காரம், emotion, self-importance, inflation, presumption, energy, impulse, the organ of excitement, resolution, effort, &c. 4. சித்தம், volition, will, purpose, determination, that power of the mind which leads to the accomplishment of objects. 2. The sperm, seed of men, விந்து.

 இந்திரியகோசரம், s. Perceptibleness, capability of being determined by the senses, இந்திரியத்தாலறியப்படுகை. Wils. p. 132. INDRYAGOCHARA.

 இந்திரியக்காட்சி—இந்திரியப்பிரத்தியட்சம், s. Evidence of the senses.

 இந்திரியத்துவாரம், s. The inlets or avenues of the senses—as means of perception.

 இந்திரியநிக்கிரகம், s. The subjugation of the passions, இந்திரியமடக்குகை.

 இந்திரியநுகர்ச்சி, s. Enjoyment of sense, இந்திரியாநுபவம்.

 இந்திரியாசங்கம், s, Stoicism, detachment from sensual objects, விஷயவெறுப்பு; [ex ஆசங்கை, doubt.]

*இந்திரை, s. Lukshmi, இலக்குமி. (p.) 2. Orpiment, a prepared arsenic, அரிதாரம்.

 இந்திரைகேள்வன், s. Vishnu, the consort of Lukshmi, விட்டுணு.

 இந்திரைக்குமூத்தாள், s. The goddess of ill-luck, the elder sister of Lukshmi, மூதேவி.

*இந்திவரம், s. The blue lotus, கருநெய்தல், Pontederia vaginalis, L. 2. The black குவளை flower. Wils. p. 131. INDEEVARA.

*இந்து, s. The moon, சந்திரன். 2. Crude camphor, பச்சைக்கர்ப்பூரம். Wils. p. 131. INDU. 3. A bear, கரடி. 4. A charcoal, கரி. 5. A kind of prepared arsenic கௌரிபாஷாணம். 6. The river Indus, சிந்துநதி.

 இந்துகாந்தம், s. The lunar gem, the moon-stone, சந்திரகாந்தக்கல்.

 இந்துஸ்தானி, s. The Hindustani language, ஓர்பாஷை.

 இந்துதேசம், s. India, a country, சிந்துதேசம்.

 இந்துரவிகூட்டம், s. The conjunction of the sun and moon, the new moon, அமாவாசியை.

 இந்துரேகை, s. A digit of the moon used in Hindu Astronomy, சந்திரகலை.

இந்துப்பு, s. A fossil salt, brought, it is said from Ormus and much esteemed in medicine. 2. Cloride of Sodium. 3. Muriate of Ammonia.

இந்துழி—இந்துளி, s. Narthex assafœtida, பெருங்காயம்.

இந்துளம், s. The Cadamba tree, கடம்பமரம், Nauclea cadamba, L.

இந்துள், s. The நெல்லி tree, Emblica officinalis, L.

*இந்தோளம், s. One of the new musical tunes for the morning, ஓர்ராகம். 2. A swing, ஊசல். Wils. p. 975. HINDOLA.

இபங்கம், *s.* A species of sour mango tree, புளிமா. (*p.*)

*இபம், *s.* An elephant, யானை. Wils. p. 133. IB'HA. (*p.*)

இபம், *s.* A branch of a tree, மரக்கொம்பு. (*p.*)

*இபவ, *s.* As விபவ—the second year of the Hindu cycle.

இப்பந்தி, *s.* A feeble or weak person, பலவீனன். 2. A hermaphrodite, பேடி. 3. A miser, உலோபி. 4. A stupid fellow, a dunce, வகைதெரியாதவன்.

இப்பந்தியாடு, *s.* A sheep begotten by two different species, ஓர்வகையாடு.

இப்பர், *s.* The third of the four regular castes, வைசியர்பொது. 2. Merchants, தனவைசியர். 3. Herdsmen, கோவைசியர். (*p.*)

இப்பி, *s.* Bivalvular shell-fish, oysters, pearl-oysters or the shell of such fish, சிப்பி. 2. The conch-shell, சங்கு. (*p.*)

*இமம், *s.* Frigidity, coldness, சீதம். 2. Frost, snow, உறைந்தபனி. Wils. p. 975. HIMA. 3. Gold, பொன். (*p.*)

இமகரன், *s.* The moon, சந்திரன். Wils. p. 975. HIMAKARA.

இமகிரி—இமாசலம்—இமாலயம், *s.* The Himalaya, or cold mountains which bound India on the north—the Imus or Emaus of the ancients, giving rise to the Ganges, Indus and other rivers, இமயமலை. Wils. p. 976. HIMALAYA.

இமப்பிரவை, *s.* One of the seven hells, எழுநரகங்களிலொன்று.

இமவான், *s.* The Himalaya range. Wils. p. 975. HIMAVAT.

*இமயம்—இமையம், *s.* The Himalaya—as இமாசலம். Wils. p. 975. HIMAJA. 2. The gold mountain, பொன்மலை.

இமயவல்லி, *s.* Parvati who was born on the Himalaya mountain, and said to be like an entwining creeper, பார்வதி. (*p.*)

இமயவில்லி, *s.* Siva, சிவன். (*p.*)

இமலம், *s.* A medicinal tree, மரமஞ்சள்.

*இமிசை, *s.* Killing, slaughter, கொலை. 2. Pain, affliction, வருத்தம். Wils. p. 974. HIMSA.

இமிர், கிறது, ந்தது, இமிரும், இமிர, *v. n.* To sound, hum, buzz, &c., ஒலிக்க. 2. To rush, swarm, crowd, to be thick together, மொய்க்க. (*p.*)

வண்டிமிர்கோதை. A garland of flowers in which bees swarm.

இமில், *s.* The hump or bunch on a bullock's back, எருத்தத்திமில். (*p.*)

இமிழ், *s.* Sound, hum, roar, &c., ஒலி. 2. Sweetness, இனிமை. 3. (*fig.*) A drum, பறை. (*p.*)

இமிழ், கிறது, ந்தது, இமிழும், இமிழ, *v. n.* To be sweet, இனிக்க. 2. To sound, roar, hum, &c., ஒலிக்க. (*p.*)

இமிழ்கடல், *s.* The roaring sea.

இமிழ்முரசு, *s.* The sounding drum.

இமிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To sound, ஒலிக்க. 2. To vomit, spew, eject from the mouth—as after gargling, கொப்பளிக்க. 3. To bind, tie, கட்ட. (*p.*)

இமை, *s.* The eye-lid, கண்ணிமை. 2. A twinkle, twinkling of the eye, கண்ணிமைப்பொழுது. 3. (*p.*) A small or minute thing, a particle, அற்பம். 4. A bear, கரடி. 5. A peacock, மயில்.

கண்ணிமைகைந்நொடியெனவே மாத்திரை. The time of a twinkling of the eye, or snapping of the finger is the duration of a மாத்திரை.

இமைகொட்ட, *inf.* To twinkle, இமைக்க.

இமைக்குழிவு, *s.* A hollow formed within the eye-lid, causing acute pain.

இமையவர்—இமையோர், *s.* The gods who never sleep nor wink, வானவர். (*p.*)

இமையவர்வேந்தன், *s.* Indra the king of the gods, இந்திரன்.

இமையாட, *inf.* To twinkle—as the eyes.

இமையில், *s.* Garuda—the watchful bird that never shuts its eyes—the vehicle of Vishnu, கருடன். (*p.*)

இமை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To twinkle with the eyes, to wink, இமைகொட்ட. 2. (*p.*) To coruscate—as the stars, to glitter, emit light, ஒளிசெய்ய.

இமையாநாட்டம் பெற்றிலமென்றார். (The terrestrial inhabitants) exclaimed we are not gifted with unwinking eyes (as the gods.)

இம்பர், *s.* Here, this place, இவ்விடம். 2. This world, இவ்வுலகம். See அம்பர், and எம்பர். (*p.*)

இம்பூறல், *s.* A root for dying scarlet—as சாயவேர், Chaya root or Indian madder, Oldenlandia umbellata, *L.*

இம்பூறற்சக்களத்தி, *s.* A plant, Hedyotis dichotoma.

இம்மடி, *s.* Elephant, யானை. (*p.*)

இம்மி, *s.* The smallest fraction, the 1075,200th part of a unit—10½ இம்மி make one கீழ்முந்திரிகை. Of these three-hundred-and-twenty make one மேல்முந்திரிகை, of which, three-hundred-and-twenty make a unit, ஒரொன்று. 2. An atom, a minute particle, நுண்மை. 3. (*p.*) Gold-color, பொன்மை. 4. Information, புலம். 5. (சாலடி.) The grain of a certain grass, மந்தங்காய்ப்புல்லரிசி.

இம்மெனல். An imitative sound, இம்—as expressive of haste, அநுகரணவோசை. 2. A particle of quickness, விரைவுக்குறிப்பு. (*p.*)

இம்மெனவந்தவிட்டான். He is come already.

இம்மெனுமளவுநீங்காதென்செய்வானோவென்றிஞ்னே. (The spectre) not being separated, from him, even for a moment, he was frightened, finding no means to be rid of it. (திருவிளை.)

இம்மை, *s.* The present birth—as distinguished from the past or future, the present state, this life, இப்பிறப்பு. (*p.*)

இம்மையிலனுபோகம், *s.* The enjoyments or sufferings of the present state.

*இயக்கம், *s.* Greatness, wealth, power, ability, physical strength, பெருமை. 2. (*p.*) Light, brightness, பிரகாசம். 3. The north, northern point of the compass, வடதிசை.

இயக்கர், *s.* One of the eighteen classes of demigods, பதினெண்டேவகணங்களிலோர்வகையார்.

இயக்கர்கோமான், *s.* Kuvêra, the king of இயக்கர்.

*இயக்கன், *s.* Kuvêra, குபேரன். Wils. p. 677. YAKSHA. (*p.*)

இயக்கன், *s.* A dog, நாய். (*p.*)

இயக்கி, *s.* Goddess of benevolence, தருமதேவதை. (*p.*)

இயக்கு, கிறேன், இயக்கினேன், வேன், இயக்க, *v. a.* [*causative of* இயங்கு.] To cause to go, move or pass, செலுத்த. 2. To train, reduce to order, break in (a horse, ox, &c.) to exercise, practise, பழக்க. 3. To direct, influence, manage, perform, command, நடத்த. 4. To operate in sentient beings—as the Deity, who, being the life of their life, influences their movements and is himself the agent in every action they perform, இயக்குவிக்க.

காளையையியக்க, *inf.* To train a steer to the plough.

இயங்கு, *s.* The இசங்கு shrub, ஒர்முட்செடி, Monetia tetracantha.

இயங்கு, கிறேன், இயங்கினேன், வேன், இயக்க, *v. n.* To move, stir, அசைய. 2. To go, walk, நடக்க. 3. To move about, உலாவ. 4. To respire, breathe, மூச்செறிய. 5. (*p.*) To appear, be visible, to shine, ஒளிசெய்ய. 6. To abide, தங்க.

இயக்கம், *v. noun.* Motion, locomotion, going, moving, action, அசைவு. 2. Respiration, motion connected with life, பிராணவியக்கம்.

என்பியக்கங்கண்டெம்புறத்தார். They relinquish not (their austerities) though their very bones protrude. (சீதிநெறி.)

எல்லாங்கருத்தாவினியக்கம். All things are kept in motion by God.

இயக்கு, *v. noun.* Motion, going, action, அசைவு. (*p.*)

*இயசுரு, *s.* The second Veda which particularly treats of the ceremonies to be performed in sacrifices, இரண்டாம்வேதம்—as யசுரு. Wils. p. 678. YAJUS. (*p.*)

*இயத்தினம், *s.* Effort, exertion, perseverance, energy, முயற்சி. Wils. p. 679. YATNA. 2. Preparation, ஆயத்தம். 3. Means, கருவி.

*இயந்திரம், *s.* A machine, an engine in general, any piece of mechanism, குத்திரம். (See எந்திரம்.) 2. A diagram of a mystical nature or astrological character, சக்கரம். Wils. p. 680. YANTRA. 3. (*p.*) Engines set on fortifications—as weapons, bombs, &c., மதிலுறுப்பு. 4. A car, தேர். 5. A press for pressing sugar-cane, ஆலை.

இயந்திரமயில், *s.* The mechanical peacock, caused to rise in the air by means of machinery.

இயந்திரமியற்ற, *inf.* To form or construct machines, &c. (*p.*)

இயந்தை, *s.* A kind of guitar used especially by husbandmen, மருதயாழ்த்திறம். (*p.*)

*இயமம், s. One of the eight yogas, அட்டாங்கயோகத்தொன்று. See யோகம். Wils. p. 681. YAMA. (p.)

*இயமன், s. Yama the god of death, regent of the south, and king of hell, (நரகம்,) the place of his capital, in which he sits in judgment on departed souls, sending the good to Swerga and the wicked to Naraka. In the latter there are 280,000,000 divisions appropriated to different classes, according to their respective demerits. He is figuratively described as devouring souls for food. He takes the buffalo for his vehicle; and for weapons, the battle-axe, club and cord, நமன்; [ex யம, to stop, restrain.] Wils. p. 681. YAMA. 2. [Med. usage.] One of the two poisonous fangs of snakes, பாம்பினச்சப்பற்களிலொன்று.

இயமகணம்—இயமகிங்கரர்—இயமதூதர்—இயமபடர், s. The messengers of Yama, நமன்றூதர்.

இயமதூதி, s. One of the lower poisonous fangs of a snake.

இயமலோகம், s. The place of departed souls, the purgatory of the Hindus—the kingdom of Yama.

*இயமானன், s. The conductor of a sacrifice, one who institutes it and directs its performance, யாகஞ்செய்விப்போன். Wils. p. 678. YAJAMANA. 2. A master, manager, chief, lord, யசமானன். 3. The life, the soul, உயிர். (p.)

இயமானன்சதமகனைவிருந்தி. Invoking Indra to preside at a sacrifice.

இயமானகணம், s. One of the eight kinds of ominous feet. See கணம். (p.)

*இயமான், s. [contr. of யஜமானன்.] A master, manager, conductor. See also எசமான்.

இயம், s. Sound in general, ஒலி. 2. Musical instrument, வாச்சியம். 3. A word, சொல். 4. Fly, ஈ. (p.)

இயம்பு, கிறேன், இயம்பினேன், வேன், இயம்ப, v. a. To say, speak, utter, சொல்ல. 2. To sound instruments, வாச்சியமுழக்க. 3. v. n. To sound, roar, ஒலிக்க. 4. To sound—said of instruments, வாச்சியமொலிக்க. (p.)

கோடியம்பியும். Blowing the horn.

காரொடுபௌவமின்றியம்புவது. The roaring of the sea and clouds.

இயம்பல், v. noun. Saying, speaking, uttering. 2. Sounding instruments. 3. s. A proverb, maxim, by-word, old sayings, பழமொழி.

இயல், s. Nature, natural property or quality, குணம். 2. Good conduct, conduct appropriate to a person's caste, rank, office, &c., ஒழுக்கம். 3. Order, course, rule, method, ஒழுங்கு. 4. Aspect, appearance, shape, likeness, சாயல். 5. Melody, musical harmony, இசை. 6. A chapter, section treating of a series of subjects or things in order, ஓத்து. 7. Natural and plain Tamil. (See இயற்றமிழ்.) 8. Destiny, appointment, assignation, decree, allotment, விதி. 9. Grammar, இலக்கணம். (p.)

கோவியலோம்புங்கொள்கையன். One disposed to maintain a course of conduct proper for a king.

இயலுவமம், s. [in rhetoric.] A comparison of the properties of different things, பண்புவமை.

இயற்சீர், s. The ஆசிரியவுரிச்சீர் verse—a metrical foot of four அசை. See சீர்.

இயற்சீர்வெண்டளை, s. Combination of two simple or ஆசிரியம் feet, or connection of an ஆசிரியம் foot, ending with a compound அசை, with another beginning with a simple one, or vice versa, மாமுன்னிரையும்விளமுன்னேருமொன்றிவருவது.

இயற்சொல், s. A word in common use—in distinction from திரிசொல்—exclusively poetic usage—words understood both by the learned and unlearned.

இயற்பெயர், s. Proper or arbitrary names, titles, terms of office, &c., இயல்பாயிடப்பட்டபெயர்; also names of things indicating a whole—as distinguished from parts. 2. Simple or original names—as distinguished from ஆகுபெயர் or derived names, செம்பொருளாயுணர்த்தும்பெயர்.

இயற்றமிழ், s. Natural Tamil, whether common or poetic—as distinguished from இசைத்தமிழ், or Tamil adapted to music, and நாடகத்தமிழ் or dramatic Tamil, in both of which various changes occur in combination, construction, &c., முத்தமிழிலொன்று.

இயற்றளை, s. Connection of ஆசிரியம் verse—as ஆசிரியத்தளை. See தளை.

இயனூல், s. A system of grammatical rules.

இயன்மொழிவாழ்த்து, s. A poem instructing children by the good disposition and behavior of their forefathers, ஓர்பிரபந்தம்.

இயல்—இயலு, கிறது, இயன்றது, இயலும், இயல, v. n. To be able, be possible, கூடியதாயிருக்க. 2. (p.) To be incident to, be exposed, பொருந்த. 3. To agree, suit, be adapted to, இசைய. 4. To be done, performed, made or composed, ஆக. 5. To be destined, decreed, allotted, விதிக்கப்பட. 6. To happen, pass, to be in vogue, நடக்க.—*Note.* This word is often changed to ஏலு both in poetry and in the colloquial language.

இயல்வதுகரவேல். Do not refrain from doing what is in your power.

வெயிலியல்வெஞ்சுரம். The parched desert exposed to the scorching beams of the sun.

தச்சனாலியன்றவீடு. A house made by the carpenter.

என்னாலியலாது. I am not able, I cannot do it.

என்னாலியன்றவளவும். To the extent of my ability, as much as I can.

இயலாமை, neg. v. noun. Impracticability, impossibility, incompetency, கூடாமை.

இயல்பு—இயல்வு, v. noun. Ability, being able.

இயல்பாயிருக்க, inf. To be able, be influential.

இயல்புள்ளவன், s. A man of ability.

இயல்பு, s. Nature, property, quality, natural or essential quality, instinct, genius, குணம். 2. Conduct, a proper course of conduct, good character, ஒழுக்கம். 3. A prescribed rule, order, method, custom, habit, முறை. 4. State, condition, circumstances, situation, rank, class, &c.—as applicable to man, brute, vegetable, &c., தன்மை. 5. Propriety, regularity, legitimacy, genuineness, சேர்மை. 6. Simplicity, plainness, honesty, frankness, இயற்கை.

இயல்பினானில்வாழ்க்கைவாழ்பவன். The householder who discharges his domestic duties with propriety. (குறள்.)

இயல்பானபகை, s. What is naturally uncongenial or counteracting—as medicine to the disease.

இயல்பானபகையாளி, s. A foe by nature—as the cat to birds.

இயல்புதப்பிப்போக, inf. To be dishonest, to act dishonestly, live disorderly, go beyond the proper bounds.

இயல்புப்புணர்ச்சி, s. [in grammar.] Combination of words suffering no change, விகாரங்களின்றிப்பதம்புணர்வது—as பொன்மணி. (p.)

நல்லியல்புடையோன், s. One of a good nature.

தீயியல்புடையோன், s. One of a bad nature.

இயல்பூதி, s. The வில்வம் tree, Ogle marmelos, L. 2. The நாய்வேளை plant, Polanisia icosandra.

இயவம், s. Rice, நெல். 2. A kind of grain, ஓர்தானியம். (சிக.) (p.)

இயவர், s. Inferiors, low castes, கீழ்மக்கள். 2. Villains, rogues, சண்டாளர். 3. Drummers, those who play on instruments made of skin, Pariars, தோற்கருவியாளர். (p.)

*இயவனர், s. Moormen, சோனகர். Wils. p. 682. YAVANA. 2. Smiths, mechanics, artisans, கம்மாளர். 3. Painters, carvers, workers in the fine arts, சித்திரக்காரர். See யவனர். (p.)

இயவு, s. Way, வழி. 2. Country, ஊர். 3. Forest, காடு. (p.) (Rott.)

இயவுள், s. A famous person, lord, a superior, master, புகழாளன். (p.)

இயவை, s. A road, way, path, வழி. 2. A kind of rice, தோரைநெல். 3. The துவரை plant, Cytisus, L. (p.)

இயறல், s. Heavenly bliss, முத்தி. 2. [ex இயல்.] v. noun. The act of moving, going, போதல். (p.)

இயற்கை, s. Nature, quality, disposition, inherent or primitive quality, சுபாவம். 2. Ability, influence, power, திராணி. 3. Custom, habit, practice, what is natural, customary, &c., வழக்கம். 4. State, condition, circumstances, தன்மை. 5. [prov.] Means, instruments, tools, பணிமுட்டு.—*Note.* This word is opposed to செயற்கை, artificial productions.

இயற்கைக்குணம், s. The natural disposition, natural temper.

இயற்கைஞானம்—இயற்கையறிவு, s. Natural, inherent or intuitive wisdom—as a property of the Deity.

இயற்கைதப்பினவன், *s.* A dishonest person.

இயற்கைப்புணர்ச்சி, *s.* [*in love poetry.*] Marriage indicated by destiny, arising from previous actions and by natural choice and inclination, தலைவனுந் தலைவியுந்தம்முளொத்துப்புணர்கை.

இயற்கைப்பொருள், *s.* A thing in nature—that which is not artificial—as the elements.

இயற்கையறிவு, *s.* The knowledge which cannot be increased—as that of God. 2. Instinctive knowledge in distinction from that which is acquired; opp. to செயற்கையறிவு; which see.

இயற்கையன்பு, *s.* Love formed naturally—according to Hindu physiology, the result of love in a former birth—opposed to செயற்கையன்பு, or love brought about by external means.

இயற்கையானகுடி, *s.* A respectable family.

வறுமையானஇயற்கை, *s.* Indigent circumstances.

இயற்றி, *s.* Energy, endeavor, perseverance, application, முயற்சி. (*p.*)

இயற்று, *s.* [*prov.*] Implement, utensil, any hollow vessel—as a cup, a cocoanut shell, &c., பாத்திரம்.

இயற்று, கிறேன், இயற்றினேன், வேன், இயற்ற, *v. a.* To do, make, effect, perform, execute, bring about, cause to take place, discharge a duty or obligation, exercise or use an art, செய்ய. 2. To transact, manage affairs, superintend, cause or excite one to do a thing, நடத்த. 3. To destine, appoint, assign, விதிக்க. (*p.*)

இயற்றலுமீட்டலுங்காத்தலும். Devising means to increase the finances, collecting and keeping them.

எல்லாத்தவமுமியற்றி. Performing every species of austerity.

ஐந்தவேள்வியுமியற்றி. Offering the five daily oblations.

இறந்தவர்கள்காமுறுமிருங்கடனியற்றி. Duly discharging the debt demanded by departed spirits.

இயற்றுதற்கருத்தா—இயற்றும்வினைமுதல், *s.* [*in grammar.*] The agent, the actor in distinction from ஏவுதற்கருத்தா, commander—as செய்தவன், distinguished from செய்வித்தவன்.

இயற்றும்வினை, *s.* [*in grammar.*] Verbs expressing action performed by one's self—as செய்தான், in distinction from ஏவும்வினை.

இயனம், *s.* [*prov.*] The apparatus of a toddy-drawer for ascending trees, cutting, &c., especially what is tied round the waist, கள்ளிறக்குவோன்கருவிபெய்புட்டில். See ஏனம்.

இயனங்கட்ட, *inf.* To fasten the apparatus—as a toddy-drawer.

இயாகம், *s.* The கொன்றை tree, Cassia, *L.* (*M. Dic.*)

*இயாதம், *s.* Driving or guiding an elephant with a goad, தோட்டியால் யானையைச்செலுத்துகை. Wils. p. 684. YATA. 2. A goad for an elephant, யானைத்தோட்டியின்பிடர். (*p.*)

இயுசாவியம், *s.* Cassia, *L.* கொன்றைமரம்.

இயை, *s.* Junction, connection, union, இசைப்பு. (சது.) (*p.*)

இயை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* [*The mere poetic form for* இசை.] To join, unite, agree, be proper for, agreeable to, &c., பொருந்த.

இயைய, *inf.* Used also as a term of comparison, உவமையுருபு.

இயைபு, *v. noun.* Union, agreement, இசைவு. 2 Fitness, worthiness, &c., for undertaking the study of religion or of a literary work, பொருத்தம். 3. [*in poetry.*] Constructing verses in such a way that they shall end in any of the consonants, ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்.—One of the வனப்பு, or beauties of comparison, செய்யுள்வனப்பிலொன்று. 4. The rhyming of the last feet or letters in the lines, அடிகளினிறுதியெழுத்தேனுஞ்சொல்லேனுமொத்துவருவது. See தொடை. (*p.*)

இயைபின்மையணி, *s.* A figure in rhetoric—comparing a thing to itself—as பொதுநீக்குவமை.

இயைபுவண்ணம், *s.* Poetry in which the medial letters abound, இடைவண்ணம்.

இயைபுளன், *s.* A worthy person, புகழாளன்.

இயைவு, *v. noun.* Consent, agreement, பொருத்தம். See இசைவு.

இயை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To join, connect, adapt, combine, reconcile, இசைக்க. 2. To arrange, appoint, முறைப்படுத்த. (*p.*)

இயைமே, *s.* The plantain tree, வாழை. (*M. Dic.*)

இர, *s.* [*contr. of* இரா—*used in combination.*] Night. (*p.*)

இரவருமதி, *s.* The moon which makes its nightly visits.

இர, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To beg alms, solicit aid, seek support by begging—as religious mendicants, பிச்சைகேட்க. 2. To pray, beseech, entreat, solicit, வேண்டிக்கொள்ள.

இரந்தும்பரந்தவர்க்கீந்தவர். Those who give to beggars although they themselves have to ask alms.

இரந்துணி—இரந்துண்ணி, *s.* A beggar, இரப்போன். (*c.*)

உலைமூட்டினுலுண்டுலகு. If the smith construct the forge, the world will stand.

உலையாணிக்கோல், *s.* A smith's poker, beak-iron, உலையிருப்புக்கோல். 2. A branding-iron, சட்டுக்கோல்.

உலையில்வெந்தவிரும்பு, *s.* Iron well burnt in a smith's forge.

உலையேற்ற—உலைவைக்க, *inf.* To set a pot on the fire, உலைப்பானையையடுப்பிலேவைக்க.

அவனென்தலைக்குஉலைவைக்கிறான். He puts a rice-pot on the fire for my head; i. e. he meditates my ruin.

இன்னமுலைவைக்கவில்லை. The rice-pot has not yet been set on the fire.

உலை, கிறேன், ந்தேன், [*vul.*] ஞ்சேன், வேன், ய, *v. n.* To become loose—as a tooth, a peg, a stake, &c., அலைய. 2. To be disordered—as one's affairs, become deranged, unsettled, to be ruined in circumstances, கெட. 3. To become ruined—as a house, furniture, land, crops, &c., சிதைய. 4. To become unsettled, or agitated in mind, to be troubled, to waver, fluctuate, மனங்கலங்க. 5. To be put to the rout—as an army, கலைய. 6. To degenerate in morals, or character, ஒழுக்கங்கெட. 7. To flag, grow languid, to cease, to be reduced in strength, to lose one's powers, பலங்குறைய. (*c.*)

அந்தக்குடியுலைந்துபோயிற்று. That family is ruined.

உலைந்தபழம், *s.* An over-ripe fruit.

உலைந்தமனம், *s.* A fluctuating mind.

உலைந்துதிரிய, *inf.* To wander, roam.

உலையாமுயற்சி, *s.* Untiring exertion.

உலைவு, *v. noun.* Tremor, trembling, நடுக்கம். 2. Trouble, vexation, agitation, derangement, &c., அலைவு. 3. Rout, discomfiture, கெடுதி. 4. Ruin, destruction, அழிவு. 5. Fear, horror, அச்சம்.

உலைவுபண்ண, *inf.* To annoy, trouble, perplex, vex.

உலை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To harass, vex, agitate one—as a demon; to distress as a fever, &c., அலைக்க. 2. To ruin, injure, impoverish, reduce, or emaciate one—as a disease, கெடுக்க. 3. To disorder, derange one's circumstances, to unsettle, கலைக்க. 4. To ruin by seduction, desertion, &c., to injure another's character, ruin a person, a family, &c., சிதைக்க. 5. To put to the rout, discomfit, முறியடிக்க. 6. To cause the mind to fluctuate, மனதைக்கலக்க. 7. To ruin property—as a house, furniture, lands, &c., ஆஸ்தியைக்கெடுக்க.

பேயவனையுலைத்துப்போட்டது. The demon has vexed, ruined, reduced him, &c.

உலைப்பு, *v. noun.* Putting to the rout, discomfiture, முறியடிக்கை. 2. Trouble, vexation, suffering, &c., வருத்தம்.

உலைசல், *s.* [*a corruption of* உலைதல்.] Disordered state of circumstances, trouble, vexation, ruined state of a house, furniture, &c., derangement, கெடுதல்.

உலைச்சல், *s.* [*a corruption of* உலைத்தல்.] Trouble, vexation, agitation, harassing, suffering, derangement, fluctuation, &c., அலைதல்.

அதிலேயுலைச்சல்மெத்த. There is much trouble in that affair.

உலைச்சற்பட, *inf.* To be troubled, harassed, disordered, ruined, &c.

உலைச்சற்படுத்த, *inf.* To trouble, harass, derange, ruin, &c.

உலையிற்பிணந்தின்னி, *s.* One of the one-hundred-and-twenty kinds of ore, மாமிசபேதி.

உலொங்கு, கிறேன், உலொங்கினேன், வேன், உலொங்க, *v. n.* (*Tel.* లొంగు.) To be humble, submissive, கீழ்மைப்பட்டிருக்க.

உலொங்காதவன், *s.* A man who ceases to ask favors.

உலொடலொடெனல்—உலொடலொடென்றசுப்பிடல், *v. noun.* [*vul.*] Making a harsh and coarse noise—a sign of great noise, ஓர்வகையொலிக்குறிப்பு.

உலொடலொட்டைப்பேச்சு, *s.* Vain or useless prattling.

உலொடலொட்டையாயிருக்க, *inf.* To be broken, to be vain or useless.

உலொடுக்கு, *s.* Emptiness, want of solidity, வெறுமை. 2. A noise made in walking from weakness, ஒலிக்குறிப்பு.

உலொடுக்குலொடுக்கென்றோடுகிறது. To make a noise in running—as when a horse gallops.

உலொடுக்குவிழுந்துபோகிறது. To fall in, decay.

உலொட்டி, *s.* (*Tel.* లొట్టి.) Intoxicating liquor, வெறிதரும்வஸ்து. 2. A small earthen pot attached to a palm tree to receive its juice, கள்ளுக்குடுவை.

அவன்பணமெல்லாமுலொட்டியிற்போகிறான்.... He lavishes all his money in liquor.

உலொட்டிக்காரன்—உலொட்டிகுடிக்கிறவன்—உலொட்டிமுஞ்சி, *s.* A drunkard.

*உலோகம், *s.* The world, the earth, any of the fabulous worlds of Hindu mythology, உலகம். 2. Worldliness, earthliness, secularity, உலகத்துக்கடுத்ததன்மை. Wils. p. 723. LOKA. 3. Metal—as iron, &c. Five simple metals are given in the native lexicons—gold, silver, copper, iron, and lead or tin, பஞ்சலோகம். Wils. p. 725. LOHA. To these are sometimes added two mixed metals—as வெண்கலம், a mixture of copper and tin, making bell-metal, &c., and தரா, a compound of copper and zinc, or pinchbeck, &c.

உலோகக்கட்டி, *s.* A mass of metal composed of the five kinds in equal proportions, பஞ்சலோகக்கட்டி. (நிக.)

உலோகதாது, *s.* A kind of arsenic, தத்தபாஷாணம்.

உலோகபற்பம், *s.* [*as* அயவெள்ளை.] Iron reduced to a medicinal powder.

உலோகபாலன், *s.* A king, அரசன். Wils. p. 724. LOKAPALA.

உலோகபேதம், *s.* Difference, or variety of worlds—one of the six kinds of பேதம்; which see.

உலோகமணல், *s.* Iron-sand.

உலோகமலை, *s.* A mountain of iron or metals.

உலோகரட்சகன், *s.* A preserver or protector of the world, உலகத்தைக்காப்பவன். 2. An appellative of Vishnu—as preserver, விட்டுணு.

உலோகராட்டு, *s.* The Sovereign of the world; i. e God, கடவுள்.

உலோகரூடம், *s.* Custom or fashion of the world, உலகவழக்கம்.

உலோகாதியந்தம், s. The beginning and end of the world.

உலோகாதீதம், s. That which transcends the world, which is supermundane.

உலோகார்த்தம், s. Secular advantages, இலௌகிகசுபம். 2. Benefit to the world, public good, உலகத்தாருக்குவருசுபம்.

உலோகோத்தரம், s. Excellence, elegance, that which is liked by every one.

உலோகோயம், s. The tract of country lying south of the Himalaya and north of Ramisseram. இமையமலைக்குமிராமேசுரத்துக்குமிடையேயுள்ளதேசம்.

பஞ்சலோகம், s. The five simple metals. See உலோகம், 3.

சத்தலோகம், s. The seven metals. See உலோகம், 3.

*உலோகிதம், s. Red, சிவப்பு. Wils. p. 726. LOHITA.

*உலோசனம், s. Eye, கண்; [ex லோச, to see.] Wils. p. 724. LOCHANA. (p.)

சலசலோசனன், s. Vishnu the lotus-eyed. (p.)

பாலலோசனன், s. Siva the frontal-eyed. (p.)

*உலோசி, s. The பேய்ப்பசளை plant. See பசளை.

*உலோசிதம், s. The sandal tree, சந்தனமரம், Santalum album, L. (p.)

*உலோபம், s. Penuriousness, stinginess, close-fistedness, illiberality, சியாமை. 2. (p.) Covetousness, intense or greedy desire, cupidity, avarice, பொருளாசை. Wils. p. 725. LOB'HA. 3. [in grammar.] Elision of a letter, &c., கெடுதல்விகாரம். 4. Want, destitution, குறைவு. This is given as one of the six moral evils. See பகை. Wils. p. 724. LOPA.

யாகத்தைத்திரவியலோபமில்லாமற்செய்துமுடித்தார்கள். They performed the sacrifice without lack of money.

உலோபத்தனம்—உலோபத்துவம், s. Penuriousness, cupidity, &c.

உலோபத்துவமாய்ச்செய்ய, inf. To perform a ceremony illiberally or meanly.

உலோபன், s. A niggard, a stingy person, a miser, பிசுனன்.

உலோபி, s. (mas. and fem.) An avaricious person, an extremely covetous person. Wils. p. 725. LOB'HIN.

மத்தியலோபம், s. Elision of a letter in the middle of a word.

*உலோமம், s. A tail, a hairy tail, வால். (p.) 2. The end or tip of a tail, வாலநுனி; [ex லூ, to cut.] Wils. p. 725. LOMA

*உலோலம், s. Shaking, tremulousness, அசைவு. 2. Fondness, desire, cupidity, ஆசைப்பெருக்கம். Wils. p. 725. LOLA.

உலோலன், s. A lustful, lewd, lecherous man, ஸ்திரீலோலன்.

சங்கீதலோலன், s. One passionately fond of music.

ஸ்திரீலோலன், s. A lascivious man.

*உலோலிதம், s. Shaking, tremulousness, trembling, அசைவு. Wils. p. 725. LOLITA.

உலோலிதமுகம், s. The head inclining to one side—as in deep thought, a pensive countenance, சிந்தையாலொருதோளின்மேற்சாய்ந்திருக்குமுகம். (சது.)

உல்—உல்லு, s. [prov.] A sharp stick, or iron to peel cocoanuts, தேங்காயுரிக்குங்கருவி. 2. A stick for impaling, கழு.

உல்லேற்ற, inf. To impale, கழுவேற்ற.

உல்கு, s. Toll, custom, duty, tax, ஆயம். (p.)

*உல்லங்கனம்—உல்லிங்கனம், s. Exceeding, transgressing, passing over, கடக்கை. Wils. p. 163. ULLANGANA. 2. Disgrace, reproach, அவமதிப்பு. 3. Contempt, நிந்தை. (p.)

உல்லங்கனப்பட, inf. To be dishonored, to be ashamed.

சபையிலேயுல்லங்கனப்பட்டான். He has been dishonored in the assembly.

உல்லம், s. The sable fish, shad, மீன். (c.)

உள்ளதைவிற்றுஉல்லத்தைக்கொள். Sell what you have and buy sable fish. [prov.]

உல்லங்கருவாடு, s. The salted sable fish.

கடலுல்லம், s. A kind of sable fish.

ஆற்றுல்லம், s. Another kind of the same.

உல்லரி, s. A shoot, a bud, தளிர். (இரேவணு.)

*உல்லாசம், s. Joy, pleasure, happiness, மகிழ்ச்சி. 2. Conviviality, gaiety, சரசக்களிப்பு. 3. Festivity, internal joy, gladness, உள்ளக்களிப்பு. 4. Self-consequence, pride, இறுமாப்பு. 5. (p.) Light, splendor, தேசு. Wils. p. 164. ULLASA. 6. A shawl, an upper garment thrown over the shoulder, அத்தவாசம். (உப. 390.)

உல்லாசக்காரன்—உல்லாசன், s. One that diverts himself, one who lives in pleasure.

உல்லாசநடை, s. A proud, stately gait, gentlemanly bearing.

உல்லாசப்படுத்த, inf. To entertain.

இவன்அவனையுல்லாசப்படுத்துகிறான். He entertains him.

உல்லாசப்பேச்சு, s. Pleasantry, humorsomeness.

உல்லாசமாய்ப்போக, inf. To take a walk for recreation,

உல்லாசம்பண்ண, inf. To take recreation, to divert, to amuse one's self by walking, sporting, &c.

உல்லாசவபிநயம், s. Humorous gestures.

*உல்லாபம், s. Babble, prattle, stammering, imperfect utterance—as of foreigners, children, birds; the delicate prattle of females, மழலைமொழி. 2. Change of voice by sickness, கலித்தமொழி. Wils. p. 164. ULLAPA. (p.)

உல்லாபன், s. A convalescent person, சோர்புற்றெழுந்தோன். (p.)

உல்லியர், s. Persons superstitiously thought to be skilled in determining the places for digging wells, கூவநூலோர். (p.)

*உல்லேகம், s. Utterance, pronunciation, உச்சரிப்பு. Wils. p. 164. ULLEKA. 2. (p.) A figure in Rhetoric, ஓரலங்காரம்.

*உல்லோசம், s. (St.) An awning, a canopy, மேற்கட்டி. Wils. p. 164. ULLOCHA.

*உல்லோலம், s. A large wave, surge, billow, கடற்பெருந்திரை. Wils. p. 164. ULLOLA. (p.)

உவ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To be pleased with, to approve of, to like, விரும்ப. 2. v. n. To be glad of, to rejoice in, to be delighted with, மகிழ. 3. [vul.] To be pleasing, agreeable, இன்பமாயிருக்க.

அவருக்குவந்தசெய்கை. A thing pleasing to him.

உலகுவப்பசெய்த. Acting so that the world may be pleased with it— (சலடி.)

காய்தலுவத்தலகற்றி. Free from anger and partiality. (அறநெறிச்.)

உவப்பு, v. noun. Joy, delight, pleasure, gladness, மகிழ்ச்சி. 2. (p.) Height, உயரம். 3. Expanding, blooming, swelling—as பொலிவு. 4. Gratification, பிரியம். 5. Play, amusement, &c., விளையாட்டு.

உவப்பின்மை, s. Unpleasantness.

உவகுலம், s. The three myrobalans, or medical fruits used in preparing Indian medicines. See திரிபலை.

உவகை, s. Joy, gladness, delight, mirth, hilarity, jubilation, களிப்பு. 2. Approbation, complacency, fondness, love, பிரியம். (p.)

உவகைச்சொல், s. Kind and polite address to a visitor, congratulation to a new-married couple, &c.

உவகைப்பறை, s. The mode of beating drums on festive occasions.

உவக்காண், adv. At that time, அப்பொழுது. 2. There, in that place, அவ்விடம். (குறள்.) (p.)

உவக்காணெங்காதலர்செல்வர். Lately when my husband left me—

உவச்சர், s. A low tribe of Mohammedans, சோனகர். 2. A caste of drummers at temples, ஓச்சர். (p.)

உவட்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. [prov. improp. உவட்டு.] To nauseate, loathe.

உவட்டி—உவட்டிப்பு, v. noun. Nauseating, loathing, heaving.

உவட்டிற்கூர்மை, s. One of the one-hundred-and-twenty kinds of ore, மாமிசபேதி.

உவட்டு, கிறேன், உவட்டினேன், வேன், உவட்ட, v. n. To nauseate, loathe, வெறுக்க. 2 To overflow, pour forth—as a water-fall, fountain, &c., to flow—as the head of the tide, பிரவாகிக்க 3. To rise—as the surf, பெருக்கெடுக்க

உவட்டியுந்திரைப்புனல். The overflowing rushing wave. (ஸ்காந்.)

நெஞ்சையுவட்ட, *inf.* To feel nausea, to loathe, to be sea-sick.

உவட்டு, *v. noun.* Nausea, குமட்டுகை. 2. Increasing, flowing out—as from a fountain, பெருக்கு.

உவட்டெடுத்தோடும். (The Ganges) swells and flows onward.

உவணம், *s.* Height, உயரம். 2. Garuda the brahmany kite, கருடன். 3. An eagle, கழுகு. 4. A kite, பருந்து. (*p.*)

உவணகேதனன்—உவணமுயர்த்தோன், *s.* Vishnu, விட்டுணு. (*p.*)

உவணன், *s.* The brahmany kite, the vehicle and flag of Vishnu, Garuda, கருடன். (*p.*)

உவணி, *s.* A sword, வாள். (*p.*)

உவணை, *s.* Swerga, சுவர்க்கம். 2. *adv.* In that place, உவ்விடம். (*p.*)

உவண், *adv.* There, in that place, உவ்விடம். (*p.*)

*உவதி, *s.* A young woman, one from sixteen to thirty, தருணி. (Sans. ஆதி.) See உவா. Wils. p. 687. Uvati in Uvan. (*p.*)

*உவதை, *s.* A mountain torrent, மலையின்வீழ்நீர். (*p.*)

*உவமம், *s.* Comparison, simile, resemblance—as உவமை. Wils. p. 156. Upama. (*p.*)

உவமவுருபு—உவமையுருபு, *s.* A particle of comparison, ஒப்புருபு—as அன்ன, போல, &c. (*p.*)

உவமாதிவகம், *s.* A figure in Rhetoric in which the comparison applied to one of a series is understood of the others, உவமைவிலக்கணி.

உவமாநிலம், *s.* A wall, சுவர். (சது.)

*உவமானம், *s.* The object of comparison—as உபமானம். Wils. p. 156. Upamana.

உவமானசங்கிரகம், *s.* A treatise descriptive of the various kinds of comparison.

உவமானப்பிரமாணம், *s.* [*in* அளவை.] One of the eight அளவை, the law of ascertainment from resemblance, comparison, simile, &c.

உவமானிக்க, *inf.* To liken, compare, உவமானஞ்செய்ய.

*உவமேயம், *s.* The thing compared. See உபமேயம். Wils. p. 156. Upamaya.

உவமேயப்பொருள், *s.* That which is to be compared—as, தாமரைமுகம், a lotus-like face.

*உவமை, *s.* Comparison, simile, similitude, உவமாலங்காரம். 2. [*in the scripture translations.*] A parable. The common rhetoric gives twenty-four varieties of உவமை, the simplest form is by supplying terms expressive of similitude—as, சந்திரனைப்போன்றமுகம், a moon-like face. Wils. p. 156. Upama.

உவமைசொல்ல, *inf.* To compare.

உவமைத்தொகை—தொகையுவமை, *s.* The omission of the sign of comparison—as மதிமுகம் for மதிபோன்றமுகம்.

உவமையகத்திணை, *s.* The rule for illustrating a doctrine by metaphors.

உவமையாகுபெயர், *s.* [*in rhetoric.*] A kind of metaphor—as when it is said, குயில்வந்தாள், meaning thereby a female thus compared to that sweet-noted bird.

உவமையாய்ச்சொல்ல, *inf.* To speak allegorically, figuratively.

உவமையின்மை, *s.* Incomparableness—as அதுலம்.

உவமிக்க, *inf.* To liken, compare, to examine the relations things bear to each other, உவமானஞ்செய்ய.

உவமிப்பு, *v. noun.* Comparison, comparing, ஒப்பிடுகை.

*உவராகம், *s.* The time of an eclipse, கிரகணகாலம். (சேதுப்.) See உபராகம். Wils. p. 157. Uparaga. (*p.*)

உவரி, *s.* The ocean, கடல். 2. Urine, சிறுநீர்; [*ex* உவர், salt.] (*p.*)

உவர், *s.* Saltishness, brackishness, harshness, astringency, the taste of any kind of salt, acid, or alkaline substance, உவர்ப்பு. 2. Sea, ocean, கடல். 3. Salt, உப்பு.

உவராயிருக்க, *inf.* To be saltish, brackish.

உவர்க்கடல், *s.* Sea of salt-water.

உவர்க்களம், *s.* Salt-pans, land where salt is formed, உப்பளம். 2. Brackish land, உவர்நிலம்.

உவர்க்காரம், *s.* Soap, சவுக்காரம்.

உவர்த்தரை—உவர்நிலம், *s.* Brackish, sterile land, உப்புநிலம். 2. Land where salt forms either naturally or by art, உப்புவிளைபுநிலம்.

உவர்நீர், *s.* Salt-water, sea-water, brackish water, brine, &c., உப்புச்சலம்.

உவர்மண், *s.* Brackish soil, உவர்நிலம். 2. Fuller's earth, an impure carbonate of soda, the nitre of the Bible, உழமண்.

உவர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To taste salt or brackish, உப்புக்கரிக்க. 2. To taste harsh, astringent, &c.—as any of the mineral salts, துவர்க்க. 3. To be unpleasant, disagreeable, &c., அரோசிக்க. 4. *v. a.* [*with personal terminations.*] To dislike, abhor, feel aversion to, வெறுக்க.

உவர், *v. noun.* Dislike, loathing, வெறுப்பு.

உவர்ப்பு, *v. noun.* Saltishness, brackishness, உப்புக்கரிப்பு. 2. Harshness (of taste), astringency, துவர்ப்பு. 3. (*p.*) Aversion, disgust, abhorrence, dislike, வெறுப்பு. 4. Insult, contempt, நிந்தை.—*Note.* உவர்ப்பு, சு. There are six unpleasant dispositions of men, viz.: 1. ஆசியம் or அவமதிச்சிரிப்பு, derision. 2. இரதி or பேராசை, vehement desire. 3. அரதி or வெறுப்பு, dislike. 4. சோகம் or சோர்வு, swoon, deliquium. 5. பயம் or அச்சம், fear. 6. குற்சை or அருவருப்பு, abhorrence.

உவர்ச்சங்கம், *s.* A shrub, முட்சங்கு, Monetia tetracantha, *L.*

உவளகம், *s.* The harem, or zenana, an interior part of a mansion appropriated to women, அந்தப்புரம். 2. A surrounding wall, a rampart, a fortification, மதில். 3. One side, ஒருபக்கம். 4. A hollow, or hole in the ground, பள்ளம். 5. A tank, a lake, குளம். 6. Salt-pans, a place where salt forms, உப்பளம். 7. A village of herdsmen, இடைச்சேரி. 8. [*prop.* உளம்.] Two, a pair, a couple, இரண்டு. (*p.*)

உவளம், *s.* Boiled rice, சோறு. 2. Fodder for elephants, &c., பரிசைக்கவளம். (*p.*)

உவளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cleanse, purify, சுத்தஞ்செய்ய. (*p.*)

உவளு—உவள, கிறது, உவண்டது, உவளும், உவள, *v. n.* To be flexible, pliant, unable to support a weight—as a tender stalk. A lady's waist is thus poetically described as shaking or agitated in walking; to shake, wabble. See துவள. (*p.*)

உவட்சி, *v. noun.* Shaking, moving, துவளுகை. (*p.*)

உவளுயம், *s.* A medical preparation, தலைவந்துக்கட்டுமருந்து.

உவனி, *s.* A sword, வாள். (*Rott.*)

உவனி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prov.*] To grow moist or damp—as the ground, clothes, furniture, &c., when exposed to dew, damp, &c., சரிக்க.

உவனிப்பு, *v. noun.* Moistness, dampness, humidity, சரிப்பு.

உவன், *pron.* (*fem.* உவள், *pl.* உவர்.) He, this man (intermediate), spoken of one between the speaker and a more distant person, சுட்டுச்சொல். See உ.

*உவா, *s.* A young man, also a person of virile age, from sixteen to seventy, யௌவனன். (சது.) 2. A younger brother, இளையோன். 3. Youthfulness, being young, இளமை. Wils. p. 687. Uvan.

உவா, *s.* Fulness, abundance, plenitude, நிறைவு. 2. The full moon, பூரணை. 3. The sea, கடல். 4. An elephant, யானை. 5. The conjunction of the sun and moon, அமாவாசை. (சூ. 34.)

உவாகருமம், *s.* [*com.* உபாகருமம்.] Religious duties of brahmans at the time of the new and full moon.

உவாமதி, *s.* The full moon.

உவாவறுதி, *s.* The end of the new or full moon, when the eclipse is supposed to begin and religious duties are to be attended to, அமாவாசைபூரணைமுடிவு.

உவாதி, *s.* Severe pain, &c.—as உபாதி; which see.

உவாத்தி—உவாத்தியாயன், *s.* (*hon.* உவாத்தியார், உவாத்தியர்.) A teacher of the Vedas, வேதமோதுவிப்போன். 2. A schoolmaster. See உபாத்தியாயன்.

உவாத்திமார், *s.* Schoolmasters.

உவாத்திமைத்தொழில்பண்ணுதல், *v. noun.* Keeping a school.

உவாந்தம், *s.* New moon, conjunction, அமாவாசை. 2. Full moon, or opposition, பூரணை.

உவாந்தி, *s.* [*prop.* வாந்தி.] Vomiting.

உவாய், *s.* A medicinal tree with edible fruit whose leaf is pendent, தீர்மரம். (*M. Dic.*)

உவாலம்பம்—உவாலம்பனம், *s.* Abuse, reviling, தூஷணை. (நைட.) Wils. p. 161. Upalumb'ha. (*p.*)

மன்மதோவாலம்பனம், *s.* Reviling Kama the god of love. (நைட.)

சந்திரோவாலம்பனம், *s.* Reviling the moon. (நைட.)

உவி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* [*prov. prob. a corruption of* வீ.] To boil away—as water in a pot of rice. 2. To die in great numbers—as in battle or by pestilence, &c., சாவ.

அம்மையினாலவெகுஜனமுவிந்துபோயிற்று. A vast multitude of people has disappeared by the smallpox.

உவை—உவ், *pron.* These, those, intermediate, third pers. plu. அஃறிணை or inferior class of the demonstrative உ.

உவ்வி, *s.* Head, தலை. (*p.*)

உவ்வு, *s.* Religious austerities, penance, self-mortifications, தவம். (*p.*)

உழ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To practise, learn by practice, பழக. 2. To exert energy, use endeavors, persevere, execute, முயல. 3. To labor, work hard, வேலைசெய்ய. 4. To follow any kind of business—as husbandry, merchandise, manufacture, &c., தொழில்நடத்த. 5. To discharge the duties of an office, உத்தியோகஞ்செய்ய. 6. To suffer, experience sorrow, pain, trouble, fatigue, &c., வருந்த. 7. To undergo penance, தவத்தினுட்பட. (சிலப் and குறள்.) (*p.*)

இடருழக்கும்வருத்தநீங்கி. Removing from a state of affliction in which troubles are treasured up for future births— (இராமா.)

துயருழக்க, *inf.* To suffer pain, affliction, to endure agony.

உழப்பு, *v. noun.* Practice, habit, exercise, பழக்கம். 2. Energy, perseverance, close application, exertion, முயற்சி. 3. Manual labor, laborious employment, கைத்தொழில். 4. Impulse as of voice, force communicated, உயிர்முயற்சி. 5. Fatigue, suffering, வருத்தம். 6. Strength, வலி. (*p.*)

உழப்பாளி, *s.* An energetic, or industrious person, பிரயாசப்படுபவன்.

உழக்கு, *s.* A dry or liquid measure, quarter of a படி or measure—as கார்படி, marked thus ௳.

உழக்காழாக்கு, *s.* Three-eighths of a measure, காலேயரைக்கால், marked thus ௳௴.

உழக்கு, கிறேன், உழக்கினேன், வேன், உழக்க, *v. n.* To fence, சிலம்பம்பழக. (*p.*) 2. *v. a.* To trample, tread upon, mash, injure, devastate or destroy by treading, &c., மிதிக்க. 3. (*p.*) To disturb, foul, stir up with the feet, கலக்க.

செக்கண்மேதிகரும்புழக்கி. The red-eyed buffalo having trampled on the sugar-cane— (காசி.)

சமரிலுழக்கினலல்லது. Unless they beat down the enemy in battle— (பார.)

உழக்கு, *v. noun.* Trampling, treading down, மிதிப்பு.

உழச்சியர், *s.* [*prop.* உழத்தியர்.] Females of the ploughman caste. See உழவர்.

உழப்பு, கிறேன், உழப்பினேன், வேன், உழப்ப, *v. a.* To stir up, disconcert, embroil, mix all together, confuse, கலக்க.

உழப்பிப்போட்டாய்குறியைக்குழப்பிப்போட்டாய். You have deranged the calculation (in palmistry). (கல்லேக்குற.)

உழப்பன், *s.* [*prov.*] A person who talks much and uses sophistry.

உழமண்—உவர்மண், *s.* [*prop.* உவர்மண்.] Fuller's earth.

உழம்பு, கிறேன், உழம்பினேன், வேன், உழம்ப, *v. n.* To sound, make a noise, utter indistinct sounds, speak indistinctly, ஒலிக்க. (சது.) (*p.*) 2. To be disturbed, to be disconcerted, be thrown into disorder, குழம்ப.

உழலு—உழல், கிறேன், உழன்றேன், வேன், உழல, *v. n.* To whirl, revolve, சுழல. 2. To play, be in motion, to swing as a door on its hinges, &c., ஆட. 3. To wander, roam, to be unsettled, be agitated, சுற்றித்திரிய. 4. To oscillate, vibrate, அசைய. 5. To waver, be anxious, to be vexed, worried, மனஞ்சுழல. 6. To be in a state of suffering and distress—as the soul in connexion with births, to revolve through various transmigrations, பிறவியிற்சுழல.

உழலாமனனும். An unwavering mind— (நைட.)

உழலூசல்போல. Like an agitated swing— (மறைசை.)

சமுசாரக்கவலைகொண்டுழலுகிறன். He is troubled with family cares.

ஒக்கவுழன்றன். He has labored or suffered together with another.

உழற்சி, *v. noun.* Whirling, revolving, turning, சுழற்சி. 2. Roaming, wandering, சுற்றித்திரிகை. 3. Oscillation, vibration, ஆடுகை. 4. Doubt, wavering, anxiety, agitation, fear, மனச்சுழற்சி. 5. Suffering, distress, வருத்தம். (*p.*)

உழன்றறுக்க, *inf.* To labor hard, strive with might and main. 2. To become skilled or dexterous by practice.

உழன்றி, *s.* A stick fastened under the cow's neck with a hole for the tether to play in.

உழன்றுகிடக்க, *inf.* To be loosened, to be useless.

உழன்றுவர, *inf.* To be tossed to and fro—as the soul in births, or as one in various cares and troubles; to grow tired, fatigued, faint.

உழலை, *s.* [*vul.*] Great thirst, தாகம. 2. A wooden cylinder in an oil or sugar-cane-press by the revolution of which the oil or juice is expressed, உழலைமரம். 3. A piece of wood with a hole for receiving the upper post of a door or gate. See கதவின்குமிழ்.

உழலைமரம், *s.* A log of wood suspended from the neck of a cow to prevent it from straying, தொண்கெட்டை.

ஆருழலைப்படுதல், *v. noun.* Being scorched with great heat. 2. Being tormented with thirst.

உழவாரம்—உழவாரப்படை, *s.* A paddle for weeding or cutting grass, புற்செருக்கி.

உழற்றல், *s.* Thirst, தாகம். 2. Heat, வெப்பம். (*c.*)

எனக்குத்தண்ணீருழற்றலாயிருக்கிறது. I thirst.

நாவுழற்றல், *s.* A parched tongue.

உழற்று, கிறேன், உழற்றினேன், வேன், உழற்ற, *v. a.* To twist, whirl any thing about, சுழற்ற. 2. To move about the arms, or legs through pain, கைகாலுழற்ற. 3. [*prov.*] To pass time tediously, to get through an irksome duty, காலத்தைவருத்தத்தோடெழிக்க. 4. *v. n.* To writhe through pain, வருந்திப்புரள.

உழற்றிக்கழிக்க, *inf.* To pass in endurance.

பூண்டவேலையையொருபடியுழற்றிக்கழித்துக்கொண்டேன். I have accomplished the unpleasant business in which I was engaged.

சமுசாரத்தையுழற்றிக்கழிக்க. To sustain with reluctance the cares, duties, &c. of a family.

உழற்றி, *v. noun.* Rolling, twisting, writhing with pain, distortion, சுழலுகை. 2. Great thirst, மிகுதாகம்.

கையுழற்றி, *s.* Spasms in the arms, contractions, waving, &c.

காலுழற்றி, *s.* Spasms in the leg, waving, &c.

நாவுழற்றி, *s.* Thirst.

நாவுழற்றியெடுக்க, *inf.* To suffer great thirst.

உழி, *s.* A place, site, இடம். 2. Side, பக்கம். 3. A particle of place, a form of the seventh case, ஏழனுருபு. (*p.*)

அவன்வந்துழி. Where he came—

நான்நடப்புழி. Where I shall walk—

மரபுழியுய்த்து. Conducting (him) with decorum—

என்னுழிவா. Come to me.

உழிஞை, *s.* A kind of cotton shrub, சிறுபூளை, Œrua lanatar, *L.* 2. A garland of that shrub worn by soldiers in storming a fort, அஃதடைவெற்றிமாலையினென்று. (*p.*)

உழிதரல், *v. noun.* Moving about, going to and fro—as fishes in a pond, &c., being unsettled, unsteady, திரிதல். 2. Turning about, whirling, சுழலல்; [*ex* உழி, *et* தரல், giving.] (பாரதி.) (*p.*)

உழு—உழுவான், *s.* An insect which undermines the beds of gardens and the roots of trees, பின்னைப்பூச்சி.

உழு, கிறேன், தேன், வேன், உழ, *v. a.* To plough, ஏருழ. 2. [*with the impersonal terminations.*] To root up—as pigs, நிலத்தைக்கிளைக்க.

பன்றிநிலத்தையெல்லாமுழுதுபோட்டது. The hogs have ploughed up all the field

உழக்கோல், *s.* A goad used to drive oxen when ploughing.

உழத்தி, *s.* (*plu.* உழத்தியர்.) A female of the ploughman caste. See உழவர்.

உழத்திப்பாட்டு, *s.* A kind of poem. See பள்ளு.

உழுதகாடு, *s.* A ploughed highland.

உழுதநிலம், *s.* Ploughed land.

உழுதுண்போர், s. Those who cultivate fields belonging to others and subsist upon a share of the produce. 2. The fourth or Vellale caste, வேளாளர்.

உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார்மற்றெல்லாந்தொழுதுண்டுபின்செல்பவர். Those who till the ground enjoy plenty and happiness, the rest being followers and servants of the great depend on their assistance. (குறள்.)

தொழுதுண்சுவையிலுழுதுணினிது. To cultivate ground and live by it is more satisfactory than to procure maintenance from others by serving them.

உழுதுபுழுதியாக்க, *inf.* To plough and harrow, to waste.

உழுபடை, s. A plough, கலப்பை; [*ex* படை, implements.]

உழுவளைப்பு, s. The turnings in ploughing, தொழுப்பு.

உழவு, *v. noun.* Ploughing, உழுகை. 2. (*fig.*) (*p.*) Agriculture, husbandry, tillage, பயிர்செய்யுந்தொழில்.

உழவின்மிகுத்தவூதியமில்லை. There is no occupation which yields greater profit than agriculture.

உழவடைக்க, *inf.* To make over to another a piece of land for purposes of cultivation.

உழவர்—உழவோர், s. Ploughmen, cultivators, agriculturists, husbandmen, inhabitants of agricultural districts, மருதநிலமாக்கள். 2. The fourth or Vellale caste, வேளாளர். 3. (*p.*) [*ex* உழப்பு.] Warriors, heroes, படைவீரர்.

உழவிடை, s. Cessation from ploughing.

உழவீரம், s. Condition of the ground when it is sufficiently moist to be ploughed.

உழவுகட்ட, *inf.* [*prov.*] To take the lead—as the first of several teams in ploughing, to mark the course, &c., முதற்சால்போக.

உழவுகட்டி, s. Clods in a ploughed field, உழும்பொழுதுபெயருமண்கட்டி.

உழவுகாலம், s. Ploughing season.

உழவுகுண்டை—உழவுமாடு—உழவெருது. Oxen trained to the plough.

உழவுகோல், s. A ploughman's rod or staff, an ox goad, தாற்றுக்கோல். 2. A horse whip, குதிரைச்சம்மட்டி.

உழவுகோல்கொண்டேர்தனன். He drove (the horse) with a whip.

உழவுசால், s. A furrow, படைச்சால்.

உழவுசெய்ய, *inf.* To plough, practise agriculture, உழ.

உழவுத்தொழில், s. Ploughing, tillage, husbandry, பயிர்செய்யுந்தொழில்.

உழவுபொறுத்தமாடு, s. A powerful, well trained ox that works easily.

உழவுமழை, s. Rain that falls in the ploughing and sowing season.

உழுகை, *v. noun.* Ploughing, agriculture.

உழுநர், s. Ploughmen, உழவர்.

உழுந்து, s. A kind of grain, pulse, a bean, one of the nine kinds of grain, Phaseolus mungo. See தானியம், also written உளுந்து.

உழுத்தமா, s. The flour of the உழுந்து.

உழுத்தம்பருப்பு, s. The kernel of the உழுந்து.

உழுவம், s. An ant, emmet, எறும்பு. (சது.) (*p.*)

உழுவல், s. Established usage, custom, natural rights, proper course of proceeding, முறைமை. 2. Kindness, affection, attachment persevered in from birth to birth, whether the transmigration be supernal, animal, or vegetable, one taking the same kind of birth as the other, and if one be male the other becomes a female, &c., or both may be of the same sex and they may be different animals, விடாதுதொடர்ந்தவன்பு. 3. Quality, temper, disposition, as peculiar to or characteristic of a person or thing, குணம். (*p.*)

உழுவை, s. A tiger, புலி. (*p.*)

வாடப்பசித்தலரியுழுவைவாலாட்டி. The streaked tiger, faint with hunger, waved its tail—

உழை, s. Cerebral sounds—one of the seven musical tones, சிரத்தாற்பிறக்குமிசை. 2. One of the strings of the lute, or guitar, or the tone of a lute, யாழினோர்நரம்பு. 3. A deer, a fawn, மான். 4. A place, இடம். 5. A form of the seventh case, ஏழனுருபு. 6. Side, பக்கம். (*p.*)

உழைநின்றீரும். You also who stood by—(கல்லா.)

எவ்வுழைச்செல்கின்றோரும். Those who move in every place; i. e. all persons.

அவனுழைச்சென்றேன். I went to him.

உழையர்—உழையோர், s. Ministers of state, kings' counsellors, மந்திரிகள். 2. Servants, ஏவல்செய்வோர்; [*ex* உழை, side.]

உழை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*col. for* உழத்த.] To earn, gain by labor, procure by industry, to acquire, வருத்தியீட்ட. 2. *v. n.* To labor hard, toil, strive, drudge, ply, வேலையிற்பிரயாசப்பட. 3. (*p.*) To sound—as talk, buzz, clamor, இரைய. 4. To suffer, endure hardships, to be afflicted, துன்பமுற.

கல்வியிலேமிகவுமுழைக்கிறான். He is very diligent and successful in study.

நானுழைத்தஉடைமையிலேதின்கிறேன். I live by my own earnings.

உழைத்தபுண்ணியம், s. Acquired merit.

உழைத்துக்கொடுக்க, *inf.* To labor for nothing, or in vain.

வயிற்றுக்குழைக்க, *inf.* To labor for one's maintenance. 2. To procure support by labor.

உழைப்பு, *v. noun.* Hand-labor, toil, industry, diligence, பிரயாசம். 2. Earnings, gain, profit of labor, toil, or industry, thriving, thriftiness, வருத்திபீட்டுகை. 3. Endeavors, exertions, energy, close application, முயற்சி.

உழைப்பின்வாராவுறுதிகளுளவோகழப்பின்வாராக்கையறவுளவோ? Is there any good to be obtained without exertion? Is there any evil that may not arise from indolence?

அவருக்கிலக்கணத்திலேகல்லவுழைப்பு. His application and success in the study of belles-lettres are great.

உழைப்பாளி, s. An industrious, thrifty or laborious man, பிரயாசப்படுபவன்.

உழைப்பறிக்க, *inf.* To struggle, labor under difficulties. 2. To wallow, roll in mire or any thing filthy.

உழைமண், s. See உழமண்.

உளகு, s. The shaft of a lute, யாழினோருறுப்பு. (சேதுப.) (*p.*)

உளப்படுதல், *v. noun.* Being agreeable, சம்மதித்தல். 2. Being included. See உட்படல்.

உளப்பாடு, *v. noun.* Being included, comprehended, உட்படுகை.

உளப்பாட்டுத்தன்மைப்பன்மை, s. Verbs agreeing with nouns of the first and second persons, or with the three persons.

உளப்பாட்டுமுன்னிலை, s. Verbs agreeing with nouns of the second and third persons.

உளப்பாட்டுவினை, s. Verbs embracing or agreeing with any two, or all the three persons, பிறவிடத்தாரைத்தன்னோடேட்படுத்தவினை.

உளம், s. [*a contraction of* உள்ளம்.] Mind, heart, மனம். 2. Will, purpose, intention, எண்ணம். 3. Meaning, intrinsic meanings of a passage, &c., கருத்து.

உளத்தியலிடை, s. An interjection.

திருவுளம், s. Divine will, or the will of persons of high dignity.

உளர், s. Liability, exposure, ஏது. 2. [*impr. for* உளவு.] Spying.

உளராக, *inf.* To be involved, be subject to, to be exposed.

உளரு—உளர், கிறேன், உளர்ந்தேன், வேன், உளர, *v. a.* To adjust or clean feathers with the beak—as birds, சிறகுகோத. 2. To shake the wings and feathers, சிறகுதற. 3. To shake off, scatter, sprinkle, strew, சிந்த. (நிகண்டு.) 4. To try, tune, or play on a lute, &c., with the fingers, யாழினரம்புதடவ. (*p.*) 5. *v. n.* To whirl about, whiffle—as wind, காற்றுளர. 6. [*prov.*] To turn about or be loose—as a pin, or screw, சுழல. 7. [*vul.*] To stir, move either bodily or mentally, அசைய.

நரம்புளர்ந்தமுதமூறுமங்கையர்பாடல். The singing of the damsels who sweetly played on the lute— (நைட.)

இவ்வளவுசொல்லியுஞ்சற்றுமுளருகிறானில்லை...... Though I have said so much, he is not yet moved.

சிறையுளர்ந்தயல்கும். (Birds) that flock in the neighborhood adjusting their feathers with the beak—

உளர்ச்சி, *v. noun.* Whirling, சுழற்சி.

உளர்வு, *v. noun.* Whirling, whiffling, moving, stirring, turning, being loose, சுழற்சி. 2. Fluctuation, wavering, உளர்கை.

உளவு, s. Realities, internal or secret affairs, உட்காரியம். 2. Secrets, or internal affairs, seen or ascertained by a spy to be revealed to others, இரகசியசமாசாரம். 3. Spying, prying, espionage, வேவு. 4. A spy, ஒற்றன்; [*ex* உள், inside.]

உளவில்லாமற்களவில்லை. No robbery takes place without a spy.

உளவடைக்குதல், *v. noun.* Defending one by excusing his faults.

உளவறிய, *inf.* To learn the secrets of a person, family, state, &c., for some sinister object.

உளவன்—உளவாளி—உளவாள்—உளவுகாரன், *s.* A spy, a scout.

உளவனில்லாமலூரழியாது. Without a spy the country cannot be destroyed.

உளவுகண்டவன், *s.* One who is acquainted with the secrets of another.

உளவனுக்க, *inf.* To engage one in order to fish out the secrets of another.

உளவுசொல்ல, *inf.* To discover or expose secrets, உள்ளானவைகளைவெளிப்படுத்திச்சொல்ல.

உளவுபார்க்க, *inf.* To spy, pry into, or expose another's affairs for a bad purpose, வேவுபார்க்க.

உளறு, கிறேன், உளறினேன், வேன், உளற. *v. n.* To clamor without sense, bawl, utter unmeaning vociferations, குழற. 2. To cry out through alarm, பயத்தினாற்றடுமாறிப்பேச. 3. To be confused through fear and to speak incoherently, indistinctly, or inconsistently, to give confused evidence, விளைபுற. 4. To utter incoherent sounds—as a person dreaming, கனுக்கண்டுபிதற்ற.

உளறுதல், *s.* A great noise, பேரொலி.

உளறுபடி, *s.* Incoherence in speaking, குழறுகை. 2. Confusion in business, கலக்கம்.

உளி, *s.* A chisel, மரவினையாளர்கருவியினொன்று. 2. [*prov.*] A barber's instrument for paring nails, நகஞ்சீவி. 3. A place, இடம். 4. A form of the seventh case, ஏழனுருபு. 5. A burin, or graver, an instrument for engraving, சித்திரிக்குங்கருவி.

உலக்கைதேய்ந்துளிப்பிடியாயிற்று. The pestle is worn down as small as the handle of a chisel—spoken of a person emaciated by disease.

உளிக்குத்தாக்குத்த, *inf.* To buffet, to box, to strike with the fist.

சிற்றுளி, *s.* A small chisel used by carpenters.

உளியம், *s.* A bear, கரடி. (*p.*)

உளு, *s.* A wood-worm or wood-fretter, ஓர்புழு. See உக.

உளு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be worm-eaten—as wood, to be eaten out by worms, insects, weevils—as grain, seeds, or other cold body, மாமுதலியவையுளுக்க. 2. To perish as flour, to become spoiled, மாவாயுளுக்க.

இந்தமரமுழுதுமுளுத்துப்போயிற்று. This wood is entirely worm-eaten.

இச்சரீரமுப்பிருந்தபாண்டம்போலுளுத்துப்போம்.... The body becomes corroded like a vessel in which salt is kept.

உளுத்ததுவரை, *s.* The worm-eaten seed of the Cajan shrub, Cajanus Indicus.

உளுப்பு, *v. noun.* Being worm-eaten, உளுக்கை.

உளுப்புத்தாவ, *inf.* To begin to be worm-eaten.

உளுக்காரு, கிறேன், உளுக்கார்ந்தேன், வேன், உளுக்கார. *v. n.* To sit down, இருக்க. 2. To sink or settle—as a wall. பொறுத்துப்போக.

உளுக்காந்துபேச, *inf.* To speak, or to discourse sitting.

உளுக்காத்தல், *v. n.* Sitting down. See உட்கார்தல்.

உளுக்கு, *s.* A sprain. See சுளுக்கு.

உளுக்கு, கிறது, உளுக்கினது, ம், உளுக்க. *v. n.* To be sprained, சுளுக்க. 2. *v. a.* [*with the personal terminations.*] To polish, or streak metalic articles with the smith's tool called திண்ணைகம், &c., உலோகபாத்திரங்களுக்குமெருகிட.

உளுந்து, *s.* [*prop.* உழுந்து.] A kind of pulse, Phaseolus mungo, *L.*

உளுவை, *s.* A fish, water-fish, white caboose, ஓர்மீன், Ophicephales punctalus. (*Rott.*)

உளை, *s.* The mane of a horse, lion or other animal, குதிரைமுதலியவற்றின்கழுத்துமயிர். 2. A man's tuft, or lock of hair, ஆண்மயிர். 3. The hair of the body, புறமயிர். 4. Sound, noise, ஒலி. 5. Articulate sounds, பேசலாலெழுமொலி. (*p.*) 6. Mud, mire, சேறு.

உளை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To ache or suffer pain in the limbs from weariness, cold, rheumatism, நோவ. 2. To gripe, suffer pain—as persons with dysentery, வயிறுளைய. 3. To ache—as the gums in teething, பல்லுவலிக்க. 4. To suffer—as in bringing forth young, குலுளைய. 5. To suffer either in mind, or body; to be in a state of suffering, வருந்த. In most of the meanings, a dragging or moving pain is implied.

உனக்குமுதுகுளைகிறதா? Does your back ache? i. e. why do you behave so as to incur punishment?

உளைந்துளைந்துபேச, *inf.* To express regret again and again from revolving in mind an injury received.

மூக்குளைய, *inf.* To ache—as the nose.

இடுப்புளைய, *inf.* To feel pain in the hips—as in child-bearing, or as persons in some diseases, or after a long walk.

மனமுளைய, *inf.* To be pained in mind from unkind conduct or expressions.

கால்கையுளைய, *inf.* To suffer pain in the arms and legs.

வாயுளைய, *inf.* To be tired as the mouth by constant talking.

வாயுளையுமளவுமலட்டினான். He chattered till his mouth ached.

வயிறுளைய, *inf.* To suffer as in bringing forth young. 2. To suffer with dysentery.

குடவளைக்கள்வயிறுளைந்தீன்றதருமணி. The bright pearls produced from the round conchs — (நைட)

உளைமாந்தை, *s.* [*vul.*] An internal imposthume, கடுநோய்.

உளைவு, *v. noun.* Griping pain, throbbing, வலிப்பு. 2. Hard pain in the limbs, &c.—as from rheumatism, weariness, cold, &c., குடைவு.

உளைவுகொள்ள, *inf.* To ache—as the limbs, with weariness, &c., வலிப்புற.

உளைவெடுக்க, *inf.* To be attacked with griping, or rheumatic pains, வலிப்பெடுக்க.

காலுளைவுகையுளைவு, *s.* Pains in the limbs—as from walking, labor, &c.

பல்லுளைவு, *s.* Supposed distress in the teeth of a snake, or other animal, from the want of opportunity to gratify the disposition to bite, to discharge venom, &c.

வயிற்றுளைவு, *s.* Dysentery.

உளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To sound, ஒலிக்க. 2. To call, invite, அழைக்க. (பாரதி. and பிங்க.) (*p.*) 3. *v. n.* To suffer, be in a state of affliction, வருந்த. (சூ. 19.)

உளைப்பு, *v. noun.* Sounding, ஒலிக்கை. 2. Calling, அழைக்கை. 3. Pain, வருத்தம், &c.

உள். An affix to some verbal nouns, தொழிற்பெயர்விகுதி—as செய்புள், விக்குள்.

உள், *s.* The inside, the interior, that which is intrinsic, private, secret, esoteric, உள்ளிடம். 2 Mind, heart, soul, breast, உள்ளம். 3. Place, இடம். 4. As a nominal affix or postposition, it governs the dative and expresses in, within, among, of, out of, inner, interior, intrinsic, esoteric, ஏழனுருபு.

உள்ளிருந்தார்க்குத்தெரியுமுள்வருத்தம். Those of the household only are acquainted with its secret sorrows.

உட்கரணம், *s.* The intellectual faculties. See இந்திரியம் and கரணம்.

உட்கருத்து, *s.* The inmost thought, the real purpose or motive, அகக்கருத்து. 2. Cordial affection, உட்பட்சம். 3. The intrinsic meaning of a passage, &c., கருத்துரை.

உட்கருத்தாகப்பேச, *inf.* To speak with reservation.

உட்களவு, *s.* Guile, deceit, treacherousness, insidiousness, உள்வஞ்சகம்.

உட்கள்ளம், *s.* Deep-seated viciousness, dissimulation, உள்வஞ்சகம். 2. Internal, or unsubdued disease, hidden humor or matter—as in a boil, கட்டியிலுள் விஷம்.

உட்காங்கை, *s.* Caloric, latent heat, உட்சூடு.

உட்காந்த, *inf.* To have internal heat causing emaciation; [*ex* காந்த.]

உட்காய்ச்சல், *s.* Internal fever, அக்கரம். 2. Inward anger, rancor, malice, &c., உள்ளெரிப்பு.

உட்கிராந்த, *inf.* To become emaciated by disease or otherwise. 2. To be firmly rooted—as disease.

உட்குத்துப்புறவீச்சு, *s.* A species of hepatic complaint attended with convulsions, ஓர்நோய்.

உட்குயிர், *s.* The Deity regarded as the life, or identified with the life or soul of each individual, உள்ளுயிர்.

உட்குறிப்பு, *s.* Aim, object, intention, உள்ளக்குறிப்பு.

உட்குற்றம், *s.* Innate depravity. See உட்பகை.

உட்கூதல், *s.* Internal cold, chill, slight fever.

உட்கை, *s.* Palm of the hand, உள்ளங்கை. 2. A person who is privy to, a secret hand—as in உள்ளுளவு. 3. Turning to the left in dancing or other movements, இடக்கைச்சுற்று.

உட்கைச்சுற்று, *s.* Turning to the left, winding or turning backwards, or contrary to the sun.

உட்கொள்ள, *inf.* To eat as a god, or great personage, உண்ண. 2. To take food that has been consecrated to a deity, தேவப்பிரசாதமுட்கொள்ள. 3. To take food, medicine, to swallow, take in, imbibe—as the earth does the rain, &c., விழுங்க. 4. To receive into the mind, meditate, or reflect upon, மனதிற்கொள்ள. 5. To wish for an occurrence, or to express desires mentally—as a deity or holy sage (the thing desired instantly taking place), திருவுளங்கொள்ள. 6. To have a secret object in view, to have in view, உட்கருத.

உட்கோபம், *s.* Interior anger, malice.

உட்கோள், *s.* The will, determination, internal, or inmost thought, உட்கருத்து. 2. Wish of the heart. 3. Opinion, belief, tenet, கோட்பாடு.

உட்சங்கம், *s.* A select society, a committee, அகச்சங்கம்.

உட்சட்டை, *s.* An inner vest or tunic.

உட்சமயம், *s.* The six religious systems of the followers of Siva, அகச்சமயம்.

உட்சாடை, *s.* The real object of an affair, the real feeling of the heart, உட்கருத்து. 2. Exposure of secrets by one of a party by signs, இரகசியங்களைச்சமிக்கையாலறிவிக்கை. 3. The meaning, thing, &c., told or known to one's own party and differing from that which is made known to others, குழூஉக்குறி.

உட்சீலை, *s.* An under or inner cloth. 2. The lining of a garment.

உட்சுவர், *s.* An inner wall, அகச்சுவர். 2. The interior of a wall, சுவரிடை.

உட்சுவரிருக்கப்புறச்சுவர்தீற்றுகிறது. To whitewash the outside wall while neglecting the inside; i. e. to be scrupulously exact in external conduct, while the heart is full of wickedness; to attend to things remote while those at hand are neglected.

உட்சூத்திரம், *s.* The main spring in a machine, any internal power or operation concealed from view, மூலசூத்திரம். 2. A clue, or key to an affair, உள்ளுபாயம். 3. The main spring in a business, மூலகாரணம். 4. A skilfully contrived rule in numbers, &c., நுட்பமானவகை. 5. A short, compendious and subtle method of ascertaining, or effecting a thing, இலேசானவகை. 6. (*fig.*) Internal meaning of a passage, real object in view, உட்குறிப்பு.

உட்செல்ல, *inf.* To enter, insinuate one's self, உள்ளேபோக.

உட்டுளை, *s.* Hollowness—as of a pipe or tube.

உட்டுளைப்பொருள், *s.* Any thing tubular.

உட்டெளிவு, *s.* Cleverness of mind, freedom from doubt, profound knowledge, அகத்தெளிவு. 2. The clear part of the liquid—as poured off from the sediment, வடித்தசாறு. 3. Soundness—as in timber, &c., உள்வைரம். 4. Inner measurment.

உட்டேட்டம், *s.* The secret object of pursuit, as differing from profession, or appearances, மனோட்டம். 2. Property acquired and kept secretly, உட்சம்பத்து.

உட்பகை, *s.* Internal enmity, hatred or grudge, rancor at heart with professions of friendship. 2. Internal, innate, or secret foes attached to the soul, causing actions, &c., காமாதிகளுற்றுக்கள். (For the six உட்பகை, see பகை.) 3. Hatred of a king by his professed friends, civil conspiracy, அரசருட்பகை.

எட்பகவன்னசிறுமைத்தேயாயினுமுட்பகையுள்ளதாங்கேடு. Though the internal hatred be as the fragment of a grain of rape seed, the consequent evil may be very great.

உட்பக்கம், *s.* Subject of investigation or deduction in things of a mental, mystic, or spiritual character. See பக்கம்.

உட்பட, *inf.* To enter, be within, or under—as in age, உள்ளாக. 2. To engage in, be concerned in, to be, or become one of a party, or community; to be involved in, to be subject to, to yield to, to be obedient to, உடன்பட. 3. *adv.* Together with, inclusive.

மூன்றுவயதுக்குட்பட்டபிள்ளை. A child under three years of age.

அதுட்பட. That inclusive.

மோசத்துக்குட்பட, *inf.* To fall into danger.

உட்படி, *s.* A make-weight, உட்படிக்கல்.

உட்படுத்த, *inf.* To cause to enter, to introduce, அகப்படுத்த. 2. To persuade, proselyte, bring one into, or over to one's party, மருந்துக்குள்ளாக்க. 3. To include, involve, entrap, ensnare, சிக்கப்பண்ண.

உட்பத்தியம், *s.* Abstinence from venery as a regimen while taking medicine, &c.; sometimes அகப்பத்தியம்.

உட்பந்தி, *s.* The chief row or table of guests, அகப்பந்தி.

உட்பலம், *s.* Property at command, திரவியபலம். 2. Friends, assistants, attendants, &c., துணைவர்பலம். 3. Forces, army, army in reserve, சேனைபலம். 4. Strength, firmness of body, hardness, strength from food, தேகபலம்.

உட்பற்று, *s.* Internal attachment, affections of the heart, &c. See அகப்பற்று.

உட்பிரவேசம், *s.* Entrance.

உட்பிரவேசிக்க, *inf.* To enter, உள்ளேபோக, உட்புக.—*Note.* This and the preceding word are in use, but not, it is thought, on good authority.

உட்புக, *inf.* To enter, engage in.

உட்புகுந்துபேச, *inf.* To make professions of friendship, kindness, concern, &c.

உட்புரை, *s.* The hollow of a tube or pipe, உட்டுளை. 2. The small folds of a garment, உள்மடிப்பு. 3. (*fig.*) The secret of the matter, internal affair, அந்தரங்கம்.

உட்புறம், *s.* The inside, உட்பக்கம்.

உட்பொருள்—உள்ளர்த்தம், *s.* The real meaning, தாற்பரியம். 2. The hidden, or secret meaning, உட்கருத்து.

சாஸ்திரத்தினுட்பொருள், *s.* The occult sense of a doctrine.

உட்போட, *inf.* To coax, to wheedle, வசமாக்க.

உண்ணா—உண்ணாக்கு, *s.* The uvula, அண்ணம்; [*ex* நா, tongue.]

உண்ணாட்டம், *s.* The real or secret object of pursuit, உண்ணோக்கம்.

உண்ணீரம், *s.* The moisture within a body or thing; [*ex* உள், *et* ஈரம்.]

உண்ணோக்கல், *v. noun.* Contemplation.

உண்மடை, *s.* The lower opening of a water-course. 2. Oblations, or offerings of fruits, betel, rice, pastries presented to ferocious deities, inside the temple, அகமடை. See மடை.

உண்மட்டைநார், *s.* [*prov.*] The bark of the inner side of the palmyra stem, being the best for use.

உண்மாசு, *s.* Corruption of mind—as உபமலம்.

உண்முடிச்சு, *s.* Treachery by which one inveigles another, (*lit.*) an inner knot, உட்கள்ளம்.

உள்யோசனை, *s.* Secret object, project, intention, &c., உள்ளாலோசனை.

உள்வட்டம், *s.* Agio, premium in exchange of coins or other money for difference in value. (opp. to வட்டம்.)

உள்வணக்கம், *s.* Mental worship, அகவணக்கம்.

உள்வயிரம், *s.* Interior firmness. 2. Malice, internal hatred. See வயிரம்.

உள்வயிரிப்பு, *s.* Internal hardness of a boil, &c., உள்வயிரம். 2. (*fig.*) [*prov.*] Property possessed, money in hand, கையிருப்பு.

உள்வலிப்பு, *v. noun.* Inward pain or convulsion.

உள்வழிகடந்தோன், *s.* God who is transcendent in knowledge and wisdom. (சது.)

உள்வளைய, *inf.* To bend inwards, உட்கோண.

உள்வளைந்தவன், *s.* A stooping person.

உள்வளையல், *v. noun.* Bending forward, stooping as a person, உள்வளைந்திருக்கை.

உள்வளைவு, *s.* Inward curvature, concavity, உட்கவிவு.

உள்வாரம், *s.* Secret partiality, leaning, inclination, உள்ளன்பு. 2. The share in the produce of a field which comes to the owner.

உள்விழ, *inf.* To fall in, or with, join a party, &c., உள்ளாக. 2. To assume the appearance of friendship for a sinister object; to pretend kindness, காரியார்த்த மாய்ச்சிநேகிக்க.

உள்விழுத்த, *inf. v. a.* To join a person on professions of friendship in order to deceive and entrap him, &c.

உள்வினை, *s.* Malice, evil in the heart kept secret, long indulged, &c., உட்பகை. 2. Inherited fate, ஊழ்வினை.

உள்வீச்சுச்சன்னி, *s.* See சன்னி.

உள்வெக்கை, *s.* Internal heat of the system, உள்வெப்பு.

உள்வெட்டு, *s.* The marks on a testing piece of gold, for trying the fineness of other pieces, from eight degrees and upwards, உரையாணியினுள் வெட்டு. 2. The higher kinds of gold, உயர்ந்தமாற்று. 3. Inner boards or planks exclusive of the slabs, அகவெட்டு.

உள்வெண்டையம், *s.* A tinkling ring of brass, put as an ornament on the feet of horses mounted by kings and great men—comp. தண்டை, which is the name of another ornament made of silver and commonly placed upon the former. 2. A pad placed between a load and the back of an ox.

உள்ளங்கம், *s.* Symmetry of mind, the internal property or quality. See அகத்துறுப்பு.

உள்ளங்கால், *s.* The sole of the foot..

உள்ளங்கை, *s.* The palm of the hand.

உள்ளடங்கிப்போக, *inf.* To be shut, shut in, to be swallowed up.

உள்ளடக்க, *inf.* To enclose, shut in, shut up in a place. 2. To conceal, to keep secret.

உள்ளடக்கம், *v. noun.* Reservedness, reserve in intercourse.

உள்ளடி, *s.* The sole of the foot, உள்ளங்கால். 2. [*vul.*] That which is secret, இரகசியம். 3. [*prov.*] Nearness, vicinity, neighborhood, சமீபம். 4. (*fig.*) One's own relations, one's own circle, நெருங்கியசுற்றம்.

உள்ளடியிலே—உள்ளடிக்குள், *adv.* At home, within doors, near home—spoken in cases of theft, mischief, &c.

உள்ளறை, *s.* An inner room, closet, cabinet, உள்வீடு. 2. A division in a drawer, box, &c.; a separate cell, பெட்டியினுள்ளறை.

உள்ளன்—உள்ளான், *s.* One of the party or family, a domestic, உள்ளிருக்குமாள். 2. A near acquaintance. 3. The head or middle one of the oxen which thresh the corn.

உள்ளனுக்கள்ளனுமாயிருக்கிறான். He is an enemy in the camp. 2. He is an inmate and yet a rogue.

உள்ளாக, *inf.* To enter in, உட்புக. 2. To become subject to, கீழ்ப்பட. 3. To join a party, engage in, சேர. 4. To be involved, to become privy to an affair. உடன்பட.

அவனுக்குள்ளானேன். I am on his side, I have taken his part.

ஆக்கினைக்குள்ளானவன். One who is doomed to punishment.

துரோகத்திற்குள்ளாகாதே. Be not a partaker in treacherous deeds.

உள்ளாக்க, *inf.* To get a person into one's party, or to interest him in one's concerns, வசப்படுத்த.

உள்ளாட, *inf.* To have intercourse with an enemy in order to effect an object, உள்ளேபயில.

உள்ளாடசத்துரு, *s.* An enemy in the camp, a snake in the grass, a treacherous companion, உட்பகைஞன்.

உள்ளாந்தரங்கம், *s.* Internal secrets, private matters.

உள்ளாயிருக்க, *inf.* To be engaged or concerned in an affair, to be one of a party, உடன்பாடாயிருக்க.

உள்ளாராய்வு, *s.* Deep research, thought, insight, a disposition to investigate profoundly, உள்ளாராய்ச்சி.

உள்ளாள், *s.* One who belongs to a particular party, or family—a domestic.

உள்ளிட, *inf.* To include, comprise, உள்ளடக்க.

தொல்காப்பியனையுள்ளிட்டபன்னிருவர். The twelve including Tolkappiar.

உள்ளிடை, *s.* Private affairs, intellectual concernments, உட்காரியம்.

உள்ளிடைபார்க்கவந்திருக்கிறான். He has come to pry into our secrets, and to ascertain our private affairs.

உள்ளிடையானவன், *s.* One of our compact, party, &c.

உள்ளிட்டார், *s.* Brothers and sisters of an elder brother in a joint contract, inheritance, &c., தாயத்தார்.

சாத்தனையுமவனுள்ளிட்டாரையுஞ்சேர்ந்தகாணி... Land acquired in the name of Sattan and his brothers and sisters.

உள்ளிந்திரியம், *s.* The intellectual powers. See இந்திரியம்.

உள்ளிருப்பு, *s.* Hoarded treasure chiefly in money, வைத்திருக்குமாஸ்தி.

உள்ளின்மாசு, *s.* Corruption of the mind. See உபமலம்.

உள்ளீடு, *s.* What is within, உள்ளாயிருக்கிறது. 2. A bond, உள்ளுடன்படிக்கை; [*ex* இடு.]

உள்ளீட்டுக்காரியம், *s.* A secret thing.

உள்ளுக்குக்கொடுக்க, *inf.* To administer medicine which is to be taken inwardly.

உள்ளுக்குச்சாப்பிட, *inf.* To take internally—as medicine.

ஊடுடே, *adv.* Here and there, irregularly interspersed, frequently, often, every now and then.

ஊடு, கிறேன், ஊடினேன், வேன், ஊட, *v. n.* To feign a dislike—as a wife to her husband to increase his affection, பிணங்க. 2. To be displeased and unsocial—as a wife with her husband, refusing his caresses, &c., பிரிய. 3. Sometimes to be at variance—as a husband and wife, விரோதிக்க. 4. To be impatient with, வெறுக்க. (*p.*)

செம்புனலோடூடார். They will not be angry with water. (நாலடி.)

ஊடை, *s.* [*vul.*] Wool, நூற்றூர். See ஊடு and உண்டை.

ஊடையம், *s.* An intrenchment, or ditch round a camp, கிடங்கு. (*Besch.*)

ஊட்டம், *s.* Food, உண்டி.

ஊட்டி, *s.* Food, உண்டி. 2. The food of birds, பறவையுணவு. 3. Rain, மழை. (*p.*) 4. Throat, மிடறு.

ஊட்டிக்குற்றி, *s.* [*prov.*] The nape of the neck of a thick-set person.

ஊட்டியையறுக்க, *inf.* To cut the throat (also செரிக்க, திருக, and முரிக்க).

ஊட்டிராம், *s.* The தேட்கொடுக்கி plant, Tiaridrum Indicum, *L.*

ஊட்டு, கிறேன், ஊட்டினேன், வேன், ஊட்ட, *v. a.* To put into the mouth—as of children, sick people, &c., உண்பிக்க. 2. To deal out food—as a wife to her husband, &c., to impart, cherish, உணவுகொடுக்க. 3. To entertain a guest, &c., விருந்திட. 4. To saturate, infuse, steep, impregnate, tincture, புகைமுதலியவூட்ட. 5. To cause to experience joys and sufferings—as the fruits of action, இன்பதுன்பங்களையருந்த. 6. (*fig.*) To instil—as knowledge, &c., நினைப்பூட்ட. (*p.*) 7. *v. n.* To suck—as the young of beasts, கன்றூட்ட.

அவனைவைத்துக்கொண்டூட்டுகிறார்கள். They entertain him with great attention—an expression of envy.

இரண்டாட்டிலூட்டினகுட்டியானான். He is like a kid that sucks two she-goats; i. e. he gets nothing by serving two masters.

கன்றூட்டுகிறது. The calf sucks.

ஊட்டக்கொடுக்க, *inf.* To let the calf suck (the act of the cow).

ஊட்டவிட, *inf.* To lead the calf to the cow to suck.

ஊட்டுந்தாய், *s.* A foster-mother, செவிலி. See தாய்.

பிழைப்பூட்ட, *inf.* To reanimate, restore to life. 2. To furnish means of sustenance.

இந்தவைத்தியன்போகுமுயிரைப்பிழைப்பூட்டினான். The doctor has restored him to life.

நினைப்பூட்ட, *inf.* To remind, to put in mind.

நினைப்பூட்டி, *s.* A monument.

ஊட்டு, *v. noun.* Feeding, உண்பிக்கை. 2. *s.* A morsel, or portion given to a child, a sick person, &c., கவளம்.

ஊட்டுக்கன்று, *s.* A sucking calf.

ஊட்டுமறந்தகன்று, *s.* A weaned calf.

ஊட்டுணை, *s.* Shaking of the head caused by old age, தலையாட்டம். (*Rott.*)

*ஊணம், *s.* The country of the Huns or barbarians, ஓர்தேயம். Wils. p. 977. Hoona.

ஊணர், *s.* The Huns, ஊணதேயத்தார்.

ஊண், *s.* Food, உண்டி. 2. Boiled rice, சோறு. 3. Food of beasts, birds, இரை. 4. Sufferings and enjoyments ordained by God and experienced by the soul, as the fruits of action, நன்மைதீமையினலுள்ளவிளையும் புசிப்பு. (தி. 297.)

ஊணற்றபோதேயுடலற்றுப்போம். The body cannot exist without food.

ஊணற்றபோதேயுறவற்றது. Without entertainment friendship ceases.

ஊணுக்குமுந்தவேண்டும்கோளுக்குப்பிந்தவேண்டும். Be first at a feast and the last at slander.

ஊணன், *s.* (*fem.* ஊணி.) A glutton, மிகவுண்போன். 2. One who is too fond of eating, whose object is to fill his belly, போசனப்பிரியன். 3. A barbarian, மிலேச்சன்.

ஊணன்கருமமிழந்தான். The glutton failed in his object; i. e. the gluttonous will fail in their pursuits.

ஊணுறக்கமில்லாதவன், *s.* One who neither eats nor sleeps.

எனக்குஊணுமில்லையுறக்கமுமில்லை. I have neither food nor sleep.

ஊண்பாக்கு, *s.* Betel-nut taken after eating, உண்டபின்தின்பாக்கு.

ஊண்பாக்கொழியவீண்பாக்காகாது. Betel-nut should be taken only after food.

ஊதல், *s.* Wind, காற்று. 2. [*ex* ஊது.] A swelling, வீக்கல். 3. A great noise, ஆரவாரம். (சது.)

ஊதலடிக்கிறது. It blows cold.

ஊதா, *s.* [*vul.*] (*Tel.* ఊదా.) Brown color, red and black mingled, a snuff color, ஓர்நிறம்.

ஊதாரி, *s.* [*vul.*] A spendthrift, a profligate, a squanderer, வீண்செலவுக்காரன்.

ஊதாரித்தனம், *s.* Prodigality, profligacy, வீண்செலவு.

ஊதாரியாக, *inf.* To be extravagant.

*ஊதிகை, *s.* A species of creeping flower shrub, முல்லை, Jasminum, *L.* Wils. p. 687. Yuthika.

ஊதியம், *s.* Profit, gain, proceeds, இலாபம். 2. Utility, benefit, பலன். 3. Learning, erudition, கல்வி. (ஊதிபம்.)

ஊதியமென்பதொருவற்குப்பேதையார்கேண்மை யொரீஇவிடல். To separate from the society of fools is profitable. (குறள்.)

ஊதியங்காண, *inf.* To issue—as profit in trade.

ஊது, கிறேன், ஊதினேன், வேன், ஊத, *v. a.* To blow—as with the mouth, to blow the fire, to puff and blow—as with hard labor, வாயாலூத. 2. To blow a musical instrument—as a trumpet, தினைக்குவிலிசைக்க. 3. To blow with a bellows, a blowpipe, &c., துருத்திமுதலியவற்றாலூத. 4. To gnaw or bore holes—as a beetle, to injure—as a moth, வண்டுமுதலியவூத. 5. *v. n.* To be puffed up with wind, to be inflated, வீங்க. 6. To be bloated, swollen—as the belly after eating, to swell or puff up—as a corpse, or carcass in water, &c., சரீரம்வீங்க. 7. To blow softly—as wind, காற்றுமெல்லெனவீச. 8. To blow—as bees, beetles, &c., in getting out honey from flowers, வண்டிசை.

அவன்முகம்ஊதிக்கொண்டிருக்கிறது. His face is swollen.

உடலூதியிருக்கின்றது. The stomach is puffed up with wind.

ஊதுகொம்பு—ஊதுகொம்பு, *s.* A horn used as a trumpet.

ஊதிப்பார்க்க, *inf.* To try a wind-instrument. 2. To attempt a cure by enchantment consisting in part of blowing into the patient's body.

ஊதிப்போக, *inf.* To be puffed up.

ஊதிப்போட—ஊதிவிட, *inf.* To blow away, blow out, extinguish.

ஊதினபொன், *s.* Refined gold, gold refined in the fire.

வண்டூதினபுடைவை, *s.* A garment injured by insects, moths.

வண்டூதினமரம், *s.* A timber or beam gnawed or pierced by beetles.

வண்டூதினவோலை, *s.* An ola book, &c., eaten by insects.

அந்தூதினநெல், *s.* Insect-eaten rice.

ஊதுகட்டி, *s.* [*vul.*] Silver of the purest kind, சொக்கவெள்ளி.

ஊதுகரப்பன், *s.* A kind of disease resulting from bad humors in the system and attended with eruptions.

ஊதுகாமாலை, *s.* A kind of jaundice in which the body swells.

ஊதுகுழல், *s.* A pipe, a gold smith's blow-pipe.

ஊதுமா, *s.* A kind of hasty-pudding.

ஊதுமாந்தம், *s.* A disease of children, ஓர்நோய்.

ஊதுமுகம், *s.* A bloated face.

ஊதுவழலை, *s.* A kind of snake.

ஊதுவிரியன்—ஊதுபாம்பு, *s.* A kind of viper, ஓர்பாம்பு.

எக்காளமூத, *inf.* To sound a trumpet.

ஊதுவாரம், *s.* Silver, வெள்ளி. (*M. Dic.*)

ஊதை, *s.* Wind, காற்று. 2. Cold wind, குளிர்காற்று. (*p.*)

ஊத்தை, s. Filth connected with the teeth, body, &c., excrement, excretion, &c.; any ceremonial uncleanness especially from catamenia, சிரவழுக்கு. 2. Filth in general, dirt, foulness, stain, tarnish, அழுக்கு. 3. (p.) Butcher's meat, flesh, fish, ஊன்.

ஊத்தைக்குவிளாங்காய்சேர்ந்தாற்போலிருக்கிறது.... The union of a person with another as bad as himself is like eating wood apple with unclean teeth.

ஊத்தைபோகக்குளித்தவனுமில்லைப்பசிபோகத்தின்றவனுமில்லை. None washes himself so as not to require it again, nor does any one eat so as not to hunger again.

ஊத்தைகுடியன், s. A kind of goblin, ஓர்பிசாசு.

ஊத்தைச்சீலை, s. Menstruous cloth, ருதுகச்சீலை. 2. Dirty cloth, or clothes, அழுக்குச்சீலை.

ஊத்தைதாங்க, inf. To bear dirt, &c.—as cloth without showing it.

ஊத்தைதேய்க்க—ஊத்தைபுரட்ட, inf. To rub the body in bathing.

ஊத்தைநாறி, s. A dirty slut, துர்க்கந்தமுடையவள். [vul.] 2. A tree, பீநாறி.

ஊத்தைபுரள, inf. To be dirtied—as clothes, &c.

ஊத்தைப்பல்லன், s. A man with dirty teeth.

ஊத்தைப்பாண்டம், s. An unclean vessel, அழுக்குப்பாத்திரம். 2. (Met.) The body, உடல்.

ஊத்தைப்பிணம், s. A putrid corpse or carcass, நாறியபிணம். 2. The vile body (as spoken of by ascetics, &c.), உடம்பு.

ஊத்தைப்பிணமாய்நாறுகிறது. It stinks like a corpse.

ஊத்தையெடுக்க, inf. To remove the tarnish from jewels, a stain from a silk or other cloth.

ஊந்து, s. The husk of a cardamom, கச்சோலம்.

ஊமச்சி—ஊர்மச்சி, s. A kind of shell-fish that sticks to rocks, a cockle, a snail, ஓர்வகைநத்தை (commonly ஊமைச்சி).

சங்கூமச்சி, s. A chank-like cockle, Cymbium.

தேரூமச்சி, s. A spiral shell, Trochus. (Rott.)

ஊமணை, s. A person habitually silent, taciturn, unable to speak freely, பேசத்திறமில்லாதவன். 2. That which is defective, clumsily done, அழகில்லாதது.

ஊமணைச்சட்டி, s. [prov.] A chatty not well baked in the kiln, mis-shappen, &c., and that does not conduct the heat well.

ஊமணையன்—ஊமணுமூஞ்சி, s. [prov.] A stupid, sullen, pouting person, one with an ugly or forbidding countenance, அவலட்சணமுகத்தான்.

ஊமணையுரல், s. A bad-formed mortar, not well-formed in its waist, or centre.

ஊமத்தங்கூகை—ஊமைக்கோட்டான், s. [vul.] A very large species of owl, கோட்டான்.

ஊமத்தங்கூகைமுகம், s. A face like that of an owl.

ஊமத்தம்—ஊமத்தை, s. A deleterious shrub, the different parts of which cause stupor, intoxication, &c., also written உன்மத்தம், and உன்மத்தை.

ஊமத்தங்காய், s. It's fruit.

அடுக்கூமத்தை—பேயூமத்தை—மருளூமத்தை—வெள்ளூமத்தை—பொன்னூமத்தை, s. Different species of ஊமத்தை, Xanthium orientale, L.

கருவூமத்தை—காரூமத்தை, s. A dark species of ஊமத்தை, thorn-apple, Datura fastuosa.

ஊமல், s. [prov.] The seed of the palmyra fruit so called after it has been put in the ground and struck root, கிழங்குகழிந்தபனங்கொட்டை.

ஊமற்கச்சி, s. The half of a dried palmyra nut.

ஊமற்கரி, s. [prov.] Charcoal made of palmyra nuts—used by smiths.

ஊமன், s. A large kind of owl, commonly ஊமத்தங்கூகை. 2. A dumb person, ஊமை. (p.)

சேமமேவேண்டித்தீவினைபெருக்கித்தெரிவைமாருருவமேயூமனிற்கண்டகனவிலும்பழுதாயொழிந்தனகழிந்தவென்னாள்கள். All my days, even as the dream of a dumb person, have vainly passed away in the desire of pleasure, in multiplying evils and in the embraces of beautiful women. (திருமங்கை.)

ஊமாண்டி, s. [prov. vul. also உம்மாண்டி.] A kind of play among children, பிள்ளைகள்விளையாட்டிலொன்று. 2. A bug-bear, பூச்சாண்டி.

ஊமாண்டிகாட்ட, inf. To frighten children with a bug-bear.

ஊமாண்டிவிளையாட, inf. To play a game—as children, pretending to frighten each other.

ஊமை, s. Dumbness, மூகை. 2. Unsounding—as a coin that will not ring, ஒலியின்மை. 3. A dumb person, ஊமன்.

ஊமைகண்டகனாப்போலிருக்கின்றது. It is like the dream of a dumb person (not revealable).

ஊமைக்கட்டி, s. A blind boil, one that does not suppurate, வாய்மூடியபரு. 2. The mumps, பொன்னுக்குவீக்கி.

ஊமைச்சி, s. A dumb woman, ஊமைப்பெண். 2. [as ஊமச்சி.] Cockles.

ஊமைத்தனம், s. Dumbness.

ஊமைத்தேங்காய், s. A cocoanut whose water does not sound when shaken, சிராடாத்தேங்காய்.

ஊமைப்பயில், s. The gestures or signs used in conversing with dumb persons, ஊமைசமிக்கை.

ஊமையன், s. A dumb person, ஊமன்.

ஊமையெழுத்து, s. A mute consonant, மெய்யெழுத்து. (உப. 86.)

ஊமைவிளையாட்டு, s. A kind of play in which one imitates a dumb person, ஓர்விளையாட்டு.

ஊம், s. An interjection formed from உம் lengthened, a particle indicative of attention, assent, &c.

ஊமெனல், v. noun. Denoting attention, assent, &c.

கதைசொல்லுகிறேன்ஊமென்றுகேள். I will tell you a story, show that you listen by saying ஊம்.

அவனூமென்னவுமில்லை. He does not say a word, he does not open his lips.

ஊரல், s. Friction, உரிஞ்சல். 2. Shell-fish, இளிஞ்சில். 3. [prop. ஊறல்.] Rawness, greenness, moistness—as of a vegetable quivering by drying, பசமை.

ஊரற்பதமானஓலை, s. Palm leaves beginning to dry.

ஊரற்புண், s. A raw wound.

ஊராண்மை, s. Nobleness of mind, clemency, candor, magnanimity, munificence, மிக்கசெயல்; [ex உரம், strength.]

பேராண்மையென்பதறுகணொன்றுற்றக்கால், ஊராண்மைமற்றதனெஃகு. Warlike acts done to an enemy (in battle) are called heroism, but clemency or magnanimity shown to him when evil befalls him is called its lustre.

உருவிற்கமைந்தான்கணூராண்மையின்மை. Want of kindness or liberality in a handsome person—

ஊரி, s. A spiral shell-fish, or the empty shells, சங்கு. 2. Cloud, மேகம். 3. Juvenility, இளமை. (p.)

*ஊரு, s. The thigh, தொடை. Wils. p. 165. Uru. 2. Fear, அச்சம். (p.)

ஊருடை—ஊருடைமுதலி, s. The முருங்கை tree, Moringa pterygosperma, L. (M. Dic.)

ஊர்—ஊர்கோள்—ஊர்கோள்வட்டம், s. A halo round the sun or moon, சந்திரசூரியரைச்சூழ்ந்தவட்டம்.

ஊர், s. A country, a village, town, or city, புரம்.

ஊரறிந்தபார்ப்பான். A brahman who knows the whole country or town; i. e. a person competent for business.

ஊருடன்கூடிவாழ். Prosper in the society of your fellow citizens.

ஊரோடேபோய்ச்சேர்ந்தான். He arrived at home.

ஊரன், s. The chief of an agricultural district, மருதத்தலைவன். (p.)

ஊரவர்கள்—ஊரார், s. Inhabitants of a village, town, country, &c. 2. Others, strangers, not one's own people, அன்னியர்.—Used adjectively, the ர் is often dropped—as ஊராகாரியம், others' affairs; ஊராசொத்து, others' property; ஊராகாணி, others' land.

ஊராருடைமைக்குப்பேராசைகொள்ளுதல்...... Coveting other men's property—

துஷ்டப்பிள்ளைக்குஊரார்புத்திசொல்லுவார்கள்.... An unruly child will be chastized by the magistrates.

ஊரார்கையிற்கொடுக்க, inf. To deliver into another man's hand.

ஊராளி, s. The ruler, magistrate, or headman of a district, ஊரதிகாரி.

ஊரிலிகம்பலை, s. [prop. ஊர்கலிகம்பலை.] A village quarrel, tumult, &c.

ஊரின்னிசை, s. A poem concerning the heroes of a town, or country, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

ஊருக்குப்போக, *inf.* To go to a town, to go on a journey.

ஊருணி, *s.* A public tank accessible to all in the town, ஊரடுத்தகுளம்.

ஊருணிநீர்நிறைந்தற்றேயுலகவாம்பேரறிவாளன்திரு. The wealth of one possessing great wisdom, and who is much liked by the public is like a tank filled with water to which all have access.

ஊரெழுச்சி, *s.* Rising of citizens to present complaints to the authorities; also insurrection, ஊர்க்கலகம்.

ஊர்கூடுதல், *v. noun.* Assembling—as citizens.

ஊர்கூடிச்செக்குத்தள்ளவேண்டுமோ? Is it necessary that the whole city come together to turn the oilman's press? i. e. a trifling matter does not require a concourse of people.

ஊர்கோலம்வர—ஊர்வலம்வர, *inf.* To pass about as a nuptial procession, first to the right as being auspicious, கிராமப்பிரதட்சணம்வர.

ஊர்க்கதை, *s.* Rumor, country-talk, ஊர்ப்பேச்சு. 2. Unfounded reports, slander, defamation, பொய்ச்செய்தி. 3. A wild, romantic story, வீண்செய்தி.

ஊர்க்கலகம், *s.* A village quarrel, ஊரிலுண்டாகுங்கலகம். 2. A general insurrection, இராசதுரோகமானகலகம்.

ஊர்க்காறுபாறு, *s.* The affairs of a place, public affairs, ஊர்க்காரியம். 2. Management of public affairs, ஊர்விசாரிப்பு 3. Meddling with others' affairs, அன்னியருடையகாரியவிசாரிப்பு.

ஊர்க்குருவி, *s.* A sparrow, அடைக்கலக்குருவி.

உயரப்பறந்தாலுமூர்க்குருவிபருந்தாமா? Though a sparrow soars high, will it become a kite?

ஊர்க்கொள்ளை, *s.* Devastation by an invading army. 2. Extortion by a headman, &c. 3. Epidemic, or other public calamities, ஊழிநோய்.

ஊர்த்தலைமை, *s.* Headship over the district. 2. A chief or superior person in a district. 3. The headman of a district.

ஊர்நேரிசை, *s.* A poem in the நேரிசைவெண்பா incorporated with the name of the hero's town, ஓர்பிரபந்தம்.

ஊர்ப்பகை, *s.* Public hatred, general dislike. 2. Hatred of one's own country.

ஊருடன்பகைக்கில்வேருடன்கெடும். One who lives contentiously with his fellow citizens shall be rooted out. (ஔவை.)

ஊர்ப்பழி, *s.* Public censure, or blame, ஊர்நிந்தை.

ஊர்ப்பாடு, *s.* Others' affairs—spoken of one inattentive to his own, அன்னியருடையகாரியம்.

ஊர்ப்புகைச்சல், *s.* The appearance of smoke at a distance—regarded as a calamitous omen. 2. Country-talk, rumor, groundless report.

ஊர்ப்புரட்டு, *s.* A great conspiracy, a monstrous fabrication of falsehood, in which one leads and takes others with him. 2. A gross falsehood.

ஊர்ப்புரளி, *s.* Sedition, insurrection, a general commotion, ஊர்க்கலகம்.

ஊர்மனை, *s.* Habitations, a place inhabited as distinguished from a desert.

ஊர்மன்று, *s.* A public hall, ஊரம்பலம்.

ஊர்வெண்பா, *s.* The வெண்பா of the town—a poem consisting of ten வெண்பா, in praise of a town, ஓர்பிரபந்தம்.

பேரூர், *s.* A large town.

சிற்றூர், *s.* A small town. 2. The name of a village.

ஊர், கிறேன், ந்தேன், வேன், ஊர, *v. n.* To move slowly, crawl as an infant, creep as a snake, a reptile, &c., தவழ. 2. To run, or flow as water, or as blood in the veins, eruption, scall, &c.; to extend over a surface—as spots on the skin which are considered beautiful, பரவ. 3. To itch, தினவுற. 4. (*p.*) To get upon a horse, a carriage, &c., ஏற. 5. *v. a.* To ride, to cause to go—as a horse; to despatch, to drive a vehicle, செலுத்த.

இந்தஊரும்பிள்ளைபோரிடத்திலேயிடக்கிறதில்லை... This creeping child will not stay in any one place.

எறும்பூரக்கல்லுந்தேயும். Even a stone will be worn away by the continual passage of ants. [*prov.*]

கையூருகிறது. The hand is ready for action.

வாயூருகிறது. The mouth waters.

தாரூருஞ்சடை. Ringlets decked with garlands.

நீரூரும்புவி. The sea-girt earth.

சாப்பன்பசபசென்றூருகிறது. The eruption itches.

கழுக்கோலேற்றூர்ந்திடல். Being impaled on a stake. (அறநெறிச்சாரம்.)

ஊரப்பார்க்க, *inf.* To put in motion, to cause to pass away or out—as poison is removed by a magician.

ஊருகால், *s.* A chank, a snail, சங்கு.

ஊர்வது, *s.* A creeping child. 2. Reptiles.

ஊர்புல், *s.* A species of grass, ஓர்புல்.

ஊர்வன, *s.* Reptiles, தவழுஞ்செந்துகள்.

மடலூர்தல், *v. noun.* Riding the stem of a palmyra leaf—feigned of a disappointed lover. See மடல்.

பவ்வூரகரம், *s.* The letter அ joined with ப.

ஊரல், *v. noun.* Friction, உரிஞ்சல். 2. Creeping, நகர்தல். 3. *s.* (*fig.*) A creeping thing, ஊர்வது.

*ஊர்ச்சம், *s.* The month of November, கார்த்திகைமாதம். Wils. p. 166. URJA. (*p.*)

*ஊர்ச்சிதம், *s.* Power, might—as an attribute of the Divine Being, திடம். Wils. p. 166. URJITA.

ஊர்ச்சிதம்பண்ண, *inf.* To confirm, strengthen. 2. To extol, magnify.

அவனைஅந்தவுத்தியோகத்திலூர்ச்சிதம்பண்ணினார்கள். They confirmed him in that situation.

ஊர்தி, *s.* A vehicle, or conveyance in general, whether carriage, horse, elephant, palankeen, or as in Hindu mythology, the bull, swan, peacock, dog, &c., வாகனம். See அன்னவூர்தி, ஆனையூர்தி, &c.; [*ex* ஊர்.]

*ஊர்த்தம்—ஊர்த்துவம், *s.* That which is high, erect, upward—as a tree, top, &c. Wils. p. 166. URDTHA and URDTHVA.

ஊர்த்தமுகம்—ஊர்த்துவமுகம், *s.* An upturned face.

ஊர்த்துவகதி, *s.* Ascent—as of the heavenly bodies, the supernals or great among men, &c., மேனோக்கிப்போகை. Wils. p. 166. URDTHVAGATI.

ஊர்த்துவகாமினி, *s.* [*as* அந்தரகாமி.] A horse which seeks (mounts to) the skies.

ஊர்த்துவகாயம், *s.* (*St.*) The human body, also the upper part of the body, சரீரத்தின்தலைப்புறம். Wils. p. 166. URDTHVAKAYA.

ஊர்த்துவபுண்டரம். *s.* The perpendicular sectarial mark on the forehead of the vaishnava, மேனோக்கிப்போந்திருமண். Wils. p. 166. URDTHVAPUNDRA.

ஊர்த்துவராசி, *s.* Signs of the zodiac (regarded as deities) supposed to look upwards—others being described as looking downwards, மேனோக்கியவிராசி.

ஊர்ப்புலம், *s.* The castor shrub, ஆமணக்கு. (*M. Voc.*)

*ஊலூகம், *s.* (*St.*) [*as* உலூகம்.] An owl, கோட்டான். Wils. p. 167. OOLOOKA.

ஊழலி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prov.*] To become spoiled, decayed—as meat, fruits, பதனழிய. 2. To become broken—as the constitution by disease, மெலிய. 3. To become wearied, or broken in mind, to be dispirited by continued disappointment, இளைக்க. 4. To loathe, to be greatly disgusted with, அருவருக்க.

ஊழலித்தநண்டு. A crab wasted by the production of its young. The crab is said to be one of the animals which die from propagating their species.

ஊழலித்தமனம், *s.* A dispirited mind.

ஊழல், *s.* That which is decayed, spoiled, bad in quality, conduct, கெட்டது. 2. That which is filthy, nasty—as excrement, putrefaction, &c., mud, mire, அசுத்தம். 3. (*p.*) Hell, நரகம்.

ஊழலத்தி, *s.* A medicinal tree.

ஊழல்நாற்றம், *s.* An intolerable smell.

ஊழல்நிலம், *s.* Barren land. 2. Stinking, muddy land.

ஊழல்மனிதன், *s.* A man bad in disposition, conduct, &c.

ஊழற்குடிவாழ்க்கை, *s.* Slovenly economy, dirty, disorderly management of a family.

ஊழி, *s.* The periodical termination of a great age, or the time of the universal deluge and destruction of all things, the end of the world, உலகமுடிவு. 2. A very long time, நெடுங்காலம். 3. (*p.*) Lifetime, உயிர்காலம். 4. The earth, பூமி.

ஊழிபெயரினுந்தலஞ்சாரோர். Though the world should come to an end, the sages will not deviate from their purposes.

ஊழியுள்ளளவும். Through all eternity, *lit.* to the end of an age.

ஊழ்க்கூழிவர். May you die—an imprecation.

நீடூழிவாழ்க. May you live long.

ஊழிகாலம், *s.* A very long time, ages without number, நெடுங்காலம். (சது. 2.)

ஊழிக்காய்ச்சல், *s.* An epidemic fever, or pestilence supposed to be produced by a malignant demon, தொத்து சுரம்.

ஊழிக்காற்று, *s.* A destructive wind that prevails at the end of the world, புகமுடிவிலுண்டாகுங்காற்று. 2. A demon, or bad vapor that causes epidemic diseases, pestilence, &c., விஷக்காற்று.

ஊழித்தீ, *s.* The deluge, or submarine fire, usually described as a mare dwelling in the sea and breathing fire, by which, at the end of every quadruple age, the fire is consumed, வடவைத்தீ.

ஊழிநீர், *s.* The water which prevails at the last deluge, described as rain poured down from the seven species of clouds united, also as the water of the circumfluent sea, உலகமுடிவிலுண்டாகுஞ்சலப்பிரளயம்.

ஊழிநோய், *s.* A pestilence induced by a malignant demon, தொத்துவியாதி.

ஊழியூழிகாலம், *s.* From age to age, eternity.

ஊழியம், *s.* Services due to a deity, a guru, a superior by birth, or natural obligation, the obligations of a slave to his master, and sometimes those of a child to his parents, தொண்டு. (*c.*) 2. [*prov.*] Convict labor, தொழூழியம்.

உமக்குநான்செய்யவேண்டியவூழியமென்ன....... Have you any commands to give me (the language of compliment though among equals)?

ஊழியகாரன், *s.* One employed in convict labor, or in services according to the first definition, தொண்டன்

ஊழியஞ்செய்ய, *inf.* To perform services due to the deity, the state, guru, &c., தொண்டுசெய்ய.

பண்டாரவூழியம், *s.* Public services to a government.

ஊழ், *s.* Antiquity, oldness, பழமை. 2. Rule, established usage, customs of long standing, or immemorial in their origin, the method, or order of performing things in regular succession முறை. 3. Original or natural state, quality, disposition, குணம். 4. Hatred, enmity, malice, பகை. 5. Sunshine, வெயில். (*p.*) 6. The entailment of actions performed in previous births, fate, destiny; in the Hindu sense, the regular arrangement of events, by providence or fate, விதி.

ஊழிற்பெருவலியாவுள. What is more powerful than destiny?

போக்குமூழ்பலகழித்தி. Thou shalt pass many ages. (உபதேசகா.)

ஊழ்த்துணை, *s.* A wife, the destined aid, a help mate, மனைவி. (*p.*)

ஊழ்முறை, *s.* Order resulting from previous births, விதிமுறை. (*p.*)

ஊழ்விதி, *s.* Destiny as resulting from the actions of previous births. பிராரத்தவிதி.

ஊழ்வினை, *s.* The actions of former births considered as the latent cause of the metempsychosis.

ஊழ்வினைப்பயன், *s.* The sufferings and enjoyments entailed upon the sentient spirit in the varied course of the metempsychosis.

ஊழ், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To grow old, decay. முதிர். 2. To wither, fade—as flowers, &c., வாடு. 3. To decay—as flesh, fruits; to become putrid, to be spoiled, to rot, moulder, பதனழிய. 4. (*p.*) To bloom. blossom, or expand—as a flower, to be fresh, fair, beautiful, மலர். 5. To think of, to reflect on, சிந்திக்க.

ஊழ்த்தகொழுந்தாமரை. The full lotus which withered. (பின்னந்.)

இணருழ்த்துநாறாமலரனையர்கற்றதுணர விரித்துரையாதார். Men do not adorn themselves with scentless flowers though they bloom, nor do they honor the learned who have not the power to set forth their acquirements. (குறள்.)

ஊழ்த்தல், *v. noun.* Decaying, putrefying, being spoiled, பதனழிவு. 2. Consideration, சிந்திப்பு

ஊழ்த்தல், *s.* Meat—as flesh, or fish, புலால். 2. Flesh of all kinds, ஊன். 3. Opportunity, சமயம். 4. A folding, மடிப்பு. (*p.*)

ஊளா—ஊளி, *s.* A kind of fish, செவேலை. (Rott.)

ஊளை, *s.* [*vul.*] A howl, the howling of a dog, jackal; or the cry of a sheep when diseased; and applied contemptuously to the cry of a person in anguish, or possessed, or supplicating aid, நரிமுதலியவற்றினூளைக்குரல். 2. Snot, mucus of the nose, சளி. 3. Filthiness, அசுத்தம்.

ஊளைமூக்கன், *s.* A snotty fellow.

ஊளையிட, *inf.* To howl.

ஊளன், *s.* A jackal, a fox, நரி. 2. A male fox, ஆண்நரி. (பிங்.) (*p.*)

ஊறு, *s.* Touch, feeling, sensation, தீண்டுகை. 2. Misfortune, obstacle, disaster, mishap, இடையூறு. 3. A scar, a wound, a maim, a hurt, or injury inflicted by violence, காயம். 4. Killing, murder, கொலை. 5. Evil, mischief, blight, தீமை; [*ex* உறு.] (*p.*) —*Note.* There are eight kinds of ஊறு or sensations given, viz.: 1. வெம்மை, heat. 2. தண்மை, cold. 3. மென்மை, softness, thinness, fineness. 4. வன்மை, hardness. 5. நொய்மை, slenderness, tenuity. 6. சீர்மை, smoothness. 7. இழுமெனல், slipperiness, 8. சருச்சரை, roughness, unevenness.

ஊறுசெய்தவர்க்கு. To those who inflict wounds, &c.

ஊறுகொள்ள, *inf.* To receive a hurt, suffer violence, காயங்கொள்ள. (ஓ ...)

ஊறுகோள், *s.* Injury, violence, wounds inflicted, காயம். 2. Murder, கொலை. (*p.*)

ஊறுபாடு, *s.* Wounds, scars, காயம். 2. Injury, damage, violence, தீமை. 3. The four ways of inflicting injury, viz.: எறிதல், குத்தல், வெட்டல் and எய்தல்.

ஊறுவைக்க, *inf.* To cause a mark, or scar—as with the nails teeth, &c.; to wound.

ஊறு, கிறது, ஊறினது, ம், ஊற, *v. n.* To spring, flow as water in a well, to issue, சுர. 2. To soak, to be steeped, pickled, காய்முதலியவூற. 3. To ooze through, percolate, filter, distil, கசிய. 4. To run or spread—as ink in paper, as dampness in land around a spring; to become moist, மைமுதலியவூற. 5. To form, become collected—as milk in the breast, toddy in palm flowers, &c., பால்முதலியனசுரக்க. 6. To form as raw flesh in a sore, to heal, காயந்திறுனவளர. 7. To increase—as flesh in a person who has been wasted by disease, to increase by slow degrees, மெலிந்தவுடல்தேற. (*c.*)

தொட்டனைத்தூறுமணற்கேணிமாந்தர்க்குக்கற்றனைத்தூறுமறிவு. The more you dig in a sandy soil the more does the water spring forth; so the more you apply to science the more your knowledge will increase.

கற்கவூறுங்கலைஞானம். By learning, knowledge is increased.

இறைத்தகிணறூறும்இறையாக்கிணறூறாது. Water issues from the springs of a well constantly drawn, but from one not drawn, it ceases to do so; i. e. the more one gives, the more will be given to him.

ஊறணி, *s.* A fountain, a spring of water, ஊற்று. 2. [*prov.*] Good, moist land where water oozes out, கசிவுநிலம். 3. Wet, marshy, or brackish lands, சேற்றுநிலம். 4. Income, property stored up, வரவாய் (probably a corruption of ஊருணி).

ஊறவூறக்கறக்க, *inf.* To milk the cow as fast as the milk forms. 2. To obtain money from a person as fast as he gets it.

ஊறவைக்க, *inf.* To steep, pickle, imbue, macerate.

ஊறுகாய், *s.* Pickled fruits, அடைகாய்.

ஊறுநீர், *s.* Spring-water, ஊற்றுநீர்.

ஊறுபுண், *s.* A healing wound, ஆறிவரும்புண்.

தேனூறுமலர், *s.* The honey forming flower.

ஊறல், *v. noun.* Oozing as from a sore, &c., percolation, discharge, issue, ஊறுகை. 2. *s.* A small spring, springwater, ஊற்று. 3. A tincture, infusion, &c., ஊறக்கிடந்தநீர். 4. A taint, or faint mixture of another metal, பஞ்சலோகக்கலப்பு. 5. One's income, acquisition, property amassed, &c., வரவாய். 6. A slight degree of verdigris, களிம்பு.

ஊறற்பாக்கு, *s.* Betel-nut soaked to render it fit for use.

ஊறற்றாள், *s.* Sinking paper.

ஊற்றம், s. A walking staff, a crutch, a support, protection, பற்றுக்கோடு. 2. Stability, solidity, immobility—as of a mountain, அசைவின்றிநிற்கை. 3. Strength, power, ஆற்றல். 4. Intensity, arduousness, urgency, pressure (of business), multiplicity (of labors), மிகுதி. 5. Praise, fame, celebrity, புகழ். 6. Knowledge, wisdom, அறிவுடைமை. (p.)

ஊற்றாணி, s. The nail which fastens the beam of a plough, கலப்பையுறுப்பிலொன்று. (c.)

ஊற்றால், s. The fourth lunar mansion, உரோகணிநாள். (p.) 2. A wicker basket for catching fish, or covering chickens, ஓர்கூடு.

ஊற்றால்கவித்தல், v. noun. Setting a wicker basket for catching fish.

ஊற்று—ஊற்றுக்கோல், s. A walking staff, a crutch, a support, ஊன்றுகோல்; [ex ஊன்று.]

ஊற்று, s. A spring, a fountain, source, சுரப்பு. 2. Dampness rising from the ground in the wet season, ஈரம்.

ஊற்றடைக்க, inf. To be choked up as a spring, or source. 2. To stop or choke a spring.

ஊற்றுக்கண், s. The aperture whence water springs, the orifice of a spring, ஊற்றுவாய்.

ஊற்றுக்குழி, s. A hole in the ground for gathering water, ஊற்றுப்பள்ளம்.

ஊற்றுநீர், s. Spring-water.

ஊற்றுப்பெயர, inf. To spring, flow newly—as a fountain into a well, ஊற்றுண்டாக.

ஊற்றுவெட்டல்—ஊற்றுத்தோண்டல், v. noun. Digging for water.

ஊற்றெடுக்க, inf. To spring up, or issue freely and plentifully, ஊற்றுப்பெருக.

ஊற்றெடுக்கமழைபெய்தது. It rained so as to cause the water to flow from the land.

ஊற்று, கிறேன், ஊற்றினேன், வேன், ஊற்ற, v. a. To pour, to let flow, spill, சிந்த. 2. To express (oils, &c.), எண்ணெயூற்ற. 3. To pour in large quantities, pour, or cast out as useless, to empty, or clear a vessel of its contents, ஊற்றிப்போட.

பயிர்ஊற்றிருந்துபோச்சுது. The plants are spoiled by too much rain or water.

ஊற்றுண்ண, v. n. To be poured out. 2. To be spilled, to ooze out, leak out.

கலயத்திலிருந்தநீரெல்லாமூற்றுண்டுபோயிற்று. All the water that was in this vessel has been spilt.

ஊற்றுப்பு, s. [prov.] The refuse of the kernel of the cocoanut after the oil is expressed, தேங்காயப்பிண்ணாக்கு.

ஊற்றுப்பெட்டி, s. [prov.] The basket in which the seeds, kernels, &c. are put for expressing oil, எண்ணெயூற்றும்பெட்டி.

ஊற்றுமரம், s. A kind of oil-press, எண்ணெயூற்றுமரம். 2. The cylinder or shaft in an oil-press, செக்குலக்கை.

ஊனகத்தண்டு, s. A black kind of beetle, கருவண்டு.

*ஊனம், s. Defect, want, deficiency—as of a member, &c.; a maim, privation, குறைபாடு. Wils. p. 165. Una. 2. Disgrace, degradation, meanness, vileness, ஈனம். 3. (p.) Moral evil, தீமை.

ஊனமிலவுருப்பு. A form without defect, (அறநெறித்.)

ஊனமிலான்மானமிலான். (Dharma) who is alike unconscious of disgrace and of honor. — (பார.)

ஊனவெம்பவம். Vile, horrid transmigration. (சத. 64.)

காலூனப்பட்டவன். One who has lost a leg, or who is defective in his legs.

கையூனம், s. Privation of a hand.

ஊனக்கண், s. The defective eye of the body, in contradistinction to the all-seeing eye of the Deity, or the spiritual eye of the sage, நேத்திரம். 2. Defective sight, குருட்டுவிழி.

ஊனன், s. One defective in some member, குறைவுள்ளோன்.

ஊனாங்கொடி—ஊனான், s. A creeper, ஓர்கொடி, Ipomea racemosa.

ஊனாயம், s. [prop. நூனாயம்.] A fault, a trick.

ஊன், s. Flesh, தசை. 2. Meat, மாமிசம். 3. Serum, marrow, fat, கொழுப்பு. 4. (p.) The body, உடல்.

ஊனைக்குறித்தவுயிரெல்லாம்நாணென்னும்நன்மைகுறித்ததுசால்பு. As the life depends on the firmness of the body, so accomplishments depend on modesty.

ஊனிலாயாக்கை, s. Fleshless bodies (of demons). (தொல்காப்.)

ஊன்கழிந்தசங்கு, s. A conch-shell deprived of its flesh.

ஊன்கெடினுமுண்ணார்கைத்தண்ணாரத. Though you lose your flesh (by hunger), eat not with those with whom it is not proper to do so. (நாலடி.)

ஊனுருக்கி, s. Consumption, சயரோகம்.

ஊன்விற்போர், s. Flesh-mongers.

ஊன்றள்ள, inf. To be formed—as proud flesh, ஊன்வளர. 2. To abstain from flesh.

ஊன்றி, s. A snake, பாம்பு. (p.)

ஊன்று, கிறேன், ஊன்றினேன், வேன், ஊன்ற, v. a. To plant, set, fix, place firmly, rest upon with pressure—as a pole in propelling, fixing a boat, a musket, a lever, &c., நிறுத்த. 2. To lay down premises in an argument, நியாயத்திற்குமூலத்தைநாட்டிக்க. 3. To grasp, hold, strike root as trees, gain a firm footing, become established in a place, இறுகப்பிடிக்க. 4. v. n. To lean upon, recline, or depend on a staff, a person, &c., சார. 5. To be steadfast, firm, intent upon, உறுதியாய்நிற்க.

ஊன்றக்கொடுத்ததடிபென்னுச்சியைப்புடைக்கிறது. The staff which I gave him to lean upon, breaks my head; i. e. the good I have done him has turned out evil.

கையூன்றிக்கரணம்போடவேண்டும். To tumble, the hands must be fixed on the ground; i. e. nothing can be done without money, means, &c.

மழையூன்றிப்பெய்கிறது. It rains hard or incessantly.

மேகங்களூன்றிமழைபெய்தது. The clouds resting on the horizon poured down torrents.

நிலத்திற்சிக்கெனவூன்றியவேர். Roots stuck firmly in the ground.

ஒத்தகடப்பாட்டிற்றானூன்றியெப்து. Exerting themselves in their proper calling.

ஊன்றக்கட்ட, inf. To edify, ratify.

ஊன்றிக்கேட்க, inf. To interrogate with much emphasis, press for an answer, உறுதியாய்வினவ. 2. To hear attentively, கருத்தாய்ச்செவிகொடுக்க.

ஊன்றிக்கொள்ள, inf. To gain a firm footing in a place, office, &c.; to establish one's self, நிலைபெற. 2. To lean or depend upon, சார்ந்திருக்க.

ஊன்றிச்சொல்ல, inf. To speak, or pronounce with distinct articulation, உறுதியாய்ச்சொல்ல.

ஊன்றித்தாங்க, inf. To press on a pole in stopping, or poling a boat, ஊன்றித்தள்ள.

ஊன்றிநடக்க, inf. To walk cautiously, firmly, &c.—as on slippery ground. 2. To walk firmly as one regaining the use of his limbs. 3. To walk with a firm foot so as to secure a quick pace.

கோலையூன்றிக்கொண்டுநடக்கிறான். He walks with the assistance of a staff.

ஊன்றிப்படிக்க, inf. To read poetry with proper pauses. 2. To sing with proper articulation, emphasis, &c.

ஊன்றிப்பார்க்க, inf. To look steadfastly, intently, &c., கூர்ந்துப்பார்க்க. 2. To consider a thing maturely, to fix the mind intently on the object of consideration, ஆராய்ந்துபார்க்க. 3. To feel, try—as a fruit, &c., pressing it with the hand, கையிலழுத்திப்பார்க்க.

ஊன்றிப்பிடிக்க, inf. To seize firmly, hold tight, இறுகப்பிடிக்க. 2. To mark faults severely, கூர்மையாய்க்குற்றம்பிடிக்க. 3. To hold fast an opinion, பிடிவாதமாயிருக்க.

ஊன்றிப்பேச, inf. To speak emphatically or forcibly, உறுதியாய்ப்பேச.

இந்தநியாயத்திலூன்றிப்பேச. Urge this argument, insist upon it.

ஊன்றிப்போட, inf. To confirm an opinion, accusation, evidence, &c., ஸ்திரப்படுத்திவிட.

ஊன்றிமிதிக்க, inf. To tread cautiously—as one on a well-beam, step firmly, steadily, &c.

ஊன்றியெழுத, inf. To press or indent well in writing.

ஊன்றிவைக்க, inf. To establish a family. 2. To settle one in life, business, &c. 3. To confirm, settle one in an opinion in a slight degree.

ஊன்றுகால், s. A stay, a prop, உதைகால்.

ஊன்றுகோல், s. A staff, a walking stick, a support, பற்றுக்கோடு.

எழுத்தையூன்ற, inf. To put a point over a letter which makes it mute.

நாற்றையூன்ற, inf. To set plants.

எ

எ. The seventh letter and vowel of the Tamil language, ஏழாமுயிர். 2. An interrogative letter, வினாவெழுத்து—as காலம், time; எக்காலம், what time, when? எத்தனை, what number or quantity? எப்படி, what manner, how? எங்கே, where? 3. [*as a numeral.*] The number seven, ஏழெனெண்ணின்குறி.—*Note.* When a consonant is associated with this vowel, its presence is indicated by the following symbol ெ prefixed, which is called கொம்பு. It is often used in words from the Sanscrit in place of அ—as செபம் for சபம்; செகம் for சகம், &c.

எக்காலும். Always.

எத்தன்மைத்து. Of what nature?

எஎ, *inter.* A word expressive of contempt.

எஃகம், *s.* A missile weapon, எறிபடை. 2. A dart, a lance, ஈட்டி. 3. A discus weapon, சக்கரம். (*p.*)

எஃகு, *s.* Sharpness, pointedness, keenness, கூர்மை. 2. Steel, உருக்கு. 3. A weapon in general, ஆயுதப்பொது. 4. Acuteness of mind, acumen, sharpness, மதிநுட்பம். (*p.*)

இகலிலரெஃகுடையார். Those free from malice, and those acute in mind—(நாலடி.)

எஃகு, கிறது, எஃகினது, ம், எஃக, *v. n.* To be elastic, stretchable, நெகிழ. 2. To become stretched or drawn out, நீள. 3. To become unfastened, unclasped, unloosed, &c., அவிழ. 4. To spring back, rebound—as a bent bow, bamboo, &c., எதிர்தாக்க. 5. To be lifted, drawn, or carried—as by a well beam, தாழ்ந்தெழும்ப. 6. [*with the personal terminations.*] To reach up, stretch one's self in reaching for a thing, எட்ட. 7. To climb by starts, stretch one's self for climbing, உதைந்தேற. 8. *v. a.* To pick, card, or comb cotton, &c., to card with a bow, பஞ்சமுதலியகொட்ட.

எக்கிப்பிடி. Stretch up and reach it.

எக்கியெக்கிநடக்க. To spring or toss one's self in walking.

துலாஅவனைக்கொண்டெக்கிற்று. The well-sweep has taken him up.

ஈளையெக்கியெக்கிவிழுக்கின்றது. The asthma convulses him.

வில்லெக்கிற்று. The bow started back, resiled.

எஃகினபஞ்சி, *s.* Picked or carded cotton.

எஃகுகோல், *s.* A bow for carding cotton, பஞ்சகொட்டும்வில்.

எகரம், *s.* The letter எ, ஓரெழுத்து. (*p.*)

எகினம்—எகின், *s.* A swan, அன்னம். 2. The yac or bos grunniens, கவரிமா. 3. The beaver, நீர்நாய். 4. A dog, நாய். 5. A tamarind tree, புளியமரம், Tamarindus Indica. 6. A species of sour mango tree, புளிமா, Mangifera Indica. 7. The அழிஞ்சில் tree, Alangium decapetalum, *L.* (*p.*)

எகுன்று, *s.* A shrub, குன்றி, Abrus precatorius, *L.*

எக்கச்சக்கம், *s.* [*vul.*] Confusion, jumble, huddle, disorder, தாறுமாறு. 2. (*Tel.* ఎక్కుసక్కెము.) Unevenness, irregularity, ஒழுங்கின்மை. 3. Difference, Disparity, வித்தியாசம். 4. Scorn, derision, நிந்தை.

எக்கச்சக்கமானஇடம் பத்திரமாய்ப்போ. This is an uneven, dangerous place, go cautiously.

காரியமெக்கச்சக்கமாய்வந்திருக்கின்றது. The thing is ended in confusion. The affair has turned out disastrously; some danger is apprehended.

எக்கச்சக்கமாய்ப்பேச, *inf.* To insult a person, use uncivil language. 2. To give an indirect answer, to speak at random.

எக்கச்சக்கமானஆள், *s.* A faithless person. 2. An indecent person. 3. One who confuses every thing.

எக்கச்சக்கம்பண்ண, *inf.* To derange things, put in confusion, huddle, jumble, தாறுமாறுசெய்ய. 2. To be insincere, to act differently from one's professions, or contrary to instructions, அகடவிகடஞ்செய்ய.

எக்கண்டம், *s.* [*prop.* ஏககண்டம்.] A whole, not made up of parts, pieces, &c., மொத்தம்.

எக்கண்டமும்பிழை. It is full of faults, it is all wrong.

எக்கண்டப்பரப்பு, *s.* A sheet of one piece.

எக்கண்டமாய்நெய்ய, *inf.* To weave a whole piece.

எக்கண்டமாய்வீங்க, *inf.* To be swollen all over.

எக்கண்டமானபலகை, *s.* A whole board.

எக்கண்டமானபீரங்கி, *s.* A cannon that is one solid piece.

எக்கண்டமானபுடவை, *s.* A whole piece of cloth.

எக்கரணம்—எக்கரவம், *s.* The noise which a bull makes, when about to attack another, முக்காரம். (*c.*)

எருதெக்கரணம்போடுகின்றது. The bull makes a noise which indicates that he is about to attack another.

எக்கர், *s.* Vulgar terms, words not used in company, இடக்கர். 2. Casting up sand as waves, சொரிதல்—a change of எக்கல், see எக்கு.

எக்கழுத்தம், *s.* Arrogance, pride, haughtiness, superciliousness, a haughty carriage, இறுமாப்பு. (*p.*)

எக்களி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be overjoyed, மிகமகிழ. (*p.*)

எக்களிப்பு, *v. noun.* Excessive joy, மிகுமகிழ்ச்சி.

எக்களிப்பாயிவன்பக்கக்குரங்கெல்லாமென்னோடெதிர்க்கவுமாயின. It so happened that all the monkeys of his (Rama's) army faught against me with exultation. (இராமாயணகீர்த்தனை.)

எக்காளம், *s.* A trumpet, a cornet, &c., காகளம்.

எக்காளச்சத்தம்—எக்காளத்தொனி, *s.* The sound of a trumpet.

எக்காளந்தொனிக்க—எக்காளமூத, *inf.* To blow a trumpet.

*எக்கியம், *s.* A sacrifice, a ceremony in which oblations are presented, யாகம். See எச்சம் and ஓமம். Wils. p. 678. YAKSYA.

எக்கியம்பண்ண—எக்கியம்வளர்க்க, *inf.* To offer sacrifices, to perform a religious ceremony, யாகஞ்செய்ய.

எக்கியோபவீதம், *s.* The sacrificial cord of the three superior castes, especially of the brahman.

எக்கு, கிறேன், எக்கினேன், வேன், எக்க, *v. a.* To draw in the stomach—as beggars to show hunger, or as persons in dressing, வயிற்றையெஃகப்பண்ண. 2. *v. n.* To reach up, stretch one's self in reaching for any thing, எட்ட. 3. To ascend, ஏற. 4. (*p.*) To be heaped up—as sand by the waves on the shore, உந்தண்ண. 5. (சது.) To fight, போர்செய்ய.

எக்கிப்பார்க்க, *inf.* To peep, standing on tip-toe.

எக்கல், *v. noun.* The act of contracting the stomach. 2. Ascending. 3. Fighting. 4. *s.* That which is cast on shore.

என்கொல்லைமுழுதுமாற்றெக்கல்மூடிபபோட்டது. My field is entirely covered with sand thrown up by the river.

எங்கண், *inter.* Where, in what place, எவ்விடம்; [*ex* எ, what, *et* கண், place.]

எங்கள், *pron.* [*genitive of* யாங்கள்.] Our. See யாம் or யாங்கள்.

எங்கு—எங்கே, *inter.* Where? whither? எவ்விடம்.

எங்கத்து—எங்கத்தை—எங்கத்தைய, *inter. and adj.* What or which place, or country, of what, &c.

எங்கும். Every where, in all directions.

எங்கும்பரவியிருக்கின்றது. It is every where extended.

எங்கும்வியாபகனுதல். See அருணம், under ஆது.

எங்கெங்கே. Whither, distributively.

எங்கெங்கேபுகையுண்டோஅங்கங்கேயழுமுண்டு. Wherever there is smoke, there is fire.

அதெங்கேயிதெங்கே? Where is that, and where is this? i. e. both are gone. 2. This bears no comparison to that. 3. That is very far from this, out of the way, &c.

எங்ஙனம்—எங்ஙனே. [*in poetry*, எவ்வன்.] In what manner, how, எத்தன்மை. 2. In what place, where, எவ்விடம்; [*ex* எ, what, *et* வனம், place.]

*எசமானன்—எசமான், *s.* (*fem.* எசமானி.) One who institutes or performs a sacrifice, வேள்வித்தலைவன். 2. (*p.*) A lord, master, an employer, a conductor, தலைவன். 3. A husband, கணவன். 4. Owner or proprietor. See யசமானன்; [*ex* யச, to worship.]

எசமானத்துவம், *s.* Superiority, தலைமை.

எசமானி, *s.* A lady, mistress, a matron, தலைவி.

எசம், *s.* A nerve, an artery, நரம்பு. (சது.) (*p.*)

எசலாட்டம், *v. noun.* [*prov. prop.* இகலாட்டம்.] Quarrelling.

*எச்சம், *s.* An offering, a sacrifice, யாகம்; [*ex* யச, to worship.] Wils. p. 678. YAJNA. (*p.*)

எச்சன், *s.* The deity who is supposed to be present and to accept a sacrifice, யாகசுரபி. 2. One who offers the sacrifice, யாகஞ்செய்வோன். 3. Vishnu who appears in the sacrifice, விட்டுணு. (*p.*)

பஞ்சவெச்சம், *s.* The five daily sacraments or essential rites. See யாகம்.

எச்சம், *s.* Deficiency, defect, lack, குறைபாடு. 2. Remainder, remnant, சேஷம். 3. Orts, remains of food, whatever has come in contact with the mouth, spittle, &c., being deemed defiled, எச்சில். 4. Posterity, offspring, சந்ததி. 5. The dung of birds, fowls, wall-lizards, &c., பறவைமுதலியவற்றின்மலம். 6. An elliptical, or unfinished word, sentence, பெயரெச்சமுதலியன; [*ex* எஞ்சு.] (*p.*)

எச்சத்தாற்காணப்படும். (Their deeds) will be manifest in their posterity; i. e. in the prosperity, or adversity of their offspring.

எச்சமிட, *inf.* To discharge excrement—as birds, &c., பறவைமலம்விசர்ச்சிக்க.

பகையெச்சம், *s.* Suppressed anger.

தீயெச்சம், *s.* The remainder of fire—as, வினைபகையென்றிரண்டினெச்சம், நினையுங்காற்றீயெச்சம்போலத்தெறும், (Warlike) deeds which are not pushed to extremity (in the destruction of a foe) and hatred which is not executed but suppressed, will destroy like fire unextinguished. (குறள்.)

நோயெச்சம், *s.* A reduced disease, the remains of a disease.

ஈரெச்சம், *s.* In Grammar, the two classes of unfinished words. I. பெயரெச்சம் or participles, *lit.* words which require nouns to complete them. These embrace two classes, viz.: (1.) தெரிநிலைப்பெயரெச்சம், or the participle of the common verb—as, வந்தமகன், the man who came; வருகின்றமகன், the man who comes; வரும்பிள்ளை, the child that will come. (2.) குறிப்புப்பெயரெச்சம் or பெயரெச்சக்குறிப்பு, the participle of the symbolic verb, which always ends in அ and often has the force of an adjective—as கரியகுதிரை, a black horse; கடுங்கண்ணகுதிரை, a fierce-eyed horse, or a fierce horse; பொன்னகுதிரை, a gold-like horse; அமர்முகத்தகுதிரை, a horse in the front of a battle; மூவிலைவேல், a three-forked dart, a trident. II. வினையெச்சம், unfinished verbs, or such forms of the verb as require other terminate verbs, &c., to complete the sense. (1.) தெரிநிலைவினையெச்சம். In the past, it is called by Beschi, a gerund; there are five varieties; i. e. (1.) செய்து, பண்ணி, சிரித்து for சிறுவி or சிறுத்தி; விளைஇ for விளைத்து or விளைந்து; இரீஇ for இருந்து or இருத்தி; கூஉ for கூவி. (2.) செய்பு. (3.) செய்யா. (4.) செய்யூ. (5.) செய்தென—*Notes.* The first is the most common, and the only kind found in colloquial use. 2. The present, or infinitive, செய or செய்ய. 3. The future comprising six varieties. 1. செயின், செய்யின், செயில், செய்யில், செயதில், these are all future subjunctive forms. 2. செய்யிய. 3. செய்யியர். 4. செய்வான். 5. செய்பாகரு. 6. உண்பான், this termination occurs after a nasal only. The last five are equivalent to the infinitive, &c., they may be rendered by *that* with the potential of the verb, as given in நன்னூல். A few may be added: 1. செய்தால், the common subjunctive of the past, but often used for the future. 2. செய்தக்கால். 3. செய்தக்கடை, past or future subjunctives. 4. செய்தலும், காண்டலும். 5. செய்தலோடும், implying when, or as soon as. 6. ஏல், a contraction of எனில், is, in poetry, added to any finite verb to form the subjunctive—as உண்ணுமேல், உண்ணுமெனில். 2. வினையெச்சக்குறிப்பு or குறிப்புவினையெச்சம், gerund of symbolic verbs; of these there are but two, இன்றி and அன்றி from இல் and அல், these symbolic verbs being redundant. சொல்லெச்சம், elliptical, or incomplete words, or classes, ten in number. 1. பெயரெச்சம், participles as given above. 2. வினையெச்சம், unfinished forms of the verb. (See above.) 3. உம்மையெச்சம், a sentence in which a second உம் and its adjunct are understood—as, சாத்தனும்வந்தான், Sattan also is come, implying that others are come or expected. 4. சொல்லெச்சம், a clause in which சொல்லல் is understood —as, என்றார் for என்றுசொன்னார். 5. பிரிநிலையெச்சம், a clause in which an exception of persons, or things is implied, see ஏ and ஓ—as, அவனேகொண்டான், he bought it, implying that others did not. 6. எனவெனெச்சம், a clause in which a verb, or a noun is required after என—as, கடலொலல்லெனவொலித்தது, the sea roared with the sound of ஒல். 7. ஒழிபிசையெச்சம், a clause in which a counterpart is understood—as உண்ணுதற்கோவந்தான், was it to eat that he came (implying that his object was otherwise)? 8. எதிர்மறையெச்சம், the ellipsis of a negative, or denial—as அவனேகொண்டான், Was it he that bought it (implying a negative answer). 9. இசையெச்சம், ellipsis generally comprising two or more words, such as are not found in the above—as நின்னையானகன்றுற்றவனே, Can I endure separation from you (indicating an affectionate attachment to the party addressed)? 10. குறிப்பெச்சம், symbolic terms, contractions, abbreviations, &c., comprising several kinds. (See குறிப்பு.) There is another form called முற்றெச்சம், a finite verb used in the place of a gerund—as உண்டான்வந்தான் for உண்டுவந்தான், eating he came.

எச்சமிட, *inf.* To befoul, to soil with dung—spoken of birds.

எச்சவனுமானம், *s.* Inference of a past cause from a present effect. See அநுமானம்.

எச்சவாய், *s.* [*vul.*] The sphincter of the anus, the podex, குதம்.

அட்டவெச்சம், *s.* The eight defects in the human body; i. e. 1. குருடு or குருடு, blindness. 2. ஊமை, dumbness. 3. செவிடு, deafness. 4. கூன், crookedness of the back. 5. குறள், dwarfness. 6. முடம், lameness. (சது.) (in பிங்கலந்தை and திவாகரம், மகண், மா, hermaphroditism). 7. உறுப்புமிகக்கம், a monstrous birth either by redundancy, defect, or misplacing of the members, &c. 8. உறுப்பில்பிண்டம், a shapeless production, or a birth with the features not properly developed.

எச்சரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To caution, warn, forewarn, pre-admonish, to give previous notice, புத்திசொல்ல. 2. (*fig.*) To discipline, கடிந்துகொள்ள.

எச்சரித்துவைக்க, *inf.* To caution, discipline. 2. To hint, to mention slightly, to put one in mind of any thing.

எச்சரிக்கை—எச்சரிப்பு, *v. noun.* and *s.* Caution, circumspection, vigilance, சாக்கிரதை. 2. Admonition, notice, advice, warning, புத்திசொல்லுகை. 3. Discipline, கண்டிப்பு. 4. A term used in complimentary language before idols, kings, &c.—as take care, come softly, &c., எச்சரிக்கைகூறுகை. 5. Calling for silence, attention, &c. in an assembly, court, &c., also a word used by heralds before processions, implying *clear the way, make ready,* &c., அமைதியாயிருக்கச்சொல்லுகை. 6. A species of poetry sung before an idol in processions, &c., the verses of which end with this word, ஓர்பாட்டு.

எச்சரிக்கைபடிக்க, *inf.* To sing the எச்சரிக்கை song.

எச்சரிக்கைபண்ண, *inf.* To caution, &c.—as எச்சரிக்க.

எச்சரிக்கைப்பாட்டு, *s.* The எச்சரிக்கை song.

எச்சரிக்கையாயிருக்க, *inf.* To be circumspect, to be cautious, take heed, to be vigilant.

எச்சில், *s.* Remains, or refuse of food, crumbs, orts (deemed impure), சேஷம். 2. Any thing defiled by contact with the mouth, saliva, &c., மிச்சில்; [*ex* எஞ்சு.]

எச்சிற்கையாற்காக்கையுமோட்டான். He will not even scare away a crow with his hand while eating, lest any grain of rice fall thereby.

எச்சிலாக்க—எச்சிற்படுத்த, *inf.* To defile food or any thing, by bringing it into contact with the mouth; to defile food by the hand, or spoon in feeding, உச்சிட்டப்படுத்த. 2. To deflour a woman, deprive a damsel of her virginity, either by force or with consent, கன்னிமைகெடுக்க.

எச்சிலார், *s.* Low-caste people, இழிஞர். (*p.*)

எச்சிலிலை—எச்சிற்கலிலை, *s.* The leaf on which one has eaten.

எச்சிலுமிய—எச்சிலுமிழ—எச்சில்துப்ப, *inf.* To spit. (*c.*)

எச்சில்வாய், *s.* Mouth unwashed after eating, கழுவாதவாய்.

எச்சிற்கலக்க, *inf.* To eat the food left by the bridegroom—as a Hindu bride does on the occasion of her marriage. 2. To eat the food left by others—as friends.

எச்சிற்கலப்பு, *s.* The above ceremony.

எச்சிற்காறியுமிழ், *inf.* To force up the phlegm and spit it out.

எச்சிற்கிதம்பாட, *inf.* To assent to what is wrong from an unworthy motive.

எச்சிற்குழி, *s.* A cavity in a court-yard, used as a spittoon, எச்சில்போடுங்குழி.

எச்சிற்பட, *inf.* To become defiled—as food, &c., by saliva, or contact with the mouth.

எச்சிற்பருக்கை, *s.* Grains of rice fallen while eating, சிந்திக்கிடக்குஞ்சோறு.

எச்சிற்பேய், *s.* A diminutive demon exceedingly voracious, ஓர்பிசாசம். 2. A person very fond of dainties, பெருந்தீனிக்காரன்.

எச்சிற்றழும்பு—எச்சிற்றேமல், *s.* A kind of ring-worm supposed to be induced by contact with the saliva of others, தழுதணை.

எச்சின்மாற்ற, *inf.* To purify a place after eating by smearing it anew with cowdung.

கண்ணெச்சில், *s.* Evil imagined to be caused by other people's eyes.

கண்ணெச்சிற்கழிக்க, *inf.* To perform a ceremony for the removal of the imagined inauspicious effect of evil eyes. (கைட.)

எச்சு, *s.* (*Tel.*) Much, excess, increase, உயர்வு. 2. A high key in music. See தக்கு.

அவன்பாடுகிறதிலேயெச்சமெத்த. He sings too high.

எஞ்சு, கிறது, எஞ்சினது, ம், எஞ்ச, *v. n.* To diminish, decrease, shorten, lessen, grow small, few, &c., சுருங்க. 2. To be deficient, be defective, to lack, want, குறைய. 3. To remain, be left as a surplus, சேஷமாயிருக்க. 4. To be elliptical—as words, or clauses, சொல்லெஞ்சிநிற்க. (*p.*)

பின்பவ்வெஞ்சியவிருவரும். Afterwards the remaining two persons—

எஞ்சணி, *s.* An ellipsis.

எஞ்சிநிற்க, *inf.* To be wanting or elliptical—as language; to be understood, குறைந்திருக்க.

எஞ்சியசொல்லினெய்தக்கூறல், *v. noun.* [*in grammar.*] Expressing in a few words, or an author's not mentioning things explicitly, but leaving them to be inferred by the reader—one of the thirty-two உத்தி.

எஞ்சல், *v. noun.* Wanting, deficient, being implied.

எஞ்ஞான்றும், *adv.* Always. See ஞான்று; [*ex* எ.]

எருமைநாகு, *s.* A buffalo heifer, எருமைப்பெண்கன்று.

எருமைநாக்கி, *s.* A kind of herb, hart's ear, or oleander-leaved cacalia, ஓர்பூடு.

எருமைநாக்கு, *s.* A kind of fish, a sole, ஓர்மீன், Pleuronectes solea, *L.*

எருமைமாடு, *s.* A buffalo, எருமை.

எருமைமுல்லை, *s.* A kind of shrub, ஓர்முல்லைச்செடி.

எருமைமுல்லைத்தீவு, *s.* An ancient name of Jaffna a district in Ceylon—so called from the above-named shrub.

எருமைமுன்னை, *s.* A tree, ஓர்மரம். Premna mysorensis, *L.* (*Rott.*)

எருமையூர்தி, *s.* Yama, the deity of Naraca, whose conveyance is the buffalo, நமன்.

எருவை, *s.* Blood, உதிரம். 2. An eagle, கழுகு. 3. Copper, செம்பு. 4. A species of reed, கொறுக்கை. 5. A kind of grass with a fragrant root, sometimes eaten, கோரை. 6. An ass, கழுதை. 7. Elephant, யானை. (*p.*)

எலி, *s.* A rat, கருப்பை. 2. The eleventh lunar asterism, பூரம். 3. The கள்ளி tree, Euphorbia, *L.*—*Note.* There are eighteen kinds of rats; i. e. கத்திரிமணியன், செம்முகசன், வள்ளி, குறட்டை, கருங்காற்றலையன், விடலெலி, செந்நிறமூர்த்தி, செவ்வெலி, வீங்கெலி, உடைப்பெலி, தூக்கெலி, புடையெலி, இளைப்பெலி, செங்கண்ணன், புள்ளி, காடன், குறுக்காலெலி, கச்செலி; some others are enumerated—as கரெலி, சீரெலி, வெள்ளெலி, முள்ளெலி, கண்டெலி, வரப்பெலி and புள்ளெலி.

எலிச்செவி, *s.* An herb, rat's ear, கவிபுரக்கூந்தல், Evolvulus emarginatus, *L.*

எலித்திசை, *s.* [*in astrology.*] The north west point of the compass—opposite to பூனைத்திசை, வடமேற்கு. See திசை under திக்கு.

எலிப்பாஷாணம், *s.* A species of arsenic, rat's bane.

எலிப்பிடுக்கன், *s.* A plant, ஓர்பூடு. Crotalaria biflora.

எலிப்புலி, *s.* A cat, பூனை.

எலிப்பொறி, *s.* A rat-trap, எலிபிடிக்குங்கருவி.

எலியளை—எலிவளை, *s.* A rat's hole.

எலியோடி, *s.* A thin timber on the top of a roof, ridge-pole, உத்தரமரம்.

எலியோட்டி, *s.* A kind of thistle, குருக்கு, Argemone mexicana, *L.*

கட்டெலி, *s.* A kind of rat whose bite is said to be mortal.

வீட்டெலி, *s.* Domestic rat.

எலு, *s.* A bear, கரடி. (*p.*)

எலுநன், *s.* A famous king of Tanjore, ஓரரசன்.

எலுமிச்சை, *s.* A lime tree, a lemon tree, ஓர்மரம், Citrus acida, *Rox.*

எலுமிச்சங்காய், *s.* An unripe lemon.

எலுமிச்சம்பழம், *s.* The ripe fruit of the lemon tree.

எலுமிச்சஞ்செடி, *s.* A lemon plant.

காட்டெலுமிச்சை, *s.* Wild lime, Limonia alata.

கொடியெலுமிச்சை, *s.* A kind of creeper whose fruit resembles a lime.

கஸ்தூரியெலுமிச்சை, *s.* A small species of lemon, Triphasia trifoliata, *D. C.*

சிதம்பரவெலுமிச்சை, *s.* [*prov.*] A species of lime tree which bears large fruit.—*Note.* In the names of some trees ending in ஐ, this letter becomes அம் in combination—as எலுமிச்சங்காய்.

எலும்பி, s. A tree, Linociera purpurea, *L.*

எலும்பு, s. A bone, அஸ்தி.

எலும்புக்கூடு—முழுவெலும்பு, s. A skeleton, கங்காளம்.

எலும்புச்சீப்பு, s. The rib-bones, விலாவெலும்பு. 2. A bone-comb, தந்தச்சீப்பு.

எலும்புருக்கி, s. A disease, a species of consumption which greatly emaciates the system and exposes the bones to view and is supposed to dry up their juices—*the whites*, ஓர்நோய். (*Ains.*)

எலும்புறுத்த, *inf.* To suffer pain when lying down, &c., by the protrusion of the bones.

எலும்பூற, *inf.* To knit, to unite, coalesce—as a broken bone, ஒடிந்தவெலும்புகூட.

நெஞ்செலும்பு—மார்பெலும்பு, s. The sternum.

குண்டியெலும்பு, s. The os sacrum.

சவடியெலும்பு—காறையெலும்பு, s. The clavicle.

துடையெலும்பு, s. The thigh-bone.

காலெலும்பு, s. The bones of the leg—tibia and febula.

நடுவெலும்பு, s. The spine, the back-bone.

பழுவெலும்பு, s. The rib-bones.

முள்ளெலும்பு, s. The vertebra.

எலுவன், s. A friend or intimate acquaintance. தோழன். (*p.*)

எல், s. Lustre, splendor, light, ஒளி. 2. The sun, சூரியன். 3. Day—in contradistinction to night, பகல். 4. Day of twenty-four hours, நாள். 5. Night, இரவு. 6. Sunshine. வெயில். 7. An interjection of contempt, இகழ்ச்சிக்குறிப்பு. (*p.*)

எல்லவன்—எல்லோன், s. The sun, சூரியன். (*p.*)

எற்பாடு, s. Sunsetting. 2. One of the divisions of the day from two in the afternoon till sunsetting, சிறுபொழுதிலொன்று. (*p.*)

எற்றோற்றம், s. Sunrising. (*p.*)

எல்லரி, s. Large cymbals, சைம்மணி. (*p.*)

எல்லவர், s. All, all persons, எல்லாரும். (*p.*)

எல்லவர்தமக்குமுத்திபிரக்கனியுதவுமன்றே. (Skanda) will vouchsafe heaven, that precious fruit to all. (ஸ்கா)

எல்லாம், s. All, the whole, every, முழுதும். Like other universal terms, this admits உம், which however is often omitted, when the word is not used as a prefix; when it occupies the place of an adjective, its ம் is lost, and உம் is added to the word which it qualifies.—*Note.* In classical usage எல்லாம் takes அற்று as its declining particle—as மரமெல்லாவற்றையுங்கண்டான், he has seen all the trees.

எல்லாத்திசைகளும். The whole horizon.

எல்லாநம்மையும். All of us.

எல்லீர்நும்மையும். All of you.

எல்லாப்பூமியும்—பூமியெல்லாம். All the land, the whole of the land. 2. The whole earth.

எல்லாரும்—எல்லோரும். All persons, அனைவரும்.

எல்லாரையும்—எல்லார்தம்மையும். All of them.

எல்லோரும். We all, all of us, நாமெல்லாம்.

நீங்களெல்லாரும். Impr. for நீவிரெல்லாரும்.

அவர்களெல்லாரும். All of them.—*Note.* The superlative being unknown in Tamil, the comparative is employed, as in the following and similar instances. The universality of the term gives it a superlative meaning.

எல்லாரிலுமேலானவர். The greatest of all. 2. The most high.

அதுஎல்லாவற்றிலும்மேலானது. It is the highest of all.

எல்லி, s. The sun, சூரியன். 2 Night, இரவு; [*ex* எல்.] (*p.*)

எல்லை, s. A limit, border, boundary, frontier, confine, precinct, அவதி. 2. Measure, extent, அளவு. 3. End, termination, verge, goal, extremity, முடிவு. 4. The sun, சூரியன். 5. The distance within the reach of the voice, கூப்பிடுதூரம். 6. A day of twenty-four hours, நாள். 7. A term, a period, a specified or prescribed time, காலவரையறை. (கு. 381.) (*p.*)

எல்லைக்கணின்றார். They who abide within the limits (of friendship). (குறள்.)

தீமைக்கெல்லையற்றவச்சத்திறேடு. With infinite dread of vice.

இட்டநாளுமெல்லையும். The destined day and limit, the term of life assigned to every one.

எல்லைகடக்க, *inf.* To exceed the bounds, transgress. 2. To pass over a boundary.

எல்லைகட்ட, *inf.* To limit, set a boundary, எல்லைபோட. 2 To restrain, circumscribe, எல்லைப்படுத்த. 3. To decide differences, settle matters, வரையறுக்க. 4. To finish, முடிக்க.

எல்லைகுறிக்க, *inf.* To mark a limit, set boundaries, determine confines, வரம்பேற்படுத்த. 2. To fix a term, காலவரையறைகுறிக்க.

குறித்தவெல்லைகடவாதே. Pass not over the prescribed boundary.

எல்லைகெட்டநேரம், s. An inauspicious time—as twilight, noon, &c., when demons are about, an unseasonable time for the performance of an action, ஒவ்வாதநேரம்.

எல்லைக்கட்டு, s. A boundary, demarkation, வரம்பு. 2. *v. noun.* Restraint, circumscription, கட்டுப்பாடு.

எல்லைக்கல், s. A stone to mark a limit, a land-mark.

எல்லைக்காவல், s. A watch-shed, &c., to mark the division of one field from another, ஊரெல்லையிற்காக்கும்வயற்காவல்.

எல்லைக்குறிப்பு, s. Boundary-mark, land-mark, எல்லையடையாளம். 2. Milestones, mileposts, வழியளவைக்குறிப்பு.

எல்லைக்கேடு, s. Inconvenience, want of opportunity, சமயமொவ்வாமை. 2. Unsuitableness, or inconvenience in regard to place, ஸ்தானமொவ்வாமை.

எல்லைத்தீ, s. The fire-deluge, the fire that destroys all things at the close of an age, ஊழித்தீ.

எல்லைப்படுத்த, *inf.* To limit, to settle a boundary, அளவுபடுத்த. 2. To settle matters, decide, finish, தீர்க்க.

எல்லைப்பிடாரி, s. An evil demoness supposed to be situated where roads meet, சந்திப்பிடாரி.

எல்லைமானம், s. Boundary, limit, circuit, எல்லை. 2. Measure, extent, அளவு.

எல்லையின்மை, s. Boundlessness, immensity, infinity, அளவின்மை.

எல்லையோட, *inf.* To run the bounds of a village or district—a religious ceremony performed by some of the Hindu sects with much superstition, எல்லையைச்சுற்றிவர.

நாளெல்லை, s. The close of a day. 2. The end of a term. 3. The close of life.

எல்லோ. Interjection of surprise, pity, contempt, அதிசெயவிரக்கச்சொல்.

எல்வை, s. Time, காலம். 2. Day, நாள். (*p.*)

*எவட்சாரம், s. Salt-petre, nitre, nitrate of potash, வெடியுப்பு. Wils. p. 682. YAVAKSHARA.

எவண், s. Where, எவ்விடம். (*p.*)

எவன், s. Who, which man? யாவன். 2. What, which things? யாது. 3. A term expressive of sorrow, pity, doubt, &c., துக்கம், இரக்கம், ஐயமிவற்றைக்காட்டுஞ்சொல். In the second sense it is used as a symbolic verb.

எவனும்—எவரும், *pron.* Whoever, every one.

எவனொருவன். Which one, whoever, whichever person.

எவனொருவன்வருவானோஅவனுக்கேகிடைக்கும். Whoever comes, may have it.

அதெவனது. Whose is that? to whom does it belong?

சிறைகாக்குங்காப்பெவன்செய்யும். What avails restraint as regards the chastity of females?

எங்களிலெவன். Who of us?

பலனெவன். What profit is there?

எவை, *inter. neut. pl.* What, which (things)? யாவை.

எவையும்—எவைகளும். Whatever, what things soever, every thing, யாவையும்.

எவ், *inter. adj. neut. pl.* What, which things?

எவற்றிற்கு? For what things?

எவ்வணணம். How, in what manner?

எவ்வது, *inter.* What, what manner? எவ்விதம்.

எவ்வதுறைவதுலகம். Whatever be the manner of the world; i. e. of the great. (குறள்.)

எவ்வம், s. Affliction, distress, sorrow, துன்பம். 2. Incurable disease, lingering sickness, நீராநோய். 3. Inferiority, degradation, meanness, இகழ்ச்சி. 4. Lonesomeness, solitude, தனிமை. (*p.*)

இலனென்னுமெவ்வமுரையாமையீதல். Giving without disgracing one's self by complaints of poverty. (குறள்.)

எவ்வநோய், s. Incurable disease. (குறள்.)

எவ்வளவு. How much? how many? எத்தனை.

எவ்வளவும். A little, some what, how much soever, how little soever.

எவ்வளவுந்தவறுதல். Not deviating in the least.

எவ்வளவுமில்லை. None at all.

*எவ்வனம், s. [as யௌவனம்.] Youth, juvenility, adolescence, இளமை. Wils. p. 690. YOWVANA. 2. (p.) Sprightliness, joy, களிப்பு.

எவ்வனகாலம், s. The days of youth.

எவ்வனபருவமடைய — எவ்வனம்வர, inf. To become marriageable.

எவ்வாறு, inter. In what way or manner, how, எவ்வழி; [ex எ, et ஆறு, manner.]

எவ்விடம், inter. Where? எந்தவிடம்.

எழால், s. The tones of the lute, யாழ்நரம்பிசையோசை. 2. A species of bird, ஓர்பறவை. (p.)

எழிலி, s. A cloud, மேகம். 2. One of the seven last kings famous for liberality, கடையேழுவள்ளலிலொருவன்.

எழில், s. Beauty, comeliness, gracefulness, அழகு. 2. Color, coloring, paint, வண்ணம். (சது. 20.) 3. Youth, இளமை. 4. Strength, வலி. (p.) 5. [prov.] A conjectural, or suspicious circumstance (a colloquial meaning), அசகை.

எழிலறியாதவன், s. One who cannot take a hint, or who is unacquainted with another's intentions, குறிப்பறியாதவன்.

எழில்காட்ட, inf. To give a hint.

எழில்சொல்ல, inf. To hint by words, to allude to.

எழினி, s. Curtain, திரைச்சீலை. 2. The cloth round the waist, இடைச்சீலை. (p.)

எழு, s. A pillar, a post, கம்பம். 2. A kind of curved club, வளைதடி. (p.) 3. Steel, உருக்கு.

எழு, கிறேன், ந்தேன், வேன், எழ, v. n. To rise, ascend, get up, rise by one's own power, to rise as a thing by its own levity, rise as a heavenly body, a bird, a kite, &c., to soar, &c., எழும்ப. 2. To stir, be excited, roused, &c., மனக்கிளர. 3. To become resuscitated, rise to life, உயிரடைந்தெழும்ப. 4. To rise to eminence, தலைமைப்பட. 5. To rise and spread as a rumor, பரம்ப. 6. To rise as wind, clouds, &c., கிளம்ப. 7. To rise as a sound, singing, talking, clamor, &c., ஆரவாரமெழ. 8. To rise as a tree, grow larger, swell, to expand as breasts, increase in stature, rise as a building, shoot, sprout, spring up, உயர. 9. To happen, occur, arise, come on, சம்பவிக்க. 10. To become instrumental to, ஏதுவாக. 11. To remove from a dwelling, lodging, village, &c., குடியெழும்ப. 12. To rise in price, விலையேற.

அவனுக்குக்கையெழவில்லை. His hand does not open to give any thing.

அதைச்செய்யவெனக்குக்கைகாலெழவில்லை. My hands and feet would not stir (rise) to do such a thing.

அதைச்சொல்லவாயெழாது. My tongue will not stir (rise) to speak so.

கூரெயிறெழாதகுழவி. A babe that has not yet teethed.

எழுஞாயிறு, s. The rising sun, உதயாதித்தன். 2. Quinsy, a mortal disease which begins with the rising sun; when it begins in the night it is termed படுஞாயிறு. (Mat. Ind. Opp.)

எழுந்தபடி—எழுந்தமானம், s. At random, in an unpremeditated manner, carelessly, மனதிலேதோன்றியபடி.

எழுந்தருள, inf. To rise, become present or manifest as the divinity in an idol on consecration; to be present as a great personage, &c., தோன்ற. 2. To repair to a place—as a sage, holy person, a king, &c., பெரியோர்வர.

எழுந்தருளுநாயகர்—எழுந்தருளும்விக்கிரகம், s. The secondary idol in a temple, உச்சவவிக்கிரகம், representing the same deity as the first, carried about in processions while the other remains stationary—opp. to the மூலவிக்கிரகம்.

எழுந்தருள்படி, s. A procession of heathen gods.

எழுந்திருக்க, inf. To rise, ascend, get up, &c., எழ, spoken chiefly of men. —Note. This is more full and expressive than எழு, alone.

எழுந்துபோக, inf. To depart, to go to meet a person.

எழுந்தேற்றம், s. A Roman catholic procession, உற்சவம். 2. Pride, self-consequence, arrogance, பெருமை. 3. Rashness, presumptuousness, துணிவு.

எழுமுகனை, s. The very beginning of a process, or period, தொடக்கம்.

எழுவான், s. The east, the place of sun-rising, oriens, கிழக்கு, eastern—opp. to படுவான்.

எழுவான்றொடக்கிப்படுவான்மட்டும். From east to west.

என்வீட்டுக்கெழுவானிலே East of my house.

எழல்—எழுகை, v. noun. Rising, ascent, எழுச்சி.

எழுச்சி, v. noun. Rising, ascent, elevation, எழும்புகை. 2. Stir, excitement, activity, readiness, promptitude, முயற்சி. 3. Haughtiness, aspiring, ambition, resolution, இறுமாப்பு. 4. A disease, or soreness of the ears, காதிலெழும்புமோர்புண். 5. Inflammation of the eyes, கண்ணோயிலொன்று.

எழுச்சிக்கொடி, s. Inflammation of the eyes causing red streaks, கண்ணிற்படருமோர்நோய்.

எழுச்சிபாடுவோன், s. One who sings to rouse a prince, or a great man of a morning, துயிலெழுப்புதல்பாடுவோன்.

எழுச்சிமுரசம், s. A drum beaten to rouse a king, commandant, garrison, &c. of a morning, துயிலெழுப்புமுரசம்.

எழுச்சியிலை, s. A leaf to cure ophthalmia, கண்ணோய்மருந்திலை.

படையெழுச்சி, s. A military expedition, marching to battle.

பள்ளியெழுச்சி, s. A kind of poem sung to rouse princes, &c. from sleep.

மேலெழுச்சி—மேலெழுந்தவாரி, [prov.] Superficiality.

மேலெழுச்சியாய்ப்பேச, inf. To speak carelessly.

மனவெழுச்சி, v. noun. Energy, persevering application.

எழுமை, v. noun. Height, elevation, உயர்ச்சி.

எழுகூற்றிருக்கை, s. A poem whose component words are represented by numerals in seven contiguous rows of long squares, each succeeding row increasing by one subordinate square on both sides, the topmost consisting of three squares, the next five, the next seven, &c. The numbers in each row begin and end increasing by one from the left as far as the middle square, and decreasing in the same ratio towards the right—thus the numbers in the first row, are 1, 2, 1; in the second, 1, 2, 3, 2, 1; in the third, 1, 2, 3, 4, 3, 2, 1, &c., and in the last two rows the numbers are the same. The symbolical poem is construed thus in the first row. 1, one god; 2, two feet; 1, one heart; i. e. Worship the two feet of the only true god with your undivided affections. தர்மிறைக்கவி.

					க	உ	க					
				க	உ	ங	உ	க				
			க	உ	ங	ச	ங	உ	க			
		க	உ	ங	ச	ரு	ச	ங	உ	க		
	க	உ	ங	ச	ரு	சு	ரு	ச	ங	உ	க	
க	உ	ங	ச	ரு	சு	எ	சு	ரு	ச	ங	உ	க
க	உ	ங	ச	ரு	சு	எ	சு	ரு	ச	ங	உ	க

எழுதகம், s. [in architecture.] A kind of frieze and moulding, சிற்பவேலையிலொன்று.

எழுது, கிறேன், எழுதினேன், வேன், எழுத, v. a. To write, paint, draw, mark, stain, trace (letters, &c.), inscribe, வரைய. 2. To foreordain, to predestine. This verb is so used from the notion that each one's fate is written by Brahma in the skull, தலையிலெழுத. 3. To write composition, draw up in writing, வசனந்திகழெழுத. 4. To engrave, சித்திரமெழுத.

எழுதக்கைதிரும்பவில்லை. The hand is not yet trained.

எட்கிடைநெற்கிடைவிட்டெழுத. To write leaving the space of a sesamum seed between the letters, and of a grain of rice between the lines—the order to be observed in writing.

எழுதாக்கிளவி—எழுதாமறை, s. The vedas, lit. unwritten works—an appellation adopted with reference to their meaning being handed down by oral explanation and not written, or to the accent, pronunciation, &c., which cannot be written, வேதம்.

எழுதிக்கொடுக்க, inf. To grant by writing, write and deliver as a voucher. 2. To betroth a girl by written contract. 3. To write for another, draw up a document. 4. To write lessons for a learner. 5. To give a list, inventory, &c.

எழுதிக்கொள்ள, inf. To write a letter, petition, &c., to a great person; to write for one's self. 2. To enrol. 3. To write and deliver vouchers reciprocally.

எழுதிச்சேர்க்க, inf. To register, file a writing as a notary public.

எழுதிவைக்க, *inf.* To recount, register, write and keep for a memorandum, &c., to write and leave behind for the use of others.

எழுதினஉடன்படிக்கை—எழுதின வொப்பாசாரம், *s.* Written contract.

எழுதுகோல், *s.* A writing reed, எழுதுங்கோல். 2. A painter's brush or pencil, தூரிககோல்.

எழுதுபடம், *s.* A picture, கிழி.

மேற்பாடம்பார்த்தெழுதுதல், *v. noun.* Copying from a written book.

பெயர்த்தெழுத, *inf.* To copy, to transcribe.

குறிப்பெழுத, *inf.* To note down the time, &c. of the birth of a child.

திருத்தமாயெழுத, *inf.* To write correctly.

சரமகவியெழுத, *inf.* [*prov.*] To write a stanza, commemorative of the death of an ancestor, or other near relative, mentioning the day, hour, &c. of the moon, as a memorandum for ascertaining the time to perform the annual funeral rites.

மறுமொழியெழுத—பதிலெழுத, *inf.* To write an answer

பருக்கவெழுத, *inf.* To write in large characters.

கைபடியவெழுத, *inf.* To practise writing, train the hand in writing.

எழுத்து, *s.* A letter, character, அக்கரம். 2. Writing, painting, delineation, engraving, இலிகிதம். 3. A writing, painting, &c., a written letter, a writ, எழுதப்பட்டது. 4. Letters, science, literature, இலக்கணம். 5. A bond, a written engagement, &c., உடன்படிக்கைச்சீட்டு. 6. Destiny—as written in the head, இலலாடலிபி. 7. Written accounts, cyphering, entry or record of reckonings, கணக்கெழுத்து. 8. [*prov.*] Registry, entry, enrolment, அட்டவணை.

எழுத்தடைக்க, *inf.* To enclose letters in magical diagrams, சக்கரத்திலெழுத்தமைய. 2. To invert a stanza in a figure, or diagram—one of the one-hundred-and-twenty kinds of மிறைக்கவி, சித்திரக்கவியிலெழுத்தடைக்க. (அலங்காரம்.)

எழுத்ததிகாரம், *s.* [*in grammar.*] Orthography, எழுத்திலக்கணம்.

எழுத்தந்தாதி, *s.* The last letter of one verse occurring in the first of the next, ஓர்வகையந்தாதி.

எழுத்தலங்காரம், *s.* A kind of play on letters, எழுத்தணி.

எழுத்தறப்படிக்க, *inf.* To pronounce with distinctness, read or sing distinctly.

எழுத்தாணி, *s.* A style, a metallic pen, for writing on palm leaves, இலேகினி.

எழுத்தாணிப்பூண்டு, *s.* A plant whose flower shoots up in the form of a style, கூத்தன்குதம்பை, Microrhyncus sarmentosus, *L.*

மடக்கெழுத்தாணி—குண்டெழுத்தாணி—மடிப்பெழுத்தாணி—கெல்லிக்காயெழுத்தாணி—தேரெழுத்தாணி—வாரெழுத்தாணி—குடவெழுத்தாணி, *s.* Different kinds of iron pens.

எழுத்தாளர், *s.* Men of letters, learned men, அறிஞர். 2. Clerks, writers, எழுதுவோர்.

எழுத்தானந்தம், *s.* The inauspicious use of a word in a poem subjecting the hero on whom it is written to evils, செய்யுட்குற்றத்தொன்று.

எழுத்திலக்கணம், *s.* [*in grammar.*] Orthography. See இலக்கணம்.

எழுத்திலாவோசை, *s.* Inarticulate sounds.

எழுத்துக்காரன், *s.* A writer, a scribe, a clerk, a secretary, a copyist, an amanuensis, எழுதுவோன். 2. A painter, a limner, சித்திரமெழுதுவோன். 3. A cloth painter, சீலையிலெழுதுவோன்.

எழுத்துக்காரியஸ்தன், *s.* A clerk, a writer, எழுதுவோன்.

எழுத்துக்கிறுக்கு. [*prov.*] The act of making written instruments, உடன்படிக்கையெழுதுகை. 2. Writings, documents, உடன்படிக்கைப்பத்திரம்.

எழுத்துக்குற்றம், *s.* Orthographical errors in speaking, writing, &c., spoken chiefly of false interpretation, &c., of the Puranas or other writings deemed sacred, எழுத்திலக்கணவழு.

எழுத்துக்கூட்ட, *inf.* To spell, join letters.

எழுத்துக்கூட்டாமல்வாசிக்க, *inf.* To read fluently.

எழுத்துச்சந்தி, *s.* Union of letters in the combination of words, எழுத்துப்புணர்ச்சி.

எழுத்துச்சாரியை—எழுத்தின்சாரியை, *s.* Particles employed to express the names of the letters—as அ with the consonants; கரம், காரம் and கான் with the short letters and sometimes with the consonants; காரம் with the long vowels and கான் with ஐ and ஔ. In common use, ன is used with the short, and ஆனா and அன்னா with the long letters. Some other forms are also given in ancient grammars and they are also occasionally used.

எழுத்துச்சுருக்கம், *s.* A kind of play on letters by omitting one after another in regular succession, and thus changing the sense, ஓரணி.

எழுத்துச்சேலை—எழுத்துப்புடவை, *s.* A woman's fancy dress whether printed or embroidered, சித்திரவஸ்திரம்.

எழுத்துத்திரிதல், *v. noun.* Permutation of letters—the change of one letter for another according to grammatical rules, for the purposes of euphony, மூவிகாரத்தொன்று.

எழுத்துநடை, *s.* Easy and fluent reading.

எழுத்துப்படிய, *s. inf.* To become trained—as the hand to writing; to have a settled hand.

எழுத்துப்பதிக்க, *inf.* To indent in writing, பதியவெழுத. 2. To enter, write, imprint, settle an affair by writing.

எழுத்துப்பதிய, *inf.* To be indented—as writing, engraving. 2. To be entered, written.

எழுத்துப்பிழை—எழுத்துப்பிசகு, *s.* Error in spelling.

எழுத்துப்பொருத்தம், *s.* The five classes into which the letters are superstitiously divided. (See தசப்பொருத்தம்.) 2. Choosing a name for a child so as to begin with one of the letters ascribed in astrology to the lunar mansion, under whose influence the child is supposed to have been born, பிறந்தநட்சத்திரத்திற்குப்பொருந்தப்பெயரிடுகை.

எழுத்துமடக்கு, *s.* Repetition of, the same letter in a verse, ஓரணி—as நாநாநாதமகூடிசைசாலிந்தோழிவேலாய்.

எழுத்துவருத்தனம், *s.* A kind of diversion by means of poetry, a play on letters, the meaning changing as letters are added. See மிறைக்கவி.

எழுத்துவாசனை, *s.* The art of reading and writing, எழுத்துநடை.

எழுத்துவேலை, *s.* Chintz-painting, சீலையின்மீதெழுதுகை. 2. Writing, transcribing, copying, எழுதுந்தொழில்.

எழுத்தொலி—எழுத்தோசை, *s.* The sound of a letter.

நுணுக்கெழுத்து, *s.* A character or letter written unintelligibly.

கிறுக்கெழுத்து, *s.* A letter erased, cancelled; a letter badly written.

கூட்டெழுத்து, *s.* Double letters, letters written together in a contracted form—as கூ for கக; ட for டட; த for த்த, &c.

நீர்மேலெழுத்து, *s.* An inscription on the water—a simile expressive of that which is evanescent.

கல்மேலெழுத்து, *s.* An inscription on a stone expressive of that which is stable and enduring.

நல்லோரொருவர்க்குச்செய்தவுபகாரங்
  கன்மேலெழுத்துப்போற்காணுமே—அல்லாத
ஈரமிலாநெஞ்சத்தார்க்கீந்தவுபகாரம்
  நீர்மேலெழுத்திற்குநேர்.

The valued favors the deserving gain,
Like sculptures in eternal rock remain;
  Of virtue's tribute charity is sure:
But kind attentions to the worthless shown,
Who debts and duties evermore disown,
  Like letters written in the wave endure.

முதுவெழுத்து—தேறினவெழுத்து, *s.* Matured well-formed writing.

நிலவெழுத்து, *s.* Letters written on sand.

இளவெழுத்து, *s.* An immature hand not yet formed.

சுட்டெழுத்து, *s.* A demonstrative letter.

நெட்டெழுத்து, *s.* A long sounding letter.

சார்பெழுத்து, *s.* Depending letters of which there are ten kinds, viz.: 1. உயிர்மெய். 2. ஆய்தம். 3. உயிரளபு. 4. ஒற்றளபு. 5. குற்றியலிகரம். 6. குற்றியலுகரம். 7. ஐகாரக்குறுக்கம். 8. ஔகாரக்குறுக்கம். 9. மகரக்குறுக்கம். 10. ஆய்தக்குறுக்கம்.

முதலெழுத்து, *s.* The twelve vowels and the eighteen consonants.

வல்லெழுத்து, *s.* The six hard-sounding letters—as க, ச, ட, த, ப, ற.

மெல்லெழுத்து, *s.* The six soft-sounding letters—as ங், ஞ், ண், ந், ம், ன்.

இடையெழுத்து, *s.* The six middle-sounding letters, ய், ர், ல், வ், ழ், ள்.

வினாவெழுத்து, *s.* An interrogative letter.

குற்றெழுத்து, *s.* A short-sounding letter.

எழுநா, *s.* Fire, நெருப்பு. 2. Seven-tongued—as the god of fire; [*ex* எழு, seven, *et* நா, tongue.]

எழுப்பம், [*prov. impr. for* எழும்பல்.] Rising, getting up; rising—as from sickness, or from reduced circumstances எழும்புகை. 2. The rising, running about, &c., of persons weak, delirious, சஞ்சரிக்கை. 3. Growth, elevation—as of a tree, height, உயர்வு.

அந்தமாடிந்தமாட்டிற்கெழுப்பம். That bullock is taller than this.

அவருக்குக்கால்கையெழுப்பமில்லை. He has not the use of his hands, or feet.

எழுப்பு, கிறேன், எழுப்பினேன், வேன், எழுப்ப, *v. a.* To awake, rouse, start, துயிலெழுப்ப. 2. To raise one that is prostrate, or sitting, cause, or help to rise, தூக்க. 3. To raise from the dead, resuscitate, restore to life, உயிரோடெழுப்ப. 4. To raise from sickness, excite, rouse, stimulate, inspire, பலம்வருவிக்க. 5. To instigate, agitate, cause a stir, a quarrel, war, சண்டைமூட்ட. 6. To raise the voice in speaking or singing to a high pitch, இசையெழுப்ப. 7. To dislodge, or eject one, turn out &c., கிளப்பிவிட. 8. To excite, or inflame the passions, stir up, கோபமுதலியனவெழுப்ப. 9. To raise a building, வீடெழுப்ப.

முயலையெழுப்பிநாயைப்புழுக்கக்காட்டுகிறது. Starting a hare and setting dogs after it; i. e., to excite one to an action and then injure him perfidiously.

எழுப்பு, *v. noun.* Rousing, waking, எழுப்புகை.

எழுமான்—எழுமான்புலி, *s.* A plant, ஓர்பூடு, Stapelia corymbosa, *L.*

எழுமை, *s.* Seven, septuple, எழு. 2. The seven kinds of transmigration, எழுபிறப்பு. 3. Height, உயர்ச்சி. (*p.*)

எழும்பு, கிறேன், எழும்பினேன், வேன், எழும்ப, *v. n.* To rise, ascend, &c., wake, with all the meanings of the verb எழு.

புகையெழும்புகின்றது. The smoke rises.

எழுவகைக்கூடு, *s.* A kind of arsenic, ஓர்வகைப்பாஷாணம்.

எழுவாய், *s.* Beginning, origin, source, cause, ஆதி. 2. [*in grammar.*] The nominative case, the subject, முதல்வேற்றுமை; [*ex* எழு, rising, *et* வாய், place.]

எழுவாயும்பயனிலையும். The nominative and its verb, or other concluding word.—*Note.* In Tamil the substantive verb is rarely used.

இந்தக்காரியத்துக்கெழுவாயென்ன. What gave rise to this affair?

எழுவாயுருபு—எழுவாய்வேற்றுமை, *s.* The first, or nominative case, முதல்வேற்றுமை.—*Note.* The words ஆனவன், ஆனது, &c., which represent the nominative case are rarely expressed but understood.

எழுவாயெழுஞ்சனி, *s.* The tenth lunar mansion, மகநாள்.

எளிமை, *s.* Despicableness, meanness, lowness of rank, circumstances, character, &c., கீழ்த்தனம். 2. Pitiableness, exciting compassion, இரங்கப்படத்தக்கதன்மை. 3. Weakness, பலவீனம். 4. Easiness, facility, being easy to effect, acquire, attain, endure, to be understood; easiness of access, எளிது. 5. Solitariness, தனிமை; [*ex* எள்.]

எளிஞர்—எளியர்—எளியார்—எளியோர், *s.* The low, mean, destitute, the poor, தரித்திரர்.

எளிதரவு, [*impr. for* எளிவரல்.] Indigence, poverty, despicableness, cringing, தரித்திரம். 2. Lowness, humility, தாழ்மை.

எளிது, *s.* [*impr.* எளிசு.] Being easy of execution, acquisition, &c., இலேசு.

எளிதானகாரியம், *s.* A trifling thing, a trivial affair, a thing easily understood.

எளியகுடி, *s.* Poor, destitute inhabitants. 2. A family low in rank.

எளியகொடை, *s.* Unworthy gifts, presents unsuitable to the persons to whom they are made.

எளியது, *s.* That which is despicable, low, trifling, &c., எளிமையானது.

எளியவன்—எளியன், *s.* A man of low caste, a person poor, destitute, mean, &c.

எளியவன்பெண்டாட்டியெல்லாருக்கும்மைத்துனச்சி. The wife of a poor man is free of access to every body.

எளியாரைவலியார்கேட்பின் வலியாரைத்தெய்வங்கேட்கும். If the powerful oppress the weak, the deity will require it of them.

எளியவிலை, *s.* Low price.

எளியவேலை, *s.* Low, menial work.

கைக்கெளியது, *s.* That which is portable, small, easily carried, stolen, secreted, managed, as a child, &c.

தாளைபேதமறக்கிலாதேமக்கெளிதருசிவப்பிரகாசன். The guru (Sivaprakasa) who readily admits us to his feet; i. e., he is ready to grant our desires (சத.)

எள், *s.* [*vul.* எள்ளு.] One of the nine kinds of grain, sesamum, from the seeds of which an oil is extracted, used for food, bathing, &c., திலம். Sesamum orientale. See தானியம் and எண்ணெய்.—*Note.* The ள of this word becomes ட் and ண் by permutation.

எள்ளத்தனையைமலையத்தனையாக்க. To make a mountain of a sesamum seed, to exaggerate.

எள்ளளவு—எள்ளுப்போலே. As much as a sesamum seed, a very little.

எள்ளளவும்நம்பிக்கையுமில்லை. Utterly unworthy of confidence. 2. Destitute of belief, confidence, &c.

எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைந்தகடவுள். God who pervades the universe, as oil the sesamum seed.

எட்கடை—எட்கிடை—எட்பிரமாணம். As much as a sesamum seed, எள்ளளவு. 2. A standard of measure in regard to space, ஓரளவு--eight எள் make a நெல் or grain of rice; eight grains of rice one அங்குலம், an inch, &c.

எட்பாகு, *s.* A kind of porridge made of sesamum seed, எள்ளுப்பாகு.

எண்ணெய், *s.* [*impr.* எண்ணை.] Rape-seed oil. 2. (*fig.*) A common name for oils of all kinds.

எண்ணெயூற்ற, *inf.* To express oil, எண்ணெய்வடிக்க.

எண்ணெயெரிக்க, *inf.* To prepare medicinal oils by burning, in which the drugs are rolled up in a bit of cloth which is dipped in oil and set on fire; the oil which drops from it is used as a medicine, தைலமெரிக்க.

எண்ணெய்க்கறுப்பு, *s.* The color of rape-seed oil, or dark brown.

எண்ணெய்க்கறுப்பி, *s.* A female whose skin resembles rape-seed oil, not so much in regard to its color as its soft and beautiful appearance.

எண்ணெய்க்காப்பு, *s.* Oil for bathing an idol, எண்ணெயபிஷேகம்.

எண்ணெய்க்காரன், *s.* An oil-monger, எண்ணெய்விற்போன்.

எண்ணெய்ச்சாணை, *s.* A hone prepared for use by oiling.

எண்ணெய்ச்சாயம், *s.* Oil paint, எண்ணெயாற்செய்யப்பட்டசாயம். 2. Dyeing a cloth red after soaking it in margosa oil, எண்ணெயிற்றோய்த்தேற்றப்பட்டசாயம்.

எண்ணெய்ச்சிக்கு, *s.* Indigestion produced by eating oily food, எண்ணெய்வயிற்றிற்றங்குகை. 2. A clotted state of the hair from the oil not being well washed out, எண்ணெய்மயிரில்விடாமை. 3. A bad smell—as of oil, எண்ணெய்நாற்றம்.

எண்ணெய்ச்சீலை, *s.* Cloth dipped in oil to be applied to wounds, எண்ணெய்த்துணி. 2. A piece of cloth put round the waist before bathing, எண்ணெய்க்கோவணம்.

எண்ணெய்தேய்க்க, *inf.* To rub oil.

எண்ணெய்தொட்டுப்பொட்டுவைக்க, *inf.* To dip the finger in oil before bathing dropping seven drops on the floor for the சிரஞ்சீவியர், who are supposed in cousequence to grant long life.

எண்ணெய்பிறக்க, *inf.* To form as oil by boiling.

எண்ணெய்பூச, *inf.* To oil, anoint, besmear with oil.

எண்ணெய்பொருத்த, *inf.* To put medical oil on the head or other parts of the body, and to rub it in, மருந்தெண்ணெய்பூச.

எண்ணெய்ப்பற்று, *s.* Adherence of oil or unctuous matter to the bowels, hair, clothes, &c., oil, greasy substance in food—as in fish or on the dress from cooking, எண்ணெய்ச்சிக்கு.

எண்ணெய்வழுக்கு, *v. noun.* Being greasy—as oil, &c., எண்ணெய்ச்சிக்கு. 2. Shining, sleek, glossy, bright, எண்ணெய்மினுக்கு.

எண்ணெய்வாணிகன், *s.* An oil-monger, எண்ணெய்விற்போன்.

ஆமணக்கெண்ணெய், *s.* Castor oil.

தலைக்கெண்ணெய், *s.* Oil for the head.

விளக்கெண்ணெய், s. Lamp oil.

புன்கெண்ணெய், s. Oil extracted from புன்கம் seeds.

சூட்டெண்ணெய், s. Oil extracted from the residuum of the margosa berry.

மருத்தெண்ணெய், s. Medical oil.

குருந்தெண்ணெய், s. Oil extracted from குருந்தம் seeds.

இலுப்பெண்ணெய், s. The இலுப்பை oil.

வேப்பெண்ணெய், s. Margosa oil.

தேங்காயெண்ணெய், s. Cocoanut oil.

வடியெண்ணெய், s. Clarified medical oil.

கொதியெண்ணெய், s. A species of boiled oil, used for medicinal purposes.

புளியெண்ணெய், s. A medical oil.

புன்னையெண்ணெய், s. The oil extracted from புன்னை seeds.

நல்லெண்ணெய், s. Sesamum oil used for the hair and the skin, &c.

மரவெண்ணெய், s. Oil extracted from wood.

தெளிவெண்ணெய், s. Clear margosa oil poured off from the sediment.

ஊற்றெண்ணெய், s. Oil extracted by pressing or pounding the seeds.

மீனெண்ணெய், s. Fish oil.

எள்ளுண்டை—எள்ளுருண்டை, s. A pastry made into balls, said to be a very strengthening food, ஓர்சிற்றுண்டி.

எள்ளுந்தண்ணீருமிறைக்க, inf. To pour water to the manes of deceased persons on sesamum seeds and sacrificial grass held in the hand.

எள்ளோரை, s. Sesamum and rice boiled and mixed with ghee—one of the சித்திரான்னம்.

காட்டெள்ளு, s. A kind of sesamum found in uncultivated places.

காரெள்ளு, s. The common எள். 2. A distinct species of எள்.

பேரெள்ளு, s. A large kind of sesamum.

கடலெள்ளு, s. A species of sesamum.

வெள்ளெள்ளு, s. A species of sesamum bearing white seed.

சிற்றெள்ளு, s. A small kind of sesamum.

எள்—எள்ளு, கிறேன், எள்ளினேன், வேன், எள்ள, v. a. To scoff, abuse, contemn, disregard, hold in contempt, despise, நிந்திக்க. 2. To speak contemptuously or disdainfully of any one, இழிவாகப்பேச. 3. To ridicule, deride, laugh at, நகைக்க. 4. (*fig.*) To reject, தள்ள.

என்னரிதாகியவில்லினே. The blameless wife.

அவனிவனென்றுரைத்தெள்ளி. Theeing and thouing him—speaking disrespectfully and disparagingly. (பார.)

தளவையெள்ளுநகை. Teeth surpassing (in beauty) the unblown முல்லை flower.

எள்ள. Infinitive used as a particle of comparison, உவமையுருபு.

எள்ளல்—எள்ளற்பாடு, v. noun. Reproach, scorn, இகழ்ச்சி.

எள்ளல்செய்தேனைப்பற்றி. Insulting and seizing me— (ஸ்காந்.)

எஃகு, கிறேன், எஃகினேன், வேன், எஃக, v. a. To despise, contemn, இகழ. (*p.*) Used only in the verbal participial form.

எறி, கிறேன், ந்தேன், வேன், எறிய, v. a. To throw, cast, fling, eject, discharge, emit, எறிய. 2. To pierce with a weapon, stab, cast so as to strike, குத்த. 3. To reject (as advice), cast off, cast away, throw away, தள்ள. 4. To slap, clap the hands, beat a drum, strike a bell, அறைய. 5. To toss, cast up waves—as the sea, அலைவீச. 6. To cut off, sunder, cut with a sword, வெட்ட. 7. v. n. To rise, roll over—as waves, அலையடிக்க.

எறிசுடர்வாளால். With the ray-emitting sword.

எறிசொல்லாச்சொல்லுதல். Speaking with displeasure, in an unconnected manner.

எறிந்தகணக்காய்ப்போயிற்று. The property is scattered, nearly all gone. 2. The petition was rejected.

எறியென்றெதிர்நிற்பாள்கூற்றம். She who opposes her husband, threatening blows, is as death. (நாலடி.)

எறிவானேன்சொறிவானேன். Why insult one and then caress him?

பாகெறிகளிறு. An elephant that casts off his driver.

அவனென்மேற்கண்ணெறிந்தான். He placed his eyes upon me—he threw a side-glance at me.

ஆடல்வேலெறிதலோடும். When the warlike dart severed (the mango tree). (ஸ்காந்.)

எறிகடல்—எறிதிரைக்கடல், s. The wave-throwing sea, the billowing ocean.

எறிகாலி, s. A kicking cow, உதைகாற்பசு.

எறிகால், s. A violent wind, பெருங்காற்று. (*p.*)

எறிசக்கரம், s. The discus weapon, எறியுஞ்சக்கரம்.

எறிந்துபோட, inf. To cast, throw. 2. To reject a person, thing, advice, &c., to treat with disrespect.

எறிந்துபோட்டாற்போலேபேசினான். He spoke contemptuously.

எறிந்துவிட, inf. To cast off, reject. 2. To sow seed.

எறிபடை—எறியாயுதம், s. A missile weapon.

எறிமணி, s. A large circular metal plate for striking the hours, also used as a cymbal in a temple in daily worship, &c., சேமக்கலம்.

எறிமுத்து, s. Chicken pox, haub in pox, மாரிமுத்து.

எறியீட்டி—எறிவல்லையம், s. A dart or lance—as a missile weapon, சவளம்.

எறிவலையம்—எறிவளையம், s. The discus weapon, சக்கராயுதம்.

வித்தெறிய, inf. To sow seed.

எறி, v. noun. Throwing, a cast, எறிகை. 2. [*prov.*] A sarcasm, irony, a hint, allusion, insinuation, innuendo, குறிப்பாகச்சொல்லுகை.

ஓரெறியெறிந்துவிட்டான். He threw out a hint, an insinuation.

அதற்கோரெறியெறிந்துவைக்கவேண்டும். You must give a hint, throw in a word, &c., bearing on the object, take the first step toward it.

எறிவு, v. noun. Throwing, casting.

எறி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To shine brilliantly—as the sun; to emit rays; to glitter as jewels, ஒளிசெய்ய.

இழைசுடரெறித்தலானும். By the brightness of the jewels that blazed around. (நைட.)

கதிரெறிக்குநன்மணி. Glittering precious gems. (நைட.)

கல்லவெயிலெறிக்கிறது. The sun is burning.

மேகம்மின்னெறிப்ப. While the clouds emit lightning—

எறிப்பு, v. noun. Shining, brightness, glitter, splendor, பிரகாசம். 2. Sunshine, a hot sun, வெயிலெறிகை.

எறும்பி, s. An elephant, யானை. (*p.*)

எறும்பு, s. An ant, emmet, pismire, உறவி.

எறும்பூருகின்றது. The ant runs or creeps.

எறும்புப்புற்று—எறும்புவளை, s. An ant's hole.

கட்டெறும்பு, s. A kind of ant whose bite causes swelling, acute pain, Formica compressa, *Fabr.*

முசிட்டெறும்பு—முசிற்றெறும்பு, s. [*prop.* முயிறு]. A kind of large red ant which makes its nest on trees, and whose bite is very painful, Formica elongata, *Fabr.* A medicinal oil is prepared from their eggs—called முயிற்றுமுட்டைத்தைலம்.

தலைப்புரட்டையெறும்பு, s. A kind of black ant with a large head constantly shaking.

கடுத்தவாயெறும்பு, s. A black ant, with a large head, whose bite is severe.

கொள்ளியெறும்பு—கொள்ளிவாலெறும்பு, s. An ant that stings.

பேய்க்காலெறும்பு, s. A kind of small black ant with long feet.

குருவெறும்பு, s. A kind of large red ant.

சுள்ளெறும்பு, s. A kind of small black ant.

சிற்றெறும்பு, s. A small emmet.

தேனெறும்பு, s. A species of ant which forms honey in its nest.

எறுழி, s. A wild hog, காட்டுப்பன்றி. (*p.*)

எறுழ், s. Strength, robustness, வலி, 2. A club, தண்டு. 3. Stick for defence, தடி. 4. A pillar, a post, தூண். (*p.*)

எற்றி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To pity, to have compassion, to sympathize, இரங்க. (பிங்க and திவா.)

எற்று. Third pers. sing. irrational class of the symbolic verb என். 2. What manner, of what kind or sort, like what, எத்தன்மைத்து. 3. Interjection of pity—as எந்தே.

சிறியவர்கட்கெற்றுலியன்றநாநா. Of what are the tongues of those wretches made? (நாலடி.)

எற்றே—எற்றோ. Interjections of pity, இரக்கச்சொல்.

எற்று, கிறேன், எற்றினேன், வேன், எற்ற, v. a. To cast, throw off, to jerk away under-handed, side-handed, &c.; to toss, cast out—as water from a vessel with force, throw water from a pool, a channel with the feet in watering plants, &c.; to kick a thing away, எறிய. 2. To strike, அடிக்க. 3. To cuff, to strike with the fist, புடைக்க. 4. To cut, cut asunder, cut down, வெட்ட. 5. To pierce, stab, குத்த. 6. To kill, கொல்ல.

முரசெற்றினர். They beat the large drum.

கூனியை வன்மார்பிலே யெற்றினவளவில். As soon as she had struck the hump-backed man on the breast—

துந்துமியெலும்பைப்பறக்கவெற்றியும். Kicking up the bones of Tuntumi (into the air)—

எற்றுதிரை, s. Beating billows.

எற்றுபுனல், s. A billowy or rippling body of water.

•எற்றுநூல், s. A carpenter's line for marking boards, &c., மரமறுக்கப்போடுநூல்.

எற்றல், v. noun. Throwing off, throwing water from a pool, &c.,

எற்றல்மரம், s. [prov.] A kind of oblong pail with a long handle, supported by three posts for throwing up water in irrigation.

எற்றற்பட்டை, s. [prov.] Basket for irrigation by four or six persons.

எற்று, v. noun. Casting, jerking, எறிகை. 2. Warding off, striking off, தட்டுகை.

ஒரெற்றிலே யெற்றிப்போட்டான். He cast it away at once.

எற்றை. Adj. form of என்று—as எற்றைநாள், what day.

என—எனு. A numeral connective particle—as என்று, ஒரிடைச்சொல். See என்று.

சாத்தனெனக்கொற்றனென. Sattan and Kottan.

எனை. What, how much, what kind, &c.

எனைப்பகையுற்றாரும். Whatever foes we may have— (குறள்.)

எனையவன்—எனைமனிதன். What man, what kind of man. As in other symbolic verbs, the different persons are used as appellatives and declined through the cases. Another declension also is used, expressing universality and declined in the plural of the rational class only.

எனைவோரும்—எனைவேமும். We all.

எனைவீரும். You all.

எனைவோரும்—எனைவரும், s. They all.

என். Why, wherefore, pronominal interrogative particle, from எ, what, வினவிளக்குறிப்பு. 2. A particle or interjection of doubt, ஐயக்கிளவி. 3. Particle of contempt, இகழ்ச்சிக்குறிப்பு. It is the crude form of a symbolic verb of double declension expressing what kind, what manner of person, thing, &c.

பிறவினிப்புகைப்பதென்னே. What more then is there to be said?

இவனுதந்தைநோற்றதென்கொல்லென்னுஞ்சொல். What meritorious deed did the father perform to get such a son?

அவையென. What are they?

என், கிறேன், றேன், பேன், என்ன, v. a. To say, name, pronounce, express, do, indicate, either by words or signs, expressed, or implied. என்றுசொல்ல. This is the common form for quotation, in which sense it generally occurs in all its various uses. In the infinitive and other parts it is commonly found with one ன் only.

என்கு. I say.

என்கும். We say.

என்ப—என்பர்—என்மர்—என்மனார்—என்றிசினோர். They say, they may say, some say, &c.

அப்படியென்கிறான். So he says. 2. He does so (the speaker making the sign or sound intended).

இல்லையென்கிறேன். I say no—implying impatience, displeasure, emphasis, &c.

பணமில்லையென்கிறான். He says he has no money.

போவென்கிறேன். I tell you to go, *lit.* I say go, and implying I have said so before.

அவனைப்போவென்னப்போகிறான். When I say go, he goes.

காமதேநுவென்கிறபசு. The cow (of the supernals) called Kamadhanu.

நானென்னுமெண்ணம். Self conceit, consequence.

என்பவன், appel. n. He who says so. 2. He who is called so.

பெரியானென்பவன். Perian, or he who is called Perian.

ஆவென்ன, inf. To open the mouth, *lit.* to say ஆ.

ஈயென்ன, inf. To show the teeth, *lit.* to say ஈ.

என்பிக்க, inf. To cause another to say, to prove, சொல்லுவிக்க.

அதையவன்வாயினாலேயுமக்கென்பிப்பேன். I will prove it to you from his mouth.

என்று. The gerund of the verb என், used instead of என the infinitive (which is the poetic usage in this connexion), it serves to end a quotation and to connect it with the following part of the sentence, in which case it often corresponds to the conjunction that, வினையெச்சம்.

அவனையடித்தேனென்றுசொன்னான். He said that he struck him, *lit.* he said, I struck him.

Note 1st. In connexion with appropriate verbs, என்று, and என often mean to expect, to think, imagine, to suppose, to pretend, to desire, எண்ணுதல் or some such verb being implied; பணத்தெய்வமென்றுநடக்கிறான், he makes money his god; அதுபுகையென்றிருந்தேன், I thought it was smoke, I took it for smoke; அவர்வருவாரென்றிருக்கிறேன், I expect him to come; அவனசொன்னானென்றுவந்தாயா, have you come because he told you?—*Note 2d.* According to நன்னூல், என்று and என are இடைச்சொல் or particles, with several specific uses, the other parts of the verb are or may be included. 1. With பெயர் or names; அழுக்காறெனவொருபாவி, the sinner called envy. (குறள்.) 2. With குறிப்பு or symbolic forms; சிக்கெனவூன்றியவேர், the root which has taken firm hold; திடீரெனவந்தான், he came suddenly. 3. With இசை or (imitative) sounds; ஒல்லெனவொலித்தது, it sounded ஒல்; அச்சு or repititive symbolic terms are included in this class; படபடென்றுநடுங்கினான், he trembled (shook, shivered, &c.) greatly; சலசலென்றுநற்றோடுடைப்பெண்ணை, the palmyras whose green leaves rustled (emitted the sound of சலசல). 4. With எண் enumeration, in which they are equivalent to the copulative conjunction; சாத்தனெனக்கொற்றனெனப்பூதனெனமூவரும்வந்தார், Sattan, Kottan and Bhuta came; தேனென்றுபாலென்றுவமைவில்லாமொழி, words unequalled (in sweetness) by honey or milk. 5. With பண்பு or symbolic terms expressive of quality and intensity; கிவேரெனச்சிவந்தது, it reddened to a crimson; வெள்ளெனவா, come in the grey of the morning; வெள்ளெனவெளுத்தது, it became very white.—*Note 3d.* என்று and என also serve to express similitude, like, as, &c.; புலியெனப்பாய்ந்தான், he sprang like a tiger; காந்தளெனக்கைகாட்டி, extending her காந்தள்-like hand.—*Note 4th.* என and என்று are also used to express pre-eminence, &c.; இன்னதென்றில்லை, it is no matter which; ஆரென்றுநினைத்தாய், who do you suppose I am? I am not to be treated thus, &c., உயிரென்றுபார்க்கவில்லை, he does not (or did not) regard even life; அவனுக்கிவனென்றில்லை, it is no matter to him who; குருவென்றுபேணுகின்றிலன், he does not respect even the guru; எவ்வளவென்றில்லை, it is no matter how much. 2. How much soever, how little soever. 3. It is illimitable, undefined, the quantity is unknown; வாய்வைப்பதென்றுபார்க்கிறதில்லை, he does not give himself time to eat.—*Note 5th.* என and என்று are also used with reiterative symbolic terms; மடமடென்றொலித்தது, it sounded மட, மட; அடியடியென்றடித்தான், he beat him soundly; தலைதலையென்றடித்துக்கொண்டான், he beat his head greatly through rage, grief, despair, &c.; *lit.* saying, "Head, head;" வாய்வாயென்றடிக்க, to beat one's mouth greatly—in sorrow, despair, &c.; எறியெறியென்றெறிந்தான், he threw many times; *lit.* he threw, saying, "Throw, throw."—*Note 6th.* என and என்று, with a dative imply, designed or appointed for, sacred or devoted to, for the sake of, &c.; சுவாமிக்கென்றுநேர்ந்தது, it is vowed (devoted) to God; தன்பிள்ளைக்கென்றுவைத்துக்கொண்டான், he kept it for his child; எனக்கென்றெடுக்கமாட்டேன், I will not take it for myself.—*Note 7th.* The subjunctive என்றால் joined to verbs or used when verbs are implied forms the subjunctive of those verbs.—*Note 8th.* The subjunctive என்னில், poetically, என்னின், if, is contracted into எனில் and எனின், and in classical usage to எல் and என்: உம் joined to those forms makes them though; they are added to other verbs or to nouns; ஒரடியென்றேனுநட, walk, if it be but one step.

என்பு, s. A bone, bones, எலும்பு. 2. Grass, புல். (p.)

என்பாபரணன், s. Siva, சிவன். (p.)

என்புருக்கி, s. A disease of the bones—as எலும்புருக்கி. (p.) 2. A plant, ஓர்பூண்டு.

என்று, A numerical connective particle, எண்ணிடைச்சொல். (p.)

முதலிடைகடைபோலியென்று. The initial, medial, final, and equivalent letters. (நன்னூல்.)

என்று. What day? when? what time? எப்போது.

என்றும், *s.* Every day, always, forever.

என்றைக்கும்—எற்றைக்கும்—என்றென்றைக்கும். Forever.

என்றைக்குச்செய்வானோ. When he will do it (I cannot tell).

என்றுமுள்ளவர். The everlasting one—God.

என்றைத்தினம். Which day?

என்றுமிகாலமும். Through all ages.

இன்றன்றென்றும். To-day and forever.

என்று—என்றவன், *s.* The sun, சூரியன். (*p.*)

என்றவன்மதலையேவும். The arrows shot by Karnan the son of the sun— (பார.)

நின்றவென்றும்வெளிநிற்றலஞ்சிநெடுநீலவேலையின் மறைந்ததே. The sun, also, fearing to expose himself in the extended sky, hid himself in the blue ocean. (பார.)

என்றூழ், *s.* Sun-shine, வெயில். 2. The sun, சூரியன். (*p.*)

என்ன, *inter.* What? what kind? what manner? why? யாது. 2. Participle third person plural, irrational class of the symbolic verb என், but used in common for the singular, also instead of என்னது or எற்று, குறிப்புப்பெயரெச்சம்.

என்னத்துக்காக. [*prop.* என்னதற்காக.] On what account, why?

என்னத்தைக்கண்டாய். [*prop.* என்னதை.] What did you see?

என்னென்ன. What—distributively.

அதென்னவோ. What can that be? 2. I know not what.

பாடல்பெறுனேபலர்மெச்சவாழானே—நாடறியநன் மணக்கனுட்டானே, பேடி—இவன்வாழும்வாழ்க்கை யிருக்கடலுசூம்பாரிற்—கவிழ்ந்தென்னமல்காந்தென்கா ண். Of what utility in this sea-girt land is an hermaphrodite, whom no panegyrist has ever celebrated, and who has not obtained the praises of the multitude, nor sought fame by charitably aiding the indigent to marry?

எவனேவொருபேயனென்னவோபுலம்பிப்போனன். Some demoniac, who I cannot tell, has passed by, uttering his wailings—spoken in contempt; for என்னவோ, in colloquial style என்னமோ is sometimes used improperly.

உனக்கவனென்னவேண்டும். How is he related to you?

என்னு. [*prop.* என்ன.] What? why?

என்னே. An exclamation of pity, doubt, amazement, surprise, contempt, &c., அதிசயவிரக்கச்சொல்.

என்னை. What? why? The third pers. irrational class of the symbolic verb என், mostly found in the singular, வினவினைக் குறிப்பு.

நீதோத்திரம்பண்ணினதென்னை. Why have you complimented me?

அதவென்னை. What is the reason?

என்னோ. An exclamation of pity, இரக்கச்சொல். 2. Surprise, அதிசயவிரக்கச் சொல். 3. Doubt, ஐயக்கிளவி. 4. Contempt, இகழ்ச்சிக்குறிப்பு. See என.

ஏ

ஏ. One of the seven long vowels, நெட்டெழிலொன்று. 2. An arrow, அம்பு. 3. A particle of emphasis, &c., இடைச்சொல். In நன்னூல், it is said to have six different uses: 1. பிரிநிலை, a distinguishing particle—as அவனேசொன்னன், it was he who said it. In some cases, it would be used for self or selves in the plural where the connection demanded it—as he himself said it. 2. வினா, interrogative: அவனேகொண் டான், was it he that bought it? 3. எண், enumeration or copulative—as சாத்தனே கொற்றனே இருவரும்வந்தார், Sattan and Kottan both came; கடலே, கரையே, மரமே, மலரே, வளையே, இவ்வைந்து, the sea, the land, the tree, the flower, the conch, these five. 4. ஈற்றசை or அசைநிலை, a terminate expletive—as மல்லலோங்கெழில்யானைமருமம்பாய்ந்தொளித்த தே, (the weapon) lodged itself in the breast of the beautiful and powerful elephant. 5. தேற்றம், certainty, confidence, appeal, emphasis—as இதன்னதே, this is really true; முயற்குக்கோடில்லையே, the hare has no horns. 6. இசைநிறை, a poetic expletive for completing the metre—as ஏஏ இவ ளொருத்திபேடி, she is a hermaphrodite; பேடியோவென்றுரே, he said, is she an hermaphrodite? To these the commentator adds 7. எதிர்மறை, negative as implied by the tones and inflections of the speaker rather than expressed by the particle—as அவன்வந்தானே, he came, did he? implying he did not come. Another may also be given. 8. இகழ்ச்சி, an interjection of contempt—as ஏஏபைத்தியகாரா, oh, oh, (or fie, fie), thou stupid fellow. (*p.*)

*ஏகம், *s.* Unit in arithmetic, ஒன்று. 2. That which is unique, absolute, ஒப்பற் றது. 3. Solitariness, தனிமை. 4. Union, unison, உடன்பாடு. 5. The total, the whole, good and bad—great and small, altogether, மொத்தம். In this meaning it seems limited to the oblique cases. Wils. p. 170. Eka.

ஏககாலத்திலே. At once, in a single act. 2. Coeval, contemporary, together.

ஏகத்துக்கிருட்டு. It is very dark.

ஏகத்துக்குமுந்நூறு. Altogether three hundred.

ஏகசகடு. [*vul.*] Altogether, in the gross, in the lump, மொத்தம். 2. Average, சரிசரிவிலை.

ஏகசக்கரம், *s.* Sovereignty, monarchy exercised by a paramount king, ஓராழி. 2. Name of a city, ஏகச்சக்கரபுரம். Wils. p. 170. Ekachakra.

ஏகசக்கரக்குடை, *s.* Independent sovereignty, monarchy, தனிக்குடை.

ஏகசக்கரமாயாள, *inf.* To rule with supreme power.

ஏகசக்கரவர்த்தி—ஏகசக்கராதிபதி, *s.* A paramount sovereign, a monarch, an emperor, இராசாதிராசன். 2. The Supreme Being, கடவுள்.

ஏகசக்கரவனம், *s.* A forest in which the Pandus retired for some time.

ஏகசமன்—ஏகசமானம், *s.* Uniformity, likeness, smallness, ஒருநிகர்.

ஏகசரம், *s.* The rhinoceros, காண் டாமிருகம். Wils. p. 120. Ekachara.

ஏகசிந்தை, *s.* Unanimity, ஒருமனது. 2. Implicitness, singleness of purpose, undivided attention, ஒன்றிலேசெல் லுஞ்சிந்தை.

ஏகசிந்தையாயிருக்க, *inf.* To be unanimous. 2. To be intent on, or wholly engaged in a thing.

ஏகசுபாவம், *s.* Uniformity of disposition in a person, ஒரேதன்மை. 2. Similarity of nature in different persons, சமமானசுபாவம்.

ஏகதந்தன், *s.* Ganesa—the one tusked—the other having been broken off and cast at his foe கயமுகாசுரன் in combat, விநாயகன். Wils. p. 170. Ekadanta. (*p.*)

ஏகதாளம், *s.* One of the seven kinds of தாளம், or modes of beating the drum, ஆதிதாளம். Wils. p. 170. Ekatala.

ஏகதேசம், *s.* Rareness, scarceness, a rare, extraordinary or prodigious occurrence, அருமை. 2. Anomaly, difference, eccentricity, வேற்றுமை. 3. A blunder, a mistake; difference as above or below the mark; greater or less, disparity; unfitness, incongruity, disagreement, inconsistency, ஒவ்வாமை. 4. Exception to a general rule, ஒரோவிடத்தவிதிபிறழ்வு. 5. Undefinedness, uncertainty, fickleness, சந்தேகம்.

ஏகதேசத்திலுநினைத்திருக்கவில்லை. I never even once thought of it.

கடிச்சை, *s.* The name of a shrub, ஓர்செடி. Its fruit kills fishes, Casearia elliptica, *L.* 2. The name of a small fish, ஓர்மீன்.

கடிஞை, *s.* A religious mendicant's vessel, இரப்போர்கலம். (*p.*)

தவசிகடிஞைபோற்பையநிறைத்தவிடும். As the alms-dish of a mendicant is gradually filled, so charitable acts will procure a rich reward. (சாவடி.)

கடிதடம், *s.* The loins, the hip, அரை. Wils. p. 181. Kaditada. 2. The pudendum muliebre or mons veneris, நிதம்பம். (*p.*)

கடிதம், *s.* (*Tel.* కడితము.) Rough, stiff or hard cloth on which paste is put for painting, drawing, &c., பசைபூசியதுணி. 2. Paper, காகிதம்.

கடிதம், *s.* Gum, பிசின். (*p.*)

கடிதாசி. *s.* [*vul.*] Paper, காகிதம்.

கடிதாசித்தாள், *s.* A sheet of paper.

கடிப்பகை, *s.* Mustard—the seed or plant, கடுகு. 2. The margosa tree, வேம்பு.

கடிப்பம், *s.* An ear-ornament, காதணி. 2. A casket, ஆபரணப்பெட்டி. 3. A brass oil-vessel, கெண்டிகை. (*p.*)

கடிப்பிணை, *s.* An ear-ornament, காதணி.

கடிப்பு, *s.* A drum-stick, குணில். (*p.*)

கடிப்பை, *s.* A kind of small mustard, சிறுகடுகு.

கடியல், *s.* [*prov.*] A beam across a dhoney extending beyond the sides of the vessel to which a temporary stay for the mast, or any other rope may be attached, தோணியின்குறுக்குமரம்.

கடியிரத்தம்—கடிலா, *s.* The மூக்கிரட்டை plant, Boerhaavia procumbens, *L.*

கடிரோமம், *s.* Root of Cyperus bulbosa, கோரைக்கிழங்கு.

கடிவை, *s.* An elephant, யானை. (*p.*)

*கடினம், *s.* Hardness, compactness, firmness, induration, வன்மை. 2. Severity, cruelty, harshness, rigorousness, asperity, கடுமை. 3. Difficulty, roughness, ruggedness, வருத்தம். Wils. p. 182. Kadina.

வெயில்மிகக்கடினம். The sun is very hot.

அவன்பிழைக்கிறதுகடினம். It will be hard for him to recover.

கடினக்காரன், *s.* A severe, hard man.

கடினச்செய்தி, *s.* Heavy tidings.

கடின்ப்பட, *inf.* To grow hard, difficult, obdurate, to indurate, வன்மைப்பட.

கடினப்படுத்த, *inf.* [*caus.*] To harden the heart, &c., to indurate, வன்மைப்படுத்த.

கடினப்பட்டமனம்—கடினமனம், *s.* A hard or unfeeling mind, obduracy.

கடினமாய்ப்பேச, *inf.* To speak harshly, roughly.

கடினமானநிலம், *s.* A hard soil.

கடினமானபாடம், *s.* A hard lesson.

மனக்கடினம், *s.* Hard-heartedness, cruelty.

*கடினை, *s.* Sclerotica. (*Anat.*)

கடு, *s.* Poison, venom, நஞ்சு. 2. The Indian gall-nut tree, கடுக்காய்மரம், Terminalia chebula, *L.* 3. A thorn, முள். 4. Point, sharpness, கூர்மை. 5. A serpent, பாம்பு. (*p.*) 6. A contraction of கடுமை; which see.

கடுவுகஞ்சுநிறைப்ப. And the serpent ejecting poison— (கல்லா.)

கடுக்காய், *s.* Indian gall-nut, or ink-nut, அரிதகிக்காய். (*Mat. Ind.*)

கடுக்காய்ச்சாயந்தோய்த்தல், *v. noun.* Dipping in gall-nut dye.

கடுக்காய்த்தலையன், *s.* A kind of snake, ஓர்பாம்பு. 2. [*prov.*] A man or bull with a small round head.

கடுக்காய்ப்பூ, *s.* Flower of the gall-nut.

கடுக்காய்வேர், *s.* The root of the gall-nut tree.

வரிக்கடுக்காய், *s.* A variety of gall-nut.

சிறுகடுக்காய், *s.* Another variety.

கடுத்தலை, *s.* A sword, வாள். (*p.*)

*கடு, *s.* The கடுரோகணி plant. (*M. Dic.*) 2 Bitterness, கசப்பு. 3. Astringency, கார்ப்பு. 4. An alligator, crocodile, முதலை. Wils. p. 181. Kadu. (*p.*)

கடு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To throb—as from a sting, venomous bite, the prick of a thorn, tooth-ache, விருவிருக்க. 2. To ache—as with colic, dysentery, &c.; to have pain as the leg from walking; the shoulders or head from carrying a load; the mouth from speaking; the arm from writing, &c., உளைய. 3. To be seasoned too highly, or otherwise spoiled—as curry, commonly, கடுகெடுக்க. 4. (*p.*) To be like, to resemble, ஒக்க. 5. To be in doubt, or uncertainty, to hesitate, ஐயுற. 6. To be angry, impatient, fretful, கோபிக்க. 7. To pass swiftly, விரைய.

கடுத்தபின். When (the king) suspects. (குறள்.)

கடுத்தப்பேசுநன்னீர். Bad water, water unpleasant to the taste.

அடுத்ததுகாட்டும்பளிங்குபோல்நெஞ்சங்கடுத்ததுகாட்டும்முகம். The face indicates the resentment of the heart, as the mirror reflects the shape of things placed before it.

ஊமன்கண்ணிலாதவற்குரைத்ததுங்காண்டலுங்கடுக்கும். It is as if a blind man saw a thing which a dumb man told him to look at.

கடுவரைநீர்கடுத்துவரக்கண்டு. Seeing it coming as rapidly as the impetuous mountain torrent— (வெண்பாமாலை.)

கடுத்துப்பேச, *inf.* To speak harshly.

கடுப்ப, *inf.* Used as a particle of comparison—as பிள்ளைகடுப்பப்பிணம்பிறக்க the bodies (of those who fell in battle) appeared (to move their dying limbs) like infants. (வெண்பா.)

கடுத்தல், *v. noun.* Doubt, ஐயம். 2. Wrath, கோபம். 3. Vehemence, வேகம். 4. Comparison, உவமை. (*p.*)

கடுப்பு, *v. noun.* Pains, throbbing, throe, எரிவு. 2. Anger, displeasure, impatience, peevishness, சினம். 3. Speed, rapidity, impetuosity, great haste, வேகம்.

அவருடையகடுப்பெல்லாமற்றுப்போயிற்று. His peevish arrogance is now all gone (his means being reduced).

கடுப்பிறக்குதல், *v. noun.* Reducing one's pride, arrogance.

கடுப்புக்கழிச்சல், *s.* A painful dysentery.

கடுப்புச்சூடு, *v. noun.* Cauterizing oxen after castrating as a counter-operation to promote healing.

கடுப்பெடுத்தல், *v. noun.* Being in pain, aching. 2. Reducing one's pride, arrogance.

வாதக்கடுப்பு, *s.* Rheumatic pains in the limbs.

நீர்க்கடுப்பு, *s.* Dysury, strangury.

மூலக்கடுப்பு, *s.* Dysentery, tenesmus.

வயிற்றுக்கடுப்பு, *s.* Griping of the bowels.

மனக்கடுப்பு, *s.* Indignation, resentment.

கடுகடு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*intens. of* கடுத்தல்.] To show signs of anger by sour looks, harsh words, &c., சினக்குறிப்புக்காட்ட. 2. To speak harshly, கோபமாகப்பேச. 3. To throb--as the flesh after the bite of a scorpion, the sting of a venomous insect, or the severe prick of a thorn, &c., விருவிருக்க. 5. To be highly seasoned, உறைக்க.

கறிகடுகடுத்துப்போயிற்று. The curry is too highly seasoned; i. e. too salt, too acid, &c., the taste being unpleasant.

கடுகடுத்தமுகம், *s.* An angry, austere countenance.

கடுகடுத்துப்பேச, *inf.* To speak harshly.

கடுகடுப்பு, *v. noun.* Sullenness, displeasure of countenance, வெறுப்பு. 2. Being highly seasoned.

கடுகடுப்பாயிருத்தல், *v. noun.* Being austere, angry.

கடுகம், *s.* Astringency, pungency, கார்ப்பு. (சது.) (*p.*) 2. The same as கடுரோகணி, Helleborus niger.

திரிகடுகம், *s.* In medicine, three special stimulants or spices; viz.: 1. Dry ginger, சுக்கு. 2. Black pepper, மிளகு. 3. Long-pepper, திப்பிலி. 2. A moral poem in which each verse has three things for its theme, ஓர்நூல்.

கடுகியகாந்தி, *s.* A kind of prepared arsenic, இரசதபாஷாணம்.

கடுகு, *s.* Mustard, ஐயவி, Sinapis niger. 2. A running plant, குன்றிச்செடி, Abrus precatorius, *L.* 3. Lees of oils when made on the fire, எண்ணெய்க்கடுகு.

கடுகுபோகிறவிடம்பார்க்கிறானேயல்லாமற்பூசணிக்காய்போகிறவிடம்பார்க்கிறதில்லை. He looks carefully after a mustard seed, but is careless in regard to a pumpkin.

கடுகளவு. As much as the mustard seed.

கடுகளவுதாரும். Give me if only a little.

கடுகோலாத்தி, *s.* [*prov.*] Mustard seed waved before a new married pair or others, and then cast into the fire to dispel the fascination of the eyes which may have fallen on them. 2. The ceremony of waving, &c., கடுகெறிசுற்றுமலாத்தி.

கடுகுக்கொல்லை, *s.* A mustard field.

கடுகுதாளிக்க, *inf.* To season curry with mustard in a peculiar way. See தாளிக்க.

கடுகுமணி, *s.* White mustard, வெண்கடுகு, Sinapis alba. 2. A necklace of small gold beads, சிறுமணி.

கடுகெண்ணெய், *s.* Oil of mustard seed, used on the Malabar coast for anointing the head, கடுகுத்தைலம்.

கடுகோரை, [*sometimes* கடுகன்னம் *and* கருசாதம்.] Mustard seed and ghee put into boiling rice as food for the temple—one of சித்திரான்னம்.

எண்ணெய்க்கடுகு, *s.* The sediment of oil.

நாய்க்கடுகு, *s.* White mustard.

மலைக்கடுகு, *s.* Hill mustard.

வெண்கடுகு, *s.* The lees of medicinal oils when extracted by heat. 2. The sediment or refuse of ghee.

சிறுகடுகு, *s.* A species of mustard, Sinapis ramosa. (*Rott.*)

கடுகு, கிறேன், கடுகினேன், வேன், கடுக, *v. n.* To go or pass swiftly, to be in haste, வேகமாய்ப்போக. 2. To draw nearer or grow shorter, as time, சமீபிக்க. (*p.*)

தேரைக்கடுகெழுமெச்சி. Quickly bringing up his chariot.

இறைகடுகியெல்லைகெடும். His life-time will swiftly pass and his term will expire.

கடுக, *inf.* [*used adverbially.*] Hastily, speedily, fast.

கடுகச்சொல்லு. Say at once.

கடுகவந்தவன். He who came in haste.

கடுகென, *adv.* Swiftly, quickly.

கடுகெனநட. Walk quickly.

கடுகல், *v. noun.* Being in haste.

கடுகுடுத்தல்—கடுகுடெனல், *v. noun.* [*prov.*] Rattling in speaking, articulating rapidly and indistinctly, தெளிவின்றிப்பேசல். 2. Speaking angrily, கோபமாய்ப்பேசுதல்.

கடுகுடுத்தான், *s.* [*prov.*] A fidgetty person.

*கடுகுரோகணி—கடுகுரோணி—கடுரோகணி, *s.* A kind of purgative drug, Helleborus niger, *L.* (*Mat. Ind.*) Wils. p. 182. KADUROHINI.

கடுக்கன், *s.* An ear-ring in common, காதணியிலொன்று.

புலிமுகக்கடுக்கன்—உருத்திராட்சக்கடுக்கன்—சவடிக்கடுக்கன்—ஒட்டுக்கடுக்கன்—முத்துக்கடுக்கன்—குப்பிக்கடுக்கன்—சங்குசக்கரக்கடுக்கன்—பூசாந்திரக்கடுக்கன்—தாய்க்கடுக்கன்—வைரக்கடுக்கன்—அருப்புச்சரிக்கடுக்கன்—அனந்தமுடிச்சு. Different kinds of ear-ornaments.

கடுக்கன்போட, *inf.* To put on ear-rings.

கட்டுக்கடுக்கன், *s.* An ear-ring with gems inlaid.

நாட்டுக்கடுக்கன், *s.* [*prov.*] Ear-rings worn in the rural districts of North Ceylon.

செம்புக்கடுக்கன், *s.* An ear-ring with rubies inlaid.

சுற்றுக்கடுக்கன், *s.* An ear-ring which is made by winding fine gold wire round a form made of the same but inferior material.

கடுக்கெனல், *v. noun.* [*prov.*] Being grown up, increased in stature, வளருதல். 2. Being tall, உயருதல். 3. Being increased in wealth or learning (sarcastically), மிகுதல்.

அவன்கடுக்கென்னநாட்செல்லும். It will be sometime before he is grown up.

அதற்குள்அவன்கடுக்கென்றுவிடுவான். By that time he will be grown up.

கடுக்கென்றபயிர், *s.* Corn grown up.

கடுக்கென்றவன், *s.* A grown person, a young fellow. 2. A tall man.

கடுக்கை, *s.* The கொன்றை tree, Cassia fistula. (*p.*) 2. The மருது tree, Terminalia alata.

கடுக்கைக்கண்ணியன்—கடுக்கைமுடி, *s.* Siva, சிவன்—he who wears a garland of கடுக்கை.

கடுங்காந்தி, *s.* A kind of prepared arsenic.

கடுங்கை, *s.* [*prov.*] Improp. for கடுமை; which see.

கடுசரம், *s.* A purgative drug, கடுரோகணி.

கடுசாரம், *s.* A medicinal salt, காரிச்சாரம்.

கடுஞ்சாரி, *s.* A solder, sal ammoniac, நவச்சாரம்.

கடுடம், *s.* A thorny shrub, மருக்காரை, Randia dumetorum, *L.*

கடுதல், *v. noun.* Robbing, stealing, plundering, திருடுதல். 2. Plucking off, pulling up, பறித்தல். (*p.*)

களைகட்டபயிர். Weeded corn.

கடுதாசி, *s.* (*For.*) Paper, காகிதம். 2. Letter, நிருபம்.

கடுத்தம், *s.* Closeness, firmness, compactness of cloth, &c., அழுத்தம். 2. [*prov.*] An agreement in regard to a marriage portion among Mohammedans.

கடுத்தலூசி, *s.* A pointed iron bar with which rocks are bored, கற்றுளைக்குங்கருவி.

கடுத்தல், *s.* A fish, ஓர்மீன். 2. A black ant with a large head, ஒரெறும்பு.

கடுந்திலாலவணம், *s.* Salt procured from Sesamum seed.

கடுப்படக்கி, *s.* A plant, எருமுட்டைப்பீநாறி.

கடுப்புமரம், *s.* [*prov.*] A kind of oil press, எள்முதலியனவாட்டுமரம்.

கடுப்பை, *s.* White mustard, வெண்கடுகு.

கடுமலை, *s.* The same as காரீயமலை; which see under சயம்.

கடுமுடுக்கல்-கடுமுடுக்கு, *v. noun.* Hastening, driving, வேகமாய்நடத்தல். 2. Oppression, rigor—as by petty arrogant officers, கடுமையாகவருத்துதல்.

கடுமுடெனல்—கடுமொடெனல், *v. noun.* Sounding as the biting of some hard and dry things, ஒலிக்குறிப்பு.

நாயெலும்பைக்கடுமுடென்றுகடிக்கின்றது. The dog makes a clatter in gnawing the bone.

வயிறுகடுமொடென்றிரைகிறது. My bowels wamble.

கடுமை, *s.* Severity, harshness, cruelty, hard-heartedness, அகோரம். 2. Rigor, strictness, asperity, rigidness, earnestness, zealousness, கண்டிப்பு. 3. Vehemence, impetuosity, forcibleness, furiousness, மூர்க்கம். 4. Rapidity, speed, haste, velocity, விரைவு. 5. Hardness, tenacity, firmness, roughness, ruggedness, கடினம். 6. Excessiveness, intensity, immoderateness, vastness, exorbitancy, flagrancy, atrocity, malignity, heinousness, desperateness, மிகுதி. 7. Ferocity, savageness, furiousness, violence, கோபம். 8. Strength, powerfulness, வன்மை. 9. Cutting in language, offensiveness, satiricalness, injuriousness, குரூரம். The leading character of this word in its different meanings is intensity. (See கொடுமை.) From this word is derived the symbolic verb கடிது (3d person sing.), It is severe, &c., with any of the meanings of கடுமை.

கடிசு, *v. noun.* Being too perpendicular, too little bent—as a hoe, adze, &c., to the handle, or a plough-share to the shaft, நிமிர்வு—opp. to தணிசு.

கடிச்சை, *s.* Niggardliness, உலோபகுணம்.

கடிச்சைக்காரன், *s.* A niggard, a penurious man.

கடியது, *(the neuter appellative.)* That which is severe.

கடியமோசம், *s.* Imminent danger.

கடியவார்த்தை, *s.* Hard or angry words, offensive terms or language.

கடியன், *s.* A severe, cruel man.

கடுங்கணோர், *s.* Cruel, savage, barbarous persons, கொடியோர்.

கடுங்கண், *s.* Cruelty, severity, barbarousness, unmercifulness, கொடுமை. 2. [*prov.*] The scallop of a palmyra leaf in a கோடிபட்டை, cut too closely, நுலைக்கண்.

கடுங்கருத்து, *s.* Abstruse idea, far-fetched unnatural meaning, கடுமையானகருத்து.

கடுங்காய், *s.* [*prov.*] Unripe fruit, பழாதகாய்.

கடுங்காய்நுங்கு, *s.* Palmyra fruit, the kernel or pulp of which is too far advanced to be eatable, முதிர்ந்தநுங்கு.

கடுங்காய்ச்சல், *s.* Violent fever, மிகுசுரம். 2. *v. noun.* Being over-heated—as by the smith, அதிககாய்ச்சல். 3. Being dried or scorched much in the sun, வெயிலிலதிகமாய்க்காய்தல்.

கடுங்காய்ச்சலாக்காய்ந்தபோயிற்று. (The corn, &c.), is all scorched (not irrecoverably) by the sun and want of water, rain, &c.

கடுங்காரநீர், *s.* An egg, முட்டை.

கடுங்காரம், *s.* A powerful caustic, ஓர்வகையெரிமருந்து. 2. Excessive pungency, அதிகவுறைப்பு.

கடுங்காலம், *s.* A hard season as in drought, scarcity, &c., a season of adversity, பஞ்சகாலம். 2. A hot season, hot weather, வெப்பமானகாலம்.

கடுங்காற்று, *s.* A strong breeze, a furious wind, a tempest, அதிககாற்று.

கடுங்கூர்மை, *s.* Being sharp, அதிககூர்மை. 2. Salt from sesamum, கடுந்திலாலவணம். 3. Salt of sulphur, கந்தகவுப்பு. 4. Sea salt, கடலுப்பு.

கடுங்கூர்மைலவணம், *s.* Salt from urine, அமரியுப்பு.

கடுங்கோடை, *s.* A severe drought, முதிர்வேனில்.

கடுங்கோபம், *s.* Violent anger.

கடுஞ்சினப்பூமி—கடுந்தழற்பூமி, *s.* Alkaline earth, lixivium, உழமண்.

கடுஞ்சிநேகம், *s.* Very close friendship, too great intimacy, அதிகசிநேகம்.

கடுஞ்சிநேகங்கண்ணுக்குப்பகை. Too great intimacy is productive of evil.

கடுஞ்சுண்ணத்தி, *s.* Alum, சீனக்காரம்.

கடுஞ்சூடு, *s.* Great heat, அதிசூடு.

கடுஞ்செட்டு, *s.* Unfair traffic, trading at an exorbitant profit.

கடுஞ்செய்கை, *s.* A cruel or wicked deed, கொடியகிரியை.

கடுஞ்சொல், *s.* A severe word, a harsh expression, a reprimand, கொடுஞ்சொல்.

கடுதலைமுடிச்சு, *s.* [*prov. prop.* கடைதலைமுடிச்சு.] A treacherous contrivance, perfidy.

கடுநடை, *s.* A tiresome walk, hard walking, a hard walk.

கடுநெருப்பு, *s.* A fierce fire, a fire too large or too powerful for the occasion—as for culinary or chemical purposes.

கடுந்தரை, *s.* Hard soil, வன்னிலம்.

கடுந்தோயல்—கடுந்தோய்ச்சல், *v. noun.* Over-tempering a weapon, &c., முதிர்ந்ததோயல்.

கடுமத்தியானம்—கடும்பகல், *s.* The intense heat of mid-day.

கடுமுள், *s.* Weapons of warfare, யுத்தாயுதப்பொது.

கடுமூர்க்கம், *s.* Great fury, vehement anger, அதிகமூர்க்கம்.

கடுமூர்க்கன், *s.* A furious man.

கடும்பச்சை, *s.* A curious green stone, நாகப்பச்சை.

கடும்பத்தி, *s.* Rigorous devotion, earnest excessive zeal, மிகுபத்தி.

கடும்பத்தியம், *s.* A strict diet, கண்டிப்பானபத்தியம்.

கடும்புலி, *s.* A ferocious tiger, கொடும்புலி.

கடும்புளிப்பு, *s.* Excessive sourness, அதிகபுளிப்பு.

கடுவட்டி, *s.* Excessive interest, usury, அதிகவட்டி.

கடுவழி, *s.* A rugged way, கடுமையானவழி.

கடுவிலை, *s.* An exorbitant price, அதிகவிலை.

கடுவெயில், *s.* A burning sun, அதிகவெயில்.

கடுவெளி, *s.* A dry extensive plain or open space, free from trees, &c., a vast expanse, பெருவெளி.

கடும்பு, *s.* Relations, சுற்றம். 2. A pad of straw for the head used in carrying a load, சும்மாடு. (சது.) (*p.*) 3. [*prov. improperly for* கடம்பு.] Biestings.

கடுவல், *s.* Ground hardened by sunshine after rain, வன்னிலம். 2. [*in seamen's language.*] A heavy gale, a hurricane, கடுங்காற்று.

கடுவன், *s.* The male of monkeys, cats, &c., குரங்குபூனைமுதலியவற்றினாண். 2. The male of beasts in general, விலங்கேற்றின்பொது.

கடுவன்பூனை, *s.* A he-cat, tom-cat.

கடுவன்குரங்கு, *s.* A male monkey.

கடுவாய், *s.* A hyena, புலிக்குடத்தி.

கடுவான்கரப்பன், *s.* A cutaneous disease in the legs of infants, ஓர்கரப்பன்.

கடூரம், *s.* [*prop.* குரூரம்.] Hardness, solidity, severity, intensity, vehemence, கடுமை.

கடேந்திரநாதர், *s.* One of the nine சித்தர்.

கடை, *s.* End, extremity, termination, conclusion, முடிவு. 2. A shop, bazaar, market, அங்காடி. 3. (*p.*) Inferiority, baseness, meanness, lowness, the least, lowest, or worst kind, &c., கீழ்மை. 4. Way, வழி. 5. Termination of a particle, வினையெச்சவிகுதி. 6. Place, room, இடம். 7. A form of the seventh case used also with verbs, to express if, when, after, &c., ஏழனுருபு. 8. A door, a gate-way, வாயில். 9. The outer gate, புறவாயில். 10. The clasp or other fastening of a neck-ornament, பணிப்பூட்டு. 11. Side, பக்கம்.

நீத்தக்கடை. If he leave— (குறள்.)

ஈதலியையாக்கடை. If it be not possible to bestow—

நள்ளிமுதற்கிள்ளிகடையாக. From Nalli to Killi (reigned sixty-four kings called சோழர்).

நாயிற்கடையாநாயேனை. Me who am the most degraded of dogs—

அவன்கடைச்சென்றான். He approached him.

கடைகட்ட, *inf.* To close a shop, கடைசாத்த. 2. To suspend a work, to discontinue, to make an end of—spoken diminutively.

கடைகாப்பாளர்—கடைகாவலர், *s.* Door-keepers, porters, வாயில்காப்போர்.

கடைகெட்டவன், *s.* [*vul.*] An abandoned person, a wretch, முழுதுங்கெட்டவன்.

கடைக்கண், *s.* The outside corner of the eye, கட்கடை. 2. A benign look, கடாட்சம்.

கடைக்கண்வைக்கவேண்டும். I am anxious to get a propitious look, glance of your eye.

கடைக்கண்ணாற்பார்க்க, *inf.* To glance, look sidewise. 2. To cast a propitious or benignant look.

கடைக்கண்பார்வை, *v. noun.* A side look, a glance. 2. A propitious or benignant look, approbation, a token of favor.

கடைக்கனல்—கடையனல், *s.* The final deluge-fire, ஊழித்தீ.

கடைக்காப்பு, *s.* The last verse in the poem called பதிகம்—as an invocation, &c.

கடைக்காரன், *s.* A shop-keeper.

கடைக்குடல், *s.* The lower part of the bowels, கீழ்க்குடல்.

கடைக்குட்டி, *s.* The youngest child, a term of fondness, கடைப்பிள்ளை.

கடைக்குறை, *s.* Elision in the termination of a word—as கோல், for கோலம்.

கடைக்கூட்ட, *inf.* To effect, to produce a result—as the actions of a former birth are supposed to do, வினைப்பயனுறுவிக்க. 2. To unite man and wife, or a male and female of the brute creation, as former deeds are imagined to do.

கடைக்கூழை, *s.* A species of rhyme, ஓர்தொடை. 2. The rear division of an army, படைப்பின்னணி. See கூழை.

கடைக்கொள்ளி, *s.* A fire-brand burnt to the end, குறைக்கொள்ளி.

கடைக்கோடி, *s.* [*vul.*] The very extremity, the utmost limit, ஈறு.

கடைசால், *s.* [*prov.*] The finishing of a business, முடிவு. 2. Stern of a vessel—also written கடையால்.

கடைசாலொதுக்க, *inf.* To finish a business in hand.

கடைச்சங்கம், *s.* The third and last of the ancient Madura colleges consisting of forty-nine literati, இறுதிச்சங்கம்.

கடைச்சரக்கு, *s.* Curry stuff, spices, &c., drugs, medicines, &c., sold in the bazaar, கடையில்விற்கப்படுஞ்சரக்கு.

கடைச்சன், *s.* The youngest son, கடைப்பிள்ளை.

கடைஞர், *s.* The laboring caste in agricultural districts, மருதநிலமாக்கள்.

கடைதலைப்பூட்டு, *s.* An inverted construction in poetry, by which the last word in a verse is connected with the first, விற்பூட்டுப்பொருள்கோள்.

கடைதிறப்பு, *v. noun.* Opening a door. In erotics, the section which relates to an application made for the opening of a door to a coming or expected lover; or in war poems, to a warrior returning in triumph after a victory, கதவுதிறக்கை. (*p.*)

கடைத்தடம், *s.* Gate-way, வாயில். (*p.*)

கடைத்தரம், *s.* The last class, the lowest or worst kind, கீழ்த்தரம்.

கடைத்தலை—கடைத்தலைவாயில்—கடைத்தலைவாய்தல், *s.* The outer gate, the outer court or yard, தலைவாயில்.

கடைத்தெரு, *s.* A market-street, a bazaar, கடைவீதி.

கடைத்தேற, *inf.* [*prop.* கடத்தேற.] To be saved, to escape all afflictions.

கடைத்தேற்றம், *s.* [*prop.* கடத்தேற்றம்.] Salvation.

கடைநாள் — கடைமீன், *s.* The twenty-seventh lunar asterism, இரேவதி. (*p.*)

கடைநிலை, *s.* A poem uttered by holy persons coming from a distance to the hero of the poem at the door of whose residence they stand and desire the door-keeper to inform his master of their arrival, ஓர்பிரபந்தம். (See பிரபந்தம்.) 2. An outside door, புறவாயில். (நீதிநெறி.) 3. The last letter of a word or verse, ஈற்றெழுத்து. (*p.*)

கடைநிலைத்தீபகம், *s.* A word at the end of a sentence understood in other parts—one of the தீபகம்.

கடைநிலையளபெடை, *s.* The rhyme in which the last letter of each verse is lengthened.

கடைநிலையெழுத்து, *s.* [*in grammar.*] Letters proper to end a word, இறுதிநிலை.

கடைபோக, *inf.* To end, terminate, conclude, முடிய. 2. To be fulfilled, நிறைவேற.

கடைபோட—கடைவைக்க, *inf.* To set up a shop, open a shop.

கடைப்பட, *inf.* To be inferior, below mediocrity, to be last in quality or estimation, degree or order, இழிவாக. 2. To be practicable, capable of completion, நிறைவேற.

என்னாலிதுகடைப்படாது. This will not be completed by me.

கடைப்பாடு, *s.* Determination, தீர்மானிப்பு. 2. Inferiority, baseness, இழிவு.

கடைப்பந்தி, *s.* The lower end of a dining table or of a row of guests, கடைசிப்பந்தி.

கடைப்பிடி, *s.* Bearing in mind, remembering, ஞாபகம். 2. Indelible impressions of gratitude for benefits received, of duties to be performed, of the importance of virtue and religion, மறவாமை. 3. Certainty, ascertainment, established truth, தேற்றம். 4. Firm belief in the essentials of religion serving as the hope and support of the mind in reference to a future state, the last grasp of the soul, உறுதி. 5. Firm determination, firm resolve, either for good or evil, கருமமுடிக்குந்துணிவு. 6. Doctrines, truth firmly believed as necessary to salvation, உறுதியானகொள்கை.

கடைப்பிடிக்க, *inf.* To ascertain clearly, to know certainly, தெளிய. 2. To determine, resolve firmly, be decided in purpose either in a good or evil course, துணிய. 3. To remember, to bear in mind benefits, to be grateful, &c., to be deeply sensible of one's obligations for favor received, மறவாமலிருக்க. 4. To have an abiding sense of the importance of virtue and religion, சன்மார்க்கத்திலுறுதியாயிருக்க. 5. To have an unwavering faith in the essentials of religion, to embrace or take firm hold of religious instructions, &c., தேவபத்தியிலுறுதியாயிருக்க. 6. To grasp, resort to—as the soul for its last refuge, பற்ற. 7. To provide, be provident, be economical, வீண்செலவுசெய்யாதுவைக்க. (*p.*)

கதவிலரேறசார்ந்தார்வண்ணக்கடைப்பிடியாதார். Unkind are they who are forgetful of the situation of their friends. (காரிகையுரை.)

மற்றநன்கள்ளங்கடைப்பிடித்தனன்று. It is important to have an abiding sense of the wiles of Yama.

வாழ்க்கைக்குவேண்டும்பொருளறிந்துகடைப்பிடித்தலும். Knowing and duly providing all things necessary for her household—(குறளுரை.)

நன்மைகடைப்பிடி. Persevere in good works. (ஔவை.)

கடைப்பிறப்பு, *s.* The meanest species of birth in any class of beings, இழிந்தபிறப்பு.

கடைப்புணர்முரண்—கடைமுரண், *s.* A species of rhyme when the last foot of every line is of opposite meaning, ஓர்தொடை.

கடைப்புணர்வு—கடைப்பூட்டு, *s.* [*in jewelry.*] Clasp, hasp, அணியின்கடைப்புணர்வு.

கடைப்புத்தி, *s.* [*prov.*] Stupidity, இழிந்தபுத்தி. 2. A piece of folly, பின்புத்தி.

கடைப்போக்கு, *s.* The flood-gate of a tank.

கடைமடக்கு, *s.* [*in rhetoric.*] Continued recurrence of the same words at the end of each line through a stanza, but with different meanings, சொல்லணியிலொன்று. See மடக்கு.

கடைமுறை, *s.* The last time, eventually, கடைசிமுறை. (நீதிநெறி. 48.)

கடைமோனை—கடையாகுமோனை, *s.* (See மோனை.) A rhyme when the first letter of the last foot of every line is the same, ஓர்தொடை. (*p.*)

கடையயல், *s.* [*in grammar.*] The penultimate, ஈற்றயல். (*p.*)

கடையர், *s.* (*fem.* கடைசியர்—கடைச்சியர்.) Laboring classes in agricultural districts, மருதநிலமாக்கள். (*p.*)

கடையழிய, *inf.* To be afflicted with a painful and lingering disease, to suffer extremely, வருந்த. 2. To be distressed with poverty, வறுமையுற. 3. To degenerate, கேடுற.

கடையனல் *s.* The fire by which the world will finally be consumed.

கடையன், *s.* A man of the lowest rank, இழிந்தோன்.

கடையாகெதுகை, *s.* A rhyme, ஓர்தொடை. (*p.*)

கடையாட்டம், *s.* [*prov.*] Lingering in disease, excessive suffering from disease, வருத்தம். 2. Vexation, teasing, imminence, trouble, annoyance, உலைவு, *lit.* mean work.

கடையாட்டப்பட, *inf.* To drudge, to be employed in mean work. 2. To linger in disease, suffer exceedingly, வருந்த. 3. To be vexed, harassed, &c.—as a nurse by troublesome children, உலைய.

கடையாணி, *s.* A linch-pin, அச்சாணி. 2. A peg or pin used to keep a tenon in a mortise, or for any similar purpose, பூட்டாணி.

கடையாந்தரம்—கடையிறு, *s.* [*vul.*] The very last, the extremity, &c.—as கடைசி.

கடையாயார், *s.* Persons of the lowest rank, இழிந்தோர்.

கடையால், *s.* Stern of a vessel, தோணியின்பிற்புறம். See கடைசால், usage.

கடையிணைமுரண், *s.* A rhyme when the last two feet of a line are of opposite meanings, ஓர்தொடை. (*p.*)

கடையிணைமோனை, *s.* A consonance of the first letters in the last two feet of each line in a verse. (*p.*)

கடையீடு, *s.* Land of the poorest quality, கடைத்தரமானநிலம்.

கடையுணி, s. [prov.] A mean fellow who eats what he can beg or pick up—a worthless being, இழிஞோன்.

கடையுண்ண, inf. [prov.] To linger in disease, வருத்தப்பட. 2. To be stinted or weak in growth—as a child, சுக்க. 3. To be neglected, abused, &c.—as a book, a utensil, &c.; in this meaning it is a term of displeasure, இகழப்பட.

கடையுவா, s. The full moon, பௌர்ணமை. (p.)

கடையெழுஞ்சனி, s. The twelfth asterism in which Saturn is considered malignant in his influence, உத்திரம். See சனி.

கடைவழி, s. Final salvation, the last path.

கடைவழிக்குதவும். It will avail for the salvation of the soul.

காதற்றஊசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. Be assured that even an eyeless needle will not accompany you in that sad hour.

கடைவளர, inf. To be enlarged—said of the genitals of a cow, &c., before yeaning, ஈனுங்காலத்திற்குறிவீங்க.

கடைவள்ளல், s. The last of the third class of liberal men—he who bestows charity from motives of ostentation, கேட்டபின்கொடுப்போன்.

கடைவாய், s. The corner or extremities of the mouth, வாயின்கடை.

கடைவாய்நக்கி, s. A great miser, உலுத்தன், lit. he who licks the corners of his mouth.

கடைவாய்ப்பல், s. The double teeth, the grinders, the back teeth.

கடைவாய்வழிய, inf. To drivel at the corners of the mouth—as old people or persons asleep, வாய்நீரொழுக.

கடைவிரிக்க, inf. To spread out goods for sale in a shop or market, கடைதிறக்க.

கடைவீதி, s. A market-street.

கடைவைக்க, inf. To place goods for sale in a shop or bazaar. 2. To open a shop on an auspicious day after the new-year, கடைதிறக்க.

பலசரக்குக்கடை, s. A shop where commodities of various kinds are sold.

மளிகைக்கடை, s. A wholesale ware-house.

காசுக்கடை, s. An exchange.

அடிக்கடை, s. The first shop in a market-street.

மருந்துக்கடை, s. An apothecary's shop.

கசாய்க்கடை, s. (Tel.) A butcher's shop.

சாராயக்கடை, s. An arrack shop.

கீரைக்கடை, s. A green-grocer's shop.

சவுளிக்கடை, s. A cloth-merchant's shop.

விரற்கடை, s. The breadth of a finger.

மீன்கடை, s. Fish-market.

கடை, கிறேன், ந்தேன், வேன், ய, v. a. To churn, தயிர்கடைய. 2. To turn in a lathe, மரமுதலியனகடைய. 3. To form moulds on a wheel—as a brazier, ஈய, செம்புமுதலியவைகடைய. 4. To rub two sticks together till they ignite, தீக்கடைய. 5. To mash yams or other vegetable, &c., to a pulp with the bowl of a ladle, பருப்புமுதலியனகடைய.

கடைந்தமோரிலேவெண்ணெயெடுக்கப்பார்க்கிறான். He is trying to get butter from whey; i. e. he is too exacting, rigorous.

கடைந்தவெண்ணெய்மோர்புகா. Butter produced by churning will not again be diffused through the milk.

கடைகோல், s. Two sticks for kindling fire by attrition—commonly தீக்கடைகோல்.

கடைந்தகுமிழ், s. A turned knob.

கடைந்தெடுத்தநெருப்பு, s. Fire produced by attrition.

கடைமரம், s. A lathe, கடைகின்றமரம்.

கீரைகடைய, inf. To mash pot-herbs into a pulp.

தயிர்கடைய, inf. To churn curds to produce butter.

கடைச்சல்—கடைதல்—கடைவு, v. noun. Churning curds, தயிர்கடைகை. 2. Turning on a lathe on the brazier's wheel, மரக்கடைகை. 3. Turning sticks to produce fire, தீக்கடைகை.

கடைச்சலுளி, s. A turner's chisel.

கடைச்சல்பிடிக்க, inf. To turn in a lathe.

கடைச்சல்மரம், s. A turner's lathe.

கடைச்சல்வேலை, s. Turning—the work of a turner.

கடைச்சற்காரன், s. A turner.

கடைக்கணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To look side-wise, to glance, கடைக்கண்ணாற்நோக்க. 2. To cast a favorable, propitious, or benignant look, to countenance, favor, கிருபைசெய்ய.

கடைக்கணியார். They will not look on us kindly. (வாணன்.)

கடைக்குளம், s. The twenty-first lunar mansion, உத்திராடம். (p.)

கடைசி, s. [a prolongation of கடை.] End, termination, conclusion, extremity, முடிவு.

கடைசிமுறை, s. The last time.

கடைசியாய், adv. For the last time, lastly.

மாதக்கடைசி—மாதத்திற்கடைசி, s. The end of the month.

எருங்கடைசியில், adv. Lastly, last of all.

கடையம், s. The dance of Indranee now continued in imitation, இந்திராணிகூத்து (p.) 2. A bracelet, கடகம்.

கடையர், s. The caste of lime burners, &c., சுண்ணாம்புசுடுவோர்; [ex கடை.]

கடையால், s. A bamboo in which milk, water, &c., are carried by cow-herds to the fields for drinking, நீர்கலபாத்திரம்.

*கடோரம், s. Hardness, solidity, கடினம். 2. Severity, cruelty, கொடுமை. Wils. p. 182. Kadora.

கடோரன், s. A cruel, hard man, a tyrant.

*கட்கம், s. A sword, வாள். Wils. p. 269. Khadga.

கட்கத்தம்பம், s. Stopping the power of the sword—one of the sixty-four கலைஞானம்.

*கட்சம், s. A magical treatise, தந்திரவிதி. 2. A kind of arsenic, சங்கபாஷாணம். 3. An astrological treatise, சவக்கிரகட்சம்.

திருமூலகட்சம், s. A magical treatise composed by திருமூலர்.

கட்சி, s. Desert, jungle, காடு. 2. A bird's nest, பறவைக்கூடு. 3. A bed or other sleeping place, மக்கட்படுக்கை. 4. Way, வழி. (சது.) (p.) 5. A party, a faction, side, பக்கம்.

அந்தக்கட்சியில்நான்சேரவில்லை. I am not of that faction.

கட்சியார், s. People of a party or faction, கட்சிக்காரர்.

கட்டங்கம், s. A kind of club or staff used as a weapon, தண்டம். 2. A similar staff with a shell fastened on the top of it, carried by religious mendicants, devotees of Siva, மாத்திரைக்கோல். (p.)

கட்டங்கத்தேர்த்தபிரான். Siva who is armed with a club. (திருவிளை.)

கட்டபாரை, s. (Tel.) A crow-bar. See கடப்பாரை.

*கட்டம்—கஷ்டம், s. Hardship, laboriousness, difficulty, hard work, பாடு. 2. Bodily pain or uneasiness, வருத்தம். 3. Affliction, distress, துன்பம். Wils. p. 205. Kashda. 4. Ordure, human excrement, dung of dogs, cats, &c., மலம்.

கஷ்டகாலம், s. Hard times.

கஷ்டப்பட, inf. To toil, to work hard.

கட்டார்ச்சிதம்—கஷ்டார்ஜ்ஜிதம், s. Property obtained by one's own labor, வருந்தித்தேடியபொருள்.

கட்டம், s. A forest, a wood, jungle, காடு. 2. The chin, the beard, தாடி.

கட்டல், v. noun. Stealing, plundering, திருடல். 2. Plucking off, pulling up, பிடுங்கல்.

களைகட்டபயிர். Weeded corn.

கட்டளை, s. An order, a command, law, precept, direction, appointment, institute, denunciation, injunction, warrant, charge, கற்பனை. 2. A mould for making bricks, செங்கலச்சு. 3. A rule or measure temporarily constructed for cutting ola leaves, &c., so as to make them of the right width, அளவோலை. (c.) 4. (p.) Balance, scales, நிறைபறிகருவி. 5. Libra of the zodiac, துலாவிராசி. 6. Weight, நிறை. 7. A touch-stone, உரைகல். (பெரிய.) 8. Similitude, likeness, simile, உவமை. 9. Regularity, order, rule, ஒழுங்கு. 10. Restraint, restriction, தடை. 11. The matrix in general in which any thing is cast, or receives its form, a model, a symbol, a cast, a form, உருவங்கள்வார்க்குங்கருவி.

தெரிவைமாருக்கோர்கட்டளையெனச்செய்ததிருவே. Oh! Lukshmi, who art created as the model of women.

கட்டளைகேட்க, *inf.* To obey an order, to execute a commission, to listen or to attend to the issuing of orders.

கட்டளைகொடுக்க, *inf.* To give permission, to grant privileges, warrant.

கட்டளைக்கல், *s.* A touchstone, உரைகல். 2. Weight, நிறைகல்.

கட்டளைக்குரு—கட்டளைச்சுவாமி, *s.* The principal priest for the time being—so used by the Romanists.

கட்டளைசொல்ல, *inf.* To give or publish an order, to publish a notice.

கட்டளைச்சட்டம், *s.* Regulations, enactments, edicts, statutes.

கட்டளைத்தம்பிரான், *s.* One of a religious order who acts as an overseer or burser in a temple, or charitable institution, receiving the rents and dues, making disbursements and seeing that the services are properly conducted.

வாரக்கட்டளைத்தம்பிரான், *s.* An overseer of a religious order who is gratuitously fed by the community, receiving food from the same family every seventh day.

கட்டளைபண்ண, *inf.* To command, direct, order.

கட்டளைபிடித்துவார, *inf.* [*prov.*] To cut ola by a rule.

கட்டளைப்படிவர, *inf.* To come regularly. 2. To come according to order.

கட்டளைமீற, *inf.* To break or violate an order.

கட்டளையிட, *inf.* To order, command, direct, decree, prescribe, charge. 2. To grant, bestow. 3. To pass a law or edict, to utter a decision.

நமக்கீசனிட்டகட்டளையிதுதான். This is just what God has allowed us.

வாரக்கட்டளைமடம், *s.* An hotel where boiled rice is distributed weekly.

கட்டாஞ்சி, *s.* A tree, ஓர்மரம்.

கட்டாணி, *s.* An avaricious person, உலோபி. 2. An expert man or woman, சார்த்தானி. 3. A strong athletic person, பலசாலி.

கட்டாந்தரை, *s.* Dry land, வெட்டாந்தரை.

கட்டாம்பாரை, *s.* A kind of fish, ஓர்மீன்.

கட்டாயம், *s.* [*vul.*] Compulsion, constraint, force, பலாத்காரம்.

கட்டாயம்பண்ண, *inf.* To compel, force, coerce.

கட்டாரி, *s.* (*Tel.*) A cross-hilted dagger, ஓராயுதம்.

கட்டாரிக்குத்துணி, *s.* A kind of silk with black stripes in imitation of daggers, ஓர்பட்டுச்சீலை.

கட்டாரிக்கையொலி, *s.* [*prov.*] A man's silk cloth of the above description, ஓர்பட்டுச்சீலை.

கட்டி, *s.* A clod, a lump, a clot, a consolidation, grain, a globule, a crystalization, a concretion, congelation, formation, மண்கட்டிமுதலியன. 2. The fœtus, கருப்பிண்டம். 3. A hard boil, பரு. 4. Sugar-candy, சருக்கரைக்கட்டி. 5. Jaggary, coarse sugar, கருப்புக்கட்டி. 6. A bird, ஓர்புள். 7. (*p.*) Inward pleasure, அகமகிழ்ச்சி.

கட்டிபடுதல், *v. noun.* Becoming lumpy, clotty—as milk, gruel, &c., as flour in some food through neglect—being broken in clods—as land in ploughing, &c.

கட்டிமுட்டி, *s.* Clot and loose mould in newly ploughed clayey soil; clots, looseness in stools, large and small loose bundles in a bag, &c.

கட்டிவிழுதல், *v. noun.* Suffering abortion, கருவழிந்துவிழுதல்.

கட்டியம், *s.* Panegyric chanted or sung before kings, gods, &c., அரசர்முதலியோரைக்குறித்துச்சொல்லும்புகழ்.

கட்டியக்காரன், *s.* A panegyrist, a herald, கட்டியங்கூறுவோன்.

கட்டியங்கூற—கட்டியஞ்சொல்ல, *inf.* To recite a panegyric, புகழ்கூற.

கட்டில், *s.* A bedstead, a couch, a sofa, மஞ்சம் or மெத்தை.

கட்டிற்றுப்பட்டி, *s.* A sheet.

கட்டு, *s.* A tie, a bandage, a fastening, a ligature, a knot, கட்டியகட்டு. 2. A boil, abscess, tumor, imposthume, கட்டி. 3. Fabrication, forgery, invention, counterfeiting, contrivance, கட்டுக்கதை. 4. Restraint, confinement, limitation, thraldom, ஆணை. 5. Plot, compact, conspiracy, contract, பந்தக்கட்டு. 6. A spell, enchantment, magical power or influence exerted on a person or thing, divination, தடைக்கட்டு. 7. A building, erection, structure, organization, frame of the animal system, யாக்கை. 8. Guard, sentry, watch, patrol, காவல். 9. A bundle, a packet, a pack, a bale, a faggot, a bunch, மூட்டை. 10. Divination, conjuration in the uttering of oracles—as giving information of lost property, foretelling events, giving directions, &c., by the aid of a demon, குறி. 11. Certainty, infallibility in statements, &c., உறுதி. 12. A dam, ridge, causeway, வரம்பு. 13. Positive injunctions, established rules, duties, obligations, &c.—as of caste, religion, connexions, &c., கட்டுப்பாடு. 14. (*p.*) Abundance, plenty, மிகுதி. 15. Fortification, protection, defence, அரண். 16. The side of a mountain, மலைப்பக்கம்.

எல்லாருமொருகட்டாயிருக்கிறார்கள். They have all plotted together.

பெண்சாதிகாற்கட்டுப்பிள்ளைவாய்க்கட்டு. A wife shackles the feet, and a child stops the mouth; i.e. a married man with a family can neither go, nor eat as he pleases.

அவனென்கட்டுக்குள்ளேநிற்கிறஆளல்ல. He is not subject to my influence—he does not listen to my advice, &c.

கட்டழகு, *s.* Great beauty, பேரழகு. 2. Ornament, அலங்காரம்.

கட்டழல், *s.* A vehement fire.

கட்டாடி, *s.* [*prov.*] A person temporarily possessed for the purpose of uttering oracles or கட்டு, a species of divination inferior to சன்னதம், குறிசொல்வோன். 2. A washerman in respect, considered as a diviner; many of this caste having been celebrated in this character, வண்ணான். 3. A chief of the washer tribe, வண்ணார்தலைவன்.

கட்டாண்மை, *s.* Bravery, superior heroism, intrepidity, பேராண்மை.

கட்டிரதம்—கட்டுத்தேர், *s.* A car constructed for a particular occasion made anew every year.

கட்டிளமை, *s.* Tender age, being very young.

கட்டிளமையோன், *s.* A young lad.

கட்டுக்கடக்க, *inf.* To exceed the limits, banks, &c.; violate established rules, positive injunctions, &c.

கட்டுக்கடங்காதது, *appel. n.* That which is unrestrainable, unmanageable, ungovernable.

கட்டுக்கட்ட, *s.* To tie up a pack, &c., மூட்டைகட்ட. 2. To fabricate, invent a fiction, a slander, பொய்க்கதைகட்ட. 3. To tie cloths to a boil in applying medicine, பருவுக்குமருந்துகட்ட.

கட்டுக்கதை—கட்டுவிசேஷம், *s.* A fable, a fiction, mythological tales.

கட்டுக்கரப்பான், *s.* Eruption on a child.

கட்டுக்கலியாணம், *s* [*prov*] A wedding, marriage ceremony, &c., festival—from the bridegroom's tying the marriage symbol on the bride's neck.

கட்டுக்கழுத்தி, *s.* A married woman, she who wears the தாலி, மங்கலமங்கை.

கட்டுக்காரன், *s* [*prov.*] (*fem.* கட்டுக்காரி.) A diviner, a conjurer, குறிசொல்வோன்.

கட்டுக்காவல், *s.* A very strict guard, close custody—applied to the protection of girls arrived at the age of puberty, &c., great care, great strictness, கட்டானகாவல்.

கட்டுங்காவலுமாயிருக்க, *inf.* To be in close confinement.

கட்டுக்கிடை—கட்டுக்கிடையன், *s.* Cloth or other goods lying long unsold, நாட்பட்டசரக்கு.

கட்டுக்குத்தகை, *s.* A contract or lease of land for many years together, a contract for a whole dhoney without reference to the number of trips, the weight of the cargo, &c.

கட்டுக்கூட்டு, *s.* [*prov.*] A fabrication, a forgery, a fiction, a fable, கட்டுக்கதை. 2. An intertexture of letters, a cipher, மாற்றியெழுதப்பட்டது.

கட்டுக்கேட்க, *inf.* To consult a diviner.

கட்டுக்கொடி, *s.* A tether, a rope stretched along the ground to which cattle, goats, &c., are tied by the leg in a row at night, ஆடுமாடுகட்டுங்கயிறு.

கட்டுக்கொதித்தல், *v. noun.* Throbbing, &c.—as a boil.

கட்டுக்கோப்பு, *s.* A building, fabric. 2. An exaggeration.

கட்டுச்சூலை, *s.* A disease, the node, சூலைக்கட்டு.

கட்டுச்சொல், *s.* A falsehood, an untruth.

கட்டுச்சொல்ல, *inf.* To divine, conjure.

கட்டுச்சோறு—கட்டுசோறு, *s.* Boiled rice, &c., tied up for a journey, ஆற்றுணா.

கட்டுடைக்க, *inf.* [*prov.*] To be broken—as a blister, boil, &c.

கட்டுடைத்தல்—கட்டுமுறித்தல், *v. noun.* Making a large breach—as a river in its banks, the sea in the shore—as in the breaking up at the universal deluge.

கட்டுண்ணல், *v. noun.* Being bound, &c., கட்டப்படுதல்.

கட்டுண்ணி, *s.* One who has been frequently bound.

கட்டுத்தளர, *inf.* To grow slack—as a tie; to be loose—as a bale, &c.

கட்டுத்தறி, *s.* A post to which an elephant may be tied, யானைமுதலியன கட்டுங்கம்பம்.

கட்டுத்திரவியம், *s.* [*prov.*] Treasure bound up in one's cloth, &c., பொற்கிழி.

கட்டுத்திரள, *inf.* [*prop.* கட்டிதிரள.] To form or swell—as a tumor.

கட்டுத்தையல், *s.* A kind of firm sewing.

கட்டுத்தோணி—கட்டுப்படகு, *s.* A dhoney or vessel of which the seams are sewed together.

கட்டுப்பட, *inf.* To yield to, to submit, be influenced by, be brought under the power of, be overcome by, கட்டுக்குள்ளடங்க. 2. To be bound by spells or otherwise restrained, மந்திரமுதலியவற்றாற்கட்டுப்பட. 3. To be constipated—as the system; to be obstructed—as waters, as humors in the system, blood, urine, menstruation, &c., தடைப்பட.

ஒருமயிரினாலேகட்டுப்படுவான். He may be bound by a single hair; i.e. he will be easily persuaded or prevailed upon.

கட்டுப்படுத்த, *inf.* To restrain, confine, subdue, subordinate, control, restrict, subject, கட்டுக்குளடக்க.

கட்டுப்பண்ண, *inf.* To stop, prevent.

கட்டுப்பாடு, *s.* Mutual obedience or harmony—as among relations, பந்துக்கட்டு. 2. Self-restraint, thraldom, கட்டுப்படுகை. 3. League, band, conspiracy, faction, confederacy, கட்சி. 4. Compact, social bond or union, relative, national, religious or other tie, bond, &c., இணக்கம்.

கட்டுப்பாடுபண்ண, *inf.* To bring under, or keep in order.

கட்டுப்பானை, *s.* A float or raft constructed by joining a number of earthen pots together.

கட்டுப்பிடித்துப்பார்க்க, *inf.* To ascertain the origin and cure of a disease by a magical exercise—a sort of divination.

கட்டுப்பூட்டு, *s.* [*prov.*] Ornaments for the body, jewels, ஆபரணம்.

கட்டுப்பெட்டி, *s.* [*vul.*] A stiff basket braided with ratan, olas, &c., fastened by tying, for holding clothes, &c.

கட்டுப்பேச்சு—கட்டுவார்த்தை—கட்டுவிசேஷம், *s.* A fabricated story, fiction, விகடகதை.

கட்டுமட்டு, *s.* [*prov.*] Sparingness, carefulness, providentness, அளவாய்ச்செலவிடுகை. 2. Unanimity, oneness of feeling, ஒத்ததன்மை. 3. Taciturnity, அடக்கம்.

கட்டுமட்டாய்ப்பேச, *inf.* To speak with ability.

கட்டுமரம், *s.* A float or raft, a catamaran, மிதவை.

கட்டுமாமரம், *s.* An engrafted large kind of mango tree, ஓர்வகைமாமரம்—also called ஒட்டுமாமரம்.

கட்டுமாம்பழம், *s.* A mango fruit which, when it matures, is protected with a case.

எட்டிமேலேகட்டுமாம்பழமுண்டாமோ. Will the bitter poisonous எட்டி tree produce mangos?

கட்டுமுகனை, *s.* [*prov.*] Authority, custody, trust, அதிகாரம். 2. Management, direction, administration, supervision, superintendence, மேல்விசாரணை. 3. Economy, frugality, husbandry, சிக்கனம். 4. Strictness, rigor, restraint, precision, limitation, restriction, check, confinement, constraint, கண்டிப்பு. 5. Exclusion, debarring, தடை.

கட்டுரை, *s.* An avowal, a solemn declaration, undoubted truth, infallible expression, உறுதிச்சொல். 2. A pithy or sententious expression, a proverb, பழமொழி. 3. Metaphorical language, magnifying or depreciating by figure of speech, புனைந்துரை.

கட்டுரையன்றுபட்டாங்கே. This is not an exaggeration, but the plain truth. (பிரபுலிங்.)

கட்டுவடம், *s.* A necklace, மணிமாலை.

கட்டுவர்க்கம், *s.* Clothes, all sorts of wearing apparel, உடை.

கட்டுவாக்கியம், *s.* Puns, quibbles, a conundrum.

கட்டுவாங்கம், *s.* A club, &c., கடடங்கம்.

கட்டுவிட, *inf.* To be loosened, untied, கட்டவிழ. 2. To be broken, கட்டற. 3. To loosen—as the joints and muscles at death, உடற்பொருத்தவிட. 4. To be reduced, weakened—as the body, பலவீனப்பட.

கட்டுவிட்டுப்பாய, *inf.* To burst out and flow—as water by making a breach in an embankment.

கட்டுவேலை, *s.* A fabric, a structure, building.

கட்டோசை, *s.* A tremendous noise, a loud report, பேரொலி.

கட்டோடே, *adv.* [*vul.*] Wholly, entirely—used with words implying rejection, destruction, &c., or with negatives.

கட்டோடேபாழ்ந்துபோயிற்று. It is utterly ruined.

என்னிடத்திலேகட்டோடேயில்லை. I have none at all.

கட்டோடேதள்ள, *inf.* To reject utterly.

நடுக்கட்டு, *s.* A girdle. 2. The middle building of a house.

சாதிக்கட்டு, *s.* The customs, duties, obligations, &c., of caste.

சமயக்கட்டு, *s.* Religious bonds, obligations.

சரீரக்கட்டு, *s.* A compact body, firm constitution.

சரீரக்கட்டானவன், *s.* One with a strong constitution.

நீர்க்கட்டு, *s.* A stoppage of urine, strangury.

மலக்கட்டு, *s.* Constipation, costiveness.

மலக்கட்டுச்சன்னி, *s.* A fit of apoplexy causing constipation.

முறைக்கட்டு, *s.* [*prov.*] Marrying a girl within the degrees of consanguinity.

உட்கட்டு, *s.* A woman's necklace.

பின்கட்டு, *s.* The back building of a house. 2. Tackling the arms together behind the back.

முன்கட்டு, *s.* The foremost portion of a house containing two or more ranges one behind the other.

கட்டு, கிறேன், கட்டினேன், வேன், கட்ட, *v. a.* To tie, bind, gird, confine, link, chain, hamper, trammel, shackle, pinion, fasten, brace, pack, put on clothes, to wear, பிணிக்க. 2. To build, construct, frame, erect, fix, arrange, வீடுமுதலியகட்ட. 3. To hug, embrace, தழுவ. 4. To marry, விவாகஞ்செய்ய. 5. To bind by spells, magic, &c., to conjure, தடைகட்ட. 6. To fabricate, contrive, invent, கதைகட்ட. 7. To harden, condense, consolidate mercury, vermilion, &c., by the admixture of certain ingredients, சரக்குக்கட்ட. 8. To subordinate, subdue, subject, அடக்க. 9. To suborn, to bribe, பரிதானத்தாற்கட்ட. 10. *v. n.* [*with the impersonal terminations.*] To harden, consolidate, form as concretions, to concrete, clot, congeal, இறுக. 11. To become bound or confined, constricted—as the throat; to overspread as clouds, to collect, மூட. 12. To form as a boil, tumor, &c., to imposthumate, to gather, கட்டிதிரள.

அடிபட்டஇடத்திலேயிரத்தங்கட்டியிருக்கிறது.... The blood is clotted in the part which is bruised.

இப்படியிட்டேற்றம்பேசினுனக்குத்தொண்டையிலேகட்டும். If you persist in thus traducing me, you will have a boil in your throat; i.e. you will be seriously distressed—a curse.

கட்டாக்காலி, *s.* An ox or cow suffered to run wild, or not folded by night.

கட்டாணி, *s.* A fastening for a female ear-ring, கடைப்பூட்டாணி.

கட்டிக்காக்க, *inf.* To preserve, guard, to protect.

கட்டிக்கொடுக்க, *inf.* To give a daughter in marriage. 2. To make, build, construct, &c., and give one.

கட்டிக்கொள்ள, *inf.* To take in marriage. 2. To hug, to embrace. 3. To contract, to lay up, to accumulate as moral deeds, virtue or vice, for future retribution. 4. To secure as an object, to turn a thing or person to one's own account, to conciliate favor, to bring within one's own power or influence. 5. To suborn, to bribe. 6. To make up a difference, a quarrel, &c., to become reconciled, to settle amicably, to compromise.

தேசத்தைக்கட்டிக்கொள்ள. To conquer a country.

புண்ணியத்தைக்கட்டிக்கொள்ள. To do a good action.

பாவத்தைக்கட்டிக்கொள்ள. To contract guilt, to commit a sin.

மாங்காய்ப்புளிதொண்டையைக்கட்டிக்கொண்டது. The acid of the mango has caused a constriction in my throat.

என்னபலனைக்கட்டிக்கொண்டாய். What hast thou obtained?

கட்டிப்பிடிக்க, *inf.* To throw the arms round a person, to hug, to embrace, to grasp, to seize.

கட்டிப்புகுந்தவள், *s.* A widow that has married again.

கட்டியடிக்க, *inf.* To tie and flog, whip, &c.,

கட்டுகரை, *s.* A mole, a pier to defend shipping in a harbor.

கட்டுசரக்கு, *s.* Mercury, &c., consolidated.

கட்டுத்தாலிகட்ட, *inf.* To marry a widow. 2. To take a woman to wife—this may be done, if the man has no child by his first wife, with her consent, who acknowledges its validity by tying the marriage symbol round the neck of the new bride.

தன்னைக்கட்ட, *inf.* To protect one's self by the use of magical incantations. 2. To have sufficient for one's support. 3. To be economical, frugal, to live within one's income.

கவிகட்ட, *inf.* To compose a verse.

கட்டு, *v. noun.* Binding, bonds, linking, connecting, கட்டுகை. 2. Hardening, consolidating, &c.

இலிங்கக்கட்டு, *s.* Consolidated vermilion.

தாளகக்கட்டு — அரிதாரக்கட்டு, *s.* Consolidated orpiment.

இரசக்கட்டு, *s.* Consolidated mercury.

பாஷாணக்கட்டு, *s.* White arsenic.

நவச்சாரக்கட்டு, *s.* Consolidated sal ammoniac.

கட்டுக்காடை, *s.* A water-bird that preys on fish, ஓர்பறவை.

கட்டுக்கொடி, *s.* A creeper, Smilax pseudochina, *L.*

பெருங்கட்டுக்கொடி, *s.* Smilax tomentosa. (*Nob.*)

கட்டுவம்—கட்டுவன், *s.* A ring for the ring-toe of women, மாதர்காலணியிலொன்று.

கட்டை, *s.* A block, a log, a small stump, a slab, a clump, குற்றி. 2. A post or stake to fasten an animal to, கடாவுமுளை. 3. Fire-wood, விறகு. 4. A short low dwarfish thing, thing grown short by use, worn off—as a pen, &c., தேய்ந்தது. 5. A lifeless body, உடல். 6. Defect, imperfection, inferiority, குறைவு. 7. The refuse or residuum of கேழ்வரகு, தினை and சாயவேர் root after pounding and sifting, திப்பி. 8. Roughness of the beard after shaving, மயிர்க்கட்டை.

இந்தச்சீலையகலக்கட்டை. This cloth is narrow.

இதுமுழக்கட்டையானசேலை. This cloth is deficient in length and breadth.

அந்தமரத்திற்கிந்தமரங்கட்டை. This piece of timber is shorter than that.

கல்வியிலவன்கட்டை. [*prov.*] He is deficient in learning.

கட்டைகடாவ, *inf.* To fasten a splinter or pointed stick, &c.

கட்டைக்காலி, *s.* [*prov. vul.*] A bear, கரடி—as short-legged—and sometimes applied to women, cows, &c.

கட்டைக்குரல், *s.* [*prov.*] A weak voice, கம்மினகுரல்.

கட்டைக்குருத்து, *s.* [*prov.*] The last tender leaf of a plantain which envelopes the sheath or blossom and shoots out a little before it.

கட்டைநெருப்பு, *s.* Coal fire.

கட்டைப்புத்தி, *s.* Shallow wit, weak intellect, stupidity, மடப்புத்தி.

கட்டையடிக்க, *inf.* To pass a stick through a plucked jack-fruit to ripen it, ஆப்படிக்க. 2. To hurt the foot against a stump by striking on it, காலிற்கட்டையிடற. 3. To drive a stake into the ground to tie animals to, முளைகடாவ.

கட்டையன், *s.* (*fem.* கட்டைச்சி.) A short person, குறளன்.

கட்டைவாக்கு, *s.* Dimness in a precious stone, இரத்தினத்தின்மங்கலொளி.

கட்டைவிரல், *s.* The thumb or great toe, காலின்பெருவிரல்.

கட்டைவைத்தல், *v. noun.* [*prov.*] Collecting the stones in the hand in the game of கொக்கான். 2. Gaining in the game of singing verses. See ஈற்றெழுத்துக்கவி.

முகக்கட்டை — மோக்கட்டை — முகவாய்க்கட்டை—மோவாய்க்கட்டை, *s.* The chin.

எள்ளுக்கட்டை — எட்கட்டை, *s.* The stubble or stumps of Indian sesamum.

கணகணெனல், *v. noun.* Feeling hot as in fever, or from taking spirituous liquors, or walking; heat of weather, exposure to the sun, &c., அதிகமாய்ச்சுடுகை. 2. Burning fiercely and with a hollow roar, மிகவெரிகை. 3. Sounding as a bell, chiming, &c., sonorous voice, &c., ஒலிக்குறிப்பு.

கணகணவென்றுகாய்கிறது. The fire is too hot.

நெருப்புக்கணகணென்றெரிகிறது. The fire burns fiercely.

அவன்சரீரங்கணகணென்றுசுடுகிறது. He feels hot—as in slight fever, &c.

கணகணப்பு, *v. noun.* Heat of body—as in slight fever or from walking, drinking strong liquor, exposure to the sun, &c., அதிசுரம்.

கணகம், *s.* A body of troops consisting of twenty-seven chariots, twenty-seven elephants, eighty-one horses, and one-hundred-and-thirty-eight footmen, படையிலோர்தொகை.

கணக்கன், *s.* [*prov. vul.*] A kind of flower-tree, சண்பகமரம், Michelia champaca.

கணக்கு, *s.* Number, account, reckoning, calculation, computation, எண். 2. Letters, writing, written accounts, எழுத்து. 3. (*fig.*) Result, consequence, sum, event, முடிவு. 4. Thing, affair, circumstance, காரியம்.

கணக்குவருமளவுங்கிடக்கிறான். The dying man lingers until the destined hour arrives.

இனியிங்கேயிருக்கக்கணக்கில்லை. There is no reason for our remaining here any longer.

அவருக்குமெனக்குங்கணக்குவழக்குத்தீர்ந்தது. All accounts and disputes between him and me are settled.

கொடுக்கல்வாங்கல்கணக்காய். Concerning giving and receiving.

உன்கணக்கைப்பார். Mind your own business.

கணக்கதிகாரம், *s.* Arithmetic, கணக்குநூல்.

கணக்கப்பிள்ளை, *s.* An accountant, a cashier, a burser, a writer, an agent, கணக்கன்.

கணக்கர், *s.* Writers, accountants, arithmeticians, கணக்கெழுதுவோர். 2. Writers as a caste, ஓர்சாதியார்.

கணக்கறுதிபண்ண, *inf.* To complete an account.

கணக்கன், *s.* An accountant, a cashier, a writer, a book-keeper, கணக்கெழுதுவோன். 2. An arithmetician, கணக்கில்வல்லவன். 3. Mercury the planet, புதன்.

கணக்காசாரம், *s.* Keeping accounts, calculation, கணக்குமுறை.

கணக்காயர், *s.* Teachers of the vedas, ஓத்துரைப்போர். 2. The wise, the learned, அறிஞர். 3. Those who teach the shasters, பொருந்தச்சொல்வோர். (*p.*)

கணக்கிட, *inf.* To reckon, compute, calculate, கணக்குப்பார்க்க.

கணக்குக்காட்ட, *inf.* To give or render an account. 2. [*in law.*] To file or present a written account.

கணக்குக்கூட்ட, *inf.* To add, sum up.

கணக்குக்கேட்க, *inf.* To call to an account.

கணக்குச்சமத்த—கணக்கேற்ற, *inf.* To charge to one's account.

கணக்குச்சுருள், *s.* A roll of accounts, &c.

கணக்குச்சொல்ல, *inf.* To give the items of a disbursement in detail.

கணக்குத்தீர்க்க, *inf.* To settle an account.

கணக்குப்பார்க்க, *inf.* To reckon, calculate. 2. To examine accounts, take account.

கணக்குப்பிசக, *inf.* To go, or turn out, wrong—as a calculation.

கணக்குவகை, *s.* The cardinal, arithmetical rules, viz.: 1. தொகை, addition—சங்கலிதம். 2. பிரிவு, division—பாகாரம். 3. பெருக்கு, multiplication—குணனம். 4. கழிவு, subtraction—விவகலிதம்.

கணக்கெழுத, *inf.* To write accounts, figures, &c.

கணக்கொதுக்க, *inf.* To settle an account. 2. (*fig.*) To reduce one to poverty, to ruin one.

அவருடையகணக்கொதுக்கிப்போயிற்று. His accounts are settled. 2. (*fig.*) He is almost ruined; i. e. reduced to poverty, or dead.

கணக்கொப்புவிக்க, *inf.* To give account.

கணக்கோலை, *s.* An ola of accounts. 2. Indented leaves of some palms.

கணக்கோலைவிரிதல், *v. noun.* Shooting out or spreading as palm leaves.

பெருக்குக்கணக்கு, *s.* Multiplication.

கழிப்புக்கணக்கு, *s.* Subtraction.

கணப்பு—கணப்புச்சட்டி, *s.* [*vul.*] A chatty with coals, a chafing-dish, கும்பிடுசட்டி.

*கணம், *s.* A particle, a trifle, சிறுமை. Wils. p. 183. KAN'A. 2. A minute portion of time, a moment, காலநுட்பம். 3. A measure of time equal to thirty கலை or four minutes, ஓர்காலஅளவு. Wils. p. 261. KHAN'A. 4. A company, tribe, class, clan, flock, herd, a series, கூட்டம். 5. A body of troops. (See கணகம்.) Wils. p. 277. GAN'A. 6. Long-pepper, திப்பிலி. 7. A demon, vampire, பிசாசம். 8. [*in astrology.*] Asterisms classed under three heads as indicating human, infernal, and divine interference in their influence on the birth of children, நட்சத்திரங்களாற்குறிக்குமூவகைக்கணம். 9. The retinue of a deity, தேவகணம். 10. One of the ten பொருத்தம், or series of poetry auspicious or the contrary according to the feet of which it is composed. It is modified into eight kinds, ஓர்செய்யுட்பொருத்தம். 11. One of the பொருத்தம் concerning marriage, கணப்பொருத்தம். 12. A star, விண்மீன். (*p.*)

கணந்தோறும். Every moment.

ஒருகணத்திலேவந்துவிடுவேன். I will come in a moment.

குணமென்னுங்குன்றேறிநின்றார் வெகுளிகணமேயுங்காத்தலரிது. The anger of those who have attained to the summit of virtue, though it is ever so transient, is hardly endurable—(குறள்.)

கணநாதர்—கணநாயகர், *s.* The attendants of Siva, கணுநிபர்.

கணபதி, *s.* Ganesa, விநாயகன்.

கணப்பொருத்தம், *s.* One of the அட்டகணம். 2. One of the விவாகப்பொருத்தம்.

கணப்பொழுது, *s.* A moment, சணப்பொழுது

கணமூலம், *s.* The root of long-pepper.

கணமூலி, *s.* The சாணக்கி herb, Ocimum, *L.*

கணுநிபன், *s.* Ganesa, விக்கினேசுரன். 2. Siva, சிவன்.

கணேசன், *s.* Ganesa, son of Siva and Parvati—god of wisdom and remover of obstacles—whence he is invoked in all new undertakings. He is represented as a short man with an elephant's head and large belly, விநாயகன். Wils. p. 278. GAN'ESHA.

விவாககணம்—வதுவைக்கணம், *s.* The correspondence between the constellations under which the bride and bridegroom were born. It is of three kinds, viz.: 1. தேவகணம், when both the bride and bridegroom are born under the following seven constellations, அச்சுவினி, அத்தம், அனுடம், இரேவதி, சோதி, புனர்பூசம் and மிருகசீரிடம். The union of such is regarded auspicious. 2. மனிதகணம், when they are born under the following eleven constellations, உத்திரம், உரோகணி, உத்திரட்டாதி, உத்திராடம், திருவாதிரை, திருவோணம், பரணி, பூசம், பூரட்டாதி, பூரம் and பூராடம். Or even if the former be of the first class, and the latter of the second, or vice versa, it is thought indifferent. 3. இராக்கதகணம், when they are born under the following constellations, அவிட்டம், ஆயிலியம், கார்த்திகை, கேட்டை, சதயம், சித்திரை, மகம், மூலம், and விசாகம், it is thought indifferent; but should the first be of either of the former class and the second of the last class, or vice versa, it is thought inauspicious.

இக்கணம், *s.* This instant, now.

அட்டகணம்—அஷ்டகணம், *s.* [*in poetry.*] The eight kinds of ominous feet with which the invocation of the poem may begin, viz.: (1) நிலம் (ground), நிலக்கணம், a foot consisting of three நிரை; (which see)—as கருவிளங்கனி. (2) நீர் (water), நீர்க்கணம், a foot consisting of one நேர் and two நிரை—as கூவிளங்கனி. (3) மதி (moon), சந்திரகணம், a foot consisting of one நிரை, and two நேர்; (which see)—as புளிமாங்காய். (4) இயமானன் (life, soul), இந்திரகணம், a foot consisting of three நேர்—as தேமாங்காய். A poem in which the invocation commences with any of the above four கணம், is believed by Tamulians to bring good luck to the hero of the poem. (5) சூரியன் (sun), சூரியகணம், a foot consisting of one நேர், one நிரை and one நேர்—as கூவிளங்காய்; this foreshows that the hero of the poem will soon become a coward. (6) தீ (fire), தீக்கணம், a foot consisting of one நிரை, one நேர் and one நிரை—as புளிமாங்கனி; this portends a loss of health. (7) வாயு (air), மாருதகணம், a foot consisting of two நேர் and one நிரை—as தேமாங்கனி; this foretells the loss of wealth. (8) ஆகாயம் (sky, expanse), அந்தரகணம், a foot consisting of two நிரை and one நேர்—as கருவிளங்காய்; this portends shortness of life. The last four கணம், are on the whole considered to be inauspicious. See சீர்.

பதினெண்கணம் *s.* The eighteen classes of dependent supernals, viz.: 1. அமரர், immortals, the inhabitants of Swerga. 2. சித்தர், a kind of gods. 3. அசுரர், demons. 4. தைத்தியர், another kind of demons. 5. கருடர், another kind of gods. 6. கின்னரர், celestial musicians. 7. நிருதர், a kind of demons. 8. கிம்புருடர், a kind of celestial musicians who possess a human face and the body of a bird. 9. காந்தருவர், heavenly choristers. 10. இயக்கர், demigods who minister to gods, attendants particularly on குபேரன். 11. விஞ்சையர், heavenly magicians. 12. பூதர், ghosts, familiar spirits. 13. பிசாசர், devils. 14. அந்தரர், wanderers. 15. முனிவர், sages, hermits, learned men. 16. உரகர், serpents. 17. ஆகாயவாசிகள், those who dwell in the air. 18. போகபூமியர், those who by the practice of virtue in this world have attained a residence in that of the particular principal deity whom they worshipped. They are ever blooming and young; their time of residence, however in this abode of happiness depends upon the merit they had acquired previous to their admission.

நாற்கணம், *s.* The four classes of letters, viz.: 1. உயிர்க்கணம், vowels. 2. வன்கணம், the six hard-sounding letters. 3. மென்கணம், the six soft-sounding letters. 4. இடைக்கணம், the six middle-sounding letters.

கணம், *s.* A circle, வட்டம். 2. A ball, rotundity, திரட்சி 3. One of the eight kinds of diseases in children—a kind of hectic fever, ஓர்நோய். 4. A kind of grass, ஓர்புல். (*p.*)

கணக்காய்ச்சல், *s.* [*impr.* கணைக்காய்ச்சல்.] A kind of lingering fever in children.

*கணவம், *s.* The அரசு tree, Ficus religiosa, *L.*

கணவன், *s.* A husband, கொழுநன். (*p.*)

கணவாய், *s.* [*prov.*] A species of shell-fish, cuttle-fish, ஓர்மீன், Sepia. 2. A narrow pass between hills, a defile, மலைகளுக்கிடைவழி.

கணவாயோடு, *s.* The shell of the above fish.

கணவாய்மை, *s.* A kind of black liquid found in the shell, sometimes used as ink, said to be the blood of the fish.

சாக்குக்கணவாய்—ஊசிக்கணவாய், *s.* Different kinds of கணவாய், Octapis vulgaris.

ஒட்டுக்கணவாய் — சடைக்கணவாய் — ஊமைக்கணவாய் — கோவலக்கணவாய்— கெண்டைக்கணவாய்—கூந்தற்கணவாய், *s.* Different kinds of கணவாய், Octapis vulgaris.

*கணவீரம், *s.* The oleander, both species. See அலரி.

*கணனம், *s.* Numbering, counting, எண்ணல். Wils. p. 277. GAN'ANA.

*கணுதன், *s.* A Muni or saint—as காசிபன். Wils. p. 183. KANADA. (*p.*)

கணுரிடுதல், *v. noun.* [*prov. impr. for* கணீரிடு.] Ringing—as a large bell; pealing sonorous and coarse; clanging—as a large brass vessel, door, &c.; sounding—as the smiting of rocks—as the beating open of a door.

கணி, *s.* A species of flower-tree, the வேங்கைமரம், Pterocarpus marsupium. 2. The name of a caste, &c., ஓர்சாதி. 3. Agricultural districts, மருதநிலம். 4. The profession of singing and dancing, கூத்தாடுந்தொழில். (*p.*)

கணியான், *s.* (*plu.* கணியார்.) One who sings or dances. (*p.*)

கணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To compute, reckon, calculate, number, count, எண்ண. 2. To estimate, conjecture, measure in general, அளவுகுறிக்க. 3 To esteem, honor, regard, மதிக்க. 4. To foretell, predict by astronomy, or astrology, to prognosticate, பலன்கணிக்க.

அவனென்னைக்கணிக்கவில்லை. He does not mind me, he does not esteem me.

கணித்துச்சொல்ல, *inf.* To foretell an eclipse, &c.

கணிப்பு, *v. noun.* Calculation, எண்ணுகை. 2. Esteem, மதிப்பு. 3. Conjecture, estimation, அளவிடுகை.

*கணிகம், *s.* One thousand millions, அறுகோடி.

*கணிகை, *s.* A harlot, a courtesan, வேசி. 2. A dancing girl, தாசி. Wils. p. 278. GAN'IKA.

நாடகக்கணிகை, *s.* An actress, a dancing girl, கூத்தி.

கணிசம், *s.* Estimate, conjecture, rough calculation, guess, மதிப்பு. 2. Honor, dignity, respectability, worth, weight of character, கனம். 3. Weight in the hand, size, bulk, measure, &c., in a limited sense, அளவு. This word is a corruption of கணிதம்.

ஒருபாக்குக்கணிசம்அபின். Opium as much as a betel-nut.

கைக்கணிசத்துக்குத்தூக்கிப்பார்க்க. To weigh in the hand.

கணிசக்காரன், *s.* A respectable person, மதிப்புடையோன்.

கணிசஞ்சொல்ல, *inf.* To give an estimate.

கணிசமறிய, *inf.* To know a person's rank, respectability, property, learning.

கணிசமாய்க்கொண்டுபோக, *inf.* To take away a considerable quantity.

கணிசமாய்க்கொண்டுபோக—கணிசமாய்நடத்த, *inf.* To treat one respectfully.

கணிசம்பார்க்க, *inf.* To estimate, to conjecture. 2. To weigh a thing in the hand. 3. To be scrupulous or tenacious of one's own dignity. 4. To discriminate between persons in respect of caste, rank, &c. 5. To pry into or look after a person's rank, respectability, &c.

கணிச்சி, *s.* An axe for felling timber, a hatchet, கோடரி. 2. A battle-axe, மழு. 3. A chisel, உளி. 4. The battle-axe of Yama, சமனுபதம். 5. (பாரதி.) A knife to cut off the stalk of betel leaves, வெற்றிலைமூக்கரிகத்தி. (*p.*)

*கணிதம், *s.* Numbering, calculation, reckoning, computation, estimation, எண்ணுகை. 2. Arithmetic, mathematics, arithmetical calculations, &c., இலக்கம். 3. Astronomical or astrological calculations, predictions, prognostications, &c., கணிக்கப்பட்டது. 4. Treatise on astronomy and astrology, கணிதநூல். Wils. p. 278. GAN'ITA.

கணிதமிலுயிர்கடோறுங்கலந்துவீற்றிருந்தபெம்மான். God (Siva) who pervades the whole boundless species of animated existence.

இன்றைக்குச்சேவகரைக்கணிதம்பண்ணுவார்கள்... To-day they will muster the troops.

கணிதசாத்திரம், *s.* Astronomy and astrology, சோதிடநூல். 2. Arithmetic, mathematics, கணக்குநூல்.

கணிதசாத்திரி, *s.* Astronomer, mathematician, சோதிடசாத்திரி.

கணிதசிந்தாமணி, *s.* A treatise on astrology, ஓர்நூல்.

கணிததீபிகை, *s.* A treatise on astronomy, ஓர்நூல்.

கணிதம்பார்க்க, *inf.* To make an astrological computation.

கணிதர், *s.* Astrologers, astronomers, சோதிடர். 2. Arithmeticians, mathematicians, கணக்கறிந்தோர். 3. Accountants, cashiers, secretaries, writers, கணக்கெழுதுவோர்.

கணீர்கணீரெனல் — கணீல்கணீலெனல், *v. noun.* Ringing—as a bell, pealing, clanging—as a brazen vessel; resounding—as a rock struck by an axe, &c., ஈரடுக்கொலிக்குறிப்பு.

கணு, *s.* The joints of a bamboo, cane, &c., மூங்கில்முதலியவற்றின்கணு. 2. The knuckles, joints of the spine or the vertebra, as they appear on the back, யாக்கையின்கணு. 3. The joints or joining of a branch or twig to the tree, &c., மரக்கணு. 4. [*in Anat.*] Trochanter tubercle, tuberosity, என்புக்கணு.

கணுக்கால், *s.* The ankle, பரடு.

கணுக்கிரந்தி, *s.* A venereal ulcer or disease in the joints.

கணுவட்டு, *s.* [*prov.*] A very small bunch of plantains, சிறுவாழைக்குலை.

கணை, *s.* Cylindrical or globular form, திரட்சி. 2. An arrow, அம்பு. 3. The eleventh lunar asterism, பூரநாள். 4. Fullness, plenitude, plumpness, நிறைவு. 5. A curved club, வளைதடி. (*p.*)

கணைக்கால், *s.* The leg from the foot to the knee, the shank, the shin, சங்கம்.

கணைதொடுக்க, *inf.* To shoot an arrow.

கணையுலக்கை, *s.* The top of a pestle, that end which is without a ferrule, உலக்கைக்கட்டை.

கணையெழுத்தாணி, *s.* [*prov.*] A blunt, or worn-out stile.

சிவிகைக்கணை, *s.* The curved pole of a palankeen.

கணையம், *s.* A club in general, வளைதடி. 2. A timber placed between two elephants to prevent their fighting, யானைக்கம்பம். 3. A desert, காவற்காடு. 4. Gold, பொன். 5. War, போர். (*p.*)

வன்திறல்வெங்களிற்றினங்களிரண்டுபொருமலையாமலிடுங்கணையமரனேபோலும். Like a large timber placed between enraged elephants to prevent their fighting.

கணையாழி, *s.* A finger-ring, sealring, a signet, மோதிரம்.

கண், *s.* The eye, விழி. 2. A hollow mark or spot, குழி. 3. A roundish hole, orifice, crevice, cavity, aperture, துவாரம். 4. A knot or point in a tree, கணு. 5. (*p.*) A bamboo, மூங்கில். 6. Place, location, situation, இடம். 7. A form of the locative case—that employed in grammatical examples, &c., ஏழனுருபு. 8. Kindness, benignity, graciousness, protection, கண்ணோட்டம். 9. Greatness, பெருமை.

கண்கண்டதைகைசெய்யும். What the eye has seen the hand may do; i. e. we learn by observation.

கண்காணநடந்தசெய்தி. Any event that happened before one's eyes.

கண்ணிலேகாணப்படாது. I hate the very sight of him. 2. Even the sight of it is injurious; i. e. prejudicial—spoken where mutual animosity exists—as in the kite and snake, &c. 3. (*p.*) It will not appear to the eye.

கண்ணிலேகுத்துகிறதோ. Does it hurt your eyes? why do you envy me, &c.

கண்ணுக்கின்பமானபொருள். That which is delectable to the eye.

கண்ணுக்குக்கண்ணானவன். One as precious or dear as the eye.

கண்ணுக்குப்புண்ணுமில்லைகாண்பார்க்குநோயுமில்லை. There is no wound to be seen, nor any visible symptoms of disease; the sickness, if real, is internal.

கண்ணுக்குள்ளேநிற்கின்றது. It is fixed in my eyes, imagination, &c.—as a departed friend, a thing lost, &c.

இராசாவுக்குக்கண்மந்திரி. A counsellor is the eye of the king.

அண்டைவீட்டுச்சண்டைகண்ணுக்குக்குளிர்ச்சி... The quarrels of neighbors are gratifying to the eyes of the instigator.

என்கண்ணே. [*An expression of endearment.*] Oh, thou, my eyes; i. e. my darling.

இறந்தனையோஎன்கண்ணேஎன்னுயிரேஅபிமாவின்றென்செய்தாயே. Ah! Abima, my eyes, my life, art thou dead! whence this cruel deed? (பார.)

அவன்கண்ணைவிந்துபோயிற்று. He has lost his sight.

அவன்கண்ணிலேபட்டேன். I suffer from his eye, his evil eye is upon me, he envies me.

கட்கட்டி, *s.* [*prov.*] As கண்கட்டி.

கட்செவி, *s.* A snake—its eyes being considered the organs of hearing as well as of sight, பாம்பு. (*p.*)

கட்புலன், *s.* The sense of sight, நேத்திரேந்திரியம்.

ஓர்கட்பறை, *s.* A tambourine.

கண்கடை, *s.* [*in combination.*] Corner of the eye.

கண்கடைதெரியாதவன், *s.* One elated and blind through prosperity.

கண்கடைதெரியமற்பரிமாறுகிறான். He acts in disrespect of superiors through elation, &c. 2. He acts with recklessness, wantonness, waste of property, &c.

கண்கட்ட, *inf.* To blind the eyes by magic. 2. To cover the eyes, to blindfold.

கண்கட்டி, *s.* A sty on the eye.

கண்கட்டு, *s.* Blind-folding, blindman's-buff.

கண்கட்டுகோசம், *s.* A species of cataract.

கண்கட்டுவித்தை, *s.* The art of legerdemain or blinding by magic, ஒர்காருடவித்தை. 2. The tricks played by conjurers, தந்திரவித்தை.

கண்கலங்க, *inf.* To weep—as the eyes from dust, a trifling hurt. 2. To be distressed.

கண்கழுவ, *inf.* [*prov.*] To pour water on plants, growing corn, &c., especially the first time.

கண்கழுவுதண்ணீர், s [prov.] Water conducted in channels for watering young plants, newly sown seed, &c.

கண்காசம், s. A disease of the eye, cataract.

கண்காட்சி, s. Vision, sight, பார்வை. 2. A gratifying or pleasant sight, a pageant, spectacle, show, கண்ணுக்கருச்சிப்பு. 3. A prodigy, அதிசயம். 4. [ironically.] A disgusting ungainly sight, துக்கக்காட்சி.

கண்காணம், s. Oversight, inspection, watch, மேல்விசாரிப்பு.

கண்காணக்காரன்—கண்காணச்சேவகன், s. A watchman.

கண்காணஞ்செலுத்த—கண்காணம்பண்ண, inf. To superintend, watch.

கண்காணம்வைக்க, inf. To appoint an inspector, to set a watch.

கண்காணி, s. An inspector, an overseer, a supervisor, an agent, மேல்விசாரிப்புக்காரன். 2. One who looks after the subordinates in a government office, கிரேஷ்டாதிகாரி. 3. [In Christ. usage.] A bishop, அத்தியட்சர்.

கண்காணிக்க, inf. To oversee, supervise, superintend, மேல்விசாரணைசெய்ய.

கண்காணிப்பு, v. noun. Oversight, supervision.

கண்காந்தல், v. noun. The hot sensation of the eyes caused by neglecting to bathe, by disease, &c., கண்ணெரிவு.

கண்காரர், s. Persons who sit before a conjurer, looking at the magical paint without winking, and to whom the discoveries are made, அஞ்சனம்பார்ப்போர்.

கண்குத்திபாம்பு, s. A bright green snake that is said to strike at the eye, the eye-snake; a whip-snake.

கண்குவளை, s. The socket of the eye, கட்குழி.

கண்குழிதல், v. noun. Sinking of the eyes by disease, emaciation, &c.

கண்குளிரப்பார்க்க, inf. To refresh the eyes by viewing a pleasing object—as a dear child, &c., to feast the eyes.

கண்குளிர்ச்சி, v. noun. Refreshing, gratifying, pleasing to the sight.

கண்குறிப்பு, s. A significant expression of the eye, கண்சமிக்கை.

கண்கூச, inf. To see obscurely from the eyes being dazzled. 2. To be weak-sighted, tender-eyed.

கண்கூடு, s. Socket of the eye, கண்குவளை. 2. A thing in sight, ocular demonstration, பிரத்தியட்சம்.

கண்கூடாய், adv. Evidently, demonstrably.

கண்கூர்மை, s. Sharpness of sight.

கண்கூலி, s. A present for finding a thing lost.

கண்கெட, inf. To be struck blind. 2. adv. In spite of one's own sight, to the destruction of one's own eyes, &c.

கண்கெடச்செய்ய, inf. To do what one knows to be wrong—as presenting defiled food to an idol, friend, &c.

கண்கெடப்பேச, inf. To falsify the evidence of one's own eyes in delivering testimony, &c.

கண்கெட்டதெய்வம், s. The blind deity—a profane and familiar phrase among the vulgar used in seasons of distress.

கண்கொள்ளாக்காட்சி, s. A great or wonderful object, a thing over-powering to the sight, அதிசயக்காட்சி.

கண்சமிக்கை, s. A wink with the eyes.

கண்சாடை, s. A winking at, taking faint notice of, &c.

கண்சாய்ப்பு, s. A side-look in displeasure. 2. Connivance. 3. Partiality, favor shown by a wink, &c.

கண்சாய்ப்பாய்ப்பார்க்க, inf. To look jealously, to have an evil eye.

கண்சாய்ப்பாயிருக்க, inf. To overlook, be partial in judgment, to connive.

கண்சிமிட்ட, inf. To make a signal with the eye. 2. To wink, to twinkle through weakness of eyes.

கண்சிமிட்டு, s. A signal of the eye.

கண்சுருட்ட, inf. To entice one by uncommon beauty, lustre, &c., to captivate, to fascinate.

கண்செருகல்—கண்சொருகல், v. noun. Rolling up of the eyes—as in swoons, fits, death-bed, and sometimes in sleep.

கண்ணஞ்ச, inf. To fear, dread, as excited by the sight of a superior, lightning, &c.

கண்ணஞ்சனம், s. Collyrium, the ointment used to blacken the eye-lashes. 2. Blue vitriol.

கண்ணடைக்க, inf. To choke, stop up—as the orifice of a spring, a nipple, துவாரமடைக்க.

கண்ணடைய, inf. To become choked or stopped up—as a hole, &c., துவாரமடைபட. 2. [prov.] To cease shooting—as the head or heart of a plant, பயிரின்குருத்துக்கண்ணடைய.

இடியப்பக்குழலகண்ணடைந்துபோயிற்று. The இடியப்ப mould is stopped up.

கண்ணடைந்தபால், s. Milk injured by being kept too long.

கண்ணப்பன், s. One of the sixty-three devotees of Siva who scooped out his own eye and consecrated it to that deity—also called திண்ணன்.

கண்ணயர்ந்துபோதல், v. noun. [impr. கண்ணசந்துபோதல்.] Being heavy or drowsy.

கண்ணரிப்பு, v. noun. A kind of itching disease in the eye, கண்ணரிவருமோர்நோய்.

கண்ணருள், s. Favor.

கண்ணழற்சி, v. noun. Burning of the eyes, கண்ணெரிச்சல். 2. (fig.) Envy, பொறாமை.

கண்ணழற்சிப்பட, inf. To look with envious eye, to envy.

கண்ணறை, s. Breadth, width, அகலம். 2. [prov.] Hole, crevice, chink, orifice, cell, &c., வட்டத்துவாரம். 3. Mesh of a net, interstice of ratan work, &c., வலைமுதலியவற்றின்கண். 4. Cell in a honey-comb, white ants' nests, &c., தேன்கூட்டறை. 5. Blindness, குருடு. 6. Pitilessness, hard-heartedness, inexorableness, வன்னெஞ்சு.

கூறுவன்பிற்கண்ணறைமன்னனொருதேவி. The wife of the unrelenting blind sovereign (D'hritarashtra). (பாரதம்.)

கண்ணறையன், s. A blind person. 2. A hard-hearted person.

கண்ணன், s. One who has eyes.

கண்ணாகப்பார்க்க, inf. To take care of—as one's eyes, கண்போலப்பார்க்க.

கண்ணாடி—கண்ணடி, s. A glass, glass in general, தருப்பணம். 2. A mirror, a looking glass, முகம்பார்க்குங்கண்ணாடி. 3. Spectacles, மூக்குக்கண்ணாடி.

கண்ணாடிச்சால், s. Blank squares, or balks left between the furrows in cross ploughing, இடைகிடைவிட்டுழுமுழவு.

கண்ணாடிச்சுவர், s. A small wall to screen the fire in a room.

கண்ணாடிபார்க்க, inf. To look into a looking glass.

கண்ணாடிப்பலகை, s. A plank with a peeping-hole.

கண்ணாடிப்புடவை, s. A thin inferior kind of cloth.

முகக்கண்ணாடி, s. A looking glass.

மூக்குக்கண்ணாடி, s. Spectacles.

தூரதிஷ்டிக்கண்ணாடி, s. Spy-glass, or telescope.

சூரியகாந்தக்கண்ணாடி, s. Crystal lens or burning glass.

சந்திரகாந்தக்கண்ணாடி, s. A fabulous gem supposed to be formed of the congelation of the rays of the sun.

பூதக்கண்ணாடி, s. Microscope.

பாலக்கண்ணாடி, s. Spectacles adapted to young eyes.

நிலைக்கண்ணாடி, s. A standing looking glass, a stationary mirror.

கண்ணாமண்டை, s. [prop. கண்மண்டை.] s. The skull near the eyes.

கண்ணாம்பூச்சி, s. [com.] Covering the eyes with the hands or doubling the upper eyelid over the eyeball inside out, and running round as children in play, ஓர்விளையாட்டு. 2. Giddiness, dizziness, கண்மயக்கம்.

கண்ணாம்பூச்சியாட, inf. To run about in play with the eyes covered, or with the eyelid doubled over.

கண்ணாம்பொத்தி, s. [prop. கண்பொத்தி.] A game, children's play, hide-and-seek.

கண்பொத்திவிளையாட, inf. To play at hide-and-seek.

கண்ணாயிரம், s. The argus of the Hindus.

கண்ணையிருக்க, *inf.* To be watchful, vigilant, attentive, looking steadfastly, நோக்கமாயிருக்க.

கண்ணுக்குக்கண்ணையிருக்கிறான். He is as dear or precious as one's eyes.

கண்ணாரக்காண, *inf.* To see plainly, to see with one's own eyes, பிரத்தியட்சமாகக்காண.

கண்ணிடுக்குதல், *v. noun.* Being sleepy, drowsy.

கண்ணிதழ்—கண்ணிமை, *s.* Eyelid, கண்ணினதிமை. 2. A wink of the eye, கண்ணிமைப்பு. See இமை.

கண்ணிமைக்க, *inf.* To wink.

கண்ணிலி, *s.* A blind person, குருடன். 2. (*p.*) Dhritarashtra, திரிதராட்டிரன்.

கண்ணிலேபூப்பட, *inf.* To have specks in the black of the eye.

கண்ணிலொற்ற, *inf.* To apply a fomentation, a flower, &c., to the eye.

கண்ணீர், *s.* Tears.

ஏழைஅழுதகண்ணீர்கூரியவாளுக்கொக்கும். The tears of the poor are like a sharp sword.

கண்ணீராக்கி, *s.* Crude camphor, பச்சைக்கருப்பூரம்.

கண்ணீருகுக்க — கண்ணீர்சொரிய — கண்ணீர்வடிக்க — கண்ணீர்விட, *inf.* To shed tears, கண்ணீர்சிந்த.

கண்ணீர்ததும்ப—தளம்ப, *inf.* To have the eyes suffused with tears.

கண்ணுக்கரசன், *s.* Blue vitriol, துருசி.

கண்ணுக்கினியான், *s.* The பொன்னுங்காணி plant. 2. The கரிசலாங்கண்ணி plant, *lit.* one pleasing to the eye.

கண்ணுக்குக்கண்ணானவன், *s.* A person dear to one as his own eyes.

கண்ணுக்குத்தைக்க, *inf.* To attract the eyes, to arrest the attention.

கண்ணுதல், *s.* Siva, whose forehead contains an eye, the frontal-eyed, சிவன். (*p.*)

கண்ணுதலோன்வெற்பு, *s.* The same as இரசதமலை.

கண்ணுராவி, *s.* A pitiable sight, a miserable condition deserving commiseration.

கண்ணுலைமூடி, *s.* A rice-strainer.

கண்ணுற, *inf.* To see, view, காண. 2. To reach, arrive at, இடத்தைச்சேர.

கண்ணுறக்கம், *s.* Sleep, a nap, நித்திரை.

கண்ணுறங்க, *inf.* To sleep, நித்திரைசெய்ய.

கண்ணுறுத்த, *inf.* To smart as the eyes, from any foreign substance—as dust, ophthalmia, &c., கண்ணிலுறுத்த.

என்கண்ணையுறுத்துகின்றது. Something hurts my eye. 2. My eye smarts from ophthalmia.

கண்ணூறு—கண்ணேறு, *s.* The blight of the eyes, an unlucky look supposed to cause sickness, &c., திட்டிதோஷம்.

விண்ணேறுதப்பினாலுங்கண்ணேறுதப்பாது. One may escape a thunderbolt, but to escape an evil eye is impossible.

மதன்கண்ணேறெய்தலுங்கழிந்ததோ. (Has the waist) become so attenuated through the influence of Kama's eyes?

கண்ணூறுகழிக்க, *inf.* To dispel the blight of an evil eye by prescribed ceremonies.

கண்ணூறுபட, *inf.* To suffer or experience the ill effects of evil eyes.

கண்ணெச்சில், *s.* Fascinating, bewitching, blighting, &c.—as by a glance, and otherwise, as in food looked on with an envious eye, &c., கண்ணூறு.

கருப்புரவிளக்கமேற்றிக்கண்ணெச்சில்கழித்திட்டாரே. They waved the lighted camphor and removed the blight of the eye. (நைட.)

கண்ணெரிவு, *v. noun.* Smarting of the eyes from want of sleep or through intemperance.

கண்ணெறிய, *inf.* To glance, கண்ணாற்பார்க்க. 2. To cast libidinous glances, to look wistfully, விருப்பமாகப்பார்க்க

கண்ணேணி, *s.* A bamboo ladder, மூங்கிலேணி.

கண்ணேறிட்டுப்பார்க்க, *inf.* To look intently or steadily on an object. 2. To look up straight forward, எறெடுத்துப்பார்க்க.

கண்ணைக்காட்ட, *inf.* To indicate wishes by a glance.

கண்ணைப்பிடுங்க, *inf.* To pluck out the eye.

கண்ணைமூடிக்கொண்டிருக்க—கண்மூடிக்கொண்டிருக்க, *inf.* To connive at. 2. To be indifferent about, to be careless.

என்னைப்பாராமற்கண்மூடிக்கொண்டார். He does not look at me, he has closed his eyes on me.

கண்ணொட்ட, *inf.* To be sleepy.

எனக்குக்கண்ணொட்டிக்கொண்டுவருகிறது. I am sleepy.

கண்ணொளி, *s.* The brightness of the eye, the light of the eyes, கண்ணிலிருக்குமொளி.

கண்ணோ — கண்ணோக்காடு — கண்ணோய்—கண்ணோவு—கண்வலி, *s.* Sore eyes, ophthalmia.

கண்ணோக்க, *inf.* To look intently, gaze, to eye, see, look upon, பார்க்க.

கண்ணோக்கு, *v. noun.* Gaze, glance, கண்பார்வை.

கண்ணோட, *inf.* To run out—as the sight on an object of desire, to look at with desire, cast wistful or lustful glances, விருப்பமாகப்பார்க்க. 2. To watch, look after, inspect, superintend, பார்வையிட. 3. To examine cursorily—as a book, writing, &c., மேலெழுச்சியாய்ப்பார்க்க. 4. To be kind, benignant, gracious, to treat kindly, be indulgent, தயவாயிருக்க. 5. To be partial, to have the mind biased toward one, to yield to feelings of compassion, தாட்சிணியஞ்செய்ய.—*Note.* All the meanings have reference to sight as prompting to passion and action.

உடையவன்கண்ணோடாப்பயிர், *s.* Growing corn not looked after by the owner.

கண்ணோட்டம், *s.* A glance, a look, the scope of the sight, கடைக்கண்பார்வை. 2. Regard to persons, either in a good or bad sense, kindness as prompted at the moment, partiality, favoritism, glow of kind feelings toward a friend, reluctance to deny his request, &c., கடாட்சம். 3. Civility, complaisance, regard, மரியாதை. 4. Discerning by the eye, close examination, scrutiny, பார்வையிடுகை.

இவனவனிடத்திற்கண்ணோட்டம்வைத்தான் He was very kind to him.

கண்திட்டம்—கண்மதிப்பு, *s.* Guess by the eye, or opinion from sight.

கண்திட்டி—கண்திஷ்டி—கண்தீமை, *s.* The blight of the eye, திட்டிதோஷம்.

கண்திட்டிகழிக்க, *inf.* To dispel by ceremonies the supposed blight of the eye.

கண்திட்டிபட, *inf.* To be blighted by the glance of an evil eye.

கண்தெரியாதவன், *s.* A blind man.

கண்பட, *inf.* To sleep, நித்திரைசெய்ய. (*p.*)

கண்படை, *s.* Sleep, நித்திரை. 2. A bed or other convenience for sleeping, மஞ்சப்படுக்கை. (*p.*)

கண்படைநிலை, *s.* A poem consisting of pleasing stories suitable for recital by physicians and courtiers in an assembly of kings and great personages to soothe the mind and induce sleep. (*p.*)

கண்பட்டை, *s.* An eye-lid.

கண்பரிகாரம், *s.* Doctoring the eyes, the profession of an oculist, கண்வைத்தியம்.

கண்பரிகாரி, *s.* An oculist, கண்வைத்தியன்.

கண்பாடு, *s.* Sleep, நித்திரை. (*p.*)

கண்பாய்ச்சல், *v. noun.* A glance.

கண்பார்க்க, *inf.* To examine precious stones, elephants, horses, &c., for sale, பரீட்சிக்க. 2. To cast a benignant look on one, கடாட்சிக்க. 3. To pity or compassionate, இரங்க

கண்பிடி, *s.* [*prov.*] A small jack-fruit or a small bunch of palmyra or other fruit attached to a larger one.

கண்புகைச்சல், *v. noun.* A disease of the eye, ஓர்நோய். 2. Dimness of sight from age, disease, கண்மங்கல்.

கண்புதைக்க. *inf.* To cover the eyes, to hoodwink, கண்பொத்த. (*p.*) 2. To weaken or prevent the sight—as dust, &c.

கண்பூத்தல், *v. noun.* Failing—as the eyes by earnest looking, கண்மயக்கல்.

கண்பொங்க, *inf.* To form—as rheum in the eyes, குட்டிநோற்கண்பொங்க.

கண்பொத்த, *inf.* To stop the eyes with the fingers, to hoodwink, blindfold, கண்மூட.

கண்பொத்திவிளையாட, *inf.* To play at hide-and-seek, to play at blind-man's-buff, விழிமூடியாட.

கண்பொறிதட்ட, *inf.* To flash—as the eyes in fainting, by a blow, &c., கண்கூச. 2. To be over-powered—as the sight by vivid lightning, brilliant gems, &c., கண்மழுங்க.

கண்பொன்ற, *inf.* To have the sight diminished, dimmed by age, disease in the eyes, long application, கண்கெட. 2. [*vul.*] To be blear-eyed, கண்செம்ம.

கண்போட, *inf.* To look on objects wistfully with an intention of securing them, to fall in love, இச்சிக்க.

கண்மங்க, *inf.* To become dull, obscure, heavy—said of the eyes, கண்ணொளிகுறைய.

கண்மடை, *s.* Inferior channels for water—as in gardens, சிறுமடை.

கண்மட்டம்—கண்மட்டு—கண்மதிப்பு—கண்மதியம், *s.* Guess by the eye—as appears to the sight; done, wrought, leveled, &c., by sight.

கண்மட்டவேலை, *s.* Work executed by the eye without the aid of a measure or model.

கண்மணி—கண்விழி, *s.* The apple of the eye, கருமணி.

என்கண்மணியே. My darling, *lit.* thou who art the apple of my eye.

கண்மண்டை, *s.* The skull near the eyes.

கண்மயக்கு, *s.* Fascination of the eyes, bewitching, captivating, கண்ணினெல்மயக்குமயக்கு.

கண்மயிர், *s.* The eye-lashes.

கண்மருட்சி, *s.* The dazzling of the eye.

கண்மருட்டு, *s.* Fascinating with the eye, கண்ணினுற்செய்யுமருட்டு.

கண்மருந்து, *s.* Medicine for the eyes. 2. A collyrium for ornamenting the eyelids of females.

கண்மலர், *s.* An ornament for the eyes of an idol, a gold or silver ornament to be placed over the eye of an idol and devoted to the temple, விக்கிரகக்கட்கணியும்விழிமலர்.

கண்மறிக்காட்டல், *v. noun.* [*prov.*] Checking, forbidding, frowning on, or inviting by a signal of the eye.

கண்மாயம், *s.* Ocular deception, illusion, sudden appearance and disappearance—as of a phantom, a thing stolen, &c., கண்ணுக்குத்தோன்றிமறைகை.

கண்மின்ன, *inf.* To flash—as the eyes on fainting or by a blow.

கண்மின்னியார்த்தல், *v. noun.* Growing dim as the eyes when one is dizzy.

கண்முகிழ்க்க—கண்மூட, *inf.* To shut the eyes, cover the eyes, to hoodwink, கண்ணிமைசேர்க்க. 2. To become drowsy, go to sleep, தூங்க. 3. To die, சாவ. 4. To be careless, indifferent, unconcerned at any thing, கவலையில்லாதிருக்க.

கண்மூடிவிழிக்குமுன்னம். In less than a wink.

ஒருகண்மூடியொருகண்விழிக்கிறவன். He who is partial, biased.

என்னைப்பாராமற்கண்மூடிக்கொண்டான். He does not look at me, he has closed his eyes on me.

கண்மை, *s.* A collyrium for the eyelids, கண்ணுக்கிடுமை. 2. A kind of benignant look, கண்ணோட்டம்.

கண்வரி, *s.* Streaks, especially red, in the white of the eye.

கண்வளர, *inf.* To go to sleep, to sleep, நித்திரைசெய்ய.

கண்விட, *inf.* To break—as the eye of a needle, the rivet hole of a knife, ஊசிமுதலியவற்றின்கண்ணொடிய. 2. To form as butter in churning, வெண்ணெய்திரள.

கண்விடுக்க, *inf.* To paint the black of the eyes in a picture, சித்திரப்பாவைக்குக்கண்வரைய. 2. To open the eyes of an idol giving it the appearance of sight, விக்கிரகத்துக்குக்கண்திறக்க. (சிந்தாமணி.) (*p.*)

கண்விதுப்பழிய, *inf.* To fail—as the eyes of a female by watching and waiting for her absent husband or lover, கண்ணவாக்கெட. (*p.*)

கண்விழிக்க, *inf.* To open the eyes, கண்திறக்க. 2. To open the eyes—as young creatures after birth, இளங்குழவிகண்திறக்க. 3. To awake from sleep, நித்திரைநீங்க. 4. To revive—as plants after planting, &c., பயிர்செழிக்க.

கண்விழிப்பு, *v. noun.* Watchfulness, circumspection, caution, விழிப்பாயிருக்கை.

கண்வினைஞர்—கண்வினையாளர், *s.* Smiths, mechanics, artisans, கம்மியர். (*p.*)

கண்வெளித்தல், *v. noun.* Seeing clearly, having the sight restored after disease of the eyes or dimness.

கண்வைக்க, *inf.* To be benignant, gracious, kind, &c., toward one, கிருபைவைக்க. 2. To look wistfully upon a thing, to desire, look at lustfully, விருப்பம்வைக்க. 3. To form as a hole in an ulcer, புண்ணிற்கண்வைக்க.

அவளவன்மேற்கண்வைத்தாள். She cast her eyes upon him.

வாக்குக்கண்—மாறுகண், *s.* A squint eye.

மயிற்றோகைக்கண், *s.* The spangles in a peacock's tail.

கடைக்கண், *s.* The corner of the eyes.

கடைக்கண்பார்வை, *s.* A side-glance. 2. Regard, favor, condescension.

சல்லடைக்கண், *s.* The holes of a sieve or strainer.

ஓரக்கண், *s.* As வாக்குக்கண்.

ஓரக்கண்ணன், *s.* One who is squint-eyed.

பருக்கண், *s.* The orifice of a boil.

உடலக்கண்ணன், *s.* Indra who has his whole frame bespangled with eyes. (கல்லா.) (*p.*)

இல்லிக்கண்ணன், *s.* One who cannot bear the light and contracts the eyes to shut it out.

மாலைக்கண், *s.* A disease of the eye which causes the sight to fail in the dark.

வலைக்கண், *s.* The meshes of a net.

ஊற்றுக்கண், *s.* The orifice of a spring.

பறைக்கண், *s.* The end of a drum.

கொடுங்கண்—தறுகண்—வன்கண், *s.* Envy, invidiousness.

ஆயிரங்கண்ணன், *s.* Indra who has a thousand eyes. (*p.*)

கூச்சக்கண், *s.* As கூசைக்கண்.

விரிகண், *s.* A sore in the eyelids which causes them to dilate.

அவிகண், *s.* A variety of sore eyes.

இழிகண், *s.* A disease of the eye which causes the eyelids to hang down.

அழுகண், *s.* A complaint in the eye which causes a continual dropping of tears.

சொறிகண், *s.* An itching complaint in the eyelids.

சிம்புறுகண், *s.* A complaint in the eye causing the lids to come out in flakes.

பூமியின்கண். In the earth.

*கண்டகம், *s.* A thorn, முள். Wils. p. 183. Kandaka. 2. Forest, wild jungle, காடு. 3. A thorny shrub, சிறுமுள்ளி. 4. The solid part of a tree, மரவைரம். 5. A sword, வாள். 6. A dirk or short sword worn in the girdle, சுரிகை. (*p.*)

கண்டகசங்கம், *s.* A thorny shrub, Azima tetracantha monetia, *L.*

கண்டகதுவாரம், *s.* Foramen spinale, முட்டெலும்பு. (*Anat.*)

கண்டகர், *s.* The Asoors or demons, அசுரர். 2. Savages, barbarians, ferocious persons, கீழ்மக்கள். (*p.*)

கான்புக்கமறக்கொள்மரபக்கண்டகர். The enchanting cruel Ratchatas who entered the jungle— (இரகு.)

கண்டகி, *s.* A sacred river near Benares, the Gandhaha, நதி. Wils. p. 278. Gandaka. 2. (*Anat.*) The vertebra, முள்ளெலும்பு.

கண்டகிக்கல்—கண்டகிச்சிலை, *s.* A stone found in that river said to be an incarnation of Vishnu, சாலக்கிராமம்.

கண்டகிநதி, *s.* The name of a sacred river near Benares.

கண்டங்கத்தரி—கண்டங்காலி, *s.* A kind of herb, wild brinjal, ஒர்செடி, Solanum jacquini, *L.*

கண்டதிப்பிலி, *s.* The திப்பிலி root, Piper longum.

கண்டபேரண்டபட்சி, *s.* An enormous eagle with two heads, இருதலைப்பட்சி.

*கண்டம், *s.* The throat, the neck, கழுத்து. 2. A shrub, கள்ளி, Euphorbia, *L.* Wils. p. 183. Kanda. 3. Sugar-candy, coarse sugar, கண்டசருக்கரை. 4. Section, division, பங்கு. Wils. p. 270. Khanda. 5. The tenth yoga (regulus) or one of the twenty-seven portions of a circle on the plane of the ecliptic, ஓர்யோகம். 6. An elephant's cheek and neck, யானைக்கழுத்து. Wils. p. 278. Ganda. 7. A bell, மணி. Wils. p. 381. Ghanda. 8. A piece cut or broken off, fragment, slice, cutting, chop, parcel, por-

tion, slip, துண்டு. 9. Jaggary, வெல்லம். 10. A short sword, கைப்பிடிவாள். 11. A small saw, சிறுவாள். 12. A style for writing, எழுத்தாணி. 13. Any of the nine divisions of the known continent, நவகண்டம். They are கிழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தெனனிரேபதம், வடபாதம், தென்பாதம, மத்திமகண்டம். 14. A curtain, திரைச்சீலை. 15. A country, நாடு. (பிங்.) 16. Boundary, எல்லை. 17. A coat-of-mail, கவசம். 18. The root of the குன்றிவேர், Abrus precatorius, *L.* 19. Factitious cinnabar, சாதிலிங்கம். 20. Disaster, catastrophe, calamity, malignity of evil planets in astrology, as experienced in its effects, in adversity, straits, critical periods in a person's horoscope, fatal days, &c., தத்து. 21. [*in astronomy.*] The days in a yoga, remaining after subtracting a certain number of mean revolutions, a measure resorted to to shorten the process of calculation. 22. A complete army, அக்குரோணி. (*p.*)

கண்டந்தப்பிப்பிழைத்தல். Outliving the fatal day or period of one's maturity.

இந்தக்கண்டத்துக்குத்தப்பித்தக்கொண்டான். He has outlived the calamity.

வெட்டொன்று கண்டமிரண்டு. One stroke severs, i. e. plain dealing without mincing matters—speaking with decision.

கண்டகோடரி, *s.* A kind of hatchet carried on the shoulder by a class of ascetics. 2. A kind of battle-axe—the weapon of Parasurama, மழு.

கண்டக்கரப்பன், *s.* A disease, humors in the throat causing irritation, itching, hoarseness, &c., ஓர்கரப்பன்.

கண்டக்கருவி, *s.* The throat—as one of the five instruments of musical sound, பஞ்சவாத்தியத்திலொன்று.

கண்டக்காறை, *s.* A golden neck ornament, கழுத்திடுகாறை.

கண்டக்கிரந்தி, *s.* An ulcer in the throat causing hoarseness. கழுத்துக்கிரந்தி.

கண்டங்கண்டமாயரிய, *inf.* To cut in pieces.

கண்டசரம், *s.* A necklace worn by men on festive occasions, கழுத்தணியி லொன்று.

கண்டசூலை, *s.* A glandular disease in the neck, ஓர்சூலை.

கண்டதுண்டம், *s.* Many pieces, carnage, havoc, piece-meal, பலதுண்டம்.

கண்டதுண்டப்பட, *inf.* To be shivered, broken in many pieces.

கண்டதுண்டப்படுத்த—கண்டதுண்டம்பண்ண, *inf.* To break to shivers.

கண்டத்தலம், *s.* The neck, கழுத்து.

கண்டநாளம், *s.* The gullet, தொண்டைகுழி.

கண்டஸ்நானம், *s.* Bathing as high as the neck, or without wetting the head, கழுத்தளவாய்ச்செய்யும்ஸ்நானம்.

கண்டபூர்த்தி, *s.* Much, abundance, satiety, நிறைவு.

கண்டபூர்த்தியாகவசாப்பிட்டான். He ate to satiety, he was satiated.

கண்டப்புற்று, *s.* A disease in the throat, ஓர்நோய்.

கண்டமாலை, *s.* A disease appearing in tumors in the neck, inflammation of the glands, scrofula, கழுத்திலெழுமபுண்.

கண்டாமணி, *s.* A large bell, பெருமணி. 2. A bell attached to the neck of an elephant, யானைக்கழுத்திற்கட்டுமணி. 3. A warrior's ankle rings or bells, வீரக்கழல்.

அமாவாசைக்கண்டம் *s.* A critical period occurring at the new moon.

உப்புக்கண்டம், *s.* Salted meat.

தண்ணீர்க்கண்டம், *s.* Accident by water.

கண்டம், *s.* The sound of a bell, மணியோசை. 2. The girth of an elephant, யானைக்கச்சை. (*p.*)

கண்டர், *s.* Blue vitriol, துருசு.

*கண்டரை, *s.* The Aorta. (*Anat.*) Wils. p. 184. Kandara.

கண்டல், *s.* A tree; its juice is very astringent; it is used to dye sail-cloth, boat-ropes, fishing-nets, to preserve them from decay, ஓர்மரம், Rhizophora candel. 2. The தாழை tree, Pandanus odoratissimus. 3. The முள்ளி shrub. 4. A kind of aquatic shrub, நீர்முள்ளி.

பூக்கண்டல், *s.* Candal tree bearing fragrant flowers.

பேய்க்கண்டல், *s.* A tree, Rhizophora mangle, *L.*

கண்டறை, *s.* A cavern in a rock, கற்புழை. (திவா.) (*p.*)

*கண்டனம்—கண்டனை, *s.* Confutation, refutation, rejection, கண்டிக்கை. Wils. p. 170. Khandana.

கண்டனம்பண்ண, *inf.* To refute, reject, கண்டிப்புகசெய்ய.

கண்டன், *s.* A husband, புருடன். 2. A lord, a superior, யசமானன். 3. A hero, வீரன். 4. A king of the Sola dynasty, ஓர் சோழன். (*p.*)

கண்டாங்கி, *s.* A chequered kind of cloth worn by women, ஓர்சீலை.

கண்டாஞ்சி, *s.* A thorny kind of shrub proper for a quick-set hedge, முள்வேல். See கட்டாஞ்சி.

கண்டாயம், *s* [*prov. vul.*] An opening, outlet, avenue, passage, வழி.

கண்டாரவம், *s.* The name of a tune, ஓரிசை. 2. The sound of a bell, மணியோசை. (*p.*)

கண்டாவிழ்தம், *s.* [*prop.* கண்டௌஷதம்.] A strong compound medicine applied to the tongue in lock-jaw, கண்ரோகம்.

கண்டாளம், *s.* [*com.*] A travelling sack or wallet placed on a bullock, a pack-saddle, எருதின்மேற்போடுமூட்டை.

கண்டாளவெருது, *s.* A bullock having the aforesaid saddle, used for bearing burdens.

கண்டி, *s.* Kandy, a city of Ceylon, its ancient capital, இலங்காபுரி. 2. [*prov.*] A kind of hurdle whether temporary or portable used by fishermen for catching fish in shallow waters, or the enclosure thus formed, மீன்பிடிக்கவடைக்குங்கருவி. 3. A necklace, கழுத்தணியிலொன்று. 4. A dry measure, twenty parahs, இருபதுபறை. 5. A weight of five-hundred pounds, being twenty-eight துலாம், or two-thousand பலம், கண்டில்.

கண்டியடைத்தல், *v. noun.* Forming an enclosure for fishing.

கண்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To reprove, reprehend, chide, speak with severity, admonish, expostulate, censure, கடிய. 2. To speak with decision, precision, earnestness, impartiality, பாரபட்சமின்றிப்பேச. 3. To cut in pieces, chop, mince, slash, துண்டிக்க. 4. To sever, sunder, hew down, வெட்ட. 5. To divide, parcel, பகிர. 6. To correct, chastise, discipline, punish a child, &c., to bring to a proper state by discipline. தண்டிக்க.

கண்டித்துக்கண்டித்துச்சொல்ல, *inf.* To particularize.

கண்டித்துக்கேட்க, *inf.* To ask with earnestness, reproof, threats, &c.

கண்டித்துச்சொல்ல, *inf.* To speak harshly, to command with severity, to reprove, insist on. 2. To speak plainly, impartially, exactly, pointedly, with precision, positively.

கண்டிதம், *v. noun.* Reproof, rebuke, கண்டிப்பு. 2. Chastisement, correction, discipline, punishment, தண்டனை. 3. Strictness, rigor, severity, austerity, திட்டம். 4. Accuracy, exactness, particularity, precision, செவ்வை. 5. Certainty, assurance, உறுதி. 6. Cutting, sundering, துண்டிக்கை.

கண்டிதக்காரன், *s.* A rigorous man.

கண்டிதம்பண்ண, *inf.* To act rigorously. 2. To correct, chastise.

கரார்கண்டிதமாகச்சொல்ல, *inf.* To say decisively.

கண்டித்தல், *v. noun.* The act of cutting in pieces. 2. The act of hewing, வெட்டல். 3. The act of chastising.

கண்டிப்பு, *v. noun.* Strictness, severity, rigor, கண்டிதம். 2. Exactness, accuracy, precision, திட்டம். 3. Earnestness, plainness, decisiveness, urging, stress, positiveness, உறுதி. 4. Reproof, reprehension, strictness, கடிந்திகை. 5. Materiality, corporeality, palpableness, சடத்தன்மை. (ஓ. 515.) 6. Cutting, sundering, hewing, வெட்டுகை. 7. Chastisement, correction, castigation, தண்டிப்பு.

கண்டிப்பாகச்சொல்ல, *inf.* To speak plainly, to tell the naked truth. 2. To speak pointedly, expressly, harshly. 3. To speak so as to wound the feelings.

கண்டிப்புப்பண்ண, *inf.* To treat with strictness, severity, &c.

கண்டிப்புள்ளசரீரம், *s.* A material body.

கண்டிப்புள்ளவன், *s.* A strict man, one systematic, orderly, punctual.

கண்டிகை, *s.* A necklace of beads worn by religious mendicants, உருத்திராட்சமாலை. 2. A necklace of one string or row, மாதரணிவடத்தொன்று. Wils. p. 184. Kandhika. 3. A breast-plate of gold set with precious stones, பதக்கம். 4. A circular shoulder ornament worn by warriors, a kind of epaulet, தோளணி. 5. A jewel casket, பணிசெப்பு. 6. A bracelet, கடகம். 7. A division in a field, நிலப்பிரிவு.

கண்டியர், *s.* Lyrists, பாணர். (*p.*)

கண்டில், *s.* A weight, five-hundred pounds or twenty-eight துலாம், a candy, கண்டி.

கண்டில்வெண்ணெய், s. A shrub which yields a medicine, fennel, dill, ஓர் பூண்டு.

*கண்டீரவம், s. A lion, சிங்கம். Wils. p. 180. KANDHIRAVA. 2. The prickly pear, சதுரக்கள்ளி, Euphorbia antiquorum, L. (p.)

கண்டு, s. Sugar-candy, கற்கண்டு. 2. A ball of thread, நூற்பந்து. 3. Wen, கழலைக்கட்டி. (p.)

கண்டிட, inf. To wind thread on a spindle.

கண்டுகம், s. The மஞ்சிட்டி plant, Rubia mungista.

கண்டுத்துத்தி, s. A species of துத்தி plant.

கண்டுபாரங்கி—கண்டுமூலம், s. The same as சிறுதேக்கு.

*கண்டூதி, s. Itching, prurience, tingling, stinging, தினவு. Wils. p. 184. KANDOOTI. 2. A kind of nettle, காஞ்சொறி.

*கண்டூரம், s. [as கண்டௌஷதம்.] A kind of medicine.

கண்டை, s. A large bell, பெருமணி. 2. A bell tied to the neck of an elephant, யானைமணி. 3. Cloth, சீலை. 4. A warrior's ankle rings or bells, வீரக்கழல். (p.) 5. [com.] Gold or silver fringe, சரிகைக்கரை.

கண்ணகி, s. [com. கண்ணகை.] Wife of a merchant celebrated in சிலப்பதிகாரம், கோவலன்மனைவி.

கண்ணழிக்க, inf. To interpret a verse into common Tamil, clause by clause in small portions, பதப்பொருளுரைக்க. (p.)

கண்ணழிவு, v. noun. A hindrance, delay, excuse, தடை (used on the Malabar coast).

கண்ணழிவுபண்ண, inf. To protract, delay.

கண்ணன், s. Vishnu, especially in his Krishna incarnation, கிருஷ்ணன். (p.)

கண்ணு, s. A bushy tree, ஓர்மரம். 2. Long-pepper, திப்பிலி, Piper longum.

கண்ணாளர், s. Artificers, கம்மாளர். (p.) 2. Husbands, lovers, a term of endearment, கணவர். 3. Associates, companions, தோழர்.

கண்ணாட்டி, s. A spouse, sweetheart. 2. A woman greatly beloved—a term of endearment.

கண்ணாள், s. Saraswati, சரச்சுவதி. (p.)

கண்ணி, s. A flower-bud, அரும்பு. 2. A flower garland, பூமாலை. 3. A bunch of flowers, பூங்கொத்து. 4. A gin, a trap, புட்படுக்குங்கயிறு. 5. The noose of a rope for a bullock's neck, பூட்டாங்கயிறு. 6. A rope, கயிறு.

கண்ணிகட்ட, inf. To form a flower-bud.

கண்ணிகுத்த—கண்ணிவைக்க—கண்ணிகட, inf. To set a snare.

கண்ணிக்கயிறு s. The owse or thread of linen wound on the two beams which the sley moves up and down, விழுதுக்கயிறு.

கண்ணியிலகப்பட—கண்ணியிற்சிக்க, inf. To be caught, insnared, drawn in.

கண்ணிகம், s. The மணித்தக்காளி plant, Solanum nigrum, L. (p.)

கண்ணிகை, s. A flower-bud, பூவரும்பு. 2. The pericarp of the lotus, தாமரைக்கொட்டை. (p.)

கண்ணிக்கொடி, s. The name of a creeper, ஓர்படர்கொடி, Apocynum frutescens, L.

கண்ணுகம், s. A horse, குதிரை. (சது.) (p.)

கண்ணுதல், v noun. Purposing, thinking, considering, கருதல். 2. Judging, forming an opinion, அனுமித்தல். (p.)

கண்ணுவம், s. Artisanship, mechanism, கம்மியர்தொழில். (p.)

*கண்ணுவன், s. A famous Rishi or saint, ஓர்ருடி. Wils. p. 184. KAN'VA.

கண்ணுளர், s. Artificers, கண்ணளர். (சது.) (p.)

கண்ணுள், s. A masquerade ball, கூத்து. (p.)

கண்ணுளர்—கண்ணுளாளர், s. Persons in masquerade, நாடகர்.

கண்வினைஞர், s. Artificers, கம்மாளர். (p.)

கதகதெனல், v. noun. Sounding as a liquid in boiling—as water flowing from a sluice, or blood issuing from a vein, &c., ஒலிக்குறிப்பு.

உடம்புகதகதென்றிருக்கிறது. The body is heated.

தண்ணீர்கதகதென்றிருக்கிறது. The water is bubbling through heat.

கதண்டு, s. A black beetle, கருவண்டு.

கதம், s. Anger, displeasure, கோபம். 2. Wrath, fury, மூர்க்கம். 3. (Rott.) Scarcity, famine, பஞ்சம். 4. A snake, பாம்பு. (சது.) (p.)

கதம்பிறந்தது. There is a scarcity.

*கதம், s. Going, moving, progression, செல்கை. (ஞா. 72.) Wils. p. 279. GATA. (p.)

பூகதஞெயவன்றே. The day when he began to move on the earth; i.e. when he was born. (பாரதம்.)

கதகாலம், s. The past tense, போனகாலம்.

கதவாக்கியம், s. [in calendars.] The வாக்கியம், taken for the last day of the year, கணிதத்திறேர்வாக்கியம். See வாக்கியம்.

*கதம்பம்—கதம்பு, s. The Kadampa tree, also written கடம்பு, Nanclea cadamba. 2. The white Kadampa, வெண்கடம்பு. 3. Multitude, assemblage, collection, conjunction, கூட்டம். Wils. p. 185. KADAMBA. 4. A fragrant powder used as a perfume on festive occasions, வாசனைப்பொடி. 5. A herd of cattle, ஆன்கூட்டம். 6. A cloud, மேகம். (p.) 7. The காணங்கோழி wood or rail hen, Fulica, L. (M. Dic.)

கதம்பச்செண்டு, s. A cluster of flowers of different kinds.

கதம்பை, s. Cocoanut-husk, or fibrous rind which covers the nut, தேங்காய்மட்டைநார்.

கதம்பைக்கயிறு, s. Rope made of the fibres of the cocoanut-husk.

கதம்பைதிரிக்க, inf. To twist a rope of such fibres.

கதம்பைப்புல், s. A kind of grass with twisted awns, ஓர்புல், Andropogon, L.

கதலி, s. The plantain tree, வாழை, Musa paradisiaca. 2. A species of plantain, ஓர்வகைவாழை. 3. (p.) A banner, a flag of distinction granted by authority, விருதுக்கொடி. Wils. p. 185. KADALEE. 4. A plaything turned by the wind, a paper kite, காற்றுடி. 5. The தேற்று tree.

கதலிக்கிழங்கு, s. A plantain root.

கதலிப்பூ, s. The flower of plantains, வாழைப்பூ. 2. (M. Dic.) Crude camphor, பச்சைக்கருப்பூரம்.

காட்டுக்கதலி, s. A kind of bitter wild plantains.

கப்பற்கதலி, s. A kind of plantain.

*கதலிகம், s. The தேற்று tree, Strychnos potatorum. See கதலி.

கதலிகை, s. A flag, a banner, துகிற்கொடி. (p.)

கதலிச்சி, s. Camphor, கர்ப்பூரம்.

கதலிபாகம், s. [in poetic composition] A sweet style, an easy style. See பாகம். (p.)

கதலு, கிறேன், கதலினேன், வேன், கதல, v. n. To move, stir, shake, அசைய. (p.)

இவனைக்கதலமெதலவொட்டாமற்பிடித்துக்கொண்டான். He caught hold of him so that he was unable to move.

கதவம்—கதவு, s. A door, கபாடம். 2. A guard, காவல். (p.)

கதவடிகாரர், s. A caste having royal permission to beg, மொண்டிப்பிச்சைக்காரர்

கதவடைக்க, inf. To shut a door. 2. To close a door, or door-way.

கதவுநிலை, s. A door-post.

கதவுப்பூட்டு, s. A door-lock.

கதவைச்சாத்த—கதவைமூட, inf. To shut a door.

கதவைத்திறக்க, inf. To open a door.

கதவைப்பூட்ட, inf. To lock a door.

கதவைப்பேர்க்க—கதவைப்பிடுங்க, inf. To break open a door.

தெருக்கதவு, s. The street door.

கதழ், கிறது, ந்தது, கதழும், கதழ, v. n. To be angry, displeased, கோபிக்க. 2. To be furious, சினக்க. 3. To be vehement, hot, &c.—as poison or fire, உக்கிரமாக. 4. To be swift, impetuous, விரைய.

கதழ்வு, v. noun. Anger, displeasure, fury, wrath, சினம். 2. Vehemence, heat, உக்கிரம். 3. Haste, speed, விரைவு. 4. Ornament, adorning, சிறப்பு. 5. Likeness, comparison, contrast, rivalry, உவமைச்சொல். 6. Greatness, பெருமை. 7. Abundance, மிகுதி. (p.)

கதறு, கிறேன், கதறினேன், வேன், கதற, v. n. To cry aloud from pain or grief, to shriek, to scream—as a child, அழ. 2. To bellow—as a cow for its young, to cry—as a deer or as a calf, கத்த.
கன்றைநினைத்துப்பசுக்கதறிக்கொண்டோடிற்று. The cow ran bellowing after her calf.
பிள்ளைவருத்தத்தினாலேகதறுகிறான். The child is crying very loud from excessive pain.

கதறியழ, *inf.* To weep aloud.

கதறுதல், *v. noun.* Complaining, roaring.

*கதனம், *s.* A battle, fight, skirmish, warfare, போர். 2. Confusion, disorder, disturbance, கலக்கம். 3. Vehemence, severity, கடுப்பு. Wils. p. 185. Kadana.

*கதாசித்து, *adv.* Sometimes, at sometime or other, ஒருவேளை. Wils. p. 186. Kadachit.

கல்லுப்பார், *s.* A rocky stratum, reefs, கற்பார்.

கல்லுப்பாவ—கற்பாவ, *inf.* To pave, to floor with stone, flag.

கல்லுப்பாவினதரை, *s.* A pavement, stone floor.

கல்லுப்பு, *s.* A kind of mineral salt, salt in lumps, ஓருப்பு.

கல்லுப்பொளிய—கற்பொளிய, *inf.* [*com.*] To hew and pick grind stones, கல்லுக்கொத்த.

கல்லுப்பொறுக்கி—கற்பொறுக்கி, *s.* A bird that eats little stones, தூக்கணம்புறு.

கல்லுப்போட, *inf.* To cast a stone-anchor, நங்கூரம்போட. 2. (*fig.*) To frustrate a business by accusations or under-hand representations, காரியத்தைத்தடைசெய்ய.

கல்லுயர்தோள், *s.* A mountain-like shoulder.

கல்லுரல், *s.* A stone-mortar, கல்லினாற்செய்யப்பட்டவுரல்.

கல்லுவைக்க, *inf.* [*prov.*] To cast anchor. (See கல்லுப்போட.) 2. To apply snake-stones to venomous bites with incantations, &c., விஷக்கல்வைக்க. 3. To set a stone on the forehead as a punishment, the head being bent backward, and the face set toward the sun, நெற்றியிற்கல்லுவைக்க. 4. To erect a stone at a funeral ceremony (a சாச்சடங்கு), personifying a deceased ancestor, whose spirit is supposed to enter and remain in it while the ceremonies are performed. A deification of the soul is supposed to take place and the stone is made an object of worship, சிலைதாபிக்க.

கல்லுவைத்துப்பார்க்க, *inf.* To apply snake-stones to venomous bites with enchantment, incantations, &c.

கல்லுளி, *s.* A stone-cutter's chisel, கல்வெட்டுமுளி.

கல்லுளிச்சித்தர், *s* A sort of mendicants who carry chains in their hands.

கல்லுளித்தச்சன், *s.* A stone-cutter.

கல்லுளியுருக்கு, *s.* Steel of a very hard kind used for cutting stone.

கல்லூசி, *s.* A medicinal stone.

கல்லூற்று, *s.* A spring in a rocky soil, in wells, கல்லூறுநீரூற்று.

கல்லூற்றுத்தண்ணீர், *s.* Water springing from a rock.

கல்லெடுப்பு, *v. noun.* The bearing of a funeral stone.

கல்லெரிப்பு—கல்லெரிப்புமேகம், *s.* Incontinence of urine, நீர்ச்சுருக்குநோய். (*Mat. Ind.*)

கல்லெறி, *v noun.* The throwing of a stone, கல்லெறிகை. 2. *s.* The distance of a stone's throw, கல்லெறிதூரம். 3. A sling, கவண்.

கல்லெறிய, *inf.* To throw or fling a stone, to pelt with stones.

கல்லெறிதூரம், *s.* The distance of a stone's throw.

கல்லைநீராக்கி, *s.* A kind of ore, மாமிசபேதி.

கல்லொட்டி, *s.* A snail, நத்தை. (*M. Dic.*)

கல்வீடு, *s.* A stone or brick-built house.

கல்வெட்டி, *s.* A stone-cutter, a lapidary, கல்வெட்டுவோன்.

கல்வெட்டு, *s.* A stone-cutting, engraving in stones, சிலாசாதனம். 2. A stanza, foretelling or commemorating some important event; such stanzas appear sometimes to have been engraven in stone (whence the name), a recorded prediction, அறிவாற்கவி. 3. [*prov.*] A stanza commemorative of the death of an ancestor, mentioning the day and hour of the moon when it happened, kept by the descendants to assist in determining the precise time for the annual funeral rites, பிதிர்க்கிரியைக்குச்செய்யுள். 4. [*prov.*] The name of a well-known stanza, believed to have been written during the period of a Tamil Dynasty in Ceylon, foretelling, as it is interpreted, a succession of different foreign powers, and the final restoration of native rule, in those regions. It is as follows: முன்னேகுளக்கோட்டன்மூட்டுந்திருப்பணியைப்—பின்னேபறங்கிபிரிப்பனே — மன்னாகேள்—பூனைக்கண்செங்கண்புகைக்கண்ணனுண்டாண்டபின்பு—மானே வடுகாய்வரும். "The sacred edifices which the king Koolakottan reared, the Portuguese will demolish, listen O king—after the reign of the cat-eyed, the red-eyed and the smoke-eyed, O thou deer-eyed, the Vaduca will succeed." There is a different version of the last line, but it does not affect the general meaning—the smoke-eyed are said to be the present dominant power.

கல்வெள்ளி, *s.* A mixture of tin and iron, இரும்பும்வெள்ளீயமுங்கலந்தது. 2. [*prov.*] Hard inferior silver mixed with much alloy.

கல்வேதி, *s.* A kind of ore, சகஸ்திரபேதி.

கற்கட்ட, *inf.* To build with stones or bricks without cement, to wall a well, &c., கல்லாறகட்ட. 2. To set stones, enchase, கற்பதிக்க.

கற்கட்டுமோதிரம், *s.* A ring set with a stone.

கற்கண்டு, *s.* Sugar-candy.

கற்கருசிலை, *s.* A plant.

கற்கனல், *s.* A kind of native arsenic.

கற்காந்தம், *s.* A kind of loadstone.

கற்காமி, *s.* The same as அல்மதம்.

கற்காரம், *s.* Lapis infernalis, காரக்கல்.

கற்காவி, *s.* Ochre, காவிக்கல்.

கற்குடல், *s.* Costiveness, constipation, மந்தக்குடல்.

கற்குவியல்—கற்குவை, *s.* A heap of stones.

கற்குளிக்க, *inf.* To dive for gems, கடலிற்குளித்திரத்தினமெடுக்க.

கற்கொத்தி, *s.* A species of wild pigeon—as கற்பொறுக்கிப்புறு.

கற்சட்டி, *s.* A stone-pot, கல்லினாற்செய்தசட்டி.

கற்சரீரம், *s.* A hard, stone-like body, whether of men or brutes, வன்மையானவுடல்.

கற்சாகம், *s.* Emerald, மரகதம். (*M. Dic.*)

கற்சாடி, *s.* A stone-jar, a stone-pitcher, கல்லினாற்செய்தசாடி.

கற்சிற்பர், *s.* Stone masons, brick-layers, stone-cutters, &c., கற்றச்சர். See சிற்பர்.

கற்சுண்ணாம்பு, *s.* Stone-lime.

கற்சுவர், *s.* A brick or stone-wall, கல்லினாற்செய்தசுவர்.

கற்படி, *s.* A stone-step, or flight of stone-steps, கல்லினாற்செய்தபடி.

கற்படுக்க, *inf.* To pave, கற்பதிக்க.

கற்படை—கற்புழை, *s.* A secret way into a fort, a sally-port, கோட்டையிற்கள்ளவழி.

கற்பதிக்க, *inf.* To pave, கல்லுப்படுக்க. 2. To set precious stones, enchase, மணிபதிக்க.

கற்பதித்தவிடம்—கற்படுத்ததரை, *s.* A paved place.

கற்பரன், *s.* A kind of native arsenic, வெள்ளைப்பாஷாணம்.

கற்பரிபாஷாணம், *s.* A kind of arsenic occurring in rocks, அதம்பம்.

கற்பலகை, *s.* A slate, a stone-slate.

கற்பற்று, *s.* Stony concretion in chemical preparation, minerals, &c., to be cleared away, இட்டக்கல்.

கற்பாசி, *s.* A dried pale-colored rock moss.

கற்பாடு, *s.* [*prov.*] Stony ground left uncultivated, கல்லுள்ளவிடம்.

கற்பாஷாணம், *s.* A kind of native arsenic.

கற்பாவை, *s.* A figure made of stone, a statue.

கற்பாழி, *s.* A cavern in a rock, மலைக்குகை.

கற்பாறை, *s.* A rock, கற்றிட்டை.

கற்பூசரம், *s.* A mountain containing lead, காசமலை. (*M. Dic.*)

கற்பூமி, *s.* Stony ground, கல்லுள்ளபூமி.

கற்பை, *s.* [*prov.*] A merchant's or jeweller's bag of weights, scales, touch-stone, &c., நிறைகற்பெய்யும்பை.

கற்பொடி, *s.* Green vitriol, அன்னபேதி.

கற்றச்சன், *s.* A stone-cutter, a hewer of stone, கல்லடிப்பவன்.

கற்றளம், *s.* A floor of stone, a pavement.

பருக்கைக்கல்—பருக்காங்கல், *s.* A gravel stone.

பச்சைக்கல், *s.* Green stone, green quartz, Avanturine. 2. A green stone, Diallage. (*Dr. Heyne.*) 3. The same as சிறிக்கும்பச்சை.

விஷக்கல், *s.* A stone applied to the bite of snakes.

குருந்தக்கல், *s.* The same as குருந்தம்.

நெருப்புக்கல், *s.* Lapis infernalis, Nitrate of silver, காடிக்காரம். (*M. Dic.*)

மாக்கல், *s.* Steatite, Spanish chalk, a whetstone.

துருக்கல், *s.* Iron stone.

குழிக்கல், *s.* The same as கலுவம்.

கருங்கல், *s.* Black or blue stone, black Hornblende, Sienite. See Dr. Ainslie's Mat. Med.

காய்ச்சுகல், *s.* A counterfeit gem.

தீட்டுகல், *s.* A whetstone.

வெண்கல், *s.* White stone, quartz.

தேய்கல், *s.* A touchstone.

கல், கற்கிறேன், கற்றேன், கற்பேன், கற்க, *v. a.* To learn, study, acquire knowledge, கல்விகற்க. 2. To practise arts, the use of arms, படைக்கலமுதலியபயில.

கற்கசடறக்கற்பவைகற்றபின்நிற்கவதற்குத்தக. Learn perfectly what thou hast to learn, and when thou hast learned it, act upon and persist in it. (திருவள்.)

கல்லாதவன், *s.* An illiterate, ignorant man, an idiot.

கல்லாமை, *v. noun.* Want of learning, ignorance.

கல்லார், *s.* Unlearned, illiterate men, அறியாதார். 2. Low people, கீழ்மக்கள்.

கற்போன், *s.* A scholar, a pupil, மாணாக்கன்.

கற்றவர்—கற்றார்—கற்றோர், *s.* The learned, படித்தவர். 2. Poets, புலவர்.

கற்றறிமூடன், *s.* A learned fool, one who knows but does not practise (morality, &c.).

கற்றறிவு, *s.* Acquired knowledge, learning.

கற்றுக்குட்டி, *s.* A very young scholar, கற்குஞ்சிறுவன். 2. One who has acquired a smattering of knowledge—as taught him without exercising judgment; a superficial scholar, சிறிதகற்றவன்.

கற்றுக்கொடுக்க, *inf.* To instruct.

கற்றுக்கொள்ள, *inf.* To learn.

கற்றுச்சொல்லி, *s.* A poet's assistant who learns and sings his verses, தலைக்கவிஞன்.

கற்றல், *v. noun.* Learning.

கற்றல்கேட்டல்பயிறல். In making an accomplished scholar, study, enquiry or (hearing), intercourse with the learned are necessary.

கல்—கல்லு, கிறேன், கல்லினேன், கல்லுவேன், கல்ல, *v. a.* To work away earth, pebbles, &c., gradually, அகழ. 2. To dig out by little and little—as a hole, a tank, &c., to hollow, தோண்ட. 3. To scoop out—as a nut, குடைய. 4. To wash away earth, &c., by little and little—as flowing water, கீக்கல்ல. 5. To eat away—as caustic, அரிக்க. 6. [*prov.*] To catch and tear up the fibre in an ola when writing—as a style by being too sharp, எழுத்தாணிக்கூர்கல்ல.

இக்காரங்கல்லிக்கல்லிவிடுத்தப்போடும். This caustic will eat away (the proud flesh).

மலைகல்லிஎலிபிடிக்க. To excavate a mountain to catch a rat; i. e. to take great pains or be at great expense for little profit.

கல்லிக்கல்லிப்பாய, *inf.* To wash away in flowing.

கல்லல், *v. noun.* The act of digging, தோண்டல். 2. *s.* The noise issuing from a crowd, பேரொலிபெருமொலி.

கல்லணை, *s.* A saddle, குதிரைச்சேணம்.

கல்லத்தி, *s.* A tree, ஓரத்திமரம்.

கல்லழிஞ்சில், *s.* A species of அழிஞ்சில்.

கல்லாடம், *s.* A work on the third part of grammar, ஓர்நூல்.

கல்லாடர், *s.* The author of the above, கல்லாடஞ்செய்தபுலவர்.

கல்லாரம், *s.* The red water-lily, செங்குவளை. 2. A water-plant, நீர்க்குளிரி, Damasonium Indicum, *L.*

கல்லாலமரம்—கல்லால், *s.* The stone-banyan tree under the shade of which Siva sat when he taught wisdom, ஓராலமரம், Ficus verus.

கல்லி, *s.* A tortoise, ஆமை. 2. A sparrow, ஊர்க்குருவி. (*p.*) (சது.) 3. (*Hin.*) A triangular piece of cloth, a gore in the long coat of a Hindu jacket.

கல்லிச்சி—கல்லித்தி, *s.* A species of இத்தி tree.

*கல்லியம், *s.* Toddy, fermented liquor, கள். (*p.*)

கல்லுக்கலைக்காத்தான், *s.* A plant called பொன்னுக்காணி.

கல்லுண்டை, *s.* A kind of rice, ஓர்நெல்.

கல்லுருணி, *s.* A kind of parasite growing on the branches of trees, புல்லுருவி.

கல்லுருவி, *s.* A kind of herb, ஓர்பூடு, Ammannia densiflora, *L.*

கல்லுளுவை, *s.* A fish, ஓர்மீன். See உளுவை.

கல்லூரி, *s.* An academy, college, a school where the arts and sciences are taught and practised, கல்விபயிலுமிடம். (*p.*)

கல்லெனல், *v. noun.* An imitative sound, ஒலிக்குறிப்பு.

கல்லை, *s.* The knob of a wooden sandal, பாதக்குறட்டின்குமிழ். (*p.*) 2. Leaves stitched together with fibre, இலைக்கலம். (பிங்.) 3. Calumny, aspersion, அலர்.

கல்லைகுத்த—கல்லைதைக்க, *inf.* To stitch leaves together—as a temporary plate.

கல்லைசெய்ய, *inf.* To defame.

கல்லைப்பட்டுப்போனவன்—கல்லைப்பட்டவன், *s.* One who is defamed or ill-spoken of.

கல்லோலம், *s.* Billows, waves, surges, கடற்றிரை. 2. Ripple, புனற்றிரை. (*p.*)

கல்லோலங்கடலலாட்ட. The waves lulling to repose—

கல்வம்—கலுவம், *s.* (*Tel.*) A nether hollow grinding stone, a kind of mortar, குழியம்மி.

கல்வி, *s.* Learning, erudition, study, அறிவு. 2. Science, literature, வித்தை. 3. Arts, practice, சந்தை. 4. Scientific works, நூல்.

கல்விகற்க, *inf.* To acquire learning, &c.

கல்விக்களஞ்சியம், *s.* A repository of learning, or a learned man.

கல்விக்கிருப்பிடம், *s.* The seat of learning, or a very learned man.

கல்விச்சாதனம், *s.* The elements or rudiments of science.

கல்வித்திறம், *s.* Ability, சாமர்த்தியம்.

கல்வித்துறை, *s.* Branches of a science. 2. Any science, literature.

கல்விநூல், *s.* Scientific or literary works.

கல்விபயில, *inf.* To learn and practise arts and sciences.

கல்விபயிலிடம்-கல்விபயிலுமிடம், *s.* A school for the arts and sciences, a college. a seminary.

கல்விப்பரிட்சை, *s.* Experimental acquaintance with science, literature, &c.

கல்விப்பொருள், *s.* Learning considered as property, in distinction from செல்வப்பொருள், substance or material wealth.

கல்விமதம், *s.* Pride of learning.

கல்விமான், *s.* A learned man.

கல்வியறிவு, *s.* Acquired knowledge.

கல்வியூரி, *s.* A school especially for the arts and sciences, a seminary, a college, கல்லூரி.

*கவசம், *s.* Armor, mail, a jacket or coat-of-mail, சட்டை. 2. An incantation repeated for defence, ஓர்மந்திரம். 3. An amulet, a charm worn as a defence from evil, phylactery, spell, காப்பு. 4. The mystical syllable *hum*, forming part of a mantra and considered as a preservative or armor inscribed or carried about the person as a charm, மந்திரத்திரேருறுப்பு. (*p.*) 5. (*c.*) A lute, a clayey composition with which chemists close vessels, சீலைமண். Wils. p. 204. Kavacha. 6. A medicinal composition, used as a cover for medicines for reducing them to ashes, மருந்துக்கவசம்.

கவசகுண்டலன், *s.* The king கன்னன்—said to have been born with a coat-of-mail and ear-rings, கவசத்தோடுங்குண்டலத்தோடும்பிறந்தகன்னன்.

கவசங்கட்ட, *inf.* To bind or restrain malignant deities, &c., by repeating the defensive incantations, as the initiatory part of the daily worship, in order to prevent their depriving the worshipper of the benefit, &c., மந்திரத்தினுற்காவற்பண்ண. 2. To cover or overspread with loam or clay, to lute, சீலையாஸ்வாய்கட்ட.

கவசந்தரிக்க, *inf.* To put on a coat-of-armor.

கைக்கவசம், *s.* A gauntlet, an iron glove used for defence.

மெய்க்கவசம், *s.* A jacket, a coat-of-mail.

மார்க்கவசம், *s.* A breast-plate.

தோட்கவசம், *s.* A leathern jacket.

கவடம், *s.* See கபடம்.

கவடி, *s.* A small sea-shell used in Bengal as coin, a cowry, பலகறை. 2. A kind of play, leap-frog, ஓர்விளையாட்டு.

கவடிபாய, *inf.* To play at leap-frog and other leaping games.

கவடு, *s.* A branch of a tree, மரக்கிளை. 2. A forked branch, கவர்க்கோடு. 3. A rope for the neck of beasts, a halter, கழுத்திடுகயிறு. 4. An elephant rope, யானைகட்டுங்கயிறு. (*p.*) 5. [*prov.*] The opening of the thighs whether extended or not, தொடைச்சந்து. 6. [*vul.*] Fraud, deceit, கபடம். 7. A stride, the length of a step, a pace, இடப்படி.

அவன்கவட்டிலேநுழைந்தான். He passed between the extended legs of the other; i.e. he has submitted to him.

கவடுவிட, *inf.* To grow forked as a branch.

கவடுவைக்க, *inf.* [*prov.*] To pace, straddle, stride.

கவடுள்ளமனம், *s.* A cunning, deceitful mind.

கவட்டடி, *s.* [*prov.*] A stride, a pace.

கவட்டுக்காலன், *s.* A bandy-legged person, a straddler, விரித்தகாலன்.

கவட்டுநெஞ்சன், *s.* A cunning, artful, sly, designing person, கபடன்.

கவட்டு, கிறேன், கவட்டினேன், வேன், கவட்ட, *v. a.* To chew, masticate, மெல்ல. (கூர்ம.) (*p.*)

கவட்டல், *v. noun.* The act of chewing, மெல்லல்.

கவட்டை, *s.* [*prov.*] The fork of a branch, கவர்.

கவணம், *s.* A bandage for a wound, காயக்கட்டு.

கவணங்கட்ட, *inf.* To bind up, to dress a wound.

கவணி, *s* [*vul.*] Muslin, ஓர்சீலை.

கவணிச்சால்வை, *s.* [*prov.*] A muslin shawl.

கவணிப்புடவை, *s.* Muslin.

கவணை, *s.* A sling, கவண். 2. A place for putting grass or straw for cattle to eat, மாட்டுக்குப்புல்லிடுமிடம்.

கவண், *s.* A sling, கல்லெறிகருவி.

கவணெறிய—கவண்வீச, *inf.* To sling.

கவண்கல், *s.* A stone cast by a sling.

கவண்காரன், *s.* A slinger.

கவண்சுழற்ற, *inf.* To whirl a sling, to sling.

கவண்டர், *s.* Scoundrels, rogues, சண்டாளர். 2. A caste so called, ஓர்சாதியார்.

கவண்டி — கவண்டு, *s.* [*vul.*] A sling, கவண்.

கவண்டெறிய—கவண்டாலெறிய, *inf.* To sling.

*கவந்தம், *s.* Headless bodies, உடற்குறை. 2. Water, நீர். Wils. p. 190. Kavand'ha. (*p.*)

கவந்தன், *s.* An Asoor whose body wants the head, ஓரசுரன். Wils. p. 190. Kavand'hah.

கவம்—கவ்வம், *s.* (*Tel.* కవ్వము.) A churning stick, மத்து. (*p.*) 2. [*as* கபம்.] Phlegm.

கவக்குன்று—கவ்வக்குன்று, *s.* The mountain Mandara with which the gods churned the ocean.

*கவயம்—கவயல், *s.* A species of ox, the gayal or wild cow, காட்டா, Bos gawns bison. Wils. p. 286. Gavaya. (*p.*)

*கவரம், *s.* A long flexible brush, used both as a whisk and as a fan, சாமரம். Wils. p. 204. Kavara. 2. Fury, rage, wrath, சினம். (*p.*)

*கவராசம்—கவராயம், *s.* A pair of compasses, கவருசி. (*c.*)

கவராசமிட, *inf.* To draw a circle with compasses.

*கவரி, *s.* The yac or bos grunniens, கவரிமா. 2. A hair fan formed of the tail of the yac used for fanning idols at temple festivals, சாமரை. 3. (*c.*) A buffalo, எருமை. 4. A car, a chariot, தேர். (பாரதி.) (*p.*)

கவரிமா—கவரிமான், *s.* The yac, கவரிமிருகம்.

கவரிறுக்கு, *s.* A kind of tree, கடவுமரம், Gyrocarpus jacquini.

கவரெழுசங்கம், *s.* A kind of shrub, முட்சங்கம், Monetia tetracantha, *L.*

கவர், *s.* A bifurcated branch, மரக்கப்பு. 2. Divarication of branches, roads, rivers, &c., இரண்டாகப்பிரிகை. 3. Prong of a trident, fork, &c., tooth, tine, spike, சூலத்தின்கவர். 4. A cavity or a kind of mortice on the top of a gate or door post to receive a beam. 5. (*p.*) (சது.) A plantain tree, வாழை.

கப்புங்கவருமானமரம். A tree with forked branches.

கவராறு, *s.* The branching or junction of rivers.

கவர்க்கால், *s.* A forked prop. 2. A tree with forked branches.

கவர்க்குளம்பு, *s.* A cloven foot.

கவர்க்கொம்பு, *s.* A bifurcated branch.

கவர்த்தடி, *s.* A forked stick used as a pitch-fork, கவர்க்கோல்.

கவர்பட, *inf.* To be ambiguous—as language, இருபொருள்பட. 2. To hesitate, fluctuate, சிக்குப்பட.

கவர்படுமொழி, *s.* An ambiguity, இருபொருள்படுமொழி.

கவர்வழி, *s.* A place where a road divides itself into two, கிளைவழி.

கவர்விட, *inf.* To grow forked, divaricate, diverge, கப்புவிட. 2. To be ambiguous—as words or language, இருபொருள்பட. 3. To be undecided, சந்தேகமாயிருக்க. 4. To ramify or branch out—as a subject, கிளைக்க.

கவர்ப்பு, *v. noun.* Forking, bifurcation, ramification.

கவர்—கவரு, கிறேன், கவர்ந்தேன், வேன், கவர, v. a. To seize, grasp, catch, capture, bereave, take by force or stealth, பறிக்க. 2. To ravish, charm, captivate, attract, arrest, பிரமித்துக்கொள்ள. 3. To rob, steal, plunder, pillage, கொள்ளையிட. 4. To embezzle, appropriate by force or stealth, திருட. 5. To engross, usurp, grasp in large quantities, மிகச்சேர்க்க. 6. To carry off, வார. 7. (p) To lust after, இச்சிக்க. 8. To churn, turn by trituration or attrition, கடைய.

கண்கவர்வனப்பு, s. Beauty that captivates the sight.

கவர்ச்சி, v. noun. Seizure, grasp, captivation, bereavement, attraction.

கவர்தல், v. noun. Plundering, கொள்ளையிடல். 2. Stealing, திருடல். 3. Inflamed desire or lust, ஆசைப்பெருக்கம். 4. Churning, கடைதல். 5. Carrying off, வாருதல்.

கவர்வு, v. noun. Seizure, grasp, &c.

கவலை, s. Care, anxiety, solicitude, விசாரம். 2. Regret, sorrow, distress, affliction, grief, துன்பம். 3. A kind of creeping plant with a beautiful flower and yielding an edible root, நீர்கொடி. 4. Red millet, செந்தினை. 5. Concern, அக்கறை. 6. (p.) Fear, dread, அச்சம். 7. Disease, pain, நோய். 8. A basket of leather to draw water, கிணற்றுக்குந்தோற்கூடை. 9. Cross roads, சந்தி. 10. Diverging roads, கவர்வழி. 11. A branch, the forking of branches, a fork, மரக்கொம்பு.

இப்போதுனக்குக்கவலையில்லாததாலிதையெழுது.... Write this since thou art not otherwise occupied.

கவலைகொள்ள, inf. To be concerned, anxious, sorrowful; to regret.

கவலைப்பட, inf. To be concerned, be solicitous, be anxious, to care. 2. To lament, sorrow, regret.

கவலைபாய்ந்துபோக — கவலையாயிருக்க, inf. To be careless or confused.

கவலையேற்றம், s. A machine for drawing water by a rope, passing over a wheel and attached to a leathern basket.

தீராக்கவலை, s. Unceasing, unabating, interminable sorrow.

கவல், s. Care, affliction, கவலை. (சீதிசெ.) (p.)

கவல், கிறேன், கவன்றேன், வேன், கவல, v. n. To be anxious, concerned, distressed, to be in anguish, கவலைப்பட. 2. To regret, sorrow, lament, mourn deeply—as for a near relative or dear friend; to bemoan, புலம்ப. 3. To be afflicted either bodily or mentally, துன்பப்பட. 4. To sound indistinctly, பேசலாலொலியெழ. (p.)

கவலல், s. Concern, a noise issuing from a crowd, பேசலாலெழுமொலி.

கவறல், v. noun. Sorrowing, grieving, வருந்துதல்.

கவற்சி, v. noun. Concern, deep care, anxiety, grief, sorrow, anguish, வருத்தம்.

கவவு, கிறேன், கவவினேன், வேன், கவவ, v. n. To put in, insert, inclose, அகத்திட. (p.)

கவவு, v. noun. Rolling in, inclosing, insertion, அகத்திடுகை.

கவவுக்கைநெகிழாமல். The arm that embraces (her) remaining unrelaxed—

கவழிகை, s. Curtains, திரைச்சீலை. (p.)

*கவளம், s. A morsel, a mouthful of food, வாயளவுகொண்டவுணவு. Wils. p. 204. Kavala. 2. A ball of rice or other grain for an elephant, யானைக்களிக்குங்கவளம். 3. Boiled rice, சோறு.

கவளங்கொடுக்க — கவளம்போட, inf. To feed elephants with balls of rice. 2. To put the rice into the mouth in large lumps.

கவளி—கவளிகை, s. [vul.] A bundle of one-hundred betel leaves, வெற்றிலைக்கைப்பாக்கு.

கவளிகரி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. a. To take food—as an elephant, விழுங்க. 2. To devour, அதிகமாகவிழுங்க. 3. To deprive others of their property, அபகரிக்க. (c.)

கவறு, s. Dice, சூதாடுகருவி. 2. [prov.] Palmyra timber, பனம்பட்டை.

கவறுபோட — கவறுருட்ட — கவறெறிய, inf. To cast dice.

கவறை, s. A tribe of natives in Southern India, ஓர்சாதி—also called கவறைவடுகர். (c.)

கவறைச்செட்டி, s. An inferior division of the செட்டி caste.

கவனம், s. Attention, care, heedfulness, mindfulness, notice, intentness, mental application, observance, கருத்து. 2. (p.) Rapidity, celerity, velocity, சீக்கிரம். 3. The paces of a horse, குதிரைநடை. 4. Perplexity, bewilderment, கலக்கம். 5. Vehemence, கடுப்பு. 6. Jungle, forest, desert, காடு. 7. Army, படை.

கவனமாய், adv. Attentively, carefully, intently.

கவனமில்லாமை, neg. v. noun. Neglectfulness, inattention, heedlessness.

கவனன், s. A quick person, a person of penetration. (p.)

கவனி, s. A kind of arsenic in its natural state.

கவனி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. and v. n. (c.) To be attentive, to attend to, take notice of, to heed, observe, exercise thought, நினைவுகூர.

கவனித்துக்கேட்க, inf. To hear attentively.

கவனித்துப்பார்க்க, inf. To look at with attention, to heed, observe.

கவனிப்பு, v. noun. Attention, care, கவனிக்கை.

கவா—கவாச்சி, s. [as வெள்ளைக்காக்கணம்.] A medicinal plant bearing a blue flower, Clitoria ternatea, and its variety, with a white flower.

*கவாடம், s. [as கபாடம்.] A door, கதவு. Wils. p. 204. Kavata.

கவாடம், s. A bullock load of grass or straw, பொதி. (c.)

க்வாடக்காரன், s. One who conveys such loads on bullocks.

*கவாட்சம்—கவாட்சி, s. A round window, வட்டச்சாளரம். Wils. p. 286. Gavaksha.

கவாத்து—கவாய்த்து, s. (For.) Military exercise, ஆயுதபரிட்சை. (Rott.)

கவாய்—கபாய், s. (Port.) A kind of Turkish garment, மெய்புறை.

கவாளம், s. Horse physic, ஓர்மருந்து. (Old Dic.) 2. (Rott.) A dressing of a wound, கவணம்.

கவான், s. The thighs, the lap, தொடை. (p.)

*கவி, s. Planet venus, சுக்கிரன். 2. A poet, a versifier, புலவன். Wils. p. 204. Kavi. 3. An ape, a monkey, குரங்கு. 4. A plant, பூனைக்காலி. 5. One of the four classes of poets, கற்கவி. (See புலமையோர்.) 6. Poetry, verse, a stanza, பாட்டு. (p.) Poetry is of four kinds, viz.: 1. ஆசுகவி, an extemporaneous poem made by request, the theme, the kind of verse and some of the rhetorical figures to be wrought into it being given. 2. மதுரகவி, a poem in which sublime and gratifying ideas are couched in rich language, with varied appropriate rhymes and rhetorical figures, and all in a sweet flowing style. 3. சித்திரகவி, a poem variously or artfully composed. (See மிறைக்கவி.) 4. வித்தாரகவி, an extended poem, such as the great epics Ramayana and Bharata.—Note. Each of these four is also applied to the poet as well as to the poem.

கவிகட்ட—கவிபாட, inf. To make verses.

கவிசற்றோர், s. Panegyrists attending a prince in his movements, மங்கலப்பாடகர்.

கவிசொல்ல, inf. To make poetry.

கவிச்சக்கரவர்த்தி, s. A distinguished poet, புலவன்.

கவிஞர், s. Poets, bards, புலவர். 2. Scientific persons, கலைவல்லோர். (p.)

கவிதை, s. A poem, poetry, verse, a verse of poetry, stanza, பா. (p.)

கவித்துவம், s. Poetic style or composition, புலமைத்தன்மை.

கவிநாயகன், s. The person to whom a poem is dedicated, who is also the hero, கவித்தலைவன்.

கவிமாலை, s. Verses joined together.

கவிரத்தினம், s. A treatise on versification.

கவிராயன், s. (Hon.) A poet, புலவன்.

கவிவல்லோர்-கவிவாணர், s. Learned poets, bards, புலவர்.

கவிவீரராகவமுதலியார், s. The names of two eminent poets, viz.: அந்தக்கவிவீரராகவமுதலியார்—முத்தமிழ்க்கவிவீரராகவமுதலியார், the first of whom is said to have been born blind. (Rott.)

கவீச்சுரர், s. Eminent poets.

கவி, கிறது, ந்தது, யும், ய, v. n. To cover, over-spread, bend in or over, overshadow—as branches of trees, the heavens, clouds, &c.; to canopy, over-spread, bend over, வளைய. 2. To be eager, intent, earnest; to have the mind bent upon a thing, விரும்ப. (p.)

மேகக்கன்மலைசிகரத்தைக்கவிந்துகொண்டன. The clouds have covered the mountain top.

அவர்மனக்கவிந்திருக்கின்றது. He is very eager after it.

வான்கவிந்தவையகமெல்லாம்பெறினும். Though the whole world canopied by the heavens be thy reward—

கவிகை, *v. noun.* Bending, being concave, கவிவு. 2. *s.* An umbrella, குடை. 3. Liberality, munificence, ஈகை. (*p.*)

கவிதல், *v. noun.* Bending.

கவிவு, *v. noun.* Bending, bent down, concave, inclined.

தாழ்வாரக்கவிவாயிருக்கிறது. The lower part of the roof is too much depressed.

கவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cover—as with an umbrella; to canopy, over-spread, bend inwards, மூட. (*p.*)

குடைகவித்தான். He covered himself with an umbrella.

கவிப்பு, *v. noun.* Covering, concavity, a bending, curvity, flexure, inclination, மூடிகை. 2. *s.* An umbrella, a canopy, குடை. (*p.*) 3. In divination by astrology, the signs which stand as many signs forward from the rising sign, as the situation of the sun is from the ஆருடம், இராசிக்கவிப்பு. (See ஆருடம் and உதயம்.) 4. Partiality, affection, bias, favoritism, மனக்கவிப்பு.

அவரிவர்கள்மேலேகவிப்பாயிருக்கிறார். He is partial, favorably inclined, &c., toward them.

கவிகம், *s.* A gum, குக்கில். (*Rott.*)

கவிகுருந்தம், *s.* A kind of arsenic, கந்தகபாஷாணம்.

கவிசனை, *s.* (*local.*) A wrapper, an envelope, a cover, உறை.

கவிசினம், *s.* [*prop.* கௌபீனம்.] The under-cloth or fore-flap, கோவணம்.

கவிசினங்கட்ட, *inf.* To fasten up the fore-flap.

கவிசை, *s.* A tumor or swelling in the belly, நீர்நோய். (*Rott.*)

கவிச்சு, *s.* [*vul.*] Stench of fish, raw flesh, bad eggs, &c., புலால்.

கவிச்சடிக்க, *inf.* To smell rankly.

இரத்தக்கவிச்சு, *s.* The odor of blood.

மீன்கவிச்சு, *s.* The smell of fish.

கவித்தம், *s.* See கபித்தம்.

கவிப்பர், *s.* Chitties, the caste, செட்டிகள். (*p.*)

கவியம், *s.* A bridle, reins, கடிவாளம். (*p.*) 2. (*Anat.*) Frænum. Wils. p. 204. KAVYA.

கவிரம், *s.* The oleander plant, அலரி, Nerium odorum, *L.* (*p.*)

கவிர், *s.* A thorny tree of rapid growth used for hedging, and for the support of betel vines, &c., முண்முருக்கு, Erythrina Indica, *L.* (*p.*)

கவிழ், கிறது, ந்தது, கவிழும், கவிழ, *v. n.* To be capsized, turned bottom upwards, turned down, தலைகீழாக. 2. To hang down the head with modesty, shame, confusion, &c., தலைகுனிக. 3. To stoop, lower one's self, குனிய. 4. To be subverted, overthrown, routed, destroyed, demolished, கெட. 5. (*p.*) To be discomfited, தோற்க. 6. To die, perish, இறக்க. (ஸ்கா.)

கவிழ்ந்துபோனான். He is dead (as a vessel sunk).

கவிழ்மதத்தகைம்மா. The elephant from whose temples the secretion flows.

குடத்தத்தண்ணீர்கவிழ்ந்துபோயிற்று. The pot of water is over-turned.

கவிழ—கவிழ்ந்துவிழ, *inf.* To fall headlong.

முகங்கவிழ, *inf.* To be put to shame.

தோணிகவிழ, *inf.* To be capsized or sunk—as a dhoney.

தலைகவிழ, *inf.* To hang the head.

எல்லாருக்குந்தலைகவிழுகிறவன். One who is obeisant, civil, &c., to every one.

தலைகவிழப்பேச, *inf.* To abuse one so as to cause him to hang his head.

கவிழ்ச்சி—கவிழ்வு, *v. noun.* Overturning, subversion, கவிழுகை.

கவிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To turn upside down, turn partly over, to capsize, invert, கவிழச்செய்ய. 2. To subvert, overthrow, discomfit, destroy, கெடுக்க.

தன்வாய்க்கஞ்சியைக்கவிழ்த்துப்போட்டான். He has upset the congee of his own mouth; i.e. he has deprived himself of his maintenance.

தேசத்தையொருகாற்கீழ்மேலாய்க்கவிழ்த்துப்போட்டான். He has once turned the country upside down; i.e. made a great change in public affairs.

கவிழ்த்திட—கவிழ்த்துவிட, *inf.* To turn upside down, &c.

கவிழ்த்தல் — கவிழ்ப்பு, *v. noun.* Over-turning.

கவினம், *s.* Bridle, reins, கடிவாளம். 2. Butter, வெண்ணெய். (*Rott.*)

கவின், *s.* Beauty, grace, fairness, comeliness, elegance, அழகு. (*p.*) 2. (*fig.*) The appropriate qualities, characteristics of a person or thing, தக்கபண்பு.

கவினறுந்தும்பையுங் கொன்றையுஞ்சூடியகண்ணுதல். The frontal-eyed beautiful Siva adorned with garlands of தும்பை and கொன்றை flowers.

கவின்—கவினு, கிறது, கவின்றது, கவினும், கவின, *v. n.* To be beautiful, fair, graceful, comely, elegant, அழகாயிருக்க. (*p.*)

கவினம், *s.* A place where cattle have grazed, பசுமேய்ந்தஇடம். (*p.*)

கவுசி, *s.* Fainting, குழைவு. 2. Affliction, வருத்தம். (*p.*)

கவுடி, *s.* A mode of singing, ஓர்பண். (*p.*)

கவுதாரி, *s.* A partridge, ஓர்பறவை, Tetrao cinerea, *L.*

கவுல், *s.* (*Hin.*) A treaty, capitulation, உடம்படிக்கை. 2. [*prov.*] A bad smell, நாற்றம்.

கவுள், *s.* The cheeks, கதுப்பு. 2. The jaws of an elephant, யானைக்கதுப்பு. 3. The frontal sinus of the elephant whence flows a secretion called the rut, யானைமதம்பாயிடம். (*p.*)

கவுனி, *s.* A kind of arsenic in its natural state, குதிரைப்பாஷாணம். 2. (*Tel.*) [*prov.*] The gate of a fort, வாசல்.

கவை, *s.* The fork of a branch or tree, மரக்கப்பு. 2. Cross roads, diverging paths, கவர்வழி. 3. Desert, wood, jungle, காடு. 4. Fort, fortification, கோட்டை. (*p.*) 5. (*c.*) Concern, business, வேலை. 6. (*Anat.*) Sigmoid, notch, எலும்புக்கவை.

கவைக்கொம்பு, *s.* A forked branch. 2. A forked horn, antler.

கவைத்தடி, *s.* A forked stick. 2. A pitch-fork.

கவைத்தாள், *s.* A crab, நண்டு.

கவைநா, *s.* Snake, பாம்பு.

கவையடி-கவைக்குளம்பு, *s.* Cloven foot, பிளவடி.

கவ்வாணம், *s.* A kind of singing or tune, ஓர்பண். (சது.)

கவ்வு, *s.* Fork of a branch or horn, கவர். 2. Greatness, பெருமை. (*p.*) 3. A mouthful, grasp of the mouth.

கவவை, *s.* Care, &c. See கௌவை.

கவ்வைபார்க்க, *inf.* To be employed, to attend to business.

கழகம்—கழகு, *s.* A public place of learning, a college, கல்விபயிலுமிடம். 2. An assembly of learned men, கல்விச்சங்கம். 3. A theatre, a stage, a place for practising the use of arms, படைபயிலுமிடம். 4. A public hall for wrestling, boxing, gaming, &c., மல்பயில்சாலை. 5. Place for gaming, playing dice, &c., சூதாடுமிடம். 6. Gaming, சூது. (*p.*)

கழங்கம், *s.* Conical pieces in the play of draughts or dice, சூதாடுகருவி. (சது.) (*p.*)

கழங்கு, *s.* A shrub bearing a nut, கழற்சிக்கொடி, Guilandina bonduce. 2. A play among females with the above nuts, கழற்சிவிளையாட்டு. 3. Possession by a spirit for uttering oracles, &c., வெறியாட்டாளனுடல். (*p.*)

கழஞ்சு, *s.* An apothecary's or jeweller's weight, பன்னிரண்டுபணவெடை.

கழப்பு, கிறேன், கழப்பினேன், வேன், கழப்ப, *v. n.* To be idle, to decline or shuffle work, வேலைசெய்யாதுகாலம்போக்க. (*c.*)

கழப்பன்—கழப்பாளி—கழப்புணி, *s.* An idle, shuffling person.

கழப்புதல் — கழப்புகை, *v. noun.* Laziness, idleness, slothfulness.

கழலை, *s.* A wen, a tubercle, excrescence, புளைகுழல்.

கழலைக்கட்டி, *s.* A wen.

கழல், *s.* The foot, கால். 2. A warrior's ankle rings, வீரக்கழல். 3. Ankle rings worn by the liberal, the beneficient, &c., to encourage a disclosure of wants; the term is often used by synecdoche for the person of the deity or great personage, கொடையாளரணிவது. 4. Sandals, செருப்பு. 5. The கழற்சிக்கொடி plant. (*p.*)

கழலடி, *s.* Ankled leg.

கழற்காய், *s.* The fruit of the கழற்சி crickles, Guilandina bondueella.

கழற்குடம், *s.* A pot of கழற்சி nuts; i.e. one who teaches not according to the capacity of his pupils, but irregularly, teaching that first which should be taught last.

கழல்—கழலு, கிறது, கழன்றது, கழலும், கழல, *v. n.* To become loose—as a fastening, a nail, a shoe, a handle, a lock, a leaf, hair, knot, a part of any mechanism; to be unhinged, to slip off, slough off—as a snake's skin; to become extricated, disentangled, கெடுத்துப்போக. 2. To be put out of joint, be dislocated, பொருத்துவிலக. (*c.*)

எண்ணெய்மயிரைவிட்டுக்கழன்றது. The oil has come off the hair.

தலைச்சாந்துக்கழன்றது. The head-dress is untied.

நின்றவன்மெல்லக்கழன்றுவிட்டான். The person who stood here has slipped away.

கழலக்குத்த, *inf.* [*prov.*] To frustrate an object by an unfavorable remark.

கழலப்போட, *inf.* [*prov.*] To let a thing lie in order that it may pass over and be done better another time, &c.

கழலவிட, *inf.* To connive at, to let a thing pass or escape without notice through leniency, partiality, &c.

நஞ்சுகழலல், *v. noun.* Exuding as the poison of a snake from its fangs.

ஊத்தைகழலல், *v. noun.* Coming off—as dirt from a cloth, a vessel, &c.

கழல்வு—கழலுதல்—கழறல், *v. noun.* Getting loose, கழல்கை.

கழற்சி, *v. noun.* Getting loose, extrication, கழல்வு.

கழறு, கிறேன், கழறினேன், வேன், கழற, *v. a.* To charge earnestly, exhort, premonish, உறுதிசொல்ல. 2. To say, declare, tell, சொல்ல. 3. To importune, press, நெருக்க. (*p.*)

கழற்றுரை, *s.* A charge, premonition, an exhortation, position, assertion, asseveration.

கழறல், *v. noun.* Exhortation, admonition, உறுதிச்சொல். 2. Word, சொல். 3. Plaguing, importuning, நெருக்கல்.

கழற்கொடி—கழற்சி, *s.* A plant of two species, ஓர்கொடி.

கழற்சிக்காய், *s.* The fruit of கழற்சி.

கழற்சிக்கொட்டை, *s.* Nut of the bonduce used by boys as marbles, &c.

கழற்பதி, *s.* A tree, பெருங்குமிழமரம்.

கழற்று, கிறேன், கழற்றினேன், வேன், கழற்ற, *v. a.* To unloose, unfasten, loosen, unhang, unhinge, unlock, unhook, unbolt, unrivet, unscrew, unbutton, unfetter, &c., கழலச்செய்ய. 2. To strip, take off (clothes, jewels, &c.), unclothe, divest, put off the shoes, hat, head-dress, &c; to dismantle, unrig, ஆடைமுதலியனகழற்ற. 3. To disentangle, extricate, disengage, disencumber, நீக்க. 4. To slough the skin—as snakes, horns—as deer, feathers—as birds; to molt, தோல்முதலியனகழற்ற. (*c.*)

அவன்கடுக்கனைக்கழற்றிக்கொடுத்தான். He took off his ear-ring and gave it.

காப்பைக்கழற்ற, *inf.* To loosen or take off the hand rings.

செருப்பைக்கழற்ற, *inf.* To put off the shoes.

கழற்றல், *v. noun.* Putting off.

கழனி, *s.* A field, a corn-field, வயல். 2. (*p.*) Agricultural districts, மருதநிலம். 3. Mud, சேறு. 4. Curtains, திரைச்சீலை. (திவா.)

கழனிப்பயிர், *s.* Paddy.

கழனியடுத்தவர், *s.* Agriculturists, உழவர்.

கழாயர், *s.* Pole-dancers, rope-dancers, tumblers, கழைக்கூத்தர்; [*ex* கழை, a bamboo.] (*p.*)

கழி, *s.* A kind of thread, cotton, yarn, silk, &c., a hawk, a knot, a tie, நூற்சுருள். 2. Salt-pans, உப்பளம். 3. Shallow sea waters, salt rivers, salt marshes, உப்பாறு. 4. Lute-stick, stick for playing on the lute, a plectrum, யாழ்வாசிக்குங்கருவி. 5. A rod, a cudgel, a staff, a branch, a twig, a switch, கொம்பு. 6. *adj.* and *adv.* Much, great, excessive, very extensive, மிகுதி. 7. [*prov.*] A roll of sealing wax, lunar caustic, &c., மெழுகுவர்த்தி.

கழிக்கரை, *s.* Banks of salt rivers, marshes, &c., கழியினதுகரை.

கழிக்கரைப்புலம்பல், *s.* [*in erotics.*] Persons expressing in a soliloquy a lady's lamentations for, and complaints of, her lover's absence, ஓர்பிரபந்தம். (*p.*)

கழிக்காரை, *s.* A plant, ஓர்செடி.

கழிநிலம், *s.* Brackish soil, marshy districts bordering on the sea, உவர்த்தரை. 2. Natural salt-pans, உப்பளம்.

கழிமுகம், *s.* The mouth of a river, ஆற்றுநீர்க்கழிவு.

கழியர், *s.* Salt makers, உப்பமைப்போர். 2. Inhabitants of maritime districts, நெய்தனிலமாக்கள்.

கழியூணன், *s.* A glutton, பேருண்டியான்.

கழி, கிறேன், ந்தேன், வேன், ய, *v n.* To pass by, pass from, go, remove, depart from, to pass through or over a river, &c., to pass away, lapse, கடக்க. 2. To pass as time, a season, prosperity, adversity, &c.; to elapse, become spent, செல்ல. 3. To pass—as excrements, மலங்கழிய. 4. To be discharged, voided—as semen, &c., விந்துகழிய. 5. To be separated or detached from, நீங்க. 6. To be abated, deducted, discounted, &c., ஒழிய. 7. To be rejected, exempted, released, excused, &c., விலக்கப்பட. 8. (*p.*) To be excessive, copious, abundant, intense, to be great in quality or quantity, மிக. 9. To expire, cease, die, சாவ.

சந்தைகழிந்தது. The market is broken up, the fair is over.

அவனுக்குவயிறுகழிகிறது. He has a looseness.

கழிகடை, *s.* The worst, either as to persons or things; refuse, that which is base, rejected.

கழிகெட்டது, *appel. noun.* That which is reprobate, refuse, rejected, the worst, lowest, vilest, மிகக்கெட்டது.

கழிகெட்டவன், *s.* [*prov.*] A reprobate fellow, a vile wretch, மிகவுங்கெட்டவன்.

கழிபிறப்பு, *s.* The birth preceding the present, முற்பிறப்பு. (*p.*)

கழியுடல், *s.* A skeleton, ஊன்கழிந்தவுடல். (*p.*)

வாழ்நாட்கழிய, *inf.* To pass, as one's lifetime.

ஏழரைகழிய, *inf.* To expire, as the seven and half years of Saturn's malign influence. See ஏழு.

ஊன்கழிந்தவெலும்பு, *s.* Pure bones, bones stripped of flesh.

கலன்கழிமடந்தை, *s.* A widow, a woman who has lost her marriage symbol.

கழிச்சல், *v noun.* Flux, looseness, கழிதல். 2. [*vul.*] Cholera, epidemical flux, பேதியாதல்.

கிராணிக்கழிச்சல், *v. noun.* A continued looseness.

இரத்தக்கழிச்சல், *v. noun.* The bloody flux.

கழிதல், *v. noun.* Passing, கடத்தல். 2. Dying, சாதல். 3. Walking, நடத்தல். 4. Abundance, மிகுதி.

கழியல், *v. noun.* Departing, passing, separating, கழிதல். 2. Any thing rejected, கழிக்கப்பட்டது.

கழிவு, *v. noun.* Passing, leaving, separating from, discharge—from the bowels, a sore, &c., கழிகை. 2. Copiousness, abundance, excess, superfluity, intensity, surplus, redundancy, மிகுதி. 3. Things ejected or left, refuse, leavings, dross, scoria, கழிகடை. 4. Exception, release, exemption, rejection, elimination, நீக்குகை. 5. [*in arithmetic.*] Subtraction, கழிப்புக்கணக்கு. 6. Deduction, abatement, defalcation, discount, premium, allowance, தள்ளுபடி. 7. Remainder in arithmetic, சேஷம். 8. [*in logic.*] Inference by implication of opposite, as when it is said of two persons, that one is enlightened by virtuous deeds, we infer that the other is darkened by the retributions of vice; or in a case of robbery between two—that one is honest, that the other is the thief, பரிசேஷம். 9. That which is secondary, inferior, any thing bad or inferior in quality, base, vile, இழிவு.

கழிவில்லை. There is none rejected. 2. There is no abatement, deduction, discount, &c.

கழிவானசரக்கு, *s.* Rejected goods.

கழிவுநிலம், *s.* Waste land—as stony or brackish spots among good land.

பத்திலொன்றுகழிவு, *s.* A deduction or premium of one in ten.

கழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To reject, expel, cast off, discard, exclude, dislodge, remove, strip off, separate from, detach, eliminate, அகற்ற. 2. To evacuate, void, discharge, emit, pass excrements, நீக்க. 3. To except, leave as refuse, abandon, ஒழிக்க. 4. [*in arithmetic.*] To subtract, subduct, கணக்குக்கழிக்க. 5. To deduct, abate, குறைக்க. 6. To discount, remit, தள்ளிக்கொடுக்க. 7. To cut off—as the hair, to pare off the nails, &c., to clear off, clear away, smooth off—as knots by cutting; to prune, lop off, தழைமுதலியகழிக்க. 8. To cast off—as exuviæ, கழற்ற. 9. To pass time, spend time, காலம்போக்க. 10. To exempt, release, free from duties—as postage, விலக்க.

கட்டிக்கழித்தபுடவை. Cast-off garments.

சாத்திக்கழித்தமாலை. Garlands formerly put on an idol taken off before another ceremony.

காலத்தைவீணிலேகழித்துவிட்டான். He spent his time in vain.

மாடுதின்றுகழித்தது. The cow having eaten enough, rejected what remained.

உறைகழித்தவொள்வாள். Glittering drawn swords.

கழித்துக்கொடுக்க, *inf.* To make an allowance in another's favor.

தீட்டுக்கழிக்க, *inf.* To purify from ceremonial uncleanness—as after child-birth, &c.

வருந்திக்கழிக்க, *inf.* To pass time in suffering.

மலங்கழிக்க, *inf.* To pass excrement.

கண்டுகழிக்க, *inf.* To enjoy to satiety—as earthly good. 2. To be deprived of appetite by having much to do with food—as cooks, &c.

சாந்திகழிக்க, *inf.* To remove the evil influence of planets by presenting offerings to them, &c.

எச்சில்கழிக்க, *inf.* To purify a place where some one has taken food.

கழித்தல், *v. noun.* The act of rejecting.

கழிப்பு, *v. noun.* Expulsion, rejection, emission, கழிக்கை. 2. Offering to planets, demons, &c., to remove their malignity, சாந்திகழிக்கை. 3. Blemish, defect, fault, குற்றம். 4. That which is refused, rejected. 5. [*in arithmetic.*] Subtraction, கழிப்புக்கணக்கு.

கழிப்புக்கழிக்க, *inf.* To expel malign influence by offerings. This is done by waving boiled rice, cakes, &c., over the head of the patients after which the materials used are thrown away.

கழிநெடில், *s.* A line of more than five feet in a verse, ஐஞ்சீரின்மிக்கசீராணயவடி. 2. A kind of verse the lines of which consist of more than five feet, கழிநெடில்விருத்தம்.

ழிநெடிலடி, *s.* A line in poetry, consisting of more than five feet, ஐஞ்சீரின்மிக்கவடி.

கழிப்புல், *s.* A kind of grass, Rotbœllia lævis.

கழிமுட்டான், *s.* A kind of grass, ஓர்புல், Apluda aristata.

கழு, *s.* A stake for impaling criminals, கழுமரம். 2. (*p.*) A trident, சூலம். 3. An eagle, கழுகு. 4. [*vul.*] A green clump or clod of grass, புறபற்றை.

கழுக்களம், *s.* A place of execution by impaling.

கழுக்குன்றம்—திருக்கழுக்குன்றம், *s.* A mountain north-west of Madras, sacred to Siva.

கழுச்சிறையன், *s.* One who deserves impaling.

கழுப்பற்றை, *s.* A clump or tuft of grass.

கழுமரம், *s.* A stake for impaling malefactors.

கழுமரம்போலநிற்கிறன். He stands like a stake, sullen, unmoved, &c.—spoken in anger.

கழுமுள், *s.* A trident, சூலம். 2. A spear, a spike, ஈட்டி. 3. A stake for impaling, கழுமரம். 4. Arms in general, ஆயுதப்பொது. 5. Pomegranate tree, மாதளை, Punica granatum. (*p.*)

கழுமோத—கழுவறைய, *inf.* To cover the ground with green clods.

கழுவன், *s.* [*prov.*] A daring villain, a rascal, one deserving the stake, மிகுதுட்டன்.

கழுவாணி, *s.* The iron spike on the top of an impaling stake, கழுவிலுள்ளவாணி.

கழுவாய்நிலம்—கழுவெளி, *s.* A green field from which clods are taken.

கழுவினெய்யுருக்கி, *s.* [*prov.*] A woman who collects the juices that fall from persons impaled as a philter for fascinating paramours—a term of abuse or reproach, கொடியவள்.

கழுவேற, *inf.* To be impaled, கழுவிலேற. 2. To partake voluntarily in another's sufferings, through friendship, பிறன்வருத்தந்தாங்க.

கழுவேறி, *s.* A malefactor, one impaled, கழுவிலேறினவன். 2. A villain, a pest, துணிவுடையவன்.

கழுவேற்ற, *inf.* To impale.

கழுவேற்றம், *v. noun.* Impalement.

சிங்காரக்கழு, *s.* A gibbet.

கழுகு, *s.* An eagle, ஓர்பறவை.

கழுக்கடை, *s.* A spear, ஈட்டி.

கழுக்காணி, *s.* [*prop.* கழுவாணி.] A short thick person, குறளன்.

கழுது, *s.* Demon, a vampire, பிசாசம். 2. A shed with an elevated platform for guarding fields against beasts, birds, &c., பரண். 3. A beetle, வண்டு. 4 Guard, defence, காவல். (*p.*)

கழுதை, *s.* An ass, கத்தபம். 2. (*c.*) A dolt, மடன். 3. (*p.*) The sign of the sixth guardian of the eight angles or points of the world, வடமேற்றிசைப்பாலன்குறி.

கழுதைப்புண்ணுக்குப்புழுதிமருந்து. Dust is the medicine for an ass's wounds; i. e. for the poor any thing serves for medicine.

கழுதையுங்குதிரையும்பிணைத்தாற்போலே. Ill-matched—as an ass and a horse.

கழுதைக்கரணம், *s.* [*in astrology.*] One of the eleven தைதுலாகரணம்.

கழுதைக்குடத்தி—கழுதைப்புலி, *s.* A hyena, புலிக்குடத்தி.

கழுதைக்குட்டி—கழுதைமறி, *s* A young ass.

கழுதைநிறம், *s.* Grey, the color of an ass.

கழுதைக்குணம்—கழுதையாட்டம், Stupidity.

கழுதைத்திசை, *s.* [*in astrology.*] The north-west quarter, வடமேற்றிசை.

கழுதைமயிர்பிடுங்கியூர், *s.* A country where they pluck off the hair of the ass; i.e. doing as others do without reason.

கழுதைவாகனி, *s.* The goddess of ill-luck, மூதேவி.

கழுதைவிட்டை, *s.* Ass's dung.

கழுதைவிட்டையாயினுங்கைநிறையவிருந்தாற்போதும். If the hand is full though with nothing but ass's dung, it is enough; i. e. get a great quantity.

கோவேறுகழுதை, *s.* Mule.

கழுத்தல், *s.* A lie, பொய். (*p.*)

கழுத்து, *s.* The neck of a person, brute, thing, &c., கண்டம்.

கழுத்தடி, *s.* The lower part of the nape of the neck, தோண்மேல்.

கழுத்தறுக்க, *inf.* To cut the throat, to sever the wind-pipe.

முன்விட்டுப்பின்னின்றுகழுத்தறுக்கலாமோ...... Would you bid one take precedence and then cut his throat?

ஒருவன்கழுத்திலேகட்டிவிட. To devolve unpleasant consequences on another. 2. To attribute a crime or blame to a person. 3. To impose on another unsaleable goods, or. a woman ineligible for marriage.

கழுத்திடுகயிறு, *s.* Halter for a beast.

கழுத்திருத்த, *inf.* To have the neck pressed down with a heavy load. (*c.*)

கழுத்திலேகயிறுபோட, *inf.* To threaten self-immolation for the purpose of recovering debts, &c. 2. To be very treacherous, insidious, perfidious. (*c.*)

கழுத்துக்குட்டை, *s.* A neckcloth, a cravat. (*c.*)

கழுத்துக்கொடுக்க, *inf.* To lay down the neck for another on the block, to subject one's self to inconvenience or danger. 2. To expose one's life by a commission of crime. 3. To submit to the yoke as bullocks.

கழுத்துச்சந்து, *s.* The joint of the neck.

கழுத்துச்சுளுக்கு, *s.* Straining of the ligaments of the neck by violent turning of the head.

கழுத்துத்திருக, *inf.* To wring off the head of a fowl, &c. 2. To throttle, twist the head.

கழுத்துநெடியபானை, *s.* A long-necked pot.

கழுத்துப்பட்டிகை, *s.* A collar, a cape.

கழுத்துப்பட்டை, *s.* The collar of a cloak.

கழுத்துப்பருத்திருக்க, *inf.* To have a thick neck.

கழுத்துப்பொருத்தம், *s.* One of the ten பொருத்தம் for marriage, மணப்பொருத்தம்பத்திலொன்று. (*c.*)

கழுத்துமுறிக்க—கழுத்தைமுறிக்க, *inf.* To break the neck—spoken of the power, &c., of demons.

வேண்டாமென்றுகழுத்தைமுறிக்கிறன். He absolutely refuses, it is very repugnant to his feelings, &c.

கழுத்துவெட்டி, *s.* A cut-throat, a betrayer, an assassin. (*c.*)

கழுத்தூட்டி, *s.* The throat. (*p.*)

கழுத்தேறுதண்டம், *s.* Aggravated or very heavy punishment.

கழுத்தைநெரிக்க, *inf.* To throttle one.

கட்டுக்கழுத்தி, *s.* A married woman.

கழுநீர், *s.* The red water-lily, உற்பலம், Nymphæa rubra.

கழுநீர்ப்பூ—கழுநீர்மலர், *s.* The flower of the lily.

கழுந்து, *s.* The heart or core of a tree, மரவைரம். 2. A tenon, தேய்ந்துமழுங்கியிருண்டவடிவு.

கழுந்தாக்க, *inf.* To make tenons for dovetailing or other joints.

உலக்கைக்கழுந்து, *s.* The end of a pestle. (*Rott.*)

கழுமு, கிறேன், கழுமினேன், வேன், கழும, *v. n.* To join, unite with, இணைய. 2. To be fascinated, bewildered, confused, மயக்க. 3. To be full, complete, replete, perfect, நிறைய. 4. To be abundant, copious, plentiful, மிக. (*p.*)

கழுமல், *v. noun.* Fulness, நிறைதல். 2. Confusion, மயக்கம். 3. Abundance, மிகுதி. 4. Seizing, பற்றுதல்.

கழுவு, கிறேன், கழுவினேன், வேன், கழுவ, *v. a.* To wash, wash off, wash out, wash away, cleanse by washing, to purify, rinse, சுத்தகழுவ. 2. To free from, dispel—as moral evil, அழுக்குக்கழுவ. (*c.*)

கழுநீர், *s.* Water in which rice has been washed, அரிசிகழுவினநீர். (*c.*)

கழுவிக்கொள்ள, *inf.* To wash, cleanse.

கழுவிப்போட, *inf.* To wash off.

கைகழுவ, *inf.* To wash the hands of one, to reject totally.

கால்கைகழுவ, *inf.* To wash the hands and feet.

கலத்தைக்கழுவ, *inf.* To wash a brass dish.

கால்கழுவ, *inf.* To wash after passing excrement, *lit.* to wash the feet.

மலங்கழுவ, *inf.* To expel moral evils from the soul.

கழுவல்—கழுவுதல், *v. noun.* Washing, cleansing.

கழை, *s.* The bamboo, மூங்கில், Bambusa arundinacea. 2. Sugar-cane, கரும்பு. 3. The seventh lunar asterism, புனர்பூசம். (*p.*)

கழைக்கூத்து, *s.* Pole-dancing, வேழம்பர்கூத்து.

கழைக்கூத்தர், *s.* Pole-dancers, வேழம்பர்.

கழைக்கூத்தாடி, *s.* A pole-dancer.

களா, *s.* A thorny shrub, களாச்செடி. (*p.*)

*களகண்டம், *s.* The Indian cuckoo, குயில்—also written காளகண்டம். Wils. p. 200. Kalakanta. (*p.*)

களகம், *s.* The mountain rat, பெருச்சாளி. (*p.*)

*களகம்பளம், *s.* A bull's dewlap, the exerescences on a goat's neck, அலைதாடி. Wils. p. 285. Galakambala. (*p.*)

களகளப்பு, *s.* Din, roar, gurgling, wambling, &c., ஓலிக்குறிப்பு. (*c.*)

*களகளம், *s.* A loud and confused noise—as the din of a bazaar, the roaring of water, &c., பேரொலி. Wils. p. 200. Kalakala.

களகிளெனல்—களகளவெனல், *s.* Tingle, flow with a gentle sound, chatter, &c., சப்தக்கொலிக்குறிப்பு. (*c.*)

களகளவெனக்கொதிக்க, *inf.* To sound—as water in boiling.

களகளவெனவிரும, *inf.* To sound—as phlegm in the chest.

களகளவெனவொலிக்க, *inf.* To roar—as water, multitudes.

களகளவென்றுசிரிக்க, *inf.* To laugh, making a noise.

களகொளெனல், *s.* Mumbling, ஒலிக்குறிப்பு. (*c.*)

களகொளென்றுவயிறிரைய, *inf.* To wamble—as the bowels.

களக்கர், *s.* Inferiors, புலையர். 2. Hunters, a caste living by the chase, வேடர். (*p.*)

களங்கட்டி, *s.* A kind of fish, ஓர்மீன்.

களங்கம், *s.* A spot, a mark, a sign, a token, அடையாளம். (*p.*) 2. (*c.*) A stain, a blot, a tarnish, a blemish, soil, மாசு. 3. Fault, defect, moral or ceremonial defilement, குற்றம். 4. Black, கறுப்பு. 5. Blue, நீலம். 6. Rust, verdigris, any thing that deteriorates, களிம்பு. 7. A kind of arsenic in its natural state, தொட்டபாஷாணம்.

களங்கசத்துரு, *s.* Fountain containing lead, சமணைக்கல.

களங்கமற, *inf.* To be free from defects.

களங்கமற்றிருக்க, *inf.* To be spotless, sincere, pure.

களங்கமில்லாதநடக்கை, *s.* Pureness of living.

களங்கமுள்ளவன், *s.* One whose character is sullied 2. A knave, a fraudulent person.

நிஷ்களங்கம், *s.* Purity.

களங்கன், *s.* The moon, சந்திரன், *lit.* the spotted. (*p.*)

களங்கு—களங்குமுறை, *s.* A compound of metallic bodies prepared with mercury and made into pills, பலலோகக்களோடுண்டாக்கப்படும்இரசகுளிகை. (*Rott.*)

களஞ்சி, *s.* A kind of arsenic, குதபாஷாணம்.

களஞ்சியம், *s.* A granary, a barn, தானியமிருக்குமிடம். 2. A store room, a repository, a treasury, a magazine, பொக்கசசாலை. (*c.*)

களஞ்சியத்திலேபோட, *inf.* To put into a barn.

*களதவுதம்—களதூதம்—களதௌதம், *s.* Silver, வெள்ளி. Wils. p. 200. Kaladouta. (*p.*)

*களத்திரம், *s.* A wife, மனைவி. 2. Family, race, குடும்பம். Wils. p. 200. Kalatra. (*p.*)

களத்திரகாரகன், *s.* The planet regarded as the ruler of the seventh sign from the rising sign at birth, சுக்கிரன்.

களத்திரதானம், *s.* The seventh from the rising sign at the moment of birth, portending the person's circumstances in respect of the wife (if it predict any), her disposition, wealth, longevity and other properties, ஏழாமிடம்.

களத்தூர்—களந்தை, *s.* A town near Chingleput, ஓரூர்.

களந்திரி, *s.* The fruit of a தான்றி tree, Terminalia bellerica, *L.* (*M. Dic.*) (*p.*)

*களபம், *s.* A young elephant, யானைக்கன்று. 2. An elephant, யானை. 3. Fragrant ointment, perfumery, கலவைச்சாந்து. 4. A mixture, கலப்பு. 5. Mortar, cement, சுட்டசாந்து. Wils. p. 200. Kalab'ha. (*p.*)

களப்பன்னை, *s.* A shrub, ஓர்செடி.

களப்பு, *s.* Shallow sea, shallows at sea, கடலிலாழமில்லாவிடம்.

களமூர், *s.* A town near Madura, ஓரூர்.

மாங்கன்று, *s.* A shoot of the mango tree.

இளங்கன்று, *s.* A young calf.

ஊட்டுகன்று, *s.* A sucking calf.

ஊட்டுமறந்தகன்று, *s.* A weaned calf.

முதுகன்று, *s.* A grown calf.

மான்கன்று, *s.* A fawn.

கன்று, கிறேன், கன்றினேன், வேன், கன்ற, *v. a.* To become sore—as with a blow; as the feet with walking; the hands with first using a tool, &c., காயத்தினாற்கன்ற. 2. To be burnt with the sun, வெயிலினாற்கன்ற. 3. To grow hard and unfit for use—as fruits by injury in their growth—as plantains by the application of too much heat, in smoking or forcing them, கைய. 4. To grow hard and unrelishable—as vegetable curries, through failure of heat in cooking, பதனழிய. (*c.*) 5. (*p.*) To have the feelings wounded, to be aggrieved, விசனப்பட. 6. To be violent, enraged, சினங்கொள்ள.—*Note.* போதல் is commonly joined with the gerund of this verb.

கன்றும்வயவேந்தர். Violent kings that are enraged.

அவன்கைகன்றிப்போயிற்று. His hand is hurt, bruised, &c.

கன்றினகுரல், *s.* Harshness of voice, deep or guttural voice.

கன்றுகாமம், *s.* Headstrong lusts.

கன்றுசினம், *s.* Violent anger.

கன்றல், *s.* Anger, கடுப்பு. 2. Sign of anger, சினக்குறிப்பு. (*p.*)

கன்றுதல், *v. noun.* The state of being over-ripe, கைதல். 2. Pitying, இரங்கல். 3. Rottenness, பதனழிவு.

கன்றுபுக்கான், *s.* An herb, Commelina communis, *L.* (*Rott.*)

கன்னகம், *s.* An instrument for housebreaking, கன்னக்கோல். (*p.*)

கன்னங்கரியது, *s.* A thing very black, மிகக்கரியது. (*c.*)

கன்னங்கரியர், *appel. n.* Very black people, மிகக்கரியர்.

கன்னங்கரேரென்றிருக்க, *inf.* [*vul.*] To be excessively dark or black, மிகக்கருமையாயிருக்க.

கன்னங்கரேரென்றிருக்கிறவிருள். Pitch darkness.

கன்னங்கரேரென்றிருக்கிறான். He is very dark.

*கன்னடம், *s.* [*impr.* கன்னுடம்.] The Canarese country, ஓர்தேயம். 2. The Canarese language, ஓர்பாஷை. 3. One of the forty-two new Hindu tunes, an evening melody, ஓரிராகம். Wils. p. 196. Karn'ada.

கன்னடகவுளம், *s.* A kind of tune, ஓரிராகம்.

கன்னடியம், *s.* [*prop.* கன்னடம்.] The Canarese language and country.

கன்னடியர், *s.* [*prop.* கன்னடர்.] The Canarese people.

*கன்னம், *s.* Cheeks, சதுப்பு. 2. An instrument for breaking into houses, கன்னக்கோல். (*c.*) 3. (*p.*) Ear, காது. Wils. p. 195. Karn'a. 4. An elephant's ears, யானைச்செவி. 5. Nerves, நரம்பு. 6. Hypothenuse of a right angled triangle, or the diagonal of a tetragon, அக்ஷகன்னம். 7. True distance of a planet from the earth, கிரகமார்க்கவளவு. 8. A goldsmith, பொற்கொல்லன். (*சது.*) 9. The scale or dish of a balance, தராசுத்தட்டு.

கன்னகடூரம், *s.* Harsh, grating, dissonant sound, uncouth to the ear.

கன்னக்காரன், *s.* A burglar, கன்னமிடுபவன்.

கன்னக்கிரந்தி — கன்னப்புற்று, *s.* A swelling in the cheek from the venereal disease, கன்னத்தில்வருமோர்நோய்.

கன்னக்கோல், *s.* An implement for breaking through the walls of houses, கன்னகம்.

கன்னக்கோல்வைக்க—கன்னமிட, *inf.* To commit burglary by breaking through a wall.

கன்னசூலை, *s.* A tumor in the region of the cheek, one of the arthritic class of diseases. See சூலை.

கன்னத்தட்டு, *s.* [*as* கன்னம்.] The dish of a balance, நிறைதராசுத்தட்டு.

கன்னத்திலேயடிக்க — கன்னத்திலேயறைய—கன்னத்திற்போட, *inf.* To slap the face, to box the ears.

கன்னபரம்பரைஞானம்—கன்னபாரம்பரியம், *s.* Tradition, oral transmission of intelligence, history, news, meanings, &c., பரம்பரைக்கேள்வியால்வந்தஞானம்.

கன்னபாகம், *s.* The ear, காது.

கன்னபூரம், *s.* A kind of ear-ornament, காதணியிலொன்று. 2. The ear, காது.

கன்னபூஷணம், *s.* Ear-ornaments, காதணி.

கன்னப்பரிசை, *s.* The whiskers or beard on the cheek.

கன்னப்பள்ளம், *s.* The hollow of the cheek.

கன்னப்பிளவை, *s.* A cancer or scirrous affection in the cheek—as கபோலப்பிளவை.

கன்னப்பூ, *s.* A kind of female ear-ornament, காதணியிலொன்று.

கன்னப்பொறி, *s.* The temples, the upper part of the side of the head, காதினருகானபொறி.

கன்னமதம், *s.* Secretion from the temples of the elephant, யானைமும்மதத்திலொன்று.

கன்னமீசை, *s.* [*prov.*] The whiskers.

கன்னமூலம், *s.* The interior or root of the ear, காதினடி.

கன்னவேதம்—கன்னவேதை, *s.* [*as* காதுகுத்தகை.] Perforating the ear, for ear-rings with appropriate ceremonies. Wils. p. 195. Karn'aveda.

கன்னுவதங்கம், *s.* An ear-ornament, காதணிவருப்பு.

கசகன்னம், *s.* Voluntary motion of the ear. 2. A kind of magical trick.

கன்னல், *s.* Sugar-cane, கரும்பு. 2. Sugar-candy, jaggary, sugar, &c., சருக்கரை. 3. A water-pot with a spout, கரகம். 4. An Indian hour of twenty-four minutes, நாழிகை. 5. A perforated hour-vessel that fills and sinks at the expiration of the hour, நாழிகைவட்டில். (*p.*)

கன்னற்கட்டி, *s.* Sugar-candy, சற்கண்டு.

*கன்னன், *s.* Karna, an ancient prince, sovereign of Angadesa and an elder brother of the Pandu princes, being the son of Surya by Kunti, before her marriage with Pandu, described in the B'harata, ஓர்அரசன். Wils. p. 195. Karn'a. He is one of the seven famous liberal princes of the medium class.

கன்னனூர், *s.* Cannanore, a town built by king Kannen.

கன்னு, *s.* See கருணை.

கன்னுபின்னுவெனல், *v. noun.* Chattering inarticulately, உருத்தெரியாமற்சொல்லல். 2. Pretending to teach and talk of things beyond one's ability, குளறல்.

கன்னுனைபின்னுனை, *s.* The same as கன்னுபின்னு.

*கன்னி, *s.* A virgin, a maiden, a young unmarried woman, குமரி. 2. Virgo, a sign of the zodiac, ஓரிராசி. Wils. p. 187. Kanya. 3. [*in mythology.*] A river that flows into the sea at Cape Comorin, regarded as a sacred virgin, ஓராறு. (*c.*) 4. (*p.*) Youthfulness, tenderness, juvenility, இளமை. 5. Virginity, கற்புக்கெடாமை. 6. A woman, பெண். 7. The thirteenth lunar asterism, அத்தநாள். 8. The wild or Socotrine aloe, an evergreen, கற்றாழை, Aloe perfoliata. 9. A wild creeper, the காக்கணம். 10. Unfading, imperishable, eternal youth, freshness, vigor, evergreen, அழிவில்லாமை. 11. A female ascetic, தவப்பெண். 12. A female possessing eternal youth—spoken of the goddesses or celestial females, தெய்வப்பெண். 13. Durga, துர்க்கை. 14. A plant, காவிளை. (*Rott.*)

கன்னிகழியாதஆண்பிள்ளை, *s.* A chaste youth.

கன்னிக்கால், *s.* The first post set up in the wall of a new house facing south, decked with cloth, in imitation of a female, முதல்நாட்டுந்தம்பம். See கலியாணம்.

கன்னிக்கால்நாட்ட, *inf.* To set up the first post in a large building. 2. To plant the first marriage post.

கன்னிக்குட்டி, *s.* [*prov.*] The first kid or lamb.

கன்னிக்கோழி, *s.* A pullet nearly arrived at maturity.

கன்னிச்சவ்வு—கன்னிமூத்திரை, *s.* The hymen.

கன்னித்திங்கள் — கன்னிமாதம், *s.* The month of September when the sun is in the sign virgo, புரட்டாசிமாதம்.

கன்னித்தீட்டு, *s.* The catamenia of a young woman, deemed impure in a higher degree than afterward.

கன்னித்துவம்-கன்னிமை, *s.* Virginity, virgin age, கன்னித்தன்மை.

கன்னிபுதன், *s.* Mercury in the sign virgo, indicating learning in one born under its influence.

கன்னிப்பருவம், s. The age of mature virginity.

கன்னிப்பிள்ளைத்தாய்ச்சி, s. [prov.] A woman in her first pregnancy.

கன்னிமதில், s. Imperishable fortress walls.

கன்னிமார், s. Virgins, deified females who were pious virgins on earth, afterward born in deified forms, in the supernal worlds in some one of the three lower states of bliss, கன்னியர்.

கன்னிமையழித்தல் — கன்னியழித்தல், s. The crime of deflouring a virgin. 2. The guilt of suffering a virgin to be deflowred.

கன்னிமையழிய—கன்னியழிய, inf. To lose virginity, to be be defloured, கன்னிமைகெட.

கன்னியழியாதபெண், s. A girl that has not lost her virginity.

கன்னியாகுமரி, s. The கன்னி river. 2. Cape Comorin, the southern point of India.

கன்னியாஸ்திரி, s. A girl arrived at maturity, a virgin, கன்னிப்பெண்.

கன்னியிற்பெறும்புதல்வன், s. The son of a young unmarried woman.

கன்னியீற்று, s. The first calving of a cow.

கன்னிகாரம், s. A kind of cotton tree, கோங்குமரம், Petrospermum acerifolium.

*கன்னிகை, s. A virgin undeflourred, a girl unmarried, கன்னிமையழியில்லாள். 2. The five கன்னிகை, viz.: அகலிகை, the wife of கௌதமன்; தரௌபதை, the wife of the பஞ்சபாண்டவர் or five brothers, sons of the king பாண்டு; சீதை, the wife of இராமன்; தாரை the wife of வாலி; and மண்டோதரி, the wife of இராவணன். 3. (p.) The pericarp of a lotus, தாமரைப்பூக்கொட்டை. Wils. p. 196. KARNIKA. 4. A flower-bud, பூவரும்பு. (p.)

கன்னிகாதானம்—கன்னியாதானம், s. Giving a virgin in marriage—one of the thirty-two meritorious acts. See அறம்.

கன்னிகாரத்தினம், s. An illustrious virgin.

கன்னிறம், s. A kind of shrub, ஓர்செடி, Monetia. (Phy. Dic.)

கன்னுவர், s. Braziers, bell-founders, கன்னர்.

கன்னுறுகம், s. An herb, சிறுகீரை, Amaranthus campestris. (Phy. Dic.)

கன்னே, s. [prov.] A party, a side, party in games, wrestling, fighting, &c., கட்சி.

கன்னைக்கொற்றி, s. One who joins with each of the two parties, generally in playing, இருகட்சிக்குமுதவிசெய்வோன்.

கன்னைபிரிக்க, inf. To divide a company into two parties for a game.

கன்னைமாற, inf. To change sides for a new game.

கா

கா. A syllabic letter, the consonant க and long vowel ஆ, ஓரெழுத்து. 2. s. A pole with ropes attached on the shoulder, for carrying common burdens, or gifts to a temple, &c., காவடி. (c.) 3. (p.) A lever or beam for a well-sweep, also the lever of steel yards, scales, &c., துலாக்கோல். 4. A grove, சோலை. 5. A flower garden, பூந்தோட்டம். 6. A poetic expletive, அசைச்சொல். இவளிவட்காண்டிகா. See her here. (நன்னூலுரை.)

காக்காரர், s. [prop. காவுவோர்.] Bearers of palankeens, pole-burdens, &c., persons who carry burdens suspended from a pole on the shoulders.

காத்தடி — காத்தண்டு, s. A pole for carrying burdens, காவடித்தண்டு.

காமரம், s. [prov.] A pole for carrying on the shoulder, the one used for heavy timber, காவடித்தண்டு.

கற்பகக்கா, s. Indra's paradise.

திருவானைக்கா, s The name of a celebrated pagoda on the island of Sreerungam near Trichinopoly, lit. the grove of the holy elephant.

கா, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To keep, preserve, take care of, பாதுகாக்க. 2. To defend, guard, protect, shelter, save, காப்பாற்ற. 3. To watch, to be vigilant, careful, cautious, விழிப்பாயிருக்க. 4. To keep off, ward off, guard against, காவல்செய்ய. 5. To cherish, வளர்க்க. 6. To expect, wait for, wait in attendance, எதிர்பார்க்க. 7. To keep, observe a fast, a vow, &c., விரதங்காக்க.

வெகுநாளிங்கேகாத்திருக்கிறேன். I have been waiting here many days.

யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற் சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. Whatever besides you leave unguarded, guard your tongue; otherwise errors of speech and consequent misery will ensue. (திருவள்.)

பொனைக்காத்தபூதம்போலே. As a demon watching gold; i. e. an act of no value to any one.

காத்திருக்க, inf. To wait, wait for, expect, watch for, look for.

காத்துக்கொள்ள, inf. To keep, preserve.

மானங்காத்துக்கொள்ள, inf. To preserve one's self-respect, character, dignity.

காவாமல், neg. ver. part. [vul. காக்காமல்.] Not keeping.

தன்னைக்காக்க—தற்காக்க, inf. To keep one's self, to act so as to avoid blame, scandal, &c.

காத்தல், v. noun. Defending, guarding, &c.

காப்பு, v. noun. Preservation, defence, guard, protection, cherishing, பாதுகாப்பு. 2. Watching, caution, vigilance, காவல். 3. Warding off, guarding against, இரட்சிப்பு. 4. s. An amulet, இரட்சாபந்தனம். 5. A bangle or bracelet, கைக்காப்பு. 6. A bandage tied round the arm, in token of a vow for hearing a sacred book read at a temple, keeping a feast, &c.—serving also as an amulet for the time, and as a monitory to practise abstinence and other required duties, to abstain from ceremonial pollutions, &c.—also tied on the arms of a newly-married couple for four days, who are to keep apart for this time—also on the candidates for initiation by the Guru, மஞ்சள்நூற்காப்பு. 7. The invocation at the commencement of all poems, imploring the protection, aid, blessing of the god worshipped by the author, and often of others, தெய்வவணக்கக்கூறுங்காப்பு. 8. The arm-ring of the Guru, worn on the right arm as an amulet on special occasions, கோயிற்குருவணியுங்காப்பு. 9. A string tied round medical plants with incantations to avert evil effects in their use, மூலிகைக்குக்கட்டுங்காப்பு. 10. (p.) A surrounding wall, a fortification, a fence, a hedge, &c., மதில். 11. A door, கதவு. 12. Sacred ashes worn as an amulet, திருநீறு. 13. Clothes, ஆடை.

காப்புக்கட்டில்லாமலெல்லாருமுள்ளேவரலாமா. Is it proper for all to come in without restraint?

அவனுக்குக்காப்புக்கட்டில்லை. He is under no restraint.

உபாத்தியாயரில்லாததனாற்பள்ளியிலேயொருகாப்புக்கட்டில்லை. The master being absent, there is an absence of all restraint in the school.

காப்பரிசி, s. The rice held in the hands of a bride and bridegroom.

காப்பவிழ்க்க, inf. To loose the string from the arm. In all cases this is done with appropriate ceremonies, and the string is sunk in water representing the Ganges.

காப்பாற்ற, inf. To preserve, keep, guard, sustain, காக்க. 2. To defend, save, இரட்சிக்க.

காப்பிட, inf. To put arm-rings on children when five days old.

காப்புக்கட்ட, inf. To tie a string on the arm in token of a vow, and as a pledge for its performance. 2. To tie on an amulet. 3. To engage in with earnestness, applied chiefly to improper, or unimportant pursuits, and only in colloquial usage. 4. [in medicine.] To tie a string to certain herbs, &c., that are to be plucked up in order to dispel a curse pronounced on them. 5. To begin to read a purana at a temple.

காப்புக்கட்டிப்போடுதல், v. noun. Making an end of, or dismissing any business, leaving off intermediately.

காப்புக்கரப்பறிதல், v. noun. Discrimination in reading, lit. ability to understand by the connexion the difference between காப்பு and கரப்பு.

காப்புக்கரப்பறியாமல்வாசிக்கிறான். He reads at random, without discrimination, dividing words wrong, &c.

காப்புச்சொல்லுதல், v. noun. Reciting the invocation of a purana at the beginning and end of every day's reading. 2. Reciting the invocation in the last day's reading with special ceremonies. 3. Repeating the recitation of the invocation extempore for such as come late.

காப்புமாலை, s. A poem of three, five, or seven verses in which the protection of the deity is implored, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

சிங்கமுகக்காப்பு, s An arm-ring with a lion's face on the clasp.

மாக்காப்பு, s. Flour water with perfumes, &c., for bathing an idol.

மைக்காப்பு, s. Coloring the writing of an ola book.

எண்ணெய்க்காப்பு, s. Oil for anointing an idol.

மஞ்சட்காப்பு, s. Saffron powder mixed in the water in which an idol is bathed. 2. Coloring the first lesson of a child's book with saffron.

*காகதுண்டம், s. Aloe wood, அகில், Aquilaria agallocha. Wils. p. 206. KAKATUNDA. (p.)

காகமாசி, s. A plant, மணித்தக்காளி, Solanum rubrum.

காகந்நாரந்தி, s. A prickly shrub, ஆதொண்டை, Capparis horrida.

காகநதி, s. The Cauvery river. (See காவேரி.) 2. The city called காவிரிப்பூம்பட்டினம். (p.)

*காகபட்சம், s. The side locks of the hair of the head of males, பக்கக்குடுமிகள். Wils. p. 206. KAKAPAKSHA.

காகபதம், s. A portion of time in music equal to two குரு, ஓர்காலவளவு.

காகபாஷாணம், s. A kind of arsenic, ஓர்பாஷாணம்.

*காகம், s. A crow, காக்கை. 2. The sign of the guardian of the north-east, வடகிழ்த்திசைப்பாலன்குறி. Wils. p. 205. KAKA. 3. Mongoose, கீரி. (M. Dic.)

காகங்கரைய, inf. [in augury.] To caw as a crow, prognosticating fortune to the person according to the length of his shadow at the time, காக்கைகூவ. See சகுனம்.

காகச்சிலை, s. A load stone, being black, கருமுகிற்சிலை.

காகச்சுக்கான், s. A black marble, கருஞ்சுக்கான்.

காகதாளியம்—காகதாளிநியாயம், s. An unforeseen occurrence, accident; [ex காகம், crow, et தாளி, palmyra fruit, et நியாயம், law.]—a crow lights upon the fruit of the palmyra tree and the fruit falls—a chance, coincidence. Wils. p. 206. KAKATALEEYA.

காகத்துவசத்தாள், s. The goddess of misfortune, மூதேவி, whose banner is the ill-omened crow.

காகநிமிளை, s. Black bismuth, antimony, கருநிமிளை.

காகபலி, s. Food given to crows before eating—being a lump of rice and curry, &c., காகத்துக்கிடுமுணவு.

காகப்புள், s. A crow, காக்கை. 2. The twenty-third lunar asterism, அவிட்டநாள்.

காகவாகனன், s. Saturn the planet, சனி.

காகளம், s. A low and sweet tone, the song of a bird, &c., புள்ளோசை. 2. A trumpet, காளம். (p.)

காகாபிசாசு — காகாவிரிச்சி, s. [prov.] A kind of vampire of black color and dishevelled hair, இரத்தமுண்ணும்வாவற்பறவை.

காகிதம், s. A letter, an epistle, கடிதம். 2. Paper, கடிதத்தாள்.

காகித்தம்—காகித்திரம், s. A medicinal plant, குறிஞ்சா, Tylophona asthmatica.

*காகுத்தன், s. The name of a sovereign, also Puranjaya. 2. Rama in the seventh incarnation of Vishnu, இராமன். Wils. p. 207. KAKUTTHA.

காகுராசி, s. A plant, புடோல். (M. Dic.)

காகுளி, s. Guttural sound, மிடற்றெழுமோசை. 2. The bass in music, மந்தவிசை. 3. Tune, melody, இசை. 4. Cushion, mattress, mat, bed, மெத்தை. 5. Seat, ஆசனம். (p.)

காகூவெனல், v. noun. Weeping aloud, uttering lamentations, crying—as children, ஒலிக்குறிப்பு.

காகொடி, s. A tree, எட்டிமரம், Strychnos nux vomica, L. (M. Dic.)

காகோடகி, s. A medicinal seed, வாலுளுவை. (M. Dic)

காகோடியர், s. Strolling dancers, கூத்தர். (p.)

*காகோதரம், s. A snake, பாம்பு. Wils. p. 207. KAKODARA.

*காகோலம், s. A raven, அண்டங்காக்கை. (M. Dic.). Wils. p. 207. KAKOLA.

காகோளி, s. The Asoka tree, அசோகு. (சது) 2. A tree, கொடியரசு. 3. A plant, தேட்கொடுக்கி, Heliotropium, L. (M. Dic.)

காக்கட்டான்—காக்கணம், s. A species of creeping plant, கருவிளை, Clitoria ternatea.

காக்கணங்கொடி - காக்கணஞ்செடி —நீலக்காக்கணம், s. A wild creeper with deep blue flowers.

காக்கணங்கொவ்வை, s. A species of creeper. See காக்குறட்டை.

வெள்ளைக்காக்கணம், s. A species of the plant with white flowers.

கருங்காக்கணம், s. A species of the same with dark flowers.

காக்கம், s. The same as குறட்டை plant, Trichosanthes palmata, L. (M. Dic.) 2. The name of a plant, கோவை, Coccinia Indica, L.

காக்கன்போக்கன், s. [vul.] An idle vagrant, துன்மார்க்கன்.

காக்கன்போக்கனாய்த்திரிய, inf. To lead an idle life.

காக்காச்சி, s. [used among fishermen.] A kind of cockle found in tanks, நத்தைச்சி.

காக்காய், s. [prov. காக்கை.] A crow, (c.) 2. (p.) The twenty-third constellation of the Hindus, அவிட்டம்.

காக்காயிலைகண்ணுக்குப்பீர்க்கம்பூப்பொன்னிறம். .. The yellow flower of a cucumber plant appears gold to a crow; i.e. trifles are of value in the eyes of a fool.

காக்காய்க்குந்தன்குஞ்சுபொன்குஞ்சு. Even to a crow its young one is regarded as a golden one; i.e. the best.

காக்காய்க்கொல்லி, s. A plant, ஓர்செடி, Anamirta cocculus, or Cocculus Indicus. 2. Jagged moon seed, Menispermum cocculus, L.

காக்காய்ச்சோளம், s. A small kind of grain, ஓர்சோளம்.

காக்காய்ப்பாலை, s. A kind of tree, ஓர்பாலை.

காக்காய்ப்பூ, s. A plant, ஓர்பூடு, smooth torenia, Torenia asiatica. L.

காக்காய்ப்பொன், s. A kind of gold leaf tinsel, cut in small pieces and scattered at weddings and other festivals, போலிப்பொன்.

காக்காய்மீன், s. A kind of fish, ஓர்மீன்.

காக்காய்மூக்கன், s. A man with a sharp aquiline nose.

காக்காய்மூக்கி, s. A kind of arsenic, கருமுகிற்பாஷாணம், lit. crow-beak (nursery usage).

காக்காய்வலி, s. Epilepsy, falling sickness, ஓர்நோய்.

நீர்க்காக்காய், s. A water crow.

அண்டங்காக்காய், s. A raven.

மணியங்காக்காய், s. Royston crow, Cornus cornix, L.

காக்காவெனல், v. noun. Cawing as a crow, ஒரொலிக்குறிப்பு.

காக்குறட்டை, s. A kind of creeper with large black fruit that becomes red when ripe, காக்கணங்கொவ்வை, Palmated gourd.

காக்கை—காக்காய், s. A crow, காகம். (c.) 2. The twenty-third lunar asterism, அவிட்டநாள். (p.)

காக்கைக்கொடியாள், s. The goddess மூதேவி, whose banner is a crow.

காக்கைபாடினியம், s. A work on grammar, ஓரியாப்பிலக்கணம்.

பெருங்காக்கைபாடினியம்—சிறுகாக்கைபாடினியம், s. Two kinds of the above

காங்கு, s. [vul.] Coarse, blue cloth. நீலப்புடவை. 2. A large earthen pot, பெரும்பானை.

*காங்கேயம், s. Gold, பொன். Wils p. 287. GANGEYA. (p.) 2. The name o[f] a country in the west, ஓர்தேயம்.

காங்கேயன், s. A name of Skanda குமரன். 2. Bishma, வீட்டுமாசாரி. (p.)

காங்கை, s. [prop. காய்கை.] Heat (c.)

காங்கையானசரீரம், s. A warn[m] body, sickly body.

காங்கையானபூமி, s. A hot climate

பித்தகாங்கை, s. The predomi[-]nance of bile in the system.

காங்கையன், s. The name of prepared arsenic, வைப்புநீலப்பாஷாணம்.

*காசம், s. Phthisis, asthma, pu[l]monic affections, சுவாசநோய். 2. Phlegm கோழை. Wils. p. 218. KASHA, or 22[?] KASA. 3. A disease of the eyes, a catara[ct] affection of the optic nerve, or gutta s[e]rena, கண்ணினோய்நோய். Wils. p. 207. KACH[A] 4. A country, ஓர்தேயம். 5. Gold, பொன். An arsenic in its natural state, கற்பாஷாணம்.

காசசுவாசம், s. The asthma, சுவாசகாசம்.

காசநீர், s. The humor in the head that causes the disease. (See காசம்.) The following are the principal kinds of காசம்—சீர்க்காசம், சுவாசகாசம், கண்கட்டிகாசம், விரணகாசம், பித்தகாசம், இரத்தகாசம், வாதகாசம், சர்ப்பகாசம், சிலேட்டுமகாசம், மந்தாரகாசம், சீலகாசம், பாலகாசம்.

கனகாசம், s. Inflammation of the eyes attended with great swellings.

காசறை, s. Hair ointment, மயிர்ச்சாந்து. 2. Gems, precious stones, மணி. 3. The musk deer, கஸ்தூரிமிருகம். (p.)

காசனம், s. Killing, slaying, கொலை. (p.)

காசனன், s. A killer, கொலைசெய்வோன்.

*காசா, s. The name of a shrub, Memecylon tinctorium.

கண்ணோவுக்குக்காசாம்பற்றுப்போடுகிறது. Applying an embrocation prepared from the above shrub for sore eyes.

காசாம்பாரை, s. A fish, ஓர்மீன்.

காசாம்பூமேனியன், s. Vishnu, விட்டுணு.

காசாம்பூவண்ணன், s. Vishnu, விட்டுணு. 2. Vitriol, துரிசு. 3. A kind of native arsenic, கச்சாலம், காய்ச்சற்பாஷாணம்.

வெண்காசா, s. The name of a shrub bearing white flowers.

காசாண்டி—காசாண்டிச்செம்பு, s. A kind of brass pot with a large mouth, ஓர்வகைச்செம்பு.

*காசி, s. Casi, a celebrated city and place of pilgrimage, the modern Benares, being the most meritorious place for bathing in sacred water, as Ramisseram is for the south of India, ஓர்நகரம். Wils. p. 219. Kashi. 2. The cumin seed, சீரகம்.

காசிகாண்டம், s. One of the sixteen books of கந்தபுராணம்.

காசிக்கங்கை, s. The Ganges at Benares, being more sacred than in other places.

காசிக்கல், s. A loadstone, காகச்சிலை.

காசிச்சாரம், s. A mineral salt, ஓருப்பு.

காசித்தீர்த்தம், s. The water of the Ganges, obtained at Benares and carried about the country by religious mendicants.

காசித்தும்பை, s. A kind of தும்பை plant.

காசிலவணம், s. A kind of salt, ஓருப்பு.

காசிலிங்கம், s. The linga worshipped at Benares.

காசிவாசி, s. A dweller or inhabitant of the city of Benares.

காசிபம், s. A work of காசிபன், one of the eighteen Dharmashasters, தருமநூல்பதினெட்டினொன்று.

*காசிபன—நாசிபப்பிரமா, s. A muni or deified sage; one of the seven transformed into the seven stars or great bear. He was the son of Marichi and father of the Devas by அதிதி and of the Asoors by திதி, ஓர்முடி. Wils p. 204. Kasyapa.

காசிரம், s. A circle, வட்டம். (p.)

காசிரோர்த்தம், s. A plant, வறட்சுண்டி, Mimosa, L.

காசினி, s. The earth, பூமி. (p.)

காசு, s. Several kinds of coin, cash, money, specie, பணம். 2. Twelfth part of an anna, சிறுகாசு. (c.) 3. (p.) Gold, பொன். 4. Gems, precious stones, மணிப்பொது. 5. Necklaces of gems, மாதரணிவடம். 6. Phlegm, கோழை. 7. Defect, fault, குற்றம். 8. A term in prosody applied to a foot ending in two short syllables, வெண்பாவிறுதிச்சீருளொன்று.

காசடிக்க, inf. To coin, mint.

காசுகட்டுதல், v. noun. Playing a game with copper coins.

காசுக்கடை, s. A money-changer's shop.

காசுக்கடைக்காரன், s. One who changes money, a money-changer.

காசுக்கட்டி, s. [prop. காய்ச்சுக்கட்டி.] The juice of young cocoanuts inspissated.

காசுக்காரன், s. A money-changer. 2. A rich man.

காசுமண், s. Red ochre, so called by fishermen.

காசுமாற, inf. To be current—as coin.

காசுமாற்ற, inf. To change money, &c.,

காசுமுத்திரை, s. The impression on a piece of money.

பொடிக்காசு, s. Small pieces of copper coin.

செம்புக்காசு, s. Copper coin.

சல்லிக்காசு, s. Small pieces of copper coin

வெள்ளிக்காசு, s. Silver coin. 2. Several kinds of silver coin.

ஆட்காசு—ஆனைக்காசு—குதிரைக்காசு, s. Names of different kinds of coin, so called from severally bearing the impression of a man, an elephant, and a horse.

பொற்காசு, s. Small kinds of gold coin.

சான்றான்காசு—சாணாரக்காசு, s. A name of the பொற்காசு, said to have been invented or coined by one of the சான்றார் caste.

*காசுமீரம்—காஸ்மீரம், s. The Cashmere country, ஓர்தேயம். Wils. p. 219. Kashmeera.

காசை, s. A species of grass or rushes, நாணற்புல். 2. A flowering shrub, the காயா. 3. Consumption, க்ஷயரோகம். (p.)

காச்சக்கிளை—காச்சாக்கு—காச்சிரக்கு—காச்சுளை, s. The same as காய்ச்சறுக்குக்கிளை.

காச்சுப்பீச்செனல்—காச்சுமூச்செனல், v. noun. Being noisy, as a family of children and women, ஒலிக்குறிப்பு.

காச்சுமூச்சென்றழ, inf. To cry or weep—as a distressed woman.

காஞ்சம், s. Blue vitriol, துருசு.

*காஞ்சனம், s. Gold, பொன். 2. A tree, புன்கமரம், Pongamia glabra. Wils. p. 208. Kanchana. (p.)

காஞ்சனத்தூள், s. Gold dust, பொன்மணல்.

*காஞ்சனி, s. Turmeric or Indian saffron, மஞ்சள். Wils. p. 208. Kanchanee, or Kanchana. (p.)

காஞ்சா, s. [vul. prop. கஞ்சா.] A plant, Cannabis Indica.

*காஞ்சி, s. The town of Conjeveram, one of the seven sacred cities, ஓரூர். 2. Hasp, hook, மாட்டூசி. (c.) (Rott.) 3. (p.) A woman's waist-gridle, consisting of eight strings of beads or bells, எண்கோவைமணி. Wils. p. 208. Kangee. 4. A kind of tree, ஓர்மரம். 5. A garland of the காஞ்சி tree, worn by soldiers in taking up a position. (See வெற்றி.) 6. A mode of singing, ஓர்பண். 7. Unsteadiness, transientness, நிலையின்மை

காஞ்சிமாலை, s. The garland of flowers of the காஞ்சி tree, a poem describing the occupying of a post on the frontiers of an enemy's territory, the soldiers wearing these garlands, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

காஞ்சிகா—காஞ்சிரம்—காஞ்சிரை, s. A very poisonous tree, the எட்டிமரம், Strychnos nux vomica, L. (p.)

காஞ்சினி, s. A plant, மஞ்சிட்டி, Rubia munjista.

காஞ்சுகம்—காஞ்சுகி, s. [as கஞ்சுகம்.] A jacket, சட்டை. (p.)

காஞ்சொறி, s. A kind of nettle, ஓர்செடி, Tragia involucrata, L.

காஞ்சொறிஅப்பிக்கொண்டது. I have been stung with a nettle.

காஞ்சொறிவேர், s. The root of the காஞ்சொறி plant from which a drug is made.

கறுப்புக்காஞ்சொறி—பூனைக்காஞ்சொறி—பெருங்காஞ்சொறி—சிறுகாஞ்சொறி, s. Different kinds of nettle.

*காஷாயம், s. Cloth tinged with red ochre, worn by ascetics and religious mendicants, காவிச்சீலை. Wils. p. 220. Kashaya.

காடகம், s. Cloth, சீலை. (p.)

காடவிளக்கு, s. Lamps formed by putting oil and wicks in large vessels for illumination on great occasions, பெருவிளக்கு. (c.)

காடன், s. A fish, ஓர்மீன்.

*காடாக்கினி, s. A great fire, conflagration, பெருநெருப்பு.

காடாந்தகாரம், s. Thick darkness, கனவிருள்.

காடி, s. Vinegar, புளித்தநீர். 2. Liquids soured by keeping, புளித்தகள். 3. Rice gruel, கஞ்சி. 4. (For.) A trench, ditch, தோண்டுசால். 5. (For.) A cart with a pyramidal top, ஓர்வகைவண்டி. 6. (p.) Ghee, நெய். 7. Pickle, ஊறுகாய். (சது.)

காடியாகப்புளித்துப்போயிற்று. The congee, whey, &c., is become as sour as vinegar.

காடிக்கூழ், s. Sour pap.

காடிச்சோறு, s. Rice taken out of the sour கஞ்சி.

காடியாய்த்தோண்ட—காடிவெட்ட, inf. To scoop, to cut into hollowness or depth.

குறுமாதக்காடி, s. Water in which rice has been washed and various ingredients mixed with it, kept six months, to be used medicinally for jaundice, incipient dropsy, &c.

கள்ளுக்காடி, s. Toddy vinegar, sour toddy.

பனங்காடி, s. [prov.] The water in which palmyra stones are steeped and left to become sour, for fermenting the pulp of the fruit next day.

சரகாடி, s. [prov. சர்வகாடி] Very strong vinegar.

காடுகம், s. Cloth, சீலை. (p.)

காடிக்காரம், s. Lapis infernalis, lunar caustic or nitrate of silver, செயப்புக்கல். (M. Dic.)

*காடுனியம், s. Great difficulty or hardship, அதிகஷ்டம். Wils. p. 208. KATTINYA. (c.)

காடு, s. An uncultivated tract of land covered with forest-trees, thick, impenetrable brush wood, creeping plants and coarse, rank, reedy vegetation, a waste, a thicket, வனம். 2. Deserts, forest tracts, ஆரணியம். 3. A desert place for burning the dead, சுடுகாடு. 4. (fig.) Excessiveness much, closeness, &c., மிகுதி. 5. Wild, rough, uncultivated, unpolished, &c., used as a prefix—as காட்டுப்பசு. 6. A nominal termination to some words of verbal derivation, தொழிற்பெயர்விகுதி—as சாக்காடு. (c.) 7. (p.) A place, இடம். 8. A border, a limit, எல்லை. 9. A town, ஊர். 10. The second lunar asterism, பரணிநாள். 11. Chaff, straw, &c., செத்தை.

காடுவாவென்கிறது வீடுபோவென்கிறது. The time has arrived when the desert says, come, and the house says, go.

இந்தஊர்க்குக்காணிசொற்பம். This village has but little arable land.

காடாய்க்கிடக்க, inf. To be covered with jungle or wood.

நிலங்காடாய்க்கிடக்கிறது. The ground is uncultivated.

காடாய்ப்போக, inf. To become waste, to grow woody.

காடாரம்பட்டு, s. A village situated in a wild tract of land near Vedarniam.

காடாற்ற, inf. To perform the ceremony of quenching the fire where a corpse has been burnt, gathering the remains and taking them in a new pot to some water representing the Ganges, பாற்தெளிக்கச்செய்ய.

காடுகாட்ட, inf. To deceive, disappoint, lit. to show the place of burning the dead.

காடுபடுதிரவியம், s. The productions of the desert, காட்டிலுண்டாகுந்திரவியம். See under திரவியம்.

காடுபலியூட்ட, inf. To sacrifice to the sylvan nymphs before hunting, காட்டிலுள்ளதேவர்களுக்குப்பலியிட.

காடுவசாதி, s. [prov. prop. காடுவாழ்சாதி.] Savage tribe.

காடுவசாதியாய்த்திரிய, inf. To be slovenly, sluttish, &c., to be careless, negligent of one's dress, &c. 2. To be vagrant, idle, &c., as a child for whom no one cares.

காடுவாரி, s. [prov.] A rake, ஓர்கருவி. 2. One who scrapes up all he can, சேர்ப்பவன். 3. One who resorts to any kind of labor for support.

காடுவாழ்த்து, s. A section of a war poem, extolling the jungle of the sylvan goddess, &c., where the battle occurred, வனதேவதையைவாழ்த்தும்பிரபந்தம்.

காடுவெட்டி, s. A wood-cutter, a savage, an untaught man.

காட்டகத்தி, s. A shrub, வீழி, Cadaba Indica.

காட்டத்தி, s. A species of the அத்தி tree, downy mountain ebony, Bauhinia tomentosa. (Mat. Ind.)

காட்டழல், s. Jungle fire, kindled by the friction of trees, &c., காட்டுத்தீ.

காட்டாள், s. A rustic, rural person, நாகரீகமில்லாதவன்.

காட்டான், s. The wild cow, காட்டுப்பசு. 2. [prov.] Stranger, பிறன்.

காட்டிலேபோக, inf. To be lost, to waste.

காட்டுக்கடலை, s. A small tree or plant, ஓர்செடி, Rough melastoma, (Melastoma aspera) or Indian currant bush. (Mat. Ind.)

காட்டுக்கல், s. A rough hard kind of stone, ஓர்வகைமாக்கல்.

காட்டுக்கீரை, s. Different kinds of wild greens mixed together.

காட்டுச்சீரகம், s. A wild cumin, purple fleabane, ஓர்பூண்டு, Vernonia anthelmintica.

காட்டுச்சீரகவள்ளி, s. An esculent creeper—as காட்டுக்கொவ்வை.

காட்டுச்சேவல், s. The jungle-cock, somewhat different from a woodcock.

காட்டுத்தகரை, s. The wild தகரை plant.

காட்டுத்தனம், s. Rusticity, uncultivated manners.

காட்டுத்தாரா, s. A wild duck. See தாரா.

காட்டுத்தாளி, s. A twining plant, Convolvulus muricatus. See தாளி.

காட்டுத்தினை, s. Wild millet.

காட்டுத்துத்தி, s. A kind of plant, Sida hirta. See துத்தி.

காட்டுத்துவரை, s. A kind of துவரை plant, Glycine parviflora.

காட்டுத்துளசி, s. A wild species of துளசி; which see.

காட்டுநாரத்தை, s. A kind of நாரத்தை tree, பெருநாரத்தை.

காட்டுநெல்லி, s. A kind of நெல்லி tree, Emblica officinalis.

காட்டுப்பயிர், s. Vegetables that grow of themselves, தானாகவிளையும்பயிர்.

காட்டுப்பருத்தி, s. Wild cotton of spontaneous growth.

காட்டுப்பன்றி, s. A wild hog.

காட்டுப்பாகல், s. A kind of பாகல் creeper. See பழுபாகல்.

காட்டுப்பிள்ளை, s. [metap.] A foundling. (Besch.)

காட்டுப்பீ, s. First black excrement of a new-born child, or calf, meconium.

காட்டுப்புத்தி, s. Stupidity, senseless conduct, மூடபுத்தி.

காட்டுப்புளிச்சை, s. Wild sour greens, காட்டுக்கோங்கை, Hibiscus cannabinus.

காட்டுப்புறு, s. A dove, a turtle-dove, கபோதம்.

காட்டுப்பூனை, s. A species of wild cat, காட்டிலுள்ளபூனை.

காட்டுமந்தாரை, s. A tree, ஓர்மரம், Bauhinia acuminata, L.

காட்டுமரம், s. Any wild or useless tree, plant, &c.

காட்டுமரி, s. A shrub, ஓர்பூடு. See மரி.

காட்டுமருக்கொழுந்து, s. A wild species of மருக்கொழுந்து, not fragrant.

காட்டுமல்லிகை, s. A kind of wild jasmine, with red blossoms, வனமல்லிகை. 2. Narrow-leaved jasmine, Jasminum angustifolium.

காட்டுமனுஷன், s. A wild man. 2. An uncivilized man.

காட்டுமா, s. The wild mango, வனமா, Carbera manghos. 2. Another wild mango, Spondias mangifera.

காட்டுமாமரம், s. The wild mango tree.

காட்டுமாவிரை, s. The same as காப்பிரப்பு.

காட்டுமிருகம், s. A wild beast, வனமிருகம். 2. A wild horse, காட்டுக்குதிரை.

காட்டுமிருகாண்டி, s. [vul. காட்டுமிரண்டி.] A clown, rustic, an awkward ill-bred person, முரடன்.

காட்டுமுருக்கு, s. A thorny wild tree, Erythrina Indica. See முருக்கு.

காட்டுமுருங்கை, s. A small-leaved shrub, வனமுருங்கை, Ormicarpum sennoides. (M. Dic.)

காட்டுமுன்னை, s. A shrub, Croton repandum. (Rott.) See முன்னை.

காட்டுவள்ளி, s. A plant with a bulbous root, Discorea bulbifera. See வள்ளி.

காட்டுவாகை, s. A Mimosa tree. See வாகை.

காட்டெருமை, s. A wild buffalo.

காட்டெருமைப்பால். Its milk. 2. The milky juice of the Asclepias gigantea, or gigantic swallow-wort, எருக்கம்பால். 3. The same as கள்ளிப்பால், the milky juice of the Euphorbia tirucalli. 4. The same as கூவைநீறு, the flour of the root of the Curcuma angustifolia, அருகுசேகண்டம்.

காட்டேரி—இரத்தக்காட்டேரி, s. [prop. காட்டேறி.] A jungle imp, a sylvan nymph, a demoness.

புகைக்காடு, s. A great smoke.

குடிக்காடு, s. Many houses together, a village, town.

பிணக்காடு, s. A field covered with corpses.

பருத்திக்காடு, *s.* A cotton field.

நெருப்புக்காடு, *s.* A large fire.

புன்செய்க்காடு, *s.* High dry land.

புல்லுக்காடு, *s.* Pasture land.

வெள்ளக்காடு, *s.* A general flood.

பெருங்காடு, *s.* Large jungle.

பனங்காடு, *s.* A thick palmyra grove.

இடுகாடு—சுடுகாடு, *s.* A place for burying, burning the dead.

சுடுகாட்டுக்குப்போனபிணந்திரும்புமோ. Will the corpse which has been carried to the cemetery ever come back again?

சுடுகாட்டுவைராக்கியம். A good resolution formed on the occasion of a funeral is soon forgotten.

சுடுகாட்டுமணிபொறுக்கி, *s.* A wild dove. 2. A kind of bird.

சிறுகாடு, *s.* A low jungle.

கப்பற்காடு, *s.* A large number of ships, a fleet.

வயற்காடு, *s.* Paddy field.

காடுகாள், *s.* A goddess, or the mother of the god Veirava, வைரவன்றாய். (*p.*)

காடை, *s.* A quail, Tetrao colurnix. (*Ains. Mat. Ind.*) the Francoline partridge, குறும்பூழ்.

காடைக்கண்ணி, *s.* A sort of millet, Indian oats, ஓர்தினை.

காடைக்கழுத்தன், *s.* A kind of rice, ஓர்நெல்.

காடையிறகு, *s.* A crest of various colored feathers worn by stage-players.

கூட்டுக்காடை, *s.* A bird resembling a glede.

காட்சி, *s.* Sight, view, பார்வை. 2. An object of sight, visible appearance, தோற்றம். 3. The manifestation of a deity or the sight of a great personage, தரிசனம். 4. (*p.*) [*in logic.*] Perception, evidence of the senses, பிரத்தியட்சப்பிரமாணம். 5. Knowledge, intelligence, ascertainment, அறிவு. 6. [*in erotics.*] One of the ten அவத்தை, the first view which a bridegroom has of his bride, விசாகவல்லைகாட்சி. 7. (*c.*) Anomaly, a strange event, அதனக்காட்சி.—*Note.* In the agama logic, seven species of perception are given, viz.: 1 ஐயக்காட்சி, indistinct apprehension, doubt, uncertainty, hesitation. 2. திரிபுக்காட்சி, misapprehension, misconception, optical or mental illusion. 3. விகற்பக்காட்சி, discrimination or knowledge to distinguish things one from another in five particulars, viz.: in name, kind, quality, action, and substance. or matter. 4. பொறிவாயிற்காட்சி, perception of the senses, with the aid of the mental faculties. 5. மனக்காட்சி, or மானதக்காட்சி, ideas formed in the mind of things perceived by the senses. 6. அநுபவக்காட்சி, perception by actual experience or the exercise of the affections towards objects perceived. 7. யோகக்காட்சி, the spiritual perception of the Yoga, or knowledge of events past, present or future, by abstract devotion.—*Note 2d.* Each of the above has two divisions, one, புறம்—abroad, relating to external or secular affairs; the other, அகம்—at home, to religious affairs.

கண்ணுக்குக்காட்சிகடவுளுக்குங்காட்சி. What is pleasing to the sight is pleasing to the deity—referring to the ornaments of the temple, rich offerings, &c.

கண்ணுள்ளபோதேகாட்சி. Gratify your sight while you can.

காட்சிகொடுக்க, *inf.* To manifest himself—as a deity.

காட்சிப்பிரமாணம், *s.* [*in logic.*] One of the eight modes of ascertaining truth. See பிரத்தியட்சப்பிரமாணம்.

காட்சிப்பொருள், *s.* Things seen, objects of sight or sense—as distinguished from கருத்துப்பொருள் or mental objects.

காட்சிமறைத்தல், *v. noun.* Hinderance in seeing or observing any thing. See அஷ்டகுற்றம்.

காட்சியர்—காட்சியவர்—காட்சியார், *s.* The wise, அறிஞர்.

காட்சியாக, *inf.* To appear in a vision.

காட்சியுணர்வு, *s.* The sense of sight, காட்சியறிவு.

காணுக்காட்சி, *s.* An extraordinary sight, a wonderful occurrence. 2. An ill omen.

திருக்காட்சி, *s.* A divine meditation.

காரணக்காட்சி, *s.* A great sight or event which may be the cause of future effects.

*காட்டம்—காஷ்டம், *s.* Fuel, firewood, விறகு. Wils. p. 220. KASHTA. 2. The same as வெண்கலம். (*M. Dic.*) (*Rott.*)

காட்டாசாரி—காஷ்டாசாரி, *s.* A carpenter.

காட்டிலுமிழி, *s.* A kind of large beetle, நாகரவண்டு.

காட்டு, கிறேன், காட்டினேன், வேன், காட்ட, *v. a.* To show, exhibit, display, adduce, manifest, reveal, evince, disclose, set forth, காண்பிக்க. 2. To designate, suggest, சுட்டிக்காட்ட. 3. To describe, define, தெரிவிக்க. 4. To demonstrate, prove, உருபிக்க. 5. To present to an idol, &c., to offer, நிவேதனஞ்செய்ய. 6. To make a display of jewels, &c., தெரியக்காட்ட. 7. To put forth, develop, வெளிப்படுத்த. 8. To reflect an object—as a mirror, water, &c., சாயைகாட்ட. 9. To remind, நினைப்பூட்ட.

காட்டிக்கொடுக்க, *inf.* To betray, discover a person to his enemies. 2. To accuse one. 3. To teach or shew a person the method of doing any thing.

காட்டிமறைக்க, *inf.* To tantalize a person, by offering something to him, and snatching it away at the moment he is about to take it.

புகைகாட்ட, *inf.* To smoke any thing—as plantains, in order to ripen them the sooner.

தெரியக்காட்ட, *inf.* To show plainly, to demonstrate.

வரக்காட்ட, *inf.* To send off, despatch.

தேவரீர்வரக்காட்டினதிருமுகம். The letter which you have despatched. (*Besch.*)

சொல்லிக்காட்ட, *inf.* To explain, relate.

தன்னைக்காட்ட, *inf.* To make one's self known, to make one's character, ability, &c., appear where he is unknown, &c. 2. To make a display. 3. To show one's character, &c., by outward conduct.

சத்தங்காட்ட, *inf.* To cry aloud.

தூபங்காட்ட, *inf.* To burn incense.

தண்ணீர்காட்ட, *inf.* To water sheep, horses, &c.

காட்டல், *v. noun.* Manifestation. 2. Act of showing or pointing, சுட்டல்.

காட்டில்—காட்டிலும். (*with a noun.*) Than. 2. (*with an infinitive.*) As soon as, the moment before, the very instant.

பொழுது போகுங் காட்டிலும்நித்திரையென்ன.... Why do you go to sleep as soon as the sun sets?

அதைக்காட்டிலுமிதுசிறப்பு. This is more beautiful than that.

நான்கொடுக்குங்காட்டிலுமெடுத்தெறிந்துபோட்டுவிட்டான். [*vul.*] No sooner had I given it to him than he took and threw it away.

அவன்போங்காட்டில். [*in* கோயிற்புராணம்.] As soon as he had gone.

விடியுங்காட்டிலும். No sooner had the day broken, than, &c.—

காட்டு, *v. noun.* Showing, exhibition, presentation, காண்பிக்கை. 2. Example, instance, illustration, demonstration, evidence, உதாரணம். (*p.*)

*காட்டை, *s.* A region, a point of the compass, திசை. 2. Time, காலம். 3. A minute portion of time—in tables of time the thirtieth part of a kula or eighteen twinklings of the eye, சாலநுட்பம். 4 Limit, boundary, எல்லை. 5. Point, extremity, top, tip, apex, நுனி. Wils. p. 220. KASHTA. (*p.*)

காணம், *s.* Horse gram, கொள், Dolichos uniflorus. 2. An oil press, செக்கு. 3. (*p.*) A measure, as much as will fill the press at once, நிறைவு. 4. Gold, பொன். 5. Several kinds of gold coin, பொற்காசு.

காணமாட, *inf.* To make oil, to work an oil press, செக்காட.

காணி, *s.* Propriety, right of possession, hereditary right, உரிமை. 2. (*c.*) Land, நிலம். 3 Landed property, estate, possession, காணியாட்சி. 4. A fractional part, the eightieth part, ஒரெண். 5. [*in land measure.*] Twenty-four grounds, ஓர்நிலவளவு. See மனை.

காணிமந்தஞ்சோடிதுக்கம். The least delay may occasion the greatest sorrow.

கைலாயங்காணியாகும். He will obtain Kaylasa as his inheritance.

காணிக்காரன்—காணியாளன், *s.* A landlord, an owner or proprietor of land, காணியாட்சிக்காரன்.

காணித்தாயம்—காணித்தாயவழக்கு, [*prov.*] A quarrel between relations about land.

காணித்துண்டு, *s.* A piece or strip of land.

காணிபூமி, *s.* One's own land.

காணியாட்சி, *s.* Hereditary right to land, an estate, a kingdom, &c., hereditary land, one's own possession, காணியுரிமை.

காணியாட்சியூர், *s.* An hereditary village or town.

பங்குக்காணி, *s.* Land shared with others.

செய்கைக்காணி, *s.* Made land, from tanks, &c., land newly broken up, &c. 2. Well-tilled ground.

நன்கொடைக்காணி, *s.* Donated land.

பிதிரார்ச்சிதக்காணி, *s.* Ancestral land, patrimonial estate, all the property acquired before marriage—as முதுசொம்.

சிந்துக்காணி, *s.* Goods and chattels.

முக்காணி, *s.* A fraction, the three-fifths of a மாகாணி.

உரிமைக்காணி, *s.* Hereditary land obtained from a near relation.

மானியக்காணி, *s.* Land granted by government.

அரைக்காணி, *s.* A half காணி, the one-hundred and sixtieth part.

காணியரைக்காணி, *s.* A காணி and a half.

பாரம்பரைக்காணி, *s.* Land possessed from ancestors.

சீதனக்காணி, *s.* Dowry land.

மாகாணி, *s.* One-sixteenth.

காணிக்கை, *s.* A voluntary oblation, commonly in money, gold, fruits, &c. set before an idol to obtain favor, a sacrifice, தட்சிணை. 2. A present to a guru or other great person, பாதகாணிக்கை.

காணிக்கைகொடுக்க, *inf.* To present an oblation.

காணிக்கைத்தட்டு, *s.* A salver for receiving gifts.

காணிக்கைப்பொருள், *s.* A thing presented as an oblation or gift.

காணிக்கைகொண்டுவர — காணிக்கைவைக்க, *inf.* To place a gift in a salver before an idol.

முடிக்காணிக்கை, *s.* An offering of the hair of a person's head which has been allowed to grow for a certain time and then shaved off and presented to an idol in fulfillment of a vow.

இராசகாணிக்கை, *s.* A present to a king.

பாதகாணிக்கை, *s.* Offerings laid at one's feet.

குருகாணிக்கை, *s.* A present to a guru.

காண், கிறேன், கண்டேன், பேன், காண, *v. a.* To see, perceive, behold, view, descry, பார்க்க. 2. To gain sight of a deity, or a great person, the new moon, &c., தரிசிக்க. 3. To find, meet with, ascertain, gain the knowledge of, be aware of, recognize, அறிய. 4. To experience, know, feel, உணர. 5. To discover, invent, originate, உண்டாக்க. 6. To think, consider, investigate, ஆராய. 7. To obtain, get, secure, have, derive, பெற. 8. To know the truth, perceive the deity in the vedas and other sacred writings, உண்மையறிய. 9. (*p.*) To worship, venerate, reverence, make obeisance, வணங்க. 10. To cause, do, effect, செய்ய. 11. To understand fully or perfectly, to have clear perceptions, தெளிய. 12. To perceive by any of the senses, see, hear, feel, &c., பொறியாலறிய. 13. *v. n.* To seem, prove, to be, to be found, to appear, தோன்ற. 14. To be sufficient, to amount to—as profit, &c., போதிய. 15. To appear, become visible, evident, &c., வெளிப்பட. 16. To accrue, result—as profit, &c., பலன்பட. 17. (*p.*) To exist, subsist—as a quality, &c., உண்டாக.

கண்டதுகாணப்பறைக்குச்சிலேவெட்டு. Strike the bushel as it comes, don't be exact.

கண்டதைக்கண்டுகொள்ளும். Be content with what you get as profit, produce, &c.

கண்டபோதொருகாணாதபோதொரு. One thing before the face and another behind the back.

ஞாயிறுகண்ட இருள்போல். Like darkness at the approach of the sun.

பலகண்டக்கண்டு. Distributing it into parts.

சூடுகண்டாலுருகும். It will melt if it feel the heat.

தூண்டுகடாவிளக்கோதிகண்டாய். Behold! a light as bright as a fresh trimmed lamp.

அதொன்றுமில்லைகண்டீரா. I have none, did you not see.

முன்னவன்கண்டதுமுதனூலாகும். What the first author made is original.

காணத்தோன்றுதிருதல் — காணக்கொடுத்துக்கொள்ளுதல். Giving and taking in sufficient quantity.

காணாக்காணாதகொடுத்தார். He gave hardly enough. The gerund corresponds with the word "seeing," அவர்குருவாயிருப்பதைக்கண்டு அவர்சொற்கேட்கவேண்டும். Seeing he is a Guru, we must pay deference to his words.

காண்டோழி. Hear, my female friend—spoken by a lady.

அதுசெலவுக்குக்காணும். That will be sufficient for the expense.

சோற்றைக்காணக்காண அவனுக்குத்திமிர்கொள்கின்றது. The more rice he gets, the more proud and insolent he becomes.

தொகைப்பெருக்கங்காணல். Squaring a number.

புன்செய்நன்செய்காணல். Distinguishing the difference between the soils nanja and punja.

காட்டைநாடாக்காணல். Transforming a forest to a city.

கண்டநாடெல்லாந்திரிய, *inf.* To wander about, to rove.

கண்டபடிசெய்ய, *inf.* To act at random, rashly, &c.

கண்டபலன், *s.* The profit realized.

கண்டுகொள்ள, *inf.* To meet, visit.

கண்டுங்காணாமை, *s.* Connivance.

கண்டுசந்திக்க, *inf.* To visit.

கண்டுசாய்ப்பாய்விட்டுவிட, *inf.* To connive at, wink at a thing.

கண்டுசெய்ய, *inf.* To imitate.

கண்டுதரிசிக்க, *inf.* To view, discern by the sight.

கண்டுபாவிக்க, *inf.* To imitate, copy, imagine.

கண்டுபாவனை, *s.* Acting by mere imitation.

கண்டுபிடிக்க, *inf.* To find, discover, detect, explore.

கண்டுமுதல், *s.* Produce in kind—as பத்துமரக்கால்விதைக்கு நூறுமரக்கால்கண்டுமுதலாகும், ten maracals of seed will yield one hundred maracals.

கண்டுமுதல்பண்ண, *inf.* To collect revenue personally.

கண்டெடுக்க, *inf.* To pick up, find and pick up.

கைகண்டது, *s.* That which was experienced, ascertained by practice, tested, proved—as கைகண்டமருந்து, கைகண்டபரிகாரம், கைகண்டதிவை.

காணப்பட, *inf.* To appear, to be perceived, seen.

காணப்படாத, *rel. part.* Invisible.

காணப்படாதது, *appel. n.* That which is invisible.

காணப்பட்டது, *appel. n.* That which is visible.

காணப்போக, *inf.* To visit one.

காணுக்கடி, *s.* An unseen bite, sting, &c., the bite, &c., of a reptile, in the dark, அறியாக்கடி.

காணுக்கிரகம் — காணுக்கோள், *s.* Rare phenomena in nature, unseen planets, real, or imaginary, &c., சாத்தைசேர்.

காணுத்தலம் — காணுறுந்தலம், *s.* The privities, genitals, அல்குல்.

காணுமற்போக — காணுமற்போக, *inf.* To be lost.

காணுமற்றிருடினவன், *appel. n.* One who has taken a thing slyly, clandestinely.

காணுமை, *s.* Invisibility.

காணார், *appel. n.* Enemies—those who will not bow, பகைவர்.

செய்கைகாண, *inf.* To be newly cultivated, or cultivated anew, as land.

உண்மையைக்காண, *inf.* To discover, perceive, or understand the truth, especially divine truth.

ஈரங்காண, *inf.* To become moist—as a floor, land, &c.

ஈரங்கண்டாலுமுளைக்கும். If it feel the moisture, the seed will sprout.

ஈரங்கண்டதரைநடக்கமுடியாது. If the ground becomes wet, one cannot walk well.

காணும், (*the future of* காண் *in the third pers. neuter.*) This form, in colloquial use, is equivalent to sir. 2. In poetry, it is often expletive.

போகிறீர்காணும். Go, sir.

செல்வநிலையாதுகாண். Wealth is unstable. (காண்.)

அப்படியல்லகாணும். It is not so.

காண். An expletive of the second person, முன்னிலையசை.

காண்டக்க, *rel. part.* Beautiful, graceful, as காணத்தக்க.

காணல் — காண்டல், *v. noun.* Seeing, காட்சி. 2. Appearance, தோற்றம். 3. Reverence, வணக்கம். 4. The act of obtaining, பெறுதல்.

காண்பிக்க, *inf.* To cause to see, to convince, காட்ட. 2. To show, exhibit, adduce, display, represent, தெரிவிக்க. 3. To point, direct, சுட்டிக்காட்ட.

காண்பித்துக்கொள்ள, *inf.* To chide, reprimand, blame, reprove.

காண்பித்தல், *v. noun.* Showing, காட்டல்.

காண்டகம், *s.* Jungle, desert, woods, காடு. 2. A town, village, &c., ஊர். 3. Sickness, malady, disease, நோய். 4. A pot with a spout, ewer, கெண்டிகை. 5. A medicinal plant, நிலவேம்பு, Justicia, *L.* (*M. Dic.*) (*p.*)

காண்டம், *s.* Boundary, limit, எல்லை. 2. End, extremity, முடிவு. 3. A water-pot, கமண்டலம். 4. Jungle; a desert, a wild, காடு. 5. Cloth, சீலை. 6. Curtains, திரைச்சீலை. 7. Musical instrument, வாச்சியம் 8. Instruments in general, கருவி. 9. A hill or mountain, மலை. 10. A jewel-box, ஆபரணசெப்பு.

*காண்டம், *s.* Chapter; a large division of a subject in epic poems, the Vedas, &c., நூலின் ஓர் பிரிவு. 2. Water, நீர். 3. An arrow, அம்பு. 4. A horse, குதிரை. 5. Opportunity, season, சமயம். 6. A stem, stalk, தாள். 7 Sacred water, தீர்த்தம். 8. A weapon in general, படைக்கலம். 9. A staff, a rod, கோல். 10. A collection, multitude, an assemblage, திரள். 11. A medicinal plant, நிலவேம்பு Justicia, *L.* 12. A kind of arsenic in its natural state, சரகாண்டபாஷாணம்.

புராதனகாண்டம், *s.* [*in Roman Catholic usage.*] Old Testament.

பச்சிமகாண்டம், *s.* [*in Roman Catholic usage.*] New Testament.

காண்டல், *v. noun.* [*in logic.*] Sensation, perception, observation. It is divided into வாயிற்காண்டல், மானதக்காண்டல், வேதனைக்காண்டல் and யோகக்காண்டல். (சிவ. சி.) See under காண்.

*காண்டவம்—காண்டாவனம், *s.* A forest sacred to Indra, இந்திரன்வனம். Wils. p. 273. Khandava.

காண்டவதகனம், *s.* Conflagration of the காண்டவம் forest.

காண்டாவனமெரித்தோன், *s.* Arjuna, as the burner of the காண்டாவனம் forest, அருச்சனன்.

காண்டவனன்—காண்டாவனன், *s.* Indra, as the owner of காண்டவம் forest.

காண்டாவனாரி, *s.* Arjuna, as the destroyer of காண்டாவனம், அருச்சனன்.

காண்டாமிருகம், *s.* (*Sans. Ganda.*) The rhinoceros, unicorn, ஓர்மிருகம்.

காண்டாமிருகரத்தம், *s.* Dragon's blood, a resin of Calam Draco, *L.*

காண்டிகை, *s.* A compendious commentary, ஒருரை. See உரை.

*காண்டிபம், *s.* The bow of Arjuna, அருச்சனன்வில். Wils. p 287. Gandiva. 2. A kind of unprepared arsenic, சரகாண்டபாஷாணம். See காண்டம்.

காண்டியம், *s.* (*Corruption of* காந்தியம்.) Intensity of heat, heat of weather as felt in the hot season, உஷ்ணம்.

காண்டியகாலம், *s.* The hot season.

காண்டில், *s.* A kind of prepared arsenic, இரசபாஷாணம்.

*காண்டீபம்—காண்டீவம், *s.* A bow, வில். 2. Sagittarius, a sign in the zodiac, தனுவிராசி. (*p.*) 3. The bow of Arjuna, அருச்சனன்வில். Wils. p. 287. Gandeeva.

காண்டீபன்—காண்டீவன், *s.* Arjuna, as armed with காண்டீபம் bow.

காண்டு, *s.* The distance of a call, கூப்பிடுதூரம்.

*காதகம், *s.* Killing, taking away life, கொலை. 2. Harassing, torturing, பிறரைப்பீடிக்கை. Wils. p. 309. G'hata. (*p.*)

காதகன், *s.* A life-taker, killer, murderer, கொலைசெய்வோன். Wils. p. 309. G'hataka.

காதம், *s.* An Indian league, a distance of about ten miles, ஏழரைநாழிகைவழிதூரம். (*c.*) 2. Toddy, fermented liquor, கள். (*p.*)

காதவழிபேரில்லான்கழுதைபோடொக்கும். One whose fame does not extend one league is but an ass.

முக்காதவழி, *s.* A distance of three leagues.

*காதம், *s.* Killing, slaughter, murder. கொலை. 2. [*in arith.*] Involution. Wils. p. 309. G'hata. 3. A square or oblong pond, சதுரத்தரவு. Wils. p. 273. Khata.

காதன், *s.* Murderer, கொலையாளன்.

*காதம்பம், *s.* A variety of sweet-singing swan, இனிதாகப்பாடும் அன்னம். (சது.)

காதரம், *s.* The entailed effect of evil actions upon the soul, producing transmigrations with their accompanying sufferings, தீவினைத்தொடர்பு. (*p.*)

*காதரம்—காதரவு, *s.* Timidity, want of courage, அச்சம். 2. Gentleness, அமைவு. Wils. p. 209. Katara.

காதரன், *s.* A timid person, அச்சமுடையவன்.

காதல், *s.* Warm attachment, fondness, love, affection, அன்பு. 2. Desire, longing for, ஆசை. 3. Intentness, earnestness, eagerness, ஆவல். 4. Lustfulness, passion, விரகம். 5. An object of love; *emphatically*, a son, மகன். 6. A species of poem commonly on divine subjects, calculated to move the affections, ஓர்பிரபந்தம். 7. The cry, screech, or chirp of certain birds, &c., considered ominous, ஆந்தை கெவுளி முதலியவைகளின் ஒலி.

காதற்சிறப்புரைத்தல், *v. noun.* Expression of warm desire or love, as of a lover to his mistress, ஆசை மிகுதியைச் சொல்லல். (*p.*)

காதற்பரத்தை, *s.* A kept mistress, being the daughter of a சேரிப்பரத்தை.

ஆந்தைக்காதல், *s.* The screeching of an owl. 2. A treatise on divination or sooth-saying by the screech of an owl.

பஞ்சபட்சிக்காதல், *s.* A treatise on sooth-saying by the screech, cry or notes of the following five birds: ஆந்தை, an owl. 2. கோழி, a cock. 3. மயில், a peacock. 4. காகம், a crow. 5. வல்லூறு, a hawk.

பேரின்பக்காதல், *s.* A poem in which a person is introduced as expressing his desire after true happiness.

காதலன், *s.* Husband, தலைவன். 2. A lover, a suitor, அன்பன். 3. A friend, a dearly beloved person, சிநேகன். 4. A son, மகன். 5. A companion, a choice associate, தோழன். (சது.)

நெஞ்சத்தார்காதலவர். My lover is in my heart. (குற.)

காதலி, *s.* A wife, தலைவி. 2. A female friend, a beloved associate, தோழி. 3. A daughter, மகள். (சது.)

காதலிக்க, *inf.* To be fond of, warmly attached to, அன்புகூர. 2. To long for, to like, desire, lust after, பேராசைகூர.

காதலித்தோர், *s.* Associates, friends, சிநேகர். 2. Lovers, ஆசையுற்றோர்.

காதன்மை, *s.* Affection, attachment, அன்பு. (நீதிநெ.)

*காதி, *s.* An ancient king, sovereign of Kanyakubja, and father of Visvamitra, அரசன். (*p.*) Wils. p 287. Gadhi. 2. [*in the Jaina philosophy.*] Spiritual darkness and the delusions consequent upon it, ஓர்வகைக்கன்மம்; [*ex* காதம், killing.] 3. A kind of arsenic in its natural state, மிருதபாஷாணம்.

காதிமைந்தன், *s.* Visvamitra, as the son of காதி, விசுவாமித்திரன்.

காதிவென்றோன், *s.* Argha, as the conqueror of காதி, அருகன். (சிக.)

*காதிதம், *s.* [*in arith.*] Power.

காது, *s.* Ear, செவி. 2. The eye of a needle, ஊசியின்காது. 3. The pan of a gun, துப்பாக்கிக்காது. 4. The bottom of a tobacco leaf near the stem. (See சோணை.) 5. The top of an ola bond, as far as the hole through which it is filed; also the stamped part of an indenture or bond, which is nipped off, when the bond becomes null and void, உடன்படிக்கையின்காது. 6. Eye of an umbrella wire, which plays round the whale bone, குடைக்கம்பியின்காது. 7. The ear of a machine or vessel—as இரட்டினக்காது. 8. A small wedge to hold a tenon, handle or peg in its place, இறுக்கலாப்பு.

காதுக்கிட்டால்முகத்துக்கழகு. Rings, &c., put in the ear are ornaments to the face.

காதுங்காதும்வைத்தாற்போல. With the utmost secrecy, ear to ear, &c.

எனக்குக்காதுகேளாது. I am deaf.

காதடி, *s.* [*vul.* காதவடி.] The back part of the cheek, செவியடி.

காதடைப்பு, *v. noun.* Deafness occasioned by a fall, blow, disease, &c.

காதணி, *s.* An ear-ornament; of this there are sixteen kinds: viz., கடிப்பிணை, கம்பி, கன்னப்பூ, கன்னசதங்கம், குணுகு, குண்டலம், குழை, கொட்டை, செவிமலர், தாடங்கம், தூக்கம், தொங்கல், தோடு, மகரிகை, வல்லிகை, வேடம்.

காதற—காதறுந்துபோக, *inf.* To have the perforated part of the ear cut or torn off.

காதறுக்க, *inf.* To rend the ear by tearing off the ear-rings. 2. To cancel a bond, commonly by mutilating it.

காதறுத்தகூலிகைமேலே. Tearing the ear and getting booty; i.e. doing injustice and getting money.

காதறுப்பான், *s.* A sore that appears round the ear, காதைச்சுற்றிவரும் இரணம்.

காதறை, *s.* One whose ear has been cut off, or mutilated. 2. The cavity of the ear.

காதற்றமுறி, *s.* A cancelled ola bond.

காதார, *adv.* With one's own ear.

காதாரக்கேட்க, *inf.* To hear with one's own ears.

காதாரக்கேட்டசாட்சி, *s.* An ear-witness.

காதிலேசொல்ல, *inf.* To whisper in the ear.

காதிலேபடிபட, *inf.* To be uttered in one's hearing.

காதிலேபோத, *inf.* To whisper in the ear. 2. To initiate a disciple by whispering a மந்திரம் in the ear. 3. To give private advice.

காதிலேவிழ, *inf.* To reach the ears, to be heard

காதுகடிக்க, *inf.* To whisper, to buzz in the ear.

காதுகுத்த, *inf.* To bore, perforate or pierce the ear.

நீயெனக்குக்காதுகுத்துகிறாயா. Do you pierce my ear? (Do you teach me?)

காதுகுளிர, *inf.* To be gratifying to the ear—as good news, a good voice, sweet music, &c.

காதுகேளாதவன், *s.* A deaf man.

காதுகொடுக்க *inf.* To give ear, to hearken, to listen, to give attention.

என்சொல்லுக்குக்காதுகொடுத்தான். He has given ear to my words.

காதுக்கின்பமான. Pleasing to the ear

காதுக்குடைச்சல், *s.* An itching, tingling sensation in the ear.

காதுக்குத்து—காதுநோய், *s.* Ear-ache.

காதுக்குறும்பி, *s.* Ear-wax, cerumen.

காதுச்சோணை—காதுத்தண்டு, *s* The lobe of the ear.

காதுதூர, *inf.* To close the perforation of the ear.

காதுத்துவாரம்—காதுத்துளை, *s.* A perforation or hole in the ear intended for jewels.

காதுப்பூ, *s.* A flower-shaped ear-ornament, for females.

காதுப்பூச்சி, *s.* [*prov.*] A small kind of centipede, said to be very dangerous if it get into the ear, செவிப்பாம்பு.

[காது]மடல், *s.* The gristles of the ear, [illegible] இதழ்

கா[து]மந்தம், *s.* Dullness of hearing, சாதுடைப்பு.

[கா]துமந்தன், *s.* A person dull of hearing.

காதுமுருந்து, *s.* [*prov.*] The hard gristles of the ear.

காதுவளர்க்க, *inf.* To promote the proper growth of the lobe of the ear for wearing jewels.

காதுவிடாய், *s.* Weakness or lassitude in hearing, occasioned by hunger or sickness.

காதுவெட்ட—காதுநறுக்க—காதுகிள்ள, *inf.* [*prov.*] To tear or nip off the stamped part of an ola bond, or otherwise to mutilate it as an indication of its being cancelled, உடன்படிக்கையின் காத றுக்க.

காதெழுச்சி, *s.* A sore in the ear, காதில் வரும் ஓர்நோய்.

காதைநெறிக்க, *inf.* To prick up the ears.

காதைப்பொத்த, *inf.* To stop the ear.

காதோதி, *s.* A malicious whisperer.

காதோலை, *s.* An ear-ornament, often a rolled ola, colored red; used also to enlarge the perforation, whence the name, காதுக்கிடும் ஓலை.—*Note.* A person is considered naked with nothing in the ear.

இல்லிக்காது, *s.* Ears with the hole very small—opposed to தொள்ளைக்காது.

கீழ்க்காது, *s.* The lower part of the ear.

சோணைக்காது—சோணை பெருத்த காது, *s.* Large ear-laps, not perforated.

தொள்ளைக்காது—வடிகாது—வார்காது, *s.* Ears with the hole much enlarged.

மேற்காது, *s.* The upper part of the ear.

வடுகக்காது, *s.* Large ear-laps artificially made.

காது, கிறேன், காதினேன், வேன், காத, *v. a.* To kill, slay, murder, destroy, கொல்ல. 2. To divide, dissect, compart, கூறுசெய்ய. 3. To cut, தறிக்க. 4. To break, snap, முறிக்க. (*p.*)

காதல், *v. noun.* The act of cutting in pieces. தறித்தல். 2. The act of killing, கொல்லல். 3. The act of breaking, snapping, முறித்தல். 4. *s.* [*as* எதிராப்பு] a peg for driving out nails. (*Rott.*)

காது, *v. noun.* Murder, கொலை. (*p.*)

*காதை, *s.* A story, a narrative, சரித்திரம். 2 Word, message, errand, news. செய்தி. 3. Uttering, declaring, telling, சொல்லுகை. (See கதை.) 4. Killing, murder, கொலை. (*p.*)

காதைகரப்பு, *s.* A stanza so composed, that, beginning with the first letter of the last word, and reading backwards every alternate letter only, a new stanza is formed, மிறைக்கவியிலொன்று. (*p.*)

காத்தவராயன்—காத்தான், *s.* A god or demon, the foster son of Kali, காளியால் வளர்க்கப்பட்டவன்.

*காத்தியாயனம், *s.* One of the thirty-two உபநிடதம். 2. One of the eighteen தரும நூல்.

*காத்தியாயனர், *s.* The name of a celebrated lawgiver and divine sage, ஓர் முனிவன். 2. An appellation of the poet Vararuchi, வரருசி. Wils. p. 209. KATYAYANA.

*காத்தியாயனி—காத்தியாயினி, *s.* Durga, துர்க்கை. Wils. p. 209. KATYAYANEE.

காத்திரம், *s.* Displeasure, கோபம். 2. Anger, fury, சினம். 3. The ichneumon, mungoose, கீரி. (சது.)

*காத்திரம், *s.* Body, உடல். 2. A limb, a member, உறுப்பு. 3. The fore-leg of an elephant, யானையின் முன்கால். 4. Thickness, solidity, கனம். 5. Corpulence, பருமம். 6. Importance, consequence, முக்கியம். Wils. p. 287. GATRA.

ஒரு முழவகலத்திலே மூன்று முழ நீளத்திலே நாலு விரல் காத்திரத்திலே ஒரு பலகைவேண்டும். I want a board one cubit broad, three cubits long, and four fingers thick. (*Rott.*)

காத்திரமானகல், *s.* A gem of a large size.

காத்திரமானவன், *s.* A corpulent man. 2. A wealthy man, a man of respectability.

காத்திரன், *s.* A stout, corpulent man, பருத்தவன்.

*காத்திரவேயம்—காத்திரவேயன், *s.* Snake, serpent; also, a serpent of the race that is fabled to live in one of the lower regions, பாம்பு. Wils. p. 209. KADRAVEYA.

காத்திரி, *s.* The mungoose, கீரி. 2. Weapons, படைக்கலம். (*p.*).

காத்திரை, *s.* Instrument, ஆயுதம்.

காத்தொட்டி—காத்தோட்டி—காத்தட்டி, *s.* A climbing plant, ஆதொண்டை, Capparis horrida, *L.*

*காந்தம், *s.* The magnet, load-stone, magnetic iron-stone, அயக்காந்தம், அசுருக்காந்தம், உருளைக்காந்தம், ஊசிக்காந்தம், பலகைக்காந்தம், கற்காந்தம், தகட்டுக்காந்தம், are different varieties of magnet 2. A class of mineral stones—as the சூரியகாந்தம், சந்திரகாந்தம். 3. (*p.*) Beauty, loveliness, agreeableness, அழகு. Wils. p. 209 KANTA. 4. [*in rhetoric.*] eulogy, commendation or praise within proper bounds; one of the ten particulars of the வைதருப்பம mode of description, வைதருப்பநெறியில் ஒன்று. (தண்டி.)

காந்தமும் ஊசியும்போல. As closely united as the load-stone and the needle.

காந்தக்கல, *s.* The magnet or load-stone, அயக்காந்தம்.

காந்தசத்துரு, *s.* That which counteracts the magnetic power—as blue-vitriol, sal-ammoniac, salt-petre, காந்தசத்தின சத்துருச்சரக்கு.

காந்தபஸ்மம், *s.* Medicinal powders made of load-stone by a chemical process.

காந்தபாஷாணம், *s.* A kind of arsenic.

காந்தப்பெட்டி, *s.* The mariner's or surveyor's compass, திசையறிகருவி.

காந்தமணி, *s.* A magnetic stone, காந்தக்கல்.

காந்தமண், *s.* Red earth, செம்மண்.

காந்தமலை, *s.* A mountain or rock far north, regarded as the centre of attraction to the magnet; the magnetic pole, காந்தக்கன்மலை.

காந்தம்பிடிக்க—காந்தம்வலிக்க, *inf.* To attract—as the magnet.

காந்தவூசி, *s.* The magnetic needle, the steel pointer of the compass, காந்தத்தி ஹற் செபத ஊசி.

*காந்தம்—ஸ்காந்தம், *s.* A purana, the Skanda purana, கந்தப்புராணம்.

*காந்தன், *s.* A king, an emperor, அரசன். 2. A husband, a ruler, a chief, a head-man, தலைவன். 3. A lord, a nobleman, எப்பொருட்குமிறைவன்.

காந்தை, *s.* A wife, mistress, a beloved or lovely woman, காதலி. 2. Woman in general, பெண்.

*காந்தருவர், *s.* Celestial choristers, a class of supernals, கந்தருவர். Wils. p. 288. GAND'HARVA.

காந்தருவப்புணர்ச்சி, *s.* Sexual intercourse by mutual consent, in anticipation of marriage.

காந்தருவமணம், *s.* Marriage by mutual consent, without the knowledge or consent of relations.

காந்தருவம், *s.* One of the eight kinds of marriage, காந்தருவமணம். (See மணம்.) 2. [*in Hindu philosophy.*] One of the two-hundred and twenty-four புவனம்.

காந்தருவவாதம், s. One of the sixty-four கலைஞானம். See கலைஞானம்.

காந்தருவவேதம், s. The science of music, a musical composition, கீதசாஸ்திரம்.

காந்தள், s. The November-flower plant, காந்திகைப்பூ, Gloriosa superba, *L.* 2. [*in love poetry*] The wearing of the காந்தள் flower by a disappointed lover. (See மடலூர்தல்.) 3. Soap, சவக்காரம். (*M. Dic*) (*p.*)

காந்தள்போலியகரம். Hands resembling in form the காந்தள் flower.

செங்காந்தள், s. The red species of காந்தள்.

வெண்காந்தள், s. The white species of காந்தள்.

*காந்தாரம், s. The name of a country; Kandahar, between northern India and Persia, ஓர்தேசம். 2. Melody, music, இசைப்பாட்டு. 3. A kind of tune or mode of singing, ஓர்பண். 4. A kind of guitar, குறிஞ்சி யாழ்த்திறம். Wils. p. 288. GAND'HARA. 5. Jungle, forest, wood, காடு. Wils. p. 209. KANTARA.

காந்தாரி, s. The daughter of the country of Kandahar, the mother of Duryod'hana. 2. (*fig.*) A hard-hearted, cruel woman, கொடியவள்.

காந்தாரிமைந்தன், s. Duryod'hana, the son of காந்தாரி.

*காந்தாரி, s. One of the ten நாடி veins or nerves, said to extend from the navel to the throat, தசநாடியில் ஒன்று. (சது.) Other authorities say—from கழிமுனை to the eyes. 2. A tune, ஓர்பண். 3. A kind of salt of a burning and acrid nature, சத்தி சாரம்.

காந்தாளம், s. [*local.*] Auger, கோபம்.

*காந்தி, s. Brightness, lustre, light, glare, ஒளி. 2. Beauty, அழகு. 3. Rays, கிரணம். Wils. p. 209. KANTI. 4. Hotness, heat, உஷ்ணம். 5. Ochre, காவிக்கல். 6. The cat's eye, வைடூரியம். 7. A stone used as a medicine, சிலாசத்து. (*M. Dic.*)

காந்திகொடுக்க, *inf.* To give out lustre, or appear brilliant; to shine, to sparkle.

காந்திகொள்ள, *inf.* To contract heat —as the system from neglect of bathing, from taking hot medicine, &c.

காந்தியதிகமேனி, s. Ochre, காவிக்கல்.

காந்தியாயெறிக்க, *inf.* To emit rays of light; to be shining, resplendent, பிரகாசிக்க.

காந்தியானசரீரம, s. A body of hot temperament—applied to persons in whose system the bilious humor is predominant.

காந்தியானபூமி, s. A hot climate.

காந்தியானமருந்து, s. Hot medicines— as sulphur, calomel, &c., from their effects on the system.

காந்தியெறிக்க, *inf.* To strike—as the heat of the sun, &c. 2. To fly to, or affect the head or other part—as ardent spirits, hot medicines, &c.

காந்தியோனி, s. A kind of arsenic, ஓர்பாஷாணம்.

காந்துகம், s. The white காந்தள் flower. (சது.) (*p.*)

காந்து, கிறேன், காந்தினேன், வேன், காந்த, *v. n.* To shine, give out lustre, emit rays, பிரகாசிக்க. 2. To be scorched, singed, reduced to a cinder, கருகிப்போக. 3. To be heated gently—as a vessel on the fire, காய. 4. To be hot with indignation, to be enkindled, மனம்வேக. 5. To feel hot as the body, by warm weather, fever, or hot medicines, வெப்பமுற. 6. To heat, burn, smart, as a sore, எரிய. 7. To burn with envy, பொறாமைகொள்ள. 8. *v. a.* [*prov.*] To absorb water, rain, &c.—as hot vessels, parched earth, &c., சுவற. 9. To heat, to make hot, சுட. 10. [*prov.*] To bite off, scoop or scrape out with the upper teeth—as a cocoanut, பல்லினாற்கோத.

கண்டுகாந்துகிறாள். She envies one.

விளக்கிலெண்ணெய்காந்தியது. The lamp has absorbed the oil.

வயிறுகாந்த, *inf.* To be pinched with hunger.

காந்தல், *v. noun.* Burning, floating flakes of straw, olas, paper, &c.; cinders, ஓலைமுதலியவற்றின் காந்தல். 2. Any thing over-dried or scorched by fire, முதிரக் காய்ந்தது. 3. Auger, சினக்குறிப்பு. 4. (*fig.*) Growing grain greatly burnt by the sun, காய்ந்தபயிர்.

காந்தலாய்ப்போக, *inf.* To be reduced to cinders. 2. To be greatly scorched.

காந்தற்சோறு, s. Parched, boiled rice.

*காபாலம், s. One of the three dances of Siva; the other two being கொடுகொட்டி and பாண்டரங்கம்; சிவன்கூத்து. (*p.*)

காபாலன்—காபாலி, s. Siva. சிவன்.

காபாலிகம், s. One of the sects of Saivism, சைவமதத்திலொன்று.

காபரா, s. (*Hind.*) Disturbance, bustle, confusion, perplexity, சந்தடி.

காபி, s. One of the forty-three modern tunes, ஓர்ராகம்.

காபிலகாலயூபம், s. One of the thirty-two works on architecture, சிற்பநூலிலொன்று.

காமினி, s. Sal-ammoniac, நவச்சாரம்.

காப்பியம், s. [*as* காவியம்.] An epic poem, containing particulars relating to அறம், பொருள், இன்பம், and வீடு, having a hero, and depicting exploits, &c., being of two kinds, the major and minor, viz:—

பெருங்காப்பியம், s. An epic poem complete in its parts, especially in அறம், பொருள், இன்பம், வீடு. (தண்டி.)

சிறுகாப்பியம், s. An epic poem, deficient in one or more of the four main parts. The name காப்பியம் is generally given to this. (தண்டி.)

காப்பியன், s. The planet Venus, சுக்கிரன். (சது.)

காப்பிரி, s. A Kaffir, or Negro of Africa. (*c.*)

காப்பிரிக்கோழி, s. A fowl with a peculiar kind of feather having a tendency to curl up.

காப்பிரிசல்லாது, s. A plant, Endive, Cichorium, *L.*; [*ex* காப்பிரி, *et* சல்லாது, salading.]

காப்பிரிமிளகாய், s. A species of cayenne pepper, in pods; the chilly.

காப்பு, s. Guard, protection, &c. See under the verb கா.

காமக்கோட்டம், s. The name of a town or *Kotam* where the Kurumba tribes once flourished, குறும்பர்கோட்டத்தொன்று.

காமக்கோட்டத்தி — காமக்கோட்டி, s. The goddess Parvati, as worshipped in the temple at Kamakotam.

*காமபாலன், s. Balab'hatra or Vishnu in his eighth incarnation, பலபத்திரன். Wils. p. 211. KAMAPALA. (*p.*)

காமம், s. Town, village, ஊர்; [*ex* கிராமம்.] 2. Habitation, குடி. (சது.)

*காமம், s. Amorousness, love of the sexes; sexual desire, ஆசை. 2. Libidinousness, lasciviousness, concupiscence, lust, காமநோய். It is one of the six உட்பகை 3. Love, desire, அன்பு. 4. Semen virile, வீரியம். Wils. p. 210. KAMA.

காமகமனம், s. A lascivious life, காமத்தின்வழியேநடக்கிறநடக்கை.

காமகலிதம், s. Emission of semen.

காமக்கவலை, s. Lasciviousness. 2. Sexual desire.

காமக்காய்ச்சல், s. A venereal fever, Febris alba chlorosis.

காமக்கிருமி, s. [*prov.*] Animalculæ in the female pubic region causing itching, venereal feelings, &c.

காமக்கிழத்தி, s. A kept mistress; a concubine, being the daughter of a குலப்பரத்தை.

காமக்குறிப்பு, s. Signs of love, amorous gestures.

காமசலம்—காமோதகம், s. Semen virorum et mulierum.

காமதேனு, s. The fabled cow in the world of the gods which supplies every want, தெய்வப்பசு.

காமத்துப்பால், s. The third part of the Cural, which treats of love and its sufferings.

காமத்துப்பாலோர், s. The lascivious, தூர்த்தர்.

காமத்துரோகி, s. One who hates lasciviousness, an ascetic, காமங்கடிந்தோன்.

காமநாசன், s. Siva as the mortifier of passions, சிவன்.

காமநீர், s. Semen virile, venereal secretions, venereal humours.

காமநூல், s. Erotics—one of the sixty-four கலைஞானம், மதனசாத்திரம்.

காமநோய், s. Love-sickness, மதனநோய்.

காமபோகி, s. A lascivious person.

காமப்பற்று, s. Libidinous propensities, காமவிருப்பு.

காமப்பால், s. The third section of the Cural—as காமத்துப்பால்.

காமப்பூ, s. A flower which excites venery, மதனகாமேசரப்பூ, Pergularia tomentosa.

காமப்பேய், s. A wanton person, காமாதுரன்.

காமப்பைத்தியம், s. Love-sickness, fascination and absence of mind from love, காமப்பித்தம்.

காமமரம், s. A palm tree, ஓர்மரம், Cycas circinalis.

காமரூபி, s. The ஓந்தி lizard, the chameleon, பச்சோந்தி, Lacerta chameleon, *L.* 2. One able to assume any form at pleasure, வேண்டியவுருவங்கொள்பவன்.

காமலீலை, *s.* Libidinous sporting of the sexes together to excite or gratify sexual desire

காமவல்லி, *s.* A plant said to climb the Kalpa tree in the world of Indra, கற்பகத்திற்படர்கொடி.

காமவிகாரம், *s.* Irregular sexual desires, lasciviousness, lust. 2. Sexual love.

காமவிகாரமாயிருக்க, *inf.* To be lustful, lecherous.

காமவிகாரன்—காமவிகாரி, *s.* A lascivious person.

காமவிடாய், *s.* Vehement sexual desire.

காமவெறி, *s.* Venereal infatuation.

காமன், *s.* Kama, the Indian Cupid, மன்மதன். Wils. p. 210. KAMA.

காமதகனன், *s.* Siva, as the burner of Kama, சிவன். *(p.)*

காமற்காய்ந்தோன், *s.* Siva, as the consumer of Kama, சிவன். 2. Argha, அருகன்.

காமன்மைத்துனன், *s.* Ganesa, as the maternal cousin of Kama, விநாயகன்.

காமன்திருநாள்—காமன்பண்டிகை, *s.* A festival to Kama, celebrated in some places in March, மன்மதோச்சவம்.

காமாக்கினி, *s.* The fire of lust, venereal desire, the venereal principle seated and operative in the body, as one of the three fires of the animal system, காமத்தீ. Wils. p. 211. KAMAGNI.

காமாட்சி—காமாக்ஷி, *s.* A name of Parvati, as having fascinating eyes, பார்வதி; [*ex* காமம், *et* அக்ஷி]

காமாதுரன், *s.* (*Fem.* காமாதுரி.) A libidinous person, விடன். Wils. p. 211. KAMATURA.

காமாந்தகன், *s.* Siva, as the destroyer of Kama, சிவன். 2. A lascivious person, one blinded by love, காமமிக்குடையோன்.

காமாரி, *s.* Siva, as the enemy of Kama, சிவன் *(p.)*

காமி—காமியன், *s.* A lascivious person, a voluptuary, காமாதுரன்.

காமுற, *inf.* To desire, wish for, விரும்ப. 2. To love sexually, ஆசைப்பட. 3. To lust for, to be lascivious, மோகமுற. *(p.)*

காமரசி, *s.* A plant, நெருஞ்சில், Tribulus terrestris, *L.*

காமரம, *s.* A fire-place for cooking, அடுப்பு. 2 The thirteenth lunar asterism, அத்தநாள். 3. Songs, singing, இசைப்பாட்டு. 4. Music, melody, இசைப்பொது. 5. A beetle, வண்டு. 6. A grove—as மரக்கா. 7. The aquila tree, அகில். *(M. Dic.)* 8. Banian tree—as காண்மரம். *(p.)*

காமரி, *s.* A plant, புளிநறளை, Cissus, vitiginea, *L.*

காமரீசம், *s.* A parasitic plant, புல்லூரி, Loranthus pentandrus, *L.*

காமர், *s.* Beauty, அழகு. 2. Ornament, or artificial beauty, அலங்காரம். 3. Great or surpassing beauty, பேரழகு. 4 Brightness, lustre, splendour, ஒளி. 5. Desire—as காமம். *(p.)*

காமலை, *s.* A plant, சிறுகிழங்கு, Plectranthus rugos. *(Nob.)*

காமன், *s.* A beetle, வண்டு. 2. Long-pepper, திப்பிலி. *(p.)* See under காமம்.

காமாட்டி, *s.* (*Tel.* [Telugu]. Brown, p. 216.) A digger of earth, one who works with a spade, &c., மண்வெட்டுவோன். 2. *(fig.)* A fool, an idiot, மூடன். *(c.)*

காமாபலகை, *s.* The top board around the side of a boat, மரக்கலத்திலேரப்பலகை.

காமாலை—காமாளை, *s.* A disease characterized by bloatedness of the system, paleness of the skin, general languor, and loss of appetite; jaundice, of which there are several varieties—as ஊது-பித்த-மஞ்சள்-வறட் காமாலை; which see.

காமாலை பிடித்தவன், *s.* One who has the jaundice.

காமி, *s.* Fuller's earth, உவர்மண். 2. Gold-colored antimony, பொன்னிமிளை. See under காமம்.

காமி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To desire, விரும்ப. 2. To desire sexually, இச்சிக்க. 3. To lust for, to be lascivious, மோகமுற. *(p.)*

காமிகம், *s.* One of the twenty-eight Agamas of the Saivas, சைவாகமத்தொன்று.

*காமியம், *s.* A thing desired, an object of desire, that which is done for some particular object—as religious ceremonies, &c.—opposed to நிட்காமியம். Wils. p. 212. KAMYA. 2. One of the three evil passions, the principle of lust, &c. See காமமிகம்.

காமியகன்மம், *s.* Works done to obtain some benefit, பயனை விரும்பிச் செய்யுங்கிரியை.

காமியக்கல், *s.* One of the nine precious stones, கோமேதகம்.

காமியமரணம், *s* A voluntary death; suicide by plunging into the Ganges, &c., forbidden to the Brahman, but meritorious in the other castes.

*காமுகர், *s.* Lascivious persons, gallants, தூர்த்தர். Wils. p. 212. KAMUKA. 2. Inhabitants of cities, நகரப்பதிவாழ்வோர். *(சது.)* 3. Fashionable, gay, polite persons; polished people, ரசிகர்.

காமுருகி, *s.* A lizard, the blood-sucker, ஓந்தி.

*காம்பிலி, *s.* Name of a country in northern India; also its capital, ஓர்தேசம். Wils. p. 212. KAMPILI.

*காம்பீரம்—காம்பீரியம், *s.* Triumph, exultation, transport of joy, கம்பீரம். 2. Deepness, profundity, depth, ஆழம். 3. Importance, seriousness, முக்கியம்.

காம்பு, *s.* A foot-stalk, a pedicle, a foot-stem, பூமுதலியவைகளின் தாள். 2. A handle of a straight kind, a shaft, a haft, கைப்பிடி. 3. Bamboo, மூங்கில். 4. A flower-stalk, a peduncle, மலர்க்கொம்பு. 5. Silk cloth, பட்டுச்சீலை 6. A kind of gourd, பூசணி, Cucurbita.

காம்பாய—காம்புகிள்ள, *inf.* To nip off the stalks of vegetables for cooking, &c.

காம்புகால்பொர. The wind rushing against the bamboos. (இராமா.)

காம்புச்சத்தகம், *s.* [*prov.*] An iron-handled curved knife, used in basket-making, ஓலைவாருகிறசிறுகத்தி.

குடைக்காம்பு, *s.* The handle of an umbrella.

முலைக்காம்பு, *s.* Teat, nipple or a woman's breast.

*காம்போசம், *s.* The Kamboja country, ஓர்தேசம். Wils. p. 212. KAMBOJA. 2. One of the eighteen languages. (See பாடை.) 3. *(Rott.)* A tree, Rottleria tinctoria *(Roxb.)*

காம்போதி, *s.* One of the thirty-two kinds of old tunes, ஓரிராகம்.

*காயகம், *s.* Singing amorous songs, பாடுகை. Wils. p. 288. GAYAKA. 2. *(fig.)* Delusion in love, imaginary belief of the presence of a lover, காமப்பிராந்தி. 3. Libidinous fascination, மோகமயக்கு.

காயகம்பண்ண, *inf.* To allure, fascinate, excite libidinously.

காயகர், *s.* Singers, பாடுவோர். Wils. p. 288. GAYAKA. 2. Fascinators, libidinous wheedlers, மயக்குவோர்.

காயக்கம், *s.* Libidinous fascination. See காயகம்.

*காயத்திரி, *s.* The Gayatri—the most sacred verse of the Vedas, recited mentally as an incantation, ஓர்மந்திரம். 2. *(p.)* Gayatri, a goddess or personification of the sacred verse, காயத்திரி சுரூபியாயிருப்பவள். 3. A name of Sarasvati, சரச்சுவதி. Wils. p. 288. GAYATRI. 4. Ebony, கருங்காலி:

பிரமகாயத்திரி, *s.* The Brahma Gayatri, recited by brahmans of whatever sect, in their daily worship.—*Note.* The use of this Gayatri was probably established in some remote age when the worship of Brahma was practised. This has long been discontinued except in this form of the Gayatri. It is said to be addressed to the sun. Compare சாவித்திரி.

சிவகாயத்திரி, *s.* The Siva Gayatri.

காயம், *s.* Assafœtida, பெருங்காயம். 2. *(p.)* Ether, the ethereal regions. (See ஆகாயம்.) 3. Pungency, கார்ப்பு. 4. Pepper, மிளகு. 5. Onion, வெண்காயம். 6. A composition of vegetable stimulants, given to women after child-birth, காயமருந்து. 7. Condiments, seasonings, சரக்கிடுங்காயம். 8. *(c.)* Wound, hurt, bruise, contusion, ஊறு, புண்.

காயக்காரன், *s.* A wounded person.

காயங்கட்ட, *inf.* To dress a wound

காயங்கொடுக்க, *inf.* To give a stimulating compound to a lying-in woman.

காயப்பட, *inf.* To be wounded. 2. To be stained, soiled.

காயம்பட்டகுரங்குபோல். Like a wounded monkey.

காயப்படுத்த, *inf.* To wound. 2. To stain, to taint, to blot, to soil.

அடிக்காயம், *s.* A wound inflicted by a stroke.

The ஐங்காயம் or five stimulants used as medicines are: 1 பெருங்காயம், assafœtida. 2. மிளகு, pepper. 3. சுக்கு, dry ginger 4. வெள்ளுள்ளி, garlic. 5. கடுகு, mustard.

சாவுகாயம், *s.* A mortal wound.

பிழைகாயம், *s.* A wound that is not mortal.

*காயம், *s.* The body, உடல். Wils. p. 212. KAYA.

காயகற்பம், *s.* Medicines for strengthening the body, சரீரத்தைப்பலப்படுத்துமருந்து.

காயசித்தி, *s.* The power of securing the body by magical medicaments against age and its effects—as loss of teeth, gray hairs, decay of mental or corporal powers, &c., சரீரத்தை நெடுநாளிருக்கச்செய்யுஞ் சித்தி. 2. The art of reducing the body to an atom, or enlarging it at pleasure, அணிமாமகிமாசித்தி.

காயசித்திக்கடியான், *s.* Load-stone, காந்தக்கல். (*M. Dic.*)

காயசித்திசுண்ணம், *s.* Crystalized or foliated gypsum used as a medicine, கருப்பூரசிலாசத்து. (*M. Dic.*)

காயசித்தியானோன், *s.* One who has obtained the power of காயசித்தி. 2. A kind of prepared arsenic, குதபாஷாணம். (*M. Dic.*)

காயசித்தியுப்பு, *s.* Urine salt, அமரியுப்பு.

காயத்தையிருத்தி, *s.* Washerman's earth, பூவழலை.

காயத்தையுருச்கி, *s.* Iron ochre, அஸ்திபேதி.

காயப்பெண், *s.* மோகினி who appears in dreams.

காயவேகம், *s.* [*prov.*] Anger, spleen, fretfulness.

காயாபுரி—காயாபுரிபட்டணம், *s.* The body as the tabernacle or dwelling of the soul; also considered a city in miniature.

சூக்ஷமகாயம், *s.* The spiritual and invisible body. See சூக்ஷமதேகம்.

வச்சிரகாயம், *s.* A robust body, indestructible body.

ஸ்தூலகாயம், *s.* The gross material body.

காயலா, *s.* (*Hind.*) Sickness, ill-health, நோய்.

காயல், *s.* A small river or arm of the sea, கழி. 2. The mouth of an ebbing brook, கழிமுகம். 3. Salt-pans, உப்பளம். (*p.*) 4. *v. noun.* A form of காய்தல்.

காயா—காயாமரம், *s.* A shrub or dwarfish tree bearing purple flowers, காசாமரம், Memecylon tinctorium.

காயாம்பூ, *s.* The flowers of the காயா.

காயாம்பூமேனியன், *s.* Vishnu, whose colour resembles that of the காயா flower.

காயிதா, *s.* (*Ar.*) Custom, rule.

காய், *s.* Unripe fruits, fruits, that do not grow mellow by ripening—as grains, nuts, &c., கனிக்காய். 2. (*c.*) A callous tumour, an excrescence, a wart, a corn, a cicatrice from a wound, காய்ப்பு. 3. An unripe boil, &c., காய்ப்பரு. 4. A piece at chess, a die, சொக்கட்டான்காய்.

கட்டியின்னங்காயாயிருக்கிறது. The tumour is not yet ripe.

காயவியல், *s.* A curry carelessly prepared with unripe fruits.

காய்கறி, *s.* Fruits, vegetables and the like for preparing curry.

காய்காய்க்க, *inf.* To form as fruit; to produce fruit, to bear fruit.

காய்காய்க்கிறமரம், *s.* A tree that bears fruit, not a barren tree.

காய்க்கடுக்கன், *s.* [*prov.*] An ear-ring with a sacred seed fastened in it, for a bead, from which, if water fall on the body, in bathing, &c., it is deemed very meritorious, உருத்திராட்சகடுக்கன்.

காய்க்குலை, *s.* A bunch of unripe fruits.

காய்ச்சீர், *s.* [*in prosody.*] Any of the four metrical feet ending in காய்; also, a metrical foot equivalent in measure to a foot in காய். See சீர்.

காய்த்தானியம், *s.* The nine kinds of grains, called முதிரை, நவதானியம். 2. A shrub, கம்பளிச்செடி, Morus Indica.

காய்பறிக்க, *inf.* To pluck unripe fruits

காய்மடி, *s.* The thick, hard udder of a cow unfit for milk.

காய்மடை, *s.* [*prov.*] An offering of fruits, commonly to a ferocious deity, கனிவர்க்கநிவேதனம்.

காய்ம்பனை, *s.* [*prov.*] A fruit-bearing palmyra tree, as distinguished from young trees and males, காயகரும்பனை.

காய்வள்ளி, *s.* See வள்ளி.

காய்வெட்டிக்கள், *s.* [*prov.*] Toddy from a Palmyra tree, the young fruits of which are cut off that the juice may flow from the stalk, காயைவெட்டி இறக்குங்கள்.

கருக்காய், *s.* Grain almost ripe.

கருங்காய், *s.* Dark betel-nuts, not yet turned red.

செங்காய், *s.* Fruits or grain turning yellow when ripening.

பசுங்காய்—இளங்காய், *s.* Fruits just formed, tender grain. 2. Immature fruit or grain.

காய், கிறேன், ந்தேன், வேன், காய, *v. n.* To be heated, boiled, cooked, &c., as liquids by fire, நீர்முதலியனகாய. 2. To be warmed, heated, &c., by fire or the sun; to be withered, tanned, &c., slightly—as vegetables by the sun; to become parched—as the lips or mouth; to be dried and hardened—as the ground; to dry, உலர. 3. To warm one's self, to become warm, குளிர்காய. 4. To be hot—as in a fever; to beat—as the fever, சுரங்காய. 5. To shine, to emit rays, பிரகாசிக்க. 6. To be dried—as the humors of the body; to become emaciated, to suffer from hunger, மெலிய. 7. To dry up, to begin to heal—as a sore, a wound, a boil, &c.; to cicatrize, புண்ஆற. 8. To be displeased, indignant, provoked; to show signs of anger, கோபிக்க 9. To be distressed by love-sickness caused by the moon, the warm season, &c., காமத்தால்சோர. 10. To be furious, சினக்க. 11. *v. a.* To speak sharply; to reprove, scold, reprimand, கடிய. 12. To emit, to shed, to pour forth, கால. 13. To dislike, to offend, வெறுக்க. 14 To cut, sever, வெட்ட. 15. To burn, consume, எரிக்க.

காய்ந்தாருந்தெய்வமும் கையொத்திருக்கிறது. The deity sides with my enemy against me.

ஆலங்காய்வெண்மதி. The pale moon emitting poison.

எல்லாருஞ்சும்மாகாய்கிறார்கள். They are all at variance with me for nothing.

தூதவரைக்காய்ந்தான். He scolded the messengers.

நிலா கனலுய்க்காய்கிறது. The moon shines very brightly.

மனிதர்மேற் காய்ந்துவிழுகிறான். He falls foul of persons.

காய்ஞ்சுபோக—காய்ந்துபோக, *inf.* To grow dry, become parched.

கறிகாய, *inf.* To boil, or be cooked—as curry.

குளிர்காய — நெருப்பிற்காய, *inf.* To warm one's self at the fire.

சரீரங்காய, *inf.* To be emaciated—as the body, by fever, hunger, labour, journeying, &c.

நிலங்காய, *inf.* To be dry—as the ground after rain.

நிலாக்காய, *inf.* To shine—as the moon; to have moon-light.

வாய்காய, *inf.* To be dry—as the mouth, lips, &c.

வாய்வயிறுகாய, *inf.* To be parched—as the mouth, and heated as the stomach; to suffer with hunger.

வெயில்காய, *inf.* To bask in the sun, to warm one's self in the sun.

வெயில்காய்கின்றது. The sun shines hot.

காய்கை, *v. noun.* Heat, drying, scolding, &c.

காய்ப்பு, *v. noun.* Dislike, displeasure, disgust, வெறுப்பு. (சூ.) 2. [*prov.*] Hard, inferior iron, இளந்த இரும்பு.

காய்வு, *v. noun.* Drying, dryness, காய்கை 2. Heating, warming with fire or the sun; warmth, heat, நெருப்புமுதலிய வற்றிற்காய்கை 3. Boiling, வெப்பமுறுகை. 4. Withering—as the body; emaciation, மெலிவு. 5. Starving, starvation, பசிவாட்டம். 6. Anger, irritation, indignation, pique umbrage, கோபம். 7. Shining, ஒளிவெறிக்கை

காய், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To bear fruit; to yield, produce, form—as fruit, காயகாய்க்க. 2. To form hard bunches, callous parts, knots, warts, excrescence, &c., on the body—as from wounds, walking, using tools, &c., தழும்புண்டாக. 3. To grow callous, காய்ப்புக்காட்டக.

கைகாய்த்தாற்கமுகுகாய்க்கும் If the hands become callous with watering it, the areca will bear fruit; i. e. constant application will produce the intended result.

நடந்துநடந்து காலெல்லாம் காய்த்துப்போயிற்று ... From continual walking the feet have grown callous.

தோள்காய்த்துப்போயிற்று. The shoulder is become callous by carrying, &c.

காய்க்கும்பருவம், *s.* The period of yielding fruit. 2. Age of child-bearing.

காய்த்தமரம், *s.* A tree that has borne fruit. 2. A tree loaded with fruit.

காய்த்தமரக்கல்லெறியுண்ணும். Stones will be thrown at the tree which is loaded with fruit; i. e. parents and persons of wealth, influence and responsibility have many causes for vexation.

காய்ப்பு, *v. noun.* Produce of a tree, &c., a crop of fruit or grain, காய்க்கை. 2. Callosity, callousness, thick skin, தழும்பு. 3. A scar, தழும்பு.

காய்ச்சல், *v. noun.* [*substantively.*] Heat, warmth, dryness, காய்கை 2. Fever, inflammatory state of the system, சுரம். 3. Enmity, hatred, rancor, பகைமை (*c*)

காய்ச்சலாய்க்கிடக்க, *inf.* To have a fever, to be ill of fever.

காய்ச்சலாய்விழ, *inf.* To fall ill of a fever.

காய்ச்சற்கட்டி, *s.* Enlargement of the spleen, after a chronic fever, சுரக்கட்டி

காய்ச்சற்காரன், *s.* A person with fever, சுரநோயுடையவன்.

அகோரக்காய்ச்சல், *s.* A violent fever.

அச்சரக்காய்ச்சல், *s.* Fever arising from or accompanying the thrush, Aphtha, Febris aphthosa. (*M. Dic.*)

அஸ்திக்காய்ச்சல், s. Fever affecting the bones.

உட்காய்ச்சல், s. An internal fever, Febris leipyrias or intestinali.

கணைக்காய்ச்சல், s. A symptomatic fever, connected with a disease in children called கணை.

காமக்காய்ச்சல், s. A venereal fever, Febris alba, chlorosis

குளிர்காய்ச்சல், s. An ague.

சிலேஷ்மக்காய்ச்சல், s. Phlegmatic fever.

சுரக்காய்ச்சல், s. A burning fever.

தோஷக்காய்ச்சல், s. A malignant fever.

நாவறட்சிக்காய்ச்சல், s. A fever which parches the tongue.

பித்தக்காய்ச்சல், s. Bilious fever, Febris autumnalis, or biliosa.

பெருவாரிக்காய்ச்சல், s. Pestilential fever.

மந்தக்காய்ச்சல், s. Fever from indigestion.

முறைக்காய்ச்சல்—மாறற்காய்ச்சல், s. A tertian ague, Febris intermittens tertiana, returning after an interval of about forty-eight hours.

வறைக்காய்ச்சல், s. Fever attended with great dryness and thirst.

வாதக்காய்ச்சல், s. Fever arising from rheumatism.

விடுங்காய்ச்சல், s. An intermittent fever, Febris intermittens.

விஷக்காய்ச்சல், s. Malignant, dangerous fever.

வைசூரிக்காய்ச்சல், s. A variolous or small-pox fever, Febris variolosa.

காய்ச்சு, கிறேன், காய்ச்சினேன், வேன், காய்ச்ச, v. a. [caus. of காய்.] To boil, prepare by boiling; to cook, காயச்செய்ய. 2. To heat—as iron, &c., by fire, இரும்புமுதலியன காய்ச்ச. 3. To heat—as the sun, எறிக்க. 4. To dry, warm, &c.—as in the sun, or by putting near fire, உலர்த்த. 5. To scold, to reprove, கண்டிக்க. 6. [prov.] To dye, to tinge, as a cloth.

துரை அவனை நன்றாய்க் காய்ச்சிப்போட்டார். The magistrate has sharply reprimanded him.

காய்ச்சுக்கட்டி—காய்ச்சுண்டி, s. The juice of young betel-nuts inspissated by boiling, and then dried, காசுக்கட்டி. (c.) (Ains. v. 1, p. 65.)—Note. காய்ச்சுக்கட்டி, and காசுக்கட்டி may be from the foreign word Catechu, and not necessarily from காய்ச்ச the Tamil verb. காய்ச்சுண்டி is from the Portuguese, கச்சுண்டி.

காய்ச்சுக்கல், s. A dyed or tinged stone, a counterfeit gem.

காய்ச்சுப்பு—காய்ச்சுலவணம், s. Salt obtained by boiling down salt water.

காய்ச்சு, v. noun. Heating metal, stone &c.; boiling any liquid, இரும்புமுதலியனகாய்ச்சுகை.

இரண்டுசோய்ச்சுக் காய்ச்சிப்போட்டான். He has already heated the metal twice.

இரும்புகாய்ச்ச, inf. To heat a piece of iron.

கஞ்சிகாய்ச்ச, inf. To boil or prepare rice-water.

கஷாயங்காய்ச்ச, inf. To prepare a decoction.

காய்ச்சுக்குப்பி, s. [impr. for காசகுப்பி.] A glass vessel used in sublimation; an alembic, a still, இலவகுப்பி. Wils. p. 207. Kachakupee.

காய்மகாரம்—காமகாரம்—காய்மை, s. Action under the impulse of selfishness; hence envy, jealousy, பொறாமை.

காய்மைகரிக்க, inf. To envy.

காய்மைகாரி, s. An envious person.

காய்ஞ்சொறி, s. A kind of nettle, ஓர்செடி, Tragia involucrata, L.

காய்ச்சிரக்கு—காய்ச்சுரை—காய்ச்சுக்கு, s. A sour herb, புளிச்சற்கீரை.

காட்டுக்காய்ச்சுரை, s. Wild sour greens, Hibiscus surattensis, L.

காய்வேளை, s. See வேளை.

காரகம், s. Burning heat of the body, வெப்பம்.

பித்தகாரகம், s. Heat caused by bile.

மோககாரகம், s. Venereal heat of the body.

*காரகம், s. Agency, causality, causation, காரணத்துவம். 2. Means, instrument, expedient, &c., to accomplish an action, கருவி. 3. A doing, an action, செயல். 4 [in grammar.] The agent, the subject of a verb, வினைமுதல். 5. The cases of nouns depending in construction on verbs, and not on nouns, வினைகொண்டுவேற்றுமை முடிவது. Wils. p. 213. Karaka. The six grammatical காரகம் are: 1. கருத்தாகாரகம், nominative case to a verb—as சாத்தன்சேர்ந்தான். 2. கருமகாரகம், objective case, governed by a verb—as சாத்தனைச்சேர்ந்தான். 3. கருவிகாரகம், instrumental ablative, followed by a verb—as வாளால்வெட்டினான் 4. கோளிக்காரகம், dative case, depending on a verb—as சாத்தனுக்குக்கொடுத்தான். 5. அவதிகாரகம், ablative of motion—as சாத்தனிற்பிரிந்தான். 6 இடகாரகம், local ablative—as சாத்தனிடஞ்சென்றான்.

காரகக்கருவி, s. Any of the காரகவேது, in operation, as distinguished from ஞாபகக்கருவி.

காரகத்துணைக்கருவி, s. Instruments, &c.—as the wheel of the potter, தொழிற்றுணைக்காரணம்.

காரகநிமித்தக்கருவி, s. The agent of an action, செய்கையினிமித்தகாரணம்.

காரகமுதற்கருவி, s. The proximate cause—as the clay for a pot, செய்கையின்முதற்காரணம்.

காரகவேது, s. The three causes in the performance of an action, as காரகக்கருவி. 2. [in rhetoric.] Assigning extraordinary causes in accounting for an event; one of the two kinds of ஏதுவலங்காரம், the other being ஞாபகவேது.

காரகன், s. [in grammar.] The agent, a doer, an operator, செய்பவன். Wils. p. 213. Karaka.

காரடம்—காரடவித்தை, s. (Tel. గారడము.) Juggling, tricks.

காரடன், s. A juggler, a double-dealer.

காரணம், s. A word or appellative derived from the origin of the class, காரணம்பற்றிவருஞ்சொல்—as வைவன், மீலவன். 2. A story, a narrative—as காரணச்சொல். (p.)

*காரணம், s. Cause, origin, source, தோற்றத்துக்கு மூலம். 2. Principle, essential element, மூலம். 3. Instrument or means, கருவி. 4. [in logic.] Cause, reason, the ground of an assertion or argument, ஏது. 5. Reason, motive, object, design, purpose, occasion, நோக்கம். Wils. p. 213. Karana. 6. One of the twenty-eight Agamas, ஆகமம் இருபத்தெட்டிலொன்று. According to the Hindu Philosophy, காரணம் is three fold, viz.: முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம், முதற்காரணம், material, proximate cause—as clay from which pottery is made, or the primitive Maya out of which the universe was produced துணைக்காரணம், secondary, instrumental, or co-efficient cause—as the wheel used by a potter, or the Sakti (energy) of the god Siva. நிமித்தகாரணம், the efficient cause or the agent—as the potter, in the manufacture of wares, or the god Siva in the production of worlds.

சர்வத்துக்குமாதிகாரணமானவர். The first cause or creator of all things.

காரணகர்த்தா—காரணகடவுள், s. The Supreme Being—the Chief Agent in all things, முதற்கடவுள். 2. Any supposed miracle-working deity, அற்புத கடவுள்.

காரணகாட்சி, s. Demonstration "a priori", or from an axiom. (Rott.) 2. A pleasing and marvellous sight.

காரணகாரியம், s. Cause and effect, காரணமுங்காரியமும்.

காரணகுரு, s. A guru whose sole object is the spiritual benefit of his disciples, மெய்க்குரு—opposed to காரியகுரு.

காரணக்குறி, s. [in gram.] Derived names or appellatives, as one of the classes of nouns—opposed to இடுகுறி, காரணப்பெயர். 2. Presage, omen, prognostic, a sign showing beforehand what is to happen, முன்னறிகுறி.

காரணங்காட்ட, inf. To affirm a cause, to ascribe or show reasons, ஏதுகாட்ட.

காரணகேவலம், s. Absolute unconsciousness of the soul during its involution in காரணமாயை. It is one of the three காரணவவஸ்தை.

காரணசகலம், s. Conscious state of the soul during its manifestation in the world, and consequent subjection to births and deaths; one of the three காரணவவஸ்தை.

காரணசரீரம், s. The most subtile embryo of the body, as originally and eternally existing with the soul. (See சரீரத்திரயம்.) In the Vedantic philosophy, the original principle of spiritual ignorance, in which the soul is enveloped during the period of its non-absorption in Brahm.

காரணசுத்தம், s. Complete liberation from பாசம், and the attainment of perfect purity and happiness; one of the three காரணவவஸ்தை.

காரணச்சிறப்புப்பெயர், s. [in grammar.] Derived names limited in their application—as முடி, a crown, so called because it is put on முடி, the head, ஒன்றற்குரியகாரணப்பெயர்.

காரணச்சொல், s. A story, a narrative, கதை. (p.) 2. A derived word.

காரணப்பெயர், s. [in grammar.] Derivative names.

காரணப்பொதுப்பெயர், *s.* [*in grammar.*] Derived names extending to various classes—as அணி, jewel; so called because it embraces various kinds of jewels, which are worn, பலவற்றிற்குரியகாரணப்பெயர்.

காரணமாயிருக்க, *inf.* To be the author of a thing.

காரணமாயை, *s.* Maya as the primitive, original substance from which all the manifestations of matter and spirit are evolved, and into which they are again resolved at the destruction of the universe, அகிலத்துக்கும் வித்தானமாயை. See மாயை.

காரணமுகாந்திரம், *s.* Motive.

காரணவணு, *s.* According to some *atheistical* schools, primitive or original atoms, by the fortuitous combination of which, the worlds were originated.

காரணவாகுபெயர், *s.* Names in which the cause is, by way of metonymy, used for the effect—as in திருவாசகம்.

காரணவிசேஷம், *s.* Chief or principal things. (*p.*)

காரணவிடுகுறி, *s.* A name which, though given originally as descriptive of a class of objects, is applied to individuals of the class, though destitute of the qualities which it describes—as மறவன், கறங்கு.

காரணவிலக்கணை, *s.* [*in rhetoric.*] Metonymy of a cause for the effect.

காரணவிலக்கு, *s.* [*in rhetoric.*] Negation of effects from the absence of a cause, ஓரலங்காரம்.

காரணன், *s.* The first cause, நிமித்தன். 2. The Supreme Being, கடவுள். 3. Any deity supposed to work miracles, அற்புதகடவுள். 4. A king, அரசன். 5. The name of a kind of arsenic, மிருதபாஷாணம்.

காரணாவத்தை—காரணாவஸ்தை, *s.* The three principal, causative states or அவத்தை of the soul—கேவலம், சகலம் and சுத்தம்—as distinguished from காரியாவத்தை.

காரணானுமானம், *s.* [*in logic.*] *A priori* reasoning; inference from cause to effect—opposed to காரியானுமானம். (சிவ. சி.)

மூலகாரணம், *s.* The primeval cause.

மொழிமுதற்காரணம், *s.* The first principle of a word.

காரணி, *s.* Parvati, பார்வதி. (*p.*)

காரணிக்கம், *s.* History, சரித்திரம். 2. [*in Roman Catholic usage.*] Prayers to the Virgin, fifteen in number, alluding to different points in her history.

*காரண்டம்—காரண்டவம், *s.* The water-crow, நீர்க்காக்கை. Wils. p. 213. KARANDAVA. (*p.*)

காரம், *s.* Pungency, acrimony, any thing hot or biting, உறைப்பு. 2. An expletive to express the names of the vowels, and of certain compound letters—as அகாரம், ஊகாரம், மகாரம். 3. Gold, பொன். 4. The hard or solid part of trees, மரவயிரம்.

காரசாரம், *s.* Pungency, stimulancy; the quality of being pungent and palatable.

காரசாரமானகறி, *s.* Hot and palatable curry.

காரசாரமானபுகையிலை, *s.* Strong tobacco.

காரமான, *adj.* Sharp, pungent, corrosive.

*காரம், *s.* A caustic; a corrosive of any kind; an escharotic, காரப்புப்பு. 2. Alkali, soda, potash, &c.; impure carbonate of soda, சாம்பலுப்பு. (*Mat. Ind.*) 3. Washerman's lye, lixivium, சீலையழுக்குவாங்கும் காரம். 4. A mordant; an alkaline preparation for fixing colours, சாயமிடுங்காரம். Wils. p. 263. KSHARA. The காரம் are five in number, viz.: சவக்காரம், soap. 2. சீனக்காரம், alum. 3. பொரிகாரம், another kind of alum. 4. வெண்காரம், borax. 5. காடிக்காரம், lunar caustic. 5. (*p.*) Act, acting, doing, agency, காரியம். 6. A termination denoting action, agency—as உங்காரம். Wils. p. 213. KARA.

காரக்கல், *s.* A kind of caustic mineral, விஷக்கல்.

காரங்கட்ட, *inf.* To strengthen the blue die by adding other ingredients. 2. To prepare caustics with various ingredients.

காரங்கூட்ட, *inf.* To prepare dyer's lye, காரஞ்சேர்க்க.

காரச்சீலை, *s.* A corrosive plaster, a blister, புண்ணுக்குப்போடுமோர்மருந்துச்சீலை.

காரத்திரி, *s.* A kind of seton with a corrosive or caustic preparation on it, inserted in an abscess, &c., காரச்சீலைத்திரி.

காரநீர், *s.* Dyer's lye made of alum, rust, &c., காரமாயசாயநீர்.

காரப்பசை, *s.* A cement or solder of குன்றிமணி seeds and alum, used by gold or silver smiths, காரமானபசை.

காரம்போட, *inf.* To apply alkali, caustic, &c.

காரம்போட்டுவெளுக்க, *inf.* To whiten cloth, &c., with lye or alkali.

காரம்வைத்துப்புண்ணாக்க, *inf.* To make a sore by applying a corrosive, for reducing a tumour, &c.

காரம்பூச, *inf.* To imbue cloth with alum—as a dyer, that it may retain the colour.

காரலவணம், *s.* A corrosive preparation.

காரன். As a masculine termination of certain nouns, it means doer, possessor, &c.—as வேலைக்காரன், பணக்காரன்; [*ex* காரம், doing.] 2. *s.* A kind of prepared arsenic, சோரபாஷாணம்.

காரர், *s.* [*A contraction of* காதரர், *the plural of* காதரன்.] Fearful persons, அச்சமுள்ளோர். (சது.)

காரல், *s.* A small kind of fish, ஓர்மீன்.

காரவல்லி, *s.* [*Contraction of* ஏகாரவல்லி.] A kind of plant, a pot-herb, a certain vegetable, பாகல், Momordica charantia, *L.*

*காராக்கிரகம், *s.* A prison-house, a dungeon, சிறைச்சாலை; [*ex* காரா, prison, *et* கிரகம்.]

காராமணி, *s.* A kind of lentil or pulse, ஓர்பயறு. (*c.*)

பெருங்காராமணி—சிறுகாராமணி, are different varieties of காராமணி.

*காராமயம், *s.* The evils of imprisonment, the sufferings of prison, சிறைச்சாலைத்துன்பம்; [காரா prison, *et* ஆமயம்.]

காராம்பசு, *s.* A fabulous cow in the world of Indra with the face of a woman and the wings of a bird, ஓர் தெய்வப்பசு. 2. A black cow with a black tongue and udder, being considered a superior kind, கரும்பசு.

காராம்பி, *s.* A basket for irrigation, இறைகூடை. 2. A kind of hydraulic machine, ஓர்சலயந்திரம். (*p.*)

காரி, *s.* Blackness, கறுப்பு. 2. A kind of black bird. (See கரிக்குருவி.) 3. A crow, காக்கை. 4. The planet Saturn, சனி. 5 Venom, poison, நஞ்சு. 6. Indra, இந்திரன். 7. Eiyanar, ஐயனார். 8. Bhairava, வயிரவன். 9. Worn-out, brackish land, களர்நிலம். 10. A parrot, கிளி. 11. One of the seven men of the third class of liberal kings, கடையேழுவள்ளலிலொருவன். 12. A workshop, தொழில்செய்யிடம். 13. The name of a shrub, ஆவிரை, Cassia auriculata, *L.* (*M. Dic.*) 14. As a feminine termination of certain nouns, காரி means a doer, owner, &c.—as வேலைக்காரி, a female servant.

காரிதாய, *s.* The mother of Bhairava, வடுகி.

காரிப்பிள்ளை, *s.* A black bird. See காரி, *supra.*

காரிகம், *s.* Red ochre, red dye, காவிக்கல்.

காரிகை, *s.* Beauty, fairness, gracefulness, அழகு. 2. A woman, a lady, பெண். 3. A species of கலிப்பா verse, கலித்துறை. (See பா.) 4. A book on prosody composed in கலித்துறை verse by அமுதசாகரன், ஓர்யாப்புநூல்.

*காரிகை, *s.* A kind of poetry in Sanscrit, ஓர் ஆரியச்செய்யுள்.

காரிக்கம், *s.* Unbleached, unprinted new cotton-cloth mostly imported from foreign countries, சலவைசெய்யாத வெள்ளைப்புதுப்புடவை.

காரிக்கூன், *s.* A kind of mushroom, ஓர்காளான், Agaric, Boletus ignarius, *L.* (*Mat. Med. Ains.*)

காரிமை, *s.* A plant, கொடிவேலி, Plumbago, *L.*

காரியக்கடிசு, *s.* A kind of arsenic in its natural state, கற்பாஷாணம்.

*காரியம், *s.* Affair, thing, business, concern, matter, subject, occurrence, circumstance, incident, topic, event, transaction, கருமம். 2. An action, operation, a deed, process, செய்கை. 3. Object, purpose, design, விஷயம். 4. Effect, result, product, issue,—as apposed to காரணம், பயன். Wils. p. 215. KARYYA. 5. Expediency, fitness, profitableness, இலாபம்.

காரியக்கருமமில்லாதவன். One not concerned about any thing, not troubled with business.

அதனக்குக்காரியமல்ல, நீயேன்பேசுகிறாய். You have nothing to do with it, why do you speak?

அதுகாரியமல்ல, இதுவே உனக்குக் காரியம். That is not expedient, but this will be profitable for you.

காரணத்தைக்காரியங்காட்டுகிறது. The effect shows or implies the cause.

காரியகேவலம், *s.* Transient unconsciousness of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியசகலம், *s.* Imperfect knowledge of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியசுத்தம், *s.* Clear and distinct perception of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியகர்த்தா, s. A maker, an accomplisher—as in educing, sustaining and destroying worlds, &c. 2. An agent, a superintendent.

காரியகாரன், s. An agent, a commissioner, காரியம்பார்க்கிறவன். 2. An attorney, an advocate, காரியதுரந்தரன். 3. A man of business, one clever in business, வேலையிலே சாதுரியன்.

காரியகுரு, s. A guru who seeks his own interest, whose living is his chief object—opposed to காரணகுரு.

காரியக்கெட்டி, s. A man successful in his undertakings, adopting proper means; a business-like man.

காரியசாதகம், s. Perseverance in an undertaking, காரியத்தில்முயலுகை. 2. Accomplishing an object, காரியசித்தி. Wils. p. 215. KARYASAD'HKA.

காரியசாதனம், s. Means of effecting an object; instruments, implements, aid, காரியத்தைமுற்றுவிக்கும் ஏது.

காரியசித்தி, s. Success in an undertaking, accomplishment, காரியக்கைகூடுகை.

காரியதரிசி, s. Secretary, superintendent, manager, காரியத்தலைவன்.

காரியத்தலைவன், s. A superintendent, a manager.

காரியதுரந்தரன் — காரியஸ்தன், s. A competent manager, superintendent, agent, one who conducts business, காரியத்தில்வல்லவன்.

காரியத்தடை, s. An impediment or obstacle to business, கருமவிடையூறு.

காரியத்தவறு, s. Failure in a business, வேலைத்தவறு. 2. Ill success, கைகூடாமை.

காரியத்தாழ்ச்சி, s. Ill success, கைகூடாமை. 2. Loss, காரியநஷ்டம்.

காரியத்தாழ்ச்சிவராமற்பார்க்க, inf. To see that there be no failure of success.

காரியத்துக்குத்தக்கதாய்ப்பேச, inf. To speak as the nature of a thing requires.

காரியத்துக்குவர, inf. To answer the purpose; to be expedient, profitable; to be prosperous.

காரியநிருவாகி, s. A manager, a superintendent, an advocate.

காரியபாகம், s. Good management, frugality, economy, judicious or prudent direction.

காரியபேதம், s. Disappointment in an affair, காரியம்வேறுபடுகை.

காரியப்பட, inf. To be effected; to be produced, wrought or operated on, காரியமுண்டாக. 2. To succeed, to avail, கைகூட.

காரியப்படுத்த, inf. To effect, to accomplish, காரியமுடிக்க. 2. To transact, to manage, காரியநடத்த.

காரியப்பாடு, v. noun. Effect, result, production.

காரியப்பிழை. Failure in an undertaking, காரியவழு. 2. Ill success, கைகூடாமை.

காரியப்பொறுப்பு. Responsibility.

காரியாகாரியம், s. What is and what is not the matter. 2. Circumstances, affairs.

காரியமாயிருக்க, inf. To be busy; to be useful.

காரியமாய்ப்பேச, inf. To speak of a thing as important.

காரியமாய்ப்போக, inf. To go on an errand.

காரியமானபேச்சு, s. Important conversation; a speech well adapted to the occasion.

காரியமுடிக்க, inf. To accomplish, to execute.

காரியமுடிப்பு, s. The sum and substance of a business, an affair, &c.

காரியமுடிய, inf. To be accomplished—as an object; to terminate—as one's life, &c.

காரியம்பலிக்க, inf. To succeed, காரியஞ்சித்திக்க.

காரியம்பார்க்க, inf. To do a business, to manage a business.

காரியம்பெற, inf. To attain one's object.

காரியம்பேதிக்க, inf. To change or alter—as an affair. 2 To be thwarted.

காரியவாகுபெயர், s. Names in which the effect is, by metonymy, used for the cause, as in அலங்காரம்.

காரியவிசாரணை, s. Superintendence, supervision.

காரியவிரோதம், s. Opposition in an undertaking, rivalry.

காரியவிலக்கணை, s. [in rhetoric.] Metonymy of an effect for the cause.

காரியவிலக்கு, s. [in rhetoric.] The negation of a thing or event by the non-existence of the effect, &c., or by the presence of contrary effects, ஓரலங்காரம்.

காரியாவத்தை — காரியாவஸ்தை, s. Subordinate, minor states or அவத்தை of the living soul, being five in காரியகேவலம், five in காரியசகலம், and five in காரியசுத்தம், and thus constituting fifteen காரியாவத்தை (சிவப்.)

காரியானுமானம், s. [in logic.] *A posteriori* reasoning; inference from effect to cause—opposed to காரணானுமானம். (சிவ. சி.)

காரிரத்தம்—காருன்னி, s. A plant, ஆடுதினாப்பாலை, Aristolochia, L.

*காருகபத்தியம், s. One of the three sacred fires—that which is maintained by the householder as received from his father and transmitted to his descendants or successors, from which fire is taken for sacrificial purposes, வேதாக்கினி மூன்றிலொன்று. See தீ. Wils. p. 288. GARHAPATYA.

*காருகம், s. Manufacture, the act of manufacturing silk or cotton cloth, the process of preparing cotton or silk; spinning and weaving, நெய்யுந்தொழில். 2. Menial service, servile labour or toil—as carrying burdens, &c., கைக்கரியமானவேலை. 3. A form of religion—the worship of fire, அக்கினியைவணக்குஞ்சமயம்.

காருகத்தொழில்—காருகவினை, s. Manufacture, spinning, weaving, நெய்தற்றொழில். 2. The work or employment of weavers. 3. Menial service, toil, கைக்கரியவேலை.

காருகர், s. Weavers, நெய்வோர். 2. Sculptors, painters, artists, ஓவியர்.

காருச்சிவல். s. Sponge, கடற்பாசி. (M. Dic.)

காருடம். s. The plant மருக்காரை. 2. A kind of gourd, கறிப்புடோல். (M. Dic.) 3. Juggling, *erroneously* for காரடம்.

காருடவித்தை. s. Legerdemain, *properly*, காரடவித்தை.

காருடன், s. [*prop.* காரடன்.] A juggler.

*காருடம்—கារுடம், s. Charms, incantations, &c., against poison (addressed to Gàruda); one of the sixty-four கலைஞானம். Wils. p. 288. • GARUDA. 2 The Garuda Purana, one of the eighteen, பதினெண்புராணத்தொன்று. 3. One of the thirty-two உபநிடதம், கட. உபநிடதங்களுளொன்று. (p.)

*காருணியம் — காருண்ணியம், s. Grace, mercy, compassion, கிருபை; [*ex* கருணை.] Wils. p. 214. KARUNYA.

காருணிகன், s. A kind, benevolent person.

காருணியப்பிரயோசனம், s. The blessings of divine grace.

காருண்ணியன், s. A kind, benevolent person.

சீவகாருணியன், s. A person kind to living creatures.

காருண்ணியமேகம், s. One whose bounty is like a cloud, without limit and without expectation of recompense.

காரை, s. A kind of thorny shrub, ஓர்செடி. Thorny webera. Webera tetrandra. (*Mat. Ind.*) 2. A fish, ஓர்மீன். The principal kinds of காரை fish are கறிக்காரை, சுதப்புளுக்காரை, பொட்டுக்காரை. 3. Mortar or plaster covering walls, &c., [sometimes spelt காறை.] சுண்ணச்சாந்து. (c.) 4. A slang word used by elephant-keepers for cloth, சீலை.

காரைக்கட்டுவீடு, s. A house built of brick and chunam.

குத்துக்காரை, s. A small species of காரை shrub.

சிறுகாரை, s. A small kind of காரை fish.

சன்னகாரை, s. Fine plaster.

சுண்ணாம்புக்காரை, s. Overlaying with plaster; flooring with plaster alone, not with brick or stone.

சுண்ணாம்புக்காரை ஆடினவீடு, s. A house, the floor of which is plastered, not paved with bricks and stone.

பூங்காரை, s. A shrub with fragrant flowers, Gardinia dumetorum.

பெருங்காரை, s. A kind of shrub with edible leaves, which are given to brahmans with other leaves, as presents or alms at the anniversary funeral ceremonies, &c. 2. A large kind of காரை fish.

மட்டிக்காரை, s. Coarse plaster.

மதுக்காரை—மருக்காரை, s. A kind of காரை shrub.

மரக்காரை, s. A kind of tree.

காரைக்கால். s. The name of a town near Tranquebar, Caraikal.

காரைக்காலம்மை, s. The name of a woman who was one of the sixty-three devotees of Siva, ஓர்தவப்பெண்.

காரோடர், s. Sheath-makers, உறைகாரர். (p.)

கார், s. Blackness, கருமை. 2. Darkness, gloom of night, இருள். 3. Cloud, மேகம். 4. Water, நீர். 5. A black monkey, கருங்குரங்கு. 6. A goat, வெள்ளாடு. 7. The dark or rainy season, கார்காலம், August and September. (See பருவம்) (p.) 8. A kind of paddy or rice, கார்நெல்.

காரகவரிக்கொம்பு, (*from* கார், அகம், *inside, and* வரி, *streak.*) A horn of an ox which has black streaks on the inside.

காரரிசி, *s.* Rice from கார் paddy.

காரறுத்தல், *v. noun.* Reaping the கார் paddy.

காராடு, *s.* A goat, வெள்ளாடு.

காராளர், *s.* Husbandmen, agriculturists, வேளாளர். 2. (சது.) Sudras, the working castes, சூத்திரர்.

காரானை, *s.* [*prov.*] A water-spout at sea, நீர்படியும்மேகம்.

காரான், *s.* A buffalo, எருமை; [*ex* ஆன், cow.]

காருணி, *s.* A sky-lark, வானம்பாடி, *lit.* a feeder on clouds; [*ex* கார், *et* உண்.]

காருப்பு, *s.* Salt produced from sesamum seed, கடுந்திலாலவணம்.

காரெலி, *s.* A black kind of rat, கறுப்பெலி.

கார்கோளி—கார்கோள், *s.* Sea, கடல். (சது. திருமுரு.)

கார்க்காய், *s.* Caput draconis, சந்திரநாகம். (*Rott.*)

கார்நாற்பது, *s.* A poem in forty stanzas, concerning the rainy season.

கார்நிறம். *s.* Black color.

கார்நெல், *s.* Rice that ripens in the rainy season.

கார்மலி, *s.* Sea, கடல்; [*ex* மலி, fill.]

கார்முகம், *s.* A cloud, மேகம்.

கார்முகத்திழிந்ததாரைபோல். Abundantly, as the showers of rain that come down from the clouds.

கார்முகில், *s.* As கருமுகில், *supra.*

கார்வண்ணர், *s.* Asuras, அசுரர்; [*ex* வண்ணம், color.] (சது.)

கார்வண்ணன், *s.* Vishnu, being of a dark blue color, விஷ்ணு.

கார்வலயம், *s.* The sea, கடல்; [*ex* வலயம், surrounding.]

கார், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be pungent, hot to the taste; to be harsh, acrid, &c., காழ்க்க. 2. To be very salt, உப்புக்கரிக்க. The word is sometimes improperly used for the verb கர.

கார்த்தல் — கார்ப்பு, *v. noun.* Pungency, காழ்ப்பு. 2. Saltness, கரிப்பு. See under சுவை.

கார்காரெனல், *v. noun.* [*vul.*] Craving—as the appetite, ஓர்குறிப்புமொழி.

எனக்குக்கார்காரென்றுபசிக்கிறது. I am pinched with hunger; I feel very hungry.

எண்ணெயைக் கார்காரென்று குடித்துப்போட்டது. The lamp has absorbed the oil rapidly.

கார்கோணி, *s.* A plant, தேள்கொடுக்கி, Heliotropium.

கார்கோளி, *s.* A grass, முத்தக்காசு, Cyperus, *L.* 2. The கோரை kind of grass. (*M. Dic.*) See under கார்.

கார்க்குறட்டை, *s.* A twining plant with blue flowers, நீலக்காக்கணம், Clitoria ternatea, *L.*

•கார்க்கோடன் — கார்க்கோடகன், *s.* [*in mythology.*] One of the eight huge serpents, which support the eight cardinal points of the earth, அஷ்டநாகத்திலொன்று.—*Note.* The north-eastern quarter is assigned to this serpent. 2. (*fig.*) A very wicked person, கொடியவன். 3. A mineral stone, கருடக்கல்.

கார்க்கோழி, *s.* A leguminous plant, கரும்கொள், Cassia absus, *L.* 2. Black cumin, கருஞ்சீரகம், Nigella sativa, *L.* (*M. Dic.*)

•கார்த்தபம், *s.* An ass, கழுதை. A change of கர்த்தபம்.

•கார்த்தவீரியன்-கார்த்தவீரியார்ச்சுனன், *s.* One of the six great autocrats, ஓர்சக்கிரவர்த்தி. Wils. p. 214. KARTAVEERYYA.

•கார்த்திகை, *s.* The eighth Hindu month, being part of November and December, ஓர்மாதம்.—*Note.* The Saivas consider it more sacred than other months, and many abstain from animal food during the month, who at other times use it; and keep it as a season of fast in honor of the canonized pleiades, and their foster son Skanda. Wils p. 214. KARTTIKA. 2. The third lunar asterism; the pleiades, regarded as six stars, கிருத்திகைநட்சத்திரம். 3. The third nacshatra. 4. The day or rather the duration of time during which the moon is in the கார்த்திகை nacshatra, கார்த்திகைநாள். 5. The November-flower plant, காந்தள், Gloriosa superba, *L.* 6. (சது.) Durga, துர்க்கை.

கார்த்திகேயன், *s.* A name of the god Skanda (கந்தன்), as nursed by the pleiades in the form of nymphs; he assuming the forms of six infants, the bodies being afterwards united into one. Wils. p. 214. KARTIKEYA.

கார்த்திகைக்கிழங்கு, *s.* The root of the கார்த்திகை plant which is poisonous. It is sometimes eaten by mistake for the அல்லிக்கிழங்கு.

கார்த்திகைக்கொடி, *s.* The November-flower plant, தோன்றி.

கார்த்திகைக்கொள்ளி, *s.* [*prov.*] A brand waved by children in play on the evening of திருக்கார்த்திகை festival.

கார்த்திகைச்சோமவாரம், *s.* The Mondays in கார்த்திகை regarded as fastdays, on which religious duties are more meritorious than in other months.

கார்த்திகைத்தேவிமார், *s.* Pleiades, the goddesses.

கார்த்திகைப்பூ, *s.* The November-flower, காந்தள்மலர்.

கார்த்திகைவிரதம் *s.* The November fast, kept in honor of Skanda, கிருத்திகைஉபவாசம்.

கார்த்திகைவிளக்கு, *s.* The November lamp-lighting on the evening of the திருக்கார்த்திகை, when lights are placed at the door and other parts of the house, in the cow-stall, at the well, in the growing corn. &c.; commonly called விளக்கிடல் or விளக்கீடு.

திருக்கார்த்திகை. The day in கார்த்திகை in which the moon enters the third nacshatra, considered a very sacred day.

கார்புகாவரிசி—கார்ப்போகரிசி, *s.* The seed of a medicinal plant, Psoralea corylifolia, ஓர்மருந்துவிதை.

•கார்ப்பணியம், *s.* Poverty, indigence, தரித்திரம். 2. Poorness of spirit, weakness of mind, imbecility, மனத்தளர்வு. 3. Stinginess, உலோபம். Wils. p. 204. KARPAN'YA.

•கார்ப்பாசம், *s.* The cotton shrub, Gossypium, பருத்திச்செடி. 2. Cotton, பருத்திப்பஞ்சு. Wils. p. 215. KARPASA. The word is sometimes wrongly spelt கார்பாசம்.

கார்ப்பான்—கார்மணி, *s.* A plant, கையாந்தகரை, Eclypta, *L.*

•கார்முகம், *s.* A bow, வில். Wils. p. 215. KARMAUKAM. See under the noun கார்.

காலகம், *s.* The marking-nut of the சேங்கொட்டை tree, Semecarpus anacardium. (*M. Dic.*)

•காலகூடம், *s.* See காளகூடம், under காளம்.

காலசம், *s.* Wind, காற்று. 2. A large kind of circular fan, பேராலவட்டம்; [*ex* கால், air.]

•காலசூத்திரம், *s.* One of the twenty-one Hindu hells, ஓர்நரகம். Wils. p. 217. KALASUTRA.

•காலம், *s.* Time, duration, பொழுது.—*Note.* In Hindu philosophy, காலம் is said by the Saivas to have proceeded from மோகினி Maya, and to be a co-efficient cause with Siva in the acts of creation, preservation and destruction. It is Time personified, and according to the Hindu metaphysicians, one of the seven வித்தியாதத்துவம். (சிவ. சி.) 2. Season of the year or life; also a specific time of the day, பருவம். 3. A seasonable or proper time, opportunity, season, சமயம். Wils. p. 216. KALA. 4. Day-break, விடியல். 5. (*fig.*) (*c.*) The time appointed for death, as distinguished from that for accidental death, முடிவு. 6. [*in gram.*] Tense; also, the characteristic of a tense, வினையின்காலம். The three tenses are, இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம். 7. [*in music.*] The three measures—as (1.) விளம்பம், slow. (2.) துரிதம், quick, &c. (3.) மத்திமம், the medium. 8. Epoch, era, யுகம். 9. Weather, காலவிபல்பு.

காலத்துக்குத்தக்ககோலம். Adapting one's self to the times.

காலத்துக்குத்தக்கதாய்நடக்க, *inf.* To live according to circumstances.

காலம்போம்வார்த்தைநிற்கும். Time flies, but words remain.

காலகதி, *s.* Events of time, காலநடை.

காலகதியை யாவருங் கடக்கமாட்டார்கள். None can escape the events of time.

காலகருமம்—காலகன்மம், *s.* Employments, duties, &c., appropriate to an age, time, season, stage of life, &c., காலத்துக்குரியசெய்கை.

காலக்கிரமம், *s.* The course of time; chronological order, காலவொழுங்கு.

காலக்கிரயம், *s.* The price of articles for the time being; current or market price, காலவிலை.

காலக்குறி, *s.* Signs of the time.

காலக்கொடுமை, *s.* The evils, calamities, &c., of time.

காலங்கண்டவன், *s.* An experienced man; an aged person.

காலங்கரந்தபெயரெச்சம், *s.* [*in gram.*] A relative participle without the characteristics of the tenses—as in கொல்யானை.

காலங்கழிக்க, *inf.* To pass time, காலம்போக்க.

காலங்கழிய, *inf.* To pass—as time, நாட்கழிய.

காலங்கூட, *inf.* [*local.*] To die.

காலசக்கரம், s. The different number of years of influence ascribed to the respective planets as operative on the lives of persons, ஆயுள்நியதிச்சக்கரம். 2. The aggregate of the years of the nine planets according to their respective influence, கிரகபலச்சக்கரம். 3. Period or term of life, ஆயுட்காலம். Wils. p. 216. KALACHAKRA.

அவனுக்குக்காலச்சக்கரமுடிவுவந்துவிட்டது. The end of his term is come.

காலசங்கதி, s. Intelligence, news or events of the time or the day.

காலசங்கை, s. Guess of time from mere inspection, காலவுத்தேசம். 2. Reckoning of time, காலக்கணக்கு. (p.)

காலசந்தி, s. The daily morning worship; also applicable to that at noon and evening. 2. The interval between any two yugas, kalpas, &c. See கற்பம் and சந்தி.

திரிகாலசந்தி, s. Worship in the morning, at noon and in the evening.

காலசுகம், s. Favorableness of the time, astrologically and superstitiously considered.

காலஞ்செல்ல, inf. To depart this life, to die. 2. [prov.] To be late.

காலக்ஷயம்—காலட்சயம், s. Passing one's time or days, காலக்கழிவு.

காலக்ஷேபம்—காலட்சேபம், s. Passing one's time or days; circumstances, welfare, &c., காலங்கழிக்கை. 2. Means of subsistence, சீவனம். Wils. p. 216. KALAKSHEPA. 3. [among the Vaishnavas.] The reading of the sacred books, திருவாய்மொழியோதல்.

உமதுகாலட்சேபம் எப்படி. How do you do; i. e. how are your affairs?

காலதருமம் — காலதன்மம், s. The events appropriate to certain times or yugas respectively, காலத்தன்மை. Wils. p. 217. KALAD'HARMMA.

காலதாமதம், s. Delay, protraction, procrastination, தாமசம்.

காலதுரிதம், s. The rapid progress of time, காலத்தின்விரைவு.

காலத்திரயம், s. The three divisions of time—as past, present, and future; also the three tenses, முக்காலம்.

காலநியமம், s. Events happening in their respective and appropriate seasons, according to the actions that gave them birth, காலநியதி. 2. Religious ceremonies according to the given periods of the year or day, காலக்கடன்.

காலநிரூபணம், s. Chronology. (modern usage.)

காலநுட்பம், s. A small portion of time, காலத்தின்நுண்ணியபகுதி.

காலநெடுமை—நெடுங்காலம், s. Length of time, a long time.

காலநேமி, s. An Asura, ஓர் அசுரன். Wils. p. 217. KALANEMI.

காலநேரம், s. Time in reference to the influence of planets upon the fortune, health, &c., of a person.

காலநோக்காடு, s. [prov. in child-birth.] Natural and timely labor.

காலந்தள்ள, inf. To pass one's days, to pass one's time, to maintain one's self, to live, காலம்போக்க.

காலபரிச்சேதம், s. Discernment—as to the time of an event or the existence of a thing. It is one of the three பரிச்சேதம் modes of ascertaining facts.

காலபரிபாகம், s. The maturity of the soul, or time for its attaining bliss, having eliminated its good and evil propensities.

காலபேதம் — காலவித்தியாசம் — காலவேற்றுமை, s. Difference of time with respect to the changes it produces.

காலபோகம், s. A crop of grain or fruits in the proper season. 2. The enjoyment or suffering resulting from previous moral actions, to which a living being at distant times is subjected, காலப்பயனுகர்வு.

காலப்பெயர், s. Nouns or names of time—as year, month. 2. Nouns derived from names of time—as பங்குனன் (one born in the பங்குனி month.)

காலப்பெயர்ச்சி, s. Change of season or monsoon; unseasonable weather, காலவிகற்பம்.

காலமயக்கம்—காலமயக்கு, s. [in gram.] An improper use of the tenses, காலவழு. 2. An allowed deviation in the use of tenses, காலவழுவமைதி.

காலமலைவு, s. Confusion of statement in regard to time—as asserting that the lotus blooms in the evening, or the lily during the day.

காலமல்லாக்காலம், s. An unfortunate, fatal time; an unseasonable time, அகாலம்.

காலமழை, s. Rain in the proper season, பருவத்திற்பெய்யுமழை.

காலமறிய, inf. To know the times so as to adapt one's self to them, காலவகையறிய. 2. To know things past, present or future intuitively or by spiritual sight—as yogis, காலவியற்கையறிய.

காலமாறு. Morning by morning, every morning, காலைதோறும். (c.)

காலமானம், s. [in arith.] Time measure.

காலமிருத்து, s. Death at the destined season—as distinguished from accidental death, விதித்தகாலத்திலவடையுமரணம்.

காலமே—காலத்தாலே. In the morning, early, betimes.

காலம்பண்ண—காலம்பண்ணிப்போக, inf. To finish one's time, to die.

காலம்பார்க்க, inf. To look or watch for a proper time or opportunity, சமயம்பார்க்க.

காலம்புரள, inf. To present a manifest revolution—as in the order of things; to be irregular, deranged, &c.—as the events of a time—as toddy-drawers seen riding in palankeens, &c.

காலம்போக்க, inf. To pass the times. 2. To while away time.

காலவகை, s. Seasons, times, காலக்கூறுபாடு. 2. Circumstances depending on time, காலவேறுபாடு.

காலவர்த்தமானம், s. Events of the times.

காலவழக்கம், s. Customs of the times.

காலவழு, s. [in gram.] An improper use of the tenses—as the past for the future, &c., காலக்குற்றம்.

காலவாகுபெயர், s. [in gram.] Nouns of time or portions of time, used by metonymy for what is intimately connected with time—as கார்த்திகை, the name of a month, for a plant which mostly blossoms during the month.

காலவிடைநிலை, s. [in gram.] Characteristics of tenses, காலத்தைக்காட்டுமிடைநிலை. They are 1. த், ட், ற், and இன் for the past. 2. ஆநின்று, கின்று, and கிறு for the present. 3. ப் and வ், for the future. There are some other characteristics—as மர், இசின், ம், இ, ன், &c.

காலவிரைவு, v. noun. Swiftness or rapid flight of time.

காலாகாலம், s. Times seasonable and unseasonable, auspicious and inauspicious, நற்காலத்துர்க்காலம். 2. One time or another, not often, not frequently. (c.)

காலாக்கினி, s. The fire which is to destroy the world at the end of the great yuga; a deluge-fire said to be in reserve in the nethermost part of the earth. Wils. p. 218. KALAGNI. 2. One of the two-hundred and twenty-four புவனம் under the regency of Kálágni.

காலாக்கினியுருத்திரம், s. One of the thirty-two உபாகமம்.

காலாக்கினியுருத்திரர், s. Rudra or the deity in the lowest region, in charge of the deluge-fire. There are ten subordinate Rudras, who resemble their chief.

காலாந்தம், s. The end of time, காலமுடிவு; [ex அந்தம்.]

காலாந்தரம், s. Intermediate space of time, process of time, காலவடை. 2. Meanwhile, காலவிடை; [ex அந்தரம், interval.]

காலேச்சுரவாதம், s. The metaphysical philosophy which maintains that Time is God.

காலோசிதம், s. A fit, proper time, உசிதகாலம்; [ex உசிதம்.]

அந்தியகாலம், s. The time of death.

ஆங்கால மெய்வருந வேண்டா வதுதானே
தேங்காயக் ளெரீபோற்சேருமே. போங்காலம்
காட்டானை தின்ற களியதுபோ லாகுமே
தேட்டாளன் றேடு தனம்.

Wealth shall of itself accumulate at the appointed time of increase, as the liquor within a cocoanut, and no toil is required; but at the fixed time for ruin, the riches of a hard-working man shall pass away like the contents of a wood-apple eaten by an elephant.

எக்காலமும். At what time soever, always.

சாங்காலம், s. The time of death or ruin.

திரிகாலம்—முக்காலம், s. The three divisions of time, present, past, and future. 2. The three tenses of a verb.

திரிசந்திகாலம். The three parts or divisions of the day: viz., காலை, morning. உச்சி, noon. மாலை, evening.

புண்ணியகாலம், s. See under புண்ணியம்.

போங்காலம், s. The time of separation or ruin.

*காலயுத்தி, s. The fifty-second year of the Hindu cycle of sixty years, ஓர்வருடம்.

*காலவம், s. Fire, நெருப்பு. (சது.) Sans. Kalava.

*காலவைரவர், s. One of the transformations of Bhairava.

காலன், s. One of the unseen planets, கரந்துறைகோள்களினொன்று. (See கோள்.) (p.) 2. A kind of arsenic in its natural state. காந்தபாஷாணம். 3. A kind of prepared arsenic, கௌரிபாஷாணம்.

*காலன், s. Yama—the Hindu Pluto, god of death, regent of the dead, யமன். 2. The minister of death, attendant on Yama, யமன்ஏவலன். 3. The planet saturn—malignant in its influence, சனி. Wils. p. 216. KALA.

காலகாலன், s. Siva who overcame Yama, சிவன்.

காலதண்டம், s. The club or weapon of Yama the god of death, யமனுதம். 2. Death, மரணம். Wils. p. 217. KALADANDA.

காலபாசம், s. The noose of Yama, or death. Wils. p. 217. KALAPASA.

காலாந்தகன், s. Siva who overcame Yama, சிவன். 2. An atrociously wicked person, துட்டன். 3. A very Yama, a very active, dexterous person, சாமர்த்தியவான்; [ex காலன், et அந்தகன், two names of Yama.]

காலன்கொம்பு, s. Horns of oxen, மாட்டுக்கொம்பு.

காலா, s. A kind of fish, a sturgeon, ஓர்மீன்.

காலாழ், s. Mud, soft mud, குழைசேறு.

காலி, s. The past day, கழிவுநாள். 2. Toddy, கள். (p.) 3. Herd of cows, பசுக்கூட்டம். 4. A tree, காட்டுமுருக்கு, Butea, L. 5. A town in Ceylon, "Point de Galle," ஓரூர்.

காலியமாடு—காலிமாடு, s. Cattle kept continually in the field or woods, under the care of a shepherd.

காலிராசி, s. (local.) Betel-nut from Galle.

காலி, adj. (Hind.) Vacant, not filled, empty, unoccupied, ஒழிவான.

காலி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To rise with lustre—as a heavenly body, to emerge with brilliancy above the horizon, உதயமாக.

*காலியம், s. Day-break, விடியல். Wils. p. 219. KALYA. (p.)

காலியாங்குட்டி, s. A small harmless snake, ஓர்சிறுபாம்பு.

காலு—கால், கிறது, கான்றது, காலும், கால, v. a. To eject from the mouth, to vomit, disgorge, ஓக்காளிக்க. 2. To shoot forth—as rays, ears of corn, &c., விட. 3. To discharge—as clouds, the rain, lightning, &c., சொரிய. 4. v. n. To flow from the mouth, to be vomited, கொப்பளிக்க. 5. To issue, flow out—as blood from a vein, tears from the eyes; to be discharged—as poison from a fang, வடிய.

கார்நீரைக்கான்றது. The cloud poured down torrents.

நிலவுகான்றது. The moon-beams issued.

கண்ணீர்கால, inf. To pour forth or shed tears.

கிரணங்கால, inf. To beam out rays.

விடங்கால, inf. To eject poison—as snakes. 2. To be ejected—as poison.

காலல்—கான்றல், v. noun. Gargling, கொப்பளித்தல். 2. Vomiting, ஓக்காளம்.

கான்றியம், s. Heat, hotness of the weather, காங்கை.

காலூரம், s. A frog, தவளை. (சது.)

காலேகம், s. The four special kinds of liquid perfumery, நால்வகைச்சாந்து; viz.: பீதம், கலவை, வட்டிகை, புலி.

காலேகவண்ணம், s. An odoriferous liquid composition, சாந்து.

காலேயம், s. A herd of cows, பசுக்கூட்டம். 2. A fragrant kind of turmeric, கஸ்தூரிமஞ்சள், Amonum Zedoaria. 3. Butter-milk, மோர். (p.)

*காலேயம், s. A yellow fragrant wood, அகில். Xylaloe, Lign aloes. Wils. p. 219. KALEYA.

காலை, s. Time, பொழுது. 2. The early part of the morning, day-dawn, morning, விடியற்காலம். 3. Early, betimes, early in life, &c. காலம்பெற. 4 Occasion, season, opportunity, சமயம். 5. [prov.] An enclosure, an area enclosed, a pen, அடைப்பு.

காலைக்கடன், s. Morning religious duties, காலைஅனுஷ்டானம்.

காலைச்சாப்பாடு, s. A morning meal, breakfast.

காலைச்செபம், s. Morning prayer.

காலைதோறும். Every morning.

காலைப்பசியாற, inf. To breakfast.

காலைபடைக்க, inf. [prov.] To make an enclosure.

காலையிலே. In the morning.

காலையுமாலையும், s. Morning and evening.

காலைவெள்ளி, s. Morning-star, either Venus or any other star rising in the morning, விடியற்காலத்துதிக்கும் வெள்ளி.

பேசுங்காலை. When it is described, explained or spoken of.

காலோலம், s. A raven, அண்டங்காக்கை. (p.)

கால், s. Leg; foot of a person, animal or thing, பாதம். 2. A stake, a post, தூண். 3. A prop, support, stay, தாங்குகால். 4. The stem of a flower, பூந்தாள். 5. A shoot, a sprout, முளை. 6. The lower part, base, bottom, அடிப்பக்கம். 7. The foot or tail of a letter, அட்சரக்கால். 8. A staff, shaft, a pole, கோல். 9. The wheel of a carriage or of a car, தேருருள். 10. A quarter, one-fourth of a whole, காற்பங்கு. 11. [in astronomy and astrology.] A fourth part of a nacshatra, நட்சத்திரங்களின் கால். 12. A degree of consanguinity, இரத்தக்கலப்பாமுறவு. 13. A channel, வாய்க்கால். 14. An instrument of dry measure—as மரக்கால். 15. Way, road, path, வழி. 16. A place, room, இடம். 17. Time, காலம்—as in காணுங்கால். 18. Minister and attendant of Yama, காலன். 19. A turn, time—as ஒருக்கால், once; இருக்கால், twice. 20. Wind, air, any of the vital airs, காற்று. 21. Power, strength, வலிமை. (பிங்.) 22. Darkness, gloom, இருள். (சிக.) 23. A son, மகன். 24. A peg, a pin, குறுந்தறி. 25. [prov.] A measure in the width of cloth, being two குஞ்சம் or two-hundred-and-forty threads of warp, புடைவை அகலத்தின்கால்.

காலடி, s. The sole of the foot, உள்ளங்கால். 2. The steps or trace of the foot, foot-steps, காற்சுவடு.

காலடியிலே. At or near the foot.

காலணி, s. Ankle-ornaments, ankle-rings or bells, காலிலணியுமாபரணம்.

காலதர், s. (p.) A window, பலகணி; [ex கால், wind, et அதர், way.]

காலாட, inf. To be active and industrious, முயல.

காலாடி, s. An active, industrious man, one who is active in movements, affairs, &c., முயற்சியுடையோன். 2. Wanderer, திரிவோன். 3. Title given to the chief of the Paller caste, பள்ளர்தலைவன்.

காலாட்டம், s. Activity in business, in duty, and consequent prosperity, முயற்சி.

காலாட்டமுள்ளமாடு, s. An ox that is brisk and ploughs well.

காலாணி, s. A corn on the foot. 2. Pegs in the beams of native houses to support the roof.

காலாணியற்றுப்போனவன், s. One who is become weak or poor.

காலாயுதம், s. A gallinacious fowl, whose foot is its weapon, கோழி.

காலாழி, s. See under ஆழி.

காலாள், s. A person on foot; foot-soldiers, infantry, பதாதி.

காலாற, inf. To rest the foot, நடையோய்ந்திருக்க.

காலாறவிட, inf. To let draught oxen, horses, &c., rest.

காலிடற—கால்தடக்க—காறடக்க, inf. To stumble.

காலிலி, s. A snake, பாம்பு. 2. Wind, காற்று. 3. The charioteer of the sun, அருணன்; [ex கால், leg, இல், not, without legs.]

காலில்விழ, inf. To fall prostrate, or do homage at one's feet.

காலுழற்சிகையுழற்சி. Distortion of the limbs, by convulsion or otherwise.

காலிருல், s. See under இருல்.

காலுளைவு, v. noun. Soreness, aching or pain in the legs, from cold, walking, &c.

காலூன்ற, inf. To set the foot firm on the ground; to become established.

காலூன்றிநிற்க, inf. To stand firmly, stand fast.

காலூன்றிப்பெய்ய, inf. To rain in torrents—the clouds seeming to rest on the horizon.

காலேயரைக்கால், s. A quarter and one-eighth, five-eighths.

காலோடேகால்சேர்ந்துநிற்க, inf. To stand with closed legs.

கால்கட்டு, s. Inseparableness—as of wife and husband.

கால்கட்டுகைகட்டு. Bound hand and foot. 2. (fig.) Confined at home by the sickness of another, by a grown-up daughter, a motherless child, or by urgent business, &c.

கால்கழுவ, inf. To wash the feet; metaphorically to clean one's self with water after stool, மலங்கழுவ.

கால்கூசுதல், v. noun. Shrinking of the foot in touching rough ground, &c. 2. Recoiling of the legs in stepping into the compound or house of a stranger. 3. Having spasms in the arms, and legs—as in cholera.

கால்சீக்க, inf. To root out, exterminate, வேரோடுகளைய. 2. To efface, to obliterate, துடைக்க. 3. To dispel darkness, இருளைஅகற்ற. 4. To scrape with the foot, காலினுற்சீக்க.

கால்செய்வட்டம், s. A fan, விசிறி; [ex கால், air, et செய்வட்டம்.]

கால்தளர—காறளர, *inf.* To become weak in the limbs, by walking, sickness, age, &c.

கால்தோல்—காற்றோல், *s.* [*prov.*] Leathern defences for toddy-drawers' feet in climbing, மரமேறுவோர் காலிலிடுந்தோல்.

கால்நகம்—கானகம், *s.* Toe-nail.

கால்நடை—கானடை, *v. noun.* Walking, going on foot—as distinct from riding and driving. 2. *s.* Sheep and goats; oxen, cattle, ஆடுமாடுகள்.

அவனுக்குநூறுகால்நடையுண்டு. He has one-hundred oxen.

கால்நடையாய், *adv.* On foot, a-foot.

கால்நடையாய்ப் பிரயாணம்போக, *inf.* To travel on foot.

கால்நோக்கு—காணோக்கு, *s.* One-fourth aspect of a planet, being one of the four aspects.

கால்பாவவில்லை. The feet do not seek the ground—recoiling from going.

கால்பிடிக்க, *inf.* To fall at one's feet to ask a favor. 2. To press and rub the legs in order to induce sleep, to shampoo.

கால்பின்னிக்கொண்டுநிற்க, *inf.* To stand cross-legged.

கால்பின்னிக்கொள்ள—காலோடேகால் பின்னிக்கொள்ள, *inf.* To lose the power of walking, legs being crossed.

கால்மட்டம், *s.* [*prov.*] Use of the feet in walking, by guess or practice—as in the dark or as a blind man.

கால்மாடு, *s.* The foot of a bed, or of a person in bed, காற்பக்கம்.

கால்மிதி, *s.* Step in dancing. 2. Footmark, காற்சுவடு.

கால்வருட, *inf.* To shampoo, to stroke the feet, soles, &c.

கால்வழி, *s*, Lineal descent, succession, சந்ததி. 2. Foot-path.

கால்வாங்க, *inf.* To make the leg, foot or tail of a letter—as of கு-ஜ-ர். 2. To slip, to slide in muddy walking. 3. To die. 4. To trip one up, to disappoint, to frustrate one's object. 5. To amputate a foot, a leg, &c. 6. To be drawn up, stiffened, &c.—as a leg by a fall, convulsions, &c.

கால்வாசி, *s.* A fourth part.

வேலைகால்வாசிதீர்ந்தது. The fourth part of the work is finished.

கால்வாய், *s.* A channel, a water-course, an aqueduct—commonly வாய்க்கால்.

கால்விரல், *s.* A toe.

கால்விலங்கு, *s.* Fetters, காற்றளை.

கால்விழுந்துபோக, *inf.* To be weary of walking. 2. To become paralyzed—as the legs.

கால்வைக்க, *inf.* To step, tread or trample on. 2. To step in dancing. 3. (*fig.*) To enter upon a practice, a course, &c.; to make a footing. 4. To intermix by marriage.

காற்கொட்டை, *s.* A small bolster for the legs and feet.

காற்சங்கிலி, *s.* Chains for the feet.

காற்சட்டை, *s.* Trowsers, pantaloons.

காற்சரி, *s.* Foot-ring, a kind of ornament for the feet.

காற்சிலம்பு, *s.* A foot-trinket of silver.

காற்சிப்பு, *s.* The hip-bone, சக்கெலும்பு.

காற்படம், *s.* The fore-part of the sole or bottom of the foot, காலின்படம்.

காற்படி, *s.* A quarter measure.

காற்பரடு, *s.* The ankles—as கரடு.

காற்பிடிப்பு, *s.* Rheumatic stiffness, contraction, &c., in the legs.

காற்றண்டை, *s.* A tinkling trinket for the ankles.

கானடுவிரல், *s.* The middle toe of the foot.

காணொண்டி—கால்நொண்டி, *s.* Lameness of the leg. 2. A lame man.

கடைகால், *s.* The foundation, அஸ்திவாரம். 2. An excavation for laying the foundation. 3. [*prov.*] A small iron bucket for drawing water.

கிந்துகால், *s.* A halting or hobbling leg.

கிந்துகாலன், *s.* A hobbler.

கீற்றுக்கால். The contracted form of உ, marked thus ൣ,—as த, ரு.

கீற்றுக்கால். The contracted form of ஊ, marked thus ൣ,—as தூ, ரூ. See under கீற்று

குதிகால்—குதிங்கால், *s.* Heel.

குந்துகாலன், *s.* (*fem.* குந்துகாலி.) A hobbler, a limping person. 2. A squatter, a man sitting on his knees.

குந்துகால், *s.* Tip-toe. 2. Squat, sitting on the heels—as a man.

கொம்புக்கால், *s.* The two signs for ஒ marked thus, ொ, as in கொ, கோ.

தோரணக்கால், *s.* Poles to which strings or ropes adorned with twigs or leaves are tied, to represent triumphal arches.

நாற்காலி, *s.* Chair.

பகுதிக்கால், *s.* The sign of உ, in certain compound characters marked thus ɾ,—as சு, பு.

பகுதிக்காற்பிறை, *s.* The sign of ஊ, marked ൣ,—as பூ, யூ.

பவளக்காலி, *s.* The name of a bird, Erythropus longipes, corallinus.

பின்னங்கால், *s.* Hind leg.

புள்ளிக்கால், *s.* The character ள subjoined to the letter உ, to lengthen it.

புறங்கால், *s.* The upper part of the foot, instep.

பொய்க்கால், *s.* A stilt, a false leg—as a wooden one.

பொய்க்கால் கட்டியாட, *inf.* To go upon stilts.

மடிப்பங்கால், *s.* Legs with folded knees.

மடிப்பங்கால்போட, *inf.* To sit upon the hams with folded knees.

மரக்கால், *s.* Crutches. 2. A wooden leg. 3. [*ex* கால், a measure.] An instrument of dry-measure.

முக்காலி, *s.* Tripod.

முக்கால், *s.* Three quarters, $\frac{3}{4}$, ஙு.

முக்காலும். The three times, even three times.

முக்காலும்போவேன். I will certainly go, come, &c.

முக்காலேமூன்றுவீசமும். Almost, for the greatest part, nearly.

முன்னங்கால், *s.* Fore-leg.

வாய்க்கால்—நீர்க்கால், *s.* Channel, water-course; [*ex* கால், channel.]

இரண்டாங்கால் மூன்றுங்காலுறவுமுறையான்.... One who is of the second or third degree of consanguinity.

கால், *part.* In, at, about, in the vicinity of—as in ஊர்க்கால். It is one of the signs of the local ablative, ஏழனுருபுகளொன்று. 2. If, provided; while, when—as செய்தக்கால். It is one of the terminations of the subjunctive mode in verbs, வினையெச்சவிகுதி.

ஊர்க்காலிலுள்ள பொழும்பர். A grove of lofty trees in the vicinity of a village.

கண்டக்கால்—கண்டாக்கால். If I see, if I chance to see (him).

காவாக்கால். If it were not guarded, restrained.

சாற்றியக்கால். When it is said or declared.

சொல்லியக்கால்—சொன்னக்கால். If it were said.

காவகா, *s.* The fruit or nut of the tree Semecarpus, சேங்கொட்டை. (*Rott.*)

காவடி, *s.* A pole for the shoulder, கா. 2. A pole carried on the shoulders with offerings for a temple, commonly with some parade; also the religious mendicant's pole which he takes from house to house to gather offerings, &c., for the service of an idol, கோயிற்காவடி. 3. Whatever is carried on the shoulder by a pole, காவுதடியிற் கொண்டுபோம்பொருள்; [*ex* காவு.]

காவடிகட்ட, *inf.* To tie the offering to the pole.

காவடிக்காரன், *s.* A pole-bearer.

காவடியெடுக்க, *inf.* To carry the sacred pole to the temple, or to collect offerings.

காவடியெடுக்கிறவன், *s.* One that carries the sacred pole, or carries burdens with a pole.

காவட்டம்புல்—காவட்டை, *s.* A medicinal grass, மாந்தப்புல், Andropogon, *L.*

காவணம், *s.* A shed with a flat roof, a pandal, பந்தல். (*p.*)

திருக்காவணப்பந்தலுக்கு நிழலுதவிவேண்டுமோ.... Does a marriage pandal require the help of a shade; i. e. is there need of helping those who are able to help others?

காவணவன், *s.* [*prov.*] A small kind of insects that spread among trees and growing corn, bind leaves to their nest, and thus destroy the crop, ஓர்புழு.

காவதம், *s.* A distance of about ten miles, காதம். (*p.*)

காவந்து—காபந்து *s.* (*Hind.*) Owner, master; masterly control, எசமானன்.

காவந்துபண்ண, *inf.* To exercise lordship or mastership; to superintend, guard.

காவல், *s.* Defence, protection, preservation, support, keeping, காப்பு. 2. Guard, restraint, அரண். (*p.*) 3. Surrounding wall, fortification, மதில். 4. A prison, a ward, hold, சிறைச்சாலை; [*ex* கா.]

காவல்தானே பாவைக்கழகு. Chastity becomes a woman.

காவலன், *s.* A protector, a guardian, காப்போன். 2. A king, அரசன். 3. A husband, கணவன். 4. One of a king's body-guard, மெய்காப்பாளன்.

காவலாளர், *s.* Watchmen, sentinels, watchers, guards, காப்போர்.

காவலாளி, *s.* A keeper, a guard, காப்போன்.—*Note.* In Tinnevelly, this word is invariably used to signify a prisoner and not a watchman, which latter is called காவற்காரன்.

காவலிருக்க, *inf.* To be on guard, to keep watch, காவலாயிருக்க. 2. To wait or look, as for a person expected.

காவலிலிருக்க, *inf.* To be in prison or captivity.

காவலிலேபோட—காவலில்வைக்க, *inf.* To imprison. 2. To keep in the patrol-hut till morning—as a person found straying during night.

காவல்கட்டு, *s.* A strong guard. 2. Secure protection. 3. Rigid restraint.

காவல்கட்டுப்பண்ண, *inf.* To set a strong guard. 2. To watch closely. 3. To keep yonng people, &c., in close restraint. 4. [*prov.*] To attend strictly to the diet of a sick person.

காவல்காக்க, *inf.* To watch, guard, protect. 2. To be on guard, to act as sentries, watchmen, &c. 3. To defend the body by wearing armor, &c., or the head by oils, &c., against disease, which either has attacked the lower extremities, or indicates coma, &c.

காவல்செய்ய, *inf.* To protect, to defend. 2. [*prov.*] To pass a straw-rope over a heap of corn in the field, or make with it diagrams on the ground, &c., to defend the grain from demons. 3. To place an image of Ganesa (being a handful of moist cow-dung) on the top of a heap of corn before winnowing, as a security from demons.—*Note.* If it is measured, it is deemed secure against their attack.

காவல்பண்ண, *inf.* To protect, defend, take care of, watch over. 2. To nourish, cherish, provide for. 3. To imprison, to keep under guard, to confine.

காவல்மாற, *inf.* To be relieved, changed, &c.—as sentinels or a watch.

காவல்மாற்ற, *inf.* To relieve guard, change watchmen, sentinels, &c.

காவல்முறை, *s.* Turns in watching.

காவல்மேரை, *s.* Share of grain given to the watchman of a village from the thrashing floor.

காவல்விட, *inf.* To release from watching, guarding, &c.

காவற்கடவுள் — காவற்பெருமான், *s.* Vishnu, as the preserver of the world, விஷ்ணு.

காவற்கட்டு, *s.* [*prov.*] A bundle of paddy sheaves for the watchman.

காவற்கட்டை, *s.* [*prov.*] A fire-brand kept burning to ward off the female demon சோற்றி from a woman in child-birth, when exposure is greater than at other times. 2. A clump of wood kept burning through the night near a patrol-hut.

காவற்கப்பல், *s.* A reconnoitring vessel, a guard-ship.

காவற்காடு, *s.* A jungle or forest defence, அரட்டரண். 2. A reserved forest.

காவற்காரர், *s.* Watchmen, sentinels, a patrol, காப்போர்.

காவற்கூடம்—காவற்சாலை — காவல்ஸ்தலம், *s.* A guard-room; a prison-house.

காவற்புரி, *s.* [*prov.*] A straw-rope thrown over the heap of corn in the field to defend it from demons.

அருங்காவல், *s.* A very strict or powerful guard.

தலைக்காவல், *s.* The main guard.

தூக்கிரிக்காவல், *s.* An overseer of a village.

மெல்லுயிர்க்கருங்காவல், *s.* A support or cordial to the languishing mind.

காவற்கலி, *s.* A plantain tree, வாழை, Musa, *L.* (*M. Dic.*)

காவன், *s.* Spider, சிலம்பிப்பூச்சி.

காவா, *s.* The wild jasmin, காட்டுமல்லிகை. (*M. Dic.*)

காவாய், *s.* A kind of grass, ஓர்வகைப்புல்.

காவாலி, *s.* Youth, இளமை. 2. A babbler, a comical or eccentric person, வீண்பிதற்றன்.

காவாலிப்பயல், *s.* A petulant fellow, an eccentric chap.

காவாலிப்புத்தி, *s.* Juvenile imprudence.

காவாளை, *s.* The wild jasmin காட்டுமல்லிகை. 2. A species of plants—as காவிளை, காய்வேளை, Galega, *L.*

காவி, *s.* Red-ochre, ஓர்வகைமண், Bole armenic, Bolus. (*Mat. Ind.*) 2. A reddish colour in garments consequent on frequent dippings in water. 3. (*p.*) The blue lily, கருங்குவளை.—*Note.* For குங்குமக்காவி, சந்திரகாவி, சிமைக்காவிக்கல், சீக்காவி, பூக்காவி and பற்காவி as different kinds of காவி, see those words.

காவிக்கல், *s.* Reddle, red chalk, ஆதிரவிச்சிலை.

காவிதோய்க்க, *inf.* To dye or tinge with red-ochre.

காவிபிடிக்க—காவியேற, *inf.* To contract a reddish colour, as cloth by daily dipping.

காவிபிடித்தபல் — காவிபற்றினபல்—காவிப்பல், *s.* Teeth colored with black ochre. 2. Teeth stained with betel composition. 3. Soiled teeth.

காவிமண், *s.* Red ochre in powder, or loose earth.

காவியேறினவஸ்திரம், *s.* A cloth made reddish by frequent dipping in water.

காவியேற்ற, *inf.* To deepen the reddish colour, by dipping in water.

கருங்காவி, *s* Indigo in cake, அவுரிமருந்தண்டை. 2. Brown colour, ஊதாச்சாயம். 3 A plant, கருங்குவளை.

கற்காவி, *s.* A kind of red earth from Persia.

காவிதி, *s.* (*pl.* காவிதிபர்.) A king's minister, மந்திரி ... ர.) 2. An accountant, கணக்கன். (*p.*)

*காவியம், *s.* An epic poem, epic poetry—considered as one of the sixty-four கலைஞானம். Wils. p. 219. KAVYA. See கலைஞானம்; [*ex* கவி, poet.]

காவியம்பாட, *inf.* To compose a poem.

பஞ்சகாவியம், *s.* The five ancient classic poems in Tamil; viz.: 1. சிந்தாமணி. 2. சிலப்பதிகாரம். 3. வளையாபதி. 4. மணிமேகலை. 5. குண்டலகேசி.

காவியா, *s.* [*prov.*] The buoy of an anchor. 2. [*in burlesque.*] Large ear-rings.

காவியாக்கட்டை, *s.* The wooden beam of an anchor.

காவிரி, *s.* The river Kavery. See காவேரி.

காவிளை—காவிளாய், *s.* A plant. See வேளை.

காவு, *s.* [*vul.*] Sacrifice, an oblation to the inferior divinities, பலி. 2. A magic ointment used in making a black spot on the forehead, காவுப்பொட்டுக்கு மை.

காவுப்பொட்டு, *s.* The spot of magic ointment on the forehead of the pujari.

காவு, கிறேன், காவினேன், வேன், காவ, *v. a.* To carry on the shoulder—as a palanquin, a pole with a weight at each end, &c , தோள்மேற்சுமக்க. 2. To bear, or take any thing heavy on the arms or on the head, சுமக்க.

காவிக்கொண்டுபோக, *inf.* To carry on the shoulder.

காவிபெடுக்க, *inf.* To take on the shoulder with fresh vigor.

காவுதடி, *s.* A pole for carrying on the shoulder.

காவுவோர், *s.* Palanquin-bearers.

கதைகாவி, *s.* A tale-bearer, a tell-tale, கதைதூற்றுகிறவன்.

*காவேரி, *s.* The famous Kavery river, which waters the Mysore, Coimbatore and Tanjore countries. Wils. p. 219. KAVERI.

தண்ணீருங்காவேரிதார்வேந்தனுஞ்சோழன். It is Kavery alone that is superior for its water; it is Sozhan alone who is illustrious as a king.

காவேரிப்பட்டணம்—காவேரிப்பூம்பட்டணம், *s.* A town, Kaverypatnam.

காவேரிப்பாய்ச்சல், *v. noun.* Irrigation by the over-flowing of the Kavery river.

காவேரிமணல், *s*, Iron-sand, அயமணல்.

காவேளை, *s.* A plant—as காய்வேளை.

காழகம், *s.* Blackness—as காளம். 2. Cloth, ஆடை. 3. A town so called, கடாரமென்னுமூர். (*p.*)

காழி, *s.* A town—as சீகாழி. (*p.*)

காழியர்கோன், *s.* Sambandha, as the lord of the people of காழி; one of the sixty-three devotees of Siva, சம்பந்தர்.

காழியர், *s.* Washermen, those of the washer-caste, வண்ணார். (*p.*)

காழ், *s.* Seed, விதை. 2. Stones or kernels of certain fruits, கொட்டை. 3. Gravel, பரற்கல். 4. Crystal, பளிங்கு 5. A string of beads, pearls or other gems, மணிவடம். 6. Brightness, lustre, ஒளி. (பிங்.) 7. Hardness, solidity of timber, வைரம். 8. Blemish, defect, fault, குற்றம். (*p.*)

அகக்காழ்—அகங்காழ், *s.* Inside solidity—as that of the trees belonging to the class of exogens.

இருக்காழி, *s.* A fruit of two stones or seeds—as இருக்காழிப்பனங்காய்.

பதுமக்காழ், *s.* Seed of the Nelumbium.

புறக்காழ்—புறங்காழ், *s.* Outside solidity—as that of the trees belonging to the class of endogens.

முக்காழி, *s.* A fruit of three stones or seeds—as முக்காழிப் பனங்காய், முக்காழிஇலுப்பைக்காய்.

காழ், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be pungent, harsh, stimulant, காரிக்க. 2. To grow solid, to attain solidity, to be firm or strong in mind, வயிரிக்க.

காழ்ப்பு, *v. noun.* [*substantively.*] Pungency, stimulancy, காரம். 2. Solidity, hardness; firmness, வயிரம். (*p.*)

*காளகண்டம், *s.* (*Sans.* களகண்டம்.) The குயில் bird, the Indian Cuckoo. Wils. p. 200. Kalakanda.

காளகம், *s.* A trumpet, as காளம். 2. A shrub, மருக்காரை, Gardenia, *L.* (*M Dic.*)

காளத்தி—காளஸ்தி—காளஸ்திரி—காளாத்தி, *s.* Calastri, a town in the Carnatic, noted for its temple on a mount sacred to Siva, ஓர்ஸ்தலம்; [*ex* காளம், black, *et* அஸ்தி, elephant, where a black elephant is said to have worshipped Siva.]

காளபதம், *s.* A pigeon, மாடப்புறா.

காளபந்தம்—காடபந்தம், *s.* A brilliant fixed light made on festive occasions, &c. See பந்தம்.

காளபம், *s.* A battle, a fight, warfare, போர். (*p.*)

காளமுகி, *s.* One of the seven clouds—which is said to pour down meteoric and other stones, சத்தமேகங்களிலொன்று. See மேகம்.

காளமேகம்—காளமேகன், *s.* A distinguished Tamil poet, ஓர்புலவன்.

காளம், *s.* A tree, எட்டி, strychnos. 2. The indigo plant, அவுரி. (*M. Dic.*) 3. A trident, சூலம்.

*காளம், *s.* Blackness, darkness. 2. Poison, venom, விடம். 3. A trumpet, சின்னம். 4. Cloud, மேகம். Wils. p. 216. Kala. 5. [*in astrological meteorology*] One of the nine classes of clouds; also its indication, நவமேகங்களிலொன்று.

காளகண்டன், *s.* Siva, whose neck is of an azure colour, சிவன். Wils. p. 216 Kalakanda.

காளகந்தரி, *s.* Parvati, பார்வதி.

காளகூடம்—காளகூடவிடம் *s.* Poison, venom—commonly spoken of the poison that sprang from the sea of milk, which Siva swallowed for the preservation of the devas, நஞ்சு. Wils. p. 216. Kalakuda.

காளமூதுகிறவன்—காளம்பிடிக்கிறவன், *s.* A trumpeter.

காளவனம், *s.* A place for burning the dead, சுடுகாடு.

காளவாய், *s.* An ass, கழுதை. 2. The kiln for lime or brick, a furnace, சூளை.

காளவாயன், *s.* A person with a large mouth and a heavy voice, who blabs out secrets; a babbler, கத்துகிறவன்.

காளவாய்க்கல், *s.* Bricks new from the kiln.

காளவாய்க்காரன், *s.* A kiln-keeper.

*காளன், *s.* The leader of a division of the celestial army under the charge of Eiyanar, மாகாளன்.

காளாஞ்சி—களாஞ்சி—களாசி, *s.* A betel-pot, தாம்பூலக்கலம். 2. [*prov.*] A spittoon, எச்சிற்படிக்கம்.

காளாஞ்சி, *s.* One of the eighty kinds of the disease, called வாதம். (*Rott.*)

காளாத்திரி—காளாஸ்திரி, *s.* The second of the four poisonous fangs of a cobra or other snake, பாம்பின் நச்சுப்பல்லிலொன்று.

*காளாமுகம், *s.* One of the six divisions of the orthodox Saivism, உட்சமயம் ஆறினொன்று.

காளாமுகர், *s.* The sect who maintain the காளாமுகம் system of Saivism, காளாமுக சமயத்தார். 2. Saivas in general, சைவத்தோர்.

காளான், *s.* A fungus, a mushroom, a toad-stool, ஆம்பி, Agaricus campestris, *L.* —*Note.* அவற்காளான், கடற்காளான், நடைக்காளான், நக்கக்காளான், நிலக்காளான், புற்றுக்காளான், பேய்க்காளான், மரக்காளான், மஞ்சட்காளான், are different kinds of காளான்; which see.

காளி, *s.* A lion, சிங்கம். (சது.) 2. The சக்கரி creeper.

*காளி, *s.* A black woman, கரியவள். 2. The goddess Kali, துர்க்கை. 3 Parvati, பார்வதி. 4. One of the wives of the king Santanu, பரிமளகந்தி. Wils p. 216. Kalee. 5. One of the eighteen secondary puranas, பதினெட்டு உபபுராணத்தொன்று. 6. One of the four poisonous fangs of a cobra or other snake, பாம்பின் நச்சுப்பல்லிலொன்று.

காளிதோட்டத்துக் கற்பகம்போல். Like the Kalpa tree in the garden of Kali; i. e. as possessed by the illiberal Kali.

காளிவந்து கலந்தனள். Kali has come out and joined (Santanu).

காளிதாசன், *s.* The name of an ancient celebrated Sanscrit poet, ஓர் புலவன்.

காளிபோலேயிருக்க, *inf.* To be very strong, fierce and black.

காளியாட்டமாட, *inf.* To fight or quarrel as காளி with Siva.

காளிகம், *s.* A plant, மணித்தக்காளி, Solanum, *L.*

காளிக்கம், *s.* [*prop.* காளம்.] A black dye for cloth. 2. A mountain containing brass or copper, பித்தளைமலை. (*M. Dic.*)

காளிக்கங்கூட்ட, *inf.* To prepare blue dye by compounding the necessary ingredients.

காளிக்கமெழுத—காளிக்கரேகையெழுத, *inf.* To delineate on chintz with காளிக்கம் pigment.

*காளிங்கன், *s.* The name of a snake, ஓர்பாம்பு. Wils. p. 218. Kalinga. 2. The chief of the Kalinga country, கலிங்கநாதன்.

காளிங்கநடனம், *s.* The dance of Krishna upon the காளிங்கன் serpent.

காளிதம், *s.* Verdigris, dross, களிம்பு. (*p.*)

காளிந்தம், *s.* Cardamom. See ஏலம்.

*காளிந்தி, *s.* The Jumna river, யமுனையாறு. Wils. p. 218. Kalindi. 2. A species of teak, தேக்கின்விசேடம். 3. The வாகை tree, Mimosa, *L.* 4. A river cow, நீர்ப்பசு. (சது.) 5. Mother of Sagaran, king of Oude, சகரன்றாய். 6. A wife of Krishna, கண்ணன் மனைவி.

*காளிமம்—காளிமை, *s.* Black, black-coloring matter, கருமை. Wils. p. 218. Kalima.

*காளியன், *s.* The name of a serpent, ஓர்பாம்பு. Wils. p. 218. Kaliya.

காளியன்முடிமிலாடியகாலன். Krishna who danced upon the head of the காளியன் serpent. (திவா.)

காளினியம், *s.* A plant, கத்தரி, Solanum, *L.* (*M. Dic.*)

காளை, *s.* A steer, a young bullock, இளவெருது. 2. A young man, lad, a youth, a man in his prime, கட்டிளமையோன். 3. A headman in desert districts, பாலைநிலத்தலைவன். 4. A man, ஆண்மகன் (சது.)

மனக்காளையர்கன்றினர் The young men were much exasperated. (பார.)

காளைக்கன்று—காளங்கன்று, *s.* A bull-calf, a very young steer.

காளைமாடு—காளையெருது, *s.* A bullock, a steer.

காளையங்கம், *s.* [*probably from* களபம்] A battle, warfare, போர். (சது.)

காறகன், *s.* [*in astronomy.*] Sun's longitude corrected for parallax—as reckoned on the fixed zodiac.

காறல்—காறற்கொடி, *s.* A medicinal plant, ஓர்மருந்துச்செடி, Arum minutum, *L.*

காறற்கத்தரி, *s.* A plant, Solanum insanum, *L.*

காறுக்கருணை, *s.* A plant with an esculent root, ஓர்கிழங்குச்செடி.

காறுப்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v.* [*prov.*] To hawk. See காறு.

காறு, *s.* Limit, point, measure, degree or extent of time, காலவெல்லை. 2. Ploughshare, a colter, கொழு.

இதுகாறும். Thus far, until now, as yet, hitherto.

இறவளவுகாறும். Until death, till they die.

ககனத்தோடு மண்ணிலங்காறும்வந்த. There proceeded the five elements from ether down to earth.

காறு, கிறேன், காறினேன், வேன், காற, *v. a.* To hawk, to hawk up phlegm, &c., காறியுமிழ. 2. *v. n.* To taste bitter, musty, or rancid—as stale food, காறலாயுருசிக்க.

கத்தரிக்காய் காறுகின்றது. The cooked brinjal tastes bitter.

காறித்துப்ப—காறிப்போட—காறியுமிழ, *inf.* To hawk and spit.

எல்லாரும் உன்முகத்திற் காறித்துப்புவார்கள்.... Every body will hawk and spit on your face; i. e. if you act thus, every one will treat you with contumely.

காறல், *s.* A bitter, musty flavor, producing often a tendency to hawk and spit; the bitter taste of stale food; rancidity, காறுகிறருசி. 2. An eatable that tastes bitter and musty, காறலான பதார்த்தம். 3. *v. noun.* Hawking; retching, காறுதல்.

காறலாயிருக்க, *inf.* [*local.*] To feel an itching in the throat.

காறுபாறு, *s.* (*Hind.* கார்பார்.) Superintendence, management, விசாரிப்பு. 2. Rebuke, reprehension, கண்டிப்பு. 3. Domination, அதிகாரத்துவம். 4. Business, affairs, வேலை.

ஒருவன்மேற் காறுபாறாயிருக்கிறது. To keep a strict eye upon a person.

காறுபாறுபடிக்க, *inf.* To learn how to manage business.

காறுபாறுபார்க்க, *inf.* To superintend, to oversee, to manage.

காறை, *s.* A golden or silver collar, a neck-ring for a lad, கழுத்தணியிலொன்று. 2. [*prov.*] A blade of grass or straw, வைக்கோல்முதலியவற்றின்காறை. 3. Plastering. See காரை.

காறையெலும்பு, *s.* Collar-bone, clavicle.

பட்டைக்காறை—சாந்துக்காறை, are different kinds of collars.

காற்குளம், *s.* The eighth lunar asterism, or nacshatra, பூசநட்சத்திரம்.

காற்பாசம், *s.* [*impr. for* கார்ப்பாசம்.] The cotton shrub. 2. Cotton.

காற்று, s. Wind, a breeze, the air, atmosphere, வாயு. 2. The wind that passes downward, அபானவாயு. 3. The fifteenth lunar asterism, or naeshatra, சோதிநட்சத்திரம். 4. A ghost, an apparition, a spectre, an evil spirit.—*Note.* This word is from the third person neut. sing. of a symbolic verb from கால், air.

காற்றுள்ளபோதே தூற்று. Winnow while the wind blows; i. e. attend to a thing at a favorable time.

காற்றசைகிறது. The wind moves (after a lull).

காற்றடங்கிற்று — காற்றமர்ந்தது. The wind has subsided.

காற்றடிக்கிறது. The wind blows. 2. The storm beats.

காற்றருந்த, *inf.* To feed on wind—as snakes. 2. [*vul.*] To be gaping, listless, idle.

காற்றுடவைக்க, *inf.* To air a thing; to expose it to the wind.

காற்றாடி, s. A wind-whirl, a child's toy, கறங்கு. 2. A paper kite, காற்றாடிப்பட்டம். 3. (*fig.*) A changeable person, a waverer, நிலையிலி.

காற்றாடிக்கொள்ள, *inf.* To cool, to refresh one's self.

காற்றின்சகாயன், s. Fire, *lit.* the helper of wind; that which invites wind for winnowing, as a fire.

காற்றுக்கழிய—காற்றுப்பறிய, *inf.* To break wind.

காற்றுக்காலம், s. The windy season.

காற்றுக்கிளம்பிற்று. The wind has sprung up or risen.

காற்றுக்கிளம்பவில்லை. No wind rises.

காற்றுக்குமறைவிடம். A shelter from the wind.

காற்றுச்சங்கை, s. Possession by a demon.

காற்றுத்திரும்பிவிட்டுது — மாறிவிட்டுது. The wind has changed.

காற்றுநாள், s. The fifteenth lunar asterism, சோதிநாள்.

காற்றுப்போகிறது. The air is escaping.

காற்றுமுந்துநாள், s. The sixteenth lunar asterism, விசாகநாள்.

காற்றுமோதுகின்றது. The wind beats or puffs. 2. The monsoon is set in.

காற்றுவாக்கு, s. [*prov.*] Leeward—used when a current of offensive effluvia is conveyed to one by the wind—as by a fisher-woman in passing, &c., காற்றுப்பக்கம். 2. Neglect of duty, சோம்பல். 3. Random, chance, கண்டபடி.

காற்றுவீசுகின்றது. The wind blows.

காற்றெழும்புகிறது. The wind rises.

காற்றொதுக்கு, s. A shelter from the wind, காற்றடைப்பு.

கிரியாமார்க்கம், s. The practice of duties in the second degree of the Siva religion; the performance of rites and ceremonies, கிரியைநெறி.

கிரியாமாலை, s. Inflection or conjugation of verbs, chiefly in Sanscrit, வினைச்சொல்விகற்பகணம்.

கிரியாவதி, s. A person who practices the rites and ceremonies enjoined in the Vedas.

கிரியாவுத்திகி, s. Transcendental and symbolical instruction in the most spiritual rites, by a guru to an advanced disciple—opposed to ஞானவுத்திகி. (சிவ. சி.)

கிரியைகெட்டது, *appel. noun.* Any thing disorderly, slovenly, ஒழுங்கற்றது.

கிரியைகெட்டவன், s. One destitute of good manners, slovenly in dress, or irregular in habits.

கிரியைக்காரன், s. One in the second degree of the Siva religion.

கிரியைக்கேடு, s. Slovenliness, debauchery, beastliness, ஒழுக்கமின்மை.

கிரியைசெய்ய, *inf.* To perform actions, duties, rites, &c., சடங்குசெய்ய. 2. To perform funeral rites, உத்தரகிரியைசெய்ய.

கிரியையனுட்டிக்க, *inf.* To perform rites, and ceremonies. 2 To practice the daily rites, to perform the duties of the second degree.

கிரியையொழிந்தவன், s. One who has dispensed with works, having attained a higher degree, கிரியாபாதங்கடந்தவன்.

காட்டுக்கிரியை, s. Obsequies, funeral rites in the place of burning or burial —as distinguished from வீட்டுக்கிரியை.

•கிரீடம், s. A crown, a crest, a diadem, முடி. Wils. p. 222. KIREEDA.

கிரீடசாம்பிராச்சியம், s. The happiness of wearing a crown, கிரீடப்பேறு.

கிரீடதாரணம், s. Crowning, coronation, முடிதரிக்கை.

கிரீடதாரி, s. One who wears a diadem, a crowned prince, a king, முடிதரித்தோன்.

கிரீடந்தரிக்க, *inf.* To be crowned; to put on or wear a crown, முடிதரிக்க.

கிரீடந்தரித்தஅரசன், s. A crowned king. 2. A rightful sovereign.

கிரீடபங்கம், s. Loss of crown, dethronement, முடியிழப்பு.

கிரீடாதிபதி, s. A crowned king, முடிதரித்தஅரசன்.

கிரீடாதிபத்தியம், s. Sovereignty, அரசாட்சி.

•கிரீடாப்பிரமவாதி, s. The follower of a sect of Vedantists, who hold that all the operations in the universe are but the sport of Brahma, [*ex* கிரீடா, sport.]

•கிரீடி, s. A king, அரசன். 2. A name of Arjuna, one of the five Pandavas, அருச்சனன். Wils. p. 222. KIREEDEE.

•கிரீடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To sport, to play, விளையாட. 2. To copulate, புணர. Wils. p. 258. KREEDA.

•கிரீடை, s. Play, sport, amusement, விளையாட்டு. 2. Amorous play, pastime of females, மகளிர்விளையாட்டு. 3. Copulation, புணர்ச்சி. Wils. p. 258. KREEDA.

கிரீடைபண்ண, *inf.* To play, sport, விளையாட. 2. To copulate, புணர்ச்சிசெய்ய.

சலக்கிரீடை, s. Amorous play in a tank of water—as of a lover and his mistress.

கிரீட்டி, s. A climbing plant, பிரண்டை, Cissus, *L.*

•கிரீவம்—கிரீபம், s. The neck, கழுத்து. 2. Head, தலை. Wils. p. 306. GREEVA.

தசக்கிரீவன், s. Ravana as a monster with ten heads.

•கிருகரன், s. One of the vital airs in the region of the face, assisting the digestive process, and causing heat, anger and sneezing. (சது.) or, as some say, assisting in opening and shutting the eyes. See வாயு. Wils. p. 240. KRUKARA. It is sometimes spelt கிருதரன்.

•கிருசம், s. Leanness, emaciation, fatigue, மெலிவு. Wils. p. 244. KRUSA.

•கிருஷி, s. Husbandry, tillage, agriculture, உழவுத்தொழில். Wils. p. 245. KRUSHI.

கிருஷிகன், s. A husbandman, உழவுத்தொழில்செய்வோன். Wils. p. 245. KRUSHIKA.

•கிருட்டி, s. A hog, பன்றி. 2. A wild hog, மருட்பன்றி. Wils. p. 311. GURUSHDI. 3. A cow after the first calving, ஒருகறப்பசு. Wils. p. 295. GRUSHDI. 4. [*a change of* கிரீட்டி.] A kind of climbing plant, பிரண்டை.

கிருட்டிணபாணம், s. The எட்டி tree, Strychnos, *L.*

கிருட்டிணபேடம், s. A medicinal plant, கடுரோகிணி.

•கிருட்டிணம்—கிருஷ்ணம், s. Blackness, darkness, a dark-blue color, கறுப்பு. 2. (சது.) The second or dark half of the moon, சந்திரன் அபரபக்கம். Wils. p. 245. KRISHN'A.—*Note.* Krishna is spelt in Tamil in different ways—as கிருட்டிணன், கிட்டிணன், கிருஷ்ணன், கண்ணன், கிருட்டினன், கிட்டினன், கிட்ணன், கிஷ்ணன்.

கிருட்டிணசருப்பம், s. A black species of snake, கரும்பாம்பு.

கிருட்டிணசிங்குவாததோஷம், s. A kind of disease, terminating in most cases fatally, ஓர்நோய்.

கிருட்டிணபக்கம், s. The dark half of the moon, அபரபட்சம்.

கிருட்டிணமிருகம், s. A black deer, கரியமான்.

கிருட்டிணவர்ணம், s. Iron-sand, இரும்புமணல்.

கிருட்டிணமூர்த்தி, s. The incarnate Krishna.

கிருட்டிணன், s. Krishna, the most celebrated incarnation of Vishnu, கண்ணவதாரம். 2. Arjuna, அருச்சனன். 3. The rishi Vyasa, வியாசன்.

கிருட்டிணாநதி-கிருட்டிணை, s. The river Krishna or Kistna, ஓர்நதி.

கிருட்டிணாப்பிரகம், s. Mica, ஓர்அப்பிரகம்.

கிருட்டிணாவல்லி, s. A medicinal plant, கனஉரி, Perepolia.

•கிருட்டிணி—கிஷ்ணி, s. The காக்கணம் creeper.

•கிருதம், s. A thing made, an action done or performed, செய்யப்பட்டது. 2. The first of the four yugas. (See யுகம்.) Wils. p. 240. KRUTA. 3. Ghee, clarified butter which has been gently boiled and allowed to cool, நெய். Wils. p. 310. GHRUTA. 4. A plant, செம்முருக்கை. (*M. Dic.*)

கிருதகுளபாளிதமானபோசனம், s. Rich food, *lit.* food of ghee, sugar, and milk-rice, நல்லபோசனம்.

கிருதயுகம், s. The first yuga.

காண்டாதிகிருதம், s. A compound medicine, of which Creat or Justicia paniculata is the principal ingredient, and clarified butter the vehicle; [*ex* காண்டம், *et* ஆதி.]

கொடுப்பைக்கிருதம்—பொன்னாங்காணிக்கிருதம், s. A compound medicine made of Illecebrum sessile and clarified butter.

வல்லாரைக்கிருதம், s. A compound medicine made of Hydrocotyle and clarified butter.

கிருதரன், s. See கிருகரன்.

*கிருதன், *s.* The uncle of Krishna, கிருதவன்மன். See under கிருத.

*கிருதார்த்தம், *s.* Success, good fortune, காரியசித்தி. Wils. p. 242. Krutarita.

கிருதார்த்தர், *s.* Persons who have attained their object; persons satisfied, happy, rejoicing காரியசித்திபெற்றோர்.

*கிருதி, *s.* Act, action, doing, work, workmanship, செய்கை. Wils. p. 243. Kruti.

கிருது, *s.* Sacrifice. See கிரது.

*கிருது, *s.* Arrogance, haughtiness, insolence, wantonness, self-consequence, foppery, foppishness, கர்வம். Wils. p. 258. Krudh.

அம்பட்டக்கிருதும் வண்ணாரவொயிலும். The insolence of a barber and the foppery of a washerman.

கிருதன், *s.* An arrogant, insolent fellow; a fop.

கிருதுக்காரன், *s.* An arrogant, insolent person, கர்வமுடையோன்.

கிருதுநடை, *s.* A proud, strutting gait, a consequential appearance, foppery.

கிருதுபண்ண, *inf.* To be insolent, arrogant, impertinent.

கிருதுப்பாகை, *s.* A turban worn on one side of the head.

கிருதுப்பேச்சு, *s.* Impertinent talk, insolent speech.

கிருதுப்பேச்சுப்பேச, *inf.* To speak insolently, contemptuously.

கிருதுவுடை, *s.* Gay dress, foppishness, finery.

*கிருத்தி, *s.* Skin, hide, தோல். 2. The hide, especially that of an antelope, on which a religious student sits, மான்தோல் 3. The third lunar asterism or nacshatra —as கிருத்திகை. Wils. p. 243. Krutti.

*கிருத்திகை, *s.* The third of the twenty-seven lunar asterisms or nacshatras—as கார்த்திகை. Wils. p. 243. Krutika.

*கிருத்திமம், *s.* Skin, as கிருத்தி, தோல். 2. A class of demons, attendants of Siva, பூதகணம். 3. Deceptive appearances, performances, &c.; inveigling, entrapping; a fraud, a scheme, வஞ்சனை. 4. Falsehood, lie, பொய். (*Sans. Krutrima.*)

*கிருத்தியம், *s.* Act, actions, performances, operation, தொழில். 2. Moral actions good or bad, involving future retributions, கன்மக்கிரியை. 3. A course of conduct, நடக்கை. 4. Work, business, employment, லௌகிகவேலை. 5. Religious rules, prescribed duties, கடமை. 6. Rites, ceremonies, &c., religious acts or practice, சடங்கு. 7. The operations of the deity—popularly in the characters of creator, preserver and destroyer; but in the mystic parts of the Agama system, the works of obscuring and enlightening the soul are superadded. Wils. p. 243. Krutya.

தன்கிருத்தியந்தான்பார்க்கவேண்டும். Each one must perform his appropriate duties, personal, social, relative, civil, &c.

கிருத்தியகர்த்தா, *s.* An operating deity, or a god who performs either of the five great operations in the universe.

கிருத்தியகர்த்தாக்கள், *s. (pl.)* Agents who carry on operations in the universe; also, those of the விஞ்ஞானகலர் and பிரளயாகலர் class of souls that have advanced so as to be cleansed from மலம், and permitted to be operative.

கிருத்தியப்பிழை, *s.* Misdeeds, misbehaviour. 2. Failure or transgression in the performance of prescribed rites, ceremonies or other duties.

கிருத்தியமில்லாதவன், *s.* One who does not practise the rites of his religion.

ஒருகிருத்தியமுமில்லாதவன். One unemployed.

கிருத்தியமுடிக்க, *inf.* To perform prescribed duties—as religious rites, ceremonies, &c.

கிருத்தியம்பண்ண—கிருத்தியம்நடத்த, *inf.* To perform the works of creation, &c.—as a deity, ஐந்தொழில்செய்ய. The direct object of this work is fancied to be; 1. To cleanse the soul from its moral defilements. 2. To cause it to experience the fruit of former actions. 3. To give it a temporary rest. 4. To produce an equilibrium between the good and evil actions of the soul. 5. To emancipate it from the பாசம் entanglements. (சிவ. சி.) 2. To perform works, rites, &c., சடங்குசெய்ய. 3. To perform the duties of one's calling, தொழில்செய்ய. 4. To perform the funeral rites for a deceased ancestor, உத்தரகிரியைசெய்ய.

பஞ்சகிருத்தியம், *s.* The five operations of deity under various names, forms and modifications, viz.: 1st. சிருட்டி or படைத்தல், the work of creating or transforming matter, evolving it from the primitive Maya, producing worlds, furnishing the soul with its appropriate body, according to its actions in a previous birth, &c. In the popular system, this office is ascribed to Brahma. 2d. திதி or காத்தல், the work of preserving, usually ascribed to Vishnu. 3d. சங்காரம் or அழித்தல், the work of destroying, or of reducing the universe to the primitive Maya, through numerous involutions, —as earth into water, water into fire, &c. This office is ascribed to உருத்திரன், who by his worshippers is identified with Siva whom they consider supreme. 4th. திரோபவம் or மறைத்தல், the work of obscuration, or the veiling of the soul in moral darkness, and beclouding the understanding, so that the divine being cannot be perceived, while the mind attracted and illuded by visible and sensual objects, is excited to the performance of new actions, by which absolute liberation from பாசம் entanglements is prevented, and connection with Maya and its consequent transmigrations—except where the sanchita (சஞ்சிதம்) of former births is exhausted —is indefinitely prolonged. This is ascribed to மயேச்சுரன். 5th. அனுக்கிரகம் or அருளல், this is a work of benevolence as exerted for the benefit of the soul in furnishing it with appropriate bodies by which to expiate the guilt of former actions, though obscuring it with திரோபவம், while it is thus working itself clear, at length withdrawing the veil and showing it that all visible and sensual objects are illusory and deceptive; also annihilating the passions and exciting disgust toward the objects of sense, and utter indifference to all mundane affairs, and thus causing entire cessation from physical and moral actions, and maturing it for final emancipation, and union with the Supreme. It is ascribed to சதாசிவம்.

சமுசாரகிருத்தியம், *s.* Domestic affairs, household business.

*கிருத்திரிமம்—கிருத்திரமம், *s.* Scheme, deception, fraud, inveigling, வஞ்சனை. See கிருத்திமம்.

*கிருத்துவம்—கிறுத்துவம், *s.* Insolence, haughtiness, impudence, pride, செருக்கு. 2. Fierceness, cruelty, குரூரம். Wils. p. 258. Krudva.

*கிருபணம், *s.* Niggardliness, close-fistedness, avariciousness, உலோபம். Wils. p. 244. Krupan'a.

கிருபணத்துவம், *s.* Niggardliness, உலோபத்துவம்.

கிருபணன், *s.* A miser, a niggard, உலுத்தன்.

*கிருபன்—கிருபாசாரியன், *s.* A sage known as a teacher of archery, வில்லாசிரியன். Wils. p. 244. Krupa.

*கிருபாளு, *s.* A kind, benevolent person. Wils. p. 244. Krupalu. See under கிருபை.

*கிருபி, *s.* Wife of the sage துரோணன், துரோணன்மனைவி. Wils. p 244. Krupee.

கிருபிபுத்திரன், *s.* Asvathama, as the son of கிருபி.

*கிருபை, *s.* Grace, beneficence, benignity, mercy, kindness, compassion, benevolence, கருணை. Wils. p. 244. Krupa.

என்மீதில் கிருபையாயிருக்கிறீர்—என்னைக்கிருபையாகப்பார்க்கிறீர். He is gracious towards me.

கிருபாகடாட்சம், *s.* Benign or gracious looks; compassion, benevolence, கருணை.

கிருபாகரன், *s.* A man of universal benevolence; one who is the seat of mercy or grace, கிருபைக்கிருப்பிடமானோன்.

கிருபாசமுத்திரம், *s.* One who is a sea of grace, கிருபைக்கடல்.

கிருபாசனம், *s.* Mercy-seat; God—as the centre and seat of mercy and grace.

கிருபாநோக்கம், *s.* A gracious look—as that of the guru on his disciple in his official capacity, as a representative of the deity himself in human form, assumed for the purpose of dispelling the disciple's mental darkness, &c., கருணைநோக்கம்.

கிருபாமகத்துவம், *s.* The greatness of mercy.

கிருபாமூர்த்தி, *s.* He whose very shape is mercy, கிருபாசொரூபி. 2. The merciful God, கடவுள். 3. The god who has assumed a shape calculated for the exercise of mercy, கிருபையாலவதரித்தோன்.

கிருபாலு—கிருபாளு, *s.* A kind, compassionate, gracious person, கிருபையுடையவன். Wils. p. 244. Krupalu.

கிருபைக்கடல், *s.* A sea of mercy, கிருபாசமுத்திரம்.

கிருபைக்கண், *s.* A benign or merciful look, அருள்விழி.

கிருபைக்கிருப்பிடம், *s.* One celebrated for philanthropy and general benevolence; *lit.* the seat of grace.

கிருபைகூர—கிருபைசெய்ய—கிருபைபண்ண—கிருபைபுரிய, *inf.* To be gracious, compassionate, benign; to exercise favor or kind feelings.

*கிருமி, *s.* A worm, maggot, any of the class of vermes or animalcula, புழு. Wils. p 244. Krumi. 2 Canker, an eating or a spreading sore, அரிபுண்.

கிருமிக்குன்றம், *s.* A medicinal seed, வாலுளுவையரிசி.

கிருமிசத்துரு, *s.* An anthelmintic seed of the tree Butea frondosa, புரசம்விரை.

கிருமிச்சுரம், *s.* Worm-fever.

கிருமிச்சூலை, *s.* Gnawing pain occasioned by the intestinal worms, கிருமிநோய்.

கிருமிச்சொறி, *s.* Itch caused by worms.

கிருமிநாசம், *s.* Black henbane, குராசாணியோமம். 2. Seeds of Butea frondosa, பலாசவிரை. 3. Middle rib of a margosa leaf, வேப்பீர்க்கு. (*Rott.*) Other authorities say பேய்ப்பீர்க்கு, a bitter kind of wild பீர்க்கு, (*M. Dic.*) 4. Aristolochia bracteata, பங்கம்பாலை or பங்கம்பாளை.

கிருமிமலடு, *s.* Sterility from animalcula in the uterus. See மலடு.

கிருமியோமம், *s.* A Worm-medicine, ஓர்மருந்து, Sison.

கிருமிவைக்க, *inf.* To breed maggots—as a fly in a sore, புழுச்செனிப்பிக்க.

கிரேதாயுகம், *s.* [*prop.* கிருதயுகம்.] The first of the four yugas of the world.

கிரேதை, *s.* The first of the four yugas. (உள்ளமு.)

கிரேஸ்தன், *s.* [*a corruption of* கிரகஸ்தன்.] An honest man.

கிரேந்தி, *s.* Husk of cardamom, ஏலத்தோல். (*M. Dic.*)

கிரேனிடல், *v. noun.* [*prov.*] Starting, being panic-struck, standing aghast, அஞ்சியொடுங்கல்.

*கிலம், *s.* Smallness, littleness, a trifle, சிறுமை. 2. Ruin, waste, destruction, அழிவு. Wils. p. 274. Khila.

கிலி, *s.* Fear, fright, பயம்.

புலியடிக்குமுன்னே கிலியடிக்கும். Fear overtakes a person before the tiger attacks him; i. e. a person often becomes the prey of his own fears.

கிலிபிடிக்க—கிலிபிடித்திருக்க—கிலிபாய்க்கிடக்க, *inf.* To be frightened, alarmed.

கிலிமண்டல், *v. noun.* Being greatly frightened, கிலிபிடித்தல்.

கிலிகோலம்-கிலியம்பறை, *s.* [*prov.*] Slovenliness, disorder, confusion, அலங்கோலம்.

*கிலீபம், *s.* An impotent or imbecile person; a eunuch; a human being—and sometimes an animal—that is neither male nor female, பேடி. Wils p. 260. Kleeva.

கிலீபன், *s.* An impotent man.

கிலுகிலுக்க, *inf.* To rattle; to make a tinkling, crackling sound; to ring, கிலுகிலென்றொலிக்க.

கிலுகிலுப்பை, *s.* The name of a plant whose seeds rattle in the legumen, when ripe and dry, ஓர்செடி, Crotolaria labumifolia. *L.* 2. A kind of child's rattle, ஓர்விளையாட்டுக்கருவி.

கிலுகிலுப்பைக்குட்டான், *s.* [*prov.*] A child's basket-rattle.

வட்டக்கிலுகிலுப்பை—வெள்ளைக்கிலுகிலுப்பை, *s.* A species of the கிலுகிலுப்பை plant, Crotolaria verrucosa.

கிலுகிலெனல், *v. noun.* Rattling—as seeds, &c., ஒலிக்குறிப்பு 2. Sounding, buzzing—as flies swarming; swarming, collecting thick together—as maggots in a sore, crawling one over another, &c., தேனீமுதலியமூசல்.

ஈசல் கிலுகிலென்றெழும்புகின்றது. The winged white-ants are swarming, and flying up with a buzz.

சனங்கள் கிலுகிலென்றுவந்துவிழுந்தார்கள். The people thronged or flocked rapidly one after another.

கிலுக்கு, கிறேன், கிலுக்கினேன், வேன், கிலுக்க. *v. a.* To ring, to rattle, to chink, கிலுக்கச்செய்ய. 2. To ring a small bell, சிறுமணியாட்ட.

கிலுக்கு, *v. noun.* Rattling, tinkling, chinking, ஒலிக்கை. 2. *s.* A rattling stick of a school-boy, used on certain festival occasions in soliciting, with his school-mates, presents for his teacher, பள்ளிக்கூடப்பிள்ளைகளெடுக்கிறகிலுக்கு.

கிலுக்குத்தடி, *s.* A kind of staff with a rattle at the end, used by the mail-carriers and religious mendicants to give notice of their approach

வளையற்கிலுக்கு. The tinkle of bracelets.

கிலுங்கு, கிறது, கிலுங்கினது, கிலுங்கும், கிலுங்க, *v. n.* To tinkle, to ring, to chink, to rattle, ஒலிக்க.

கிலுங்கி, *s.* The கிலுகிலுப்பை plant.

கிலுந்நம், *s.* The wrist, மணிக்கட்டு. (*p.*)

கிலுமொலெனல், *v. noun.* Running in numbers, crowding, swarming—as vermin in the head, maggots in a carcass, &c., ஒலிக்குறிப்பு. 2. Buzzing, humming, வண்டுமுதலியனஇரைதல்.

*கிலேசம், *s.* Affliction, distress, sorrow, anguish, grief, வருத்தம். 2 Care, anxiety, trouble, perplexity, துன்பம். 3. Pain, *especially* pain of mind, நோ. 4. Fear, concern, apprehension, கவலை. Wils. p. 260. Klesa.

அன்னவஸ்திரத்தைக்குறித்துக்கிலேசமற்றவன். One free from anxiety, as to food and clothing, being provided for.

கிலேசப்பட, *inf.* To be distressed, afflicted, to grieve.

கிலேசமாயிருக்க, *inf.* To be sorrowful, to be aggrieved, to be tormented.

மனக்கிலேசம், *s.* Despondency, dejection of spirit.

கிலேசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*vul.*] To regret, to sorrow, to despond, to despair, துன்பப்பட.

கில்லம், *s.* Neck, கழுத்து. (பிங்.)

கிழக்கன்—கிழக்கா—கிழக்கி—கிழங்கான், *s.* [*prov.*] A kind of fish, Indian whiting, ஓர்மீன்.

கிழக்கு, *s.* Downward, the lower side, கீழ். 2. East, கிழக்குத்திசை—*Note.* The east and south are deemed lower than the other regions.

கிழக்கத்திக்காற்று, *s.* (*local.*) East wind.

கிழக்கத்திமழை, *s.* (*local.*) Rain from the east.

கிழக்கத்தியான், *s.* [*vul.*] A man of the east.

கிழக்குமுகம், *s.* Fronting the east—as temples are usually built.

கிழக்குவெளுக்க—கிழக்குவெளிக்க, *inf.* To dawn—as the light of the morning.

கிழங்கு, *s.* An esculent or other thick root—as a young palmyra-root, parsnip, turnip, yam, potatoe, &c., கந்தம். The varieties of yams are. இரத்தவள்ளிக்கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, சிறுகிழங்கு, முள்ளங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, &c.

அறுகங்கிழங்கு, *s.* The root of the அறுகு grass.

கோரைக்கிழங்கு, *s.* The root of the கோரை grass.

சிறுகிழங்கு, *s.* The காமனை plant.

பெருங்கிழங்கு, *s.* The இசுரவேர் plant.

கிழமை, *s.* Propriety, right, the appertaining of duties to individuals, உரிமை. 2. Relation, connexion, alliance, சம்பந்தம். 3. Duty, obligation, கடமை. 4. Quality, property, attribute, குணம். 5. Excellence, eminence, dignity, மாட்சிமை. 6. [*in gram.*] Possession, ownership, relation of one thing to another, as denoted by the possessive case or the local ablative. The relation is of two kinds; தற்கிழமை, that between a whole and its parts or attributes—as in தலைமயிர் and ஆட்டுக்கால்; and பிறிதின்கிழமை, that between different things—as in மலையாடு, அவன்வீடு. 7. A day of the week, வாரத்திலொருநாள். 8. A week, வாரம்.

கிழமைபடவாழ். Live so as to be useful.

கிழத்தி, *s.* A mistress, a lady, தலைவி. 2. A lady in an agricultural district, மருதநிலத்தலைவி. 3. A woman who belongs to or is peculiarly adapted to—as in காமக்கிழத்தி, சொல்லின்கிழத்தி, பாலைக்கிழத்தி, மனைக்கிழத்தி.

கிழமைக்குக்கிழமை. From week to week, weekly.

கிழமைதோறும். Weekly, every week.

கிழமைச்சூனியம், *s.* [*in astrol.*] An inauspicious, unpropitious day when the moon is in a nacshatra, unfavorable to that day of the week.

கிழமைபிறந்தநாள், *s.* [*in astrol.*] The lunar day peculiarly related to a given day of the week; *lit.* the lunar day on which the day of the week is born.

கிழமைவட்டம், *s.* A week.

கிழவர், *s.* (*pl. of* கிழவன்.) Proprietors, relations, &c., உரியோர். See கிழவன் under கிழம், *infra.*

கிழவன், *s.* (*fem.* கிழத்தி.) One who has a natural right, an owner, a proprietor, one to whom a person, a thing or an action belongs, உரியோன். 2. A lord, a master, தலைவன். 3. A husband, கணவன். 4 The ruler of agricultural districts, மருதநிலத்தலைவன். See under கிழம். *infra.*

ஞாயிற்றுக்கிழமை, *s.* Sunday.

பெருங்கிழமை, *s.* Entire or sole right, absolute title, prerogative, முழுவுரிமை. 2. Being connected or related in all possible ways, close friendship, intimacy or familiarity, சிநேயம்.

கிழமை—கிழம், *s.* Oldness, senility, decrepitude, old age, கிழத்தனம்.

இந்தமாடுமிகுந்தகிழம். This is a very old ox.

கிழக்கதை, *s.* Old stories. 2. The chattering of old people, கிழவர்வார்த்தை.

கிழக்குதிரை, *s.* An old horse.

கிழக்கோலம். The appearance or marks of age.

கிழடு, *s.* [*vul.*] An old thing, commonly said of animals, trees, and contemptuously of a person, வயதுமுதிர்ந்தது.

கிழடன், *s.* An old man; an old chap, in contempt.

கிழட்டுப்பசு, *s.* An old cow.

கிழத்தனம், *s.* Old age; manners or habits of old people.

கிழப்பிணம், *s.* An old fellow, in contempt; a living carcass.

கிழமாடு, *s.* An old ox or cow.

கிழவன், *s.* (*pl.* கிழவர்.) An old man, an aged man, மூப்புடையோன். 2. The second of the twenty-seven lunar asterisms or nacshatras, or the day during which the moon is in the nacshatra, பரணி.

குடுகுடுகிழவன், *s.* A very old man.

கிழவி, *s.* An old woman, மூப்புடையவள்.

கிழவிக்கிழங்கு, *s.* [*prov.*] The previous year's root (esculent, &c.), old and useless; from which others have sprung, பழையகிழங்கு.

கிழவிமஞ்சள், *s.* [*prov.*] Old turmeric root of the previous year, பழமையான மஞ்சள்.

வன்கிழம்—வனுகிழம், *s.* A very old person, animal or thing, in contempt.

கிழலை, *s.* [*prov.*] Quarter, part, region, திசை. 2. The lower or lee side of a vessel, the side on which the sail is hoisted, leeward, மரக்கலத்தின்சாய்வுப்பக்கம்.

இந்தக்கிழலையிலவனைக்காணவில்லை. He is not to be found hereabout.

கிழவி, *s.* The முருங்கை tree, Hyperanthera. *Vahl.* See under கிழமை.

கிழாத்தி, *s.* [*prov.*] A kind of fish, ஓர்மீன்.

கிழார், *s.* A basket for irrigation, இறைகூடை. 2. Hydraulic machinery, சலசூத்திரம். 3. A garden, தோட்டம்.

கிழாலை, *s.* [*prov.*] A hard kind of earth, sometimes removed to improve softer soils, களர்நிலம்.

கிழான், *s.* The owner, proprietor; the title of a headman in certain villages—as அம்பர்கிழான், உச்சிக்கிழான்; உரியோன். 2. The sun, சூரியன். 3. (சத.) Curds, தயிர்.

கிழி, *s.* A line—as drawn on the ground, paper, &c., கீற்று. 2. A shred, a piece torn off, கிழிந்ததுண்டு. 3. A strip of cloth tied round the waist of mendicants, a mendicant's girdle, கோவணம். 4. A prize, reward, or treasure tied up in a cloth and exposed to public view to invite competition in any work of skill, கிழிப்பொதி. 5. Ears of corn tied into a small bunch, or otherwise, and suspended in some conspicuous place of a temple as the first-fruit of the crop, புதிர்க்கிழி. 6. A picture, எழுதபடம்.

கிழிகட்ட, *inf.* To hang up a prize, to lay down a reward.

கிழிக்கட்டு, *s.* Prize, treasure, sacred ashes, &c., tied in a strip of cloth.

உலவாக்கிழி, *s.* Inexhaustible treasure. (*p.*)

கிழிதீட்ட, *inf.* To draw a picture. (*p.*)

கிழி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To part, to be slit, rent in shreds, or torn; to be parted—as land by ploughing, &c., துண்டாகக்கிழிய. 2. To part asunder, to separate, இரண்டாகக்கிழிய. 3. To be defeated, to be disappointed, to meet with ill success, to come to nothing, வாயாதகெட.

காரியங்கிழிந்துபோயிற்று — கிழிகிழிந்துபோயிற்று.... The affair is come to nothing. 2. He turns out to be nothing.

அவன்கிழிந்தான். He is disconcerted; i. e. can do nothing. (*Abusive.*)

கிழிந்துபோக, *inf.* To be rent or torn; to go in pieces.

கிழிவு, *v. noun.* A rent, tear, laceration, கிழிதல். 2. Failure; incompetency, ill success, dwindling away, வாயாமை. (The word is sometimes synonymous with இழிவு.)

கிழியல், *v. noun.* Tearing, கிழிவு. 2. *s.* A thing torn; a tattered garment, &c., கிழிந்தசீலை. 3. A good-for-nothing fellow; a spiritless sluggard—in contempt, பயனற்றவன்.

கிழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To tear, to rend, to split, to slit, to shred, to tear to pieces, to rip up, to lacerate, கிழியச்செய்ய. 2. To divide, to cleave. இரண்டாகக்கிழிக்க. 3. To scratch with claws, thorns, &c., கொளுவிக்கிழிக்க. 4. To mark or delineate by indentation or paint, கோடுமுதலியகிழிக்க.

அவளைக்கிழிகிழியென்றுகிழித்துவிட்டான். She lacerated her with abuse.

கடைவாயைப்பிடித்துக்கிழி. Tear the corner of his mouth.

சிங்கத்தைக்கிழித்துப்போட்டான். He tore the lion in two.

பேய்கிழித்தவாயன். A man with a large mouth, one who reveals secrets; a babbler.

பேய்கிழித்தவாயாற்பேசிவிட்டேனே. Alas, I unwittingly revealed the matter.

அவர்கிழிக்கிறதைப்பார்ப்போம். We will see whether he does it or not. (*Low usage.*)

கிழித்துப்போட, *inf.* To tear, to pull or rend in pieces, to lacerate.

கிழித்துமுடைந்தபாய், *s.* A mended mat.

கிழிப்பு, *v. noun.* Rending, tearing, ripping. கிழிக்கை.

கிழிமுறி, *s.* A mutilated indenture, bond, &c.

கிள, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To tell, say, mention, express, declare. சொல்ல. 2. *v. n.* To rise, to ascend, எழும்ப. In this sense, a change of the verb கிளர்.

கிளந்தபொருள்களுள் Among the particulars mentioned above.

கிளவி, *s.* A word, a term, மொழி. 2. [*in love poetry.*] A theme or subject, அகப்பொருட்டுறை.

கிளவிக்கொத்து, *s.* The subdivisions of a subject or theme.

கிளப்பு, *v. noun.* Saying, speech, மொழிகை.

கிளத்து, கிறேன், கிளத்தினேன், வேன், கிளத்த, *v. a.* To tell, to say, to speak—as கிள, சொல்ல.

கிளத்தி, *s.* Sarasvati—as presiding over words. See இசைமடந்தை.

கிளத்து, *s.* A word, saying, speech, மொழி.

கிளப்பு, கிறேன், கிளப்பினேன், வேன், கிளப்ப, *v. a.* To detach or raise up some heavy thing; to raise up one side of a thing; to disengage, to dislodge, to displace, எழுப்ப. 2. To dig up, to heave or lift up—பூமியின்கீழிருப்பதைக்கிளப்ப. 3. To excite, to induce fever, heat, &c., சரமுதலிய வற்றையெழுப்ப. 4. To rouse, animate, urge, ஏவிவிட. 5. To instigate, to rouse persons or things that are still, மூட்டிவிட. 6. To agitate, to discuss, கதைகிளப்ப. 7. [*prov.*] To raise a wall in building, to erect, to cause to grow higher, சுவர்முதலியகிளப்ப.

கிளப்பிவிட, *inf.* To excite, to instigate, to stir up.

கல்லுக்கிளப்ப, *inf.* To dig up stones.

காந்தியைக்கிளப்ப — காந்தலைக்கிளப்ப, *inf.* [*vul.*] To excite heat latent in the body—as by cold food, &c.

கொதியைக்கிளப்பிவிட, *inf.* [*vul.*] To excite heat, fever, &c., in the system. 2. To increase heat in the ground—as a slight shower, &c.

கோபத்தைக்கிளப்ப—எரிச்சலைக்கிளப்ப, *inf.* To stir up anger.

தலைகிளப்ப—தலையைக்கிளப்ப, *inf.* To look, to raise one's head; to lift up the head—as one sick, &c. 2. (*fig.*) To begin to signalize one's self.

பத்தியைக்கிளப்ப, *inf.* To excite devotion in one.

பேரைக்கிளப்ப, *inf.* To get a name, to promote one's celebrity, or notoriety; to make illustrious.

வாலைக்கிளப்ப, *inf.* To raise the tail,—as a dog, a calf, &c.

வாதபித்தசிலேட்டுமங்களைக்கிளப்ப, *inf.* To excite the three humors, வாதம், பித்தம் and சிலேட்டுமம் of the system.

கிளம்பு, கிறேன், கிளம்பினேன், வேன், கிளம்ப, *v. n.* To rise in the air or water, to ascend, to get up; to rise above the level, to emerge, to rise to the surface, எழும்ப. 2. To emerge from obscurity, to become illustrious, to rise to, or gain eminence; to prosper, to be elevated, மேலோங்க. 3. To grow up, வளர. 4. To be built up, சுவர்முதலியனகிளம்ப. 5. To be excited, agitated, roused, மூண்டெழும்ப. 6. To be enraged, exasperated, irritated, சினந்தெழும்ப. 7. To be raised upon one side, பக்கத்திற்கிளம்ப. 8. To turn up, to occur, to happen; to come up in sight, to appear; to come up in discourse, dispute, &c., உண்டாக. 9. To set out, to start, to leave for another place, புறப்பட. 10. To increase; to exceed, to surpass, to excel, மேலெழும்ப. 11. To become loose, detached—as a brick, &c., that still adheres; to scale off, to flake, to peel off—as mortar, &c., எபெட.

அவனுடையபேர்கிளம்பிற்று. His fame has spread abroad.

பயணக்கிளம்பினார்கள். They set out on a journey.

மணங்கிளம்பிற்று. Odor was diffused.

கிளம்பியாட, *inf.* To be stirred up with anger. 2. To act insubordinately, self-willedly, &c.

கிளம்பிவிட, *inf.* [*prov.*] To agree though reluctantly; to be ultimately persuaded. 2. To leave—as a family for another house, village, &c.

கிளம்பினஆள், *s.* A grown-up person.

கிளம்பினவேலை *s.* Bas-relief; work with figures somewhat raised. (*Rott.*)

கிளம்பல், *v. noun.* Rising. 2. *s.* [*prov.*] A register of additional and newly improved pieces of land, புதிதாய்ச்சேர்த்தநிலங்களின்அட்டவணை.

கிளர், *s.* Light, lustre, brightness, பிரகாசம். 2. Farina, pollen of flowers, பூந்தாது

கிளர், கிறேன், ந்தேன், வேன், கிளர, *v. n.* To rise, to ascend, to emerge, to rise to the surface or above the level, &c., மேலெழும்ப. 2. To grow up, to increase, to grow higher; to shoot out, மேலோங்க. 3 To be intense, copious, abundant, அதிகரிக்க. *(p.)* 4. To become vain, conceited, foppish, இறுமாப்புக்கொள்ள. 5 To be filled, to become full, satiate, complete, நிறைய. 6. To shine, glare, பிரகாசிக்க. 7. To be exalted, elevated, great, dignified, சிறக்க.

கடல்கிளர்ந்தது. The sea became boisterous.

குரல்கிளர்ந்தது. The voice rose higher, or became louder.

நிறங்கிளர்ந்தது. The color was conspicuous, glaring.

படைகிளர்ந்தது. The army is ready for an expedition.

கிளர்ச்சி, *v. noun.* Rising, ascent, மேலோங்குகை. 2. Growth, increase, விருத்தி. 3. Excitement, animation, உள்ளக்கிளர்ச்சி. 4. Fullness, satiety, நிறைவு. 5. Conceit, vanity, இறுமாப்பு.

கிளர்வு, *v. noun.* Rising, ascent, எழுச்சி. 2. Growth, increase, பெருக்கம். 3. Excitement, உள்ளக்கிளர்ச்சி.

கிளர்த்து, கிறேன், கிளர்த்தினேன், வேன், கிளர்த்த, *v. a.* To raise up; to excite, induce, எழுப்ப. 2. To fill, to satiate, நிறைக்க.

கிளவரி, *s.* A shrub, தண்ணீர்விட்டான்கிழங்கு, Asparagus. (*M. Dic.*)

கிளறு, கிறேன், கிளறினேன், வேன், கிளற, *v. a.* [*vul. sometimes,* கிளர்.] To stir up, to poke, to agitate, to scratch up, to dig up, to work up, கிண்ட. 2. To disturb, to derange, to disorder, to confuse, கலக்க. 3. To disclose, to expose, வெளியாக்க. 4. To probe, to try, to search, to pry out, கிண்டியாராய.

கிளறிவிட, *inf.* To stir up, to turn up, to agitate, to dig, or scratch up. 2. To disclose, to expose, to reveal what should have been kept secret.

கிளறிப்பார்க்க, *inf.* To search by digging up, overhauling, agitating, &c.; to ransack, to rummage, to fumble about. 2. To probe—as a wound; to pry out—as a thorn in one's heel.

கிளா, *s.* A shrub. See களா.

கிளாய், *s.* [*prov.*] The stalk, pods, &c., of rape, so called after thrashing.

கிளி, *s.* A parrot, a paroquet, கிள்ளை. 2. A grass-hopper, a locust, வெட்டுக்கிளி. 3. A parrot-fish, ஓர்மீன்.

கிளிகடிகருவி—கிளிகடிகோல், *s.* A sling to scare away parrots, தட்டை.

கிளிக்கூடு, *s.* A cage for parrots. 2. A cage with spikes pointed inside, for torturing criminals.

கிளிப்பிள்ளை, *s.* A parrot. See கிளி.

கிளிமூக்கு, *s.* A parrot's beak, or any thing resembling it. 2. A piece of the rib of an ola, on an ola book, to keep the leaves together, when strung.

கிளிமொழி, *s.* Lisping or prattling like a parrot. 2. [*metaphor.*] A lady with a lisping, mincing and affected manner of speech, intended to be graceful and charming.

கருங்கிளி, *s.* A black parrot.

பச்சைக்கிளி—பசுங்கிளி—பைங்கிளி, *s.* Green parrot.

பஞ்சவன்னக்கிளி, *s.* A parrot of five colors, considered a superior kind.

வெள்ளைக்கிளி, *s.* White parrot.

கிளிப்பூச்சி, *s.* A grass-hopper.

இலைக்கிளி, *s.* Leaf-winged locust, Mortis.

தத்துக்கிளி, *s.* A locust.

தவிட்டுக்கிளி, *s.* A small locust, Attilabus.

பச்சைக்கிளி, *s.* A green locust.

மழைக்கிளி, *s.* Locust appearing before the rains, M. imbrifera.

வெட்டுக்கிளி—வெட்டாங்கிளி, *s.* A large locust.

கிளிமீன், *s.* A kind of fish, a parrot-fish.

கிளிக்கொம்பு, *s.* A short and crooked horn like a parrot's beak.

கிளிக்கொம்பன், *s.* An ox whose horns are short and turned downwards.

கிளிச்சிறை, *s.* One of the four kinds of gold resembling, in color, the parrot's wing, ஓர்வகைப்பொன்.

கிளிமூக்கன், *s.* One with an aquiline nose.

கிளிமூக்குக்கிழங்கு, *s.* The root of the ஆகாசகருடன் creeper, ஆகாசகருடன்கிழங்கு.

கிளிமூக்குமாங்காய், *s.* A mango with the bottom end a little bent.

கிளிமூக்கெழுத்தாணி, *s.* A style with a hooked knife at top, for cutting olas.

கிளித்தட்டு, *s.* [*prov.*] A kind of jumping play, with squares formed on the ground, ஓர்விளையாட்டு.

கிளித்தட்டுப்பாய்தல், *v. noun.* Playing at the game of கிளித்தட்டு.

நடுக்கிளி, *s.* A person standing in the square to defend it.

பக்கத்துக்கிளி, *s.* The person who passes through the squares.

கிளிஞ்சில், *s.* A bivalve, a mussel—the fish or shell.

கிளிஞ்சிற்சுண்ணம் — கிளிஞ்சிற்சுண்ணாம்பு, *s.* Lime made of shells; shell-lime.

ஓலைக்கிளிஞ்சில், *s.* Flat conch, like a palm leaf.

சூரிக்கிளிஞ்சில், *s.* A species of conch.

பல்லுக்கிளிஞ்சில், *s.* Dentated conch.

கிளியாறு—கிளிஞ்சிலாறு, *s.* A river south of Pondicherry. (*c.*)

கிளுகிளெனல், *v. noun.* Giggling, laughing, tittering, ஒலிக்குறிப்பு. 2. Thriving, growing rich, விருத்திக்குறிப்பு.

கிளுகிளென்றுசிரிக்க, *inf.* To laugh heartily, to chuckle.

கிளுகிளென்றுவளர, *inf.* To thrive well.

கிளுகிளென்றெரிய, *inf.* To blaze forth, flame.

கிளுவை, *s.* A kind of wild duck, a teal, ஓர்பறவை. 2. A kind of tree used in hedging, ஓர்மரம், Amyris spinosa. (*Nob.*) 3. A kind of fish, a small kind of eel, a grig, ஓர்மீன்.

செங்கிளுவை, *s.* A kind of wild duck with a reddish breast.

பெருங்கிளுவை, *s.* A large kind of கிளுவை tree.

முட்கிளுவை, *s.* A species of thorny கிளுவை tree.

வெண்கிளுவை, *s.* A species of thornless கிளுவை tree.

கிளை, *s.* Branching, ramification, branch, மாமுதலியவற்றின்கிளை 2. A bough, a sprig, a twig, a spray, a sprout, a shoot, a bud, தளிர். 3. Kindred, relations, line, family branches, சுற்றம். 4. A herd (of cattle), a flock, a horde, a shoal; a family, a race, a group, a class, a company, கூட்டம். 5. Bamboo, மூங்கில். 6. A mode of singing, ஓர்பண். 7. One of the musical tones modulated by the palate—the third in the gamut, கைக்கிளையென்னுமிசை. 8. One of the strings of the lute corresponding with the கைக்கிளை tone, யாழ்நரம்பு.

கிளைகிளையாய். In herds, flocks or groups.

கிளைகூட்ட, *inf.* To screech—as two or more ஆந்தை owls together.

கிளைக்கதை, *s.* One story branching out of another, a ramifying narrative; an episode.

கிளைவழி, *s.* Lineage, pedigree, உறவின்வழி. 2. A branching street, கொடிவழி.

கிளைநறுக்க, *inf.* To prune, to lop.

கிளைபுறப்பட, *inf.* To shoot forth—as a branch.

கிளைபோட—கிளைவிட, *inf.* To put forth twigs, branches, &c. 2. To ramify, to branch out.

நெடுங்கிளை, *s.* A straight branch.

பக்கக்கிளை, *s.* A by-shoot.

பொய்க்கிளை, *s.* [*prov.*] False sprouts for fruit in jack-trees.

மெய்க்கிளை, *s.* [*prov.*] Sprouts of genuine fruits in jack-trees.

கிளைஞர், *s.* (*pl.*) Relations, kindred, உறவோர். 2. Friends, companions, associates, தோழர். See under கிளை, *v. a.*

கிளைபெருக்க, *inf.* To be numerous, to multiply, ramify, increase, &c.—as a family.

கிளைமை, *s.* Relationship, உறவு. 2. Amity, friendship, சினேகம்.

கிளையார், *s.* Kindred, friends.

கிளைப்பெயர், *s.* [*in grammar.*] Names of a small class or division of men, or animals, as distinguished from குழூஉப்பெயர் and சாதிப்பெயர்—as in எயினர், hunting class; தமர், one's family circle.

கிளை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To wash rice for boiling, &c., அரிசிகளைய. 2. [*prov. impr. for* களைய.] To change or put off soiled and *especially* menstruous cloths, சேலைகளைய. 3. [*impr. for* களைய.] To root up herbage, trees, &c. 4. [*prov.*] To pry out—as a thorn from the flesh with a needle, &c., கிளற.

கிளை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To put forth twigs, branches, &c.; to ramify, to branch, மரக்கிளைகிளைக்க. 2. To multiply, to grow numerous, பெருக. 3. To ramify—as families, சுற்றம்பெருக. 4. To grow full of branches, கப்புக்கவருமாய்நிறைய.. 5. To grow thick or close—as the beard, boughs, herbage, grain, &c., நெருங்க.

அவர்கள்கிளைத்துவிட்டார்கள். They have become very numerous from that stock.

கிளைப்பு, *v. noun.* Branching, ramification.

கிளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To dig, to stir; to work up, to scratch up—as fowls; to root up—as pigs; to burrow—as rats; to excavate, கிண்ட.

மண்டிக்கிளைத்துவிடவேண்டும் The earth must be dug up around the plants.

கிளைஞர், s. (pl.) Inhabitants of agricultural districts; husbandmen, உழவர்.

கிள்ளி, s. The name of any of the ancient kings of the Chola dynasty; the princes of the Chola race, சோழன். 2. The name of a prince of the Chola race from whom his successors have been styled கிள்ளி.

கிள்ளு, கிறேன், கிள்ளினேன், வேன், கிள்ள, v. a. To pinch with the finger and thumb, the nails, &c., கையாற்கிள்ள. 2. To pinch off, to pluck, to nip, to pick—as a leaf, &c., இலைமுதலியகிள்ள. 3. To hold, take up, carry, &c.—as with the beak, the fingers and thumb, &c.; to take up a little, a pinch, &c., கொஞ்சமாயெடுக்க.

வயிறுகிள்ளுகிறது. I am pinched with hunger.

கிள்ளாக்கு, s. A bit of leaf, especially an ola given as a token of being sent by some superior, அதிகாரகுறி. 2. A note of hand, a bit of leaf, a token from a person in authority—as a passport, warrant, letter of introduction, &c., உத்தரச்சீட்டு.

கிள்ளாப்பிறாண்டு, s. [prov.] A kind of child's play, pinching, ஒர்விளையாட்டு. 2. (fig.) Want of attention to guests, at a feast; distribution to them in small quantities, அலட்சியம்.

கிள்ளாப்பிறாண்டுபண்ண, inf. To supply guests too sparingly. 2. To take sparingly at a feast from modesty, delicacy, &c. 3. To give stintingly in charity, &c.

கிள்ளிக்காட்ட, inf. To give a hint, a signal; also a summary, &c.; lit. a pinch.

கிள்ளிக்கொடுக்க, inf. To give a little from a great quantity. 2. To give but little, a pinch, &c.

கிள்ளித்தெளிக்கமாட்டான். (local.) He will not even give a jerk.

கிள்ளிப்பிடுங்க, inf. To pinch and pluck off.

கிள்ளிவிட, inf. To stir up; to excite, to instigate.

கிள்ளிவைக்க, inf. To set or take a little from a heap—as the small mnemonic heaps in measuring grain.

கிள்ளுகீரை, s. Greens plucked off from the root.

அவன்உனக்குக்கிள்ளுகீரையோ. Is he a mere youngster, that you may cuff him as you please?

கிள்ளுகீரைபண்ண, inf. To insult, to treat insultingly.

கிள்ளுகீரையாய்நினைத்துப்பேச, inf. To speak contemptibly.

கிள்ளு, v. noun. A pinch, a nip; a little piece of betel-leaf, tobacco, &c., கிள்ளப்பட்டதுண்டு. 2. A pinch in quantity, துணிக்கை.

கிள்ளுக்கிழியுமாய்ப்போகக்கடவது. May this become null and void; mutilated and cancelled.

கிள்ளை, s. A parrot, a paroquet, கிளி. 2. A black species of parrot, கருங்கிளி. 3. (சத.) A horse, குதிரை.

கிள்ளைவிடுதூது. A poem in which a lady, languishing under love, sends a parrot to her lover, as a messenger, தூதுப்பிரபந்தம்.

கிறுகிறுவெனல்-கிறுவுதல், v. noun. Calling—as a peacock, ஒலிக்குறிப்பு.

கிறுய், s. (local.) A green clod or sod.

கிறி, s. Way, path, வழி. 2. Falsehood, a lie, பொய். (சத.)

கிறிசு, s. (port.) A crooked kind of dagger, crease, உடைவாள். See கிரிசு.

கிறிச்சிடுதல், v. noun. Creaking—as new shoes, a wheel, an oil-mill, a door; sounding—as a watchman's rattle, &c., ஒலிக்குறிப்பு.

கிறிச்சான், s. [vul.] A watchman's rattle; also, a child's rattle, கிறிச்சக்கருவி.

கிறிச்சுச்செருப்பு, s. Creaking shoes.

கிறிச்சுத்தலையணை, s. A rustling pillow.

கிறிச்சுக்கிறிச்செனல், v. noun. Creaking.

கிறிஸ்துவம், s. Christianity. (Rott.)

கிறிஸ்தவன், s. A christian.

கிறு, part. A characteristic of the present tense—as in செய்கிறேன், நிகழ்காலவிடைநிலை.

கிறுகிறு, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be giddy, dizzy; to whirl, தலைகிறுகிறுக்க. 2. To be confounded, confused, disconcerted, தடுமாற.

அவன்கிறுகிறுத்துப்போனான். He was confounded.

கிறுகிறுப்பு, v. noun. Giddiness, dizziness, whirling of the head; momentary bewilderment, தலைச்சுழற்சி. 2. Pride, haughtiness, செருக்கு.

அவன்கிறுகிறுப்படங்கிற்று. His pride is brought down.

கிறுகிறெனல், v. noun. Being giddy, dizzy, கிறுகிறுப்பு. 2. Moving rapidly, விரைவுக்குறிப்பு.

தலைகிறுகிறென்றுசுற்றுகிறது. I am giddy, my head whirls.

கிறுகிறென்றுசுழல, inf. To whirl, to turn round rapidly: to feel giddy.

கிறுகிறென்றுவர, inf. To be seized with giddiness. 2. To come in a great hurry.

கிறுக்கு, s. Craziness, insanity, lunacy, eccentricity, பைத்தியம். 2. Self-importance, self-conceit, arrogance, அகம்பிரமம். See under the verb கிறுக்கு.

கிறுக்கன், s. An eccentric or insane man. 2. A self-conceited, arrogant fellow.

கிறுக்கு, கிறேன், கிறுக்கினேன், வேன், கிறுக்க, v. a. To efface, blot out, obliterate, cancel, கிறுக்கித்தள்ள. 2. To scribble, to write with an iron pen, to grave, எழுத.

இதைநெடுதிலெழுதில்லை கிறுக்கினான். He has not written this well, he has scribbled.

ஒருவரிகிறுக்கியனுப்பிவிடும். Drop a line to him; scribble a line to him.

கிறுக்கு, v. noun. Blotting, cancelling, obliteration, கிறுக்கித்தள்ளுகை. 2. A letter, character, or writing, எழுத்து.

கிறுக்காயிருக்க, inf. To be scribbled over.

கிறுக்கில்லாதவெழுத்து. A fair hand without any erasures.

கிறுக்கெழுத்து. Letters or writing crossed out; letters or writing in which alterations are made.

கிறுங்கல், v. noun. [vul.] Moving, stirring, shaking, அசைதல்.

அவன்சற்றுங்கிறுங்கவில்லை. He is not at all shaken.

கிறுசன், s. Saffron, குங்குமப்பூ, Crocus, L. 2. Turmeric, மஞ்சள், Curcuma, L. (M. Dic.)

கிறுது, s. Insolence. See கிருது.

கிறுதுவேதன், s. A creeping plant, பீர்க்கு, Cucumis, L.

கிற்பு, s. Action, act, performance, செய்கை. 2. (fig.) Bondage, restraint, அடிமைத்தனம். கிற்பு as an expletive particle, is sometimes in poetry united to a finite verb—as in கூறுகிற்பித்தான், he mentioned. (obsol.)

கிற்றல், v. noun. Being made or effected, செய்தல். 2. Being bound, confined, restrained, அடிமைத்திறமுறல்.—Note. கிற, கிற்பு, கிற்றல், கிறு, கின் and கின்று seem to be the surviving paronyms from some obsolete Tamil root, which, in sound and meaning, might have been equivalent to the Sanscrit Kru, to do: hence, நடக்கிறான் and நடக்கின்றான், mean "he does walk." கிற்பு and கிற்றல், as verbal nouns, and கிறு and கின், as particles, are now obsolete.

கிற்று, part. A poetic expletive—as in செற்றகிற்றில. (obsol.)

கினி, s. [prov.] Ill luck or affliction supposed to result from a malignant planet—commonly said of children and of women after child-birth, பீடை. A change of கிரகம்.

கினை, s. A cover to prevent the evaporation of minerals in calcination, கவசம். 2. A tree, விளா, Feronia. (Rox.) (M. Dic.)

கின், part. A poetic expletive—as in காண்கிற்பான், he will see. (obsol.)

கின்று, part. A characteristic of the present tense—as in செய்கின்று, நிகழ்காலவிடைநிலை. 2. A poetic expletive—as in உணர்கின்றனம், we shall think.

*கின்னம், s. Affliction, sorrow, distress, துன்பம். Wils. p. 274. Khinna.

*கின்னரம், s. A sweet-singing bird, probably the Canary bird, இசைப்பறவை. 2. The vina or Indian lute, commonly with two strings, யாழ். 3. A water-fowl in general, நீர்வாழ்பறவை. 4. An owl, the ஆந்தை.

கின்னரச்சுரை, s. A creeper bearing a kind of gourd whose shell is used for a calabash of the lute, சுரை.

கின்னரம்வாசிக்க-கின்னரங்கொட்ட, inf. To play on the lute.

*கின்னரர், s. Demigods attached to the retinue or service of Kuvéra; celestial choristers, having, with the human figure, the head of a horse, பதினெண்கணத்தொருவர். Wils. p. 221. Kinnara.

கின்னரர்பிரான்—கின்னரேசன், s. Kuvéra, the lord of Kinnaras, குபேரன். Wils. p. 221. Kinnaresa.

*கின்னரி, s. A two-stringed lute, கின்னரம்.

கின்னரிவாசிக்க, inf. To play upon the கின்னரி lute.

கின்னி, s. [also இலைக்கின்னி.] A large green locust, மலைக்கிளி.

கின்னிக்கோழி, s. Guinea hen. (c.)

கீ

கீ. A compound letter, க் and ஈ. 2. The screech of a parrot and the nestlings of some other birds, கிளிமுதலியவற்றின்குரல்.

கீக்கீயெனல், v. noun. Peeping—as chickens; chirping, பறவைப்பார்ப்பின்குரல். 2. Screeching, screaming—as parrots, கிளிகுரல்காட்டல்.

*கீசகம், s. A monkey, an ape, குரங்கு. Wils. p. 224. KEESAHA. 2. A bamboo, மூங்கில். Wils. p. 223. KEECHAKA. 3. A helmet, தலைச்சீரா, (சத.) incorrectly for சீசகம். Wils. p. 849. SEERSHAKA.

*கீசகன், s. A prince, son of Kékaya, ஓரரசன். Wils. p. 223. KEECHAKA.

கீசகநாடகம், s. [vul.] Irregularity; shameless, immodest, profligate behavior—as that of the prince கீசகன் towards திரௌபதை, ஒழுங்கின்மை.

கீசகநாடகம்பண்ண, inf. To behave immodestly.

கீசகாரி, s. A name of Bhíma as the destroyer of கீசகன்; [ex கீசகன், et அரி.]

கீசம்பறை—கீசறை, s. [prov. contraction of கீசகன்முறை.] Disorder, confusion, profanation, prostitution, violation, முறைகேடு.

கீசம்பறைகாரன், s. A disturber; a violater of decency, chastity, principle, &c.

கீச்சட்டிமாச்சட்டியெனல், v. noun. Bustling and contradicting in speech.

கீச்சான், s. A fish, ஓர்மீன். 2. A bird, ஓர்பறவை. 3. [vul. ex கீச்சு.] An infant, குழந்தை.

கீச்சி, s. [prov.] A necklace, commonly of black earthen beads, பாசிமணி.

கீச்சு, s. The chirping of birds, புள்ளொலி. 2. The whining of infants, கீச்சமுகை.

கீச்சிட, inf. To chirp—as birds, lizards, monkeys; to twitter; to speak or call with a shrill sound; to squeak, to cry—as an infant, to scream, கீசென்றுகத்த.

கீச்சுக்குரல், s. A shrill voice, a feminine or childish voice, மெல்லியகுரல்.

கீச்சுக்குரலாய்ப்பேச, inf. To squeak, to speak in a shrill voice.

கீச்சுக்கீச்சுத்தம்பலம், s. [prop. கூச்சுக்கூச்சுத்தம்பலம்.] A kind of play among children, ஓர்விளையாட்டு.

கீச்சுத்தாரா, s. [vul.] A kind of wild duck or teal, ஓர்தாரா.

கீச்சுமாச்செனல்—கீச்சுமூச்செனல், v. noun. Buzzing, squalling, being noisy—as a house full of children, a hen and her brood, &c., கூக்குரலிடல்.

கீச்சுக்கிட்டம், s. [prov.] Scoria of iron, iron-dross, இரும்புக்கிட்டம்.

கீடமாரி, s. A plant, சிறுபுள்ளடி, Hedysaium, L.

*கீடம், s. A worm, maggot, any of the vermes species, animalcula, புழு. 2. An insect that makes itself an earthen house, வண்டு. 3. An insect, a fly, a beetle, &c., கோற்புழு. (சத.) Wils. p. 223. KEETA.

*கீணம்—க்ஷீணம், s. Defect, flaw, injury, ruin, damage, சிதைவு. 2. adj. கீண. Wasted, destroyed, spent, expired, கேடு. Wils. p. 264. KSHEEN'A.

கீணமாக, inf. To become extinct, exhausted; to be laid waste, desolate.

அந்தப்புண்ணியங்கீணமானபின்பு. When the virtue of those good deeds is all exhausted.

*கீணர்—க்ஷீணர், s. The poor, the miserable, வறியர். Wils. p. 264. KSHEEN'A.

கீணர், s. (from கீழ்நர்.) Mean, low people; the vulgar, கீழோர். See under கீழ்.

*கீதம், s. Song, singing, chant, hymn, sacred rehearsal in praise of a deity, இசைப்பாட்டு. Wils. p. 290. GEETA. 2. A beetle, a bee, வண்டு. 3. Melody, music, இசை.

ஒவ்வொருராகத்துக்குஒவ்வொருகீதமிருக்கிறது. To each tune there is a corresponding hymn or song. Each hymn or song has its proper tune.

கீதசாத்திரம், s. Science of music—as சங்கீதசாத்திரம்.

கீதப்பாட்டு, s. A melodious song, a hymn.

கீதம்பாட—கீதம்வாசிக்க, inf. To sing a hymn, a song, &c.; to chant.

கீதவாத்தியம், s. Vocal and instrumental music, கீதமும்வாத்தியமும்.

கீதவேதம், s. The Sáma or third Véda, the prayers of which are composed in metre and always chanted, சாமவேதம்.

கீதாரி, s. A cowherd, இடையன்.

*கீதி, s. Singing, chanting, கீதம். 2. Singer, கீதம்பாடுவோன். Wils. p. 290. GEETI.

*கீதை, s. Song, பாட்டு. (சது.) 2. A name common to several poetic compositions of praise to the gods—as அவதூதகீதை, உத்தரகீதை, சிவகீதை, பகவற்கீதை, பிரமகீதை, சிபுகீதை. Wils. p. 290. GEETA.

கீயாக்கணக்கு, s. The table of compound letters in Sanscrit, கிரந்தவிணையெழுத்தின்வர்க்கம்.

*கீரம், s. A parrot, a paroquet, கிளி. Wils. p. 223. KEERA. 2. A black species of parrot, கருங்கிளி. (p.) 3. Milk, பால். Wils. p. 264. KSHEERA.

*கீரன், s. The name of an eminent poet of the ancient Tamil college at Madura, நக்கீரன்; [ex கீர், speech.]

கீரி—கீரிப்பிள்ளை, s. A mungoose, the ichneumon, நகுலம், Viverra ichneumon.

கீரியும்பாம்பும்போலே இருக்கிறார்கள். They are like the mungoose and the snake.

கீரிப்பல் s. Very fine little teeth, அழகியசிறுபல்.

கீரிப்பாம்பு—கீரிப்பூச்சி, s. A species of intestinal worms, Lumbricus, வயிற்றிலுள்ள ஓர்வகைப்புழு.

கீரிப்பூடு, s. A plant, Ophiorrhiza, Mungo.

கீரிமரம், s. A tree, Lythrum pemphis.

கீரி, s. The கள்ளி, a milky shrub.

கீரை, s. Pot-herbs, greens, vegetables, இலைக்கறி.

கீரைத்தண்டு, s. The stalk of greens.

கீரைப்பாம்பு—கீரைப்பூச்சி, s. [prov.] An intestinal worm, நாக்குப்பூச்சி, Lumbrioides.

அரிகீரை—அறைக்கீரை, s. Greens which sprout again after being cut, Amaranthus tristis, L.

இளங்கீரை, s. Young greens, முளைக்கீரை.

எலிச்செவிக்கீரை, s. A species of greens.

கலவைக்கீரை, s. Sundry pot-herbs or greens mixed together.

குப்பைக்கீரை, s. Amaranthus polystachyus, L.

குமட்டிக்கீரை, s. A kind of greens, Celosia nodiflora, L.

கோழிக்கீரை, s. A plant, Portulacca, L.

சகலாத்துக்கீரை, s. Sorrel.

சிறுகீரை, s. Small greens, Amaranthus gangeticus, L.

செங்கீரை, s. Red greens. 2. [in பிள்ளைத்தமிழ் poem.] Voluntary exertion of a child to crawl about. See பிள்ளைத்தமிழ்.

தண்டங்கீரை, s. Species of greens with large stalks.

துடுப்புக்கீரை, s. Cleome monophylla, L.

பருப்புக்கீரை, s. Chenopodium albnm, L.

பறட்டைக்கீரை, s. Justicia madnrensis, L.

பனங்கீரை, s. [corruption of பண்ணைக்கீரை.] A species of greens.

பிண்ணாக்குக்கீரை, s. Melochia corchorifolia, L.

புளிச்சாக்கீரை-காய்ச்சுளைக்கீரை, s. A plant, Hibiscus cannabinus.

பெருங்கீரை, s. A species of greens.

மான்கீரை, s. Amaranthus augustifolius, L.

முடிக்கீரை — முளைக்கீரை, s, Greens, pot-herbs, especially when they are young or tender.

முட்கீரை — முள்ளங்கீரை — முள்ளிக்கீரை — முள்ளுக்கீரை, s. Prickly greens, Amaranthus spinosns.

வள்ளைக்கீரை, s. A species of greens.

விழுதிக்கீரை, s. Cleome fruticosa.

அகத்திக்கீரை — ஆரைக்கீரை — குறிஞ்சாக்கீரை — சாரணத்திக்கீரை — சொக்காக்கீரை— தம்பைக்கீரை—தைவேளைக்கீரை— தொய்யிற்கீரை— நெருஞ்சிக்கீரை — முருங்கைக்கீரை, are varieties of leaves used as vegetable food.

கீரைக்காய், s. [*local.*] A kind of cucumber.

கீரைக்குத்தண்ணீரிறைத்தல், *v. noun.* Swinging a child by the arms and legs, in imitation of throwing water for irrigation, ஓர்விளையாட்டு.

கீரைநார்ப்பட்டு, s. [*vul.*] A kind of silk, sometimes worn during the performance of religious duties, ஓர்பட்டு.

கீரோமாரோவெனல், *v. noun.* [*prov.*] Screaming, squalling—as children or young people, பிள்ளைகள்கூக்குரலிடல்.

•கீர், s. Word, speech, சொல். (திவா.) Wils. p. 289. Gir.

கீரன், s. A poet. See கீரன், *supra.*

குறுக்குச்சூத்திரம், *s.* A formula, theorem or rule expressing the shortest method of performing a calculation, &c.; a brief, comprehensive rule.

குறுக்கேமடக்க, *inf.* [*prov.*] To confute or refute at once; to stop one's mouth by short answer.

குறுக்கேமுறிக்க, *inf.* To break into two. 2. To break off in the midst of a business; to leave a work unfinished. 3. To leave a company in displeasure.

குறுக்கேவிழ—குறுக்கேவர, *inf.* To interfere, intermeddle.

குறுக்கு, கிறேன, குறுக்கினேன், வேன், குறுக்க, *v. a.* To shorten, curtail, reduce, contract, lessen retrench, குறைக்க. 2. To abbreviate, abridge, epitomize, abstract, சுருக்க.

கையைக்குறுக்க, *inf.* To retrench expenses 2. To be close-handed; to give sparingly.

குறுக்கல், *v. noun.* [*in gram.*] Shortening, contraction—as of a long letter.

குறுக்கையர், *s.* The name of a celebrated devotee, who belonged to a certain division of the வெள்ளாளர் caste, திருநாவுக்கரசர்.

குறுங்குடியாள், *s.* Orpiment, தாளகம்.

குறுணி, *s.* A nominal dry-measure, in quantity equal to the மரக்கால்.

பானையிலே பதக்கு நெல்லிருந்தால் மூலையிலே மூகுறுணித்தெய்வம் கூத்தாடும். It there be in a pot two குறுணி of paddy, three குறுணி of gods will be dancing in the corners of the house, said of those who spend at once what they have, in the temples, &c., and afterwards suffer want.

குறுதல், *v. noun.* [*this word is little used excepting in the subjunctive and participles.*] Cutting off—as in reaping, cropping, plucking, &c., கொய்தல். 2. Beating, bruising, pounding, குற்றல். (*p.*) *Obsol.*

கோலாற்கூடிக்குறுதும். Though we drive and beat with a rod. (கலித்.)

குற்றபாகுகொய்ப்பவர். Those who cull the plucked betel-nuts. (இரகு.)

குறுமை, *s.* Shortness; littleness, brevity, conciseness, succinctness, சுருக்கம். 2. Dwarfishness, low stature, குறுகுகை 3. Defectiveness, imperfection, சிறுமை. 4. (*fig.*) Sin, evil, பாவம். The final மை is dropped to form adjectives.

உக்குறுமை, *s.* [*in gram.*] Short உ.

குறுங்கணக்கு, *s.* Simple letters in the Tamil alphabet, the twelve vowels and the eighteen consonants—opposed to நெடுங்கணக்கு.

குறுங்கண, *s.* A kind of lattice; a window; *lit.* little apertures, பலகணி.

குறுங்காடு, *s.* A thicket, a small forest or jungle, a copse, underwood.

குறுங்கொள்ளி, *s.* [*improperly* குறங்கொள்ளி.] A brand almost consumed.

குறுங்கோல், *s.* A rod of two cubits long, இரண்டுமுழஅளவுகோல்.

குறுஞ்சிரிப்பு—குறுநகை, *s.* [*vul.* குஞ்சிரிப்பு.] A smile, simper, smirk.

குறுஞ்சுனை, *s.* Small pools, wells, &c., in hilly regions.

குறுமாக்கள், *s.* Children, youngsters, சிறுவர்; [*ex* மாக்கள், men.]

குறுநிலமன்னர், *s.* Petty tributary chiefs of the Kurumba people, சிற்றரசர்.

குறும்பொறை, *s.* A hill, சிறுமலை. 2. A mountain, மலை. 3. A forest, jungle, காடு. 4. (*சூ.*) A town in a hilly tract, குறிஞ்சிநிலத்தூர்.

குறும்பொறைநாடன், *s.* A chief of a forest district.

குறுவெளிப்பு, *v. noun.* [*prov.*] Affected motion of the body.

குறுநொய்—குறுணல், *s.* Broken rice, bruised grain, grit.

குறுந்தடி, *s.* A short stick. 2. A drum stick.

குறுந்தறி, *s.* A stake, குறுந்தடி. 2. Blocks built in a wall to support timbers, சுவர்த்தறி. 3. The ornamental capital of a column or pillar, போதிகை.

குறுங்கலி, *s.* A kind of lute, common in forest tracts, பாலையாழ்த்திறம். 2. A poem in which a lady reproaches her lover or husband for deserting her, ஓர்வகைச்செய்யுள்.

குறுங்கற்றலை, *s.* A fish, ஓர்மீன்.

குறுந்துளசி—குறுந்துழாய், *s.* The சிறுதுளசி plant See துளசி.

குறுந்தேங்காய், *s.* A fruit resembling a cocoanut, cast on shore from the ocean. See கடற்தேங்காய்.

குறுந்தொட்டி, *s.* The சிறுகாஞ்சொறி plant, Hemp-leaved tragia.

குறுமீன், *s.* The name of a fish.

குறிது—குறியது, *s.* A short thing, a low or dwarfish creature. *little used.*

குறியர், (*plu. of* குறியன்) *s.* Dwarfs—opposed to நெடியர்.

குறுமுனி, *s.* A name of Agastya; *lit.* the dwarfish sage.

குற்றுடைவாள், *s.* A cimeter, a short dagger for stabbing an enemy, சிறுவாள்.

குறுவாழ்க்கை, *s.* Poverty, தரித்திரம். 2. Short-lived pleasure. (*p.*)

குறுவிசனம்—குறுவிசாரம், *s.* A gloomy state of mind, melancholy; calamity.

குறுவிலை, *s.* Scarcity, அருவிலை.

குறுவிழிவிழிக்க, *inf.* [*com.* குறுவிழிக்க.] To stare; to look ... through anger, fear, &c.

குறுவேர்வை, *s.* A sudden, slight perspiration through diffidence, fear, &c.

குற்றேவல், *s.* A slight commission; a trifling job, low employment, servility, drudgery, menial service.

குற்றுயிர், *s.* Half dead; *lit.* half alive, குறைப்பிராணன். 2. [*in grom.*] A short vowel—as அ, இ, உ, எ, and ஒ.

குற்றுய்தம், *s.* [*in gram.*] A contracted sound of the letter ஃ. See ஆய்தக்குறுக்கம்.

குற்றிசை, *s.* Short metre in விருத்தம் verses—opposed to நெட்டிசை.

குற்றியலிகரம், *s.* The letter இ, shortened in its quantity, இகரக்குறுக்கம்.

குற்றியலுகரம்—குற்றுகரம், *s.* The letter உ shortened, உகரக்குறுக்கம்.

குற்றெழுத்து, *s.* A short letter, குறில்.

குற்றொற்று, *s.* A short letter followed by a mute consonant—as வெல், கல்.

குறுமுட்டு, *s.* [*local.*] Gross insolence, impertinence, மதிப்பின்மை. 2. Great urgency—as when business has been put off to the last moment, நெருக்கம். 3. Being straitened—as in a narrow room, &c., நெருக்கம். 4. Pressing or holding one to a thing, using coercion, வலாத்காரமாய்க்கேட்கை. 5. A sudden encounter—as at a corner, &c., எதிர்ப்பிலெதிர்ப்படுகை; [*ex* குறுமை, *et* முட்டு.]

குறுமுட்டன், *s.* A person daringly insolent; a brute, a savage.

குறுமுட்டாய்ப்பிடிக்க, *inf.* To demand or press with continued urgency.

குறுமுட்டானவேலை, *s.* Work on a very small scale, with too little material.

குறும்பி, *s.* [*imp.* குறும்பை, குரும்பை.] Ear-wax, cerumen, காதுள்அழுக்கு.

குறும்பியெடுக்க—குறும்பிவாங்க, *inf.* To clean the ear of wax.

குறும்பிவாங்கி, *s.* An ear-pick

குறும்பு, *s.* Villages in desert tracts, பாலைநிலத்தூர். 2. Battle, fighting war, போர். 3 A stronghold, a fort, அரண்இருக்கை. 4. A class of savages, supposed to form a part of the aborigines of Southern India, குறும்பர். Those living in the forests and jungles were called காட்டுக்குறும்பு, and those in towns and strongholds நாட்டுக்குறும்பு. 5 Barbarity, savageness, stubbornness, insolence, wickedness, குறும்புத்தனம்.

குறும்பர், *s.* (*pl. of* குறும்பன், *sing.*) The people of the Kurumba class. 2. Petty chieftains of the Kurumba tribes, being often intruders upon the new settlers of Southern India, குறுநிலமன்னர். 3. Savages; the low and vile, கீழ்மக்கள். 4. (*Rott.*) A caste of shepherds who weave Indian blankets, குறும்பிடையர்.

குறும்பர்கோட்டம், *s.* The Kot'as or strongholds of the Kurumbas.

குறும்பாடு, *s.* A short, woolly kind of sheep, ஓர்வகைஆடு.

குறும்பாட்டஞ்செய்ய—குறும்பாட்டமாட, *inf.* To be wicked.

குறும்புத்தனம், *s.* Stubbornness, self-willedness, insolence, wickedness, mischief; the charateristics of the Kurumba people.

குறும்புவன்னியன், *s.* One of the பள்ளி tribe, ஓர்சாதியான்.

குறுாம்பூழ், *s.* A quail, காடை. Compare பூழ்.

குறுணைப்பட்டை, *s.* Paper, gilt with tinsel and used for ornament.

குறை, *s.* Deficiency, defalcation, imperfection; failure, ஊனம். 2. Indigence, poverty, destitution, தரித்திரம். 3. Request, petition, solicitation, வேண்டுகை. 4. Complement, balance, the part wanting, arrears, எஞ்சல். 5. Remainder, overplus, remnant, the rest, residue. மேலே. 6. Fault, defect, flaw, குற்றம். 7. Dissatisfaction, grievance, umbrage, வெறுப்பு. 8. Displeasure, indignation—as of a demon or deity, in consequence of accustomed offerings being withholden, தெய்வக்குறை. 9. Tribute; revenue, அரிறை. 10 [*in gram.*] Abscission, cutting off—as syncope, apocope, &c.; omission, suppression, சொல்லின்குறை.

அவனுக்கென்மேற்குறையுண்டு. He is displeased with me; he has a complaint against me.

இனியெனக்கென்னகுறை. What can I need more? 2. What defect is there in me now?

குறைகொள்ள—குறைபாவெண்ண. *inf.* To take a thing amiss, to feel aggrieved, to be piqued, to complain.

குறைகேள், *v. noun.* Solicitation, petition, mendicity, இரத்தல்.

குறைசொல்ல, *inf.* To complain, to state grievances, to utter complaints, to express dissatisfaction. 2. To reveal one's wants, குறைகூற. 3. To charge with fault; to censure, criticise; to blame.

குறைதீர, *inf.* To be supplied—as wants. 2. To be satisfied.

குறைதீர்க்க—குறையாற்ற குறைநீக்க, *inf.* To supply wants, to satisfy; to relieve necessities. 2. To pacify, appease. 3. To fulfil an obligation.

குறைமுடிக்க, *inf.* To grant requests. 2. To supply wants. 3. To take revenge.

குறையற, *inf.* To be supplied—as wants, &c. See குறைதீர.

குறையிரக்க, *inf.* To beg, supplicate, petition, விண்ணப்பஞ்செய்ய.

குறையின்மை, *s.* Completeness; perfection; faultlessness.

குறைநிறை, *s.* Domestic wants and comforts; defect or excess. 2. Deficiency—as towards a guest or in offerings to the deity, &c., often used in apology.

குறைபட, *inf.* To be wanting or missing, to diminish; to grow less, scarce, dear.

குறைப்பட்டுக்கொண்டிருக்கிறன். He is displeased.

குறைபாடு, *v. noun.* Deficiency, defect, ஈனம். 2. Want, lack, destitution, குறைவு. 3. Indigence, want, poverty, தரித்திரம்.

குறைப்பிராணனாய், *adv.* Half-dead—as குற்றுயிராய்.

குறைக்காரியம், *s.* The remainder—as of an affair, story, discourse, subject, business, &c.

குறைநாள், *s.* The remainder or part of the day. 2. The days wanting to complete a given period.

குறைப்பேர், *s.* The rest of the persons.

குறைப்பொழுது, *s.* The remainder of the day, or time.

குறைமாதம், *s.* Wanting in months—as premature delivery. 2. Deficiency in a month.

குறைமாதத்துப்பிள்ளை, *s.* A child of premature birth.

குறையுடல்—குறைத்தலை, *s.* A headless body, which is said sometimes to dance on the field of battle; trunks divested of heads.

குறைக்கொள்ளி, *s.* A brand partially consumed.

குறைச்சால், *s.* The balk in ploughing, உழவறுவிடம். See சால்.

குறைவயிறு, *s.* Stomach partially supplied; hunger not fully satisfied.

குறைவயிறுச்சாப்பிட்டேன். I ate sparingly.

குறைவேலை, *s.* An incomplete, unfinished work.

தலைக்குறை, *s.* [*in gram.*] Aphæresis—as மரை. for தாமரை. See under தலை.

இடைக்குறை, *s.* [*in gram.*] Syncope—as உரம், for உதரம். See under இடை.

கடைக்குறை, *s.* [*in gram.*] Apocope—as நீல for நீலம். See under கடை.

தெய்வக்குறை, *s.* God's displeasure.

மனக்குறை, *s.* Dissatisfaction, discontent, umbrage, regret, &c.

குறை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To diminish, decrease, lessen, abate, wane, shorten, dwindle, decline, சிறக. 2. To be reduced in numbers, value, circumstances; to be lowered in rank, estimation, கெட. 3. To be wanting, to prove insufficient, to lack, to be short in weight, measure, number, &c., to be scanty, எஞ்ச. 4. To be imperfect, incomplete, unfinished, defective, deficient, ஊனமாக. 5. [*in gram.*] To be cut off, dropped, omitted, suppressed, &c., சொற்குறைந்தவர. 6. To be scarce, dear, difficult of attainment, அருமையாயிருக்க.

குறைய, *inf.* To be insufficient, to be wanting.

ஏறக்குறைய, [*adverbially.*] Nearly, almost, about.

நடைகுறைந்துபோயிற்று. He now cannot walk much. 2. His influence is reduced. 3. The speed is reduced—as of horses, cattle, &c.

குறைந்தவிலை, *s.* A dear bargain; a high price. 2. A reduced price, a low price.

குறைந்தமரக்கால், *s.* A scant measure.

வயிறுகுறைய, *inf.* To be unsatisfied—as hunger.

குறைச்சல், *v. noun.* [*vul. for* குறைதல்.] Deficiency, dearness, poverty, displeasure, complaint, &c.

குறைச்சலல்ல. It is not dear.

குறைச்சலாய்க்கிடக்க, *inf.* To be dear, scarce, &c.

குறைச்சலாய்ப்பேச, *inf.* To speak ill of one.

செய்கைக்குறைச்சல், *s.* Misbehavior, misconduct.

மனக்குறைச்சல், *s.* Dissatisfaction, displeasure; grievance.

குறைவு, *v. noun.* Lack, deficiency, dearness, want, scarcity. 2. Indigency, necessity, poverty, தரித்திரம்.

குறைவறுக்க, *inf.* To make up a deficiency, to supply wants, to meet exigencies, &c.

குறைவானது. That which is defective.

குறை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To lessen, shorten, curtail, contract, deduct, சுருக்க. 2. To reduce one's circumstances, power, authority, &c., to cut off, crop; to cut or hew down, to fell, குறக்க, தறிக்க. 3. To destroy, அழிக்க.

குறைத்துக்கொடுக்க, *inf.* To reduce payment, to pay less than the expected or stipulated sum. 2. To supply insufficiently—as food, &c.

குறைத்துப்பரிமாற, *inf.* To provide or distribute food, &c on a reduced scale.

குறைத்துப்போட, *inf.* To diminish, curtail.

குறைத்துவர, *inf.* To continue to decrease.

வயிற்றைக்குறைக்க, *inf.* To live abstemiously, either to save money or from necessity. 2. To diminish the supplies of dependents, &c.

குறோட்டை, *s.* The காக்கணம் plant.

குற்குலு, *s.* A kind of resin, as குக்குலு.

*குற்சிதம், *s.* Abhorrence, loathing; contemptibleness, அருவருப்பு. Wils. p. 229. Kutsita.

*குற்சை, *s.* Abhorrence, loathing, disgust; one of the nine இரசம் or varieties of sentimental representation in poetry and dramatic action, நவரசத்திலொன்று. Wils. p. 228. Kutsai.

குற்பகம், *s.* Reed, நாணல். (*M. Dic.*)

*குற்பம், *s.* [*in anat.*] The ancle, பரடு. Wils. p. 294. Gulpha.

குற்றம், *s.* Fault; moral or physical imperfection, blemish, defect, deformity, பிழை. 2. Crime, misdemeanor, guilt, தீங்கு. 3. Impurity; ceremonial or moral defilement—as cause of offence to the deity, of blight to plants, &c., குதகம். 4. Reproach, stigma, charge, accusation, blame, குறை. 5. Amercement, mulct, fine, அபராதம். 6. (சது.) Sickness, நோய்.

முக்குற்றம், *s.* The three kinds of evil, incident to the soul in connexion with births, as darkening the understanding and leading to sin. 1. காமம், sexual desire, lust. 2. வெகுளி, anger. 3. மயக்கம், bewilderment, mental illusion.

யாக்கைக்குற்றம், *s.* The five defects of the body; 1. கொட்டாவி, yawning. 2. நெட்டை, snapping the joints. 3. குறட்டை, snoring. 4. கூன்கிடை, lying shrunk up. 5. தட்டுவீழல், nodding.

அஷ்டகுற்றம், *s.* The eight imperfections of creatures. 1. ஞானாவரணியம், ignorance, or want of wisdom. 2. தரிசனாவரணியம், defective perception. 3. வேதநீயம், comprehensibleness. 4. மோகநீயம், subjection to the passions. 5. ஆயு, age, limited duration. 6. நாமம், having a name or describableness. 7. கோத்திரம், parentage, descent. 8. அந்தராயம், liability to impediments and accidents. The opposite of these are peculiar to the deity. See எண்குணம் under குணம்.

நூற்குற்றம், *s.* The ten faults or defects in a literary composition. 1. குன்றக்கூறல், a partial statement—saying too little. 2. மிகைபடக்கூறல், redundancy—saying too much. 3. கூறியதுகூறல், tautology—repetition. 4. மாறுகொளக்கூறல், inconsistency—contradictory statements. 5. வழூஉச்சொற்புணர்த்தல், the employment of improper or inappropriate words and terms. 6. மயக்கவைத்தல், obscurity, mystification. 7. வெற்றெனத்தொடுத்தல், emptiness, barrenness. 8. மற்றொன்றுவிரித்தல், digression—introducing another subject. 9. சென்றுதேய்ந்திறுதல், gradual loss of vigor and tone. 10. நின்றுபயனின்மை, useless statements; verbosity; bombast.

இமைக்குற்றம் கண்ணுக்குத்தெரியாது. The eye does not see the defect of the eyelashes; i. e. one's own errors, and those of his family and friends, are unnoticed.

குற்றங்கடிய, *inf.* To avoid guilt.

குற்றங்களைய, *inf.* To free from errors.

குற்றங்காட்ட, *inf.* To expose faults.

குற்றங்காண, *inf.* To find fault. 2. To blame, to be blameable, &c.

குற்றஞ்சாட்ட — குற்றஞ்சுமத்த — குற்றப்படுத்த — குற்றமேற்ற, *inf.* To convict, charge with a fault or crime; to accuse.

அவன்மேற்குற்றஞ்சுமத்தது. He has been found guilty.

குற்றஞ்சாராதவன், *s.* An innocent man.

குற்றஞ்செய்ய—குற்றம்பண்ண, *inf.* To commit a fault; to perpetrate a crime; to do wrong, &c.

குற்றஞ்சொல்ல, *inf.* To accuse, criminate, blame, censure, charge with fault; to impeach. 2. To object, gainsay. 3. To criticize; to be hypercritical, censorious, captious; to expose faults.

குற்றத்தைமறைக்க, *inf.* To deny a crime; to hide a fault.

குற்றந்தீர்க்க — குற்றம்பரிகரிக்க, *inf.* To correct faults, to free from faults; to expurgate, exculpate, absolve.

குற்றந்தெரிக்க, *inf.* To exhibit faults; to criticize, to sift—as a literary production.

குற்றப்பட, *inf.* To be in fault; to be found guilty, criminal, blameable.

குற்றப்பாடு, *v. noun.* The state of being in fault; accusation, imputation.

குற்றம்பார்க்க — குற்றம்பிடிக்க, *inf.* To find fault, to be censorious.

குற்றம்பார்க்கிற்சுற்றமில்லை. Censoriousness destroys friendship.

குற்றமில்லான் — குற்றங்களில்லான், *s.* Argha—as an immaculate being, அருகன். 2. Any holy being; an innocent person.

குற்றமிறுக்க, *inf.* To pay a fine.

குற்றம்பாராட்ட, *inf.* To exaggerate one's faults; to magnify guilt; to dwell too much upon one's faults.

குற்றம்பொறுக்க, *inf.* To pardon, to forgive, to bear with faults.

குற்றம்போட, *inf.* To impose a fine; to mulct.

குற்றம்வாங்க, *inf.* To impose a fine.

குற்றவாளி, *s.* A criminal, a malefactor, a culprit. 2. One convicted of crime. 3. A delinquent, an offender.

கைக்குற்றம், *s.* Mistakes of the hand. See கை.

குற்றி, *s.* A stump, a stub; a stake, a block, a log, தறி; [*ex* குறு.] See குத்தி.

குற்று, கிறேன், குற்றினேன், வேன், குற்ற, *v. a.* To puncture, prick, pierce; to tap, ஊசிமுதலியவற்றாற்குற்ற. 2. To crack—as lice, &c., நெரிக்க. 3. To pluck—as nuts, பறிக்க. 4. To pound, இடிக்க. See the verbs குத்து and குறுதல்.

குனட்டம், *s.* A medicinal root, used in dysentery, அதிவிடயம்.

குனஷ்டை — குனடடை — குனட்டு, *s.* [*vul.*] Teasing, vexing, troubling, சேட்டை. See குணஷ்டை.

குனசகம், *s.* The சிறுகாஞ்சொறி plant.

குனசம், *s.* The குன்றி shrub.

குனி, *s.* A bow, வில். (*p.*) Compare குணி.

குனி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* (*from Sans. Kun'a, contracted or curved.*) To stoop, crouch, bend; to be bowed—as the head, வணங்க. 2. To bend or be bent—as a bow, வளைய. 3. (*fig.*) To stoop, condescend; to yield, தாழ. 4. (சது.) To pity, commiserate, relent, grieve, இரங்க.

குனியநிமிரமாட்டான். He can neither stoop nor straighten himself—either from disease, fatness, or having eaten too much.

வில்லுக்குனியாதெய்தால்விலகாதெதிர்த்தபகை. If the bow be not bent sufficiently, the enemy will not be put to flight.

முட்டுமுன்குனியவேண்டும். Stoop before you strike your head; i. e. after-thoughts avail nothing.

குனிந்துநடக்க, *inf.* To walk stooping.

குனிந்துபார்க்க, *inf.* To stoop and look.

குனியப்போட—குனியவைக்க, *s.* To place in a stooping posture or position.

குனிதல்—குனிவு, *v. noun.* Stooping; inclination.

குனி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To bend, curve, crook, வளைக்க. (*p.*) 2. To quaver, quiver, shake—as the voice in singing, அசைக்க. 3. *v. n.* Dance, ஆட.

குனித்தல், *v. noun.* Act of stooping or bending. 2. Dancing. 3. Quavering the voice in singing.

குனிப்பு, *v. noun.* Bending. 2. A kind of dance, கூத்தின்விகற்பம். (சது.) 3. A kind of melody or strain in singing. See குமிப்பு.

குனிப்பாய்ப்பார்க்க, *inf.* To look narrowly, or attentively into a thing.

குனுகுதல், *v. noun.* [*local.*] Speaking with an affected whine, சிணுங்கிப்பேசல்.

குனுகிக்குனுகியழ, *inf.* To cry whiningly.

குனை—கொனை, *s.* [*cor. of* முனை.] The point or tip of a thing, கூர்ப்பக்கம். (*c.*)

*குன்மம், *s.* A disease, a chronic enlargement of the spleen; also, any glandular enlargement in the abdomen—as of the mesenteric gland, &c., causing indigestion, colic and great emaciation. There are eight kinds, viz.: எரிகுன்மம், சத்திகுன்மம், சன்னிகுன்மம், சிலேட்டுமகுன்மம், சூலைக்குன்மம், பித்தகுன்மம், வலிகுன்மம், வாதகுன்மம், which see severally. 2. A division of an army. (See குலுமம்.) 3. Bushes; thickets, புதர். Wils. p. 294. GULMA.

குன்மக்கட்டி, *s.* A formation or enlargement in the abdomen.

அவனுக்குக்குன்மங்கண்டிருக்கிறது. He has the குன்மம் disease.

குன்மசூலை, *s.* Nervous paralysis—also obstruction of the viscera. (*Rott.*)

குன்மப்புரட்டு, *s.* [*prov.*] Dyspepsia; an acute pain, attending the குன்மம் disease from indigestion, causing vomiting, distortions, &c.

குன்மவலி, *s.* Internal pain or gripe consequent on the குன்மம் disease.

குன்மவாயு, *s.* Flatulency connected with the குன்மம் diseases.

குன்றத்துச்சித்தி, *s.* A kind of native arsenic, தாலம்பபாஷாணம். (*M. Dic.*)

குன்றம், *s.* A hill, a mountain, மலை.

குன்றவர் — குன்றவாணர், *s.* Mountaineers, குறிஞ்சிநிலமாக்கள். 2. Huntsmen, foresters வேடர்; [*ex* வாணர், வாழ்நர்.]

குன்றவில்லி, *s.* Siva, who made mount Meru his bow, சிவன்.

குன்றி, *s.* A medicinal climber, yielding the beautiful குன்றிமணி bean, Abrus precatorius, *L.* Wild Licorice; of which, there are three sorts, viz.: செக்குன்றி, வெண்குன்றி and கருக்குன்றி. 2. A jeweller's weight, equal to about two grains troy, அரைமஞ்சாடி. 3. A kind of native arsenic, மனோசிலை.

குன்றிநிறக்கண்ணன், *s.* One whose eyes are as red as those of the குன்றிமணி. 2. A wild boar, so called because of the redness of its eyes, காட்டுப்பன்றி.

குன்றிமணி, *s.* The seed of the குன்றி.

குப்பையிலே போட்டாலுங் குன்றிமணி மங்காது. Though the குன்றி seed be cast into the dung-hill, it loses not its lustre; i. e. though one of high rank mingle with the lowly, he will not lose his standing.

குன்று, *s.* A hill, சிறுமலை. 2. A mountain, மலை. 3. The twenty-fourth lunar asterism. See சதயம்.

குன்றுகூப்பிட—குன்றெதிரொலிக்க, *inf.* To echo—as in hilly parts. 2. To play—as mountain girls, whooping and causing the hills to echo. (*p.*)

குன்றெறிந்தோன், *s.* Skanda—as one who cleft the Krouncha mountain with his lance. See வரைபகவெறிந்தோன்.

செய்குன்று, *s.* An elevated place for the diversions of royal females; an artificial mount, செய்மலை.

மணற்குன்று, *s.* A sandy hill; a sand bank, a shoal.

குன்றுவாடை, *s.* Northwest wind—*a sea term.* (*Rott.*)

குன்று, கிறது, குன்றினது, ம், குன்ற, *v. n.* [*vul.* குன்னு.] To lessen, decrease, diminish; to become reduced, குறைய. 2. To droop or fail, to be dispirited, குலைய. 3. To lose or be wanting in natural properties; to lack, to want, to go to ruin, பொன்ற. 4. [*in gram.*] To be cut off or omitted—as a letter, &c., கெட.

குன்றக்கூறல், *v. noun.* One of the ten defects in composition; deficiency. See குறறம்.

குன்றுதசத்தியம், *s.* An incontestable truth.

குன்றாப்புகழ், *s.* Never-dying fame.

குன்றியலுகரம், *s.* Shortened உ. See குற்றியலுகரம். (நன்.)

மனங்குன்ற, *inf.* To become dejected.

கூ

கூ. A compound letter of க் and ஊ. 2 s. The earth—as கு, பூமி. 3. (*Sans. Koo, sounding*) Clamor. கூக்குரல்.

கூகூவென—கூகாவென, *inf.* To bawl out, to utter loud cries, lamentation, &c. 2. To complain. 3. To be constantly calling, whooping, scolding, driving to work.

கூகூவென்றலறியழுதான். He cried with a loud screeching sound.

கூக்குரல், s. Whooping, outcry, uproar, bawling, clamor, பேரொலி; [*ex* குரல்.]

கூக்குரலடங்கிறது. The great noise ceases.

கூக்குரலாய்க்கிடக்கிறது. There is a great clamor, bustle. 2 It is noised.

கூக்குரலமர்த்த, *inf.* To still or quiet the clamor.

கூக்குரலிட—கூக்குரல்செய்ய—கூக்குரல்பண்ண, *inf* To whoop, clamor, cry out.

கூவென, *inf* To call, cry out, or bawl, through pain or otherwise. 2. To make a noise; to cry, to whoop—as a signal or answer to one calling; to halloo, to huzza. 3. To utter reiterated cries.

• கூகனம், s. An occult, indecent term, குய்யச்சொல். (சது) (*Sans. Goohana, hiding, concealing.*)

கூகநாகம், s. The betel-nut tree, கமுகு. (*M. Dic.*)

கூகை, s. A species of owl; *lit.* the hooter, பேராந்தை. Wils. p. 310. Ghooka. 2. Another kind, the கோட்டான்.

கூகைவிளிக்கிறது. Screech of an owl.

கூகைகுழற, *inf.* To hoot—as an owl.

கூகைக்கட்டி—கூகைநீர்க்கட்டி—கூகைவீக்கம், s A disease—the mumps—as பொன்னுக்குவீங்கி.

கூகைநீறு, s. A medicinal powder—as கட்டெருமைப்பால், 4.

கூசனம், s. An indecent term. (சது.) See கூகனம்.

கூசா, s. (*Hind.*) A goglet, ஓர்மட்பாத்திரம்.

கூச, கிறேன், கூசினேன், வேன், கூச, v. n. To be shy, bashful, coy, diffident; to shrink back, to be timid, ashamed, அஞ்ச, நாண. 2. To be tender or weak—as an eye, a foot, &c., or as teeth set on edge, கண்முதலியகூச. 3. (*fig.*) To recoil—as a hand or foot, through fear, sorrow, delicacy, deference, &c., அச்சக்குறிப்புக்காட்ட. 4 To be ticklish, to shrink from tickling, கூச்சங்கொள்ள.

பல்லுக்கூசுகிறது. My teeth are set on edge.

கூசாமற்பேச, *inf.* To speak without fear, or diffidence. 2. To declare without reserve.

கூசிப்பார்க்க—கூசிவிழிக்க, *inf.* To look with tender eyes 2. To squint, to look with the eyes half shut, and the eye brows knit.

கண்கூச, *inf.* To be weak in sight. See கண்.

கால்கூச, *inf.* To be tender-footed, &c. See கால்.

கைகூச, *inf.* To be backward in using the hand. See கை.

சபைக்குக்கூச, *inf.* To shrink from appearing, or performing before an assembly.

பழிக்குக்கூச, *inf.* To fear blame, or reproach.

மனங்கூச, *inf.* To be shy, diffident, bashful. 2. To loathe disgusting objects. 3. To be loth to think evil of one.

வாய்கூச, *inf.* To be reluctant to utter improper things, &c.

கூச்சம்—கூசல், *v. noun.* Shyness, bashfulness, diffidence, shame-facedness; modesty, delicacy, நாணம். 2. Tenderness or weakness of a limb, an eye, &c., causing a shrinking from its functions, &c., பல்முதலியகூசுகை. 3. Ticklishness, tickling, titilation, கூசுகை. 4. Timidity, fear, apprehension, அச்சம். 5. [*local.*] *Properly.* கச்சம்; which see.

அக்குளைப்பாய்ச்சினாற் கூச்சமாயிருக்கும். If you put your fingers in one's arm-pit, he will feel ticklish.

கூச்சக்காரன், s. A shy person. 2. A ticklish person. 3. A basuful, diffident person.

கூச்சங்காட்ட—கூச்சப்படுத்த, *inf.* To tickle, titilate.

கூச்சந்தெளிய, *inf.* To overcome shyness, &c. 2. To get rid of, or out-grow ticklishness.

கூச்சந்தெளிந்தவன்—கூச்சமில்லாதவன்—கூச்சந்தீர்ந்தவன், s. One that has overcome shyness; one no longer bashful.

கூச்சப்பட, *inf.* To be shy. 2. To be timid, daunted. 3. To be ticklish.

• கூச்சல், s. An outcry, a great noise, கூக்குரல். Wils. p. 238. Kooja.

கூச்சலிட, *inf.* To make a noise, to cry out.

கூச்சி, s. The pulp of the fruit of the Trichosanthes, சவிர்ப்பூசணித்திரம்.

கூச்சிதம்—கூச்சிரம், s. The கடம்பு tree.

• கூர்ச்சு, s. [*prop.* கூர்ச்சம்.] The point of a thing, the sharp end of an instrument, கூர். Wils p. 239. Koorchcha.

• கூஷ்மாண்டம், s. A pumpkin-gourd, சுவிபாணபூசணி, Cucurbita hispida, *L.* Wils. p. 240. Kooshman'd'a.

• கூடகம், s. Fraud, deceit, வஞ்சகம். Wils. p. 238. Koot'aka.

• கூடம், s. A house, a hall, an open room, a building, வீடு, சாலை. 2. The side room or rooms, adjoining the main room of a Hindu house, இல்லின்கூடம். 3. Fraud, deception, trick, deceit, வஞ்சகம். 4. Untruth, falsehood, பொய். 5. A delusion, an illusion, மாயம். 6. A blacksmith's hammer, a sledge, கொல்லன்சம்மட்டி. 7. The peak or summit of a mountain. மலையுச்சி. Wils. p. 238. Koot'a. 8. Concealment, privacy, secrecy, screen, மறைவு. 9. Any thing hidden, concealed, secret or mysterious, புதைபொருள். 10. A solitary or private place, ஏகாந்தம். Wils. p. 295. Goot'ha. 11. A kind of native arsenic, கௌரிபாஷாணம். 12. The sesamum plant, எள். (*M. Dic.*)

கூடமும்வீடும், s. The main room and the side room of a Hindu house.

காவற்கூடம், s. A prison. See காவல்.

யானைக்கூடம், s. Elephant stable.

கூடசதுக்கம், s. A kind of curious stanza, in which the letters constituting the last line are found among those of the first three lines, ஈற்றடியெழுத்துக்கள் முதன்மூன்றடியுளுமறைந்து நிற்குஞ்செய்யுள்; [*ex* சதுக்கம், four lines.]

கூடசாலம், s. One of the seven hells, ஓர்நரகம்.

கூடஸ்தர்—கூடஸ்தன், s. The intelligent soul—as enshrouded in the body, ஆத்துமா. 2. Brahm, the deity—as the universal soul, பரப்பிரமம். Wils. p. 238. Koot'asta. 3. [*local.*] The head or chief man, முதன்மையுள்ளோன்.

கூடஸ்தம், s. Unchangeableness; being always the same, நிருவிகாரம்.

கூடஸ்தசைதன்னியம், s. Intelligence universally the same.

கூடஸ்தபிரமம், s. The immutable Brahm.

கூடபதம், s. A snake, பாம்பு. Wils. p. 295. Goot'hapad.

கூடப்பீர்க்கு? கூடம்பீல், s. A plant, சுரை. Lagenaria vulgaris, *L.* Bottle-gourd.

கூடலர், s. Foes, பகைவர். (*p.*) See under the verb கூடு.

கூடலூர், s. A town, Cuddalore, in the Carnatic, ஓர்பட்டணம்.

கூடல், s. A name of Madura, from the legend that large halls came into existence miraculously, to shelter the people collected there in a time of great rain, மதுரை. 2. A kind of divination, said to have been practised by females, making concentric circles on the ground, in the absence of their lovers, to ascertain as to their return, சுழிக்குழ்கூடல். 3. The mouth of a river, சங்கமுகம். 4. [*prov.*] A thick grove, commonly of palmyra trees, அடர்த்தியானதோப்பு; [*ex* கூடு, crowd, join.] See under the verb கூடு.

கூடற்கோமான், s. Any king of the Pandian dynasty, பாண்டியன்.

கூடற்குறி, s. Divination by making concentric circles on the ground.

கூடல்வாய், s. A gutter on the roof of a house.

கூடற்பற்றை, s. [prov.] A thicket.

கூடாக்கு, s. The ball or mass of tobacco and jaggery put in a hookah for smoking—as புகாக்கு.

கூடாரம், s. Assafœtida, பெருங்காயம். (M. Dic.)

*கூடாரம், s. A tent, a pavilion; a tabernacle; a booth; an awning, a tester, a conical covering for a bed, படங்கு. Wils. p. 226. KUT'ARU. 2. An arched roof, a vault, hood or covering of a chaise, waggon, cart, &c., வண்டிக்கூரை; [ex குடு, crooked.]

கூடாரக்கட்டில், s. [prov.] A bed with a tester and curtains.

கூடாரம்போட, inf. To pitch a tent. 2. To put a covering or top on a carriage.

கூடாரவண்டில், inf. A covered waggon, a tilted carriage.

கூடிலி, s. One who eats flesh; தசை தின்போன். (சது.)

கூடு, s. A nest, a hive; a cage, a coop, பறவைமுதலியவற்றின்கூடு. 2. A pen, a sty, a kennel, பசுமுதலியவற்றின்கூடு. 3. A small receptacle—as an inkstand, மைக்கூடு. 4. A recipient, a receptacle of the soul, சரீரம். 5. A case, a sheath, உறை. 6. A testaceous, or mud shell of some insects; a cocoon, புழுக்கூடு. 7. [in carpentry.] A mortise; also, groove, சேர்த்தகூடு. 8. A case for catching fish, மடைப்பு. 9. A covering of a cart—as கூடாரம். (Sans. Gut'ha, to envelope, screen.)

கூட்டோடேபோச்சது குளிருங்காய்ச்சலும். The fever and ague have gone off with the case (the body); i. e. the person has died.

கூடுகட்ட, inf. To build nests, cases, &c.—as birds, caterpillars, bees, &c. 2. To make cages, hives, &c. 3. To put a case or covering on fruits, &c.

கூட்டிலடைக்க, inf. To inclose in a cage, to encage, to coop up. 2. To enclose a charm, a talisman or an amulet in a casket.

கூட்டுப்பல்லக்கு, s. [prov.] A palankeen with sliding doors.

கூடுபோட—கூடுவிட, inf. To die; lit. to drop the body.

கூடுவிட்டுக்கூடுபாய, inf. To leave its own body at pleasure and enter another, or an inanimate thing—as the soul is feigned to do; a magic art.

கூடுங்கழுந்தும், s. Mortise and tenon.

இழைப்புளிக்கூடு, s. The box of a joiner's plane.

தேன்கூடு, s. A honey-comb.

கூடாயிருக்க inf. To be hollow, tubular.

கூடு, கிறேன், கூடினேன், வேன், கூட, v. n. To join with, to combine, coalesce, பொருந்த. 2. To collect or crowd together, to assemble; to congregate, convene muster, கூட்டங்கூட. 3. To associate or consort with one, சகவாசஞ்செய்ய. 4. To unite, knit—as broken bones, பொருந்த. 5. To cohabit, கூடிவாழ. 6. To meet—as rivers in confluence, or as roads, சந்திக்க. 7. To become reconciled, pacified, conciliated, இணங்க. 8. To be able, be possible, practicable, attainable, இயல. 9. To be lawful, expedient, proper, decent, தகுதியாக. 10. To be fit, to be serviceable, to be suitable, உபயோகப்பட. 11. To become possessed of, to attain, அடைய. 12. To accumulate, be hoarded or stored up, தொகைசேர. 13. To come to pass, to be brought about, to be effected, சித்திக்க. 14. To be annexed, superadded, அதனோடுசேர. 15. To come in conjunction—as planets, &c., கிரகங்கள்கூட. 16. To commence, to take place, தொடங்க. 17. v. a. (சது.) To pursue, follow out; to seek, தேட.

பன்றியோடேகூடியகன்றும்பீதின்னும். A calf in company with a swine will learn to devour filth; i. e. a man will conform to his associates.

இதுஅவனாலேகூடும். He is able to do it.

இனிஅவன்கூடான். Henceforth, he will be good-for-nothing.

இதுகாரியத்துக்குக்கூடும். This will serve the purpose.

நடுவழியிலேகூடினான். He met me in the middle of the road.

கூடிப்பிரியேல். Break not (old) friendships. (Av.)

அமாவாசைகூடிவிட்டது. [prov.] The time of new moon has already come.

ஆளோடேகூடிவிட்டான். He has begun to come into society (from obscurity or boyhood). 2. He is convalescent; he is getting around.

ஆக்கக்கூடியதொகை. The total amount.

கூடிக்கொள்ள, inf. To band together; to form an association, to take part in, to side with. 2. To meet together, to assemble. 3. To exceed, surpass. 4. To gain strength and vigor.

கூடிவர, inf. To accompany. 2. To prosper, succeed.

கூடிநாடித்திரிய, inf. To associate or consort with one, to be on terms of close friendship.

கூடாநட்பு, s. False friendship.

கூடாவுவமை, s. [in rhet.] A simile in which the comparison is made with a thing having only a hypothetical existence, இல்பொருளுவமை.

கூடாவொழுக்கம், s. Immoral conduct—as of anchorets who in secret break their vows.

கூடல், v. noun. Approaching, assembling, &c.; seeking, uniting, cohabiting, being possible, &c.—as the verb கூடு. See also கூடல், s.

கூடாமை, neg. v. noun. Impropriety, indecorum, பொருந்தாமை. 2. Inability, impossibility, impracticability.

கூட்டரவு, v. noun. Collection, aggregate, series, பொருட்கூட்டம். 2. Crowd, association, combination.

கூட, inf. [adverbially.] Together, in company, collecting together. 2. Even, also; often in composition with உம். 3. More than due, more than enough, too much; additionally. 4. part. With, together with.

எல்லாருங்கூடவாருங்கள். Come all together.

குருவுக்குங்கூடப்பயப்படான். He is not afraid even of his guru.

அவன்வீட்டிலே தண்ணீருங்கூடக்குடியார்கள். They will not drink even water in his house—said in disparagement.

நான்கூடஅறிவேன். I also know it.

அவனுக்குங்கூடக்கொடுத்துப்போட்டாய். You have given him too much.

ஐந்துரூபாய்கூடத்தந்தார். He gave five rupees in addition.

என்கூடவா. Come with me.

கூடிய—கூடின, rel. part. Practicable, possible, convenient, proper, &c.

என்னாற்கூடியபணிவிடைசெய்யக்காத்திருக்கிறேன். I am ready to do any service in my power.

கூடியமட்டும்—கூடியமாத்திரம். As far or as much as possible; as much as one is able; to the utmost.

கூடும். It is possible, proper, fit, practicable, lawful, &c.

கூடாது. It is impossible, impracticable, inconvenient, improper, unlawful, unfit, &c. 2. Not to be done—either as a command or an entreaty—according to the manner and tone of the speaker.

கால்கைகூடாது. My hands and feet are worn out; i. e. with hard work.

என்னாற்கூடாது. I cannot; I will not.

கூடாதகாரியம். An impossible thing.

கூடலர்—கூடார், s. Enemies, foes, aliens, பகைவர்.

கூடை, s. An oblong or other kind of basket, made of ratan, ola, &c., பிரம்புமுதலியவற்றிற்செய்தகூடை. 2. [local.] An ola covering from rain, மழைக்கூடை. 3. A variety in dancing, கூத்தின்விகற்பம்.

கூடைபின்ன—கூடைமுடைய, inf. To plat கூடை bags or baskets.

அங்கமணிக்கூடை, s. [local.] A basket of presents to a newly married girl, &c.

இறைகூடை, கொடிக்கூடை, கொட்டுக்கூடை, சாணகக்கூடை, தட்டுக்கூடை, தாழக்கூடை, தூற்றுக்கூடை, செவ்வுக்கூடை, பழுப்புக்கூடை, பாப்புக்கூடை, புட்டுக்கூடை, பூக்கூடை, வடிகூடை are baskets of different kinds and for different uses. See these words.

கூட்டம், v. noun. Junction, combination, meeting, union, contact, confluence, கூடுகை. 2. Crowd, multitude, assembly, company; collection of persons, animals or things; flock, herd, clump, swarm, group, திரள். 3. Association, society, party, confederation; சங்கக்கூட்டம். 4. Class, kind, series, set, pair, brace, species, genus, தொகுதி. 5. Copulation, conjugal life, கலவிப்புணர்ச்சி. 6. Kindred, relations, connexions, race, tribe, caste, இனம். 7. Battle, engagement, fighting, போர். 8. Friendship, intimacy, companionship, சினேகம். 9. Multiplicity of a family or tribe, numerousness, மிகுதி. 10. [in gram.] Coalescence, combination—as of letters, &c., புணர்ச்சி; [ex கூட்டு, collect, unite, &c.] 11. (சது.) Cakes of the refuse of cocoanuts, rape-seed, illupy-seed, &c., after pressing out the oil, பிண்ணாக்கு.

கூட்டங்கூட்டமாய். In crowds, in companies, in flocks, &c.

அவன்என்கூட்டமல்ல. He is not my relation; he is not of my caste.

இந்துவோடிரவிகூட்டம், s. Conjunction of the moon with the sun; the new moon, அமாவாசை. (சிக.)

கூட்டங்கூட, inf. To assemble, or crowd together, to meet. 2. To hold a meeting.

கூட்டத்தார், s. Relations, persons of the same family, tribe, &c. 2. Partisans, members of the same society or class. 3. Companions, friends, associates. 4. Society, association. 5. A class of demons moving in companies.

கூட்டநாட்டம், v. noun. Associating, keeping company with, &c. 2. Holding society, assemblage.

கூட்டமாயிருக்க, inf. To be crowded.

ஒன்றன்கூட்டம், s. [in gram.] An aggregate of things of the same kind.

கூட்டு, s. Combination, union, conjunction, confluence, connexion, சேர்க்கை. 2. Companionship, fellowship, friendship, சம்பந்தம். 3. Concubinage, illicit intercourse, தொடுப்பு. 4. Relationship, consanguinity, உறவு. 5. Partnership, company in trade, பங்கு. 6. Fitness to associate with, கூடத்தகுந்தது. 7. Likeness, similarity, ஒப்பு; [ex கூடு, unite, associate, &c.]

கூட்டற்றவன், s. One unfit for company, business, &c., தகாதவன். 2. A useless person, உதவாதவன். 3. One unequal in rank, an out-cast; one rejected from a family, tribe, or society, ஆசாரக்குலைகேடவன்.

கூட்டாளி, s. An associate, a companion, சிநேகிதன். 2. A partner in trade, co-partner, பங்காளி. 3. The fellow—as one of a yoke of oxen, a pair of horses, &c., சோடானது.

அவனுமிவனுமொருகூட்டு. That man and this are in the most intimate terms.

அவனோடேகூட்டாகாது. It will not be right to associate with him.

கூட்டுக்குநிற்கிறீரா. Will you be a partner in it?

கூட்டுறவு, s. Friendship, alliance, social relation. 2. Matrimonial love. 3. Concubinage.

கூட்டு, கிறேன், கூட்டினேன், வேன், கூட்ட, v. a. To unite, conjoin, combine, connect, இணைக்க. 2. To collect together, to assemble, சேர்க்க. 3. To compound, mingle, commix, amalgamate, கலக்க. 4. To add, cast or sum up; to aggregate, தொகைப்படுத்த. 5. To increase—as interest, salary, allowance, price, &c.; to enhance, to augment, அதிகரிக்கச்செய்ய. 6. To add—as ingredients in food, medicine, &c., கூடச்சேர்க்க. 7. To receive, take, or admit one into a company, party, class, society, partnership, &c., சபைமுதலியவற்றிற்கூட்ட. 8. To accumulate, hoard, to store up, to treasure up, சேகரிக்க. 9. To sweep; to gather—as sweepings, பெருக்க. 10. To draw one over to a party, to enlist, to engage; to proselyte, to convert, கட்சிமுதலியவற்றிற்சேர்க்க. 11. To append, to attach, to annex, to subjoin, to superadd, கூட்டிவைக்க. 12. v. n. [prov.] To form—as pus, &c., உண்டாக.

கூட்டிக்கட்ட, inf. To gather and tie up—as hair, olas, &c., சேர்த்துக்கட்ட. 2. To encroach on another's land, எல்லைகூட்ட. 3. To tie together—as the hands, or the hands and feet; &c.

கூட்டிக்கொடுக்க, inf. To give more—as salary, price, &c., to superadd. 2. To add interest to principal and pay it at once. 3. [low] To pimp, &c.

கூட்டிக்கொள்ள, inf. To add an ingredient to medicine or one's food. 2. To take one in company, admit into society, or receive to office, &c.

இன்று போசனத்துக்கென்ன கூட்டிக்கொண்டாய். What have you eaten with your food rice to-day?

கூட்டிக்கொண்டுபோக—கூட்டிப்போக, inf. To take in company, to take along; to carry, convey. 2. To gather up and take away.

கூட்டிச்சேர்க்க, inf. To collect together.

கூட்டிப்பிடிக்க, inf. To hold together—as things in the hand. 2. To encroach upon—as lands. 3. To grasp, take up or thumb too much, in measuring cloth, &c. 4. [local.] To receive, entertain, treat with kindness—as a repenting prodigal.

கூட்டிமுடிக்க, inf. To gather up and tie the hair. 2. To accomplish, to bring about—as the deity, or as the actions of former births, producing their proper fruits—*little used.*

கூட்டிவிட, inf. To pimp, to pander. (low.) 2. To send along.

கூட்டிவைக்க, inf. To accumulate, to lay up, to deposit. 2. To cause to succeed. 3. To bestow enjoyments on one—as the deity in granting a wife, sexual enjoyment, &c.

தெய்வங்கூட்டிவைக்கவேண்டும். May God send prosperity.

கூட்டுவிக்க, inf. To join together, reconcile. 2. To cause to be swept, &c.

இதழ்கூட்ட — சொண்டுகூட்ட, inf. [prov.] To join the lips in speaking. See under இதழ்.

கறிகூட்ட, inf. To mix ingredients for curry.

சுருதிகூட்ட, inf. To tune the voice, or instruments before performing. 2. To accompany the singing by an instrument, or the voice sounding the key note.

பறவைகூட்ட, inf. To become fledged; to attempt to fly—as a fledgeling; to assist to fly.

மைகூட்ட, inf. To make ink or paint. 2. To make collyrium for the eyes.

கூட்டல்கழித்தல், v. noun. Accepting and rejecting. 2. Adding and subtracting.

கூட்டு, v. noun. A compound, medley, mixture, composition, aggregation, aggregate, கலப்பு. 2. Curry stuffs ground together, கறிக்கூட்டு. 3. [in arith.] Addition; generally in composition with கணக்கு—as in கூட்டுக்கணக்கு; [ex கூட்டு, mix, add, &c.]

கூட்டரைக்க, inf. To grind curry stuffs.

கூட்டுக்கறி, s. Compound curry, made of several vegetables. 2. Another kind of curry.

கூட்டுக்கூட்ட, inf. To moisten ground curry stuffs. 2. To mix aromatic ingredients in grinding sandal.

கூட்டுத்தட்டு, s. A salver with compartments for holding ground curry stuffs, கூட்டுவைக்குந்தட்டு.

கூட்டுவர்க்கம், s. Mixture of odoriferous ointment.

சந்தனக்கூட்டு, s. [prov.] Perfumery ground with sandal.

பாக்குவெற்றிலைக்கூட்டு, s. [prov.] Spices mixed with chopped areca-nuts and used in chewing betel.

முக்கூட்டெண்ணெய், s. A famous medicinal oil compounded of castor, margosa and rape-seed oils.

கூட்டுக்கால்கட்ட, inf. To tie a beast's forelegs together.

கூட்டாகுழப்பம், s. Confusion of things, affairs, &c., a clutter, தாறுமாறு.

கூட்டுக்கச்சவடம் — கூட்டுவியாபாரம்—கூட்டுத்தொழில்—கூட்டுவர்த்தகம், s. A traffic in partnership.

கூட்டுப்பயிர், s. Joint cultivation, joint culture.

குடியிருந்துபார் கூட்டுப்பயிரிட்டுப்பார். Try a man by living with him, or by having a field in common.

கூட்டுமூட்டு, s. Union or combination of persons for effecting an object—as the marriage of a destitute girl, &c. 2. League, confederacy, conspiracy. 3. Slander, aspersion, calumny.

கூட்டெழுத்து, s. Double or compound letters—as க், ட், த். 2. Compound Sanscrit letters—as க்ஷ. See under எழுத்து.

கூட்டுக்கணக்கு, s. [in arith.] Addition.

கூட்டுக்கழிவு, v. noun. Addition and subtraction; increasing and reducing.

கூட்டிடைச்சொல், s. [modern.] A copulative conjunction.

கூண்டு, s. [improp. for கூடு.] A nest; a cage, a coop; a hive; any hollow, globular or prismatical case—as a balloon or lantern, &c.

தொம்பைக்கூண்டு, s. A large wicker basket, used as a receptacle for grain.

கூதல், s. [prop. கூதிர். in Madras, ஊதல்.] Cold as felt—the effect in distinction from its cause, குளிர். 2. Chills before an intermittent fever, காய்ச்சற்குளிர்.

அறநனைந்தவருக்குக்கூதலென்ன. No cold to them that are completely wet; i. e. no fear or shame to the desperately wicked.

கூதல்விறைக்க, inf. To stiffen with cold—hyperbolically, for very cold.

கூதற்காய, inf. To warm one's self.

கூதளம், s. The கூதாளி shrub. 2. The musk-melon, வெள்ளரி. 3. The three-lobed night-shade, தூதுளை.

கூதனம், s. Indecent, obscene, or inauspicious terms. (சது.) See கூசனம்.

கூதறை, s. [local.] Any thing mean, low, vulgar, &c., இழிந்தது.

கூதாரி, s. Musk-melon, வெள்ளரி—as கூதளம்.

கூதாளம்—கூதாளி, s. A shrub, கூதளம், Solanum, *L.*

கூதி, s. [vul. obscene.] Verenda fœminæ (*from Sans. Gootha, fæces.*)

கூதிர், s. Cold as felt—not spoken of things cold in themselves; the sensation of cold, குளிர். 2. Dewy wind, பனிக்காற்று. 3. (சிக.) Wind, காற்று. 4. The cold season (October and November), கூதிர்ப்பருவம். See பருவகாலம். (p.)

கூதை, s. Cold, dewy wind, பனிக்காற்று. 2. (கிக.) Wind in general, காற்று. (p.)

கூத்தரிசி, s. [*for.* குத்தரிசி.] Rice cleaned from the husk by pounding, usually for sale.

கூத்தரிசிக்காரி, s. A woman who beats and sells rice.

கூத்தரிசிகுத்திவிற்க, *inf.* To pound and sell rice—as an employment.

கூத்தன், s. Sulphate of copper, துரிசி. See under கூத்து.

கூத்தன்குதம்பை, s. A plant, மூக்கொற்றிப்பூண்டு, Inula Indica.

கூத்தி—கூத்தியார், s. A concubine, a kept mistress. See under கூத்து.

கூத்திக்கள்ளன், s. A whore-monger.

கூத்திவைக்க—கூத்தியார்படைக்க, *inf.* To keep a concubine.

கூத்து, s. (*from Sans. Goorda*, play, Wils. p. 239.) Dance, dancing; action. performance; ball, நடனம். 2. Dramatic play, comedy, நாடகம். 3. Dance or sport of the deity—as the creation, preservation, and destruction of the universe are considered by Hindu philosophers, திருக்கூத்து. 4. Expression or exhibition of the feelings of the soul in its conscious states, as manifested in the actions and organic functions of the body, according to Hindu psychologists, ஆத்துமசேட்டை. 5. Frolicking, leaping and frisking about, like young boys and girls, விளையாட்டு. 6. Display, pomp, parade, &c.—as viewed by ascetics, பிரபஞ்சநடிப்பு. 7. A strange event or phenomenon, நூதனசெய்கை. 8. Presumption, assumption, vanity—as of young persons—one new in office, &c., spoken in contempt, கோலாகலம். 9. A droll or ludicrous action or performance—as a pantomime, &c., பரிகாசக்கூத்து. 10. (*fig. little used.*) The instigating or moving cause of an action, தூண்டுகாரணம்.

கூத்துக்குமீசைசிரைக்கவா. Why shave off the mustaches for mere play; i. e. why do a thing without an object?

எதேனுங்கூத்துநடக்கும். [*prov.*] Some disastrous event will happen—said after a bad omen.

நாலுநாட்கூத்து. A four days' dance—spoken of worldly prosperity, elevation to office, &c.

கூத்தன், s. Dancer, actor, performer, comedian, &c., நாடகன். 2. Soul, life, spirit—as the directing cause of the various corporeal functions and actions, உயிர், ஆத்துமா. (நாலடி.) 3. The deity—as the operating cause in the universe, கடவுள். (p).

கூத்தாட, *inf.* To dance or play, to exhibit pranks, to take a part in play, நடனஞ்செய்ய. 2. To persist in an improper request, &ç., சோலிபண்ண. 3. To be elated by promotion, wealth, &c.; to assume too much, &c., பெருமைகாட்ட. 4. (*little used.*) To act merely for form's sake, in religion, civilities, mourning, &c., ஒப்புக்குச்செய்ய.

கூத்தாடி, s. (*fem.* கூத்தாடிச்சி.) A dancer, player, an actor, a comedian, நடன். 2. A pole-dancer, கழைக்கூத்தன்.

கூத்தாட்டு — கூத்தாட்டம், *v. noun.* Dancing, acting, playing, &c., நடிப்பு.

கூத்தாட்டுச்சிலம்பம் படைவெட்டுக்குதவாது. The fencing of the actor will not do in battle.

கூத்தி—கூத்திச்சி, s. A female actor or dancer; a dancing girl, நாடகப்பெண். 2. A courtezan, a strumpet, a prostitute, வேசி. 3. A concubine, கூத்தியார்.

கூத்துக்களரி, s. The area or hall for play; a ball room; a theatre; a circus, &c., நடனசாலை.

கூத்துக்காரன், s. (*fem.* கூத்துக்காரி.) An actor, a dancer, கூத்தாடுவோன். 2. A dancing master. கூத்தாட்டுவோன். 3. A buffoon; a ludicrous, comical person; a mimic, விகடக்காரன.

கூத்துப்பயிலிடம், s. A dancing school; a place where dancing is practised.

கூத்துப்பாட்டு, s. Dancing tunes, and songs.

கூத்துவகை—கூத்தின்விகற்பம், s. The two divisions of dancing, commonly by women. 1. தேசிகம், modes of dancing in different countries. 2. மார்க்கம், modes of dancing—as laid down in the shastras.

கூத்துப்பண்ண, *inf.* To make fun, sport, &c. 2. To do a droll, funny action. 3. To confound; to derange.

கூத்துவிட, *inf.* To introduce the actors in a play. 2. [*prov.*] To say something odd, or droll; to do a funny, humorous thing, pleasing to a company.

கூத்துவைக்க, *inf.* To give a dance, or ball—*modern.*

கூந்தல், s. [*probably an elongation of the Sans. Kuntala, hair.*] Any thing long and flowing in detached parts—as tresses, braids, &c., of women's hair, பெண்மயிர். 2. A peacock's tail, மயிற்றோகை. 3. A horse's mane, குதிரைப்பிடரிமயிர். 4. The leaves of palmyra, and areca trees, கமுகு பனையிவற்றினோலை. 5. Jaggery tree, a palm, கூந்தற்பனை. (சது.) 6. [*prov.*] Cocoa leaf rib, ornamented with tinsel stuck into a soft substance as a decoration; also, young white cocoa leaves, split and hung up as an ornament, கூந்தற்சல்லி. 7. The stems shooting from a bunch of areca-nuts, கமுகங்குலைக்கூந்தல். 8. The hair on an elephant's neck—a short kind of mane, யானைக்கழுத்துமயிர். 9. Filaments, threads, fibres. fringes, பூமுதலியவற்றின்கூந்தல். *Note.*—அம்மையார்கூந்தல், சவரியார்கூந்தல், நிலக்கூந்தல், மெல்லியார்கூந்தல், are varieties of plants. See these words.

கூந்தலாற்ற, *inf.* To adjust and dry the hair after bathing—as a female.

கூந்தல்முடிக்க, *inf.* To tie up the hair.

கூந்தல்விரிக்க, *inf.* To let the hair hang loose.

கூந்தலறுகு, s. A plant, Agrostis.

கூந்தற்பாசி, s. An aquatic plant.

கூந்தற்பூகம், s. A kind of areca tree, கூந்தற்கமுகு.

காட்டுக்கூந்தல், s. A kind of creeping plant, ஓர்கொடி, Evolvulus, *L.*

கூந்தாலம்—கூந்தாலி, s. As குந்தாலி.

*கூபம், s. A well, கிணறு. Wils. p. 239. Koopa. See கூவம்.

*கூபரம், s. [*a change of* கூர்ப்பரம்.] Elbow, முழங்கை.

கூப்பாடு, *v. noun.* A call. See கூப்பீடு.

கூப்பிடு, கிறேன், கூப்பிட்டேன், வேன், கூப்பிட, *v. a.* To call one, to call by name, to call attention, அழைக்க. 2. To call on one for aid, to cry to the deity; to invoke—as evil spirits, முறையிட. 3. To call with authority, to summon, to cite, அதிகாரத்தாலழைக்க. 4. To invite, வரவழைக்க. 5. *v. n.* To call out, to cry out, to exclaim, to halloo, to shriek, to whoop. கூவ. 6. To cry—as certain animals, மிருகங்கூப்பிட; [*ex* கூப்பு, calling, *et* இடு.]

கூப்பிட்ட குரலுக்கொருவருமில்லை. No one came at the call. 2. No one is at hand to aid, to serve, &c.

கூப்பிடுதூரம், s. The distance of a call.

கூப்பிடுவான், s. [*prov.*] A kind of lung disease, chiefly among goats, causing bleatings and sudden death; also used as a curse, meaning, may he die of this disease.

கூப்பிடுசத்தம், s. A voice calling. 2. The distance of a call.

கூப்பீடு, *v. noun.* A call, a whoop. 2. Calling distance. 3 [*in long measure.*] A call equal to a குரோசம்.

கூப்பு, கிறேன், கூப்பினேன், கூப்புவேன், கூப்ப, *v. a.* To close, to contract, to shut in—as an umbrella, &c., குவிக்க. 2. To close the hands conically, in worship or reverence, கைகுவிக்க.

சூரியன்கிரணத்தைக்கூப்பிக்கொண்டுஅஸ்தமித்தான். The sun drawing in his rays has set.

கூமனா, s. A tree producing a silken kind of cotton, கோங்கு. (*M. Dic.*)

கூமா, s. [*prop.* கூவமா. *prov.*] A kind of tree, ஓர்மரம்.

கூம்பல், s. The குமிழ் tree. See under the verb கூம்பு.

கூம்பு, s. The mast of a vessel, பாய்மரம். (*from Sans. Koopa*, mast. Wils. p. 239.) 2. The conical pinnacle of a car, தேர்கொடிஞ்சி. (*p*) 3. Mud, சேறு. (*p.*)

கூம்பினிற்புதைத்தகல்லு. The stone buried in mud. (*p.*)

கூம்பு, கிறது, கூம்பினது, ம், கூம்ப, *v. n.* To close conically, to close—as a flower, குவிய. 2. To contract itself, to shrink, ஒடுங்க. (Compare the verb கும்பு.) 3. To close—as the mind, excluding worldly things, மனமடக்க.

கூம்பிக்கொண்டிருக்க, *inf* To sit down close and motionless—as a bird at roost.

கொடிப்பாசி, *s.* Creeping moss upon water.

கொடிப்பாலை, *s.* A kind of creeper. See பாலை.

கொடிப்பிள்ளை, *s.* The young of a crow. 2. A kind of goat. பள்ளையாடு

கொடிப்புலி, *s.* A species of tiger with a long and slender body like a greyhound.

கொடிப்பூ, *s* Flowers of creepers—one of the four varieties. See பூ.

கொடிமரம்—கொடித்தம்பம்—கொடிக்கம்பம், *s.* A flag-staff.

கொடிமல்லிகை, *s.* A running jasmine.

கொடிமாதளை, *s.* A kind of pomegranate.

கொடிமாடு, *s.* A bullock lank and long.

கொடிமுடி, *s.* A shrubby plant whose branches intertwine.

கொடிமுடிந்தவழக்கு, *s.* An intricate law-suit.

கொடிமுடியன், *s.* [*prov.*] A dangerous snake, long and small, with a large flat head—as கொம்பேறிமூக்கன்.

கொடிமுந்திரிகை, *s.* The vine, grape-vine, திராட்சக்கொடி.

கொடிமுறுக்கு, *s.* Twist.

கொடியத்தி, *s.* A kind of fig-tree growing near rivers with slender branches.

கொடியரசு, *s.* A tree, ஓரரசு.

கொடியறுகு, *s.* A kind of grass.

கொடியாடு, *s.* A long legged goat.

கொடியால், *s.* A kind of banian tree.

கொடியாள்கூந்தல், *s.* A plant, as அம்மையார்கூந்தல்.

கொடியிலந்தை, *s.* A spreading kind of shrub, Zizyphus racemosus, *L.* ஓரிலந்தை (*Rott.*)

கொடியிறக்க, *inf.* To take down a flag. 2. To take down the temple flag, at the close of the ceremonies. 3. To take down a kite that is flying.

கொடியெலுமிச்சை, *s.* A species of எலுமிச்சை.

கொடியேற்ற, *inf.* To hoist a flag in the temple or a fort. 2. [*prov.*] To fly a kite.

கொடியேற்றம், *v. noun.* Hoisting the temple-flag, at the commencement of a periodical festival.

கொடியைக் கொழுகொம்பின்மேலேற்ற, *inf.* To support a climbing plant by a prop.

கொடிவலிக்க, *inf.* [*prov.*] To draw in the string of a kite. 2. To draw out a withe for use.

கொடிவேலி, *s.* A shrub, as கொடுவேலி.

கொடிச்சியர், *s.* Females of the mountaineer caste, குறத்தியர்.

கொடிச்சிவால், *s.* [*prov.*] The tail of a cow white at the end.

கொடிச்சிவாலி, *s.* A cow with such a tail.

கொடிஞ்சி, *s.* The conical top of a car or chariot. 2. A car, chariot, தேர்.

கொடித்தரம், *s.* The moon in the eighth phasis—also sometimes in the seventh or ninth, in her increase or decrease, when she is in the meridian at sun-set or sunrise, அஷ்டமிச்சந்திரன்.

கொடிப்பாலை, *s.* A kind of tune, ஓர்இராகம். See under கொடி.

கொடிறு, *s.* [*impr.* கொடிசு.] The jaws, mandibles, the nook formed by the opening of the jaws; the cheeks, கதுப்பு. 2. An elephant's cheeks, யானைக்கதுப்பு. 3. The 8th lunar asterism. See பூசம்.

கொடு. A poetic contraction of the gerundial participle கொண்டு. (*p.*)

பையக்கொடுபோனான். He carried [it] very gently.

கொடுகு, கிறது, கொடுகினது, ம், க, [*local.* a change of ஒடுங்கு.] *v. n.* To shrink or shrivel up with cold; to shiver with cold, to sit, or perch, &c., shivering with cold, குளிரவொடுங்க. 2. To be set on edge—as the teeth, பற்கூச.

கொடுகிக்கொண்டிருக்க, *inf.* To be shrivelled, reduced in size, &c., with cold—as a bird, &c.

கொடுகொட்டி, *s.* One of the three dances of Siva, சிவன்கூத்து. 2. A dance of Skanda, குமரனடல்.

கொடுக்கி, *s.* A hooked iron bar to fasten doors, கதவின்கொடுக்கி. 2. A clasp for an ornament, பணிப்பூட்டு. 3. [*prov.*] A class of plants, as தேட்கொடுக்கி.

கொடுக்கு, *s.* The sting of a wasp, hornet, or scorpion, தேள்முதலியவற்றின்கொடுக்கு. 2. The cloth passed between the legs and tucked up close behind, பின்கோவணம். 3. The claws of a crab, lobster, &c., கவைத்தாள்.

கொடுக்கன்—கொடுக்கான், *s.* [*prov.*] A small kind of scorpion, தேள்; [*ex* கொடுக்கு, sting.]

கொடுக்காபிடித்தல், *v. noun.* A kind of play with children.

கொடுக்குக்கட்ட, *inf.* To tuck up the cloth closely.

கொடுக்குக்கட்டிநிற்க, *inf.* (*fig.*) To be firmly resolved on a thing. 2. To be earnestly engaged in an enterprise.

கொடுக்காலேகொட்ட, *inf.* To pierce or strike with a sting.

கொடுக்காலிடுக்கிக்கொள்ள, *inf.* To pinch or take up with the claws.

கொடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To give, grant, afford, bestow, present, ஈய. 2. In combination, to issue—as commands; கட்டளையளிக்க; to communicate, impart—as knowledge, அறிவிக்க; to supply, give aid, உதவிசெய்ய; to stay with the hand, or give support, முட்டுக்கொடுக்க; to create, give existence—as the Supreme Being, சிருட்டிக்க; to give place, to yield, இடங்கொடுக்க. *Note.*—This word is generally used in its direct meanings of give, &c., only when there is a receiver, so as to correspond with வாங்க. It is therefore, except as to the elephant, incorrectly, though commonly, used in reference to the lower animals. Strictly also it implies the giving of a superior, to an inferior; but these distinctions are little noticed. When combined with the gerund of another verb or with a noun, the meaning is often modified—as சொல்லிக்கொடுக்க, to instruct, to teach; காட்டிக்கொடுக்க, to betray; முதுகுகொடுக்க, புறங்கொடுக்க, பின்கொடுக்க, to turn the back, to flee.

கொடுப்பதொழியேல். Cease not to give [the poor.]

கொடுக்கல்வாங்கல், *v. noun.* Dealing, bargaining. 2. Lending, borrowing, &c.

அவனுக்குமெனக்குங்கொடுக்கல்வாங்கலுண்டு.... He and I have business transactions together.

கொடுக்கல்வாங்கல்பண்ண, *inf.* To deal, bargain, barter; to lend and borrow.

கொடுக்குமதி, *s.* [*prov.*] What is due to one, a debt.

கொடாமை, *v. noun.* Not giving, withholding.

கொடான். He will not give.

கொடுத்துக்காட்ட, *inf.* To give and thus unintentionally encourage further application.

கொடுத்துக்காட்டினால்விடார்கள். If you give way and encourage them, they will not let you be quiet.

கற்றுக்கொடுக்க, *inf.* [*loc.*] To teach.

சாகக்கொடுக்க, *inf.* To lose by death—as a mother her child, &c.

புருஷனையுமகனையுஞ்சாகக்கொடுத்தேன்....... I have given my husband and son to death—lost them by death.

நிறங்கொடுக்க, *inf.* To tinge, give a color. 2. To be sleek, smooth, plump—as a person in health.

பால்பழங்கொடுக்க, *inf.* To present milk and peeled plantain—as the bride, to the bridegroom; the first food supplied to him.

பெண்கொடுக்க, *inf.* To give a girl in marriage.

முடித்துக்கொடுக்க, *inf.* To finish and give to another. 2. To marry; to give in marriage.

வாங்கிக்கொடுக்க, *inf.* To take and give, that is, buy for another.

கொடுப்பன — கொடுப்பனை, *v. noun.* Giving in marriage, கொள்வனை is receiving or marrying.

எங்களுக்குமவர்களுக்குங் கொள்வனைகொடுப்பனையில்லை. We do not intermarry.

கொடுகொடு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To feel very cold, shivering, கூதற்கொள்ள. (*c.*)

கொடுங்கை, *s.* The inside of the bent arm. (See கை.) 2. A knob-like bend at the abutments of an arched ornament of a car, &c. 3. The over-hanging border cornices or projections on the sides, or front of a house, &c., வீட்டின்கொடுங்கை. 4. [*prov.* little used.] Severity, cruelty, harshness, குரூரம்; [*ex* கொடுமை.]

கொடுங்கோபிச்சிலை, *s.* A kind of stone of a yellow color, மஞ்சட்கல்.

கொடுதி, *s.* [*prov.*] A peg for fastening a tenon in a mortise, &c., மரவாணி.

கொடுப்பு, *s.* [*prop.* கொடிறு.] The jaws, the opening of the jaws. 2. [*local. ex* கொடு. *v.*] Dealing of blows, &c., in burlesque.

கொடுப்பிலடக்க, *inf.* To put into one side of the mouth—as a cud of tobacco, betel, &c.

கொடுப்புப்பல், *s.* The double teeth, the grinders.

கொடுப்புப்பீறி, *s.* A cancerous tumor in one of the corners of the jaws.

கொடுப்பை, *s.* A kind of herb, பொன்னாங்காணி, Illebram, *L.* (*M. Dic.*)

கொடுமுடி, *s.* The summit of a mountain, a peak, a ridge, மலையுச்சி. 2. The top or pinnacle of a car, தேருச்சி. 3. The pinnacle of a tower, கோபுரத்துச்சி.

கொடுமை, *s.* Cruelty, tyranny, oppression, violence inhumanity, கொடுங்கோன்மை. 2. Severity, harshness, vehemence, impetuosity, barbarousness, குரூரம். 3. Crookedness, flexture, obliquity, வளைவு. (*Sans. Kota,* crookedness.) 4. Roughness, harshness, uncouthness, frightfulness, கோரம். 5. Vileness, turpitude, wickedness, baseness, flagrance, flagitiousness, தீமை. 6. Injustice, அநீதி 7. Sharpness, poignancy, severity, கூர்மை. 8. *adj.* Satirical, offensive, injurious, கடுமை.—*Note.* In most of its meanings, bad or injurious qualities are implied. It differs from கடுமை, in several meanings. Like that and similar abstract nouns, it drops the termination and combines with other nouns as an adjective, according to rule.

வறுமைகொடிது. Poverty is cruel.

வயிறுக்கொடுமையினால்வருந்துகிறான். He is vexed by want of food.

கொடிது—கொடியது, *appel. noun.* That which is cruel, கொடுமையானது.

கொடியகாடு, *s.* A wild, inhospitable desert.

கொடியகூற்றன், *s.* The cruel Yama.

கொடியசண்டாளர், *s.* Desperate wretches.

கொடியபிறவி, *s.* Vile births—as evils to which souls are subject; horrid transmigration—as keeping the soul from union with the deity.

கொடியமனம், *s.* A cruel or envious disposition. 2. The evil heart.

கொடியமுகம், *s.* A frightful visage; a fierce countenance.

கொடியமோசம், *s.* Flagrant errors.

கொடியவஞ்சனை, *s.* Base turpitude. 2. A desperate fraud; a base imposition

கொடியவன், *s.* A vile wretch, a hard-hearted cruel man.

கொடியவீரன், *s.* A kind of prepared arsenic, கோடாசொரிபாஷாணம். (*Rott.*)

கொடியவெப்பம், *s.* Oppressive, vehement heat of weather or climate, &c. 2. Poignant qualities of medicines.

கொடியோன், *s.* A cruel man. 2. The plant கற்றாழை, Aloes.

கொடுங்கண், *s.* An evil eye, a cruel eye.

கொடுங்காலம், *s.* A time of dearth, scarcity, drought, &c. 2. A time of general suffering. 3. A time of oppression, cruelty, tyranny.

கொடுங்கோல், *s.* A despotic government or rule; tyranny. (*lit.*) a crooked sceptre—as opposed to செங்கோல், a right sceptre, அரசின்முறைகேடு.

கொடுங்கோள், *s.* Atrocious backbiting, disgraceful calumny, அவதூறு.

கொடுங்கோன்மை, *s.* Despotism, tyranny; injustice, oppression, அரசின்முறைகேடு.

கொடுஞ்சூரி—கொடுஞ்சூரி, *s.* [*local.*] A desperately wicked woman.

கொடுநுகம், *s.* The tenth lunar asterism. See மகம்.

கொடுஞ்சொல், *s.* Rude, harsh, severe language; harshness, reproof, abuse, &c. —as கடுஞ்சொல் and வன்சொல்.

கொடும்பசி, *s.* Severe hunger.

கொடுமரம், *s.* A bow, வில். 2. Sagitarius of the zodiac, தனுராசி.

கொடுமுடிச்சு, *s.* A hard, intricate knot, பன்முடிச்சு. 2. (*fig.*) Malignant plot, a vile conspiracy; contrivance to ruin one, founded on falsehood or truth, சதியாலோசனை.

கொடும்பகல், *s.* [*local.*] Mid-day. See கடும்பகல்.

கொடும்பாவி, *s.* A heinous sinner

கொடும்பாவை, *s.* The effigy of an old woman, dragged through the streets with lights and vociferation, in time of drought, and burnt to expiate public crime and bring rain. Sometimes கொடும்பாவி.

கொடும்புரி, *s.* A hard, thorough twist in a string, &c. 2. (*fig.*) A deep-laid plot for effecting one's dismissal from office, &c.

கொடுந்தமிழ், *s.* The vulgar dialect of the Tamil. See தமிழ்.

கொடுந்துயர், *s.* Aggravated sorrow.

கொடும்புலி, *s.* A lion, சிங்கம். 2. Leo of the Zodiac, சிங்கராசி.

கொடுவரி, *s.* A tiger, புலி.

கொடுவாய், *s.* A savage kind of animal, the hyena, ஓர்மிருகம். 2. A kind of fish, ஓர்மீன். 3. Slander, aspersion, வெறும்புறங்கூறுகை.

கொடுவாளை, *s.* The கொடுவாய் fish.

கொடுவாள் — கொடுவாட்கத்தி, *s.* A long curved knife or garden hook.

கொடுவினை, *s.* Heinous deeds, vile acts, vice, பாவம்.

கொடுவிஷம், *s.* Malignant poison, venom. 2. A kind of native arsenic, வெள்ளைபாஷாணம்.

கொடியபீசம், *s.* A kind of arsenic, சிதாங்கபாஷாணம்.

கொடும்பை, *s.* A mountain rivulet; a cascade, அருவி. 2. A tank, குளம். 3. A gutter, a drain, தூம்பு. 4. A kind of evergreen, ஓர்பச்சிலை.

கொடுவேலி, *s.* A shrub, கொடிவேலி.

கொடூரம், *s.* [*prop.* குரூரம்.] Severity, cruelty, harshness, vehemence. (*c.*)

கொடை, *v. noun.* Giving or a gift, present, donation, ஈகை. 2. Liberal giving; [*ex* கொடு, *v.*] For three kinds of கொடை, see தானம்.

கொடுக்கிறகொடையோ. Is he one that we could have spared? Spoken of a death as an irretrievable loss.

கொடைகொடுத்தல், *v. noun.* Giving large gifts or donations. 2. Affronting, using abusive language.

கொடைக்கூலி, *s.* [*prop.* குடிக்கூலி.] House rent. (*c.*)

கொடைத்தம்பம், *s.* A column or pillar set up in remembrance of extraordinary munificence.

கொடைமடம், *s.* Unlimited or unrestrained liberality, (*lit.*) a gift that knows no bound; [*ex* மடம்.]

கொடைமறுக்க, *inf.* To refuse to give.

கொடையாளன் — கொடையாளி, *s.* A liberal man; a donor, a contributor.

கொடைவினா, *s.* One of the six kinds of interrogation, indicating willingness to give—as சாத்தனுக்காடையில்லையா? See வினா.

கொடைவீரம், *s.* Excessive, unrivalled liberality—as the voluntary sacrifice of one's life for another.

கொடாதகொடை, *s.* Gifts bestowed improperly, as to unworthy persons, or being too valuable, sacred, &c., to be given. 2. [*local.*] Scurrilous language.

கொட்கு, கிறது, கொட்கினது,ம், கொட்க, *v. n.* To whirl, revolve, சுழல. 2. To come to view or notice, வெளிப்பட. (குற. அதி. 67.)

கொட்டகை—கொட்டகம், *s.* [*prop.* கொட்டம்.] A shed with sloping roofs; also, a cow-house, cow-stall, தொழுவம்.

கொட்டங்கச்சி—கொட்டாங்கச்சி, *s.* [*vul.*] The half of a cocoanut shell, தேங்காயோடு; [*ex* கொட்டன், *et* கச்சி.]

கொட்டடி, *s.* [*prop.* கொட்டறை.] Store room in a market place; any room where grain is emptied or poured out for sale, or use, சாமானறை; [*ex* கொட்டு, *v.*]

கொட்டணை, *s.* A kind of herb growing in marshy places, ஓர்பூடு.

கொட்டம், *s.* A cow-stall—as கொட்டம், தொழுவம். (*Sans. Kótt'a.*) 2. [*local.*] Mettle, petulancy, mischievousness, அகெடிப்பு. 3. A hollow piece of bamboo for giving medicine to cattle, மூங்கிற்கொட்டு. 4. (*Rott.*) A certain medicine, ஓர்மருந்து.

கொட்டக்காரன், *s.* A mischievous person.

கொட்டறை, *s.* As கொட்டடி.

கொட்டன்—கொட்டான், *s.* [*prov.*] A mallet, கொட்டாப்புளி; [*ex* கொட்டு, beat] 2. A fat man or beast, பருத்தவன்; [*ex* கொட்டு, trunk.] 3. [as used at the threshing floor.] A cocoanut, தேங்காய்.

கொட்டன்கட்டை, *s.* A mallet.

கொட்டாப்பிக்க, *inf.* [*prov.* in harvest.] To eat—as men, or beasts.

நடையன்பொலியைக்கொட்டாப்பிக்குது. The bullock feeds on the threshed rice.

கொட்டாப்புளி—கொட்டாப்பிடி, *s* [*local.*] A beater, an instrument for beating; a beetle or mallet.

கொட்டாமட்டை, *s.* [*prov.*] The stem of a palmyra leaf grown fibrous and tough from the leaf being cut off when young.

கொட்டாய், *s.* [*vul.*] A shed. See கொட்டகை.

•கொட்டாரம், *s.* The front entrance of a palace, &c., முதல்வாசல். 2. An elephant stall, யானைச்சாலை. *Sans. Kótt'ara.*

கொட்டாவி, *s.* Gape, yawn, yawning, oscitation, வாயால்விடுகெட்டுயிர்ப்பு.

கொட்டாவிகொள்ள— கொட்டாவிவிட, *inf.* To gape, to yawn, to oscitate.

கொட்டாவிவிட்டதுபோற் கூற்றன் வரும்போது விட்டாவி போவதுவே மெய். When death comes, the soul (breath) leaves the body, as breath in gaping.

எட்டாதகொப்பிலிருக்கின்றதேனுக்குநொட்டி பெட்டிக்கொட்டாவிகொள்ளுமுடவனைப்போல். Like the lame who yawn and stretch forth their arms towards the honey on a distant branch.

நித்திரைக்கொட்டாவி, *s.* Yawning from drowsiness.

கொட்டான், *s.* [*vul.* for குட்டான்.]

•கொட்டி, *s.* A plant of different species, ஓர்பூடு. Aponogeton monostachyon. The varieties are 1. கருங்கொட்டி. 2. காறற்கொட்டி 3 குளக்கொட்டி. 4. தண்டற்கொட்டி. which see severally.

கொட்டிக்கிழங்கு, *s.* The eatable root of கொட்டி.

கொட்டியம், *s.* A bull, an ox, எருது. 2. A number of pack-bullocks, பொதிமெருதுமந்தை; [*ex* கொட்டம்.]

கொட்டில், *s.* A place of shelter, a retreat, ஒதுக்கிடம். 2. A cow-house, cow-stall, மாட்டுக்கொட்டில்.

கொட்டு, *s.* A small hoe; a spade, மண்வெட்டி. 2. The body, சரீரம். 3 The barrel of a drum, மத்தளகொட்டு. 4. [*prov.*] The trunk of a palmyra tree, பனைத்தண்டு.

உயிரங்கேகொட்டிங்கே. His body is here, but his soul (mind) is there.

கொட்டுக்கிணறு, *s.* [*prov.*] A well walled with hollow palmyra trunks.

கொட்டு, கிறேன், கொட்டினேன், வேன், கொட்ட, *v. a.* To strike, to beat a drum, a tambourine, &c., to play on an instrument of music, பறைமுதலானவைகொட்ட. 2. To hammer, beat, malleate—as a brazier, கம்மியடிக்க. 3. To clap the hands, கைகொட்ட. 4. To dance—as in the கும்மி dance; to frolic, கும்மியடித்தாட. 5. To clap or stick on, to daub sandal or fragrant pastes on the body, அப்ப. (*p.*) 6. To sting—as a reptile or insect, தேள்முதலியகொட்ட. 7. To cuff, குட்ட. 8. (*Sans. Khóta.*) Wils. p. 275. To cast, pour out—as corn, sand, &c., from a basket, or sack; to throw or cast into a vessel, sack, &c.; to pour forth, போட. 9. To shed—as leaves, fruits, &c., சொரிய. 10. *v. n.* To be shed or cast out, to fall, சிந்த.

கொட்டினாற்றேள் கொட்டாவிட்டாற்பிள்ளைப்பூச்சி. If it sting, it is a scorpion; if not, it is a harmless gryllus; i. e. we call things good or bad according to their effect on us.

கொட்டிக்கொட்டியளக்க, *inf.* To cast down and measure again and again; i. e. to repeat a thing over and over; to let out every thing.

கொட்டிக்கொட்டியளந்தாலுங்குறுணிபதக்காகாது. Though you measure over and over again, one marcal will not make two.

காப்பன்அள்ளிக்கொட்டிப்போட்டது. An eruption has broken out all over the body.

பனிகொட்டுகிறது. The dew falls heavily.

கொட்டிக்கொடுக்க, *inf.* To pour out and give, to give to excess, to lavish, to squander. 2. (*fig.*) To make a display of words, to say more than is proper.

சப்பாணிகொட்ட, *inf.* To clap hands—as infants in play. See சப்பாணி.

கொட்டு, *v. noun.* Beating, drumming, malleating, &c. See கொட்டு, *v.*

கொட்டுக்கன்னார், *s.* Braziers who work by beating, not casting.

கொட்டுக்காரர், *s.* [*prov.*] Drummers—as a caste.

கொட்டுக்கிடாரம், *s.* A large brass boiler made by beating.

கொட்டுக்கூடை, *s.* A metal vessel. 2. A cup-shaped basket.

கொட்டுண்ண, *inf.* To be shed, as leaves, fruits, &c.; to be shot out; to be spilt—as sand, flour, &c.

கொட்டுமுழக்கு, *v. noun.* Beating of drums; an exhibition of drumming.

கொட்டுமுறி, *s.* A superior kind of brass.

கொட்டுமண், *s.* Earth thrown down to improve land, repair a road, &c.; *made soil* [in opp. to நிலமண்.]

கொட்டுமரம், *s.* A dyer's block for beating cloth, that it may take the dye.

கொட்டுமேளம், *s.* A kind of drum. 2. Drumming.

கொட்டுவாய், *s.* The part stung by a scorpion or other reptile.

கொட்டுவான், *s.* [*prov.*] A scorpion, தேள். 2. Mallet, கொட்டாப்புளி. 3. As கொட்டுக்கன்னர்.

கொட்டுவேலை, *s.* [*in braziery.*] Beaten work—as distinguished from வார்ப்புவேலை, cast-work.

கொட்டை, *s.* Seeds of any kind, not enclosed in chaff or husk; a nut, வித்து. 2. The stone, kernel or seed of a fruit, பழத்தின்கொட்டை. 3. Testicles, பீசம் 4. Rolls of cotton or flax prepared for spinning, பஞ்சுக்கொட்டை. 5. A plug or tent of cloth to widen the hole in the ear for jewels, திரி. 6. A kind of female ear ornament, ஓர்காதணி. 7. The knob of a wooden sandal, பாதகுறட்டின்குமிழ். 8. A pad for the head in carrying a load, சும்மாடு. 9. A bolster, a pillow; a cushion, தலையணை. 10. The pericarp of the lotus flower, with which the female body is compared for softness, தாமரைக்கொட்டை. 11. [*prov.*] The fruit buds of the jack tree, பலாப்பிஞ்சு.

கொட்டைகட்ட, *inf.* To gamble with இருப்பை seeds, ஓர்விளையாட்டு.

கொட்டைக்காய், *s.* A seedy or stony fruit; any fruit the stones or seeds of which are large, or numerous, in proportion to the pulp.

கொட்டைக்கச்சி—கொட்டைக்கையில், *s.* [*prov. vul.*] The half of a cocoanut shell. See கொட்டங்கைச்சி.

கொட்டைக்குவிட, *inf.* To let a plant go to seed.

கொட்டைச்செத்தல் – கொட்டைத்தேங்காய், *s.* [*prov.*] A dry cocoanut in which the kernel rattles, கொப்பரைத்தேங்காய்.

கொட்டைநூற்க, *inf.* To spin cotton, flax, &c.

கப்பலோடிப்பட்டகடன் கொட்டைநூற்றுத்தீருமோ. Will the debt contracted by a ship merchant be paid by spinning cotton?

கொட்டைபுதைக்க – கொட்டைதாழ்க்க, *inf.* To plant fruit stones.

கொட்டைப்பாக்கு, *s.* An entire areka-nut dried without boiling.

கொட்டைப்புளி, *s.* Pulp of tamarind fruit with the stones.

கொட்டைபோட, *inf.* To place seeds in garden beds, or to bury palmyra stones in the ground to grow. 2. To form the fruit buds—as the jack tree. 3. [*vul. local.*] To die, சாக.

கொட்டைப்பெட்டி, *s.* A kind of basket for betel-nut, &c. 2. A basket for rolled cotton prepared for spinning.

கொட்டைமுதல், *s.* [*prov.*] Capital in ready money, கைமுதல்.

கொட்டைமுத்து, *s.* The seeds or kernel of ஆமணக்கு.

கொட்டைமுந்திரிகை, *s.* The cashew-nut tree, முந்திரிகைமரம், Anacardium, *L.*

கொட்டையிட, *inf.* To make rolls of cotton.

கொட்டைக்கரந்தை, *s.* A plant. See கரந்தை.

கொட்டையிலந்தை, *s.* A tree, Ziziphus xylopyrus.

கொட்பு, *s.* Whirling, revolving, gyration—as கொட்கல், சுழற்சி. 2. Wandering, rambling, going about, திரிவு. 3 A circular motion. 4. A flexture, bend, வளைவு; [*ex* கொட்கு, *v.*]

கொணர், கிறேன், ந்தேன், வேன், கொணர, *v. a.* To bring, convey, கொண்டுவா. The imperative of this verb is sometimes, கொணு—as ஆவைக்கொணு, bring the cow.

கொண்கன், *s.* A husband, a lover, கணவன். 2. The ruler of a maritime district, நெய்தனிலத்தலைவன்; [*ex* கொள்.] Compare கொண்டான் and கொழுநன்.

கொண்டகுளம், *s.* A poisonous, bitter tree, எட்டி. (*M. Dic.*)

கொண்டக்காரர், *s.* [*vul.*] A low class of fishermen, மீன்காரரிலோர்வகுப்பு.

கொண்டக்கிரி, *s.* A mode of singing, ஓர்பண்.

கொண்டச்சானி, *s.* A plant, நஞ்சறுப்பான், Asclepias, *L.* (*M. Dic.*)

கொண்டச்சானிக்கிழங்கு, *s.* The root of this plant.

கொண்டம், *s.* A plant, குறிஞ்சா.

கொண்டலாத்தி, *s.* The name of a crested bird; the houp, Upupa Epops.

பெருங்கொண்டலாத்தி, *s.* The large kind of it—as பழுக்கொத்தி.

கொண்டல், *s.* The east wind, கீழ்காற்று. 2. The wind of the first dewy season, முன்பனிப்பருவக்காற்று. 3. [*in seamen's language.*] The east, கிழக்கு; [*ex* குணக்கு, east.] For orthography, compare தென்றல், வாடை and கோடை. 4. Cloud, மேகம். 5. A kind of play of females, கொண்டான்விளையாட்டு.

கொண்டலடிக்க, *inf.* To play the கொண்டல் play.

கொண்டல்வண்ணன், *s.* Vishnu, commonly in the person of Rama or Krishna—as resembling in color the dark clouds.

கொண்டாடு, கிறேன், கொண்டாடினேன், வேன், கொண்டாட, *v. n.* To enjoy another's society, to take pleasure in one's company, கூடிவிளையாட. 2 To be free and social in dealings, &c., குலாவ. 3. To enjoy social festivity. 4. *v. a.* To praise, to extol, to applaud, புகழ. 5. To celebrate, to observe; to solemnize—as a festival, a holiday, &c., கைக்கொள்ள. 6. To fondle, to caress, சீராட்ட; [*ex* கொள், *et* ஆடு, *v.*]

குழந்தையுந்தெய்வமுங்கொண்டாடினவிடத்திலே. Children and deities delight to be where they are praised.

துக்கங்கொண்டாட, *inf.* To mourn, to express grief by exterior indications.

பெருநாட்கொண்டாட, *inf.* To celebrate a holiday.

கொண்டாட்டம் — கொண்டாட்டு, *v. noun.* Social enjoyment. 2. Free intercourse, dealing, &c 3. Celebration, solemnization of a feast, &c. 4. Joviality, festivity. 5. Joy, delight. 6. Praise, applause.

உவாத்தியாயரில்லாதிருந்தாற் பிள்ளைகளுக்குக்கொண்டாட்டம். If the master be absent, the scholars will frolic.

கொண்டாட்டக்காரன், *s.* A polite, cheerful or social man. 2. An associate, a companion.

கொண்டாட்டம்பண்ண, *inf.* To observe a festival. 2. To make mirth. 3. To associate; to deal with.

கொண்டி, *s.* [*local.*] The corner pin for a hinge of a native door—as கொண்டை, கதவுக்குமிழ். 2. Pillage, plunder, ravage—as கொள்ளை.

கொண்டியாய்த்திரிகிறான். He is sauntering about.

கொண்டிக்கதவு, *s.* A door that turns with a pin at the upper corner.

கொண்டிமாடு, *s.* A thievish, stray cow or bullock.

கொண்டிமேய, *inf.* To graze thievishly where not allowed.

கொண்டிப்பணம், *s.* The fine imposed for கொண்டிமேய்தல்.

கொண்டியம், *s.* Slander, aspersion, backbiting, defamation, வெறும்புறங்கூறுதல்.

கொண்டியாரம் *s.* [*prov.* from கொண்டியம்.] Invective, நிந்தை. 2. Haughtiness, pride, insolence, செருக்கு. 3. Meddling, officiousness, பிறர்காரியத்திறகையிடுகை. 4. Superbness, elegance, nicety, சிறப்பு.

கொண்டியாரமாய்ப்பேச, *inf.* To speak politely, courteously, elegantly.

கொண்டேசன், *s.* Dry ginger, சுக்கு.

கொண்டை, *s.* Hair tied behind or on one side, மயிர்முடி. (See பால்.) 2. The corner pin of a door for a hinge. (See குமிழ்.) 3. The crest of some birds, பறவைச்சூட்டு. 4. A knob, a round top—as the head of a nail, style, &c, ஆணிமுதலியவற்றின்தலை. —*Note.* அம்மைக்கொண்டை, அள்ளுகொண்டை, உச்சிகொண்டை, ஒழுகுகொண்டை, கன்னக்கொண்டை, கீல்க்கொண்டை, சுருட்கொண்டை, சொருகுகொண்டை, are different kinds of tufts of hair tied on the head.

உன்கொண்டைகொலைய. Mayest thou be deprived of thy husband. *A curse.*

கொண்டைகட்ட—கொண்டைமுடிக்க—கொண்டைபோட, *inf.* To tie the hair knot.

கொண்டைக்காரன், *s.* One who wears a knot of hair, மயிர்முடியுள்ளோன். 2. [*local.*] An honorable person—as distinguished by a knot of hair, மேன்மையுடையவன். 3. [*in cant.*] A proud person, செருக்கன்.

கொண்டைகட்டி, *s.* One of a class of வேளாளர்.

கொண்டைகுலைக்க — கொண்டையவிழ்க்க, *inf.* To untie or loose the hair knot.

கொண்டைக்கரிச்சான், *s.* A species of the கரிச்சான் bird.

கொண்டைக்கிளாறு—கொண்டைச்சி, *s.* [*prov.*] A crested kind of bird—as கொண்டலாத்தி.

கொண்டைக்குச்சு—கொண்டையூசி, *s.* A hair-pin. See under குச்சு.

கொண்டைச்சுத்தியல், *s.* [*prov.* கொண்டைச்சுத்தி.] A goldsmith's or brazier's hammer, round-faced, ஓர்கருவி.

கொண்டைதிருகி, *s.* The hole in the sill into which the corner pin of a door is fitted.

கொண்டைத்துலா, *s.* A crest-like projection at the end of a well-sweep to keep the rope, &c., from slipping off.

கொண்டைமுசு, *s.* [*vul.* கொண்டைமுசறு.] A kind of monkey, ஓர்குரங்கு.

கொண்டையன், s. [prov.] A crested species of kite, நர்ப்பருந்து.

கொண்டையாணி, s. A nail with a head.

கொண்டைலாத்தி s. As கொண்டலாத்தி.

கொண்மூ, s. Cloud, மேகம். 2. Air; ether. ஆகாயம்.

கொதி, v. noun. Bubbling up, as boiling water, நீர்க்கொதி. 2. Heat in the body, சூடு. 3. Anger, rage, கோபம். 4. Fever, febrile symptoms in the body, காய்ச்சல். 5. Slight diarrhœa. கொதிக்கழிச்சல். 6. Grief, sorrow,regret yearning, துக்கம்; [ex கொதி,v.] இன்னமொருகொதியிலேவெந்துபோம். It will be done with one boiling up.

கொதிகொள்ள, inf. To cause heat and slight fever or diarrhœa in the body.

கொதியிறக்க—கொதியெடுக்க, inf. To subdue one's pride.

கொதியெண்ணி, s. [prov.] One wholly engrossed in looking for his food; (lit.) watching or counting the boiling of the pot.

கொதியெண்ணெய், s. Medicinal oil, boiled but not strained.

கொதியெழும்ப, inf. To be increased—as heat from the earth after a slight shower. 2. To have a slight internal fever.

மாந்தக்கொதி, s. Fever in children from indigestion.

வாதக்கொதி, s. Fever from plethoric humors.

வெப்புக்கொதி, [prov.] Slight fever.

சிலேட்டுமக்கொதி, s. [prov.] Fever from phlegmatic humors.

பித்தக்கொதி, s. Fever from bilious humors.

வயிற்றுக்கொதி, s. Hunger, 2. A slight diarrhœa from heat.

கண்கொதி, s. [prov.] Blight from an evil eye, or a malign look.

கொதி, க்கிறது, த்தது, க்கும், க்க, v.n. To boil, bubble up from heat; to effervesce; to ferment, பொங்க. 2. To feel hot to the touch, to feel hot in the body, சுட. 3. To have a slight fever in the system; to burn with fever, காங்கை. 4. To have slight diarrhœa from heat or cold, வயிறூழுக்க. 5. To throb with pain, கடுக்க. 6. To be inflamed with anger; to be offended, கோபிக்க. 7. To yearn, to be moved with pity, sorrow, &c., பரிதபிக்க. 8. To burn, to be affected with pain—as the heart, மனநோக. 9. To be heated—as the ground, fruits, &c., by a slight shower after a dry weather, நிலமுதலியகொதிக்க.

என்மனக்கொதிக்கிறது. My heart burns; I am grieved, I feel jealous.

கொதிகஞ்சி, s. Heated conjee.

கொதிகருப்பநீர், s. [prov.] Heated sweet toddy.

கொதிதண்ணீர், s. Seething water with rice. 2. Boiling water, வெந்நீர்.

கொதிக்கவைக்க, inf. To set to boil. 2 To boil slightly and hastily. 2. To cook curry, &c., in small quantities, showing the haste or poverty of the person.

கொதிகொதிக்க, inf. To bubble up—as boiling rice.

கொதிகொதியென, inf. [impr. கொதுகொதென.] To throb.

கொதிப்பு—கொதியல், v. noun. Boiling, bubbling up, effervescence, பொங்குகை. 2 Raging, angry feeling, மூர்க்கம். 3. Throbbing. துடிப்பு. 4. Heat of fever, காய்ச்சல். 5 Heat. சூடு.

கொதிப்பெடுக்க, inf. To begin to bubble.

கொதிப்பிக்க, inf. (Causative of கொதி.) To cause to boil. to boil, கொதிக்கப்பண்ண. 2. To cook hastily and slightly, விரைவிற்சமைக்க.

கொதுகு, s. A class of flies, gnats—as கொசு.

கொதுக்குக்கொதுக்கெனல், v. noun. [local.] Sounding kotuk kotuk, ஒலிக்குறிப்பு.

கொத்தமல்லி, s. Coriander seed, Coriandrum sativum, L.

கொத்தமல்லிச்சூரணம், s. A medicinal powder, the chief ingredient of which is coriander.

கொத்தமல்லியம்மை—கொத்தமல்லி வசூரி, s. Chicken-pox. See கொப்புளிப்பான்.

கொத்தம், s. A limit, boundary; the utmost extent எல்லை, (சது.); but in நிகண்டு, it is கொற்றம்.

கொத்தவால், s. (Hind.) A cutwal, the police overseer of the bazaars, &c., in a town or village. ஓர்உத்தியோகஸ்தன்.

கொத்தவாற்சாவடி, s. Cutwal's office or choultry.

கொத்தவாற்சேவகன், s. A peon under a cutwal.

கொத்தளம், s. A bulwark, a bastion, a rampart, அரண்.

கொத்தளி, s. A mat made of rushes, கோரைப்பாய். (சிக.)

கொத்தனே, s. A kind of fish, ஓர்மீன்.

கொத்தன், s. [prop. கொற்றன்.] A mason.

கொத்தான், s. A twiggy plant, ஓர்செடி, Cassyta filiformis. L. There are different kinds—as எருமைக்கொத்தான், கொடிக்கொத்தான், பசுங்கொத்தான், முடக்கொத்தான், which see.

கொத்து, s. A bunch, a cluster, a collection of things of the same kind, பூமுதலியவற்றின்கொத்து. 2. Assembly, multitude, crowd, திரள். 3. Household, family, குடும்பம். 4. [prov.] A measure—about a quart, நாழி. 5. The work of a mason, masonry—as கொற்று. 6. [vul. local.] Food, உணவு.

அவன்கொத்தக்கொடியையறிவேன். I know the stock and ramifications of his family.

இதற்கெத்தனைகொத்தசெல்லும். How many masons does this require.

கொத்தடிமை, s. A slave of the original stock.

கொத்தடிமைகுடியடிமை, s. A slave in a branch of the original stock.

கொத்தலரி, s. A species of the oleander.

கொத்தழிய, inf. To lie waste or desolate; to be in ruins, நிர்மூலமாக.

கொத்தவரை, s. A kind of bean.

கொத்துக்கத்தரி, s. A kind of brinjal.

கொத்துச்சரப்பளி, s. A kind of gold chain for the neck; also written கொத்துச்சரப்பணி.

கொத்துச்சரம், s. Fine strings of small golden beads.

கொத்துத்தாழ்வடம், s. Fine strings of small sacred beads, interspersed with red coral, and united at the ends by a large sacred bead embedded in gold.

கொத்துப்பசளை, s. A plant, ஓர்பசளை.

கொத்துப்புடல், s. A creeper, ஓர்புடல்.

கொத்துமல்லி, s. See கொத்தமல்லி.

கொத்துமேகம்—கொத்துவானம், s. Freckled sky, a mackerel sky.

ஓலைக்கொத்து, s. A bunch of cadjans, or palmyra leaves.

கொத்துங்குறையுமாய், adv. [loc.] Partly unfinished.

கொத்துக்காரன், s. [local.] The head of a company of laborers—as of those engaged in reaping.

கொத்துணி, s. [prov.] A slave owned in common by several. 2. A garden owned by several.

கொத்துணிப்பங்கு, s. The share of several in common in the produce of a field. 2. The right of several to a slave in common.

கொத்து, கிறேன், கொத்தினேன், வேன், கொத்த. v. a. To grub, grub up, hoe, பூமியைக்கொத்த. 2. To pick, snap, or grab at a bait; to peck—as a bird, to pick up food, to pick or pluck off, to peck up suddenly—as squirrels, rats, &c. 3. To strike and bite—as a snake. 4. To chop, hack, mince, gash. 5. To carve, engrave.

கொத்தித்தெளிக்க, inf. To dig and sow the ground.

கொத்தித்தின்ன, inf. To pick up and eat—as a fowl.

கொத்திப்பிடுங்க, inf. To peck and tear; to feed upon a carcass—as ravens.

கொத்திப்போட, inf. To pick with the beak. 2. To pick up grain, &c.

கொத்தித்தள்ள, inf. To fell—as a tree, &c.

கொத்துவேலை, s. Carved work, engraving; statuary.

கொத்தி, appel n. [In combination,] a pecker—as in மீன்கொத்தி.

கொத்து, v. noun. Grubbing; mincing; pecking—as birds; grabbing—as fish; biting—as a serpent; engraving, gashing, &c., as the verb.

கொத்துக்கட்டி, s. [prov.] Clods hoed up.

கொத்துத்தூர்வை, s. [prov.] Hollowness or looseness of land by hoeing, soil loosened by hoeing.

கொத்தை, s. [vul.] Decay, rottenness, cariousness, blemish, சொத்தை.

கொத்தைநூல், s. Cotton yarn with particles of the pod adhering to it.

கொத்தைப்பல், s. Carious teeth.

கொத்தையாராய, inf. To examine cloth in order to pick out the particles of husk or pod.

கொத்தைபுடல், s. A scabby state of body.

கொத்தையும்நெருடுமானசீலை, *s.* Inferior cloth, rough and having particles of the fibrous covering of the cotton woven into it.

கொந்தளம், *s.* Women's hair, பெண்மயிர். 2. A lock of hair, மயிர்க்குழற்சி. (Comp குந்தளம்.) 3. A variety in dancing, கூத்தின் விகற்பம். (சது.) 4. The unicorn, காண்டாமிருகம்.

கொந்தளி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be boisterous, to roar, swell—as the sea, &c.; to rage—as anger; to storm, to bluster; to be tumultuous, பொங்கிப்பெழ.

கொந்தளிப்பு, *v. noun.* Boisterousness, vehemence, rage, roaring, commotion, turbulence, bluster.

கொந்தளிப்படங்க, *inf.* To become calm—as the boisterousness of the sea.

கொந்தாலி, *s.* [*prov.*] A kind of pick-axe with one prong only—as குந்தாலி.

கொந்தாழை, *s.* [*loc.*] A sea-weed, ஓர் கடற்றழை.

கொந்தாளம், *s.* [*prov.*] A drug which is an antidote to poison, ஓர்மருந்து.

கொந்து, *s.* A cluster of flowers—as கொத்து.

கொந்தழல், *s.* Fire issuing in many flames. (*p.*)

கொந்து, கிறது, கொந்தினது, ம், கொந்த, *v. a.* To peck, to pick, கொத்த. 2. To injure fruits by pecking, gnawing, &c., பழமுதலியனகொந்த. 3. *v. n.* To be enraged, furious; to be inflamed as with fury or anger, கோபமுள.

கொந்திக்குதறிவிட்டது. The reptiles, &c., injured them.

கொந்தல், *v. noun.* Picking, nibbling, கொந்துதல். 2. *s.* Fruits injured by birds, reptiles, &c., கொந்தப்பட்டகனி. 3. Anger, fury, கோபம். 4. A sign of anger.

கொந்தல்மாங்காய், *s.* [*prov.*] Mangoes injured or stinted in their growth.

கொப்பம், *s.* [*vul.*] A pit-fall for elephants, யானைபடுகுழி.

கொப்பரம், *s.* [*prov. a corruption of* கூர்ப்பரம், *elbow.*] A mode of grappling the arms in wrestling, மல்யுத்தத்திலோர்விதம்.

கொப்பரை—கொப்பரி, *s.* A brass or copper boiler, கடாரம். (சது.)

எண்ணெய்க்கொப்பரை, *s.* An oil-boiler, a caldron.

கொப்பரைத்தேங்காய், *s.* [*vul.* கொப்பரு.] The dry kernel of the cocoanut for oil, நீர்வற்றியதேங்காய்.

கொப்பளம், *s.* A blister, a pustule—as கொப்புளம்.

கொப்பளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To gargle, or rinse the mouth or throat, and cast out the liquid, உமிழ. 2. To drop, shed, let fall—as honey from flowers, சொரிய. See கொப்புளி, *v.*

நறவுகொப்பளிக்குந்தெரியல். A flower garland which drops honey. (நைட.)

கொப்பரு, *s.* [*prov. vul.*] As கொப்பரைத்தேங்காய்.

கொப்பாட்டன், *s.* [*prov.*] The father's great-grand father, மூன்றும்பாட்டன். In some places, கொள்பாட்டன்.

கொப்பி, *s.* [*vul. loc.*] A kind of women's play—as கும்மி.

கொப்பிகொட்டல், *v. noun.* Clapping the hands to the கும்மி dance.

கொப்பு, *s.* A branch, கொம்பு. 2. A female ornament for the upper part of the ear, காதணியிலொன்று. 3. (*Tel.*) A female tuft or knot of hair, கொண்டை.

கொப்பாந்தேன், *s.* [*prov.*] As கொம்புத்தேன்.

கொப்புவாளி, *s.* [*loc.*] A female ear ornament.

அன்னக்கொப்பு, *s.* An ear ornament. See under அன்னம்.

கலசக்கொப்பு, *s.* An ear ornament adorned with small gold cups.

சல்லடைக்கொப்பு, *s.* An ear ornament with a circle to cover part of the cavity of the ear.

சாதாக்கொப்பு, *s.* A plain ear ornament; [*ex* சாதா, plain.]

கொப்புளம், *s.* A blister, blain, pustule, vesicle of small or chicken pox, &c.

கொப்புளி, க்கிறது, த்தது, க்கும், க்க *v. n.* To rise in blisters, கொப்புளங்கொள்ள. 2. To drip, dribble, துளிக்க. 3. *v. a.* To spill, shed, சொரிய. (*p.*) 4. [*With a personal termination.*] To gargle the mouth or throat and cast out the liquid, உமிழ.

கொப்புளிப்பான், *s.* The chicken pox; also, measles, சிறவசூரி.

கொப்புள், *s.* A bubble, blubber, குமிழி. 2. Pustule, கொப்புளம். (சது.) 3. [*vul.*] Navel, கொப்பூழ்.

கொப்பூழ், *s.* [*com.* தொப்புள்.] The navel, umbilicus, உந்தி.

கொப்பூழறுக்க, *inf.* To cut the navel string of a new-born infant.

கொப்பூழைச்சுற்றிவலிக்க, *inf.* To have pain about the umbilical region from indigestion, &c.

கொப்பூழ்க்கொடி, *s.* The umbilical cord.

கொப்பென, *inf.* [*vul. adverbially.*] Quickly, swiftly, suddenly, விரைவுக்குறிப்பு.

கொப்பெனவந்தார்கள். They came quickly.

கொம்பர், *s.* A branch; a foot-stalk, a stem; a horn. A poetic form of கொம்பு.

கொம்பு, *s.* The horn of a beast, விலங்கின்கொம்பு. 2. A branch, மரக்கொம்பு. 3. The foot-stalk or stem of a flower, பூக்கொம்பு. (*p.*) 4. A narrow stick; a staff, pole, கோல். 5. A musical instrument; a cornet, horn, ஊதுகொம்பு. 6. A tusk of an elephant or hog, யானைமுதலியவற்றின்தந்தம். 7. The curl-like symbol in certain compound characters—as in கெ, பெ, &c., அக்கரத்தின்கோடு. 8. The bent front pole of a palankeen, சிவிகையின்கொம்பு. 9. (*fig.*) Eminence, greatness, மேன்மை. 10. [*loc.*] The outlet of a tank, ஏரிக்கோடி.

பறக்குங்குருவிக்கு இருக்குங்கொம்புதெரியாது, பரதேசிக்குத்தங்குமிடந்தெரியாது. The migrating bird knows not the branch on which it may roost; and the pilgrim knows not his halting place.

பழுத்தபழங்கொம்பிலிராது. The ripe fruit remains not on the branch; i. e., at the appointed time, the event will happen.

பிடித்தகொம்புமொடிந்தமிதித்தகொம்புமுறிந்தாற்போலானேன். I was like a man in whose hands and under whose feet the branches had given way; i. e. I was without support.

கொம்புசுற்றிக்காற்றடிக்கிறது. The wind blows and whirls around every branch.

எதுகொம்புமுளைத்துவிட்டதோ. Have his horns grown? used when a person shows pride, insubordination, &c.

கொம்படிக்க, *inf.* To butt—as oxen, buffaloes, rams, goats, &c. 2. (*fig.*) To assume authority, to be supercilious.

கொம்பனையாள்—கொம்பனாள், *s.* She whose waist is as tender and narrow as the stem of a flower. (*p.*)

கொம்பன், *s.* A tusked elephant or other beast. 2. A kind of cholera or small-pox.

கொம்பன்சுறா, *s.* The sword fish, (*lit.*) the horned shark.

கொம்பாள். *s.* [*loc.*] A man looking out from a tree. Sometimes கொம்பத்தாள்.

கொம்புத்தேன், *s.* [*prov.* கொப்பாந்தேன்.] Honey formed by bees on branches.

கொம்புப்பயறு. *s.* A kind of pulse.

கொம்புப்பாகல்—கொம்பன்பாகல். A kind of winding பாகல் creeper.

கொம்பாடவிடான். He suffers no one else to take the lead; assumes too much.

கொம்பேறிமூர்க்கன்-கொம்பேறிமூக்கன், *s.* [*loc.*] A long and dangerous snake living in trees.

அசைகொம்பு — ஆடுகொம்பு — தோற்கொம்பு, *s.* A moveable horn fixed in the skin.

கடைக்கொம்பு — உளிக்கொம்பு, *s.* Stump of a horn.

கவர்க்கொம்பு — கவட்டைக்கொம்பு — கிளைக்கொம்பு, *s.* A branched horn.

திருகுகொம்பு — முறுக்குக்கொம்பு, *s.* Winding or tortuous horn.

மட்டைக்கொம்பு - விரிகொம்பு, *s.* Horns extended on both sides.

முகக்கொம்பு— முன்கொம்பு, *s.* Horns setting down towards the ground.

மோழைக்கொம்பு, *s.* Horns hindered from growing by being burnt.

உச்சிக்கொம்பன், *s.* A beast with perpendicular horns near together.

ஏந்துகொம்பன், *s.* An elephant with curved tusks. 2. An ox with horns rising abruptly and projecting forward at the points.

ஒற்றைக்கொம்பன், *s.* An elephant with one tusk, the other being broken. 2. Ganésa. See ஒற்றை.

கணைக்கொம்பன், *s.* An ox with stunted horns.

கிளிக்கொம்பன், *s.* See under கிளி.

கூடுகொம்பன், *s.* An ox whose horns come near together at the points.

கூர்ங்கொம்பன், *s.* Sharp-horned ox.

கூழைக்கொம்பன், *s.* An ox with stubbed horns.

நாரைக்கொம்பன், *s.* [*prov.*] An ox with long white horns.

பவளக்கொம்பன், *s.* An elephant whose tusks resemble coral in color.

பிடிக்கொம்பன், *s.* Short-horned beast.

மாடைக்கொம்பன். *s.* A bullock with horns bent backwards.

முத்துக்கொம்பன், *s.* An elephant whose tusks, in color, resemble pearl.

விரிகொம்பன், *s.* An ox with spreading horns.

கொம்புக்காரன், s. [*prov.* கொம்பூதி.] A horn blower.

கொம்புக்கால், s. The ொ with ா—as ொா, with க—making கொ.

கொம்புகாவி, s. [*prov.*] A palankeen bearer; a term of reproach.

கொம்புப்பிறை, s. A கொம்பு with a பிறை—as ெ and ட with ன making னெ.

கொம்பூத—கொம்புபிடிக்க, *inf.* To blow a horn.

கொம்புமுளைத்தவன் கொம்பாயிள்ளை, s. [*ironically.*] A man of rank, wealth.

கொம்மட்டி, s. [*vul* குமட்டி.] A class of running plants of the melon or gourd kind, the water-melon plant, ஓர்கொடி, Cucurbita citrullus, *L.*

சர்க்கரைக்கொம்மட்டி, சிறுகொம்மட்டி, பெருங்கொம்மட்டி, பேய்க்கொம்மட்டி, வத்தாக்குக்கொம்மட்டி, are varieties of கொம்மட்டி. See those words.

கொம்மட்டிக்காய், s. A melon or gourd; water-melon.

கொம்மட்டிக்கீரை, s. A kind of greens. See under கீரை.

கொம்மட்டிச்சுரை, s. A kind of சுரை gourd; much used for curry.

கொம்மட்டிமாதளை, s. A kind of citron, ஓர்மாதளை. (*Rott.*)

கொம்மெனல், v. *noun.* Sounding imitatively—as *Kom.*, அநுகாரணவோசை. 2. A sign given by a sound, ஒலிக்குறிப்பு. (சது.)

கொம்மை, s. Conicalness, roundness, rotundity, திரட்சி. 2. Female breasts, முலை. 3. Beauty, அழகு. 4. Youth, juvenility, இளமை. 5. Circle, circularity, வட்டம். 6. Clapping the hands in play, கைவிரித்துக் கொட்டுகை. *Comp.* கும்மி. 7. Strength, வலி. (சது.) 8. A rampart, a bulwark, கொத்தளம். 9 (*Rott.*) A water-melon, கொம்மட்டி.

கொய், s. [*prov.*] The name of a fish, ஓர்மீன்.

கொய், கிறேன், தேன், வேன், ய, v. a. To crop or pluck fruits, flowers, ears of corn by the hand, &c., அறுக்க. 2. To prune, shear, crop off—as hair, &c.; to snip or cut off the head, &c., கத்தரிக்க. 3. [*vul.* கொய்சு.] To plait, pucker, gather a cloth into folds, சீலைகொய்ய. 4. [*prov.*] v. n. To experience dilatation and contraction—as in breathing, மூச்சுகொய்ய.

கொய்சகம், s. [*vul.* கொசுவம், *com.* கொய்யகம், கொய்சுவம்.] The plaited or gathered end of a woman's cloth, sometimes of a man's, சீலையின் கொய்சகம்.

கொய்துகட்ட—கொய்துடுக்க *inf.* To gather up the end of a cloth and fasten it round the waist.

கொய்துபிடிக்க, *inf.* To gather up a cloth, in a bunch and hold it in the hand.

கொய்யகச்சட்டி s. A chatty or pot with a kind of border or brim.

கொய்யுளை, s. A horse's mane, குதிரைப்பிடர்மயிர். 2 (சூடா.) A horse, குதிரை; [*ex* உளை, mane.]

தலைகொய்ய, *inf.* To cut off the head.

பூக்கொய்ய, *inf.* To crop flowers.

கொய்வு, v. *noun.* Plaiting. 2. Plucking, pruning.

கொய்யடி—கொய்யடிநாரை, s. A kind of heron or crane, ஓர்நாரை.

கொய்யா, s. The guava tree, ஓர்மரம். Psidium pyriferum, *L.*

கொய்யோவெனல்—கொய்யோக்கூறுதல்—கொய்யோமுறை, v. *noun.* Exclaiming, shouting, from pity or on account of victory, கொய்யோக்குறி.

கொரிக்கம், s. The எழுத்தாணிப்பூண்டு plant. (*M. Dic.*)

கொருடன், s. The கொவ்வை creeper. (*M. Dic.*)

கொலு, s. An erect, majestic, stately posture, &c., நிமிர்ச்சி. 2. The royal presence or that of an idol in the temple, சமுகம் 3. The presence-chamber, hall of audience, &c. கொலுமண்டபம். 4. (*Tel.* కొలువు.) Service, சேவை.

கொலுக்கட்டிக்கொண்டிருக்க, *inf.* To stand ready for service.

கொலுக்கூடம்—கொலுச்சாவடி, s. A court house.

கொலுமண்டபம், s. The presence chamber, the hall of audience. 2. A room in the temple where the idol sits in state.

கொலுவிருக்க—கொலுவீற்றிருக்க, *inf.* To sit or preside as a king, to sit in state.

கொலுவிருப்பு, v. *noun.* The sitting in state, as a king.

கொலுகொலு, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To become loose, disjointed, rickety, deranged in its parts, &c., கழல. (*c.*) 2 [*loc.*] To moulder, crumble into dust—as a dead body. 3. To be defeated in argument, &c., தோல்வியடைய.

எலும்பெல்லாங் கொலுகொலுவாய்த் தெரிகிறது.... The bones all stick out.

கொலுகொலுப்பு, v. *noun.* Becoming loose, disjointed.

கொலுகொலுவெனக்கழல, *inf.* To become loose, or disjointed.

கொலுகொலுப்பு, s. [*prov.*] Affectation, ostentation, vanity, ஆடம்பரம்.

கொலுசு, s. (*Tel.* గొలుసు.) A gold or silver chain for the wrist, or ankle, சங்கிலி. 2. (*R.*) As குளசு.

கொலை, s. Killing, slaying, slaughter, murder, assassination, butchery, உயிர்வதை 2. (*fig.*) The guilt of killing, கொலைக்குற்றம்; [*ex* கொல், kill.]

கொலைகாரன்—கொலையாளன், s. A murderer, an assassin. 2. An executioner 3. A killer, slaughterer, butcher.

கொலைக்களம், s. A place of public execution.

கொலைசூழ—கொலைசுற்ற, *inf.* To contrive or compass one's death. (*p.*) 2. To find out the guilt of murder.

கொலைசெய்ய, *inf.* To kill, slay; to commit murder, take away life, to butcher.

கொலைஞர், s. Assassins, murderers, killers, butchers, கொலைபாதகர். 2 Hunters; those who live by the chase, வேடர். (*p.*)

கொலைபாதகம், s. The crime or guilt of murder; taking away life, human or other—chiefly of men or cows; one of the five heinous sins. See பாதகம்.

கொலைபாதகன், s. A heinous killer, or murderer.

கொலைப்பழி, s. The blame or guilt of murder.

கொலைமறுத்தல், v. *noun.* Denouncing all killing. This is scrupulously done by Jainas under all circumstances.

கொலையுண்ண, *inf.* To be killed.

கொல், *part.* A poetic expletive—as in காணுங்கொல், he will see, அசைச்சொல். 2. A particle implying doubt; frequently interrogative or connected with interrogative forms—as in காணார்கொல், will they not see—ஐயக்கிளவி. 3. An imitative sound—as in கொல்லெனச்சிரித்தார்கள், they broke out into laughter, ஒலிக்குறிப்பு. 4. s. Suffering, distress, affliction, வருத்தம். (சது) 5. [With suitable prefixes.] Gold or iron. 6. The blacksmith's caste; a blacksmith, கொல்லன். 7. A mason's trowel, கொல்லறு. 8. (*loc.*) Brass or iron, nailed across a door, or gate, for strength, குறுக்குத்தாழ்.

கொல்லர், s. [*fem. sing.* கொல்லிச்சி.] Blacksmiths, கருமார். 2. Smiths in general—as in பொற்கொல்லர். 3. (*Hind.*) Treasure keepers, பொக்கசக்காப்போர்.

கொல்லன்தெருவிலேயூசிவிலைபோமோ. Can one barter needles in a blacksmith's street? i. e. you cannot impose on the experienced.

கொல்லச்சேவகர், s. As கொல்லர். 3. (*R.*)

செங்கொல், s. Gold, (*lit.*) yellow metal.

கருங்கொல், s. Iron, (*lit.*) dark metal.

கொல்லுலை, s. A blacksmith's forge.

கொல்லன்கம்மாலை, s. [*prov.*] A blacksmith's shop, smithery.

கொல்லன்கிட்டம், s. See கிட்டம்.

கொல்லுத்தடியாணி, s. [*loc.*] A large nail for studding doors or gates, to add to their strength, கதவிற்றைப்பாணி.

கொல்—கொல்லு, கிறேன், கொன்றேன், வேன், கொல்ல, v. a. To take life, kill, slay, murder, கொலைசெய்ய. 2. To deprive mercury of its metallic properties by oxidation; to kill mercury, &c, இரசமுதலியவற்றைக்கொல்ல. (*c.*) 3. (*fig.*) To vex, tease; to molest by continual importunity, அலட்ட.

அரசனன்றுகொல்லுந்தெய்வம்நின்றுகொல்லும். The king is swift in executing judgment, but God waits.

பார்க்கும்பார்வையேஆளைக்கொன்றுபோடும், [*prov.*] His stern looks are enough to kill one.

தன்னைக்கொல்லவரும்பசுவையுங்கொல்லவேண்டும். Even a cow that attacks one may be killed, i. e., we may destroy life in self-defence.

கொல்லத்தக்கசினம். Mortal wrath.

கொல்லாமற்கொல்ல, *inf.* To speak sarcastically, to put one to shame by sarcasm. 2. To do one a great injury, to ruin one. 3. To compass one's death indirectly. 4. To touch the heart, by returning good for evil.

கொல்லாமை, v. *noun (neg.)* Abstinence from killing, one of the virtues.

கொல்லாவிரதம், s. Vows to abstain from killing—as made by Jainas, Saivas, &c.

கொல்லாவேதம், s. The sacred books or religion of the Jainas, அருகர்வேதம்.

கொல்லாவேதன், *s.* Argha—as the teacher of கொல்லாவேதம், அருகன்.

சாகக்கொல்ல, *inf.* To kill, to kill utterly. 2. To harass, torment.

நன்றிகொல்ல, *inf.* To be ungrateful. 2. To abuse kindness. (குற.)

கொல்லி, *s.* That which kills—as in ஆட்கொல்லி, ஈர்கொல்லி, கன்றுகொல்லி, சோறுகொல்லி, தாயைக்கொல்லி, தந்தையைக்கொல்லி, பிள்ளைகொல்லி, மரக்கொல்லி, மீன்கொல்லி, முட்டைகொல்லி, &c. 2. A bow, வில். (*p.*) 3. Fire, as சேர்ந்தார்க்கொல்லி.

கொல்லிடம், *s.* The river Coleroon, commonly கொள்ளிடம்.

கொல்லியர், *s.* See இரங்கொல்லியர்.

கொல்லங்கொவ்வை — கொல்லங்கோவை, *s.* An air plant, ஆகாசகருடன்.

கொல்லம், *s.* The town of Quilon, ஓரூர்.

கொல்லம்பாகல், *s.* A kind of பாகல் plant, ஓர்பாகல். Bryonia garcini.

கொல்லறு, *s.* [*loc. vul.*] A mason's trowel, கரணை. *Compare* கொல்.

கொல்லற்றுக்காரன், *s.* A mason, a bricklayer.

கொல்லற்றுவேலை, *s.* Masonry.

கொல்லன்பகை, *s.* A kind of native arsenic, அஞ்சனபாஷாணம். (*R.*)

கொல்லி, *s.* A mode of singing, ஓர்பண். 2. A hill on the malabar coast, ஓர்மலை. See under கொல், *v.*

கொல்லித்திறம், *s.* A variety of the tune.

கொல்லியவராடி, *s.* A variety of the tune வராடி, ஓரிராகம்.

கொல்லிவெற்பன், *s.* Any king of the Séra dynasty as the owner of the கொல்லி hill, சேரன்.

கொல்லை, *s.* An enclosed garden, a field, புன்செய். 2. A grove, nursery, &c., சோலை. 3. A backyard, புறக்கடை.

கொல்லைக்குப்போக. To go to the enclosure, i. e., to go to stool.

கொல்லைக்காரன், *s.* The gardener, the owner or cultivator.

கொல்லைவாசல், *s.* The door of the backyard of a house.

கொல்லைவிளைவிக்க, *inf.* [*prov.*] To cultivate a garden.

புறக்கடைக்கொல்லை, *s.* A piece of ground on the skirts of a backyard.

கொல்லைப்பல்லி, *s.* A plant, ஓர்பூடு. Buchnera Asiatica, *L.*

அவன்கொல்லைக்குப்பல்லி,குடிக்குச்சகுனி. He is a பல்லி plant [*a destroyer*] to the garden and a சகுனி [*a disturber*] to the family.

கொவிந்தம், *s.* The செம்முள்ளி plant. (*M. Dic.*)

கொவிள் — கொவிளமரம், *s.* The mimosa tree, ஓர்மரம். Mimosa frondosa, *Nob.*

கொவிளம்பட்டை, *s.* The bark of the mimosa tree.

கொவ்வை, *s.* [*com. for* கோவை, *which see.*] A climbing plant noted for its red edible fruit, to which the lips are compared in poetry.

கொவ்வைக்காய்ப்பதம் — கொவ்வங்காய்ப்பதம், *s.* [*prov.*] A stage in the growth of rice when it is as tender and green as the கொவ்வை fruit.

அப்பைக்கொவ்வை, *s.* As அப்பை.

காக்கணங்கொவ்வை, *s.* As காக்கூறட்டை.

கொவ்வையங்கனி, *s.* The ripe fruit of கொவ்வை.

கொழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v.a.* To separate husk or bran, &c., from rice &c., by a fan, the second or third time, புடைக்க. 2. To cast ashore, to beat up sand, &c.—as the waves, ஒதுக்க. 3. To polish, to refine, தெளிய. 4. To carry away—as a river or flood, வார. 5. (*fig.*) To sift, criticize, to expose faults, குற்றங்கொழிக்க.

கொழிதமிழ், *s.* Refined or pure Tamil, தெளிதமிழ். (*p.*)

கொழிப்பு, *v. noun.* Separating; beating up by waves; exposing faults.

கொழியல்—கொழியலரிசி, *s.* Rice not well beaten and sifted, நன்றுய்க்குத்தப்படாதவரிசி.

ஒருகொழியல், *s.* [*prov.*] Rice once cleaned.

கொழிஞ்சி, *s.* The orange tree, as கொமுஞ்சி, கிச்சிலி, Citrus, *L.* 2. Trees or plants—as figs, &c, which have their flowers in the receptacle and bear without blossoming, பூவாதகாய்க்குமரம்.

கொழிப்பூண்டு, *s.* The குப்பைமேனி plant. (*M. Dic.*)

கொழு, *s.* A plough-share, a coulter, காறு. 2. *adj.* Fat, rich, &c. See கொழுமை.

கொழுச்சென்றவழிநுண்ணூசிசெல்லுமாபோல்...... Just as a small needle passes with ease through a passage made by a coulter.

கொழுக்கட்ட—கொழுத்தைக்க, *inf.* To fasten the iron point to the plough share. (*R.*)

கொழுச்சிராய், *s.* [*prov.*] A piece of wood which fastens the coulter to the plough.

கொழுத்தட்ட, *inf.* To sharpen the plough-share—a yearly practice.

கொழுமீதி—கொழுமுதல், *s.* The owner's portion of the produce of a field, deducting the rent to the government.

கொழுக்கட்டை, *s.* A kind of steamed cake, ஓர் சிற்றுண்டி.

பிடிக்கொழுக்கட்டை, இலைக்கொழுக்கட்டை and ஆவிக்கொழுக்கட்டை, are different kinds of கொழுக்கட்டை pastry.

கொழுக்கட்டைக்குத் தலையுமில்லைக் காலுமில்லை, குறவருக்கு நெறியுமில்லை முறையுமில்லை. The கொழுக்கட்டை cake has neither head nor foot, and the குறவர் people have no manners nor principle.

இருப்புக்கதவிடித்துத் தவிட்டுக்கொழுக்கட்டை யெடுக்கிறதா? Does one break through an iron door to steal cakes made of bran, i. e., no man of sense wearies himself for trifles.

*தீர்க்கம், *s.* That which is long, either in space or time; extension, நீட்சி. 2. Long vowel, நெட்டெழுத்து. W. p. 411. DEERGHA. 3. Distance, remoteness, தூரம். 4. Perfection, completeness, accurateness, thoroughness, பூரணம். 5. Distinctness in utterance, good articulation, உச்சரிப்பின்திறம். 6. (*Beschi*) Decision, positiveness, certainty, திட்டம். (*c.*)

தீர்க்கசதுரம், *s.* An oblong square, a parallellogram, நீண்டசதுரம்.

தீர்க்கசத்திரம், *s.* (*St.*) A sacrifice for twelve years, யாகவிசேஷம்.

தீர்க்கசந்தி, *s.* [*in gram.*] Changes in Sanscrit words, of two similar vowels, whether long or short, when they coalesce in one long vowel, வடவெழுத்துப்புணர்ச்சியுளொன்று.

தீர்க்கசிநேகம், *s.* Long continued friendship.

தீர்க்கசுமங்கலி, *s.* A woman blessed with long enjoyment of the marriage state, &c.; *used in congratulation.*

தீர்க்கதண்டம், *s.* The most submissive obeisance, or homage; prostration at full length with the arms extended, சாஷ்டாங்கதண்டம்.

தீர்க்கதரிசனம், *s.* (*Chris. usage.*) Distant sight, remote vision, foresight, prophesy.

தீர்க்கதரிசனஞ்சொல்ல, *inf.* To prophesy.

தீர்க்கதரிசனி, *s.* A prophetess.

தீர்க்கதரிசி, *s.* A seer, a prophet. W. p. 412. DEERGHADARSIN.

தீர்க்கதிருஷ்டி, *s.* A long sight.

தீர்க்கநித்திரை, *s.* Long sleep, நெடுந்துக்கம். 2. (*fig.*) Death, மரணம்.

தீர்க்கபாகு, *s.* A long arm, (*fig.*) a long armed man.

தீர்க்கம்போட, *inf.* To put the dash over a long vowel.

தீர்க்கயோசனை, *s.* A careful consideration.

தீர்க்கவசனம், *s.* Decisive language.

தீர்க்கவைரம், *s.* Continued, cherished hatred.

தீர்க்காயுசு, *s.* Long life, longevity. (*c.*)

தீர்க்காயுஷியம், *s.* Length of days; *a salutation.*

தீர்க்காயுதம், *s.* A spear or lance.

தீர்க்காலோசனை, *s.* Mature consideration.

தீர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To finish, complete, conclude, முடிக்க. 2. To settle, decide, determine, predestinate, தீர்மானிக்க. 3. To adjust a quarrel, bargain, marriage contract, &c., திட்டஞ்செய்ய. 4. To arbitrate, decide a law-suit, pass sentence as a judge, தீர்ப்புச்செய்ய. 5. To remove moral or ceremonial defilement, to expiate, நீக்க. 6. To remove affliction, sorrow, pain; to terminate births, as the Deity, விலக்க. 7. To satisfy hunger, desire, revenge, lust, &c., திருத்தியாக்க. 8. To accomplish, effect, fulfil, consummate, perfect, பூர்த்தியாக்க. (*c.*)

தீர்த்தறுத்துக்கொள்ள, *inf.* To drop acquaintance, terminate intercourse or dealings.

தீர்த்துக்கொடுக்க, *inf.* To settle the price and give up the commodity.

தீர்த்துக்கொள்ள, *inf.* To settle an account.

தீர்த்துப்போட—தீர்த்துவிட, *inf.* To settle a difference between parties. 2. To pay off.

தீர்த்தல், *v. noun.* A causing to leave or to quit, போக்குதல். (நீதிநெறிவிள.)

தீர்ப்பு, *v. noun.* Settlement, conclusion, completion, termination, consummation, முடிப்பு. 2. Decision, award, judgment, decree, sentence, நியமம். 3. Determination, resolution, தீர்மானம். 4. Clearance, removal, liquidation, remission, நிவிர்த்தி. 5. Antidote, atonement, expiation, பரிகரிப்பு.

தீர்ப்பானபேச்சு, *s.* A decision, conclusion.

தீர்ப்பானவிலை, *s.* A settled price—as தீர்மானமானவிலை.

தீர்ப்புக்கட்ட, *inf.* To make a decision, settle a business, to finish, decide, fix. 2. To form an opinion, judgment, &c.

தீர்ப்புக்காண, *inf.* To find out the result of a law-suit, &c. 2. To terminate, come to an issue—as a law-suit.

தீர்ப்புச்சொல்ல, *inf.* To speak decidedly. 2. To pass sentence, pronounce judgment. 3. To suggest a remedy, antidote, &c., or counteraction of a curse.

தீர்ப்புநகல், *s.* Copy of a decision.

தீர்ப்பெழுத, *inf.* To record a sentence, award, &c., as a judge.

*தீர்த்தகர் — தீர்த்தகரர், *s.* Rishis among the Jainas, சமணமுனிவர். W. p. 379. TEERTHAKARA.

*தீர்த்தம், *s.* (*Sa. Teertha.*) Ceremonial purity, சுத்தம். 2. Sacred rivers, or waters at a place of pilgrimage, or as brought from such place, புண்ணியதீர்த்தம். 3. Consecrated water used for washing an idol, which is afterward brought out and given to the people, especially on the last day of the festival, either to be drunk by them, or taken home for the sick to dispel diseases, திருமஞ்சனநீர். 4. Water consecrated for the sick, ஓதியிறைக்கும்நீர். 5. The merit of bathing on an auspicious day, புண்ணியகாலஸ்நானசத்தம். 6. A temple festival or procession, திருவிழா. 7. Water in common, நீர். 8. Water given by the brahman in court, in administering an oath, தனசிதீர்த்தம். (*c.*)—*Note.* The seven sacred rivers are the following, 1. கங்கை, Ganges; 2. யமுனை, Jumna; 3. சரச்சுவதி, Sarasvati which is northward of Delhi; 4. நருமதை, Nurbudha; 5. காவேரி, Kavery; 6. குமரி, Kumari at Cape Comorin; 7. கோதாவிரி, Godavery.

தீர்த்தங்கொடுக்க, *inf.* To distribute water, in which the idol has been washed.

தீர்த்தசேவை, *s.* Pilgrimage to holy bathing places.

தீர்த்தமாட, *inf.* To bathe in sacred waters. 2. To bathe as a part of the daily religious duties.

தீர்த்தயாத்திரை, *s.* Pilgrimage to a holy place for the purpose of bathing.

தீர்த்தர், *s.* (*plu.*) Devas, celestials, inhabitants of Swerga, கடவுளர். (சது)

தீர்த்தவாசி, *appel. n.* A pilgrim.

தீர்த்தன், *s.* Argha of the Jainas, அருகன். 2. Siva, சிவன். 3. Guru, குரு. 4. A teacher, especially of the Vedas, உபாத்தியாயன்.

*தீர்த்திகை, *s.* A river, ஆறு; [*ex* தீர்த்தம்.]

தீர்ப்பு, *v. noun.* See தீர், *v. a.*

தீர்மானம், *s.* Decision, determination, resolution, நியமம். 2. Settlement, conclusion, completion, முடிவு, 3. Decree, sentence, award, judgment, தீர்ப்பு. 4 Conclusion of the interlude, sung, played, &c., between stanzas, தாளத்தீர்ப்பு. 5. [*prov.*] Absoluteness, entireness, completeness, முழுமை. (*c.*)

தீர்மானக்கறுப்பு. Entirely, exclusively or absolutely black.

தீர்மானப்பட, *inf.* To be determined, decided, settled.

தீர்மானப்படுத்த—தீர்மானம்பண்ண, *inf.* To decide, settle, determine, finish.

தீர்மானமாய், *adv.* Definitively, positively, expressly, absolutely, entirely.

தீர்மானமானவிலை — தீர்மானவிலை, *s.* Fixed or settled price.

தீர்மானி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To determine, resolve, decide, நிருணயிக்க. 2. To conclude, finish, settle, bring to an issue, முடிக்க. 3. To appoint, fix, designate to an office, நியமிக்க. 4. To finish the interlude performed between stanzas in music, &c., தாளந்தீர்க்க. (*c.*)

தீர்மானிப்பு, *v. noun.* Determination, decision, conclusion, settlement, முடிப்பு. 2. Termination of the interlude performed between stanzas, தாளத்தீர்ப்பு.

தீர்வை, *s.* Decision, நியாயத்தீர்ப்பு. 2. Conclusion, issue, result, முடிவு. 3. Custom, duty, excise, toll, tax, impost, சுங்கம். 4. Divine judgment, fate, விதி. (*c.*) 5. [*loc. also* தீர்வைக்காரியம்.] Funeral obsequies, கருமாந்தம். 6. (சது.) A mungoose, கீரி.

தீர்வைகொடுக்க, *inf.* To pay duty.

தீர்வைச்சரக்கு, *s.* Customable goods.

தீர்வையிட, *inf.* To lay duty on goods.

தீர்வைத்துறைமுகம், *s.* A port where duty is received.

தீர்வைப்பணம், *s.* Toll-money, money paid for duty.

தீர்வையில்லாதசரக்கு, *s.* Goods not chargeable with duty.

தீர்வையெடுக்க, *inf.* To levy or receive duty. 2. [*prov.*] To obtain the copy of a decree from the court.

தீர்வைவிழ, *inf.* [*prov.*] To be passed as a decree, தீர்ப்பாக.

தீர்வு, *v. noun.* See தீர், *v. n.*

•தீவகம், *s.* Lighted lamp, flame, luminousness, தீபிகை. 2. [*in rhet.*] A word once used and then understood in the other parts of a sentence; embracing several varieties, but especially three, 1. முதனிலைத்தீவகம், a word used in the beginning of a sentence and understood in other parts; 2. இடைநிலைத்தீவகம், a word so used in the middle of a sentence; 3. கடைநிலைத்தீவகம், a word thus used at the end of a sentence. See தீபகம்.

தீவட்டி, *s.* [*prop.* தீவர்த்தி.] See தீ.

•தீவரம், *s.* [*prop.* தீவிரம், which see.] Haste, &c.

தீவர்த்தி, *s.* A flambeau, எரிபந்தம்.

தீவாணம், *s.* (*Arab.*) Government, a court of justice, நியாயஸ்தலம். See திவானி.

•தீவாளி, *s.* The lighting of lamps at the Deepâli feast in October. See தீபாவளி. (*c.*)

•தீவாந்தரம், *s.* See தீவு, *Sa.*

தீவான், *s.* (*Pers.*) A *deevan*, Mohammedan officer; *also* திவானம். 2. See தீவு.

தீவி, *s.* A tiger, புலி. (*சது.*)

•தீவிகை, *s.* A lamp, as தீபிகை.

தீவிதிராட்சம், *s.* (*for* தீவுதிராட்சம், *prop.* திராட்சம்.) A vine, கொடிமுந்திரிகை. (*R.*)

•தீவிரம், *s.* Speed, celerity, haste, expedition, சீக்கிரம். 2. Fury, rage, great anger, பெருங்கோபம். 3. Intensity, severity, கொடுமை. 4. Pungency, corrosiveness, sharpness; being biting, or piercing as the smell of hartshorn, &c., உறைப்பு. 5. (*சது.*) Ray of the sun, சூரியகிரணம். 6. Hell நரகம்.

தீவிரக்காரன், *s.* A person in a hurry.

தீவிரதர, *adj.* More rapid; [*ex* தர, comparative degree affix.]

தீவிரதரம், *s.* Rapidness, instantaneousness.

தீவிரபுத்தி, *s.* Ready wit.

தீவிரம்பண்ண, *s.* To hasten, to speed.

தீவிரி, க்கிறேன், த்தேன், ப்பேன், *v. a.* To hasten, speed, expedite, accelerate, quicken, சீக்கிரம்பண்ண. (*commonly* தீவிரப்படுத்த.) 2. *v. n.* To be intense, poignant, severe, fierce, &c., கொடுமையாயிருக்க.

தீவிளங்கும்வைரம், *s.* Ambergris, as மீனம்பர்; [*ex* தீ.] (*R.*)

தீவிளி, *s.* Immature fruit, காய். (*நிக.*)

தீவு, *s.* Lusciousness, deliciousness, sweetness, இனிமை. (*p.*) 2. See தீ, *v.*

தீவியகனி, *s.* [*prov.*] Sweet, luscious or delicious fruit.

தீவியதாட்சம் — தீவியதிராட்சம், *s.* A luscious grape.

தீவியது, *appel. n.* Any thing sweet or delicious, இனிப்பானது.

•தீவு, *s.* An island, கடலிடைக்குறை. 2. (*for* தீபம்.) Any one of the seven islands, or continents, supposed to form the world in which we dwell. They are most of them named from the trees said to grow in them; 1. நாவலந்தீவு, the continent on which we live, from the நாவல், or சம்பு tree, said to abound in it, south of மகாமேரு. 2. இறலித்தீவு, the next adjacent circumambient continent, named from that species of fig tree, Ficus, *L.* 3. குசைத்தீவு, named from குசை or Darb'ha grass. 4. கிரவுஞ்சம், from the bird அன்றில், inhabiting it. 5. புட்கரத்தீவு, from the lotus, said to be there. 6. தெங்கந்தீவு, as having many cocoa-nut-trees. 7. கமுகந்தீவு, abounding in the areca. In Sanscrit, Jambu, Kusa, Plaksha, Salmali, Krauncha, Saka, and Pushkara.

தீவாந்தரம், *s.* Foreign islands, அன்னியதீவு. 2. (*com.*) A remote island, தூரதீவு.

தீவான், *s.* (*pl.* தீவார்.) An islander.

தீவுக்குருவி, *s.* A foreign bird. (*R.*)

தீவுச்சரக்கு, *s.* Foreign merchandise.

தீவுதிராட்சம், *s.* A foreign vine.

தீழ்ப்பு, *s.* Uncleanness, meanness, &c., நீசத்தனம். (*c.*) See தீட்டு.

தீற்று, கிறேன், தீற்றினேன், வேன், தீற்ற, *v. a.* [*vul.* தீத்த.] To feed with the hand, to insert by small mouthfuls, ஊட்ட. 2. To put on an outer coat of mortar or clay, to clay, also to rub and polish plaster, மெழுக. 3. To insert mortar or clay in a hole or crevice, வெடிப்புமாற்ற. 4. To rub and smooth the folds of cloth after folding, சக்காட. 5. To glue or stiffen a strong cord, &c., with glue, &c., to prevent its untwisting, to smooth it, &c., கயிறுதீற்ற. 6. To clean the teeth, பல்லுவிளக்க. (*c.*)

தீற்றிப்போட, *inf.* As தீற்ற. 2. (*fig. prov.*) To give advice by stealth, secretly, &c.

தீற்றுக்கல், *s.* A stone with which to rub and polish plastered floor, மணியாசக்கல்.

தீற்றுப்பலகை, *s.* A board for polishing the plaster of a wall, மணியாசப்பலகை.

•தீனம், *s.* Poverty, indigence, need, distress, குறை. W. p. 410. DEENA. 2. Cruelty, injustice, severity, harshness, குரூரம்.

தீனபந்து, *s.* Deity, கடவுள். (*Vaishnuva usage.*)

தீனன், *s.* (*pl.* தீனர்.) Beggar, mendicant, இரப்போன்.

தீன், *s.* (*com.* தீனி.) Food, victuals, a meal, உணவு.

தீன்பண்டம், *s.* Eatables, as தின்பண்டம்.

பெருந்தீனிக்காரன், *s.* A glutton.

து

து. A syllabic letter compounded of த் and உ.

து. Termination of interrogatives, impersonal pronouns, and appellatives, in the singular, வினாமுதலிய வஃறிணைப்பெயர்ப் அஃறிணை ஒருமை விகுதி, as எது, which thing, இது, this thing, கரியது, that which is black. 2. Termination of the verb, in the first person singular, தன்மை ஒருமை வினை விகுதி, as யான் வருது, I will come. 3. A termination of verbs in the neuter gender, third person, singular number, அஃறிணையொருமைப் படர்க்கை வினைவிகுதி, as மாவந்தது, the cow came.

து, *s.* (*Hind.*) A sign of displeasure, இகழ்ச்சிக்குறிப்பு.

து, த்தேன், ப்பேன், *v. a.* (*imperfect. used in the past and future.*) To eat, take food, make a meal, உண்ண. 2. To enjoy by means of the senses, பொறிகளாலனுபவிக்க. 3. To experience pleasure or pain, suffer or enjoy the result of actions, அநுபவிக்க. (*p.*)

அதிதிகள்துத்தசேடம் அமிழ்தினுமினியவாகும். The food refused by the guests is more tasteful than ambrosia.

துப்பு, *v. noun.* Provisions, food, உணவு. 2. Experience, enjoyment, fruition, fruit of former deeds, அநுபவம். 3. Drink, beverage, பானம்.

துப்பார்க்குத்துப்பாயதுப்பாக்கி. Furnishing agreeable articles of food to those who eat. (*குறள்.*)

துகள், *s.* Dust, a particle of dust, புழுதி. 2. (*p.*) Fault, moral defect, flaw in character, conduct, &c., குற்றம். 3. Pollen, farina of flowers, பூந்தாது. (*சது.*)

துகளர்பெருஞ்செல்வம். Riches not acquired by unfair means. (*நாலடி.*)

துகள்பறக்க, *inf.* To fly as dust. (*c.*)

துகிரிகை, *s.* Sandal paste, cement, சாந்து. 2. A picture, painting, சித்திரம். (*சது.*)

துகிர், *s.* Red coral, பவளம.

துகிலிகை, *s.* A painter's pencil, எழுதுகோல். 2. A picture, as துகிரிகை. (*சது.*)

துகில், *s.* [*vul.* துயில்.] Cloth, clothes, dress, சீலை. 2. A banner as a badge of honor, விருதுக்கொடி. (*சது.*)

துகிற்கொடி, *s.* Flag, as துகில்.

துகிலின்பீசம், *s.* The seed of the cotton shrub. (*R.*)

செந்துகில், *s.* Ochre-colored vestments.

பொற்றுகில், *s.* Gold cloth, as பீதாம்பரம்.

துகினம், *s.* Dew, பனி. (*சது.*)

துகை, க்கிறேன், த்தேன், ப்பேன, க்க, *v. a.* To pound moist things, medicines, &c., in a mortar; to mash, இடித்துக்குழைக்க. 2. To tread down, trample on, bruise or destroy by treading, உழக்க. 3. To vex, வருத்த. See துவை.

துகையல், *v. noun.* A seasoning for food. See துவையல்.

துக்கடி, *s.* (*Hind.*) A division of a district, தலப்பெட்டது. (*c.*)

*துக்கம், *s.* Sorrow, distress, grief, sadness, regret, dejection, விசனம். 2. Pain, anguish especially of the mind, உபத்திரவம். (c.) W. p. 413. DUHKHA. 3. Hell, நரகம். 4. Defect, fault, natural or moral, குற்றம்.—*Note:* தசைத்திரயம், three species of sorrow are mentioned, for which see தாபத்திரயம்.

துக்கஉடுப்பு, *s.* A mourning dress.

துக்கன், *s.* One who is sad, one who is of a melancholy temper. (*R.*)

துக்கக்காரன், *s.* A mourner.

துக்கக்கோலம், *s.* A mourning state.

துக்கங்கொண்டாட—துக்கங்காக்க, *inf.* To mourn, express sorrow by exterior marks, to lament.

துக்கசாகரம், *s.* A sea of grief.

துக்கசாகரத்தில்முழுகினன். He is overwhelmed with grief.

துக்கநிவாரணம் — துக்கநிவிர்த்தி, *s.* Comfort, removal of affliction.

துக்கமாயிருக்க, *inf.* To be sorrowful.

துக்கமுகம், *s.* A sorrowful, dejected, down-cast countenance.

துக்கராகம், *s.* A mournful tune.

துக்கவீடு, *s.* A house of mourning, a funeral house.

துக்காணி, *s.* (*Tel.*) A copper coin of ten cash. (c.)

துக்கி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To sorrow, regret, mourn, grieve, விசனப்பட. 2. To be in affliction, distress of mind, &c., வருந்த. (c.)

துக்கிப்பு, *v. noun.* Sorrow, grief, distress, விசனப்படுகை.

*துக்கிதன், *s.* A mourner, துக்கிக்கிறவன்.

பாதுக்கதுக்கிதன். One who mourns with those who mourn.

துக்கு, *s.* (*Tel.*) Meanness, worthlessness, ஈனம். 2. (*fig.*) A useless person or thing, உதவாதது. 3. Rust, துப்பு.

துக்குப்பிடித்தவன், *appel. n.* A worthless person.

துக்குடி, *s.* See துக்கடி.

துக்குணி, *s.* [*vul.*] A little, அற்பம்.

துக்குணிபோதும். A little will do.

துக்கை, *s.* Menstruation, சூதகம். (*R.*)

துக்கைச்சி, *s.* A menstruous woman.

*துங்கதை, *s.* [*prov. for* துங்கம்.] Height, elevation, உயர்ச்சி. 2. Dignity, greatness, பெருமை.

*துங்கபத்திரி—துங்கபத்திரை, *s.* A river in the Mysore country, ஓர்நதி. W. p. 379. TUNGABHADRA.

*துங்கம், *s.* Height, elevation, upward tendency, உயர்ச்சி. 2. Dignity, exaltedness, neatness, பெருமை. (சது.) 3. Superior apsis, the apogee or aphelion of a planet, மந்தோச்சம். W. p. 379. TUNGA.

துங்கப்பீலிக்குடை, *s.* An umbrella from the feathers of the lofty peacock.

துங்கமந்தோச்சம், *s.* [*in astron.*] Aphelion of a heavenly body; [*ex* மந்தம், anomaly, *et* உச்சம், the meridian.]

துங்கமத்திமபுத்தி, *s.* Mean daily motion of moon's apogee.

துங்கன், *s.* An eminent man, உயர்ந்தோன். 2. (*in Hindu astronomy.*) The apogee of the moon, practically, the longitude of the apogee. As such, it is an element for equating the moon's place, மந்தோச்சம்.

*துங்கரிகம், *s.* Red ochre. சாவிக்கல். (*probably from* துங்கம் *et* சிகம், *heart*, the stone being red like that.) See கைரிகம்.

*துசகம், *s.* Pomegranate, மாதளை.

துசம், *s.* A kind of resin, குங்குலியம்.

*துசம், *s.* Banner, flag, கொடி, (*contraction of* துவசம்.) 2. (*Sa. Dvija*) What is twice born, as an oviparous animal, இருபிறப்புள்ளது. 3. A tooth, as twice produced, பல்.

துசங்கட்ட, *inf.* To engage in an enterprise with great energy, from the practice of hoisting a standard for battle, விடாமுயற்சிப்பட (c.)

துசன், *s.* A brahman, பார்ப்பான்.

துச்சம், *s.* Water melon, கொம்மட்டி. 2. A kind of melon, பேய்க்கொம்மட்டி.

*துச்சம், *s.* Lowness, meanness, vileness, அற்பம். 2. Emptiness, வெறுமை. W. p. 379. TUCHCHHA.

துச்சன், *s.* A mean, worthless fellow, அற்பன்.

*துச்சவனன், *s.* Indra as attacking the giant Chavana, இந்திரன். W. p. 417 DUSCHYAVANA.

*துச்சாதனன் — துச்சாசனன், *s.* The brother of துரியோதனன், துரியோதனன்தம்பி. W. p. 417. DUSS'ASANA.

துச்சி, *s.* [*prov.*] Eating, feeding, புசிப்பு. 2. Experience, fruition, good or evil as the result of actions—as துய்ப்பு.

துச்சிமை, *s.* (*a change of* துச்சம்.) Meanness, baseness, ஈனமை.

துச்சில், *s.* Place of retreat, shelter, resort, seat, ஒதுக்கிடம். 2. A crest, சூடு. (சது.) 3. (*fig.*) The body as a temporary abode of the soul, சரீரம். (குறள்.) [*ex* துஞ்ச *et* இல்.]

துஞ்சற, *adv.* [*prov.*] Absolutely, entirely, wholly, altogether, quite, perfectly, முழுமையும்.

துஞ்சு, கிறேன், துஞ்சினேன், வேன், துஞ்ச, *v. n.* To sleep, doze, drowse, slumber, உறங்க. 2. To be drowsy, sluggish, dull, மந்தமாயிருக்க. 3. To die, spoken auspiciously, சாவ. 4. To droop as persons or vegetables, faint away, சோர. 5. To abide, stay, be settled, continue, endure, நிலைபெற.

பயிர்துஞ்சிப்போயிற்று. The crop is drooping.

துஞ்சினவன்மிஞ்சியுண்ணான். He who sleeps much will have little appetite.

துஞ்சுமன், *s.* An indolent fellow, சோம்பன். (*R.*)

*துஷ். A change of துர், a Sanscrit prefix implying, evil, ill, &c. as துஷ்கருமம் for துர்க்கருமம், or improp. துற்கருமம். See துர்.

துடக்கம், *s.* [*prop.* தொடக்கம்.] Beginning, entering on an enterprise, &c.

துடக்கறுப்பான், *s.* A kind of plant, கொற்றான்கொடி, Cassyta, *L.*

துடக்கு, *s.* [*prop.* தொடக்கு.] Entanglement, tying, binding, contracting, தொந்தம். 2. Connection, concern, தொடர்ச்சி.

துடக்குகள்தீர்த்துப்போட்டான். He has cut off all connexion with us.

துடக்கு, *s.* Ceremonial impurity of child-birth, catamenia, death, &c., மகவீச்சூதகம். (c.)

துடக்குக்கழிக்க, *inf.* To dispel ceremonial uncleanness.

துடக்குக்காரர், *s.* Persons ceremonially unclean by a birth, death, &c.

துடக்குவீடு, *s.* A house ceremonially unclean.

துடக்கு, *v. a.* [*prop.* தொடக்கு, *which see.*] To tie, entangle, &c.

துடங்கு, *s.* [*prop.* தொடங்கு.] Shackles.

துடங்கு, *v. a.* [*prop.* தொடங்கு, *which see.*] To begin, &c.

துடப்பம், *s.* [*prop.* துடைப்பம்.] A broom, விளக்குமாறு.

துடரி, *s.* A kind of thorn-bush. See தொடரி.

துடர், *s.* A chain. See தொடர்.

துடர்ச்சி, *v. noun.* [*prop.* தொடர்ச்சி.] Continuation.

துடர்தல், *v. noun.* [*prop.* தொடர்தல.] Following after.

துடவை, *s.* Enclosed, cultivated field, உழவுகொல்லை. 2. Flower garden or grove, பூந்தோட்டம். (சது.)

துடி, *s.* Dance of the god Skanda, குமரனாடல். 2. Dances of the seven virgin goddesses, சத்தகன்னிகைகளாடல். (See மாதர்.) 3. Drum of hilly tracts, குறிஞ்சிநிலப்பறை. 4. Drum of barren tracts, பாலைநிலப்பறை. 5. The உடுக்கை drum. (See நிலை.) 6. A small portion of time, a minute, காலநுட்பம். 7. Cardamum, ஏலம். 8. The அகில் tree. 9. The சூரை shrub. (சது.) 10. The இசங்கு shrub. 11. Lip, உதடு. 12. Superiority, முதன்மை; [*ex* துடி, *v.*]

துடியடி, *s.* A young elephant, யானைக்கன்று; (*lit.*) the துடி drum footed. (*p.*)

துடியிடை, *s.* A female waist as slender as the middle of the துடி drum, பெண்ணிடை. 2. (*met.*) A female, பெண்.

துடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To quiver, shake, throb, flutter, palpitate, flounder as a fish thrown ashore, அசைய. 2. To be rude, mischievous, giddy, roguish, குதிக்க. 3. To be anxious through suspense; to be eager, to be in great agitation, தத்தளிக்க. 4. To shine, glitter, coruscate, lighten, மின்ன. 5. (*fig.*) To suffer by the gnawings of hunger, பசியினால்வருந்த. (c.)

துடித்துப்பதைத்துவந்தான். He came in extreme anxiety, and agitation.

பெற்றகுடல்துடிக்கிறது. The mother yearns over her child; (*lit.*) her bowels yearn.

அரணைவால்துடிக்கின்றது. The tail of the lizard (cut off) leaps.

பிள்ளைதுடிக்கிறது. The child is fidgety, rude, &c.

கண்துடிக்க, *inf.* To quiver or throb as the eye, supposed to be indicative of good or ill, to the person or his relations.—*Note.* If the right eye or other right part of a man throb, it is deemed a good sign, but of a woman it is bad and vice versa.

மனந்துடிக்க, *inf.* To be agitated, as the mind, through anxiety, anger, disappointments.

துடி, *v. noun.* Quivering, palpitating, dancing, &c.

துடிசாத்திரம்—துடிநூல், *s.* The art of determining events by the quivering of different parts of the body, also works treating on the art, சகுனநூல்.

துடிதுடிக்க, *inf.* To quiver, throb, flutter, படபடக்க. 2. To be rude, fidgety, mischievous, குறும்பிக்க. (*c.*)

துடித்தல்—துடிப்பு—துடிதுடிப்பு, *v. noun.* Quivering, throbbing, fluttering, படபடப்பு. 2. Rudeness, mischief, குறும்பு. 3. Great anxiety.

சரீரந்துடித்தல், *v. noun.* Quivering of the body, supposed to occur of itself in case of the sickness of a relative, also at the sight of one suffering, or through anger.

துடிமானவன், *appel. n.* A strong, robust man, பலவந்தன்.

துடியாஞ்சி, *s.* The இசங்கு shrub.

துடுக்கு, *s.* Rudeness, insolence, surliness, uncouthness, churlishness, wickedness, குறும்பு. 2. Quickness, expedition, activity, விரைவு. (*c.*)

அவனுக்குவாய்த்துடுக்குமெத்த. He is very impertinent in his remarks.

துடுக்கன்—துடுக்குக்காரன், *s.* A rude, uncivil, wicked person, a churl, துஷ்டன்.

துடுக்குப்பண்ண, *inf.* To act rudely, be hasty, impatient, eager, rash. 2. To be active, quick, expeditious.

துடுப்பாற்றி, *appel n.* A sea-fish, ஓர் மீன். (*R.*)

துடுப்பு, *s.* A spatula, மருந்துசட்டுவக்கருவி. 2. A small ladle, சட்டுவம். 3. An oar, paddle, வலிதண்டு. (*c.*) 4. A cluster of flowers, பூங்கொத்து.

துடுப்பேயுன்னைக்கொடுப்பேன். (You fool) spatula, I give you up; i. e. to death.

துடுப்புப்போட்டுத்துழாவ, *inf.* To stir with a ladle.

நெய்த்துடுப்பு, *s.* A spatula used especially in burnt offerings.

துடுப்புக்கீரை, *s.* A plant. See கீரை.

துடுப்புள்ளான், *s.* A kind of snipe. See உள்ளான்.

துடுமெனல், *v. noun.* Sounding imitatively, roaring, ஒலிக்குறிப்பு. (*சது.*)

துடுமெனப்பாய்ந்தது. (The sea) rolled with a tremendous roar. (*p.*)

துடுவை, *s.* A ghee-ladle of wood, used in burnt sacrifices, &c., நெய்த்துடுப்பு. Compare சட்டுவம்.

துடை, *s.* A block built into a wall to support a beam, சுவர்க்கட்டை. 2. A beam projecting from a wall, சுவர்ப்புறத்தநீண்டகட்டை. 3. A long cross beam, விட்டம். 4. [*improp. for* தொடை.] The thigh.

துடை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To wipe, wipe off, clean by wiping, rub, scour, scrub, தேய்க்க. 2. To sweep, brush, பெருக்க. 3. To efface, obliterate, erase, expunge, அழிக்க. 4. To clear away, dispel, remove, expel, நீக்க. 5. To clear off a stain from one's character, வடுஅகற்ற. 6. To destroy, do away, annihilate, as a world, கெடுவிக்க. 7. To relinquish, desert, கைவிட. (*c.*)

தடைத்துக்கொண்டுபோய்விட்டான். He has carried off every thing.

அழுகிறவன்முகத்தைத்துடைக்கவேண்டும். (One) should comfort the mourner.

எங்களைத்துடைத்துத்தள்ளிப்போட்டான். He has utterly deserted us—married another, &c.

துடைகாலி, *s.* (*masc.* துடைகாலன்.) A woman causing bad fortune (*c.*) See நீக்காலி.

இரத்துடைக்க, *inf.* To wipe off moisture from the body, &c. See ஈரந்துடைத்தல்.

கறையானைத்துடைக்க, *inf.* [*prov.*] To clear away white ants. (*c.*)

துன்பந்துடைக்க, *inf.* To dispel affliction. (*p.*)

துடைப்பு, *v. noun.* Wiping, rubbing, scouring, brushing, clearing away. 2. Extirpation, annihilation, obliteration.

துடைப்பம், *s.* Broom, brush, mop, வாருகோல்; [*ex* துடை, *v.*] (*c.*)

துடைப்பக்கட்டை, *s.* An old and worn besom; *also used in abuse.*

துடைப்பத்தாற்கூட்ட—பெருக்க—விளக்க, *inf.* To sweep.

துடைப்பப்புல், *s.* A grass used for making brooms. Aristida setacea, *L.*

துடைவாசி, *s.* The plant, விஷமுங்கில்.

துட்கு, கிறேன், துட்கினேன், வேன், துட்க, *v. n.* To be struck with fear, be alarmed, அச்சங்கொள்ள. (*p.*) See திட்கு.

துட்கல்—துட்கெனல், *v. noun.* Being struck with fear, அச்சக்குறிப்பு.

*துட்டம்—துஷ்டம், *s.* Wickedness, vileness, atrocity, heinousness, flagitiousness, தீங்கு. 2. Wildness, savageness, fierceness, ferocity, கொடுமை. 3. Violence, virulence, malignancy, மூர்க்கம். W. p. 418. Dusur'a.—*Note* This word is often used adjectively, as துஷ்டமிருகம்.

துஷ்டகண்டகன், *s.* A barbarous savage, a vile wretch, மிகுதுஷ்டன்.

துஷ்டகுணம்—துஷ்டத்தனம், *s.* Wickedness, fierceness, ferocity, barbarity, கெட்டகுணம்.

துஷ்டசதுர்த்தர், *s.* Four ferocious persons celebrated in *Mahabharat*, துரியோதனன், துச்சாதனன், கன்னன், சகுனி.

துஷ்டசிரோமணி—துஷ்டசித்தன், *s.* A very wicked person.

துஷ்டதேவதை, *s.* A malignant deity.

துஷ்டத்தொழில், *s.* A barbarous or ferocious act.

துஷ்டநடை — துஷ்டமார்க்கம், *s.* A wicked life.

துஷ்டநிக்கிரகம், *s.* Destruction of the wicked; commonly as an attribute of a good king—oppos. to சிஷ்டபரிபாலனம்.

துஷ்டமிருகம், *s.* A wild beast.

துஷ்டவித்தை, *s.* The black arts, as witchcraft, magic, &c., when employed for injury, or destruction.

துஷ்டவினை *s.* As துஷ்டவித்தை. 2. Evil effects of witchcraft, on the person against whom it is intended.

துஷ்டன், *s.* (*plu.* துஷ்டர்.) A wicked man, a savage. 2. A scorpion, தேள்.

துட்டவி, *s.* A shrub bearing an edible fruit, ஓர்செடி, Rhamnus circumcissus, *L.*

துட்டாட்டம் — துஷ்டாட்டம், *s.* [*prov.*] A wicked life. 2. Savageness, barbarity, ferocity; [*ex* துஷ்டு.]

துட்டாப்பு, *s.* [*prov.*] A pole with a load, &c., carried on the shoulders between two persons, கெட்டைமரம், as distinguished from காவு, for one. 2. Carrying a load with a pole between two persons, சுமத்தல். 3. [*prov.*] Indigestion in children, மந்தம். (*c.*)

துட்டாப்பப்போட்டுச்சாவ, *inf.* To fasten a burden with a pole and carry it

துட்டு, *s.* (*Tel.*) A small copper coin, செப்புநாணயம். 2 Money, காசும்.

துட்டடிக்க, *inf.* To coin copper money.

துட்டுக்காசு-துட்டுதுக்காணம், *s.* Copper money.

துட்டுவட்டி, *s.* Interest at the rate of a துட்டு to the Rupee for a month.

*துட்டு—துஷ்டு, *s.* Evil, vileness, wickedness, savageness, ferocity, தீமை (*சது.*) W. p. 418. Dusur'nu.

துட்டுக்கட்டை — துட்டுத்தடி, *s.* (*Tel.* దుడ్డుకర్ర.) A short club, குறுந்தடி.

துட்டுவம், *s.* [*prov.*] A very little, அற்பம்.

*துட்டை—துஷ்டை, *s.* (*masc.* துஷ்டன்.) A vicious, bad woman, வசவி. 2. A ferocious female; [*ex* துஷ்டம்.]

துணங்கறல், *s.* Darkness, இருள். 2. Temple festival or procession, திருவிழா (*சது.*)

துணங்கு, *s.* Darkness, இருள். (*R.*)

துணங்கை, *s.* Dancing of devils, or of persons imitating them, striking the elbows on the sides, the hands being raised upright, இருகைமுடக்கிப் புடைபுடைத்தாடல். 2. Temple festival or procession, திருவிழா. 3. Dancing, dance, கூத்து. (*சது.*)

துணர், *s.* A flower, a blossom, பூ. 2. A bunch, or cluster of flowers, பூங்கொத்து. 3. Filaments of flower, பூந்தாது. (*p.*)

துணர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To form as buds, முகைக்க. (*சது.*)

துணர்ந்தமௌவல். The clustered jasmine.

துணவு, *s.* Quickness, celerity, suddenness, சீக்கிரம். (*சது.*) 2. A tree, மரம்.

துணி, *s.* A piece of cloth, a rag, a clout, கந்தை. 2. Cloth diminutively, சீலை. (*c.*) 3. A piece, slice, chop, fragment, bit, morsel, துண்டம். 4. Pendent ornaments, hangings, commonly of cloth, தொங்கல். 5. The fifteenth lunar asterism, சோதிநாள். 6. Light, ஒளி. 7. The flag of an idol car, தேர்சீலை. (*சது.*) 8. Ascertainment, certainty, determination; the thing or doctrine assumed or taken as true, தெளிவு.

துணிகட்ட, *inf.* To put on, or wear clothes (*diminutively*).

துணிபிடுங்கி, *appel. n.* A shrub on which are hung small pieces of cloth as an offering to some goddess.

துணிமணி, *s.* Clothes and jewels. (*diminutively spoken.*) (*c.*)

துணிகரம், *s.* Boldness, intrepidity, confidence, assurance, தைரியம். 2. Venturesomeness, daring, presumption, temerity, துணிவு. (*c.*)

துணிகரக்காரன், *s.* A bold, resolute, daring person.

துணிகரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* (*incorrect*) To be bold, daring, intrepid, to dare, துணிய.

துணி, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be sundered, cut, severed, துண்டமாக. 2. v. a. To resolve, determine, purpose, design, எண்ண. 3. To identify, recognize, தெளிய. 4. (c.) To dare, venture, risk, hazard, presume, துணிகரமாக. 5. To attempt, to aim, to endeavor, முயல. 6. To ascertain, form an opinion about, நிச்சயப்படுத்த.

துணிந்தார்க்குத்துக்கமுண்டோ. Will those who have made up their minds to an attempt, regard the consequences?

துணிந்தகம்பம். A daring person; (lit.) a post *in surprize or contempt.*

துணிநர், s. (plu.) Persons holding undeniable truths. (p.)

துணிந்தமனம், s. A bold, daring mind, as of a rash person.

துணிந்தவள், appel. n. (mas. துணிந்தவன்.) An insolent, forward woman. (Beschi.)

துணிந்துசொல்ல, inf. To have the boldness to say; to venture to say. 2. To speak with confidence, declare boldly, affirm. 3. To speak with clear and certain knowledge.

துணிந்துநிற்க, inf. To be bold, to stand to, persist in, maintain.

துணிந்துமணியங்கட்ட, inf. [prov.] To persist in a foolish purpose (*in contempt*). 2. To persevere with energy.

துணிபொருள்—துணிவுப்பொருள், s. A thing known and advanced with certainty and confidence. 2. A thing assumed and presumed upon. (p.)

துணிபு, v. noun. Ascertainment, judgment, determination, conclusion, தெளிவு. 2. Opinion, theory, sentiment, assumption, தீர்ப்பு.

துணிவு — துணிகை — துணிதல் v. noun. Confidence, assurance, boldness, தைரியம் 2. Presumption, temerity, audacity, rashness, துணிகரம். (c.) 3. Ascertainment, certainty, determination, conclusion, decision, தெளிவு 4. Opinion founded on facts, knowledge, evidence, &c., தீர்ப்பு. 5. Purpose, design, aim, endeavor, நோக்கம். 6. Sundering, parting, separation, dividing, பிரிவு.

இதுதுணிவு. This is certain, evident, determined.

துணிவுரை, s. One of the fourteen subdivisions of விருத்தியுரை. See உரை.

துணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To cut in pieces, detach, வெட்ட. 2. To saw, sunder, அறுக்க. (p.)

துணிக்கை, v. noun. Cutting. 2. s. A small piece, slice, &c., துண்டு. (c.)

துணிச்சல், s. As துணிகரம். (R.)

துனுக்கம், s. Fear, terror, tremor, alarm, அச்சம். 2. Internal sound, as of the beating of the heart, through fear, &c., உள்ளோசை. (சது.)

துனுக்கு, s. Fear, startle, sudden terror, பயங்கரம். (c.)

துனுக்கிட, inf. To be startled, திடுக்கிட. (R.)

துனுக்குத்துனுக்கென, inf. To be startled, be alarmed.

மனந்துனுக்குத்துனுக்கென்றிருக்கிறது. The heart palpitates.

துனுக்குற, inf. To be startled, struck with fear, பயப்பட.

துனுக்கெழ, inf. To start, startle, as infants, &c.; to jump.

துனுக்கெனல், v. noun. Being startled, afraid, அச்சக்குறிப்பு.

துனுக்கை, s. [improp. for துணிக்கை.] A piece, a slice, துண்டு. (c.)

துணை, s. Escort, convoy, attendant, உதவி. 2. Aid, help, succor, support, resource, சகாயம். 3. Protection, guidance, safe-guard, defence, patronage, ஆதரவு (c.) 4. [*in combination.*] Measure, extent, degree, quantity, number, அளவு. 5. Comparison, parallel, similitude, resemblance, ஒப்பு. 6. Point of a weapon, சல்லியம் 7. Couple, brace, pair, two, இரண்டு. (சது.)

பெரியாரைத்துணைக்கொள். Seek the aid of the great. (Acc.)

சாந்துணையுஞ்சஞ்சலமே. There will be trouble till death.

எத்துணை. How much? (நீதிநெறி.) 2. As எத்தனை, how many?

துணைக்கருவி—துணைக்காரணம், s. Means to an end, medium. 2. Implements, tools, instruments. 3. The faculties of the body and mind as organs of the soul in the performance of actions, acquisition of ideas, or knowledge.

துணைசெய்ய, inf. To help, succor, support. 2. To patronize, promote, subserve.

துணைச்சொல்—துணைமொழி, s. A word, address, speech, &c., of support, aid, &c. seconding, supporting a previous speaker, &c.

துணைத்தாள், s. Both feet, two feet.

துணைநிற்க, inf. To help one in need—as the deity unseen, or a person unexpectedly.

துணையிருக்க, inf. To bear one company as the protector of a marriageable girl, that she may not be defiled by demons; of a woman in child-birth; of a new-married couple, &c.

துணைவர், s. (plu.) King's ministers, மந்திரிமார். 2. Brothers, friends, near relations, &c.—For the eight classes composing the escort of a king, see எண்வகைத்துணைவர், under எட்டு.

துணைவன், s. A husband, தலைவன். 2. A friend, a confederate, a companion, தோழன். 3. A king's minister, மந்திரி. (சது.) 4. A helper, assistant, convoy, escort, உதவிசெய்வோன்.

துணைவி, s. A wife, மனைவி. 2. A female assistant, a lady's maid, உதவிசெய்பவள். 3. (R.) A sister, சகோதரி.

துணைவிட—துணையனுப்ப, inf. To send an escort.

துணைவினை, s. Auxiliary verb.

உசாத்துணை, s. One who assists with advice.

உயிர்த்துணை, s. An intimate friend. 2. The wife, மனைவி.

வழித்துணை, s. A fellow traveller, a companion on a journey.

துணைமை, s. Aid, help, resource, &c., உதவி. (நீதிநெறி.)

துணைவு, s. [prop. துனைவு.] Quickness, celerity, swiftness, சீக்கிரம் (R.)

துண்டம், s. Piece, fragment, bit, துணிக்கை. (c.) 2. A piece of cloth cut off, துணி. (சது.) 3. Division, compartment, பிரிவு. 4. [prov.] A small channel, கைவாய்க்கால். See கண்டம்.

துண்டுமும்பிண்டமும்போதும். A strip of cloth, and a lump of rice will suffice.

துண்டந்துண்டமாய், adv. In pieces, parcels, compartments.

துண்டப்பட, inf. To be cut or broken in pieces.

துண்டமிழுக்க, inf. To make small channels in garden beds, &c. 2. To make a channel.

துண்டம்போட, inf. To cut in pieces.

*துண்டம், s. Face, முகம். W. p. 379. TUND'A. 2. Nose, மூக்கு. 3. Beak, bill, பறவைமூக்கு. 4. Elephant's trunk, யானைத்துதிக்கை. 5. A rat-snake, சாரைப்பாம்பு. (சது)

துண்டரிக்கம் — துண்டிரிக்கம், s. (Tel. తుంటరికము) Oppression, ஒறுப்பு. 2. Quarrelsomeness, தொந்தரவு.

துண்டரிக்கக்காரன், s. A stiff-necked, quarrelsome person.

துண்டரிக்கம்பண்ண, inf. To be obstinate, quarrelsome. 2. To oppress.

துண்டாயம், s. A gold fanam, பொற்பணம். 2. Gold sand, பொன்மணல். (R.)

துண்டி, s. [prov.] A detached piece of high land, left waste or land surrounded by fields, துண்டுநிலம். 2. A small arm of the sea, கழி; [ex துண்டி, v.]

துண்டியாயடைக்க, inf. To inclose or part off a piece of ground.

துண்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To sunder, sever, slice, அறுக்க. 2. To cut, piece, hack, mince, நறுக்க. 3. To tear up, to shred, துண்டுதுண்டாக்க. 4. To cut short one's words, speak in short sentences, or unconnectedly, சொல்லைத்துண்டிக்க. 5. To divide, to parcel out, பிரிக்க. 6. To rebuke sharply, to interrogate pointedly, கடிக்க 7. To dispute, question, disprove, மறுக்க; [ex Sa. Tunna, cut] (c.)

துண்டித்துக்கேட்க, inf. To ask or interrogate sharply or pointedly.

துண்டித்துப்பிடிக்க, inf. To interrupt one in speaking, and question him as to his statements. 2. To press one to give reasons for his conduct.

துண்டித்துப்பேச, inf. To speak sharply. 2. To speak in short sentences. 3. To speak unconnectedly, incoherently.

துண்டிப்பு, v. noun. Sundering, severing, shredding.

துண்டி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. 2. To be cut off, detached, broken, insulated, வெட்டுண்டுபட. (c.) 3. [prov.] To swell as the skin from a bite, தடித்தெழும்புகிறதை.

துண்டித்துப்போக, inf. To be severed.

*துண்டிவிநாயகன், s. Ganesa, as worshipped at Benares, காசிக்கணபதி. See W. p. 361. D'HUND'HI.

துண்டீரன், s. A king, ஓரரசன்.

துண்டீரபுரம், s. Conjeveram, as formerly governed by துண்டீரன்.

துண்டு, s. Piece, bit, fragment, slice, scrap, morsel, துணிக்கை. 2. Section, division, strip, பங்கு. 3. A chit, billet, ticket or small note, சீட்டு. 4. A little piece of cloth, துணி. (c.) 5. [prov.] A bale of tobacco, consisting of four small or two large சிப்பம், இரண்டுசிப்பம்புகையிலை. 6. [in burlesque.] Loss in trade, or bargaining, from the figure of cutting off, நஷ்டம்.

துண்டாட—துண்டாடிப்போட, inf. To cut a board, &c., in pieces.

துண்டுக்காணி, s. A piece or strip of land. See துண்டி.

துண்டுச்சீலை, s. A strip or piece of cloth.

துண்டுபோட, inf. To cut into pieces.

துண்டுபோட்டுத்தைக்க, inf. To patch a piece to a tattered garment.

துண்டுப்பலகை, s. A board, slab, slate, &c.

துண்டுருட்டி, s. Roundness of trunk, &c. 2. A large belly, பெருவயிறு.

துண்டுருட்டிக்காளை, s. A fattened bull; sometimes குண்டுக்காளை.

துண்டுவாசிகூட்ட — துண்டுவாசிகூட்டி வாங்க, inf. To recover what was lost.

துண்டுவிழ, inf. To be cut into pieces, broken into fragments. 2. [in burlesque.] To happen or befall as a loss in trade, as a theft, &c.

அந்தமரம்மூன்றுதுண்டுவிழும். That tree will form three pieces.

துண்டுகத்திரி, s. A venomous kind of worm, ஓர்விஷப்புழு. Compare கத்திரி.

துண்ணிட, inf. v. n. To start, be struck with fear, திடுக்கிட.

துண்ணென, inf. To startle, be frightened.

துண்ணெனத்துறக்க. To relinquish worldly things in alarm. (p.)

•துதம், s. Motion, vibration, oscillation, agitation, அசைவு. W. p. 445. Dhuta.

துதமுகம், s. One of the thirty-two gestures, moving the head to the right and left; refusal, வேண்டாமைக்கு இடம்வலம் தலையாட்டல். (See முகம்.) (சது.) 2. Shaking or trembling of the head, through age, தலையாட்டம். 3. Motion of the hooded serpent's head, நாகத்தலையசைக்கை.

•துதி — ஸ்துதி, s. Praise, eulogy, panegyric, தோத்திரம். (c.)

துதிசெய்ய — துதிசொல்ல, inf. To praise, to thank.

துதிசெலுத்த, inf. To render thanks.

துதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To praise, eulogize, flatter, தோத்திரிக்க. 2. [vul.] To think, நினைக்க.

கனவிலும்அதைத்துதிக்கமாட்டேன். I do not think of it, even in dreams.

துதித்துக்கொண்டாட, inf. To celebrate.

துதிநிந்தை—நிந்தாஸ்துதி, s. Irony, இகழாஇகழ்ச்சி.

துதித்தல்—துதிப்பு, v. noun. Praising, eulogizing, ஸ்தோத்திரிக்கை.

துதிக்கை, s. Elephant's proboscis, தும்பிக்கை. 2. v. noun. As துதித்தல்.

துதியம், s. The pulp of Tricosanthes palmata, சவரிலோத்திரம். (R.)

•துதியை, s. The second day of the moon, இரண்டாந்திதி. W. p. 433. Dviteeya.

துதை, s. Closeness, a crowded state, நெருக்கம். (p.)

துதை, கிறது, ந்தது, யும், ய, v. n. To be close or crowded, நெருக்க. 2. To be copious, to abound, to be intense, மிகுதிப்பட.

துதை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To straiten, to press together, நெருக்க.

துத்தம், s. Tenor, in music, மத்திமநாதம். 2. The second tone of the gamut, or ரி modulated by the tongue, நாவினற்பிறக்குமிசை. (See இசை.) 3. String in the guitar corresponding to the ரி tone, யாழ்நரம்பு. 4. Dog, நாய். 5. Belly, வயிறு. 6. A grass, நாணல்முசுப்புல், Sacchar.

துத்தகா, s. A kind of grass, முசற்புல்.

•துத்தம், s. Milk. 2. A collyrium of either blue or white vitriol, கண்மருந்து. (சது.) W. p. 380. Tutha.

வெள்ளைத்துத்தம். White vitriol, sulphate of zinc. (See also பாற்றுத்தம், மடற்றுத்தம், and மயிற்றுத்தம்.)

துத்தநாகம்—துத்துநாகம், s. A kind of metal, spelter, or impure zinc, நவலோகத்தொன்று.

துத்தநாகபஸ்பம், s. Flowers of zinc.

துத்தநாகமணல், s. Sand containing zinc.

துத்தந்துருசு, s. Blue and white vitriols.

துத்தபாஷாணம், s. A kind of natural arsenic.

துத்தாஞ்சனம், s. A collyrium, as துத்தம்; [ex அஞ்சனம்.]

துத்தி, s. An eatable, any thing proper to be eaten, உண்டற்குரியன; [ex து, v.] 2. The ornamented spots on the neck of the cobra, பாம்பின்படப்பொறி. 3. Yellow, or tawny spreading spots on the skin. (See தேமல்.) 4. A plant, a species of mallow, ஓர்செடி, Indian marshmallow, Sida Mauritiana. (Ains v. 1, p. 205.)—Note. There are different kinds, as எலிச்செவித்துத்தி, Evolvus emarginatus; ஐயிதழ்த்துத்தி, of five petals; ஒட்டுத்துத்தி, Urena sinuata; ஒரிலைத்துத்தி, கண்டுத்துத்தி, Sida acuminata; காட்டுத்துத்தி, Sida hirta; கொடித்துத்தி, Sida montana; சிறுதுத்தி; செந்துத்தி, Hibiscus obtusifol. Willd.; நாமத்துத்தி, Sida cristata; நிலத்துத்தி, Sida cordifolia; பணிகாரத்துத்தி; பெருந்துத்தி, Sida Asiatica; பொட்டகத்துத்தி, Hibiscus Abelmoschus; also இரட்டைத்துத்தி; வயற்றுத்தி, and வட்டத்துத்தி.

துத்திப்பூக்கிரந்தி, s. An eruption. See கிரந்தி.

•துத்தியம்—ஸ்துத்தியம், s. Eulogy, panegyric, applause, commendation; thanksgiving, துதி. 2. Worship, homage, veneration, வணக்கம். (c.)

துத்தியம்பண்ண, inf. To eulogize, applaud. 2. To worship.

துத்து, s. Stuffing of wool, or goat's hair into seats, couches, or saddles, &c., சேணப்பஞ்சு. (Beschi.) 2. (Old Dic.) A lie, பொய்.

துத்தன்—துத்துக்காரன், s. A fraudulent fellow, கபடன்.

துத்துக்கம்பளி, s. A blanket.

துத்துமாற்று, v. noun. [prov.] Artifice, guile, knavery, chicanery, தந்திரம்.

துத்துப்போடுதல், v. noun. [vul. for தூர்த்தல், which see under தூர், v.]

•துந்துமாரி, s. One of the seven of the first class of kings famed for liberality, முதலெழுவள்ளலிலொருவன். (சது.)

துந்துமி, s. [prov.] (contracted from தூவுந்துமி.) Small, drizzling rain, மழைத்துளி.

•துந்துமி, s. (St. துந்துபி.) A large kettle-drum, பேரிகை. (c.) 2. A drum in general, பறைப்பொது. 3. An Asura famous in Hindu mythology, ஓரசுரன். 4. The fifty-sixth year of the Indian cycle, ஓர்வருடம். W. p. 414. Dundubhi.

துந்துமிமுழங்க, inf. To sound, like a large drum.

துந்துமியாட்டம், s. A great noise, bustle, clamor, பேரொலி. (Old Dic.)

துந்துருபாவை — துந்துருமாலை, s. [prov.] A fidgety woman, a busy-body, துடிப்புள்ளவள்.

துபாக்கி—துப்பாக்கி, s. (Hind. in Jaffna, துவக்கு.) Firelock, fusil, musket, gun.

துபாக்கிகெட்டிக்க, inf. To load a gun.

துபாக்கிக்காது—துபாக்கிவர்த்திவாய், s. Touch-hole of a gun.

துபாக்கிக்குண்டு, s. A musket-ball.

துப்பாக்கிக்குழல், s. The barrel of a musket.

துபாக்கிக்குதிரைநிமிர்த்த, inf. To fix the cock of a gun for a discharge.

துப்பாக்கிக்குந்தா—துபாக்கிப்பிடங்கு, s. The butt end of a musket.

துபாக்கிமருந்து, s. Gun-powder.

துபாக்கிரவை, s. Small shot.

•துபாசி — துபாஷி — துப்பாசி, s. (Hind.) An interpreter, இருபாஷையறிந்தோன். (Sa. Dvibhashi.) 2. A dubash, a servant, ஒருத்தியோகஸ்தன். (c.)

துப்பாசித்தனம், s. Ioterpreting.

துப்பாசித்தனம்பண்ண, inf. To interpret.

துப்பகம், s. (a change of துப்பு.) Ghee, நெய். (சது.)

•துப்பட்டா—துப்பட்டி, s. (Hind.) A large kind of cloth, a sheet, a table-cloth, a cloak consisting of two cloths joined together, ஈர்சீலை. (probably Sa. Dripat'a.)

துப்பட்டிப்போர்வை. Covering one's self with a spread cloth.

துப்பரவு, s. (for துப்புரவு.) Purity, excellence, &c. (c.)

துப்பறவு, s. As துப்பரவு. (R.)

துப்பாக்கி, s. Gun. See துபாக்கி.

துப்பிரசம், s. A plant and its root, கருஞ்சொண்டி.

துப்பு, s. Provision, food, உணவு. 2. Experience, enjoyment, &c., அநுபவம். (See து, v.) 3. Ghee, clarified butter, நெய். 4. Drink, beverage, பானம். 5. Copiousness, abundance, மிகுதி. 6. Vigor, strength, valor, வலி. 7. Aid, assistance, help, சகாயம். 8. Means, துணைக்காரணம். 9. Weapons in general, ஆயுதப்பொது. 10. Cleanness, purity, சுத்தம். 11. Intellect, intelligence, அறிவு. 12. Red, சிவப்பு. 13. Red wax, gum-lac, அரக்கு. 14. Red coral, பவளம். 15. Beauty, excellence, பொலிவு. 16. Hatred, பகை. 17. Ability, dexterity, expertness, address, சாமர்த்தியம். 18. Investigation, search, ஆராய்ச்சி. 19. Guilt, mistake, குற்றம். 20. A means, an instrument, துணைக்கருவி. (சது.) 21. [prov.] Rust, as துக்கு. (c.)

துப்புக்கெட்டநடத்தை, *s.* Uncomely or indecent conduct, uncleanness.

துப்புக்கெட்டவன்—துப்பற்றவன், *appel. n.* A person of no address, one who does nothing expertly, an unhandy person. 2. An indecent person.

துப்புத்துருவிசாரிக்க — துப்புத்துருப்பிடிக்க, *inf.* To spy out, act the part of a spy. 2. To pry into, inquire all about one, &c.

துப்புப்பார்க்க, *inf.* To trace one's footsteps, track a thief. *(Beschi.)*

துப்பு, கிறேன், துப்பினேன், வேன், துப்ப, *v. n.* To spit, eject from the mouth, spit out from the mouth, உமிழ. (*c.*)

அவனைக்காறித்துப்புகிறார்கள். They utterly reject or execrate him.

துப்புண்ணி, *appel. n.* One fit to be spit upon.

துப்பல், *v. noun.* Spitting, saliva, spittle, உமிழ்நீர். 2. [*in play.*] A word calling for a short respite or cessation, விளையாட்டைநிறுத்தமோர்குழூஉக்குறி. (*c*)

துப்பல்விட்டேன். I have closed the respite.

துப்பற்காளாஞ்சி — துப்பற்படிக்கம், *s.* A spitting pot.

துப்பு, *v. noun.* Spittle.

துப்புரவு, *s.* Enjoyment of the senses, gratification, ஐம்பொறிநுகர்ச்சி. 2. Experience, fruition, fruit of actions, அனுபவம். 3. Great beauty, அலங்காரம். 4. Established custom, order, propriety of conduct, முறைமை. 5. (*c.*) Purity, cleanness, சுத்தம். 6. Entireness, முழுமை. 7. Excellence, மேன்மை.

துப்புரவாயில்லை. None at all.

துப்புரவாக, *inf.* To be clean, pure. 2. To be clean gone, removed, extirpated, &c.

துப்புரவாக்க, *inf.* To clean, cleanse, purify.

துப்புரவாயழிய, *inf.* To be entirely destroyed, perish utterly.

துப்புரவானவன், *s.* (*fem.* துப்புரவானவள்.) A clean or cleanly person. 2. An upright, sincere, chaste man; one of good caste, attentive to religious duties, &c.

துப்புரவானவேலை, *s.* Neat, finished or perfect work.

துமாலா—துமால், *s.* (*Hind.*) Granting land free of taxes, இறைவரங்காமை.

துமாலா, *s.* (*Hind.*) The last process in lengthening gold or silver threads, சுடைவிழுப்புச்சரிகை.

துமானம், *s.* A casket for jewels, ஆபரணப்பெட்டி. (சது.)

துமி, *s.* Rain drops, மழைத்துளி. 2. Light, drizzling rain, சிறுதிவலை. (சது.)

துமிதுமிக்க—துமிவிழ, *inf.* To fall as light rain.

துமி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be cut off, severed, sundered, வெட்டுண்ண. 2. To be dispelled, as ignorance, மடமையற. (*p.*)

துமி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To drizzle, rain softly, தளிக்க. (*c.*)

துமிப்பு, *v. noun.* Drizzling, sprinkling as rain, தளிப்பு.

துமி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cut, cut off, வெட்ட. 2. To sunder, sever, அறுக்க. (*p.*)

துமிப்பு, *v. noun.* Cutting, severing, வெட்டுகை.

துமிதம், *s.* Drop, flirting drop, particle of water, &c., சீத்தனி. (*p.*)

தும், *s.* Dust, துகள். (*Tel. loc.*) 2 An affix of the first person plural, உளப்பாட்டுத்தன்மைப்பன்மைவிகுதி.

தும்பறக்கஅடித்தான். He beat him so that the dust flew.

தும்பகா, *s.* A plant, தும்பை, Phlomis, *L.*

•தும்பரம், *s.* (*a contraction of* உதும்பரம்.) The அத்தி tree, Ficus, *L.*

•தும்பராஷ்டகம், *s.* A medicinal root, பேரரத்தை, Alpinia, or Costus, of Roxb.

•தும்பன், *s.* (*fem.* தும்பி *or* தும்பிச்சி.) A wicked person, தீயவன்; [*ex Sa. Tumpha,* to hurt.] Compare சும்பன். [*prov.*]

தும்பல், *s.* Sneezing, தும்மல். *(R.)*

தும்பால், *s.* (*Hind.*) Grant of land free from taxes, துமால்.

•தும்பி, *s.* A long gourd, bottle-gourd, சுரைக்கொடி, Cucurbita lagenaria, *L.* W. p. 380. TUMBI.

தும்பி, *s.* Elephant, யானை. 2. Dragon-fly, கருவண்டு. 3. Bee, beetle, வண்டு. 4. A male bee or beetle, வண்டிஞண். (சது.) 5. [*prov.*] A kind of fish, ஓர்மீன். 6. A sugar cane, கரும்பு. 7. A plant, கொத்தான். 8. (*for*) A tree whose fruit yields a strong glue, பனிச்சைக்காய், Embryopteris glutinifera. (*Ains.* v. 2. p. 278.)

தும்பிக்கை, *s.* Elephant's trunk, (*lit.*) elephant's arm, துதிக்கை; [*ex* கை.]

தும்பிபறத்தல், *v. noun.* A girl's play in imitation of a beetle's flying.

தும்பிமீன், *s.* A kind of fish.

தும்பிழுத, *inf.* To breathe with a shrill sound, as one senseless from a fall or blow. 2. To blow up bubbles from the mouth, or with soap in water. 3. To make a singing noise, or buzz.

தும்பிலி, *s.* A tree whose fruit is eatable, ஓர்மரம், Diospyros melonoxylon, *Ains*; [*ex* தும்பு *et* இலி.]

தும்பு, *s.* Fibre of vegetables, நார். 2. A rope for tying beasts with, ஓர்கயிறு. (*c.*) 3. Spot, blemish, defect. (See வம்பு.) 4. A button or ball to fasten a dress. 5. [*loc.*] Dust, as தும், துகள். 6. [*prov.*] A kind of fringe to a shawl, சிம்பு.

சீலைகிழிந்துதும்புதும்பாய்ப்போயிற்று. The cloth is torn into threads.

ஏசித்தும்புபிடுங்குகிறார்கள். They abuse and tear out the fibres; i. e. taunt each other with blemishes in character. [*prov.*]

தும்புக்கயிறு, *s.* A rope of cocoa, palmyra or other fibres.

தும்புச்சால்வை, *s.* A shawl with a fringe.

தும்புபோட, *inf.* To twist or make a rope for tying beasts.

தும்புவாங்க, *inf.* To strip off fibre.

தும்பு, *v.* [*prop.* தும்மு.] To sneeze.

•தும்புரு, *s.* One of the celestial musicians, who, as நாரதன், is famed for his skill on the lute, ஓர்கந்தருவன். W. p. 380. TUMBURU. 2. A kind of lute or guitar, as தம்புரு, நரம்புக்கருவிபென்று

தும்பை, *s.* A flowering shrub of several species, ஓர்பூடு. 2. A creeper with edible fruit, called also கறித்தும்பை. (*c.*) 3. One of the eight kinds of garlands worn by warriors in battle, போர்செய்வோர் அணியும்மாலை. 4. [*prov.*] A fish of two species, one large, the other small, ஓர்மீன். 5. (சது.) Assemblage, assembly, crowd, கூட்டம். 6. Betel-leaf, வெற்றிலை. 7. War, fighting, போர்செய்தல்.—The species of the flowering தும்பை are; கவிழ்தும்பை, Borago Ind. *L*; கழுதைத்தும்பை, Borago Zeylan, *L*; காசித்தும்பை, பேய்த்தும்பை, Phlomis Zeylanica, *L.* Of the running தும்பை, there are two species, கறித்தும்பை or காய்த்தும்பை, a fruit bearing தும்பை and பூத்தும்பை, a flowering creeper.

தும்பைப்பூப்போலேசாதம். Rice as white and fine as தும்பை flowers.

தும்பைக்காய், *s.* The edible fruit of the தும்பை.

தும்பைக்கொடி, *s.* The தும்பை creeper.

தும்பைப்பாரை, *s.* The large தும்பை fish.

தும்பைமாலைசூட, *inf.* To wear the தும்பை garland. 2. A panegyric on one who being crowned with a wreath of தும்பை, fought the enemy. See பிரபந்தம்.

தும்பைமீன், *s.* The தும்பை fish.

தும்மட்டி—தும்முட்டி, *s.* A plant whose seeds are medicinal, callous leaved Bryonia, ஓர்செடி. See முட்டி.

தும்மு, *s.* A gnat, கொசுகு. (சது.) 2. See தும்மு, *v.*

தும்மு, கிறேன், தும்மினேன், வேன், தும்ம, *v. n.* To sneeze. 2. To arise, revive, உயிர்க்க. 3. *v. a.* To emit, let go, leave, விட. (*c.*)

தும்மல்—தும்மு, *v. noun.* Sneezing, தும்முதல்.

தும்மல்வருகிறது. Sneezing comes.

தும்மற்காதல், *s.* A prognostic from sneezing.

தும்மற்சாத்திரம், *s.* The art of divination by sneezing.

துயக்கம்—துயக்கு, *s.* Fatigue, reduction of strength or courage, தளர்வு. (*p.*)

துயக்கு, கிறேன், துயக்கினேன், வேன், துயக்க, *v. a.* To slacken, relax, தளர்த்த.

துயங்கு, கிறேன், துயங்கினேன், வேன், துயங்க, *v. n.* To be reduced, fatigued, to faint, தளர. See தயங்கு. (*p.*)

தேர்ச்சி, *v. noun.* Examination, investigation, ஆராய்ச்சி. 2. Information, intelligence, learning, கல்வி. 3. Discernment, genius, acuteness, நுழைந்தறிகை. 4. Deliberation, counsel, எண்ணல். 5. Ascertainment, தெளிவு.

தேர்ச்சித்துணைவர், *s. (plu.)* Ministers of a state, king's counsellors, statesmen, மந்திரிகள். (சது)

தேர்வு, *v. noun.* Thorough acquaintance, proficiency, mature practice, பயிற்சி. 2. As தேர்ச்சி, 1, 2, 3.

தேலிக்கை, *s.* (*Tel.* తేలిక.) Superficiality, slightness, lightness, இலேசு.

வழக்கைத்தேலிக்கையாய்விட்டுவிட்டான்...... He gave up the lawsuit in a very light way.

தேறு, கிறேன், தேலினேன், வேன், தேல, *v. a.* (*Tel.*) To get rid of danger, விலக.

கப்பல்தேலிற்று. The ship is afloat again.

தேலுதல், *v. noun.* Being free from, தப்புதல்.

ஆள்தேலுதலரிது. It is difficult for him to escape.

• தேவகன், *s.* (*St.*) Devaka, maternal grandfather of Krishna, தேவகிதந்தை. W. p. 422. DEVAKA.

• தேவகி, *s.* Devaki, daughter of Devaka, wife of Vasudeva and mother of Krishna, கண்ணன்தாய்.

தேவகிசூநு—தேவகிநந்தனன் — தேவகிமைந்தன், *s.* (*St.*) A name of Krishna, கிருஷ்ணன்; [*ex* சூநு, நந்தனன், son.]

• தேவதத்தம், *s.* (*St.*) The conch of Arjuna, blown in token of victory, அருச்சுனன்சங்கு.

• தேவதத்தன், *s.* The younger brother of Bud'dha, புத்தன்தம்பி. 2. One of the ten vital airs, that which is exhaled in yawning, தசவாயுவிலொன்று. 3. The air necessary for removing weariness and producing perspiration. (See வாயு.)—*Note.* In வேதாந்தசூடாமணி it is given as that which produces smiling and speaking.

• தேவதா, *s.* (*St.*) A deity, &c. See தேவதை.

தேவதாசொரூபி, *s.* A sacred, holy divine person, one of special sanctity, திவ்வியசொரூபி. 2. A female of eminent beauty, அதிசுந்தரமுள்ளவள்.

தேவதாயோக்கியம், *s.* Divine excellence, as applied either to the celestials or holy men; also to any thing superexcellent in savor, beauty, &c., worthy of the gods, திவ்வியமேன்மை. *Used also in irony.*

• தேவதை, *s.* [*pl.* தேவதைகள்.] A goddess, தேவி. 2. A deity, தேவன்.—Three are in common use, as இஷ்டதேவதை, க்ஷேத்திரதேவதை, and பரதேவதை, which see.

தேவதைக்குறை, *s.* A disease, chiefly in women and children, supposed to result from possession by an evil spirit.

தேவதைத்தொடர்ச்சி, *s.* Possession by a demon. See தொடர்ச்சி.

• தேவமணி, *s.* Siva. சிவன். 2. The jewel of Krishna, கிருஷ்ணாபரணம். 3. (*c.*) A fortunate curl of hair on a horse's breast, குதிரைநற்சுழியிலொன்று. W. p. 423. DEVAMAN'I.

• தேவம், *s.* Deity, Godhead. See தெய்வம். 2. Fate; *used only adjectively.*

தேவகங்கை, *s.* The celestial Ganges, ஆகாயகங்கை.

தேவகடாட்சம், *s.* Divine favor.

தேவகட்டளை, *s.* Divine injunction, command of God.

தேவகணம், *s.* The class of the inferior gods, or celestials. See கணம்.

தேவகாந்தாரி, *s.* A kind of tune, ஓர்பண். See காந்தாரி.

தேவகானம், *s.* Divine melody, tune, &c., தெய்வப்பண்.

தேவகிரி, *s.* A place sacred to Skanda near the Himalaya range, ஓர்மலை.

தேவகிருபை, *s.* Divine grace, mercy, compassion.

தேவகுமாரன்—தேவசுதன், *s.* The son of a deity. 2. [*in Chris. usage.*] Jesus Christ.

தேவகுரு, *s.* The planet Jupiter, or its regent, priest of the celestials, வியாழன்.

தேவகுருவஞ்சம்—தேவகுருவம், *s.* A place of bliss, one of the போகபூமி, which see. (சது.)

தேவகுலம், *s.* The race of gods, தேவசாதி. 2. (சது.) A temple, கோயில்.

தேவகூத்தியர், *s.* (*plu.*) Courtesans of the gods of Swerga, தேவகணிகையர்.

தேவகோட்டை, *s.* Name of a town in the Madura District, the principal residence of நாட்டுக்கோட்டையார்.

தேவக்கிரியை, *s.* The providence of God, தெய்வச்செயல். 2. One of the thirty-two tunes in singing. See இராகம்.

தேவசபை, *s.* The divine presence, &c., as தேவசமுகம். 2. The assembly in the temple. See சபை.

தேவசமுகம், *s.* Divine presence, the presence of a deity, idol, &c., spoken in reverence of the interior of a temple.

தேவசன்னிதானம் — தேவசன்னிதி, *s.* The divine presence. 2. A temple as the abode of a deity. See திருமுன்.

தேவசாயுச்சியம், *s.* Beatification. See சாயுச்சியம்.

தேவசாட்சி, *s.* An oath, ஆணை. (சது.)

தேவசித்தம், *s.* Divine will. See திருவுளம்.

தேவசிந்தனை, *s.* Divine meditation. See சிந்தனை.

தேவசிகிருதம், *s.* That which belongs to God, தேவசம்பந்தமுடையது. (*Beschi.*)

தேவசுபாவம், *s.* Nature, attributes, qualities of the Deity.

தேவசேவை, *s.* Attendance at the temple, ministering to and worshipping the idol, தெய்வவணக்கம். 2. Having the appearance of the deity, his vision, his form, &c., தெய்வதரிசனம்.

தேவசேனாபதி, *s.* Skanda, as general of the Devas in the expedition against the Asuras, கந்தன்.

தேவடியாள், *s.* A dancing woman of the temple. (*c.*) See தேவதாசி.

தேவடியாள்மகன், *s.* A bastard; *spoken in contempt.*

தேவதச்சன்—தெய்வத்தச்சன், *s.* The architect of the gods, Visvakarma, விச்சுவகர்மன்.

தேவதத்துவம், *s.* Divine power.

தேவதரு, *s.* See தேவதாரம்.

தேவதலம் — தேவஸ்தலம் — தேவஸ்தானம், *s.* A sacred shrine, a temple, &c., கோயில்.

தேவதாசன், *s.* A devotee, a servant of a deity, தெய்வத்தொண்டன். 2. The son of Arichandra, one of the six monarchs of India, அரிச்சந்திரன்மகன்.

தேவதாசி, *s.* (*St.*) A dancing and singing girl of a temple, commonly a courtesan, தேவடியாள்.—*Note.* The courtesans of the gods are உருவசி, மேனகை, திலோத்தமை and அரம்பை.

தேவதாரம், *s.* Any of the five famous trees in Swerga, ஐந்தருவிலொன்று. 2. A medicinal, fragrant tree, செம்புளிச்சை. 3. A kind of pine tree, ஓர்மரம், Erythroxylon aureolatum, *L.*

தேவதாரி—தேவதாரு, *s.* A kind of pine tree, as தேவதாரம், 3.

தேவதாருவனம், *s.* A forest celebrated in the Skanda Purana, in which forty-eight thousand Rishis resided.

தேவதாளி, *s.* A kind of plant, a Convolvulus, a kitchen herb, நீர்ப்பூண்டு.

தேவதுந்துமி, *s.* The drums of the gods, தெய்வப்பறை.

தேவதூஷகன்—தேவதூஷணக்காரன், *s.* A blasphemer, one who reviles God, or sacred things.

தேவதூஷணம், *s.* Blasphemy.

தேவதூதன், *s.* [*fem.* தேவதூதி.] A divine messenger. 2. [*in Chris. usage.*] An angel. See தூதன்.

தேவதேவன், *s.* Deity, the Supreme Being—applied by each one to the object of his highest worship.

தேவஸ்தானம், *s.* See தேவதலம்.

தேவஸ்திரி, *s.* Divine females of Swerga.

தேவத்தொண்டு, *s.* Service to a deity, temple, &c., திருப்பணி.

தேவத்தொண்டன், *s.* A devotee, as தேவதாசன்.

தேவத்தன்மை, *s.* Divine nature.

தேவத்துவம், *s.* Divinity; as தெய்வத்துவம்.

தேவநகர், *s.* A temple, கோயில். (சது.) 2. The city of the gods, தேவர்நகரம்.

தேவநாகரம், *s.* [*sometimes* தேவநாகரி.] The Nagari character of the Sanscrit language, சமஸ்கிருதத்தோர்வகையட்சரம்.

தேவநாயகன், *s.* The Supreme Being, கடவுள். 2. Any superior deity, தேவர்தலைவன்.

தேவநாயகன்பட்டணம், *s.* A town near Cuddalore.

தேவநிலம், *s.* The proper site of a house determined by divination, being one-sixth of a square plot divided and apportioned to the several deities.

தேவநீதி, s. Divine justice.

தேவபதம், s. Heaven, the firmament, ஆகாயம். 2. Royal presence, இராசசமுகம்.

தேவபதி—தேவராசன், s. Indra, இந்திரன்.

தேவபாடை — தேவபாஷை, s. The Sanscrit language as that of the celestials, சமுஸ்கிருதம்.

தேவபூசை, s. Puja as offered to an idol.

தேவபூமி, s. The region or mansion where the gods dwell, தேவர்வாழிடம்.

தேவபோதனை, s. Divine instruction.

தேவப்பிறப்பு, s. A birth entitling a soul to the rank of a god. See தெய்வப்பிறப்பு.

தேவப்பிரமா, s. A name of the Muni Narada, நாரதன்.

தேவப்பிராமணன், s. A divine Brahman.

தேவயோனி, s. Divine birth or origin, தெய்வப்பிறப்பு. (p.)

தேவரூபி, s. [also தேவசொரூபி.] A divine person, as தேவதாசொரூபி.

தேவப்பெண், s. A goddess.

தேவமாதா—தேவமாதுரு, s. Mother of the gods, as அதிதி. 2. [R. C. usage] The Virgin Mary, கன்னிமரியாள்.

தேவயத்தினம், s. [sometime தேவேத்தினம்.] Divine providence.

தேவயாத்திரை, s. A pilgrimage to some fane. 2. An idol procession.

தேவயானம்—தேவரதம், s. (St.) A car or vehicle of a god, திவ்வியவிமானம்.

தேவயானி, s. (St.) Daughter of சுக்கிரன், teacher of the Asuras, சுக்கிரன்புத்திரி.

தேவரம்பை, s. Females of Swerga, தெய்வப்பெண். 2. One of the courtesans of the gods, தேவதாசிகளிலொருத்தி.

தேவரனுசரிப்பு, s. Supplication. (R.)

தேவராசன், s. Indra, இந்திரன்.

தேவராதன், s. A king of Mit'hila.

தேவராளன், s. [fem. தேவராட்டி.] One supposed to be possessed so as to utter oracles, சன்னதக்காரன்.

தேவரிஷி, s. A Rishi of the celestial class.

தேவரீர், Your lordship, (2d person plu. of a symbolic verb.)

தேவருணவு—தேவருண் —தேவவுணவு, s. Nectar, ambrosia, amrita, அமுதம்.

தேவர்—தேவர்கள், s. [pl. of தேவன்.] Gods, celestials, deities, objects of worship, gods of Swerga or any other inferior class, சுரர். 2. Honorable persons, as a guru or priest, உயர்ந்தோர்.—*Note.* According to the Saiva sect the superior gods, or forms of the first order assumed by the Deity are five, viz.: 1. Brahma, பிரமா 2 Vishnu, விட்டுணு. 3. Rudra or Siva, உருத்திரன். 4. Mayesvara, மயேச்சுரன். 5. Sathasiva, சதாசிவன். These are called, பஞ்சமூர்த்திகள்; the five Murtis, or பஞ்சகர்த்தாக்கள், five lords.

தேவர்கோயில், s. A temple, தேவாலயம்.

தேவர்கோன்—தேவேந்திரன், s. Indra.

தேவர்க்காடல், v. noun. Demoniac possession, dancing after certain sacrifices to devils, as சன்னதம், which see.

தேவர்வகை, s. The gods of Swerga, 330,000,000, are divided into four classes, with a chief for each கோடி or 10,000,000, as follows. 1. துவாதசாதித்தர், the twelve *Adityas*, ஆதித்தர், (*lit.*) the twelve suns, chiefs of their class numbering with them, 120,000,000. 2. ஏகாதசருத்திரர், the eleven *Rudras*, உருத்திரர், lords of their companies, comprising in all, 110,000,000. 3. அஷ்டவசுக்கள், the eight *Vasus*, their classes, including themselves, containing 80,000,000. 4. மருத்தவர், the two *Asvinis*, அச்சுவினிகள், the two physicians, the whole class being 20,000,000.

தேவலகன், s. A brahman who attends on an idol, அர்ச்சகப்பிராமணன். W p. 423. Devalaka.

தேவலோகம், s. World of the gods, Swerga, the third of the seven upper worlds, of which Indra is king, the lowest heaven of mortals, who assume the form of gods for a residence in it. The enjoyments are all sensual, and the period of their continuance depends on the merit of the persons while on earth. When this is exhausted, they return for another period of probation; or go to a place of suffering for the expiration of previous demerit. This is the only heaven presented to the hope of the multitude, and generally the highest bliss they anticipate, சுவர்க்கம்.

தேவவசனம்—தேவவாக்கு, s. The word of God, the divine word, கடவுள்வாக்கு.

தேவவசிகரம், s. [R. Cathol. usage.] Transubstantiation. See வசிகரணம்.

தேவவருஷம் — தேவவருடம், s. A year of the gods. See தேவாண்டு.

தேவவிரதன், s. (St.) Bishma, வீடுமன். 2. A pious or religious person, கடவுளைத்தொழுபவோன். W. p. 434. Devavrita.

தேவவிருட்சம், s. Any of the five species of trees in Swerga, பஞ்சதரு. W. p. 424. Devavruksha

தேவவெளிப்படுத்தல், s. [Chris. usage.] Divine revelation.

தேவவைத்தியம், s. Superior medical preparations requiring a knowledge of chemistry, and regarded as of divine origin. See வைத்தியம்.

தேவன், s. A Deity, a god, a divine being, கடவுள். W p. 421. Deva. 2. A title given to அகம்படியர் caste. 3. A title given to some among Maravars. 4. (சது.) The name of Argha, அருகன்.

தேவாங்கம், s. Silk cloth, பட்டுச்சீலை.

தேவாசனம், s. [in Chris. usage.] The throne of god, an altar, கடவுளிருக்கை.

தேவாசுவம்—தேவாஸ்வம், s. The horse of Indra, இந்திரன்பரி; [ex அசுவம்]

தேவாண்டு—தேவஆண்டு, s. A year of the gods of Swerga, being three hundred and sixty-five years of mortals, திவ்வியவருஷம்.

தேவாதாயம் — தேவதாயம், s. Allowance for the support of heathen temples.

தேவாதி, s. God, கடவுள். (சது.)

தேவாதிதேவன், s. The God of gods.

தேவாதியர், s. [com. தேவாதிகள்.] The gods of Swerga and other celestials.

தேவாதீனம், s. Properties, peculiar rights, prerogatives, &c., of a deity. 2. Divine providence. See தெய்வாதீனம்.

தேவாத்திரம்—தேவாஸ்திரம், s. A divine missile-weapon from the gods.

தேவாமிர்தம் — தேவாமுர்தம், s. The ambrosia of the gods, the food of immortality, தேவருணவு.

தேவாரம், s. Divine praises, songs, &c., chanted by an assistant of the priest or others, after the performance of the *puja* in the Saiva temples. They were made by the three celebrated servants of Siva, அப்பர் சம்பந்தர் and சுந்தரர், and are called the Tamil Veda, being considered divine.

தேவாலயம், s. A temple, a place of worship, any sacred shrine, கோவில். W. p. 424 Devalaya. 2. (சது.) The golden mountain Maha Meru, as the favorite resort of the gods, மேருகிரி. See ஆலயம்.

தேவாலயத்தினுடைமை, s. Temple property, கோயிற்சொத்து.

தேவானுட்டிப்பு, v. noun. Religious practice, duties, exercises, worship, &c.; [ex அனுஷ்டிப்பு, observance.]

தேவி, s. A goddess. 2. Parvati, பார்வதி. 3. Durga, துர்க்கை. 4. Kali, காளி. 5. A queen, the wife of a prince, or nobleman, a term of respect to a married woman, சீமாட்டி. 6. A wife, மனைவி—as அண்ணன்தேவி, elder brother's wife.

தேவிகோட்டம், s. Any temple of Kali, காளிகோவில்; [ex கோட்டம்] 2. A town, ஊர். W. p. 424. Devikod'd'a.

தேவிபட்டினம், s. The town of Devipatam, ஊர்.

தேவீகம் — தேவிகம், s. [com. தெய்வீகம்.] Divinity.

தேவேந்திரன், s. Indra, இந்திரன்.

தேவோக்தித்தம்—தேவோக்தம், s. Divine revelation, தேவவெளிப்படுத்தல்; [ex Sa. Ukta, spoken.] (Beschi.)

தேவோத்தியானம், s. A flower-garden for the gods, also a garden to produce flowers for the idols; [ex உத்தியானம்.]

தேவளம், s. (Tel. [illegible]) A temple, கோயில்.

*தேவன்—தேவி. See under தேவம்.

*தேவிராம், s. (St.) The 248 longitudinal arcs registered in the Table of சாதகவாக்கியம்; [ex தேவிராம்=தேவர்கரம்=248.]

தேவை, s. Need, necessity, want, exigency, வேண்டுவது. (Colloq.) 2. A name of a town, Ramnad, இராமநாதபுரம்.

தேவையில்லை It is not needed, not necessary, it is of no consequence. 2. [elliptical.] There is nothing wanting or objectionable in it; it will do.

அவனுபகாரமெனக்குத்தேவையில்லை...... His assistance is not necessary to me.

அதைக்கொண்டவனுக்குத் தேவையில்லை That is no concern of his.

தேளி, s. A kind of fish, தேளிமீன், Scorpœna. [illegible] 2. A red kind of cocoa-nut, [illegible]

தேள், s. A scorpion, தேறுக்கால். (c.) 2. Scorpio of the Zodiac, விருச்சிகவிராசி. 3. The seventeenth lunar asterism, அனுடநாள்.

தேள்கொடுக்கு—தேட்கொடுக்கு. s. The sting of a scorpion.

தேள்கொட்ட, inf. To sting as a scorpion.

தேள்கொட்டபாம்புக்குமந்திரிக்கிறதா. Should one apply the antidote for a snake-bite to a scorpion's sting?

தேறகம்—தேறை, s. [prov.] A small kind of fish, தேறைமீன்.

தேறலர்—தேறலார், s. Enemies, &c. See தேற, v.

தேறல், s. Toddy, vinous liquor, கள். (சு.) 2. Honey, தேன். 3. See தேற, v.

தேறு, s. A piece, துண்டு, as of ginger, turmeric, calamus, &c., மஞ்சள்முதலியவற்றின்தேறு 2. [com. தேற்று.] The clarifying nut-tree, Strychnos, L. 3. (p.) Clearness, தெளிவு. 4. Certainty, நிச்சயம்.

சுக்குத்தேறு, s. A piece of dry ginger.

மஞ்சள்தேறு, s. A root of saffron.

வசம்புத்தேறு, s. A piece of calamus.

தேறு, கிறேன், தேறினேன், வேன், தேற, v. n. To recover strength, vigor, &c.,—as persons, beasts, plants; to grow well—as vegetation; to thrive, improve, செழிக்க. 2. To recover from swooning, intoxication, drooping, தெளிய. 3. To be comforted, consoled, solaced, soothed; to recover from fear, to cheer up, take courage, தைரியங்கொள்ள. 4. To make proficiency, arrive at perfection in a lesson, or in an art, &c., அதிகரிக்க. 5. To be thorough, accomplished, celebrated, perfect, mature, clear as the mind, to come to perfection, maturity, முதிர. 6. To prove, to result, to amount to—as profit, to turn out clear, பலிக்க. (c.) 7. To become stiff, hard, &c., as boiled rice, fruits, &c., when cold, சோறுமுதலியவிறைக்க 8. To stay, abide, தங்க. (சு.) 9. v. a. To form an opinion, to ascertain, to arrive at certainty, நிச்சயிக்க. 10. To confide, trust in, நம்ப.

ஒருமுழந்தேறும். There will be one cubit clear.

தேறலர்—தேறலார், s. Foes, enemies, பகைவர். 2. Ignorant persons, அறியாதார்.

தேறவிசாரிக்க, inf. [also தீரவிசாரிக்க.] To investigate thoroughly so as to be certain.

தேறாமை, v. noun. (neg.) Uncertainty, unfruitfulness, unsteadiness.

தேறார், appel. n. As தேறலர்.

தேறின எழுத்து, s. A finished handwriting. See under எழுத்து.

தேறினகட்டை, s. (fig. in cant.) An experienced person.

தேறினகாய், s. A nearly ripe fruit.

தேறினபயிர், s. Thriving vegetation.

தேறினபுத்தி, s. Improved intellect. 2. Good parts.

தேறினவன், appel. n. A man well versed in an art, a man of experience.

தேறுகடை, s. Settlement, finishing, தீர்மானம்.

தேறுகடைபண்ண, inf. To make a settlement, come to a decision.

தேறுசூடு s. [prov.] Branding cattle to promote their fattening, தேவிசூடு. 2. Brand on cattle.

தேறுதலை, s. [vul.] Courage, தைரியம். 2. Comfort, ஆறுதல்.

தேறுநர், s. The learned, கற்றோர். 2. Trust-worthy persons, நம்பத்தக்கவர். (p.)

படிப்பிலேதேற, inf. To make great proficiency in learning, to excel in study.

மனந்தேற, inf. To be comforted, consoled, &c. 2. To become sure, certain.

தேறல்—தேறுதல், v. noun. Certainty, நிச்சயம். 2. Determination, finishing of a business, துணிவு. 3. Staying, standing, தங்கல். (சு.) 4. Relief from sickness, குணமாதல். 5. Comfort, consolation, solace, ஆறுதல்.

தேறுதல்சொல்ல, inf. To comfort, console, cheer. (c.)

தேற்றம், v. noun. Certainty, assurance, &c., as தேறல், 1, 2. (சு.) 2. Clearness, தெளிவு. 3. [in gram.] An emphatic, ஏ, or மன்ற, as expressive of certainty, emphasis, &c., தேற்றக்குறிப்பு. 4. Recovery from sorrow, &c., as தேற்றரவு. 5. Comfort, as தேறல். 6. Thriving, firmness, good growth, செழிப்பு.

ஆள்தேற்றமாயிருக்கிறான். The person has gained strength, flesh, &c.

தேற்றக்குறிப்பு—தேற்றப்பொருள், s. See தேற்றம்.

தேற்றங்கொடுக்க, inf. To comfort, console, encourage. 2. To gain or recover strength, grow stout and firm, to thrive as persons, beasts, plants, &c. 3. To recover from dejection, to be cheerful as தெளிவுகொடுக்க.

தேற்றஞ்செய்ய—தேற்றம்பண்ண, inf. To comfort, console, encourage.

தேற்றமாய்ப்பேச, inf. To speak comfortably.

தேற்றமானபயிர், s. A reviving and thriving crop. See தேறினபயிர்.

தேற்றமானவன், appel. n. A courageous person. 2. One gaining strength, after weakness.

தேற்றரவு, v. noun. Relief from sorrow or fear; consolation, comfort, solace, தெளிவு. (c.)

தேற்றரவாளன்—தேற்றரவாளி, s. A comforter, consoler, encourager, திடப்படுத்தவோன். 2. [in Chris. usage.] The Holy Spirit.

தேற்றரவுசொல்ல, inf. To comfort, to cheer.

தேற்று, s. The water-clearing-nut tree, தேமரம், Strychnos potatorium, L.—Note. The grated nut thrown into a pot of turbid water clarifies it by precipitation.

தேற்றுங்கொட்டை, s. The தேற்று nut.

தேற்றுங்கொட்டைக்குளிகை, s. Medicinal pills made of the தேற்று nut.

தேற்றுங்கொட்டையிலேகியம், s. An electuary made of the nut.

தேற்றுங்கொட்டையுரைக்க, inf. To grate the தேற்று nut.

தேற்றும்பொடி, s. Medicinal powders of the nut.

தேற்றார், s. (plu.) The ignorant, அறிவிலர். 2. Foes, enemies, பகைவர்; [ex தேற.]

தேற்று, கிறேன், தேற்றினேன், வேன், தேற்ற, v. a. To comfort, to console, ஆற்ற. 2. To recover one from fear, swooning, weakness or dejection, குணமாக்க 3. To convince, assure, relieve from doubt, மெய்ப்பிக்க. 4. To communicate strength, to nourish, cherish, invigorate, பலமுண்டாக்க. 5. To clear, clarify, refine, purge, சுத்திகரிக்க. (c.) 6. To clear up, to decide, தீர்க்க 7. (for தேறு.) To know, to know certainly, அறிய. (p.)

தேனர், s. (plu.) Thieves, robbers, திருடர். [ex தேனு.] (சு.)

தேனு, s. Stealth, stealing, robbery, களவு. (சு)

•தேனு—தேநு, s. A milch-cow, one that has lately calved, பாற்பசு. W. p. 447. DHENU. 2. A cow, பசு. 3. The cow of Swerga, தெய்வப்பசு. (See காமதேனு) 4. A buffalo, எருமை. 5. A horse, குதிரை. (சு.)

•தேனுகன், s. A Rakshasa, ஓரசுரன்.

தேனுகாரி, s. Krishna, as an enemy of தேனுகாசுரன், whom he destroyed in battle, கிருட்டிணன்; [ex அரி.]

தேன், s. Honey, மது. (c.) 2. Toddy, கள். 3. Fragrance, odor, வாசனை. 4. A beetle, வண்டு. 5. Female bee, பெண்வண்டு. —Note. There are some varieties of honey; குறிஞ்சித்தேன், wild honey from the hills; கொசுத்தேன், பொசுத்தேன், சிறுதேன், honey of a very small bee; பெருந்தேன், good honey from the hills produced by large bees; கொம்புத்தேன், honey from a bunch of a tree in a comb; செந்தேன், red honey of high flavor.

தேன்கூட்டிலேகல்லெறிபடுமா. Would one stone a bee's nest?

தேனைத்தொட்டவன்கைநக்கானோ. Will not those who handle honey lick their fingers?

தேனும்பாலும்போலே. United as closely and sweetly as honey and milk.

தேனிறால், s. [vul. தேனிருட்டு.] Honeycomb, தேன்கூடு.

தேனீ, s. A bee, தேன்கூட்டுப்பூச்சி. (c.)

தேனூற, inf. To flow with honey, to be melifluous. 2. To be pleasant, gratifying.

தேனூறுமலர். The honey-forming flower.

தேனெறும்பு, s. The largest kind of emmet, fond of sweets, பெரியஎறும்பு.

தேனொழுகல், v. noun. Drops of honey.

தேன்கடல், s. One of the seven seas, the sea of honey, ஓர்கடல்.

தேன்கதலி, s. A sweet kind of plantain, ஓர்வாழை.

தேன்குழல்—தேன்குழாய்—தேங்குழல், s. A kind of pastry fried in ghee, fritters, ஓர்பலகாரம்.

தேன்குழலுரல், s. A mould for making this pastry.

தேன்குழற்கம்பி, s. A piece of pastry.

தேன்கூடு, s. A bee's nest or hive, தேனிக்கூட்டம். 2. Cells in a bee's nest, தேன்கூட்டினுட்குழி. 3. Honey-comb, தேனிறால்.

தேன்தோடை—தேன்றோடை, s. [prov.] The orange tree or fruit. See தோடை.

தேன்பூச்சி, s. As தேனீ. (R.)

தேன்வதை, s. [prov.] Honey-comb, தேனிறால்.

தை

தை. A syllabic letter, compounded of த் and ஐ.

தை, s. January, the month, ஓர்மாதம். 2. A sound in beating time, தாளக்குறிப்பி லொன்று. (c.) 3. The eighth lunar asterism, as பூசம். 4. Capricorn of the Zodiac, மகரவிராசி. 5. (R.) Juice and root of தைவேளை, which see.

தைபிளப்புல்லுமில்லைமாசியிளைமரமுமில்லை......... There is no graminious plant, but ears in January; and no tree that does not blossom in February.

தைக்குரக்கன், s. [prov.] Watching millet sown in January.

தைச்சங்கிரமம், s. The entrance of the sun into Capricorn. See சங்கிரமம், சங்கிராந்தி.

தைச்செவ்வாய், s. [prov.] A Tuesday in January, auspicious.

தைப்பிறப்பு, s. [com. தைமாதப்பிறப்பு] New year's day, astronomically; observed by boiling rice, to propitiate the favor of the sun, supposed to commence, at that time, his course northward.

தைப்பிறை, s. The new moon as seen in January; observed to ascertain whether the year will be fruitful.

தைப்பூசம், s. The day when the moon is in the பூசம், in January, being an auspicious time for eating the first rice, bathing, and taking oblations to the temple.

தைப்பொங்கல், s. The festival of boiling rice in cow's milk. See தைப்பிறப்பு.

தையறம், s. [prov.] The drying up of the rivers in January.

தை, கிறேன், ந்தேன், வேன், ய, v. a. To adorn, to beautify, அலங்கரிக்க. (சது.)

தைதல், v. noun. Embellishment.

தை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To sew, stitch, seam, make, as an article of dress, by sewing; to mend, &c., தன்ன. 2. To nail, to fasten boards, beams, &c., with nails, spikes, or pegs; to pin, to skewer, to run leaves together, ஆணிமுதலியனதைக்க. 3. To net with a netting needle, வலைபின்ன. 4. [with தொகை.] To cast or add up; to close an account, as தொகைதைக்க. As v. n. க்கிறது, த்தது, க்கும், க்க,—in the 3d pers. neut. To pierce, to penetrate; to enter—as a thorn, arrow, ball or shot, முள்ளுமுதலியதை. 2. (fig.) To strike, or pierce the mind — as a remonstrance, reproof or sarcasm; to cause pain, remorse, &c., மனதிற்படிய. 3. To light on one, as the fascinating looks of a lover or the blighting looks of an unlucky person, திருஷ்டிபட. (c.)

அவன்காலுக்குவிலங்குதைக்கப்பட்டது. His feet are fastened with chains.

அவன்சொல்லவனுக்குத்தைத்தது. His word cut to the heart.

கண்ணுக்குத்தைத்தது. It was charming or attractive to the sight.

தைப்பான், appel. n. A needle, ஊசி. 2. One who sews, தையற்காரன்.

தைப்பை, s. A garment made by sewing, சட்டை. (சது.)

தையல், v. noun. Sewing, stitch, seam.

தையல்விட்டுப்போயிற்று — தையல்பிரிந்துபோயிற்று. The seam of the garment is ripped.

தையல்வேலை, s. Stitching, needle work.

பெரும்படித்தையல். Coarse sewing.

சிறுதையல். Nice or neat sewing.

கெட்டித்தையல். A double seam.

தையலூசி, s. A sewing needle, in distinction from one for knitting.

தையல்தைக்க, inf. To sew.

தையல்பிரிக்க, inf. To rip open a seam.

தையற்காரன், s. [fem. தையற்காரி.] A tailor, a seamster, a sewer. 2. A knitter.

தையற்பை, s. A bag, as தையற்பெட்டி.

தையற்பெட்டி, s. A work basket or box containing things for needle work.

பீற்றல்தைக்க, inf. [also கந்தைபொருத்த] To mend a rent in a garment.

வலைதைக்க, inf. To mend nets.

தைப்பு—தைத்தல், v. noun. Sewing, nailing, joining two things together by sewing, or nailing, தைக்கை. 2. Stitching, piercing, உருவுகை.

•தைசதம், s. Belonging to fire, powerful, intense, அக்கினிசம்பந்தம். W. p. 385. TAIJASA. 2. One of the three அகங்காரம், or active powers of the incorporated soul, that connected with சாத்துவிதம் quality. The three அகங்காரம் as given in சிவஞானசித்தி, are பூதாதியகங்காரம், வைகரியகங்காரம், தைசதஅகங்காரம், which see in their places.

தைசதஅகங்காரம் — தைசதாகங்காரம், s. The first of the three அகங்காரம்.

•தைதுலம்—தைதுலை, s. (St. தைதிலம்.) The fourth astrological karna, ஓர்கரணம்.

•தைத்தியர், s. The Asuras, அசுரர், or Titans, of Hindu mythology, திதிமைந்தர். See திதி. W. p. 424. DAITYA.

தைத்தியபுரோகிதன்—தைத்தியமந்திரி, s. Venus the planet, or the regent of the planet as counsellor of the Asuras, சுக்கிரன்.

தைத்தியாரி, s. Vishnu, விஷ்ணு; [ex அரி, destroyer.]

•தைத்திரியம், s. The second of the four Vedas, இரண்டாம்வேதம்; also one of the Upanishads. See உபநிடதம். W. p. 385. TAITTIRIYA.

தைப்பை, s. See தை, v. a.

தையல், s. Beauty, fairness, gracefulness, handsomeness, அழகு. 2. One of the fair sex, a woman, பெண். (சது) See தை, v. a.

•தைரியம், s. [sometimes தயிரியம்.] Steadiness, courage, encouragement, confidence, &c., துணிவு. W. p. 447. DHAIRYA. 2. A horse's trot, குதிரையின்கொசைநடை. (Sa. Dhowrya.)

தைரியக்காரன் — தைரியசாலி, s. A courageous person.

தைரியங்கொடுக்க, inf. To animate, to encourage, to embolden.

தைரியங்கொள்ள — தைரியப்பட, inf. To take courage, to be encouraged, to cheer up.

தைரியஞ்சொல்ல, inf. To encourage by advice.

தைரியலட்சுமி, s. Lukshmi, as the goddess of valor. See இலட்சுமி.

தைரியவான், s. A courageous man, as தைரியசாலி.

மனத்தைரியம், s. Fortitude, courage.

•தைலம், s. [also தயிலம்.] Gingely oil; oil from Sesamum, நல்லெண்ணெய். W. p. 385. TAILA. 2. Oil, unguent, எண்ணெய். 3. Fragrant oil, essential vegetable oil, balsam, medicinal oil, tincture, மருந்தெண்ணெய். 4. An oil, or balsam for anointing, அபிஷேகதைலம். 5 The sap of a tree or plant, சாரம். 6. (fig.) Strength, சத்து (c.) இந்தமரந்தைலஞ்செத்தது. The tree has lost its juice or strength.

தைலக்காப்பு, v. noun. Anointing an idol, &c., with fragrant oil. See எண்ணெய்க்காப்பு.

தைலக்காரன், s. An apothecary, தைலம்விற்போன்.

தைலங்கூட்ட, inf. To distil essential oil.

தைலபீதம், s. The gum of the red wooded or country fig-tree, அத்திப்பிசின், Ficus racemosa.

தைலமாட்ட, inf. To anoint the head or body, எண்ணெய்க்காப்பிட. 2. To embalm a dead body, பிரேதலங்காரம்பண்ண. (p)

தைலமிட—தைலம்பூச, inf. To rub oil on the body.

தைலமிறக்க—தைலமெடுக்க, inf. To extract or distil medicinal or fragrant oils. 2. To deprive one of ability, bodily, pecuniary, &c., சந்தெடுக்க.

தைலம்வடிக்க, inf. As தைலமிறக்க.

தைலாபிஷேகம், s. As தைலக்காப்பு.

பரிமளதைலம், s. Sweet ointment, perfume.

தைலா, s. (Port.) A wooden box, trunk, மரப்பெட்டி. (Jaffna usage.)

தைலாங்குருவி, s. A small bird. See தகைவிலாங்குருவி. (c.)

தைலி, s. (Hind.) A purse, பணப்பை.

•தைவதம், s. Divinity. See தெய்வதம். 2. See நிஷாதம்.

தைவரல் — தைவருதல், v. noun. Shampooing, softly pressing and stroking the limbs with the hands. See தடவல். (p.)

•தைவிகம்—தைவீகம், s. Relating to the gods, divine, தெய்வீகம். W. p. 426. DAIVIKA.

தைவிளை—தைவேளை, s. The name of a plant called அசகண்டம், Cleome felina, L.

•தைவேத்தினம், s. Divine interposition, &c., as தெய்வேத்தினம்.

தைனுத்து, s. (Arab.) Appointment, attendance, service; also the person.

தைனுத்துச்சேவகன், s. A volunteer peon.

•தைனியம், s. [also தயினியம்.] Lowness, humbleness, submissiveness, எளிமை. 2. Nigardliness, covetousness, உலோபம். W. p. 425. DAINYA.

தைனியவசனம், s. Submissive language, வணக்கமானசொல்.

தொ

தொ. A compound letter of த் and ஒ.

தொகம், *s.* An estimate, a total, மதிப்பு.

தொகக்காரன், *s.* One who estimates.

தொகம்பார்க்க, *inf.* To value the produce of a field. (*Gov. usage.*)

தொகு, கிறது, தொக்கது, தொகும், தொக, *v. n.* To assemble, to collect, or be collected together, to accumulate, கூட. 2. To form as a whole, an aggregate, a lump, திரள. 3. To be summed up, to be brought into a total, தொகையாக. 4. To become concentrated, or united in one, to be brought to a focus, to converge as rays, குவிய. 5. To be omitted, as a particle in the combination of words, வேற்றுமையுருபு முதலியமறைய. 6. To be contracted, as a word; to be omitted, as a letter, or letters in the beginning or end of a word, சுருங்க.

தொகப்படுவது, *appel. n.* Ellipsis or contraction.

தொகல், *v. noun.* Collection, assemblage, joining, கூடல்.

தொகாநிலை—தொகாநிலைத்தொடர், *s.* [*in gram.*] The connexion of a word with its பயனிலை, or that with which it makes sense, without ellipsis, contraction, &c., வினை உருபுமுதலியவிரிந்துநிற்றல்.—It embraces nine varieties; 1. முற்று, finite verbs with their nominatives, as வந்தான்சாத்தன், Sattan came. 2. பெயரெச்சம், relative participle, and its noun, as வந்தசாத்தன், Sattan who came. 3. வினையெச்சம், verbal participles with their finite verb, &c., as வந்துபோனான், he came and returned. 4. எழுவாய், the nominative and its verb, as சாத்தன்வந்தான், Sattan came. 5. விளி, the vocative and its verb, as, சாத்தாவா, come Satta. 6. இரண்டாவதுமுதலிய ஆறு வேற்றுமையின் உருபு, the six oblique cases (the vocative excepted), with their பயனிலை, as சோற்றையுண்டான், he ate the rice; மகனொடு சென்றான், he went with his son; சாத்தற்குமகன், son to Sattan; மலையின்வீழருவி, cataract falling from the hills; சாத்தனதுகை Sattan's hand; குன்றத்தின்கட்கூகை, owl in a hill. 7. இடை, particles with their nouns, or verbs, as பொன்னன்னகுதிரை, A horse like gold. 8. உரி, adjectives or adverbs with their nouns or verbs, as மாவிருஞாலம், very glorious world, சாலப்பகை, great enmity. 9. அடுக்கு, the repetition of the same word for emphasis, &c., as பாம்பு பாம்பு, snake, snake; தீதீ, fire, fire, &c.

தொகுதி, *s.* A series or class of persons, things, &c., கூட்டம். 2. A society, association, மக்கட்குழு. 3. A flock, herd, swarm, &c., விலங்கின்குழு. 4. Genus, aggregate, பிண்டம். 5. A quantity, collection, accumulation, திரட்சி. (*p.*)

தொகுதிப்பெயர், *s.* A noun of multitude, குழூஉப்பெயர்.

தொகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To assemble, to collect together, to accumulate, கூட்ட. 2. To classify, to arrange in class, கிளைக்க. 3 To sum up, to reduce to a total, to abridge, to abbreviate, தொகைசெய்ய. (*c.*) 4. To omit a letter or letters in the beginning, middle, or end of a word, முதலிடைகடைகுறைக்க. 5. To estimate, மதிக்க.

தொகுத்துக்காட்ட, *inf.* To give the sum or substance of a thing, or transaction.

தொகுத்துச்சுட்டல், *v. noun.* Mentioning, or opening a subject about to be treated of; one of the thirty-two உத்தி.

தொகுத்துச்சொல்ல, *inf.* To state in brief, to give a summary. 2. To mention particularly, to particularize.

தொகுத்துப்பார்க்க, *inf.* To view things in the aggregate, as a whole, &c.

தொகுத்துரை, *s.* A free rendering of the text. See உரை.

தொகுப்பு, *v. noun.* The sum, total, தொகை. (*c.*)

தொகை, *s.* Assembly, collection, கூட்டம். 2. Sum, amount, total, தொகுதி. 3. Property, stock, money, பணஇருப்பு. 4. Summary, aggregate, epitome, compend, substance of a narrative, abstract of a subject; genus, as including species; general subjects combined, whether analytically or synthetically, சுருக்கம். 5. Assortment, இனமடைப்பு. 6. Article, item, particulars of an account, &c., எண்ணிறுப்பு. (*c.*) 7. [*in gram.*] Omission of a particle in the combination of words, as தொட்டனைத்து, for தொட்டஅனைத்து, as far as day, தொகுத்தல் விகாரம். 8. Elliptical combination of words, as பொன்கொணர்ந்தான், for பொன்னைக்கொணர்ந்தான், he brought the gold. (See தொகைநிலை.) 9. The main division of a treatise, as distinguished from வகை or விரி, அறுவகைச்சூத்திரத்தொன்று.

தொகைபிசகிப்போயிற்று. The calculation is erroneous.

தொகைகட்ட, *inf.* To finish, to conclude, to bring to an end. 2. To deliver up, to make over, as money, &c., to make a final payment. 3. To sum up, to make a total, to make out the total, to cast up.

தொகைகாட்ட, *inf.* To give a written account. 2. To state a particular number or sum. 3. To make a sum appear large, to magnify. 4. *v. n.* To appear large, as an amount.

தொகைகூட்ட, *inf.* To add up.

தொகைக்காரன், *s.* A man of considerable property, தனவான். (*c.*)

தொகைச்சூத்திரம், *s.* One of the six kinds of rules for composition. See சூத்திரம்.

தொகைதைக்க, *inf.* To make out the grand total of an account. See தை, *v.*

தொகைநிலை, *s.* A summary, contraction, ellipsis, &c., சுருக்கிநிற்கை. 2. [*in gram.*] The connection of a word with the பயனிலை by omitting a particle, வேற்றுமையுருபுமுதலியதொக்குநிற்றல்.—It embraces six varieties; 1. வேற்றுமைத்தொகை, the omission of the sign or form of the case, as பொன்கொடுத்தான், for பொன்னைக்கொடுத்தான். 2. வினைத்தொகை, a verb without the sign of the tense, combined with a noun, as கொல்புலி for கொன்றபுலி, கொல்கின்றபுலி, கொல்லும்புலி. 3. பண்புத்தொகை, omission of the adjective sign ஆகிய or ஆய in combining the qualifying epithet with the noun, as கருங்குவளை for கருமையாகியகுவளை, or two nouns in apposition, as ஆதிபகவன். 4. உவமைத்தொகை, the combination of two words with the omission of the sign of comparison, as பவள்மொழி for பவள் போலுமொழி. 5. உம்மைத்தொகை, omission of the particle உம், as கபிலபரணர் for கபிலனும்பரணனும்; also இராப்பகல் for இராவும், பகலும். —*Note.* In this combination, there is commonly no reduplication. 6. அன்மொழித்தொகை, a metonomy or omission of a word, commonly the name of a person, immediately after any of the five preceding ellipses, as பொற்றொடி for பொற்றொடியையுடையாள், the golden bracelet-damsel.

தொகைநிலைச்செய்யுள், *s.* A poem consisting of a fixed, even number of verses, ஓர்பிரபந்தம்.

தொகைநிலைத்தொடர்மொழி, *s.* As உவமைத்தொகை. (*R.*)

தொகைநிலையுருவகம், *s.* [*in rheto.*] A perfect metaphor, ஓரலங்காரம்.

தொகைபடுவது, *appel. n.* Contraction of words, as தொகப்படுவது.

தொகைபார்க்க, *inf.* To sum or cast up the amount. (*c.*)

தொகைபூட்ட, *inf.* [*prov.*] To balance accounts, to strike a balance, கணக்குச்சரிக்கட்ட. 2. As தொகைதைக்க.

தொகைப்படுத்த—தொகையாக்க, *inf.* To make up an even number. 2. To make a large sum. 3. To sum up; to reduce to heads.

தொகைப்பிசகு — தொகைமோசம், *s.* An error in a reckoning. 2. (*fig.*) A mistake, a blunder.

தொகைப்பொருள், *s.* Recapitulation; peroration, விரித்தபொருளின்அடக்கம்.

தொகைமோசம், *s.* See தொகைப்பிசகு.

தொகையகராதி, *s.* One of the four divisions of சதுரகராதி, which see.

தொகையுருவகம், *s.* As பண்புத்தொகை. (*R.*)

தொகையுவமம், *s.* Contraction of metaphor. See உவமைத்தொகை.

தொகையேற்ற, *inf.* To make a large sum, by the addition of many small items, commonly as a debt. 2. As தொகைகட்ட. (*c.*)

தொகைபெறுதல், *v. noun.* Swelling to a large sum by the addition of many items. 2. Forming a total, an amount.

தொகைவகை, *s.* Head and divisions of a subject.

தொகைவகைவிரி, *s.* Heads of a subject, its general divisions, and discussion, &c.

தொகைவிரி, *s.* Head of subject and the discussion.

தொக்க, *rel. parti.* Joined, united, சேர்ந்த; [*ex* தொகு, *v. n.*] (*p.*)

தொக்கமனிதர், *s.* Assembled men.

தொக்கடம், *s.* (*Tel* తొక్కుడు.) Pressing, pounding, treading down, மிதித்தல்முதலியன.

தொக்கடம்போட, *inf.* To squeeze the limbs in order to remove pain. 2. To express the juice of leaves by squeezing, கசக்கிச்சாறுபிழிய.

தொக்கடவு, *s.* [*prov.*] A cross-way, a shorter way than the common road, குறுக்குவழி. (*c.*)

தொக்கடி—தொக்கடடி, *s.* [*prov.*] A kind of basket made of olas to protect fruit on the tree, ஓலைக்குடலை. 2. A small ola-basket for fruit, சிறுகூடை. 3. A small hut for watchers in a field, காவற்குடிசை.

தொக்கடை, *s.* (*Tel.*) Poverty, want, வறுமை.

தொக்கடைப்பட, *inf.* To suffer want.

தொக்கம், *s.* (*For.*) A law-suit, வழக்கு.

தொக்கக்காரன், *s.* A litigious man.

தொக்கம், *s.* Any thing eaten adhering to the bowels. See தொங்கல். [*ex* தொங்கு.]

குழந்தைவயிற்றில்தொக்கம்நிற்கிறது. Something sticks in the child's bowels.

தொக்கிடம், *s.* Pressing the body, in anointing before bathing. (*O. Dic.*)

தொக்கார், *s.* [*plu.*] People assembled, assembly, company. 2. Friends, adherents, தோழர்; [*ex* தொகு, *v.*] (*p.*)

தொக்கு, *s.* A small matter, அற்பம், (c.)

தொக்காய்ப்போகாது—தொக்கிலேபோகாது. It will not be trifling, it will not pass with impunity.

தொக்குத்தொடிகளைவைக்காமலெடுத்துப்போடு....... Take it all away, leave nothing.

தொக்குக்கண்டுகொள்ள, *inf.* To disregard, to treat one meanly.

தொக்கு, *s.* (*St.* துவக்கு.) Skin, cuticle, surface of the body, as one of the five organs of sense, தோல். (*Met.*) raiment. (See அக்குத்தொக்கில்லாதவன்.) W. p. 393. Tvak. 2. The bark of a tree, மரப்பட்டை. 3. (சது) Body, சரீரம்.

தொக்கிந்திரியம், *s.* The sense of feeling.

தொக்குத்தொக்கெனல், *v. noun.* The creaking of shoes, &c., சரடுக்கொடுக்குதிப்பு. (c.)

தொக்குத்தொக்கென்றுநடக்க, *inf.* To walk, making a noise—as with shoes. 2. To walk fast and with a rocking motion, as a corpulent person, &c.

தொக்குநிற்றல், *v. noun.* Being omitted or understood as a particle, &c., in language or combination. See தொகைநிலை. [*ex* தொகு, *v.*]

தொங்கணி, *s.* A pendent ornament, தூக்கணி; [*ex* தொங்கு, *et* அணி.]

தொங்கல், *s.* Any thing pendent, hanging, &c., தொங்குதல். 2. A pendent part of an ornament, ஆபரணத்திற்றொங்கணி. 3. End or corner of a woman's cloth, either hanging or brought up round the neck; end of a man's cloth thrown over the shoulder, முன்றானை. 4. [*prov.*] Any thing stuck or hanging, ready to fall, ஒட்டுப்பற்றியிருத்தல். 5. A thing eaten adhering to the bowels, தங்கல். 6. An ear-ornament in general, காதணி. 7. Hangings or fringes of cloth, shawl, &c., தூக்கங்கள். (*c.*) 8. A flower garland, பூமாலை. 9. Tail of a peacock, மயிற்றோகை. 10. A bunch of peacock's feathers, for a fan or parasol, பீலிக்குடை. 11. A white umbrella, being an emblem of royalty, வெண்குடை. 12. End, extremity, projection, cape, headland, promontory; end of a street, முனை. 13. Men's hair, ஆண்மயிர். (சது.)

தொங்கலுக்குத்தொங்கல். At every corner.

தொங்கலிலேமுடிய, *inf.* To tie up in the end of a cloth.

தொங்கலுக்குப்பார்க்க, *inf.* To try to remove an obstruction in the bowels by magic.

தொங்கல்போட — தொங்கல்விட, *inf.* [*prov.*] To put the end of the cloth over the shoulder, as a woman.

தொங்கன், *s.* [*fem.* தொங்கி.] A thief, a rogue, கள்ளன்; [*ex* *Tel.* దొంగ.]

***தொங்கிசம்**, *s.* (*St.* துவங்கிசம்.) Loss, destruction, damage, detriment, injury, கேடு. (*c.*)

அவன்மெத்தவுந்தொங்கிசப்படுகிறான்.......He is much straitened.

தொங்கு, கிறேன், தொங்கினேன், வேன், தொங்க, *v. n.* To hang, to be suspended, to hang down, to stick, or hang, ready to fall; to dangle, தூங்க. 2. To adhere as any thing to the bowels, தங்க. 3. (*fig.*) To remain long with one, as another's property, நிலுவைப்பட. (*c.*) 4. To move with leaps—as a child skipping, or a beast galloping, குதிக்க. 5. [*in burlesque*] To run away, to slip off (to die) with விடுதல், or போகுதல்; குழூஉக்குறி.—Most of the compounds are limited to Jaffna.

தொங்காரப்பாய்ச்சல், *v. noun.* A jolting pace, jumping movement, gallop of a horse, குதிரையோட்டம்.

தொங்கிப்பாய, *inf.* To rise high in walking, to gallop, to skip. 2. (*fig.*) To be haughty, to assume airs.

தொங்கிப்போக, *inf.* To be lodged and lost as a thing thrown. 2. (*fig.*) To be in another's possession, to be lost, to be unjustly appropriated—as a deposit, to become burdensome as a debt. 3. To tarry in the road from fatigue. (*c.*) 4. [*in cant.*] To die. 4. [*prov.*] To run away.

தொங்கிவிழ, *inf.* To jump and tumble down. 2. To be haughty, to be exposed to fall.

தொங்குகாது, *s.* Hanging ears. (*c.*)

தொங்குபறிவு—தொங்குபொறி—தொங்குபொறிவு, *v. noun.* [*prov.*] Hanging just ready to fall; to slip off; to turn over, ஒட்டியும்ஒட்டாதிருத்தல். 2. (*fig.*) Ready or waiting for a pretext to leave a company, விலகுதற்கேதுப்பார்த்தல்.

தொங்குகிழவன், *s.* A decrepit, old man. (*R.*)

தொங்குபுளுகன், *s.* [*prov.*] A vain person, who walks with a conceited springing gait, பெரும்புளுகன்.

தொடக்கம், *s.* Beginning, commencement, origin, ஆதி. (சது.) 2. Undertaking, entrance upon, தொடக்குகை. 3. Means for an end, எத்தினம்; [*ex* தொடங்கு, *v.*] (*c.*)

இத்தொடக்கத்தன. And so forth. (*p.*)

தொடக்கஞ்செய்ய, *inf.* To begin, to commence, to enter.

தொடக்கு, *s.* The uncleanness of a woman in her menses and in child-bed, மகளிர்குற்றம். (See துடக்கு.) 2. Entanglement, tying, binding, கட்டு. 3. Connexion, concern, பற்று. *Sometimes* துடக்கு. 4. (*R.*) A kind of ornament, தொடக்குவடிவு.

தொடக்கு, கிறேன், வேன், தொடக்க, *v. a.* [*also* துடக்கு] To tie, கட்ட. 2. To entangle, சிக்குப்படுத்த 3. [*vul.*] To begin, தொடங்க. 4. To make to agree, பொருத்த.

தொடங்கு, *s.* [*prov.*] [*also* துடங்கு.] Stocks for confinement, விலங்கு. 2. A jewel for the foot, காலணி.

தொடங்கு, கிறேன், தொடங்கினேன், வேன், தொடங்க, *v. a.* and *v. n.* [*improp.* துடங்கு.] To begin, to commence, to originate, ஆரம்பிக்க. 2. To undertake, to enter upon, to engage in, முயல. (c.)

தொடரி, *s.* (*also* துடரி.) A shrub. See தொடர், *v.*

தொடர், *s.* Yarn, cotton thread, பஞ்சிநூல். 2. Gum, glue, பிசின். 3. Flower garland, பூமாலை. 4. Chain, சங்கிலி. 5. Fetter, விலங்கு. 6. (*fig.*) Love. (*Beschi.*) 7. Antiquity, lineal succession, பழமை. 8. Following, succession, connection, series, பின்சேறல். 9. Phrase, sentence, words forming a complete idea, சொற்றொடர்.

தொடர்ச்சொல்—தொடர்மொழி, *s.* A compound word; also a phrase, clause, sentence.

தொடர்ச்சொற்புணர்த்தல், *v. noun.* Combining or giving rules for the composition of words; one of the thirty-two உத்தி.

தொடர்ப்பாடு, *v. noun.* Connexion, attachment, சம்பந்தம்.

தொடர், கிறேன், ர்ந்தேன், வேன், தொடர, *v. a.* To succeed each other reciprocally as the tree and seed, the body and its actions, and *vice versa*, பீசவிருட்சநியாயமாய்த்தொடர. 2. To proceed or succeed each other—as letters in the formation of words, &c., எழுத்துருதலைத்தொடர. 3. To follow continually, to continue, இடைவிடாதுவர. 4. To insist, to engage with energy, முயல. 5. To follow, to attend as on a great man, to pursue, பின்செல்ல. 6. To seek, to go in quest of, to apply to from day to day, தேட. 7. To follow in order, in unbroken succession, &c., தொடர்ந்துவர. 8. To prosecute, to claim in law, to sue, வழக்காட. (*c.*) 9. To connect, to tie, to bind, கட்ட. 10. To assail, to attack, தாவ.

கருமத்திற்றொடர்ந்திருக்கிறான். He perseveres in his undertakings.

தொடர்முறி, s. A deed of renunciation or relinquishment, an agreement not to prosecute in law, விடுதலைப்பத்திரம். (c.)

தொடரி, appel. n. A kind of thorny shrub whose fruit is edible, Rhamnus circumcissus, L. See முட்டொடரி and பெருந்தொடரி.

தொடரெழுத்து, s. A letter elided or changed in the combination of words according to the rules of permutation, தொடர்ந்துநிற்குமெழுத்து, as அவனிருந்தான், for அவன் இருந்தான், and வந்தடித்தான்—for வந்து அடித்தான்.

தொடர்நிலைச்செய்யுள், s. A poem in which several connected actions are related, epic poetry, ஒருவகைச்செய்யுள்.

தொடர்ந்தஅன்பு, s. Continued love. (R.)

தொடர்ந்தார்—தொடர்ந்தோர், appel. n. (plu.) Friends, companions, மித்திரர்.

தொடர்ந்துதிரிய, inf. To be constantly about with one. 2. To pursue an object with unremitted application. (c.)

தொடர்ந்துபழிசெய்ய, inf. To injure one without provocation.

தொடர்ந்துபிடிக்க, inf. To overtake. 2. To seek diligently and find.

தொடர்ந்துபேச, inf. To continue speaking.

தொடர்ந்துபோக, inf. To pursue, follow after one.

தொடர்த்தேற்றி, s. [prov.] Perseverance, persistence, repetition, விடாமுயற்சி.

தொடர்ச்சி, v. noun. Pursuit, continuance. (met.) effect or consequence. (Beschi.) 2. Claim in law-suit, வழக்குத்தொடர்ச்சி. 3. Cluster of flowers, bunch of flowers, பூங்கொத்து. 4. Perseverance, முயற்சி. 5. Demoniacal possession, பேய்த்தொடர்ச்சி. For other meanings, see தொடர்பு. (c.)

எனக்குமவனுக்குந்தொடர்ச்சியில்லை. I have no connexion with him, I have no claim on him.

தொடர்ச்சிக்காரன், s. [in law.] A claimant, a prosecutor, a plaintiff.

தொடர்ச்சிபண்ண, inf. To prosecute in law, to claim, to sue.

தொடர்ச்சியானகாரியம், s. An actionable matter.

தொடர்ச்சியாய்ச்செய்துவர, inf. To persevere in an undertaking.

தொடர்பு—தொடர்வு, v. noun. Continuance, succession, தொடர்ச்சி. 2. Series, tissue, train, range, chain, சங்கிலித்தொடர். 3. Friendship, constancy in friendship, attachment, சிநேகம். 4. Relationship, connexion by consanguinity, or affinity, உறவு. 5. Antiquity, hereditary succession. 6. Lineal descent, பரம்பரைத்தொடர்பு. 7. Regular succession following one another, முறைமை. 8. Reciprocal succession, as the tree and its seed, and the contrary, வித்துமரமாய்த்தொடர்கை. 9. Connexion, as of liquid particles, &c., ஒட்டுகை. (c.) 10. Verse, poetry, பா.

தொடர்மொழி, s. Compound words. See தொடர்ச்சொல்.

தொடலை, s. A garland, மாலை; [ex தொடு, v.] 2. Females' play, மகளிர்விளையாட்டு. 3. Play in general, விளையாட்டு. (சது.)

தொடி, s. A bracelet or bangle, கைவளை. 2. Another kind of arm-ring, கங்கணம்; [ex தொடு, v. a.] 3. A weight, the பலம். (சது.)

பைந்தொடி—பொற்றொடி. A lady with golden bracelets. (p.)

தொடிசு, s. Connexion, concubinage, sexual intercourse, சம்பந்தம். See தொடுசு.

தொடித்தலைவிழுத்தண்டினார், s. One of the forty-nine professors of the Madura college, whose encomiastic stanza on the Cural has preserved his name from oblivion, சங்கப்புலவரிலொருவர்.

தொடு, s. Garden, தோட்டம். 2. Field, tilled land, agricultural land, மருதநிலம். 3. Deceit, guile, வஞ்சம். (சது.)

தொடுகடிகடிக்க, inf. [prov.] To graze, to crop off the tops of grass, மேற்கடியாகக்கடித்துமேய. 2. To pick out food, to eat daintily, வேண்டாவெறுப்பாயுண்ண.

தொடுக்கம், s. Gold, பொன். (சது.)

தொடுசு, s. (Tel. తొడుసు.) Connexion, ஒட்டு. 2. Concubinage, சம்பந்தம். (c.)

இவளுக்கவன்தொடுசு. She is his concubine.

தொடு, கிறேன், தொட்டேன், வேன், தொட, v. a. To touch, to come in contact with, to feel, to perceive by the touch, பரிசிக்க. 2. To handle, to take hold of, to finger, to use, பிடிக்க. 3. To be connected or united, to be joined, &c., பொருந்த. 4. To begin, தொடங்க. (c.) 5. To discharge an arrow or other missile weapon, அம்பெய்ய. 6. To eat, உண்ண. 7. To dig, to scoop out, to excavate, தோண்ட. 8. To put on shoes or a garment, தரிக்க.

தொட்டாற்றோழன்விட்டான்மாற்றான். A friend if persevered in, and a foe if neglected; spoken of an art.

தொடப்படாது. I cannot give you; (lit.) cannot touch.

தொட்டுக்கண்ணிலேயொற்றிக்கொள்ள.......To touch the feet of an idol or great person and then apply the fingers, to the eyes; as if saying, "I worship your feet." 2. [in contempt.] To be too obsequious, or submissive.

ஆகாசத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. The top of trees, &c., touches the sky.

தோஷந்தொட்டிருக்கிறது. Fatal symptoms have appeared (as in cholera, &c., before death).

நிலந்தொட்டுவைத்தார்கள். They rubbed the sand in which they had written (on their forehead, eyes, and breast).—Note. This is done in homage to Ganesa or Sarasvati.

சனியன் தொட்டுக்கொண்டது. Saturn has begun to exert his malign influence.

செருப்புத்தொட்டுக்கொண்டுநடக்க, inf. To walk with sandals.

தொடுகழல், s. A pair of Indian slippers, as தொடுசெருப்பு. (p.)

தொடுகழன்மறவர், s. (plu.) Heroes who wear ankle rings. 2. Huntsmen with sandals. (p.)

தொடுகை, s. Touch, பரிசம். 2. v. noun. Digging, தோண்டுகை.

தொடுகிலும், [prov.] At all, in any wise, &c., used with a negative verb, ஒருபொழுதும்.

தொடுசெருப்பு, s. As தொடுகழல். (c.)

தொடுபதம், s. Boiled rice, சோறு. (சது.)

தொடுவாய், s. [prov.] Confluence or junction of two rivers, or of a river with the sea, தண்ணீர்கள்சந்திக்குமிடம்.

தொடுவான், s. [prov.] The horizon, அடிவானம்; [ex வானம், the heavens.]

தொடல், v. noun. Being close, சார்தல். 2. Touching, தீண்டல். 3. Digging, தோண்டல். 4. Catching, பிடித்தல். 5. Eating, புசித்தல்.

தொட்டடி, s. [properly தொட்டஅடி.] The beginning line—oppos. to விட்டடி.

தொட்டப்பன், s. [prov.] A godfather.

தொட்டாய்ச்சி, s. A godmother. (Chris. usage.)

தொட்டல், v. noun. Digging, தோண்டல்.

தொட்டு, [verbal participle.] Touching, concerning, in reference to. (See சுட்டி.) 2. Beginning with, from, since; used as பற்றி and குறித்து to express relation. (c.)

அதைத்தொட்டு. Concerning that.

இளமைதொட்டு. From youth up.

அன்றுதொட்டு. From, or since, that day. 2. From former times.

தொன்றுதொட்டு. From time immemorial. (p.)

தொட்டுக்கொண்டிருக்க — தொட்டுக்கொண்டிருத்த, inf. To be in contact with, contiguous.

தொட்டுக்கொண்டுபோக, inf. To pretend to carry a load, with others. 2. To touch the bier, as near relations, in a funeral procession. 3. To bear a pall at a funeral.

தொட்டுத்தலைமேல்வைக்க, inf. To touch the feet of a great person; also to put the hands on the head, in token of veneration.

தொட்டுத்தெளிக்க, inf. As தொட்டுத்தெறிக்க. 2. See தெளி, v. a.

தொட்டுத்தெறிக்க, inf. To dip the finger in a liquid and sprinkle it on a new married couple, or an idol, as in ஆலாத்தி. See தெறி, v.

தொட்டுப்பார்க்க, inf. To ascertain by the touch.

தொடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To connect, to join, to communicate with, சேர்க்க. 2. To bind, to fasten, to tie; to link or tie together; to attach; to continue a series, கட்ட. 3. To set in, to fix, to place, as the arrow in the bow; to discharge arrows, அம்புதொடுக்க. 4. [prov.] To exercise love, hatred, &c., to cherish, to foster, மனதில்வைக்க. 5. To set on foot, to commence, to enter on, தொடங்க. 6. To join slightly—as boards or threads; to do work superficially; to put on clothes negligently; to put on a garment or ornament, இலேசாய்த்தொடுக்க. 7. [in burlesque with விட.] To bring together a man and woman, commonly clandestinely, பொருத்த. 8. To put on or wear sandals, slippers or clogs, செருப்புத்தொடுக்க. 9. To carry on a licentious intrigue, பெண்ணோடுசம்பந்தஞ்செய்ய. (c.) 10. To frame, to form, உருவாக்க. 11. To fabricate, to forge, to form a false story, கட்டுக்கதைகட்ட. 12. To make verses, to compose poetry, பாத்தொடுக்க. 13. To bend, வளைக்க.

அன்றுதொடுத்து. From, or ever since, that day.

அவ்விடந்தொடுத்து. From that place.

தொடுகயிறு, *s.* A rope used in ploughing.

தொடுதோல், *s.* Sandals, slippers, as தொடுசெருப்பு.

தொடுத்தபேச்சு, *s.* Connected speech, a sentence connected with the context.

தொடுத்துக்கட்ட, *inf.* To fasten together, as beasts, &c. (*c.*) 2. To fabricate a story, கதைகட்ட.

தொடுத்துவிட, *inf.* To fasten beasts together. 2. To unite persons irregularly in marriage. 3. To put out an apprentice, &c.

தொடுத்துவைக்க, *inf.* To tie or fasten slightly.

தொடுவழக்கு, *s.* An unjust claim, an unjust prosecution, அநியாயவழக்கு. (*c.*)

தொடுவான்—தொடுவான்கயிறு, *s.* [*prov.*] A rope attached to a pole, with a swivel, in the threshing floor, to which the inner yoke of oxen is tied; the others being all tied ox to ox, பிணையடிமாட்டிலுள் ளிணைக்கட்டுங்கயிறு.

•பேதி, s. That which divides, detaches, separates, பிரிப்பது. W. p. 627. B'HEDIN. 2. Variation, difference, change, as பேதம். 3. Discharge from the bowels, being a change; looseness; also cholera, கழிச்சல். 4. A purgative, cathartic, பேதிமருந்து. (c.) 5. Mercury, quicksilver, இரதம். 6. [in combin.] A solvent, of which there are five kinds: 1. அன்னபேதி; 2. மாமிசபேதி; 3. சொர்ணபேதி; 4. அஸ்திபேதி; 5. சகஸ்திரபேதி, or கல்வேதி, which see.

பேதிகாண, inf. To begin to purge, as in cholera.

பேதிகாரி, s. A purgative plant. See ஆற்றுத்தும்மட்டி. 2. A purgative in general, பேதிமருந்து.

பேதிக்குக்கொடுக்க, inf. To administer a cathartic.

பேதிக்குவாங்க, inf. To take a cathartic.

பேதியாக, inf. To operate as a cathartic, to purge. 2. To be attacked by cholera.

பேதி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. a.* To divide, to separate, &c., பிரிக்க. 2. To sow discord or dissension, பேதகஞ்செய்ய. 3. To turn the mind from a right course, வேறுபடுத்த. 4. To excite disgust, to alienate, மனமலையச்செய்ய. 5. To change, diversify, மாற்ற. 6. To despise, to scorn, நிந்திக்க. 7. *v. n.* To change, vary, differ, disagree, வேறுபட. 8. To degenerate, deteriorate, கெட. 9. To become estranged, to be disgusted with, மனமடிய. 10. To be relaxed in the bowels, to purge, பேதியாக. 11. To become broken, to be interrupted, frustrated, குழம்ப. (*c.*)
  பேதித்தசமயம். A religion inconsistent with itself.

பேதித்துக்கேட்க, *inf.* To pump one.

பேதித்தல்-பேதிப்பு, *v. noun.* Separation, variance, dissatisfaction, purging.

பேது, *s.* (*Hind.*) Secrecy, secret inquiry, இரகசியம்.

***பேது**, *s.* Bewilderment, confusion, consternation, intoxication, தடுமாற்றம். 2. Delirium, mental derangement, உன்மத்தம்.
  பேதுற, *inf.* [*v. noun* பேதுறவு.] To be bewildered. 2. To become insane, மதிமயங்க. (*p.*)

***பேதை**, *s.* A simpleton, an ignorant man, a dolt, அறிவிலான். 2. A woman, as being simple minded, பெண். (See மடம்.) 3. A girl from five to seven years old. See பருவம். (*c.*) 4. A hermaphrodite, பேடி. 5. A poor man, தரித்திரன். 6. Toddy, vinous liquor, கள். (சது.)
  பேதைப்படுக்குமூழ். Works of former births stultifying the mind. (குறள்.)
  பேதைத்தனம், *s.* Simplicity, weakness, silliness, folly, ignorance.
  பேதைப்புத்தி, *s.* Weak intellect, folly, credulity, indiscretion.
  பேதைமை, *s.* [*com.* பேதமை.] Simplicity, weakness, ignorance, credulousness, thoughtlessness, carelessness, as மடமை.
  பேதைமையென்பதுமாதர்க்கணிகலம். Simplicity is an ornament of woman. (*Avv.*)
  பேதையர், *s.* [*pl.*] The indigent, the poor, தரித்திரர். 2. The base, the vulgar, கீழ்மக்கள். 3. Women of desert tracts, பாலைநிலமகளிர். (சது.) 4. Simpletons, the ignorant, அறிவீனர். 5. Women, பெண்கள்.

பேத்தி. See பேர்த்தி.

பேத்தை, *s.* Au ugly looking kind of fish, as பொத்தை. (*c.*)

பேபந்து—பேபாக்கி. See பே.

***பேம்**, *s.* Fear, dread, terror, பயம். (சது.) See பீமம்.

பேய், *s.* A devil, goblin, fiend, as பிசாசம். 2. [*in combin.*] Wild, as plants or trees, காட்டுக்கடுத்த. 3. Evil, bad, vile, ferocious, கெட்ட. (*c.*)
  உலகத்துக்குஞானம்பேய் ஞானிக்குலகம்பேய்..... Wisdom is a devil to the world and *vice versa.* [*prov.*]
  பேய்க்குவேப்பிலைபோலே. As repugnant to one as Margosa leaves are to devils.
  பேய்போலேதிரிகிறது. Going about in eager search of gain.
  பேயத்தி, *s.* A species of fig-tree, Ficus dæmonum, *L.*
  பேயன், *s.* [*fem.* பேய்ச்சி, பேச்சி.] A demoniac. 2. A head-strong fool, a madman, பைத்தியகாரன்.
  பேயன்வாழை, *s.* A kind of plantain, a medicinal fruit.
  பேயாட, *inf.* To whirl the head through possession.
  பேயாடி, *appel. n.* A conjurer. 2. A fortune-teller.
  பேயாட்ட, *inf.* [*appel. n.* பேயாட்டி.] To cause a person, to be possessed for the utterance of oracles.
  பேயாட்டம், *v. noun.* A devil's dance, பேய்க்கூத்து. [*also* பேயாட்டு.] 2. Fiendishness, ferociousness, பேய்த்தன்மை. 3. Confusion, disorder, கலக்கம்.
  பேயாமணக்கு, *s.* A wild castor-oil-plant.
  பேயாவிரை, *s.* A kind of wild ஆவிரை.
  பேயாழ்வார், *s.* One of the twelve Vaishnuva devotees. He composed a hundred verses of நாலாயிரபிரபந்தம், ஓராழ்வார்.
  பேயுமிய, *inf.* [*prov.*] To suck the blood of a person—as a devil; either killing or greatly weakening him.
  பேயுள்ளி, *s.* Wild onion, ஒருள்ளி.
  பேயுறைந்தவீடு, *s.* A house haunted by devils.
  பேயெரிக்க, *inf.* To burn out a devil by magic. See எரி, *v.*
  பேயையுருவேற்ற, *inf.* [*sometimes* பேயேற்ற.] To cause a devil to possess a person.
  பேயோட்டாடி, *appel. n.* Siva, as dancing with devils, சிவன்.
  பேயோட்ட-பேய்துரத்த, *inf.* [*appel. n.* பேயோட்டி.] To exorcise.
  பேயோணான், *s.* The large kind of ஓணான் lizard.
  பேய்க்கண், *s.* Eyes, or looks of a demoniac. 2. Frightful eyes, அருசத்தக்கவிழி.
  பேய்க்கண்டல், *s.* A tree. See கண்டல்.
  பேய்க்கரும்பு, *s.* A wild and useless sugar-cane, Saccharum arundinaceum.
  பேய்க்காடு — பேயுறைந்தகாடு — பேய்மேய்ந்தகாடு, *s* A jungle haunted by devils.
  பேய்க்குணம், *s.* An unsociable, peevish disposition.
  பேய்க்குப்படைக்க, *s.* To make offerings to devils; *also used in cant.*
  பேய்க்குறை-பேய்க்கோட்டாலை, *s.* Evil, disaster, &c., resulting from the malice of an unpropitiated devil.
  பேய்க்கூண்டு — பேய்ப்பள்ளி, *s.* A noted place where the black arts are said to be taught, மாயவித்தைபயிற்றுமோரிடம்.
  பேய்க்கொம்மட்டி, *s.* Coloquintida or bitter apple, Cucumis colocynthis.
  பேய்க்கோலம், *s.* A hideous, monstrous or diabolical appearance.
  பேய்ச்சத்தம், *s.* Hideous noise of devils, said to be heard in desert places in time of epidemics.
  பேய்ச்சிலை, *s.* An idol, a statue of a demon.
  பேய்ச்சுரை, *s.* A bitter variety of gourd.
  பேய்த்தக்காளி, *s.* A plant, Solanum Lycopersicum.
  பேய்த்தண்ணீர், *s.* [*in cant.*] Ardent spirits; (*lit.*) *devil's water,* சாராயம்.
  பேய்த்தனம், *s.* Fiendishness, ferociousness, &c.
  பேய்த்துமட்டி, *s.* As பேய்க்கொம்மட்டி.
  பேய்த்தும்பை, *s.* A plant. See தும்பை.
  பேய்த்தேர், *s.* The mirage or vapor of the noonday-sun, said to be the chariot of devils.
  பேய்நரி, *s.* A mad fox.
  பேய்நாய், *s.* A mad dog.
  பேய்நிலை, *s.* One of the postures of devils.
  பேய்பிடிக்க, *inf.* [*appel. n.* பேய்பிடித்தவன்.] To be possessed by a devil.
  பேய்ப்பசலை, *s.* A plant. See பசலை.
  பேய்ப்பழக்கம், *s.* Unnatural and irregular habits.
  பேய்ப்பயல், *s.* A foolish fellow.
  பேய்ப்பள்ளி. See பேய்க்கூண்டு.
  பேய்ப்பாகல், *s.* A creeper. See பாகல்.
  பேய்ப்பாட்டு, *s.* Diabolical songs addressed to devils, &c.
  பேய்ப்பார்வை, *s.* Demon-like, frightful looks.
  பேய்ப்பாற்சொற்றி, *s.* A plant. See பாற்சொற்றி.
  பேய்ப்பிடி, *s.* An irresistible grasp.
  பேய்ப்பிள்ளை, *s.* A disobedient, intractable child.
  பேய்ப்புடல், *s.* A gourd. See புடல்.
  பேய்ப்புத்தி, *s.* Imprudence, folly, rashness.
  பேய்ப்புல், *s.* A kind of grass. See புல்.
  பேய்ப்போக்கு, *s.* Irregular, absurd conduct, &c., ஒழுக்கில்லாநடை.
  பேய்மருட்டி—பேய்வெருட்டி, *appel. n.* A plant. See பேய்த்தும்பை.
  பேய்மனம், *s.* The vile heart, the carnal mind.
  பேய்முகம்—பேய்மூஞ்சி, *s.* A hideous face, hideous features.
  பேய்முசுட்டை, *s.* A plant, Convolvulus speciosus.
  பேய்முன்னை, *s.* A tree, Celtis orientalis, *L.*
  பேய்விட்டாட்ட, *inf.* To cause possession by a devil.
  பேய்வித்தை, *s.* Witchcraft, sorcery, conjuring, குணியவித்தை.

பேய்ப்பேயெனல், *v. noun.* An exclamation of affright; as to say—a spectre! பயக்குறிப்பு. 2. The bleating of sheep, ஆடு கூப்பிடுதல்.

பேரன். See பேர்.

***பேரி**, *s.* A kettle drum, முரசு. W. p. 627. B'heri. 2. A drum in general, பறைப்பொது.

***பேரிகை**, *s.* A kettle drum, முரசு.

பேர், *s.* [*a change of* பெயர்.] Name, word, &c. (*c.*)
  பேரடிபட—பேர்பட—பேராக, *inf.* To be celebrated, to have fame.
  பேரப்பிள்ளை, *s.* A grand-child.
  பேரன், *s.* A grand-son. 2. A grandfather. See பெயரன்.

பேராளன், s. [also பேராளி.] A renowned personage. 2. See பேர், adj.

பேரிட, inf. To give a name.

பேரிடாப்பு—பேர்டாப்பு, s. A list of names; [ex இடாப்பு.]

பேருக்குச்செய்ய-பேருக்குநடத்த, inf. To act in reference to a reward, as an eye-servant; or for fame.

பேரூர், s. One's name and country.
பேரூரில்லாதகடிதம். Anonymous letter.

பேரெடுக்க, inf. To get a name, acquire fame, &c.

பேரெழும்ப, inf. To spread as one's fame.

பேரேடு, s. An ola-account-book, or ledger, to receive entries from the day-book, பெயர்க்கணக்கேடு. (c.)

பேர்த்தி, s. [also பெயர்த்தி.] A grand-daughter, பௌத்திரி. 2. [prov.] A grand-mother, as பாட்டி.

பேர்படுதல், v. noun. Being named, entitled, styled. 2. Becoming celebrated.

பேர்பட்டவன் — பேர்பெற்றவன், appel. n. A famous person.

பேர்வழி, s. A list of names; a roll, register, பேரட்டவணை. 2. Genealogy, வமிசவரிசை.

பேர்வழிப்பட்டோலை, s. An ola containing a list of names, பேர்டாப்பு.

பேர்வைத்தல், v. noun. Naming. 2. Giving a nickname.

பேர், adj. [used as a prefix.] Great, large, excellent, principal, பெரிய. See பெருமை.

பேரகத்தி, s. A large-leaved kind of அகத்தி.

பேரகத்தியம், s. The larger treatise on Grammar by Agastya; the other being called சிற்றகத்தியம்.

பேரணி, s. The main body, the centre of an army, நடுப்படை.

பேரணிகலம், s. The principal breast-plate, பெரும்பதக்கம்; [ex அணிகலம்.] (சது.)

பேரம்பலம், s. One of the five sacred halls of சிதம்பரம், its character being mystic, சிதம்பரத்தைந்துசபையிலொன்று.

பேரவியல், v. noun. [prov.] A great rice-boiling for a company of religious mendicants, பெரும்பொங்கல்.

பேரழகு, s. Great beauty.

பேரறிவு, s. Knowledge of man, as contrasted with that of brutes, மக்களறிவு. 2. Divine knowledge, spiritual knowledge, ஞானம். 3. Uncommon mental powers, high attainments, முற்றறிவு, as distinguished from சிற்றறிவு.

பேரறிவாளர், s. [pl.] Persons of mature understanding.

பேராருகு, s. A kind of அறுகு grass.

பேராசை, s. Intense desire; avarice; lasciviousness, பேரவா.

பேராண்டு, s. Indian cycle of sixty years, அறுபதுவருடங்கொண்டது.

பேராண்மை, s. Intrepidity, manliness, great courage, valor, வீரம்.

பேராந்தை, s. A large kind of owl, கூகை. (Old Dic.) 2. The bartavelle, or Greek partridge. See நிலாமுகிப்புள். (சது)

பேராமணக்கு, s. The castor-plant. See ஆமணக்கு.

பேராமல்லி, s. A species of Jasmine, Jasminum undulatum.

பேராமுட்டி—பேரமுட்டி, s. A sweet smelling plant, Pavonia oderata.

பேராலவட்டம், s. A large kind of circular fan. See ஆலவட்டம்.

பேராழிமாமுனி, s. The father of Tiruvalluvar, Avvai, and others.

பேராளன், s. The fifth lunar asterism, மிருகசீரிடநாள். (சது.) 2. See பேர், name.

பேரானந்தம், s. [also பேரின்பம்.] Supreme enjoyment, final bliss, as பரமானந்தம்.

பேரியாழ். s. One of the four kinds of musical instruments. See யாழ்.

பேரிலக்கம். s. [in arith.] A whole number, முழுவிலக்கம்.

பேரிழவு, s. [vul. பேரெழவு.] A great calamity—as many deaths in a family. (c.)

பேரிளம்பெண், s. A woman from thirty-two to forty years, inclusive, நாற்பதுவயதுப்பெண். See பருவம்.

பேரின்பம், s. Heavenly joy, great delight.
பேரின்பம்வேண்டிற்சிற்றின்பமொழிக்க. If you desire heavenly joy, give up sensual pleasure.

பேரின்பக்காதல், s. A poem. See காதல்.

பேரின்பப்பாடு, s. A song or verses addressed to a deity—oppos. to சிற்றின்பப்பாட்டு.

பேரீச்சு—பேரீஞ்சு—பேரீந்து, s. The date-tree. See ஈச்சு.

பேரீச்சம்பழம், s. Dates, fruit of the பேரீஞ்சு.

பேருண்டி, s. [also பேருணவு.] A principal meal—oppos. to சிறுண்டி.

பேருதவி, s. Help in great extremity.

பேருமரி, s. A delicate, brittle, saltish herb. See உமரி.

பேரூர், s. A large town or district. 2. A town in an agricultural tract, கிராமம். 3. As மேலைச்சிதம்பரம்.

பேரூற்று, s. A large spring or fountain.

பேரெல்லை, s. [in வெண்பா verse.] That which has the greatest number of lines, the limit being eight—oppos. to சிற்றெல்லை.

பேரொலி — பேரோசை, s. A great noise, clamor. 2. Roar, din, பேரிரைச்சல்.

பேரொளி, s. A great light—as in the presence of the deity, பெரும்பிரகாசம்.

பேரோலக்கம், s. A great assembly. See ஓலக்கம்.

பேர், கிறது, ந்தது, பேரும், பேர, v. n. To become loose, to be detached, சிதைய. 2. To leave, depart, remove, to go away, நீக்க. For other meanings, see பெயர், v.

பேர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To change, remove, &c. See பெயர், v. a (சது.)

பேர்த்தி. See பேர்.

பேலு-பேல், கிறேன், பேன்றேன், வேன், பேல, v. a. [vul.] To ease one's self, மலவிசர்ச்சனைசெய்ய.

*பேழை, s. [corrup. of Sa. Ped'a.] A round basket, a coffer, chest or box, an ark, பெட்டி. (c.)

பேழ், adj. Great, large, பெரிய. (p.)
பேழ்வாய், s. Large mouth. (திருவிளை.)

பேறு, s. A good obtained, a benefit, an acquisition, ஆதாயம். (சது.) 2. Endowment, bestowment, supernatural gift, வரம். 3. Gift, prize, reward, boon, வெகுமதி. 4. Advantage, profit, result, பலன். 5. Worth, merit, desert, தகுதி. 6. Birth, பெறுகை. 7. Offspring, issue, a child, சந்தானம்; [ex பெறு, v.] —Note. Of பேறு, or acquisition, there are sixteen kinds: 1. புகழ், celebrity; 2. கல்வி, learning; 3. வலி, power, physical strength; 4 வெற்றி, victory, success; 5. நன்மக்கள், good children; 6. பொன், gold; 7. நெல், abundance of rice and other grain; 8. நல்லூழ், a favorable destiny; 9. நுகர்ச்சி, proper and unsullied enjoyment; 10. அறிவு, wisdom; 11. அழகு, beauty; 12. பெருமை, greatness, magnanimity; 13. இளமை, youthfulness; 14. துணிவு, courage; 15. நோயின்மை, perfect health; 16. வாழ்நாள், longevity.

பேறுகாலம், s. Time of child-birth.

பேறுபெற, inf. To obtain a dignity. 2. To obtain bliss.

பேற்று, v. [vul. for பிதற்று.] To babble.

*பேனம், s. [also பே.] Froth, foam, நுரை. W. p. 597. P'HENA.

பேன், s. A louse. See தலைப்பேன்.
பேன்குத்துகிறது. Cracking lice.
பேன்பார்க்க, inf. To hunt lice.

பை

பை. A syllabic letter formed of ப் and ஐ.

பை, s. Bag, sack, purse, satchel, சாக்கு. 2. Hood of a cobra, பாம்பின்படம். 3. Any bladder, duct or sack in animal bodies, குடப்பை. (c.) 4. [ex பசு.] Color, நிறம். 5. Beauty, அழகு. 6. Green, பச்சை.

பைங்கண், s. A fresh green place, பசுமையாயிடம்; [ex கண், place.]

பைங்கிளி—பைந்தார்—பைந்தினை. See under பசு, adj. signifying green, &c.

பைங்கூழ், s. Growing corn, or other crops, பயிர். 2. Disease, நோய். (சது.)

பைந்தொடி, s. A bracelet, an ornament for the arm, கைவளை. 2. See தொடி.

பைந்நாகம், s. The hooded cobra, சர்ப்பம்.

பைம்பூண், s. An ornament of fine gold. (நீதிநெறி.)

பைம்பொன், s. Fine gold, as பசும்பொன். 2. Mount Meru, மேருகிரி. (சது.)

பை, adv. [com பைய.] Slowly, softly.
பையப்பைய. Gently, gently.
பையப்பையப்பேசு Speak slowly.
பையப்பையநட. Walk quietly

பையப்பையவென்றால் பனையையுமெல்லலாம். If one munch slowly, even a palmyra tree may be chewed; i e. patience will overcome difficulties.

பைகோ - பைகோவு - பைகோவை, s. [for.] Pegu, the country, ஓர்தேயம்.

பைகோமட்டம், s. A Pegu pony.

பைகோவைச்சிவப்பு, s. The Pegu ruby. ஓர்வகைமாணிக்கம்.

•பைக்கம், s. [also பயிக்கம்.] Alms. See பிச்சை. W. p. 627. B'HAIKSHA.

பை, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To become green or greenish, பசுமையாக. 2. To color, as by anger, சினக்குறிப்புக்காட்ட. 3. To be angry, கோபிக்க. 4. To spread the hood of the neck—as a cobra, பாம்பு படம்விரிக்க. (சது.)

பைத்தபாம்பு. An excited snake. (சைட.)

பைத்தல், v. noun. Sorrow, affliction, துன்பம். 2. Change of color from love-sickness, &c., *as the verb.*

பைசந்தி, s. One of the four வாக்கு.

பைசல், s. (Hind.) A judgment, decision, adjustment, தீர்ப்பு. (*Govt. usage.*)

பைசல்தீர்வை, s. The rates settled on each field at the time of the original assessment.

இந்தக்காரியம்பைசலாயிற்று. This case has been decided.

•பைசாசம், s. That which appertains to devils, fiends or vampires; (*fig.*) the devil. See பிசாசம். 2. One of the four attitudes of the archer. See நிலை. 3. One of the eight modes of marriage. See மணம். W. p. 554. PISACHA.

பைசார், s (Hind.) Slippers, Indian shoes. See பசார்.

பைஸ், s, (Hind.) A pie, *commonly* பைசா, one twelfth of an anna.

பைஞ்ஞிலம்—பைஞ்ஞில், s. Mankind, the race of man, மக்கட்பரப்பு. (சது.)

பைஞ்ஞிலி, s. The name of a town, ஓரூர். (சது.)

பைதல், s. [for பையல்.] A boy. 2. As பைத்தல். (சது.)

•பைநிரம், s. A country, district, நாடு. (சது.)

•பைத்தியம், s. Derangement, delirium, &c. See பயித்தியம்.

பைத்து, s. Green—the color; [*ex* பசுமை.] (சது.)

•பைபீலவாதம் - பைபீலிகாவாதம், s. The fancied language of brutes, &c. 2. The Epicurean philosophy. See பிபீலவாதம், பிபீலிகாவாதம், பிலுவாதம்.

பைமை, s. Greenness—the color, பச்சைநிறம்; [*ex* பை, v.] 2. A female ascetic, a nun, தவப்பெண். (சது.)

பைம்பல், s. [*vul.*] Joviality, festivity, &c. See பம்பு, v.

பையல், [*com.* பயல், *which see.*] A boy, &c.

பையன், s. [*also* பய்யன்.] A boy, சிறுவன். (c.)

பையுள், s. Poverty, adversity, lowness of circumstances, சிறுமை. 2. Distress, suffering, துன்பம். 3. Pain, நோய். (சது.)

பையெனல், v. noun. Being slow, gentle, gradual, dull, மந்தக்குறிப்பு. (சது.)

பையப்பைய. Slowly, slowly. See பை, *adv.*

•பைரவம், s. Formidableness, terribleness, பயங்கரம். 2. Dread, awe, great fear, அச்சம். (சது.) 3. [*as* வைரவம்.] Sect or religion of Bhairava, one of the forms of Siva, as a ferocious deity. See சமயம். W. p. 627. B'HAIRAVA.

பைரவசந்தானம், s. Succession of gurus of the Bhairava sect.

பைரவன், s. [*com.* வைரவன்.] Bhairava, the god.

பைரவி, s. A tune exciting terrific emotions. See இராகம். 2. Kali, Durga, காளி. (சது.)

•பைராகி, s. An ascetic. See வைராகி.

பொ

பொ. A syllabic letter composed of ப் and ஒ.

பொ, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To perforate, puncture, make a hole or opening in a thing that easily yields, துளைக்க; [*ex Tel.* பொக்கை, a hole.]

பொகுட்டு, s. A mud-bubble, சேற்றிலெழும்குமிழி. 2. The seed-vessel of the lotus, தாமரைக்கொட்டை. 3. Mountain, a hill, மலை. (சது.)

பொக்கசம், s. [*Tel. com.* பொக்கிஷம், *which see.*] Treasure, &c.

பொக்கணம், s. A beggar's bag, a wallet, or cloth used as a sack, சோழிப்பை.

பொக்கணி, s. [*prov.*] A deep rice-mortar, குழியுரல். 2. A large open navel, caused by rupture, விரிந்ததொப்புள்.

பொக்கணை, s. [*prov.*] A hole in a tree, in a stone, or in the ground, பொந்து. 2. As பொக்கணி, 1.

பொக்கம், s. A lie, falsehood, பொய். 2. Extension, bulk, increase, பொலிவு. 3. Abundance, மிகுதி; [*ex* பொங்கு, v.] (சது.)

பொக்கல்வாய், s. [*prov.*] A toothless mouth, பொக்கைவாய்.

பொக்கிஷம், s. Treasure, stores, &c., திரவியம். (c.)

பொக்கிஷகாரன், s. A treasurer.

பொக்கிஷப்பெட்டி, s. A coffer.

பொக்கிஷவீடு, s. Treasury, or storehouse.

பொக்கு, s. Defect, fault, blemish, குற்றம். (சது.) 2. [*improp. for* பொருக்கு.] Flake, scale, &c.

பொக்குப்பொக்கெனல், v. noun. Making a noise in chewing, as an old man, ஒலிக்குறிப்பு. 2. A sign of haste, விரைவுக்குறிப்பு.

பொக்குளிக்க, inf. [*prov.*] To rise in blisters—as கொப்புளிக்க.

பொக்குளிப்பான், appel. n. [*corrupt. of* கொப்புளிப்பான்.] Measles, &c.

பொக்குள், s. [*corrupt. of* கொப்பூழ், *prov.*] Navel.

பொக்கெனல், v. noun. Being sudden, abrupt, unexpected, &c., விரைவின்குறிப்பு. Compare பொருக்கெனல்.

பொக்கெனப்புறப்பட, inf. To set out, or start suddenly, unexpectedly.

பொக்கென்றுபற்ற, inf. To take fire suddenly—as gunpowder.

பொக்கை, s. [Tel ...] A little hole, சிறுதுவாரம்.

பொக்கைவாய், s. [*sometimes* பொக்குவாய்.] A toothless mouth—the face being shortened thereby.

பொக்கைவாயன், s. [*fem.* பொக்கைவாய்ச்சி.] A man without teeth.

பொரிமாவைமெச்சுவாரும்பொக்கைவாயன். A man without teeth will praise meal of parched grain.

பொங்கடி, s. An elephant—as being large footed, யானை; [*ex* பொங்கு.] (சது.)

பொங்கம், s. Increase, abundance, exultation, joy, பொலிவு; [*ex* பொங்கு.]

பொங்கமாகப்பேச, inf. To speak joyfully.

பொங்கர், s. Branch of a tree, மரக்கொம்பு. 2. Hill, mountain, மலை. 3. The silk-cotton tree, இலவமரம். (சது.) 4. A grove, சோலை. (p.)

பூமலிந்திடுபொங்கரூம். In the grove filled with flowers.

பொங்கல். See பொங்கு.

பொங்கழி, s. Unsifted rice, தூற்றுநெல். (சது.)

பொங்காரம், s. Sadness which brings tears from the eyes. 2. Grief, bitter sorrow, மிகுதுக்கம்; [*ex* பொங்கு *et* ஆரம்.]

பொங்கு, கிறது, பொங்கினது, ம், பொங்க, v. n. To boil up, bubble up by heat, கொதிக்க. 2. To foam and rage—as the sea, கொந்தளிக்க. 3. To ferment, to effervesce, நுரையெழ. 4. To rise as bread from leaven, மாப்புளிக்க. 5. To be inflamed and swell, as a sore, வீங்க. 6. To increase, expand, extend, மிக. 7. To grow intense, பெருக. 8. To abound, to flourish, to be fruitful, செழிக்க. 9. To rise, grow high, to become elevated, உயர. 10. To swell—as the heart in anger, sorrow, joy, &c., மனம்பொங்க. 11. To be flushed with hope, or desire, கிளர்ந்தெழ. 12. To be elated, to be puffed up with pride, பெருமிதங்கொள்ள. 13. v. a. To boil rice, சோறாக்க. 14. To boil rice in cow's milk, as a religious rite at a temple, கோவிலிற்பொங்க.

பொங்குங்காலம் புளியூக்கும், மங்குங்காலம்மாகாய்க்கும். In propitious seasons the tamarind abounds, in scarce times, the mango.

பொங்கிக்கொடுக்க, inf. To cook for one—as a host for a lodger.

பொங்கித்தெளித்தல், *v. noun.* Boiling rice in milk, and sprinkling a house with the liquid, because an owl has lighted on the roof. (*Jaff.*)

பொங்கிவழிய, *inf.* To boil over, as rice, milk, &c. 2. To superabound or overflow as wealth.

பொங்குசனி, *s.* [*in astrol.*] The second and most propitious of ஏழரையாண்டுச்சனி. See சனி.

பொங்கல், *v. noun.* Boiling, bubbling; fermentation. 2. Raging as the sea. 3. The festival when the sun enters Capricorn about the 11th of January. See தைப்பொங்கல். (*c.*) 4. Abundance, excess, profusion, மிகுதி. 5. Rejoicing, exulting, மகிழ்தல்.—For மாட்டுப்பொங்கல், see in its place.

பொங்கலாண்டி - பொங்கலான் - பொங்கற்காரன், *s.* A cook, one who boils his own rice and lives by himself in a niggardly way.

பொங்கலிட—பொங்கல்பொங்க, *inf.* To boil rice without straining out the water in which it has been boiled. 2. To boil rice for a religious purpose—also பொங்கல்போட.

பொங்கல்வரிசை, *s.* The presents sent to a married woman from her parents, at the பொங்கல் feast. 2. Presents sent to a superior at that time, as உலுப்பை.

பொங்கல்வைக்க, *inf.* As பொங்கலிட. 2. [*in cant.*] To injure a person. 3. To kill one.

பொங்கற்சம்பா, *s.* A kind of rice. See சம்பா.

பொங்கற்சாதம், *s.* Rice boiled at the temple. 2. See சாதம்.

பொங்கற்பானை, *s.* A new pot bought to boil rice for the feast.

பொசி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To ooze out, to soak through, as கசிய. 2. To flow gently as tears, milk, or a stream, வடிய. 3. [*fig.*] To melt or soften as the heart in benevolence, மனதுருக. 4. To ooze out, as a report, வெளிப்பட.

ஏரிநிறைந்தாற்கரைபொசியும். If the reservoir be full, water will ooze out of the embankment.

பொசிவு, *v. noun.* Oozing, flowing or issuing gently.

பொசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com. for* புசி, *which see.*] To eat.

பொசுக்கு, கிறேன், பொசுக்கினேன், வேன், பொசுக்க, *v. a.* To singe, to toast, to scorch, to bake slightly, தீய்க்க. 2. [*fig.*] To scorch, as the sun a child, &c., வெதுப்ப. 3. To burn hair, paper and other combustibles, பொசுக்கச்செய்ய. 4. [*in burlesque.*] To break wind. (*c.*)

பொசுங்கு, கிறது, பொசுங்கினது, ம், பொசுங்க, *v. n.* To be singed, toasted, கருக. 2. To be scorched slightly, as grain, தீய. 3. To burn, consume, as hair or paper, மயிர்முதலியனதீய. 4. To be united, to agree together, பொருந்த. 5. [*fig.*] To be reduced in circumstances, சிறுக்க. (*c.*)

இருவருக்கும்பொசுங்காது. There is no agreement between the two.

பொசுங்கல், *v. noun.* Any thing singed, scorched, &c., கருகினது. 2. One who speaks or acts, with hesitation—as பொசுங்கலான்.

பொசுபொசெனல், *v. noun.* Being easily burnt, as light fuel, விரைவுக்குறி. 2. Coming suddenly, as the report of a gun, வெளிப்படல். (*c.*)

பொசுபொசென்றுநெருப்புப்பற்றுகிறது. The fire burns up rapidly.

பொசுபொசென்றுதூறுகிறது. It rains slightly, or drizzles.

பொச்சடி, *v. noun.* [*prov.*] Smacking the lips, in eating, or as a token of aversion or contempt, வெறுப்பாக்கடித்தல்.

பொச்சம், *s.* Fault, defect, blame, moral evil, குற்றம். (திருவி.) 2. (*Jaff.*) Greediness, too great a desire for food, அவா. 3. Fibrous husk of the cocoa-nut, தேங்காய் மட்டை.

பொச்சமிலன்பும். Faultless love. (*p.*)

பொச்சா, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To forget, to become unconscious of, மறக்க. (*p.*)

பொச்சாப்பு, *v. noun.* Forgetfulness, unconsciousness, மறதி. [*neg* பொச்சாவாமை.] (சது.) 2. Badness, evil, wickedness, பொல்லாங்கு.

பொச்சாலி-பொச்சாலிநெல், *s.* A kind of சாலி paddy.

பொச்சு, *s.* [*improp. for* பொச்சம்.] Flaw, defect, குற்றம். 2. [*prov.*] Blighted parts in jack-fruit or mangoes. 3. As பொச்சம், 3.

•பொச்சு, *s.* [*a corrupt. of* புச்சம்.] Anus. (*Beschi.*) 2. [*immodeste.*] Crines muliebris pudendi. (*R.*) 3. (*Tel.* బొచ్చు.) A quantity of hair, &c. See புச்சம்.

பொச்சை, *s.* Forest, *jungle* copse, காடு. 2. Hillock, சிறுமலை. 3. Hill, mountain, மலை. 4. Elephant-forest, யானைக்காடு. (சது.) 5. Harbor or nest of insects, புழுக்கூடு. (*Old Dic.*) 6. [*Tel.* బొజ్జ.] A paunch, a paunch-belly, தொப்பைவயிறு.

பொச்சையிற்கையிடாதே. Put not your hand into an insect's nest.

•பொஸ்தகம், *s.* A book. See புத்தகம்.

பொஞ்சு, கிறது, பொஞ்சினது, ம், பொஞ்ச, *v. n.* [*prov.*] To agree together, as பொசங்கு. 2. To prosper, or thrive well, செழிக்க.

மாடுகன்றுபொஞ்சாது. Cows and calves do not thrive with him.

பொடி, *s.* Powder, தூள். 2. Dust, புழுதி. 3. Pollen of flowers, பராகம். (சது.) 4. Any thing small or minute, a particle, a fragment, சிறியது. 5. A small gem, as செம்புப்பொடி. 6. Snuff, மூக்குத்தூள். 7. Magical powders, as சொக்குப்பொடி. 8. Solder, metallic cement, பற்றவைக்கும்பொடி. (*c.*) 9. Ashes, சாம்பல். 10. Sacred ashes, திருநீறு. 11. [*prov.*] A little child, சிறுபிள்ளை.

பொடிப்பயல்கள். Little boys.

பொடிப்பொடியாய்நறுக்கு. Cut it into small pieces.

பொடிப்பொடியாய்ப்போயிற்று. It is reduced to small pieces.

பொடிக்கல், *s.* Small stones, pebbles, gravel stones or small gems.

பொடிசு, *s.* [*improp.*] A particle, as of sand; a fragment, any thing small, தகள். (*Old Dic.*)

பொடிதூவுதல், *v. noun.* Sprinkling, with flour, or seasoning powder—as salt or pepper.

பொடிபொட்டு, *s.* Any thing small, சிறியது. 2. That which is like chaff, பதரானது.

பொடிப்போட, *inf.* To take snuff. 2. To cast magical powders on one.

பொடிமீன், *s.* A small fish.

பொடியன், *s.* [*fem.* பொடிச்சி.] A boy, சிறுவன். (*Jaff.*)

பொடியாக்குதல், *v. noun.* Pulverizing, shivering to pieces.

பொடியெழுத்து, *s.* Small letters, small writing.

பொடிவரகு, *s.* A kind of grain, Panicum fluitans.

பொடிவெட்டி, *appel. n.* A goldsmith's shears, or scissors, for cutting wire, &c., ஓர்கத்தரிக்கோல்.

பொடிவைத்தூதல், *v. noun.* Soldering.

பொடி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To be broken to pieces—as paddy, to become pulverized, தகர. 2. To perish, to be destroyed, கெட. 3. *v. a.* [*prov.*] To curse bitterly, சபிக்க.

திட்டிப்பொடிகிறேன். He curses you to powder.

பொடிவு, *v. noun.* Any thing broken or shivered, சிதைவு. 2. Cursing, சபிப்பு.

பொடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To pulverize, to reduce to dust, or powder, தகர்க்க. 2. To destroy, கெடுக்க. 3. *v. n.* To spring up, to shoot, முளைக்க. 4. To rise as the hair of the body—as புளகிக்க.

பொடிப்பு, *v. noun.* Pulverizing, comminution; rising as the hair, *as the verb.*

பொடுகன், *s.* A very little man, சிற்றன். (*Jaff.*)

பொடுகு, *s.* [*sometimes* சொடுகு.] Scurf, dandruff, scall on the head, &c., அசறு. 2. [*prov.*] Smallness, as பொடுகிருப்பனக்காய். பொடுகுதின்கிறது. Scall is itching.

பொடுதலை, *s.* A kind of plant, ஓர்பூடு, Verbena nodiflora, *L.*

பொடுபொடு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To burst in pieces, as cords, with a snapping sound, வெடிக்க. 2. To spatter, as light rain, with noise, தூறிக்க. 3. To be scanty, hardly sufficient, குறைய. 4. To speak fast, in a rattling manner, விரைவாய்ப்பேச. 5. To wamble as the bowels, வயிறிரைய. 6. To fall—as stones one after another, ஒலிக்குறிப்பு.

பொடுபொடெனல், *v. noun.* Sounding as bursting cords, sounding as drops of rain, falling fruits or stones, ஒலிக்குறிப்பு. 2. Rattling in speaking, விரைவாய்ப்பேசல்.

•பொட்டணம்-பொட்டணி-பொட்டலம், *s.* [*corrup. of Sa. Pot't'alee.*] A bundle of cloth, bunch, tie, சிலைமூட்டை. 2. A bundle of ground drugs or mashed leaves, tied up for a fomentation, ஒற்றிடும்பொட்டலம்.

பொட்டணமொத்த--பொட்டணமொற்ற, *inf.* To apply a fomentation.

பொட்டல், *s.* An arid tract, கரம்பு.

பொட்டிமகன், *s.* A clever fellow. (*c.*)

பொட்டிலி—பொட்டில், *s.* [*for.*] A machine with pistolets, to make a cracking noise in a procession, ஓர்வெடி.

பொட்டில்சுட, *inf.* To discharge, or fire the pistolets.

பொட்டிலுப்பு, *s.* Saltpetre, as வெடியுப்பு.

பொட்டிலுப்புத்திராவகம், *s.* Nitrous acid. (*Ains.*)

பொட்டு, *s.* A spot or wafer of red sandal paste worn on the forehead, as திலகம். 2. One of the two marriage badges, worn, especially by Telugus, on the neck, தாலிப்பொட்டு. 3. Empty grains of corn, தானியப்பொட்டு. 4. An insect, or moth in its catterpillar state, ஓர்புழு. (சது.) 5. A small round spot, dot, or mark, அடையாளம். 6. A small bodied spider with long legs, ஓர்சிலந்திப்பூச்சி. 7. A magical spot worn on the forehead, said to enable one to conquer in games, மாயமைப்பொட்டு. 8. [*fig.*] Repute, esteem, &c., obtained by imposing on others, மதிப்பு. 9. [*vul.*] A hole or opening in a hedge to creep through, நுழைவழி. 10. [*South usage.*] The temples.

பொட்டரிக்க, *inf.* To fret a garment—as moths.

பொட்டரித்தவஸ்திரம். A moth-eaten garment.

பொட்டுக்கட்ட, *inf.* To tie on the marriage badge, or that of a dancing girl.

பொட்டுக்குத்த, *inf.* [*com.* பச்சைகுத்த.] To make indelible spots on the body with a vegetable preparation.

பொட்டுக்கேடு, *v. noun.* Loss of ill-gotten repute.

பொட்டுத்தாலி, *s.* A roundish marriage-badge. See தாலி.

பொட்டுப்பூச்சி, *s.* A small round-bodied venomous spider with long legs.

அங்கேபூச்சிபொட்டாயிருக்கும். There will be troublesome insects in that place.

பொட்டிட்டாற்போலேபிடித்துக்கொள். Catch him at once, just as he stands.

பொட்டிட்டாற்போலேயெடு. Take it up carefully, without moving the other things.

பொட்டெனல், *v. noun.* Being sudden, abrupt, quick, nimble, சீக்கிரக்குறிப்பு.

பொட்டெனவந்தான். He came quickly, promptly.

பொட்டை, *s.* Weak-sightedness, கூசியகண். 2. Blindness, குருடு. 3. [*vul. for* பெட்டை.] A hen.

பொட்டைக்கண், *s.* Weak eyes.

பொட்டைக்கண்ணன்—பொட்டையன், *s.* [*fem.* பொட்டைக்கண்ணி—பொட்டைச்சி.] A weak-eyed man. 2. A blind man.

பொதி, *s.* A filled sack as a load for a beast, மாட்டின்மேற்பொதி. 2. Pack, bundle, a parcel tied in a cloth, மூட்டை. 3. Umbrella of palm-leaf, ஓலைக்குடை. 4. An elephant-forest, கரிக்காடு. 5. A public room, town-hall, அம்பலம். (சது.) 6. A flower-bud, மலர்அரும்பு. 7. The பொதியம் mountain.

பொதியிலேவிளைந்தசந்தனம். The sandal wood which grew on the பொதியம் mount.

பொதியவிழ்ந்தசெந்தாமரைமலரில். Like the bud of the red lotus just opening. (*p.*)

பொதிக்காரர், *s.* [*pl.*] Persons attending pack-oxen.

பொதிமாடு—பொதியெருது, *s.* A pack-bullock.

பொதி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To roll up as a cloth, a bundle, &c., சுருட்ட. 2. To bury, insert, to bag, அடைக்க. 3. To hide, conceal, to cover up, மறைக்க. 4. To tie up, பிணிக்க.

பொருள்பொதிந்தசொல். A word full of meaning. (*p.*)

பொதிசோறு, *s.* [*com.* கட்டுச்சோறு.] Boiled rice tied up for a journey.

பொதிவு, *v. noun.* Packing up, concealing, &c.

பொதிகை, *s.* The பொதியம் mountain; [*ex* கை, place].

பொதிப்போதா, *s.* The larger heron, பெருநாரை. (சது.)

பொதியம் — பொதியமலை, *s.* [*also* பொதிமுனை.] Mount Pothiyam, famed as the abode of Agastya, and other sages, situated near Cape Comorin, தென்மலை.

பொதியவெற்பன், *s.* Any king of the Pandya dynasty, as having the பொதியம் mountain within his kingdom, பாண்டியன். (சது.)

பொதியில், *s.* A hall, as பொதி. 2. (சது.) As பொதியம். (*p.*)

பொதிர், *s.* Fear, trembling, நடுக்கம்.

பொதிர்-பொதிரு, கிறது, பொதிர்ந்தது, பொதிரும், பொதிர, *v. n.* To increase, abound, மிக. 2. To fear, to dread, அஞ்ச. 3. To tremble, நடுங்க. (*p.*)

பொதிர்புகுந்தஇருள். Thick darkness.

பொதிர்தல், *v. noun.* Increasing, abounding, மிகுதல். (சது.)

பொதிர்ப்பு—பொதிர்வு, *v. noun.* Fear, dread, அச்சம். 2. Trembling, நடுக்கம். (சது.)

பொதீர்பொதீரெனல், *v. noun.* [*sometimes* பொதீன்பொதீனெனல்.] Sounding as the falling of heavy fruits, thumping blows, &c., ஒலிக்குறிப்பு. (*c.*)

பொது, *s.* That which is shared by many, சாதாரணம். 2. The genus in distinction from the species, பொதுவினம். 3 A public assembly, சபை. 4. What is public, general, ordinary, usual, வழக்கம். (*c.*)

எல்லாநோய்க்கும்பொதுமருந்து. A physic for all diseases, a panacea.

பொதுக்கட்டுதல், *v. noun.* Sequestrating, taking from both parties. 2. Depositing by mutual consent, as in Panchayat.

பொதுக்கட்டியிருக்கிறது. It is deposited until an award is issued.

பொதுக்காரியம், *s.* A common or public affair.

பொதுக்குணம்—பொதுத்தன்மை, *s.* An attribute common to the simile and to that to which it is compared—as redness, to coral and to the lips.

பொதுச்சீர், *s.* Poetical feet containing four syllables. See சீர்.

பொதுச்சூத்திரம் — பொதுவிதி, *s.* A general rule.

பொதுச்சொல், *s.* A general term. 2. [*in gram.*] A word common to both திணை, or to two or more genders.

பொதுஸ்திரி — பொதுப்பெண் — பொதுமகள்—பொதுமடந்தை, *s.* A whore, a harlot, prostitute, (*lit.*) a common woman, வேசை.

பொதுத்திணை, *s.* [*in gram.*] That which is common to both திணை.

பொதுநன்மை, *s.* Common or public good

பொதுநிலம், *s.* Common land.

பொதுநிறம், *s.* An indefinite color between red and black; *spoken of persons.*

பொதுப்பட, *inf.* [*as adv.*] Generally commonly.

பொதுப்படப்பேசினான். He spoke without particularizing any one.

பொதுப்பெயர், *s.* [*in gram.*] Nouns common to both திணை, and two or more பால்—opposed to சிறப்புப்பெயர்.

பொதுப்பேச்சு, *s.* General speech, language not definite, not minute. 2. Ambiguous talk.

பொதுமனிதன்—பொதுவன், *s.* A mediator, மத்தியஸ்தன்.

பொதுமுதல், *s.* Common stock in trade.

பொதுவசனம், *s.* A word, phrase, or sentence of more than one meaning, பலபொருள்ஒருசொல். 2. As பொதுப்பேச்சு.

பொதுவனுமானம், *s.* One of the four modes of arriving at a conclusion. See அனுமானம்.

பொதுவிலேவிட, *inf.* To let a thing be common.

பொதுவிலெடுத்துச்செலவழிக்க, *inf.* To expend out of the common stock.

பொதுவில், *s.* A public hall, as பொதியில், அம்பலம்.

பொது, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To perforate, to bore through, துளைக்க. (சது.)

பொதுக்கு, கிறேன், பொதுக்கினேன், வேன், பொதுக்க, *v. a.* [*prov. com.* பதுக்கு.] To conceal, மறைக்க. 2. To embezzle, கவர.

பொதுபொதெனல், *v. noun.* Yielding to pressure—as soft ground. 2. Falling apart as a mud wall. 3. Imitative sounds, ஓசைக்குறிப்பு. (*c.*)

பொதுமை, *s.* Commonness, generality, பொதுத்தன்மை. (சது.)

பொதும்பர், *s.* Grove, garden, park, pleasure-ground, மரச்செறிவு. 2. [*poet. form of* பொதும்பு.] A hole in a tree, மரப்பொந்து.

பொதும்பு, *s.* A hole, a hollow place, as பொந்து.

பொதுவர், *s.* [*fem.* பொதுவியர்.] Herdsmen, cow-herds, இடையர். (சது.)

பொதுள்—பொதுளு, கிறது, பொதுண்டது, பொதுளும், பொதுள, *v. a.* To become thick, close, crowded, as அடர. 2. To sprout, to thrive, &c., as தழைக்க. (சது.)

***பொத்தகம்**, *s.* A book. See புத்தகம்.

பொத்தம்பொது, *s.* Generality, as பொத்தி. (*Colloq*)

பொத்தல், *s.* A hole, an orifice, a rent, துவாரம். 2. *v. noun.* Perforating. See பொ, *v.*

பொத்தலடைக்க, *inf.* To stop holes in walls, a roof, &c. 2. [*fig.*] To pay off debts. 3. To make sham excuses.

பொத்தாறு—பொத்தாறுக்கட்டை, *s.* The part of the plough to which the plough-tail is fastened.

பொத்தி, *s.* A garment of fibres, நார்மட்டி. 2. Cloth, சீலை. 3. [*prov.*] The unblown flower of the plantain, மடல்விரியாவாழைப்பூ. 4. The ear or cob of maize in the sheath, சோளப்பொத்தி. 5. An ear of corn in a sheath, தானியப்பொத்தி. 6. The young tender palmyra root, with the membrane about it, தோலுரியாதபனங்கிழங்கு. 7. [*vul. also* பொத்தித்தானம்.] Scrotum. 8. [*for* பொது.] Generality.

பொத்தித்தோவத்தி, *s.* A garment of fibres, worn in making oblations; as பொத்தி, 1.

பொத்து, *s.* Fault, defect, blemish, தவறு. 2. Evil, immorality, crime, தீயொழுக்கம். (*p.*) 3. Falsehood, lie, பொய். 4. Covering, stopping up, closing, மூடுகை. 5. Mending, botching, closing a hole, தைப்பு. 7. A hole, rat-hole; a small cavity, as பொந்து.

பொத்து, கிறேன், பொத்தினேன், வேன், பொத்த, *v. a.* To cover with the hand, or fingers, மூட. 2. To stop the mouth, eyes or ears, with the fingers, or otherwise, அடைக்க. 3. To close the hands, கை கட்ட. 4. To mend, patch, botch—as baskets or bags, as பொத்த. 5. To hug one's self, with the arms across the breast, கைகட்டிக்கொள்ள. 6. (*fig.*) To hide or conceal a matter, to practise disguise, மறைக்க. 7. (*fig.*) To beat or flog, அடிக்க. (*c.*)

இத்தப்பொத்தல்களைப் பொத்திக்கொண்டிருக்க என்னாலேயாகாது. I cannot continue mending all these holes, i. e., patching up this man's character, or standing surety for him.

அவனைநன்றாய்ப்பொத்திவிட்டார்கள். They beat him well.

வாய்பொத்த, *inf.* To cover the mouth, with the hand, in respect.

பொத்திப்பிடிக்க, *inf.* [*prov.*] To hold in the closed fist, to clasp.

பொத்துப்பொத்தென்றல், *v. noun.* Reiteration of sounds, or hollow thumps, as in the falling of heavy fruits, &c., as பொத்துப்பொத்தென, தத்துதல். (*c.*)

பொத்துமான், *s.* [*prov.*] A kind of deer, ஓர்மான்.

பொத்தை, *s.* Any thing large, thick, bulky, பருமை. 2. [*also* பேத்தை.] The sea-frog. See பேத்தை. (*Old Dic.*)

பொத்தைச்சுரைக்காய்போலே. Like a thick gourd, [plump.]

பொத்தைக்கால், *s.* Elephantiasis, or the great leg, யானைக்கால்.

பொத்தையன், *s.* [*fem.* பொத்தைச்சி.] A fat bulky man, பருத்தவன்.

பொந்தர், *s.* The name of a sea-fowl, a gull, or water-bird, நீர்ப்பறவை. (*R.*)

பொந்தி, *s.* The body, சரீரம். (சரீரம்.) 2. A wooden sword, மரவாள். (*Colloq.*)

பொந்து, *s.* [*Tel.* పొందు.] A hole, hollow in a tree, மரப்பொந்து. 2. A hole in the ground, as of a rat or snake, வளை. (*c.*)

பொந்துத்தேன், *s.* Honey taken out of a hole in a tree, &c.

பொந்தை, *s.* A hole in a cloth. (*R.*)

பொந்தைக்கோல்—பொந்தைப்கோல், *s.* A kind of staff. (*Old Dic.*)

பொம்மல், *s.* Thickness, plumpness, largeness, bulkiness, corpulence, swelling, பொலிவு. 2. Abundance, copiousness, மிகுதி. 3. Boiled rice, சோறு. 4. (*R.*) A puppet.

பொம்மலாட்டு, *s.* [*Tel.* బొమ్మలాట.] A puppet show, பாவைக்கூத்து.] 2. [*fig.*] Disguise, deceptive appearance, மாயம்.

பொம்மன், *s.* Such a one. See இன்னான்.

பொம்மெனல், *v. noun.* Sounding imitatively, ஒலிக்குறிப்பு. (*சூ.*)

பொம்மை, *s.* [*Tel.* బొమ్మ.] Puppet, effigy, பாவை. 2. (*Old Dic.*) Breast work, parapet, கொத்தளம். (*Beschi.*)

பொய், *s.* Lie, falsehood, falsity, untruth, அசத்தியம். (*சூ.*) 2. Illusion of the world, deceptive appearance, மாயை. 3. Sham that which is mock or false; artificialness, வேஷம். 4. (*சூ.*) Hollow or hole in a tree, மரப்பொந்து. 5. [*loc.*] A small splinter, சிறுசிராய்.

எண்ணமெல்லாம்பொய்யெமனேமெய். Expectations are vain. Yaman [death] is certain.

பொய்யாயபொய்நம்பிக்கை. A false and vain hope.

பொய்க்கடி, *v. noun.* Slight grazing of cattle; browsing. 2. A harmless bite of a reptile, விஷமேறாக்கடி.

பொய்க்கண், *s.* Any part near the eye, கண்மருங்கு.

பொய்க்கால், *s.* Stilt, பொய்க்கால். (See கால்.) 2. A wooden leg, மரக்கால்.

பொய்க்குரல்—பொய்க்குரலம், *s.* A feigned or counterfeit voice.

பொய்க்குழி, *s.* A pit-fall, படுகுழி.

பொய்க்கை, *s.* A false arm. 2. As பொய்த்தல்.

பொய்க்கோலம்—பொய்வேஷம், *s.* Mask, disguise, assumed appearance, கள்ளவேஷம். 2. Hypocrisy, dissimulation, வஞ்சம்.

பொய்சாதிக்க, *inf.* To stand to a lie.

பொய்சொல்லி, *appel. n.* A liar.

பொய்சொல்லுகிறவன்வாய்க்குப்பொரிகூடக்கிடையாது. The mouth of a liar will not get even the parched rice strewed on a corpse.

பொய்ச்சத்தியம்—பொய்ப்பிரமாணம், *s.* A false oath, perjury.

பொய்ச்சாட்சி, *s.* A false witness. 2. False evidence, கள்ளச்சாட்சி.

பொய்த்தலை, *s.* A mask or a false head on a pole, pushed by thieves through a hole in the walls of a house, to receive the blows, if any be given.

பொய்படுதல்—பொய்ப்படுதல், *inf.* [*v. noun.* பொய்படுதல்.] To fail, to become abortive, கெட. 2. To prove false, பொய்யாக.

பொய்ப்பத்திரம், *s.* A forged letter, bond or other document.

பொய்ப்பாறை, *s.* A shallow stratum of rock, as found in digging wells.

பொய்ப்பிஞ்சு, *s.* [*prov.*] Very young fruit that does not come to perfection.

பொய்மூக்கு, *s.* Parts near the bottom of the nose.

பொய்யடி, *v. noun.* A light or harmless sham blow. 2. [*fig.*] Blinding others by publishing false stories.

பொய்யன், *s.* A liar, a falsifier.

பொய்யுறக்கம்—பொய்த்தூக்கம், *s.* Unsound sleep.

பொய்யுலகு, *s.* The present transitory state.

பொய்கை, *s.* Tank, pond, as தடாகம். (*c.*) 2. An owl, கோட்டான். (*சூ.*)

பொய்கையார், *s.* The name of a poet, ஓர்புலவர்.

பொய்கையாழ்வார், *s.* One of the twelve ஆழ்வார், or propagators of the Vaishnuva system, said to be born of a lotus flower in the holy tank of Conjeveram pagoda.

பொய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To lie, to utter falsehood, பொய்சொல். 2. *v. n.* To fail as a prediction or omen; to deceive hope, as clouds, &c., to make false pretences, தவற. (*c.*)

பொய்த்துப்போக, *inf.* [*com.* பொய்க்கப்போக.] To come to naught, to fail as a matter.

பொய்த்தல்—பொய்ப்பு, *v. noun.* Falsification, failure, deceptiveness, &c.

பொய்யாமொழி, *s.* Reality, veracity, certainty, சத்தியவசனம். 2. The name of a poet, also பொய்யாமொழிப்புலவர்.

பொய்க்கை, *s.* A kind of fish, ஓர்மீன். (*Rott.*) 2. See பொய்.

பொய்ச்ச, க்கிறேன், ச்சேன், ப்பேன், க்க, *v. a.* [*for* பொச்ச.] To forget, மறக்க.

பொய்ச்சு, *s.* [*com.* பொச்சு, which see.] Defective, as fruits.

பொய்தல், *s.* A female companion, தோழி. 2. A concourse of women, மகளிர் கூட்டம். 3. A kind of women's play, as விளையாட்டு. (*p.*)

பொய்ம்மை, *s.* Falsehood, falsity, பொய். 2. Unreality, illusion, மாயை. 3. That which is counterfeit, artificial, வேஷம். (*p.*)

பொரி, *s.* A fry, any thing fried; also rape-seed, maize, or beans parched, நெற்பொரியவல்பொரி. (*c.*) 2. A forest haunted by elephants, யானைக்காடு. (*சூ.*) 3. Rice not well prepared. (*limited.*)

பொரிக்குத்துப்போலத்துள்ளுகிறான். He skips about like parching corn.

பொரிசிந்த—பொரிதூவ—பொரியிறைக்க, *inf.* To strew parched rice on a corpse, &c. See சிந்து, *v.*

பொரிபொரியென்றுபொரிந்தான். He scolded without hesitation.

பொரிபொரிக்க, *inf.* To parch grain.

பொரி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be fried, பொரிபட. 2. To be parched, baked or roasted—as grain, in a vessel, வறுபட. 3. To form as a thin stratum or layer of salt, பூக்க. 4. To form as a coat of dust, on the body, படிய. 5. To mutter as in suppressed anger, சினங்கொள்ள. 6. To be burnt as the face by the sun, கருகிப்போக. 7. To crack, to pop, to make slight reports, as musquetry, வெடிக்கப்போக. (*Old Dic.*) 8. [*fig.*] To blab, அலப்ப.

பொரிகாரம், *s.* An artificial salt, borax. See வெண்காரம்.

பொரிபொரிச்சான், *appel. n.* A kind of plant whose unripe seeds burst with a cracking noise when pressed.

பொரிமுண்டி, *s.* A kind of plant, கருப்பூண்டு, Lepidagathes cristata.

பொரிவாணம், *s.* A rocket which explodes throwing out stars.

பொரிதல், *v. noun.* Frying, forming as a thin coat, &c.

பொரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To fry, பொரிக்கச்செய். 2. To parch or toast grain, வறுக்க. 3. To bake yams, after roasting them on live coals, சுடுக்கப்பொரிக்க. 4. To brood over and hatch, as birds or snakes, குஞ்சுபொரிக்க, &c.

பொரிக்கறி, *s.* Fried curry.

பொரிமா, *s.* Flour of parched rice.

பொரிமாத்தூவல், *v. noun.* Sprinkling the flour of parched rice as on curries.

பொரியரிசி, *s.* Parched rice.

பொரியுருண்டை—பொரிவுருண்டை, *s.* A cake ball of fried rice.

பொரிவிளங்காய்—பொரிவிளாங்காய், *s.* A cake of baked meal, resembling விளாம் fruit.

பொரியல், *s.* Any thing fried, a fry, பொரிக்கறி. 2. As பொரிதல். (*c.*)

பொரியல்கரியல், *s.* Different kinds of fry.

பொரு, கிறேன், தேன், வேன், பொர, *v. n.* To fight, to contend in warfare, to engage in battle, போர்செய்ய. 2. To compete, to vie with in games of chance, சூதாட. 3. To resemble, ஒப்பாக. 4. To join, to unite with, to be combined, பொருந்த. 5. To come in collision with, தாக்க. 6. [*fig.*] To quarrel, வாதாட. 7. To dash together as waves, to be ruffled, அலைமோத. (*p.*)

பொருகளம், *s.* Field of battle, யுத்தகளம். (சது.)

பொருநன், *s.* [*pl.* பொருநர்.] A warrior, a hero, படைவீரன். 2. A strong, robust or valiant man, திண்ணியன். 3. A king, அரசன். 4. A chief of a hilly district, குறிஞ்சிநிலத்தலைவன். 5. A commander of an army, a general, படைத்தலைவன். (சது.) 6. [*ex* பொருநு.] A dancer, a masker, கூத்தன்.

பொருநராற்றுப்படை, *s.* A kind of poem. See ஆற்றுப்படை.

பொருபுவி, *s.* A battle-field, போர்க்களம்.

பொருகு, *s.* Boiled rice, சோறு. (சது.)

பொருக்கு, *s.* Flake, scale, skin or thin layer which peels off, as செதிள். 2. A loose portion of earth, &c., as உதிரி. (*c.*) 3. [*ind. par.*] A term indicative of speed, சீக்கிரக்குறிப்பு.

பொருக்கற்றுப்போகிறது. Being quite extinguished.

அவன்பொருக்கற்றுப்போக. May he utterly perish. (*a curse*)

அவனிடத்தில்ஒருபொருக்குமில்லை. He has not a particle [a skin], of coin with him.

சோற்றுப்பொருக்கு, *s.* Small remains of rice. (*R.*)

பொருக்காங்கட்டி, *s.* A clot.

பொருக்குமண், *s.* Flakes which rise on the ground when parched.

பொருக்கென, *inf.* To be quick, prompt, earnest, சீக்கிரக்குறிப்பு.

பொருக்கெனல், *v. noun.* Swiftness, சீக்கிரம். (சது.)

பொருட்செல்வி. See பொருள்.

பொருட்டு, *s.* Cause, காரணம். 2. [*as a particle, it denotes*] As, with, by, through, of, on account of, for the sake of, in order to, to the end that, &c., நிமித்தம். 3. A thing of weight, consequence, importance, மேம்பட்டது.—*Note.* This word is the third person neut. of the symbolic verb from பொருள், as இருட்டு, from இருள்.

இதொருபொருட்டாய்எண்ணவில்லை. I did not consider it a matter of importance.

நம்மைஇரட்சிக்கும்பொருட்டாக. In order to save us.

பொருணி, *s.* Toddy, fermented liquor, கள். (சது.)

பொருது, கிறேன், பொருதினேன், வேன், பொருத, *v. n.* To be joined, combined, united with, ஒன்ற. 2. To fight, contend, &c., as பொரு. 3. [*vul. for* பொருந்த.] To join together, unite, இணைக்க.

பொருதவைக்க, *inf.* To engraft, to solder. (*Old Dic.*)

பொருத்தம், *s.* Agreement, bargain, engagement, covenant, சம்மதம். 2. Joining, fitting, agreeing, adaptation, தகுதி. 3. Concord, harmony, agreement, இணக்கம். 4. Satisfaction, approbation, pleasure, திருத்தி. 5. Compact, treaty, confederacy, சபதம்; [*ex* பொருந்து.] (*c.*)

பொருத்தக்கடிதாசி—பொருத்தவோலை, *s.* A written contract for marriage, &c.

பொருத்தச்சக்கரம், *s.* [*in astrol.*] A diagram to ascertain the benign influence of the respective asterisms of the bride and bridegroom.

பொருத்தம்பண்ண, *inf.* To bargain, to stipulate, to covenant.

பொருத்தம்பார்க்க, *inf.* To examine astrologically, by சக்கரம், whether persons, between whom a marriage is proposed, are adapted to each other.

பொருத்தமில்லாமற்போயிற்று. There was want of agreement.

பொருத்தனை—பொருத்தினை, *s.* [*corrupt. of* பிரார்த்தனை, *or from* பொருந்து.] A vow, a solemn promise, நேர்த்திக்கடன். (*c.*)

பொருத்து, கிறேன், பொருத்தினேன், வேன், பொருத்த, *v. a.* To cause to agree, fit, adapt, prepare, or adjust, பொருந்தச்செய்ய. 2. To induce consent, உடன்படுத்த. 3. To reconcile persons, ஒப்புரவாக்க. 4. To engage a person for labor, &c., கூலிக்குப்பொருத்த. 5. To draw or bring over to a party or to an opinion, அமையச்செய்ய. 6. To construct a sentence, discourse, or essay so as to agree with another, வாக்கியத்தோடுபொருத்த. 7. To join together, to knit, unite, பிணைக்க. 8. [*in comb.*] To kindle a light, கொளுத்த.

பொருத்து, *v. noun.* A joining, a junction, a confluence, இணைக்குகை. 2. Joint of the body, மூட்டு. 3. [*in carpent.*] A joint, இசைப்பு. 4. Joint of a tree, &c., மரக்கணு. 5. Suture, சந்து. 6. Agreement, engagement, ஒப்பந்தம்.

பொருத்துவிட, *inf.* To be dislocated, disjoined. 2. To come apart.

பொருத்துவேலை, *s.* Joinery.

பொருநன். See பொரு, *v.*

பொருநு—பொருந், கிறேன், பொருநினேன், வேன், பொருந, *v. n.* To agree, to consent, உடன்பட. (*p.*)

பொருநை—பொருநையாறு, *s.* [*also* பொருனை.] A river in the south of the peninsula, தாமிரபருணி.

பொருநைத்துறைவன், *s.* Any prince of the Sera dynasty as lord of the பொருநை river, சேரன். (சது.)

பொருந்தம், *s.* A river, as பொருநை. (சது.)

பொருந்தர்-பொருந்தலர். See பொருந்த.

பொருந்து, கிறேன், பொருந்தினேன், வேன், பொருந்த, *v. n.* To combine with, கலக்க. 2. To harmonize, ஒக்க. 3. To be suitable, proper, agreeable, appropriate, ஏற்க. 4. To contract with, கூலிபொருந்த. 5. To join with, சேர. 6. To occur, happen, சம்பவிக்க. 7. To be accustomed to, as climate, food, அடுக்க. 8. [*superstitiously.*] To agree with one—as his wife, cattle or house, இசைய. 9. To succeed, come to a prosperous issue, பலிக்க. 10. To agree together, ஒன்றிவாழ. 11. To like, to be pleased with, இனப்பட.

அதெனக்குப்பொருந்தாது. It does not suit me.

பொருந்தச்சொல்வோர், *appel. n.* Teachers of the vedas, &c., as ஓத்தைப்போர்.

பொருந்தர், *appel. n.* Weavers, as joining threads, நெய்வோர். 2. (சது.) Mat and basket makers, மேதாவர்.

பொருந்தலர் — பொருந்தார், *appel. n.* Foes, hostile powers, பகைவர். (*p.*)

பொருந்தவைக்க, *inf.* To join things separated, to set broken bones, to reunite. 2. To put in order.

பொருந்தாமை, *v. noun.* [*neg.*] Disagreement, unsuitableness, incongruity, inconsistency, வெறுப்பு.

பொருந்தாதநாள், *s.* Lunar days, not harmonizing with the sign of one's birth.

பொருந்திக்கொடுக்க, *inf.* To give a work on contract.

பொருந்திக்கொள்ள, *inf.* To agree, to bargain, to stipulate.

பொருந்திவாங்க, *inf.* To take a thing after having agreed about the price.

பொருந்திவிட, *inf.* To stipulate. 2. To be joined as broken bones.

பொருபுவி, *s.* A forest-tract, பாலைநிலம். (சது.) 2. See பொரு, *v.*

பொருபொருக்க - பொருபொரென, *inf.* To crumble from too much frying, அறப்பொரிய. 2. To mutter with dissatisfaction, மிணுமிணுக்க. (*c.*)

பொருப்பு, *s.* A mountain, மலை. 2. The mount கொல்லி on the western coast.

பொருப்பன், *s.* A chief of a hilly tract, குறிஞ்சிநிலத்தலைவன். (சது.)

பொருமு, கிறது, பொருமினது, ம், பொரும, *v. n.* To sob, to cry, until the face and cheeks swell, விம்ம. 2. To swell, to bloat—as the body with wind, disease, or indigestion; or as a dead body, பிணம்பருக்க. 3. To swell from dampness as paper, or a sponge, ஈரித்துப்பருக்க. 4. To become soaked—as tiles, new pots, &c., ஊறிக்கசிய. (*c.*) 5. (சது.) To weep, அழ.

பொருமிக்கழிய, *inf.* To have flatulent evacuations by stool.

பொருமல், *v. noun.* Flatulency, wind in the stomach, வயிற்றுப்பொருமல். 2. Weeping, அழுதல்.

பொருமலி, *s.* A fat woman, பருத்தவள்.

பொருமிப்பொருமியழுகிறது. Sobbing and crying greatly.

பொருவ. A particle of comparison signifying likeness, உவமைச்சொல். (சது.)

பொருவாய், *s.* A small sea-fish full of bones. *Port.* piex-espinha, ஓர்மீன்.

பொருவு, கிறது, பொருவினது, ம், பொருவ, *v. a.* To resemble, ஒக்க. 2. To be optional, as adopting, or not, the augment of a word; or, as the choice of a hard or soft letter, உறழ. (*p.*)

பொருவு, *v. noun.* Resemblance, similitude, ஒப்பு. (சது.)

பொருள், *s.* Meaning of a word, the sense, signification, சொற்பொருள். 2. Property, wealth, riches, money, திரவியம். 3. Thing, substance, matter, corporeal or incorporeal existence; entity, வஸ்து. 4. Stores, provisions, utensils, பலபண்டம். (*c.*) 5. Truth, reality, verity, வாய்மை. 6. A thing of moment or importance, superiority, தலைமை. 7. Gold, பொன். 8. A child,

முப்புரம், *s.* [*also* மூவெயில்.] The three cities. See திரிபுரம்.

முப்புரி, *s.* The three strands of a cord. 2. The three cities, as முப்புரம்.

முப்புரிக்கயிறு. A three stranded string, a three-fold cord. (*c.*)

முப்புரிநூல், *s.* A three-threaded-cord, brahmanical cord, பூணூல்.

முப்புரிநூலோர். Brahmans, those who wear the three-fold-cord, பார்ப்பார் (*p.*)

முப்புள்ளி, *s.* The letter ஃ, ஆய்தஎழுத்து. (சது.)

முப்பூரம், *s.* The three distinct lunar mansions, பூரட்டாதி, பூரம், and பூராடம். (*p.*)

முப்பேதம், *s.* The three differences. See பேதம்.

முப்பொருள், *s.* *Trimurti*, &c. See பொருள்.

முப்பொறி, *s.* The three organs of sense as instruments of worship. See பொறி.

மும்மடங்கு—மும்மடி, *s.* Three times over, three-fold. See மடங்கு. (*c.*)

மும்மடியாகுபெயர், *s.* A species of nouns of secondary signification, by three steps of application, as காரறுக்கப்பட்டது, the rainy season's harvest is gathered. In this கார், black—applied to clouds—is used for the rainy season; the crop gathered is of that season.

மும்மணிக்கோவை, *s.* A necklace of three strings of beads. 2. A poem of thirty stanzas, divided into three parts of ten stanzas, the verses of each ten, containing different stanzas, and in each ten, the classification is diverse from the rest. See பிரபந்தம்.

மும்மணிமாலை, *s.* A poem of thirty stanzas, of three different kinds of verse, வெண்பா, கலித்துறை, and அகவல், with the அந்தாதி termination.

மும்மண்டலம், *s.* The three parts in the human body. See மண்டலம்.

மும்மலம், *s.* The three evil passions. See மலம்.

மும்மாரி, *s.* Raining thrice. See திங்கள்.

மும்மீன், *s.* The fifth lunar mansion. See மிருகசீரிடம். (சது.)

மும்மூர்த்தி, *s.* The Hindu Triad, as திரிமூர்த்தி.

மும்மூன்று, *s.* Three times three. 2. Three by three, by threes, மூன்றுமூன்று.

மும்மை, *s.* Three different states of existence: 1. உம்மை, the former birth; 2. இம்மை, the present state, &c.; 3. அம்மை, or மறுமை, futurity; [*ex* மை] (*p.*)

மும்மொழி, *s.* Three sorts of speech. See மொழி.

முக, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To draw water, &c., as மொள்ள. 2. [*for* மோக்க.] To smell. 3. To measure grain or liquids with a measure of capacity.

முகத்தல், *v. noun.* Drawing water, &c., மொள்ளல்; or baling, சொள்கல்.

முகத்தலளவு, *s.* Measurement of capacity, மொண்டளக்குமளவு.

முகத்தலளவையாகுபெயர், *s.* Metonymy, by which a measure of capacity—as a gallon—is put for the thing measured. See ஆகுபெயர்.

ஆழவமுக்கி முகப்பினும், ஆழ்கடலில் நாழிமுகவாது நானாழி. Though you sink the நாழி measure low in the deep sea, you will draw only that measure of water, i. e. you will receive only what is ordained. (முதுரை.)

முக்கவை, *s.* A ladle, அகப்பை.

முகடி, *s.* The elder-sister of Lukshmi, மூதேவி; (*lit.*) poverty, or misfortune. (சது.)

முகடு, *s.* [*gen.* முகட்டின்.] The top of a hill or mountain, மலையினுச்சி. (சது.) 2. (*c.*) The ridge of a house, வீட்டினுச்சி. 3. A long cross-beam of a house, விட்டம். 4. The zenith, உச்சி.

அண்டமுகடு, *s.* See அண்டம்.

முகடுகட்ட—முகடுதெற்ற—முகடுமூட, *inf.* [*sometimes* முகடுமுறிக்க.] To construct the ridge of an ola-roof, கூரைவீட்டின் முகடுதொடுக்க.

முகடுர்தல், *v. noun.* Overcoming, excelling, மேற்கொள்ளல். (இராமா.)

முகட்டோடி, *appel. n.* [*prov.*] A long ridge-beam of a house, to which the rafters are fastened.

முகட்டுப்பூச்சி, *s.* A bug, மூட்டைப்பூச்சி.

முகட்டுவளை, *s.* [*also* மோட்டுவளை.] A beam as a cross-tie for rafters to keep them at a proper distance.

முகட்டோடு, *s.* A ridge-tile.

முகதா — முகதாவு — முகத்தாவு, [*Arab.*] In presence of, before one's face; in person, முகத்தின்முன்.

முகதாவிலேபேசிக்கொள். Speak in person.

முகதாவிலேநின்றான். He stood in the presence [of the king, &c.].

முகப்பு, *s.* The front, forepart, porch; frontispiece, ஆசாரம்; [*ex* முகம்.] (*c.*)

முகப்பிலே. In the front.

முகமன், *s.* Civility, politeness; officiousness, உபசாரவார்த்தை. (சது.) 2. Flattery, முகஸ்துதி; [*ex* முகம்.]

முகமன்சொல்லுதல்—முகமன்பேசுதல், *v. noun.* Flattering.

முகமுகெனல், *v. noun.* The humming of bees, gurgling of water, &c., ஈரடுக்கொலிக்குறிப்பு. (சது.)

•முகம், *s.* The mouth, வாய். 2. Face, countenance, visage, mien, வதனம். 3. Entrance to a house, a harbor or river, வாயில். 4. Commencement, தொடக்கம். 5. Aspect, look, appearance, தோற்றம். 6. Prospect—as the front of an army, படைமுகம். 7. Head—as of a street, or point, முனை. 8. Design, object, purpose, நோக்கம். 9. Chief, முதன்மை. W. p. 663. MUK'HA. 10. Place, இடம். 11. State or condition, as காரியம்நல்லமுகத்தைக்கொள்ளுகிறது. (*Beschi.*)

அபிமுகம். Presence.

அதோமுகம். A down-cast look.

அறிமுகம். Acquaintance.

சிரீமுகம்—ஸ்ரீமுகம்—ஸ்ரீ முகம்—திருமுகம்.... A letter from a guru.

புதுமுகம். An unknown person; (*lit.*) a new face.

என்வீட்டுமுகமாய்த்திரும்பும். Please turn towards my house.

அவர்களொருமுகமாய்நிற்கிறார்கள். They are all on one side.

காற்றுமுகத்திலேதூற்றிவிடு. Winnow [the corn] before the wind.

கிழக்குமுகமாயிரு. Sit towards the east.

முகத்துக்குமுகங்கண்ணாடி. Personal inquiry is as a perspective.

சுவாலாமுகம்-சுவாலாமுகி, *s.* A place, where subterraneous fires break forth, venerated by the Hindus.—*Note.* A celebrated *Jvalamukhi* exists in Lahore, to which pilgrimages are made. The soil abounds with carburetted hydrogen, which takes fire on coming in contact with the external air, especially if a light be applied. Vents are made; and a light being brought near the orifice, a flame is kindled, which is fed by the escaping stream of gas. The tongue of Parvati is said to have fallen at this place, அக்கினிக்குமிடம். W. p. 357. JVALAMUK'HEE.

முகம், உ. Two aspects of Brahma as given in the Agamas: 1. அந்தர்முகம், knowing from within; 2. பாகிர்முகம், knowing from without.

முகம், யச. Fourteen expressions of the face shewing various emotions and passions. They are: 1. அஞ்சிதமுகம். 2. அதோமுகம். 3. ஆகம்பிதமுகம். 4. பிரகம்பிதமுகம். 5. ஆலோலிதமுகம். 6. உலோலிதமுகம். 7. உத்துவாகிதமுகம். 8. சமமுகம். 9. சொர்தமுகம். 10. உத்தமுகம். 11. விதுதமுகம். 12. பராவிருத்தமுகம். 13. பரிவாகிதமுகம். 14. நிரசனமுகம், which see in their places.

முகக்கடுப்பு, *s.* An austere or harsh countenance.

முகக்கட்டை, *s.* [*com.* மோவாய்க்கட்டை.] The chin.

முகக்களை, *s.* Shining of the countenance.

முகக்கிளர்ச்சி, *v. noun.* Cheerfulness of the countenance, as முகமலர்ச்சி.

முகக்குறி—முகக்குறிப்பு, *s.* [*in medi.*] A symptom expressed by the countenance. See குறி. 2. See குறிப்பு.

முகக்கோட்டம், *v. noun.* Expression of grief in the countenance; (*lit.*) crookedness of the face. See கோடு, *v.*

முகங்கழுவுதல். Washing the face before eating.

முகங்காட்டுதல். Shewing one's self for mere ceremony, as at a feast, &c., for a short time. 2. Shewing one's self in order to be known. 3. Shewing the face, as a person standing within doors and calling. 4. Shewing the face as a courtezan to allure paramours.

முகங்குப்புற — முகங்கவிழ, *inf.* To incline the face towards the ground—*used adverbially*. Compare குப்புற.

முகங்குருவுதல், *v. noun.* Being of a sad countenance.

முகங்கொடுத்தல். Granting a kind hearing. 2. Fondling or treating with great indulgence, பட்சங்காட்டல்.

பிள்ளைக்குமுகங்கொடாதே. Indulge not a child.

முகங்கொள்ளல். Shooting forth, as a boil, &c., பருமுகங்காணல்.

முகங்கோடுதல்—முகங்கோணுதல். Being down-cast as the countenance. See கோடு, *v.*

அவன்முகங்கோணிப்போனான். He went away dissatisfied.

முகச்சரக்கு, *s.* Commodities for show. [*limited.*]

முகச்சவரம் — முகச்சௌரம் — முகவேலை, *s.* Shaving the face.

முகச்சாடை, *s.* A winking or slight notice, a pretended half notice, கண்டுங்காணாமை. 2. As முகச்சாயல்.

முகச்சாயல், *s.* One's features or likeness. See சாயல்.

அவனுடையமுகச்சாயலாயிருக்கிறான். This one is like the other.

முகச்சாய்ப்பு, *v. noun.* A slight aversion, or half willingness, anger, விருப்பின்மை.

முகச்செழிப்பம் — முகச்செழிப்பு, *v. noun.* Cheerfulness of countenance.

முகஞ்சின்னம்போதல், *v. noun.* Being put out of countenance, or made ashamed, வெட்கப்படுதல்.

முகஞ்சுண்டுதல். Looking sullen.

முகஞ்சுண்டிக்கொண்டிருக்கிறான் He has contracted his face; looks sullen.

முகஞ்சுளித்தல், *v. noun.* Frowning, looking angry.

முகஞ்சூம்பிப்போதல், *v. noun.* The face becoming wan.

முகஞ்செத்துப்போகிறது. The countenance fades; (*lit.*) dies.

முகஞ்செழித்தல், *v. noun.* Appearing with a cheerful countenance.

முகதரிசனம், *s.* The propitious sight of a majestic countenance, or of one much loved.

முகதலை, *s.* The first end of a cloth, that which was fastened to the weaver's beam—oppos. to சவதலை. 2. (*R.*) Confrontation.

முகதலை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To confront, to face.

எங்களைமுகதலைத்துவிடும். Bring us face to face.

முகதலைப்பு, *v. noun.* Confrontation, as முகதலை, 2.

முகத்தழகு—முகவெட்டு, *s.* Beauty of countenance, comeliness, perfection.

முகதாட்சிணியம்—முகதாட்சிணை – முகதாக்ஷிணை, *s.* [*vul.* முகத்தாச்சிணை.] Respect of persons, complaisance, as முகமாட்டம்.

முகத்தாரானம்—முகபூரணம், *s.* Cheerfulness, as முகச்செழிப்பு.

முகத்தாலடிக்க, *inf.* To repulse by the countenance.

முகத்திரியக்குநாடி, *s.* [*in anat.*] Transverse facial artery.

முகத்திலரும்ப—முகத்திலரும்பிறங்க—முகத்திலரும்புபுறப்பட, *inf.* [*comm.* முகத்திலரும்பமிறங்க, அரும்பம்புறப்பட, *sometimes* முகத்திலகரிக்கோடிட.] To sprout as the hair on the upper lip of a young man.

முகத்திலெரிந்ததெறிக்கப்பேசுகிறது. Speaking as one enraged, see தெறி, *v.*

முகத்திலீயாடவில்லை. A fly will not touch [his] face; i. e. it is distorted with anger, &c.

முகத்தில்விட்டெறிந்தபோலிருக்கிறது. Casting a reflection, (*lit.*) throwing in the face.

முகத்திலேசீலைபோட்டுக்கொண்டழுகிறது. Covering the face with one's cloth, and weeping.

முகத்துக்குமுன்னேசொல்லுகிறது. Speaking in one's presence.

முகத்தைக்காட்டுகிறது. Pouting; being angry.

முகத்திரை, *s.* A cloth to cover the face of a dead person, மரித்தோர்முகமூடிச்சீலை.

முகத்துதி–முகஸ்துதி, *s.* Flattery, (*lit.*) praise to the face.

முகத்துவாரம், *s.* [*loc.*] The mouth of a frith, or arm of the sea, கழிமுகம்.

முகத்தெளிவு, *v. noun.* Placidity or serenity of countenance. 2 A symptom of death. See தெளிவுகொடுக்க.

முகத்தேங்காய், *s.* [*prov.*] Upper part of a cocoa-nut next the stem. (*Jaff.*)

முகதட்டு, *s.* Appearance of friendship, simulation of kindness.

முகநாடி, *s.* Appearance of the face, a symptom revealed by the countenance, முகக்குறி.

முகபங்கம், *s.* Shame-facedness, இலச்சை

முகபடாம், *s.* A cloth to cover the face of an elephant.

முகபாடம், *s.* [*com.* வாய்ப்பாடம்.] That which one has memoriter, or knows by heart.

முகப்பணி, *s.* Shaving the face, முகவேலை. (*p.*)

முகபரிச்சயம்—முகப்பழக்கம், *s.* [*com.* முகப்பரிச்சை.] Acquaintance.

முகப்பரு, *s.* A pimple on the face.

முகப்பாக்கு, *s.* [*prov.*] The upper part of an areca-nut.

முகப்பிரியம், *s.* Respect of persons, as முகமாட்டம்.

முகப்பூச்சு, *v. noun.* A kind of paint used by dancers 2. [*fig.*] Ostentatious appearance, வெளித்தோற்றம்.

முகப்பொருத்தம், *s.* Outward agreeableness, as முகக்கட்டு.

முகப்போதரவு, *s.* [*vul.*] Coaxing, flattery, இச்சகம்.

முகமண்டலம், *s.* The circumference or orb of the face, the face, முகவட்டம்.

முகமலர்ச்சி — முகமலர்தல், *v. noun.* Glow of countenance; cheerfulness.

முகமதைத்தல். Swelling of the face.

முகமறிதல். [*neg.* முகமறியாமை.] Knowing, being acquainted with a person.

முகமறியாதவரிடத்திலெப்படிப்பேச. How can I talk with a stranger?

முகமறுத்தல். Speaking impartially, or accurately.

முகமறுத்துறவாடு. Make friendship without partiality.

முகமாட்டம். Shewing the face. 2. Partiality, respect of persons, பக்ஷபட்சம்.

முகமாயம், *s.* Confusion of mind, in presence of a fascinating woman.

முகமாயக்காரி. A fascinating, handsome woman.

முகமுகமாய், *adv.* [*com.* முகாமுகமாய்.] Face to face, personally.

முகமுறிக்க — முகத்தைமுறிக்க, *inf.* [*intrans.* முகமுறிய, *v. noun* முகமுறிவு.] To disoblige, speak or act so as to wound the feelings, break the heart, alienate, &c.

ஒருவனைமுகமுறியப்பேசாதே. Don't speak so as to offend one.

முகமுன்னிலே, *s.* One's presence.

முகமூடி, *appel. n.* A coat or covering often found on the face of children when born, பிறக்கையில்முகமூடியிருக்கும்பை.

முகமூடிவஸ்திரம், *s.* A cloth to cover the face, a veil, முக்காட்டுச்சீலை.

முகமொட்டுதல், *v. noun.* [*prov. in cock-fight.*] Shewing the face of one cock to another, to rouse them.

முகம்பார்த்தல். Being kind, or gracious, (*lit.*) *looking in the face.* 2. Regarding persons.

முகம்பார்த்துப்பேசு. Look [me] in the face, when you speak.

அவருடையமுகத்தைப்பார்த்து. For his sake.

முகரூபம், *s.* Features of countenance, likeness.

முகவசீகரம், *s.* Bloom or beauty of the face.

முகவசியம், *s.* Fascination of the countenance, as முகமாயம்.

முகவணை, *s.* A preface, as முகவுரை. (*p.*)

முகவணைக்கல், *s.* A stone placed at top across the pillars of a gate, உத்தரம்படிகல்.

முகவாசல், *s.* The front-gate, as தலைவாசல்.

முகவாரை, *s.* Partiality, முகப்பிரியம்.

முகவாடல்—முகவாட்டம், *v. noun.* A sad countenance.

முகவாதம்—முகவாதசன்னி, *s.* A kind of disease, ஓர்நோய். See சன்னி.

முகவாத்தியம், *s.* Playing on the mouth, by striking it with the hand. 2. See முகவீணை.

முகவிச்சகம், *s.* Adulation; [*ex* இச்சகம்.]

முகவிச்சை, *s.* Desire excited by the countenance; [*ex* இச்சை.]

முகவிலாசம், *s.* Openness, fairness, brightness of countenance, முகத்தெளிவு.

முகவீணை, *s.* A musical instrument played with the mouth.

முகவுரை, *s.* Introduction, preliminary remarks, as பாயிரம்; [*ex* உரை.]

முகவெள்ளைப்பருந்து, *s.* A species of white-faced kite, ஓர்பருந்து.

முகவேலை, *s.* Shaving the face, as முகப்பணி.

முகாமுகமாய். Personally. See முகமுகமாய்.

துவாரமுகம், *s.* Entrance, door-way, வாசல்.

துறைமுகம், *s.* A haven. See துறை.

நதிமுகம், *s.* Mouth of a river.

முகரி, *s.* [*Hind.*] Jasmine flower, மல்லிகைப்பூ.

*முகரிமை, *s.* Great knowledge, பேரறிவு. (சது.) 2. Knowledge of divine things, திவ்வியஞானம்.

முகரியோலை—முரியோலை, *s.* An uneven palm-leaf, for writing, முடக்கோலை.

முகரு — முகர், கிறேன், முகர்ந்தேன், வேன், முகர, *v. a.* [*com.* மோரு.] To smell a thing, examine by the smell, மோக்க.

முகரெனல், *v. noun.* A kind of sound caused by bees, ஒலிக்குறிப்பு. (சது.)

*முகனா, *s.* [*Tel.* மோனா.] Face, *in contempt.* (*Sa. Muk'hara.*)

முகல்—முகலன், *s.* [*Arab.*] A class of Mohammedans, a *moghul.*

முகல்தேசம், *s.* The Mogul country, ஓர்தேசம்.

முகவை, *s.* A name of Ramnad, இராமநாதபுரம். 2. See முக, *v.* (*p*)

முகனை, *s.* Beginning, introduction, exordium, the fore-part, front-corner, முதல்; [*ex* முகம், first *et Sa. Na*, giving.] *Compare* மோனை.

நான்வந்தமுகனையிலேஅவன்போய்விட்டான். He went away about the time I arrived.

முகனைக்காரன், *s.* A manager, superintendent, head-man, &c., முதலாளி.

முகனைபண்ண, *inf.* To preside, to lead.

முகனைமுடிவு, *s.* Beginning and end, ஆதியந்தம்.

எகனைமுகனை, *s.* Cause and result. (*Colloq.*)

•முகன், *s.* [*poet. form of* முகம்.] Face.

•முகாந்தரம், *s.* Cause, reason, account sake, means, motive, as ஏது; [*ex* முகம் *et* அந்தரம்.]

அதற்குமுகாந்தரஞ்சொல்லு. Give a reason for it.

அவன்முகாந்தரத்தில்வாங்கினேன். I bought it for his sake.

முகாந்தரமாக. [*as an adv.*] On account of, by means of.

அந்தமுகாந்தரமாகநான்வரவில்லை. I did not come for that purpose; 2. I was detained on that account.

முகாபிலா, *s.* [*Arab.*] Examination; comparison; confrontation, ஒத்துப்பார்த்தல்.

முகாபிலாராயசம், *s.* An auditing clerk.

முகாமை, *s.* [*sometimes* முகாண்மை.] Headship, superiority, pre-eminence, precedence, தலைமை; [*ex* முகம்] (*c.*)

நீஅதற்குமுகாமைபார்க்கிறீரா. Will you be the head?

முகாமைக்காரன், *s.* A head man; president of a society; an agent.

முகாமைபண்ண. *inf.* To superintend, &c., as தலைமைபண்ண.

முகாம்—முகான், *s.* [*Arab.*] A halt, தங்கல்.

முகாம்போட, *inf.* To halt.

•முகாரி, *s.* A kind of melody, ஓரிராகம். 2. [*prov.*] A head man, superintendent, முதன்மைக்காரன்.

முகாவளி, *s.* [*Hind.*] Confrontation, as முகதலை.

முகாவளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To confront, முகதலைக்க. (*R.*)

முகி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* [*Tel.* ముగియు.] To end, terminate, be finished, முடிய.

அதுமுகிந்துவருகிறது. It is nearly finished.

முகிவு, *v. noun.* The end, termination.

முகிவுகாலம், *s.* The last time, முடிவுகாலம்.

முகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*Tel.*] To finish, achieve, conclude, accomplish, முடிக்க.

•முகிரம், *s.* [*improp.*] A mirror. See முகுரம்.

முகில், *s.* [*a corrup. of Sa. Mihira or Mudira.*] A cloud, blue sky, azure. See மேகம்.

முகிலுறுமுதல், *v. noun.* Rumbling as thunder-clouds, மேகக்குமுறல். (*p.*)

முகிற்குன்றம், *s.* A mountain about the top of which the clouds float, மேகமூடியமலை. 2. A kind of arsenic, வக்கிராந்தபாஷாணம்.

முகிழம், *s.* [*St.* முகுளம்.] Flower-bud ready to bloom, மலரும்பருவத்தரும்பு. (*சது.*)

முகிழி, *v.* To close up the petals as a flower, as முகிழ்.

•முகிழிதம், *s.* A flower-bud, as முகிழ்.

முகிழ், *s.* [*as* முகிழம்.] A flower-bud, மலரும்பருவத்தரும்பு. (*சது.*) 2. A mode of using the hands in dancing. See காலட்சணம். 3. [*prov.*] The integument of a cocoanut, palmyra fruit, &c., தேங்காய்முதலியவற்றின்மடல்.

முகிழ்ப்புறம், *s.* That side of a fruit to which the stalk is attached

முகிழ்—முகிழி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To fold or close up, as a flower its petals, குவிய. (*p.*)

முகிழ்த்தல், *v. noun.* [*also* முகிழ்ப்பு.] Closing or folding up of petals. (*சது.*)

•முகினி, *s.* The Tamarind tree, புளியமரம். (*சது.*)

•முகுடம், *s.* A crest, diadem, tiara, as மகுடம். W. p. 663. MUKUT'A.

•முகுந்தம்—முகுந்தநிதி, *s.* One of the nine treasures of Kuvera, குபேரனவநிதிகளிலொன்று. (*Sa. Mukunda.*)

•முகுந்தன், *s.* One free from passion; an epithet of Vishnu, விஷ்ணு. W. p. 663. MUKUNDA.

•முகுரம், *s.* A mirror, reflector, &c., கண்ணாடி. W. p. 663. MUKURA.

மூக்கறைக்குமுகுரங்காட்டினற்கோபம்வரும். If you place a mirror before one with an amputated nose, he will be angry.

•முகுர்த்தம்-முகூர்த்தம், *s.* A division of time, forty-eight minutes or the thirtieth part of a day and night, ஓர்காலவரையறை. W. p. 667. MUHOORTTA. 2. [*com.* முழுத்தம்.] An auspicious hour, &c., astrologically fixed for a wedding, laying the foundation of a building, &c., சுபவேளை.

முகூர்த்தத்திலேதிருமங்கிலியங்கட்டவேணும். The wedding badge must be tied at the auspicious time astrologically fixed.

முகூர்த்தந்தப்பிப்போயிற்று. Is the auspicious time passed?

முகூர்த்தக்கால், *s.* The first pole of a nuptial booth set at a propitious hour. See கலியாணக்கால்நாட்டுதல் under நாட்டு, &c.

முகூர்த்தநாடி-முகூர்த்தநேரம்-முகுர்த்தவேளை, *s.* An auspicious hour.

முகூர்த்தமிடுதல்—முகுர்த்தம்வைத்தல், *v. noun.* Fixing an auspicious hour for marriage.

முகூர்த்தவிசேஷம், *s.* The good effect of a propitious time.

•முகுள், *s.* An opening bud, மலரும்பருவத்தரும்பு. W. p. 663. MUKULA.

முகுளம், *s.* State of being closed, as a flower, முகிழ்க்குந்தன்மை.

முகை, *s.* An opening bud, as முகிழ். 2. A crowd, கூட்டம். 3. A large earthen vessel, மிடா. (*சது.*)

நாண்முகை, *s.* A fresh blown flower.

முகை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To bud and part, as a flower ready to blossom, அரும்ப. (*p.*)

முகைத்தல், *v. noun.* The budding of a flower, அரும்புதல். (*சது.*)

முக்கம், *s.* [*improp.*] A kind of sound. See முழக்கம்.

முக்கறட்டை, *s.* Spreading hog-weed. See மூக்கறட்டை, மூக்கிரட்டை.

முக்காடு, *s.* [*gen.* முக்காட்டின்.] A veil, or part of a cloth, worn as a hood by females. (*c.*)

வெட்கமேகெட்டு வெளிப்பட்டமுண்டைக்கு முக்காடேது. Why does an impudent, bald-headed widow want a veil?

முக்காடிட—முக்காடுபோட, *inf.* To veil, or cover the head by pulling up a part of the cloth.

முக்காடுவாங்க, *inf.* To uncover the head.

முக்காட்டங்கி—முக்காட்டுச்சீலை, *s.* A hood worn by females.

முக்காட்டுக்கூறை, *s.* See கூறை.

நிறைமுக்காடு, *s.* Covering the whole body from head to foot, as the Mohammedan women.

முக்காணியர், *s.* [*pl.*] A class of brahmans, ஓர்வகைப்பார்ப்பார் (*p.*)

முக்காரம், *s.* A bolt, a bar, தாழ்ப்பாள். 2. [*also* உக்காரம்] The bellowing, or roar of bulls, &c., எருதின்முக்கிரசத்தம். 3. [*vul. for* முஷ்கரம்.] Stubbornness.

இவள்முக்காரம்போட்டுக்கொண்டிருக்கிறாள். She is stubborn in her conduct.

முக்காரம்போடுதல், *v. noun.* Bellowing, as fighting bulls.

•முக்கியம், *s.* Chief, that which is primary or principal, eminence, superiority, விசேஷம்; [*ex* முகம்.] W p. 664. MUKHYA.

அதொருமுக்கியகாரியமல்ல. It is not an important matter

முக்கியக்கருத்து, *s.* A chief concern.

முக்கியப்பொருள், *s.* Primary signification, *oppos. to* கௌணப்பொருள்.

முக்கியமாய், *adv.* Especially, chiefly.

முக்கியர், *s.* [*pl.*] Eminent men, principal men, persons of rank, முதன்மையோர்.

முக்கியவகங்காரம்—முக்கியாமுக்கியவகங்காரம், *s.* See அகங்காரத்திரயம்.

முக்கு, *s.* A corner of a street, a nook, as முடுக்கு. 2. Hard pains great effort, பிரயாசம். 3. [*Tel. for* மூக்கு.] Nose. 4. See முக்கு, *v.*

என்னைஅந்தமுக்கிலேகண்டான். He saw me in the corner of that lane.

வெகுமுக்குமுக்குகிறான். He takes great pains.

முக்கு, கிறேன், முக்கினேன், வேன், முக்க, *v. n.* To make violent efforts as a woman in child-birth, to travail, to strain at stool. 2. To press any thing under water, to immerse, as அமுக்கு. 3. [*in cant.*] To eat in large mouthfuls, உண்ண.

தண்ணீரிலேமுக்கியெடு. Sink it in the water and draw it up.

உன்னாலானமட்டும்முக்கிப்பார். You use your utmost endeavor.

முக்கியெடுக்க, *inf.* To strain in lifting.

முக்கல், *v. noun.* Confused sounding of voices from a crowd. (*சது.*)

முக்கு, *v. noun.* Straining at stool. 2. Suffocation—as திக்குமுக்கு.

முக்குவர், *s.* The name of a certain tribe of fishermen, ஓர்வகைச்சாதியார்.

முக்குளி, *s.* A plant. See கோழிமுளையான்.

முக்குளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To dive for, நீரில்மூழ்க. (*c.*) 2. To bubble up, as மொக்குளி.

முக்குளித்தெடுக்க, *inf.* To fetch up by diving.

முக்குளிப்பான், *appel. n.*, A water-bird, a species of Grobe colymbus; (*lit.*) *the diver.*

முக்கூடல், *s.* A mountain, ஓர்மலை. (*p.*)

முக்கூடற்பள்ளு, *s.* [*vul.* முக்கூடப்பள்ளு.] A species of popular poetry, not included in the ninety-six varieties, ஓர்பிரபந்தம்.

முக்தி—முக்தியார், *s.* [*Arab.*] Agent; the head, தலைவன்.

முக்தியார்நாமா, *s.* Written authority. 2. A power of attorney.

•முசகம், *s.* Rat, எலி. W. p. 666. Mushaka.

முசரு—முசர், *s.* [*Canar.*] Artificially curdled milk, தயிர். (சது.)

முசத்தி, *s.* [*Arab.*] An accountant: a writer in a public office, கணக்கன்.

•முசலம், *s.* A wooden pestle for beating rice, உலக்கை. 2. An iron pestle used as a weapon in war, இருப்புலக்கை. W. p. 667. Musala.

•முசலி, *s.* A name of Bhala Rama, the முசலம் being his weapon, பலராமன். 2. A crocodile, முதலை. 3. The blood-sucker, Lacerta cristata, as ஓணான். 4. A house-lizard, பல்லி. 5. A guana, உடும்பு. 6. A tree, Pandanus, தாழை, [*ex* முசலம்.] (சது.)

•முசலிகாசனம் — முசலிகாதனம், *s.* One of the postures of a Yogi, யோகாசனத்தொன்று.

•முசலிகை, *s.* A guana, உடும்பு, as முசலி, உடும்பு. (சது.)

•முசலி, *s.* A root, கோரைக்கிழங்கு.

முசல், *s.* A hare, as முயல், Lepus timidus, *L.* (*c.*)

முசலெழுப்பிவிட்டநாய்பதுங்கினதுபோல. The dog that started a hare slunk aside; *a good beginning, but bad ending.* [*prov.*]

முசலோட்டம். Swift flight of a hare.

முசல்வலி—முசல்வலிப்பு, *v. noun.* A kind of spasm.

முசற்காது, *s.* A plant, Ludwigia. [*Rheede.*]

முசற்கொம்மட்டி, *s.* A plant, Convolvulus copticus, ஓர்பூடு.

கடுவன்முசல், *s.* A male hare, a buck-hare.

முசாபரி—முசாபர், *s.* [*Arab.*] Travelling, going from place to place, பயணம்.

முசாபர்கானா, *s.* Traveller's bungalow.

முசி, கிறேன், க்கிறேன், ந்தேன், த்தேன், ப்பேன், வேன், முசிய, முசிக்க, *v. n.* To faint; to become dejected, இளைக்க. 2. To grow thin, to become weak, மெலிய; [*from Sa. Mucha.*]

முசிப்பு, *v. noun.* Languor, debility, மெலிவு (சது.) 2. The waist, as நடுப்பு.

முசிப்பாற, *inf.* To rest, to revive, to take comfort.

முசிப்பாற்ற, *inf.* To comfort, console.

முசிப்பாற்றி, *s.* Rest, refreshment, comfort, as இளைப்பாற்றி.

முசிடு, *s.* [*vul.*] Red ant. See முசிறு.

•முசிரம், *s.* Liberality, courteousness, generosity, வள்ளற்றன்மை. W. p. 664. Muchira.

முசிரப்பு, *s.* [*prov.*] Compression of bundles, &c., into a small bulk, ஒடுக்கிக்கட்டுதல்.

முசிறு, *s.* [*gen.* முசிற்றின், *vul.* முசிடு, முசுறு, *poetice* முயிறு.] A large red ant. See முசிற்றெறும்பு, under எறும்பு. 2. [*fig.*] One easily enraged, a surly waspish person, முன்கோபி. 3. [*R. sometimes for* முசு.] A black ape.

முசிற்றுமுட்டை, *s.* Eggs laid by red ants.

முசிற்றுமுட்டைத்தைலம், *s.* A medicinal oil prepared from these eggs, used for apoplexy, coma, &c.

முசு, *s.* [*improp.* முசுறு, முசிறு, *poetice* முயிறு.] A large and black kind of wild bearded-ape, கருங்குரங்கு. (சது.)

•முசுகுந்தன், *s.* One of the six Sakravartis, or universal monarchs, ஓர்சக்கரவர்த்தி.

முசுக்கட்டை—முசுக்கட்டைச்செடி, *s.* The Indian mulberry.

முசுக்கட்டைப்பூச்சி, *s.* [*com.* சம்பளிப்பூச்சி.] A hairy caterpillar.

முசுடர் — முசுண்டர், *s.* [*pl.*] Low, rude or mischievous people, கீழ்மக்கள்; [*ex* முசு an ape, *or* முசிடு.]

முசுடு, *s.* Red ant, as முசிறு.

முசுட்டை, *s.* A kind of climbing plant, Ipomoea candicans, ஓர்கொடி.—It is of two varieties, வெள்ளைமுசுட்டை, see வேலி; கொடிமுசுட்டை, Cassampelos pareira.

•முசுண்டி, *s.* A kind of weapon, ஓராயுதம். (சது.)

முசுப்பதி, *s.* Barracks for soldiers, as பாசறை. (சது.)

முசுப்பு, *s.* The hump on an ox's back, எருத்தின்முரி. (*R.*)

ஒட்டகமுசுப்பு, *s.* The hump of a camel.

முசுமுசுக்க, *inf.* To sound as boiling water, நீர்கொதிக்கையிலொலிக்க. 2. To snuff up as a hog.—In பரதவதம், to snore, குறட்டைவிட; [*ex Sa. Muja, reiterated.*]

முசுமுசுப்பு— முசுமுசெனல், *v. noun.* Sound of boiling. 2. Scratching sound produced by itching, &c., தினவுக்குறிப்பு.

முசுமுசுக்கை, *s.* [*com.* மொசுமொசுக்கை.] A plant, Bristly bryonia, Bryonia scabra, *L.*

முசுமுதாரி-முஜுமுதார், *s.* [*Arab.*] A taluk accountant next to the Tahsildar. [*Govt. usage.*]

முசும்பு, கிறேன், முசும்பினேன், வேன், முசும்ப, *v. n.* To mumble, mutter, murmur, முணுமுணுக்க. (*R.*)

முசுறு, *s.* A red ant. See முசிறு.

முசுறுப்புல், *s.* A grass. See புல்.

முச்சட்டை. *s.* (*Tel.* ముచ్చట.) Elegance, beauty; neatness, வேடிக்கை.

முச்சி, *s.* Top of the head; zenith, as உச்சி. 2. Tuft worn on the top of the head, as உச்சிக்கொண்டை. 3. Braided hair, மயிர்முடி. (சது.) 4. [*com. for* முச்சில்.] A small winnowing fan for female children, used as a toy. 5. [*Hind. also* முச்சிலவன்.] Stationer, one who serves out paper, quills, &c., in a public office. [*Govt. usage.*]

முச்சிகள், *s.* [*pl.*] Painters, cabinet makers, stationers, &c., சித்திரகாரர். (*Tel. usage.*) 2. [*prov.*] Carpenters, தச்சர்.

முச்சிலிக்கா — முச்சிலிக்கை, *s.* [*Hind.*] An agreement in writing, a bond given to arbitrators involving a penalty, உறுதிப்படிக்கை.

முச்சில், *s.* [*prop.* முற்றில்.] A toy. See முச்சி. (சது.)

முச்சூடும், *adv.* Entirely, altogether, wholly, as முழுவதும். [*Colloq.*]

அவன்சொல்லுகிறதுமுச்சூடும்பொய். What he says is all false.

முச்சை. [*prov.*] Three strings. See மு.

முஸ்திப்பு - முஸ்தீது. *s.* [*Hind.*] Furniture, preparation, ஆயத்தம்.

எல்லாமுஸ்திப்பாயிருக்கிறது. Every thing is ready.

•முஷ்கரம், *s.* Pertinacity, stubbornness, obstinacy, முரட்டாட்டம்.

முஷ்கரன், *s.* An obstinate, self-willed person.

•முஷ்டி—முட்டி, *s.* The fist or closed hand, முட்டுக்கை. 2. The hilt or handle of a sword, கத்திப்பிடி. 3. A handful of rice given away as alms, ஒருபிடி. W. p. 666. Mushti.

முஷ்டிவாங்கிப்பிழைப்பவன். A brahman who takes alms.

முஞல், *s.* A musquito, a gnat, கொசுகு.

•முஞ்சி, *s.* A kind of reed, of which cords are made, and the brahman's girdle, Saccharum munja, ஒருசாதிநாணல். W. p. 665. Munja.

முஞ்சு, கிறேன், முஞ்சினேன், வேன், முஞ்ச, *v. n.* To die, சாக. 2. To end, முடிய. (*p.*)

முஞ்சல், *v. noun.* Dying, as துஞ்சல். 2. Ending. (சது.)

முடக்கம், *s.* Restraint, hindrance, confinement at home, தடை. 2. Lameness, contraction by paralysis, கைகால்முடக்கம்; [*ex* முடக்கு.]

முடக்கமாய்ப்போக, *inf.* To become crippled, lame. 2. To be hindered. 3. To be spoiled, to perish.

உன்னாலேஇந்தக்காரியமுடக்கமாய்ப்போயிற்று..... The thing has been hindered by you.

முடக்கு, *s.* A curve, a bend, மடக்கு. 2. A winding crooked street, as முடுக்கு. 3. A finger ornament, விரலணிமோதிரம்.

அந்தத்தெருமுடக்காயிருக்கிறது. The street is very crooked.

அதுஒருமுடக்கு. It is a crooked nook.

முடக்கடி. *v. noun.* Hindrance, objection, thwarting.

முடக்கற்றான், *appel. n.* [*also* முடக்குற்றான் *and* முடக்கொற்றான்.] A medicinal plant, Heart-pea, *curing palsy and gout*, Cardiospermum Halicacabum.

முடக்குக்குடல், *s.* The small guts, as சிறுகுடல்.

முடக்குச்சரக்கு, *s.* Damaged goods, as கெட்டசரக்கு.

முடக்குப்பனை, *s.* A crooked palmyra-tree.

முடக்கு, கிறேன், முடக்கினேன், வேன், முடக்க, *v. a.* To bend the knees, arms, &c., as மடக்க. 2. To make lame, முடக்கச்செய்ய. 3. To prevent, to hinder, தடுக்க. (*c.*)

அவன்முடக்கிப்படுத்துக்கொண்டான். He lay down, bending his knees and arms close together.

அவனைமுடக்கிப்போட்டது. It made him lame; *spoken of some paralytic disease.*

முடக்கிவைக்க, *inf.* To complete a work of importance, but to speak of it as something trifling—as ஒருகுடிசைமுடக்கிவைத்தேன், I have put together a hut, instead of வீடுகட்டினேன், I have built a house.

முடங்கு, கிறேன், முடங்கினேன், வேன், முடங்க, *v. n.* To bend, contract, மடங்க. 2. To become lame or maimed, கைகால்முடங்க. 3. To be hindered, frustrated, தடைபட. (*c.*)

முடங்குளை, *s.* A lion, as having a mane, சிங்கம். 2. A horse's mane, குதிரையின் பிடர்மயிர்; [*ex* உளை.] (*சத.*)

முடங்கல், *v. noun,* Contraction from paralysis, &c., ஓர்நோய். 2 Being bent, as a bow or curved as a wall, மடக்கல். 3 A bambû as curving, மூங்கில். 4. A folded palm-leaf letter, ஓலை. 5. The தாழை tree, Pandanus.

முடங்கு, *v. noun.* Contraction by disease, as முடங்கல், 1. (*R.*)

முடமுடெனல், *v. noun.* A reiterated sound, a rustling of starched cloth, dry leaves or leather, சரசரெனொலிக்குறிப்பு. (*c.*)

முடம், *s.* Lameness in a limb. See சச்சம். 2. Any thing bent, முடங்கினது. (*c.*)

கோழிமிதித்துக்குஞ்சுக்குமுடமாகுமா......Will a young chicken become lame by being trampled upon by its mother?

முடப்புல், *s.* A curved bent grass.

முடப்புல்முக்கலசீரைத்தகைக்கும்...........Bent grass will stop a current of three *kalams.*

முடவன், *s.* [*fem.* முடத்தி.] One who is lame, சலிலி. 2. *Aruna,* without legs, the charioteer of the sun, அருணன். 3. [*also* மந்தன்.] Saturn the planet, from its slow motion, சனி.

முடவன்கொம்புத்தேனுக்காசைப்பட்டதுபோல... As a lame man desires to have the honey on the branches of a tree.

முடலை, *s.* A ball or globe, உண்டை. 2. A bad smell, நாற்றம். 3. Greatness, பெருமை. 4. Strength, வலி. (*சத.*)

முடவ, *inf.* [*prov.*] To limp or walk as a lame man, நொண்ட.

முடவாட்டுக்கல், *s.* Bezoar found in sheep, as ஆட்டுக்கல். (*R.*)

முடி, *s.* A crown, கிரீடம். 2. A tuft of hair left upon the crown of the head, as குடுமி. 3. A roll of hair on the head, as மயிர்முடி. 4. The head, தலை. 5. A bundle of rice plants, &c., for transplanting, as நாற்றுமுடி. 6. A plant, Holy basil, Ocimum, துளசி. (*சத.*) 7. A knot of a string, or in a tree, as முடிச்சு. (*c.*) 8. [*com.* முடி.] The half of a cocoanut-kernel, தேங்காய்ப்பாதி. (*R.*) 9. [*prov.*] As தேங்காய்க்குடுமி. 10. [*in poet.*] End, as முடிவு—For some of the compounds refer to கிரீடம், மகுடம்.

புலையனுக்குமுடிபொருந்தாது. A crown will not rest on the head of a *Pulaya.*

அடிமுடி, *s.* Head and foot. See அடி.

முடிகத்தரிக்கிறவன், *appel. n.* [*com.* முடிச்சுகத்தரிக்கிறவன்.] A cutpurse. (*R.*)

முடிக்காணிக்கை, *s.* [*com.* முடிகாணிக்கை.] An offering of the hair of the head. See காணிக்கை.

முடிக்கீரை, *s.* Young greens. See கீரை.

முடிக்கோரை, *s.* A kind of grass, ஓர்புல்.

முடிசாய்தல், *v. noun.* Dying of a king or patron. (*lit*) *declining of a crown.*

முடிசூட, *inf.* To wear a crown.

முடிசூட்ட, *inf.* To crown another.

முடிதரிக்க, *inf.* To be crowned. 2. As முடிசூட, and முடிசூட்ட.

முடிதும்பை, *s.* A fragrant kind of plant.

முடித்தேங்காய், *s.* A cocoa-nut with a fibrous knot on the upper part.

முடிபொறுத்தவன், *appel. n.* [*com.* முடிபொறுத்தோன்.] A king, as wearing a crown.

முடிபோட, *inf.* To tie into a knot.

முடிமயிர், *s.* A lock of hair. 2. A bunch of hair for enlarging women's locks, as பொய்மயிர்.

முடிமாலை, *s,* A garland for the head, a chaplet.

முடியிறக்குதல் — முடியெடுக்குதல் — முடிவாங்குதல், *v. noun.* Cutting or shaving off the hair of the head in fulfilment of a vow.

முடியுண்ண, *inf.* To be knitted into knots, முடிபட.

முடியுறுப்பு, *s.* Any ornamental part of a crown.

முடி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To tie, or make a knot, முடிச்சுமுடிய. 2. *v. n.* To end, terminate, be finished, or completed, முற்ற. 3. To die, சாக. 4. To be possible, capable, கூட.

சாப்பிட்டுமுடிந்தது. I have done eating.

ஆராதனைமுடிந்தது. The service was over. (*Chris. usage*)

அதுஉன்னாலேமுடியுமா. Can it be accomplished by you?

என்னால்முடியாது. I cannot come.

வேலைஎப்போதுமுடியும். When will the work be finished?

அவன்காரியமுடிந்தது. His case is settled, [*fig.*] he is dead.

அதுமுடியாது. It won't do. 2. It is impossible.

அதைமுடியப்பார். See how it ends.

ஆராய்ந்துமுடியாதகாரியம். It is an unfathomable mystery.

அதைமுடிந்துவை. Tie it up in a cloth.

நீ காலால்முடிந்ததை என்கையால் அவிழ்க்கமாட்டேன். The knot tied by your feet. I cannot untie with my hand; see அவிழ், *v.*

முடிந்ததுமுடித்தல், *v. noun.* The recapitulation of an author, briefly re-stating the points discussed. See உத்தி.

முடிந்ததுமுற்றும். Finis, end. (*in books.*)

முடிந்துபோக, *inf.* To end, to be completed.

முடிந்துபோட, *inf.* To tie up [money &c.] in a cloth.

முடிய, *inf.* [*as adv.*] Unto the end, finally. See முற்றுமுடிய.

முடியல், *s.* All, the whole, எல்லாம். (*சத.*)

முடியாமை, *neg. v. noun.* Endlessness, முடிவின்மை 2. Impossibility, incapability, கூடாமை.

முடிச்சு, *v. noun.* A knot, a tie; something tied in a bundle.

கொடுமுடிச்சு—படுமுடிச்சு, *s.* A hard intricate knot. See கோணை.

முடிச்சுமுடிச்சாயிருக்கிறது. It is full of knots.

முடிச்சுப்போனது மல்லாமல் இளிச்சவாயப்பட்டமுங்கட்டிக்கொண்டது. He has lost his money, and is left to grin.

முடிச்சவிழ—முடிச்சுக்குலைய, *inf.* To become loose, or untied, as a knot, or as hair hanging behind and knotted.

முடிச்சவிழ்க்க, *inf.* To untie a knot.

முடிச்சவிழ்க்கி—முடிச்சுமாறி, *appel. n.* A pick-pocket.

திருட்டுப்பையன்கலியாணத்தில்முடிச்சவிழ்க்கிபெரியதனம்பண்ணல். In the marriage of a thief, the pick-pocket is the conductor.

முடிப்பு, *v. noun.* A tie, as முடிச்சு. 2. Money wrapt up in a cloth. See கிழி 3. (*p.*) End, conclusion, result, completion, &c., as முடிவு.

முடிப்புச்செலுத்த, *inf.* To pay money on a debt, பணங்கட்ட.

முடிப்புச்சொல்ல, *inf.* To conclude a discourse. 2. As முடிவுசொல்ல.

முடிப்புரி, *s.* [*improp.* முடிப்பிரி.] A receiver of rents, taxes, &c., a shroff, சராப்புக்காரன்.

முடிவு, *v. noun.* [*in gram.* முடிபு.] End, termination, close, completion, issue, result, expiration, conclusion, கடை. (*சத.*) 2. Death, destruction, மரணம்.

முடிவென்னசொல்லுகிறீர். What do you say of the result?

முடிவறிய, *inf.* To know the result, or end, of a matter, as துறைபோக.

முடிவிடம், *s.* The end, or termination, of a subject or sentence.

முடிவிடங்கூறல், *v. noun.* Giving notice where a point in a discussion terminates. See உத்தி.

முடிவிலேபார்க்க, *inf.* To view abstractly, to consider generically; not to take into consideration individual or particular instances, or determine from immediate causes, but to look to the prime cause, முடிவாய்யோசிக்க.

பாரிதனிலுள்ள செயலெலாமுடிவிலே பார்க்கின் உன்செயலல்லவோ. Are not thine acts in this world, from an abstract, and generalized view of things? (தாயுமான.)

முடிவில்லாமை, *neg. v. noun.* Eternity, that which hath no end.

முடிவுசொல்ல, *inf.* To decide, or pass sentence.

முடிவுரை, *s.* The conclusion of a work, or discourse; the peroration, as distinguished from முகவுரை, the introduction.

முடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To put on the head, a chaplet, a crown, &c., to invest, சூட்ட 2. To finish, bring to an end, complete, effect, accomplish, நடத்துவிக்க. (*c.*) 3. To destroy, அழிக்க.

கொண்டையிலேபூமுடித்துக்கொண்டாள். She has decked her tuft of hair with flowers.

அவனொன்றையும்முடிக்கமாட்டான். He won't effect any thing.

பிரசங்கத்தைமுடித்தார். He concluded the lecture.

எப்போகலியாணமுடிக்கப்போகிறாய். When are you going to marry?

முடித்துப்போட்டாயா. Have you finished it?

என முடிக்க. It must be done so. (*p.*)

முடித்துக்காட்டல், *v. noun.* Adducing proofs, examples, illustrations, shewing how rules apply in practice. See உத்தி.

முடித்துக்கொடுக்க, *inf.* To finish a work, for one. 2. See கொடு, *v.*

எத்தனைநாளைக்குள்முடித்துக்கொடுப்பாய்.... ..In how many days will you finish [my] work?

முடுகு, *s.* The female of a kind of elk, கடமைப்பெண். (சது.)

முடுகு, கிறேன், முடுகினேன், வேன், முடுக, *v. n.* To hasten, or be in haste, as கடுகடுக்கிறப்பட. 2. To appear in multitudes; to swarm, to throng, மொய்க்க, நெருங்க. 3. To be strong, வலிமையாக. 4. *v. a.* To oppose, to resist, எதிர்க்க.

முடுகிநட—கடுகிநட. Go quickly.

முடுகியல், *s.* An anapæstic measure, with a recurrence of the same termination, in each word, as in *quadrupedante sonante*; *commonly* முடுகு, தரிதலமை See அராகம். 2. A part of one kind of poem, கலிப்பாவிலோருறுப்பு.

முடுகு, *v. noun.* A quick measure in music, as முடுகியல்.

முடுகுவெண்பா, *s.* A species of வெண்பா verse composed in quick measure. It is of two kinds, பின்முடுகுவெண்பா, and முன்முடுகுவெண்பா.

முடுக்கர், *s.* A mountain cavern, மலைக்குகை. (சது.) 2. See முடுக்கு.

முடுக்கு, *s.* Corner, reeess, கோண். 2. 2. A narrow winding street, as முடக்கு. 3. Strength, power, வலி. 4. Urging, pressing hard, forcing, துரிதப்படுத்தல். (*c.*)

வெகுமுடுக்குப்பண்ணுகிறான். He is urging very hard.

அதொருமுடுக்குவழி. It is a narrow street.

முடுக்கர், *s.* [*pl.*] Strong men, பலமுடையோர்.

முடுக்கு, கிறேன், முடுக்கினேன், வேன், முடுக்க, *v. a.* To urge or force together, அவசரப்படுத்த (*c.*)

கடனைகறுத்துமெத்தமுடுக்கினான். He has urgently demanded payment of the debt.

முடுவல், *s.* A wild dog, செந்நாய். 2. A dog, நாய். 3. A bitch, பெண்ணாய். (சது.)

முடுவற்படையோன், *s.* An epithet of Bhairava, வயிரவன். (சது.) 2. One who keeps dogs for fighting, படைநாயகளைவைத்திருக்கிறவன்.

முடை, *s.* A smell of putrefaction, (நீதி.) an offensive scent, a stench, நாற்றம். 2. The bad smell of sour butter-milk or curds, மோர்முதலியவற்றின்மொப்புவீச்சம். 3. Flesh, புலால். 4. An umbrella of palm-leaves, ஓலைக்குடை. 5 Straits, as முட்டு.

முடைச்சேரி, *s.* A village of herdsmen in the woods.

முடைநாற்றம், *s.* The stench of a carcass, பிணநாற்றம்.

எனக்கதிகமுடையாயிருக்கிறது. I am in want.

முடை, கிறேன், ந்தேன், வேன், முடைய, *v. a.* To braid, to plait, to plat, to wattle, பின்ன. (*c.*) 2. *v. n.* To become lean, இளைக்க. (சது.)

கூடைமுடைகிறது. Making baskets.

முட்ட—முட்டவும்—முட்டமுடிய, *as an adv.* [*improp. for* முற்ற.] Wholly, altogether.

என்னைமுட்டமுடியபோஷித்தற்கரும்..........Please patronize me all my days. [*vul.*]

முட்டடி, *s.* Nearness, adjacency, சமீபம்.

கிட்டடிமுட்டடி. Too near.

முட்டத்தனம், *s.* Ignorance, stupidity, மூடத்தனம்.

***முட்டம்**, *s.* [*also* திருமுட்டம்.] The name of a town to the south of Madras, ஓரூர். (சது.) 2. See முட்டு, *v.*

முட்டன், *s.* A dunce. See முட்டாள்.

முட்டா, *s.* [*Hind. pl.* முட்டாக்கள்.] Goods, estate, சொத்து. (*R.*)

முட்டாக்கு, *s.* A veil, முக்காடு. 2. A covering, போர்வை; [*from Sa. Mut'a*, to cover.]

முட்டாக்குக்காரன், *s.* One who wears a veil

முட்டாள், *s.* A dunce, a simpleton.

முட்டாளுக்குக்கோபமூக்கிலே. A dunce has anger in his nose.

முட்டாள்பெட்டிமகன். A very ignorant man, [*lit.*] son of a silly woman; *used by brahmans.*

முட்டாள்வேலை, *s.* The work of a blunderer.

முட்டி, *s.* A two-fold class of plants, சிற்றுமுட்டி, Pavonia zeylanica; பேராமுட்டி, Pavonia odorata. 2. A small earthen pot, சிறுபானை. 3. (சது.) The எட்டி tree, Strychnos.

முட்டிச்சுரை, *s.* A gourd whose shell is used for the body of the lute, as கின்னரச்சுரை.

***முட்டி**, *s.* The fist. 2. A handful. 3. Alms. See முஷ்டி. 4. Divination to discover any thing concealed in the closed hand. See கலைஞானம். 4. A mode of using the hands in dancing. See கலைலட்சணம்.

முட்டிக்கத்தரி, *s.* A brinjal, as முட்டைக்கத்தரி.

முட்டிக்கால், *s.* [*appel.* முட்டிக்காலன்.] Knock-knees.

முட்டிக்கால்தட்ட, *inf.* To strike the knees together.

முட்டிச்சண்டை — முட்டியுத்தம், *s.* Boxing, pugilism, கைக்குத்துச்சண்டை.

முட்டியெடுத்தல், *v. noun.* Begging, asking alms.

தும்முட்டி, *s.* A plant. See தும்மட்டி.

பேய்த்தும்முட்டி, *s.* See பேய்.

வீரமுட்டி, *s.* *Vira-Saivas.* See வீரம்.

***முட்டிகை**, *s.* Gold-smith's pincers, தட்டார்குறடு; [*from Sa. Mushtika*, a gold-smith.] *P. du Bourges.*

முட்டிகைபோலமுனிபாதலைகளும்—கொட்டியுண்பாருக்குறடுபோற்கைவிடுவார். False friends, in time of prosperity, are like pincers that hold on; in adversity like tongs that let go. (நாலடி.)

முட்டு, *s.* Want, difficulty, straits, extremity, இடுக்கண். 2. Battering; butting of a beast, முட்டுகை. 3. A prop, a support, தாங்கல். 4. Utensil, as தட்டுமுட்டு. 5. A blockade, an impediment, அடைப்பு. 6. [*in combin.*] A musical instrument, as கட்டுமுட்டு. 7. A bridle, கடிவாளம். 8. The knee, முழங்கால். 9. The menses of women, தொடக்கு. 10. (*R.*) Rising ground, மேடு.

முட்டுற்றபோழ்தின். In the time of adversity. (நாலடி.)

எனக்குவெகுமுட்டாயிருக்கிறது. I am in great straits (for money).

முட்டாட்டம், *v. noun.* Stupidity, முட்டாள்தன்மை. 2. Pertinacity, or conceit arising from ignorance. (*Beschi.*) 3. (*R.*) Butting.

முட்டாட்டமாடுகிறான். He is very pertinacious.

முட்டுக்கட்ட, *inf.* To place a prop. 2. To blockade, shut up a place or an entrance, shut or beset the avenues of a town, வழியடைக்க. 3. [*prov.*] To form ridges in a field, to limit or confine within bounds, எல்லைகட்ட. 4. To form a pile of earth for plants that the water may not injure them.

முட்டுக்கட்டியாட, *inf.* To go on stilts.

முட்டுக்கட்டை, *s.* A block or stake as a prop or support.

முட்டுக்காய்த்தேங்காய், *s.* [*prov.*] A premature cocoa-nut, இளந்தேங்காய்.

முட்டுக்கால், *s.* A supporter, pedestal or beam to support an old wall or an inclined tree. 2. As முட்டிக்கால்.

முட்டுக்குத்த, *inf.* To fall upon the knees. (*Beschi.*)

முட்டுக்குநிற்க, *inf.* To be ready to butt—as beasts.

முட்டுக்கொடுத்தல், *v. noun.* Setting a beam or pole to support any heavy body.

முட்டுச்சீலை, *s.* A menstruous cloth.

முட்டுண்ண, *inf.* To be dashed against. (*c.*)

முட்டுண்டுகுனிகிறது. Ducking the head after having struck it against a lintel; *implying previous want of caution.*

முட்டுத்தொய்வு, *v. noun.* Difficulty of breathing, from pulmonary disease, or the approach of death.

முட்டுப்பட, *inf.* To be pressed, perplexed, in difficulty, or extremity as one beset by creditors, &c.

முட்டுப்பாடு, *v. noun.* Dilemma, exigency, want, குறைபாடு. 2. Evil, தீமை. (சது)

முட்டுற்றவன், *appel. n.* An ignorant, or foolish person. 2. One in want.

முட்டு, கிறேன், முட்டினேன், வேன், முட்ட, *v. a.* To thrust against, to butt, தாக்க. 2. To oppose, to hinder, தடுக்க. 3. To assault, to attack, எதிர்க்க. 4 *v. n.* To be in want, straits or difficulty, குறைபட. (*c*)

பிள்ளையைமாடுமுட்டிப்போட்டது. The ox pushed the child (with its horns).

அன்னமுட்டினுமெல்லாமுட்டும். If rice be deficient, all things will be wanting.

முட்டடம், [*neg. first per. pl.*] We shall not want. (*p.*)

முட்டிக்கேட்க, *inf.* To beg, being in want.

முட்டிக்கொள்ள, *inf.* To hit the head against something.

முட்டடை. You will not want. (*p.*)

முட்டை, *s.* Egg, அண்டம். [*See* தோற்றம்] 2. Bran, தவிடு. 3 (*fig.*) Skanda. கந்தன். 4. [*loc.*] A small spoon, சிறுகரண்டி. 5. As எருமுட்டை 6 See முட்டு, *v.*

முட்டைக்கண், *s.* [*loc.* முண்டைக்கண்.] A goggle eye, a large rolling eye.

முட்டைக்கண்ணீர், *s.* Big drops of tears.

முட்டைக்கத்தரி, *s.* A brinjal bearing egg-like, short, thick fruits.

முட்டைச்சாம்பல், *s.* Ashes of burnt cowdung.

முட்டைப்பாசி, *s.* A water-plant. See பாசி.

முட்டையிட, *inf.* To lay eggs.

முட்டையோடு, *s.* The shell of an egg.

முட்டைவடிவு, *s.* Spheroid.

எருமுட்டை, *s.* Dried cow-dung. See எரு.

முணங்கு, *s.* Subjection, obedience, அடக்கம். (சது.)

முணங்கு, கிறேன், முணங்கினேன், வேன், முணங்க, *v. n.* To be subject to, அடங்க. (சது.) 2. [*Colloq.*] To speak in a suppressed tone, குரலையடக்கிப்பேச.

முணமுணக்க-முணுமுணுக்க, *inf.* [*v. noun* முணமுணப்பு] To mutter, whisper, murmur. See மினுமினுக்க.

*முண்டகம், *s.* Lotus, தாமரை. 2. Honey of flowers; palm-tree-sap, கள். 3. A tree, Pandanus, தாழை. 4 A thorn-bush, முட்செடி. 5. A thorny plant, Solanum Indicum. 6. The forehead, நெற்றி. (சது.)

முண்டகன், *s.* An epithet of Brahma, பிரமன்.

முண்டகாசனை, *s.* Lukshmi, the lotus-seated, இலக்குமி; [*ex* ஆசனம்.] (சது.)

*முண்டம், *s.* The head, தலை. 2. The forehead, நெற்றி. 3. A shaved head, a bald pate, மழித்ததலை. 4. (*c.*) A headless trunk, உடற்குறை. W. p 665. MUN'DA. 5. A naked body, நிர்வாணசரீரம். 6. A ball or globe, உண்டை. 7. [*in anat.*] The trunk. 8. One of the Upanishads. See உபநிடதம்.

முண்டமாய்நிற்கிறான். He stands naked.

முண்டாகாரம், *s.* A headless form, or figure; [*ex* ஆகாரம்.]

*முண்டனம், *s.* Baldness; shaving, மொட்டை. W. p. 665. MUN'DANA.

*முண்டன், *s.* A bald-headed person, மொட்டைத்தலையன். 2. Barber, நாவிதன்; [*ex* முண்டம்.]

முண்டாசு, *s.* A turban, தலைப்பாகை. (*Colloq.*)

முண்டாயி, *s.* [*prov. for* மிட்டாயி.] Sweet-meats, confectionary.

*முண்டி, *s.* A barber, நாவிதன். W. p. 665. MUN'DIN. 2. As முண்டன், 1. (சது.)

முண்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To shave the head, சிரைக்க. (*p.*)

*முண்டிதம், *s.* Baldness after shaving the head, மொட்டை. (*Sa. Mun'dita.*)

*முண்டிரம், *s.* One of the thirty-two Upanishads. See உபநிடதம்.

முண்டு, *s.* An under girdle-cloth of four cubits, தண்டுவேஷ்டி. (*Travancore usage.*) 2. Obstinacy, as முரண்டு.

முண்டு, கிறேன், முண்டினேன், வேன், முண்ட, *v. n.* To be unruly, refractory; to act saucily, முரண்பெண்ண. [*limited.*]

*முண்டை, *s.* [*also* முண்டைச்சி.] A widow—as having the head shorn, except the Tengalai Vaishnuvas, விதவை. [*ex* முண்டம்.] (சது.) 2. (*R.*) The eye-ball.

முண்டைக்கண், *s.* [*loc.*] A large protuberant eye, as முட்டைக்கண்.

முண்டைமோப்பி, *s.* A widow—having her head shorn. (*Tel. usage.*)

*முதம், *s.* Pleasure, delight, உவகை. W. p. 665. MUDA.

முதலை, *s.* [*vul.* முதளை, *poet.* முசலி.] Crocodile, வன்மீன். (*c.*)—It is of two kinds, சாணாகமுதலை, செம்முக்கன்முதலை, which see.

முதலைக்கோரை, *s.* A tall grass, Cyperus dubious.

முதலைப்பூண்டு, *s.* A plant, Polygonum glabr.

முதல், *s.* The first, the beginning, ஆதி. 2. Stock, principal, fund, capital, money at interest; original cost, பணமுதல். 3. God, Deity, the First, or the Supreme Being, கடவுள். 4. Et cætera, and so on, as முதலிய. 5. The seventh case of nouns, as சுரன்முதலவந்தஉரன்மாயமாலை, the strong illusive darkness that came out of the parched ground. 6. [*as a preposition.*] From, henceforth, &c., as இதமுதல்.

முதலங்கேபோ. Go first there.

வட்டிபுமுதலுமிழந்தேன். I have lost principal and interest.

முதல்கட்டாது. The capital is insufficient.

முதலிலார்க்கூதியமில்லை. Those without a capital will be without profit.

கண்டுமுதல், *s.* Produce in kind. See காண்.

கைமுதல், *s.* Principal on hand.

பறிமுதல், *s.* Confiscation.

முதலது, *s.* That which is first, a mode of expressing, முதற்று.

முதலவன், *s.* He who is the first, as முதல்வன்.

முதலற்றுப்போக, *inf.* To be totally extinguished, *spoken of a family.*

முதலனுமானம், *s.* Inference of a future effect from a present cause. See அனுமானம்.

முதலாய், *adv.* Also, so much, even.

தண்ணீர்முதலாய்க்கேகிடையாது. There is not even water to be got here.

முதலாவது, *appel. n.* That which is first or foremost.

முதலான. And so on.

புலிகோணுப்முதலானதுஷ்டமிருகங்கள். Tigers, wolves and the like wild beasts.

முதலாளி, *s.* Proprietor, president, chief.

முதலி, *s.* The first, முதல்வன். 2. [*hon.* முதலியார்.] A title of Vellalas, and some other classes. 2. A title of rank in Ceylon.

முதலிச்சாதி, *s.* A caste, ஓர்சாதி.

முதலிடம், *s.* The first place, a place of rank.

முதலியன. Et cætera, other things.

முதலியோர், *s.* [*pl.*] The remaining persons, others, and so forth.

முதலிலனுதல், *v. noun.* Eternity. See அறுகுணம் under குணம்.

முதலெழுஞ்சனி, *s.* The tenth lunar asterism, as மகத்துச்சனி. Compare கடையெழுஞ்சனி and இடையெழுஞ்சனி.

முதலோன், *s.* The Deity, as முதல்வன்.

முதல்போட, *inf.* To lay out a capital.

முதல்முதல். In the very first, at the very outset or beginning, for the first time.

முதல்முதலறுத்தவிளைவிலே. In the very first crop of harvest.

முதல்வடி, *s.* Alcohol, முதல்வடிப்புச்சாராயம். [*limited.*]

முதல்வர், *s.* Celestials, வானோர். (சது.) 2. Sovereigns, kings, அதிபதிகள். (*p.*)

முதல்வள்ளல், *s.* The first of the three classes of persons famous for liberality. See வள்ளல்.

முதல்வன், *s.* God, He who is the first, the author and ruler of all, கடவுள். 2. An epithet applied by votaries to their respective deities. 3. A king, அரசன்.

முதல்வி, *s.* A lady of distinction, தலைவி. (*p.*)

முதல்வேதம், *s.* The Rig Veda, இருக்கு.

முதற்கண், *s.* The first place, as முதலிடம். (*p.*)

முதற்காரணம், *s.* Primary cause. See காரணம்.

முதற்காரணகாரியம், *s.* The proximate or material cause—as the clay is the cause of a குடம் or earthen pot, which, as an effect, is the clay itself transformed.

முதற்காரன், *s.* A capitalist.

முதற்கொடி, *s.* The first sprout of a creeper.

முதற்பட்சம், *s.* The first or best kind or class. 2. For the most part.

முதற்பட்சம்நீவருகிறதில்லை. You don't come at all.

முதற்பலம்—முதற்பலன், *s.* The first fruit or produce of a field.

முதற்பா, *s.* The வெண்பா stanza.

முதற்பெயர், *s.* The chief person, as முதலாளி. 2. [*in gram.*] Names or nouns denoting the stock or body; *oppos. to* சினைப்பெயர், those of parts.

முதற்பேறு, *s.* The first-born, தலைப்பிள்ளை. 2. As முதற்பலன்.

முதற்பொருள், *s.* Primary arrangements of nature. See அகப்பொருள்.

முதற்றரம், *s.* [*also* முதற்றடவை.] The first time. 2. See தரம்.

முதனாள், *s.* The first lunar mansion, அசுவினி. (சது.)

முதனிலைத்தீவகம்—முதனிலைவிளக்கு, *s.* A figure in Rhetoric. See தீவகம்.

முதனிலைத்தொழிற்பெயர், *s.* Verbal roots with a substantive meaning. See தொழிற்பெயர்.

முதனூல், *s.* A rule of the highest authority. See நூல்.

முதன்மாணுக்கர், *s.* [*also* தலைமாணுக்கர்.] Students, or pupils of the first order. See மாணுக்கர், *s.* (சுன்.)

முதன்மை, *s.* Priority, superiority, supremacy, as தலைமை.

முற்றிக்கை, *s.* [*com.* முத்திக்கை.] Blockade. See முற்றுகை.

முற்றில், *s.* [*com.* முச்சில், முச்சி.] A small winnowing fan, சிறுமுறம். 2. The sixteenth lunar mansion, விசாகம். (*சு.*)

முற்று, *s.* Entireness, completeness, முழுமை. 2. End, termination, முடிவு. 3. A finite verb, as வினைமுற்று.

முற்றுத்தொடர்மொழி, *s.* A sentence, complete in sense and grammatical in construction.

முற்றுப்பயனிலை, *s.* [*in gram.*] A finite verb.

முற்றுப்பெற, *inf.* To be finished.

முற்றுமடக்கு, *s.* [*in rhet.*] Repetition of a whole line through a stanza each time with a different meaning.

முற்றுமுரண், s. Contrast in all the feet in rhyming. See தொடை, iv. 8.

முற்றுமோனை, s. Rhyming in the first letter of all the feet. See தொடை, i. 8.

முற்றுவினை, s. A finite verb, வினை முற்று, as செய்தான், வந்தான், &c.

முற்றெச்சம், s. A finite verb used for a வினையெச்சம்.

முற்றெதுகை, s. Rhyming of the second letter of all the feet. See தொடை, iii. 8.

முற்று, கிறேன், முற்றினேன், வேன், முற்ற, v. n. To become mature, to ripen, முதிர. 2. To become hard, solid, வயிரங்கொள்ள. [*improp.* முத்த.] (c.) 3. To be finished, completed, முடிய. 4. *v. a.* To complete, to finish, முடிக்க. 5. To blockade, to shut up a port, வளைக்க. (*p.*)

காய்முற்றிப்போயிற்று. The fruit is ripe.

காரியமுற்றிப்போயிற்று. The matter has become aggravated.

வியாதிமுற்றிப்போனது. The disease is incurable.

முற்ற, *inf.* [*as adv. vul.* முட்ட.] Entirely, fully, முடிய.

முற்றநனைந்தவனுக்குஈரமில்லை. There is no wetting him who is well drenched.

வழிமுற்றஎன்கூடவந்தான். He came with me all the way.

முற்றமுடிய. *as adv.* To the close.

முற்றவிட, *inf.* To leave fruits to ripen.

முற்றவும், *adv.* Wholly, as முற்றும்.

முற்றவுணர, *inf.* To be deeply impressed.

முற்றுப்தம், s. The letter உ with its full sound—*as distinct from* ஆய்தக்குறுகரம்.

முற்றியலுகரம் — முற்றுகரம், s. The letter உ in its full quantity, unabbreviated உ—*as distinct from* குற்றுகரம், as கடு poison, கதவு, door, and not as in மதகு, sluice, உதடு, lip, &c.

முற்றியைபு, s. Rhyming in the last letter in all the feet. See தொடை.

முற்றிழை, s. A lady completely adorned.

முற்றிழாய். O thou who hast adorned thyself with perfect jewels. (*p.*)

முற்றுகை, *v. noun.* [*com.* முற்றிக்கை.] Straitness, distress, want. [*vul.* முட்டுகை.] 2. [*vul.* முத்திக்கை.] Blockade, seige.

சாப்பாட்டுக்கெனக்குமெத்த முற்றிக்கையாயிருக்கிறது. I am in great distress for want of food.

பட்டணத்தைமுற்றிக்கைபோட்டார்கள். They beseiged the town.

முற்றும். A finite verb, வினைமுற்று, as முடியும். 2. A relative future participle, as முற்றுங்காலத்தில், in ending time. 3. [*adverbially.*] Wholly, entirely, all, முழுதும். 4. [*substantively.*] The end, finis, the end of a book, கடை.

ஒருநாள்முற்றும்என்னசெய்தாய். What have you been doing a whole day?

முற்றல், *v. noun.* Any thing which has become old and hardened, the core or heart of a tree.—*oppos. to* இளசு. 2. Old age, மூப்பு. 3. Ending, முடிதல். 4. As முற்றுகை, 2.

கத்தரிக்காய்முற்றலாயிருக்கிறது. The brinjal-fruit is over-ripe [hard].

முற்றும், s. The nineteenth lunar mansion, மூலநாள். (சது.) 2. See முற்று, *v.*

முனசிப். [*Arab.*] Proper, fit, தகுந்த. முனசிப்தீர்வை. A just or reasonable tax.

•முனி, s. A holy sage, supposed to be more or less divine through rigid abstraction and mortification; a term applied to the Rishis, Brahmadicas and others, ஞானி. 2. An ascetic, தவத்தோன். 3. A Jaina deified teacher, as Argha, குரு. 4. A tree, அகத்தி, Coronilla. W. p. 666. MUNI. 5. Buddha, புத்தன். 6. The young elephant, யானைக்கன்று. 7. A bow, வில். (சது.)

அகஸ்தியமுனி, s. The sage Agastya.

சடாமுனி, s. See சடை.

முனிச்சிரேஷ்டன்-முனிபுங்கவன்-முனீசுரன்-முனீந்திரன், s. The principal or chief of the Munis, a superior Muni. 2. As Buddha.

முனிமூத்திரம், s. Salt in lumps, composed of இலேந்து, இலேவுந்து, கூர்மை, சவர்ச்சலம், சாருசம் and சாரோதகம், கல்லுப்பு.

முனி, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be angry, displeased, morose, petulant, cynical, கோபிக்க. 2 *v. a.* To dislike, வெறுக்க; [*prob. from Sa. Manyu,* anger.]

மோகத்தைமுனி. Abhor sensuality. (*Avv.*)

முனிவு, *v. noun.* Anger, கோபம். 2. Wrath, சினம். 3. Dislike, aversion, வெறுப்பு.

முனிவருமை, *v. noun. neg.* An angry temper, continued anger. (*p.*)

முனிவுசெய்ய, *inf.* To exercise wrath towards one.

முனிஷி — மூன்ஷி, s. (*Pers.*) A munshi or teacher of language. 2. As சவாப்நவீஸ்.

முனிசீப்—முன்சிவ், s. [*Arab.*] The head of the village-police. 2. The district munsiff, a native judge subordinate to the Zillah judge.

முனிசீப்உத்தியோகம், s. The office of a district munsiff.

முனிசீப்நாட்டாண்மை, s. The office of a *Natamagar,* holding police-authority.

•முனிவர், s. [*sing.* முனிவன்.] Ascetics, hermits who practise austerities and undergo bodily mortifications, தவத்தோர். 2. Heathen ascetics who wear matted hair, சடைமுடியோர்.

முனிவர், எ. The seven Rishis, சத்தரிஷிகள்: 1. அத்திரி, Atri; 2. ஆங்கிரசன், Angîrasa; 3. கௌதமன், Gaudama; 4. சமதக்கினி, Jamadagni; 5. பரத்துவாசன், Bharadvaja; 6. வசிஷ்டன், Vasishta; 7. விசுவாமித்திரன், Visvamitra;—Or according to another list, 1. அகஸ்தியன், Agastya; 2. ஆங்கிரசன், Angîrasa; 3. கௌதமன், Gaudama; 4. காசிபன், Kasypa; 5. புலஸ்தியன், Pulasthya; 6. மார்க்கண்டன், Markanda; 7. வசிஷ்டன், Vasishta.

முனிவர், ௩௧. The thirty-one Munis or distinguished persons: 1. அகஸ்தியன், Agastya; 2. அத்திரி, Atri; 3. ஆங்கிரசன், Angîrasa; 4. இரணியவன்மமுனி, Hiranya; 5. உரோமமுனி, Roma; 6. எண்டமுனி, Heranda; 7. கலைக்கோட்டுமுனி, Calaikottu; 8. காசிபன், Kasypa; 9. கௌதமன், Gaudama; 10. சத்தகுன்முனி, Sattakûn; 11. சச்சிதானந்தன், Sachchidhananda; 12. சமதக்கினி, Jamadagni; 13. சனகன், Sanaka; 14. சனற்குமாரன், Sanatkumara; 15. சுகன், Suka; 16. ததீசிமுனி, Dadhichi; 17. துருவாசன், Dhurvasa; 18. நாரதன், Nârada; 19. பதஞ்சலி, Patanjali; 20. பாரத்துவாசன், Bharadvaja; 21. பராசரன், Parasara; 22. பற்பமமுனி, Padma; 23. பிருகுமுனி, Bhrugu; 24. பிநாகிமுனி, Pinaki; 25. புலஸ்தியன், Pulastya; 26. மார்க்கண்டன், Markanda; 27. வசிஷ்டன், Vasishta; 28. வான்மீகன், Valmika; 29. விஸ்வாமித்திரன், Visvamitra; 30. வியாக்கிரபாதன், Vyakrapata; 31. வியாசன், Vyasa.

முனை, s. Point, sharpened end, tenon, edge, front, நுனி. [*Tel.* முன, கொனை.] 2. A cape, or head-land-projection, சீண்டெரிய நிலம். 3. Battle, fight, war, யுத்தம். 4. Hatred, பகை. 5. Superiority, eminence, priority, முதன்மை. 6. Boldness, audacity, துணிவு. 7. Dislike, aversion, வெறுப்பு. 8. As முனை, ெ.

முனைவிழுந்துபோயிற்று. The point is fallen off. 2. Valor has become prostrate.

முனையாய்வருகிறது. Coming up boldly, or with spirit.

அந்தமுனையிலிருந்து இந்தமுனைமட்டும்வருகிறான்... He comes from that point to this.

இவன்கத்திமுனையில்நிற்கிறான். He stands on the point of a sword; *is in haste to fight.*

முனை, ெ. The five different ways of procuring a livelihood, சீவனமுனை: 1. வாள்முனை, by the sword; 2. கொழுமுனை, by the plough; 3. எழுத்தாணிமுனை, by the style or pen; 4. கதிர்முனை, by the distaff and weaving; 5. ஊசிமுனை, by the needle.

முனைகாரன்-முனையுள்ளோன், s. A courageous person, a valiant or brave man, தைரியவான்.

முனைகுலைய, *inf.* To be dispirited. See குலை, *v.*

முனைகேடு, *v. noun.* Disrespect, disgrace, shame, insult.

முனைப்பதி, s. An encampment or a lodging place for an army. (சது.)

முனைமழுங்குதல், *v. noun.* Becoming blunt, as the edge of an instrument. 2. Becoming dispirited, losing courage.

முனைமுகம், s. The front in battle, as படைமுகம்.

முனைமுகத்துநில்லேல். Stand not in the van [*in battle*]. (*Avv*)

முனையிடம், s. A city, town, or village in a barren country, பாலைநிலத்தூர். (சது.) 2. Battle-field, போர்க்களம்.

முனை, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be angry, to show signs of indignation, as முனி. 2. To engage in battle, or a fight, போர்கலக்க. 3. (*R.*) *v. a.* To hate.

நீஎன்முனைந்துநிற்கவில்லை. Why have you not stood forward?

முனைந்தோர், *appel. n.* [*pl.*] People heated with anger, enemies, பகைவர்.

முனைவு, *v. noun.* [*as* முனிவு.] Anger, கோபம். 2. Aversion, dislike, abhorrence, வெறுப்பு. 3. Wrath, சினம். (சது.)

முனைவர், s. [*pl.*] Enemies, பகைவர். 2. Sages, ascetics, முனிவர். (சது.)

முனைவன், s. An epithet of Buddha, புத்தன். 2. Argha, அருகன். [*also* கினைந்தவன்.] 3. An enemy, பகைவன். (சது.)

முன், [adj. and adv.] Before, antecedent, previous, முதலான. 2. Beyond, next, future, இனிமேலான. 3. In presence of, in front—oppos. to பின் 4 First in importance, chief, special, முதன்மை. 5. Side, பக்கம். 6. Antiquity, பழமை. 7. The seventh case or local ablative, ஏழனுருபு 8. Over.—Note. Before the hard letters ன் is sometimes changed to ற். It is declined, as முன்னுக்கு, முன்னிலே, &c.

முன்வருங்காரியம். The thing which shall be.

கற்றோர்முன்னதற்குக்கவலார். The learned do not grieve for the past.—Note. Here முன is the seventh case.

செம்பொற்கதிரோன்முன்னெரிதீபம்போல. Like a lamp burning in the beams of the bright rayed sun. (p.)

முற்காலம், s. Former time; old time.

முற்காலத்திலிருந்தபெரியோர்கள். The illustrious of former days.

முற்குளம், s. The twentieth lunar mansion. See பூராடம். (சது.)

முற்குறிப்பு, s. Prefiguration, prototype.

முற்சடை—முன்சடை, s. Front-slope of a roof.

முற்கூறு, s. Former part, the beginning.

முற்கொழுங்கோல், s. The twenty-fifth lunar mansion, பூரட்டாதி. (சது.)

முற்கோபம்—முன்கோபம், s. Sudden anger from a slight cause. See கோபம்.

முற்கோபி—முன்கோபக்காரன் — முன்கோபி, s. An irascible person, one who is easily provoked.

முற்சனி, s. The tenth lunar mansion, மகநாள். (சது.)

முற்பகல், s. The former birth. 2. The preceding day. 3. Former time. 4. The forenoon.

முற்பக்கம்—முன்பக்கம், s. The front part.

முற்பட, inf. To precede, go before. 2. To come in front, to meet.

முற்பவம், s. The former or first birth. 2. Evils done in a former birth.

முற்பழி, s. Sin committed in a former birth.

முற்பாதி, s. The first half of any thing.

முற்பிறப்பு-முன்பிறப்பு, s. The former birth.

முன்கட்டு, s. The hands pinioned before. 2. The front rooms or buildings in a house. 3. As கைக்கட்டு, 2.

முன்குடுமி, s. Men's hair-lock tied in front.

முன்கை, s. [com. முன்னங்கை.] The arm below the elbow. See கை.

முன்கைவளை, s. A bracelet worn by females.

முன்கொம்பு, s. The pole attached to the front of a palanquin.

முன்சுவடு, s. The forepart of the hump of a beast. See சுவடு.

முன்சொல், s. Old sayings. (p.)

முன்தட்டு, s. Front beams across the head of a dhoney.

முன்தண்டு-முற்படை, s. The van of an army.

முன்பனி—முற்பனி, s. The season of evening dew, December and January. See பருவகாலம்.

முன்பன், s. He who is the first, the chief, முதல்வன்; [ex முன்பு.] (p.)

முன்பிறந்தாள், appel. n. The elder sister, அக்காள். (சது.)

முன்பின், adv. Before and behind, as usual.

எனக்குமுன்பின்றுணையில்லை. I have no one to help me.

முன்பின்செய்தபடிசெய். Do as usual.

முன்பின்னெண்ணுகிறது. Deliberating with one's self about a thing.

முன்பு, s. Antiquity, பழமை. 2. Greatness, பெருமை. 3. Strength, வலி. 4. Before, in presence of, முன். (சது.)

முன்புருவம், s. [in anat.] Anterior bicipetal ridge.

முன்போக-முன்னுக்குப்போக, inf. To go before, to advance.

முன்போல — முன்போலே— முன்னையபோலே. As formerly.

முன்மடி, s. A tuck or fold in the cloth for a pocket.

முன்மறம், s. Precipitate anger, as முற்கோபம். (p.)

முன்மறுக்க, inf. [improp. for மும்மரிக்க.] To grow vehement or passionate, உக்கிரமாகொள்ள. (R.)

முன்மறுத்துப்பேசுகிறான். He speaks with vehement anger.

முன்மாதிரி, s. Precedent, example.

முன்முகப்பு, s. The front or fore-part. See முகப்பு.

முன்முடுகுவெண்பா, s. A வெண்பா, having a quick measure in the first two feet. See முடுகு.

முன்மொழி, s. An antecedent. 2. An old saying, முதுமொழி.

முன்மொழிந்துகோடல், v. noun. An author's adopting and amplifying what has been stated by other writers. See உத்தி.

முன்வளம், s. [prov.] The front, fore-part. 2. As அணியம்.

முன்வாய், s. The lips, உதடு. 2. The opposite side to that whence the wind blows—in winnowing corn, காற்றடிக்குமறுவாய்.

முன்வாய்ப்பல், s. [com. முன்னம்பல்.] Foreteeth, cutters, incisors.

முன்றளை, s. Fastening for a beast's fore-leg; [ex தளை.]

முன்றாதை, s. A grand-father, பாட்டன்; [ex தாதை.] (சது.)

முன்றானை, s. [improp. முந்தானை.] The skirt of a person's cloth; [ex தானை.]

அடிமுன்றானை. The border of a woman's cloth worn inside.

மேன்முன்றானை. The edge of it worn upon her shoulders.

முன்றானைபோட—முன்றானைவிரிக்க, inf. To spread the skirts, lay open the skirts, as the wife to her husband.

முன்றில், s. [com. முற்றம்.] The front yard, or court yard; [ex இல்.] (p.)

முன்றூதன், s. A fore-runner; [ex தூதன்.] (Collog.)

முன்றோன்றல், s. An elder brother, தமையன்; [ex தோன்றல்.] (சது.)

முன்னங்கால், s. The fore-feet of a quadruped. 2. The skin or fore-part of the leg.

முன்னங்கை, s. The elbow, as முன்கை.

முன்னடந்தகாரியம், s. An act of former times.

முன்னடி, s. The first part; an entrance-hall in a house; [ex அடி.]

அதுமுன்னடியிலேயிருக்கிறது. It is at the entrance, not very far.

முன்னடியார், s. [pl.] Ancestors.

முன்னடியான், s. An image or statue in front of a fane, by which its tutelar god, or goddess, may be known.

ராசாவுங்கொடுத்தாலுமுன்னடியான்கொடான். Though the king may be liberal, the porter will not be. [prov.]

முன்னடைப்பன், appel. n. An obstruction which prevents chewing the cud.

முன்னடையாளம், s. A prognostic, a typical prefiguration—(R.) அடையாளம்.

முன்னணி, s. The van of an army.

முன்னணியிலேவந்தான். He came in the van of the army.

முன்னணை, s. Crib, மாட்டுத்தொட்டி. 2. A first-born child, முதற்பிள்ளை. See பின்னணை.

முன்னதாக. Before, as முன்னமே.

முன்னந்தம், s. The front-view.

முன்னந்தொடை, s. A fore-shoulder, or quarter of mutton, &c. See தொடை. 2. The front of the thigh.

முன்னமே, adv. Before, afore-time, as முன்னே.

நான்முன்னமேவந்திருக்கிறேன்...... I came some time ago.

ஏன்முன்னமேசொல்லவில்லை. Why did you not say [this] before?

முன்னம், s. Before. 2. The fore-part—as முன்னங்கால். 3. Sign, mark, குறிப்பு.

முன்னர். Before, முன். 2. s. The beginning, தொடக்கம். 3. A place, இடம். (p.)

முன்னவிலக்கு, s. A rhetorical or poetical figure. See அலங்காரம்.

முன்னவள், s. An elder sister, அக்காள். (p.)

முன்னவன், s. An epithet of Deity, applied variously, கடவுள். 2. An elder brother, தமையன். 3. The first, முதலானவன்.

முன்னவனே முன்னின்றால் முடியாதபொருளுளதோ. Will there be any thing which we cannot perform, God being with us?

முன்னவையகத்திணை, s. The rule for prognostication. See அகத்திணை. (p.)

முன்னறு—முன்னுற, inf. [as adv.] Previously, before-hand, already.

முன்னறச்சொல்லியிருக்கிறேன். I have told [him] beforehand.

முன்னுக, inf. To precede, முந்த. [used adverbially.]

முன்னுகவைத்தல், v. noun. Placing before; setting before the public.

முன்னுடி. As முன்னறு. (Collog.)

முன்னுலே. Formerly, before.

முன்னுள், s. Yesterday, former days; the former birth; [ex நாள்.] 2. As முன்பிறந்தாள்.

முன்னுள்ளவனிதன். An ancient man.

முன்னுள்ப்பேச்சு. s. Old saying. 2. A talk of yesterday. (R.)

முன்னிட, inf. To put before; to advance, to go foremost, முந்த. 2. To succeed, be successful, அனுகூலமாக. 3. To meet one, எதிர்ப்பட. 4. To let another go first. 5. To be prompt, ready, forward, in a good sense, தலைப்பட. 6. To invoke, through one's intercession, துணைக்கொள்ள.

உன்காரியமுன்னிடும். Your affair will succeed.

நான்புறப்படவும்அவன்என்னைமுன்னிட்டான். He met me as I set out.

வாசலிலேஅவனைமுன்னிட்டுவிட்டுப்போனான். At the door, he let him go in first. (Beschi.)

சுவாமிமுன்னிட்டிரும். Lord! be present and help.

ஒருவனைமுன்னிட்டுக்கொண்டுபோகிறது. Going to one in the name of another. 2. Following behind one who goes in front.

சுவாமிஉம்மைமுன்னிட்டுக்கொண்டுபோவாராக. May the Lord go before you!

முன்னிட்டி, appel. n. A crib, a manger, a trough for feeding animals, பத்தல், தொட்டி. (Beschi.)

முன்னிருப்பு, s. That which was before, goods previously acquired, முதலிருப்பு.

முன்னிருப்பிலெடுத்துச்செலவழித்தல். Taking from the property previously acquired.

முன்னிரை, s. A row of multipliers in the multiplication table—oppos. to பின்னிரை; [ex நிரை.]

முன்னிலவு, s. The moon from the crescent to the full; [ex நிலவு.] (c.)

முன்னிலை, s. The instrumental cause, நிமித்தகாரணம். 2. A female addressed in verse, by way of embellishment, as மடமுன்னிலை. 3. [in gram.] The second person, the person or thing spoken to. (சது.) 4. Help, defence, security. (R.) 5. (Colloq.) One's presence; [ex நிலை.]

அவன்முன்னிலையிலேயப்படிச்சொல்லுவாயா. Will you say so before him?

முன்னிலைக்காரன், s. A head man of the washer and carpenter tribes.

முன்னிலைப்பன்மைவினைமுற்று, s. Finite verbs of the second person plural.

முன்னிலைப்பாடு, v. noun. Bail, security, pledge, சாமீன்.

முன்னிலையசைச்சொல், s. An expletive used with the second person singular, as சென்மியோ, where மியோ is an expletive.

முன்னிளவல், s. An elder brother who is still young, தமையன். 2. The brother next to the oldest; [ex இளவல்.] (p.)

முன்னிற்க, inf. To stand before, protect, பாதுகாக்க; [ex நிற்க.]

அஞ்சாமல்வாவுனக்குமுன்னேநானுமுன்னிற்பேன். Fear nothing, but come; I will protect you.

நானுனக்குமுன்னின்றுபேசமாட்டேன்........I won't speak in your defence.

முன்னிற்பவன், appel. n. A bail. 2. One who speaks or acts for another. 3. A protector.

முன்னீடு, s. A jewel for the ear of a woman. 2. A responsible person.

முன்னும்பின்னும். Before and behind.

முன்னும்பின்னும்பார்த்துச்செய். Do it with due deliberation.

முன்னூல், s. Original law, the Veda, வேதம். See முதனூல்; [ex நூல்.]

முன்னூற்கேள்வன், s. God, the author of the law, கடவுள். (p.)

முன்னெண்ணம் — முன்னெழுச்சி, s. Thoughts of the past.

முன்னெற்றி, s. The upper part of the forehead; [ex நெற்றி.]

முன்னே. Before. See முன்னமே.

முன்னேரம், s. A little time before night, the evening twilight. 2. The forenoon—oppos. to பின்னேரம், இளம்பகல்.

முன்னேர், s. The leading team in ploughing; [ex ஏர்.]

முன்னேற, inf. To anticipate.

முன்னை, s. Previous time, முன். 2. Elder sister, அக்காள். 3. Elder brother, அண்ணன். 4. Antiquity, பழமை. (சது.)

முன்னையது, appel. n. That which was before.

முன்னையிலும் — முன்னையைப்பார்க்க. More than before.

முன்னோர், s. A king's ministers, மந்திரிகள். 2. Predecessors, ancestors, பெரியோர்.

முன்னையோர், s. As முன்னோர், 2.

முன்னொற்றி, s. A first mortgage; [ex ஒற்றி.]

முன்னோடி, appel. n. The leading demon among the devils, supposed to traverse streets in time of pestilence, முன்னோடிப்பேய். 2. A silver-stick-bearer going before a palanquin.

முன்னோன், s. God, who is before all, கடவுள். 2. Ganesa, விநாயகன். (சது.) 3. An elder brother, தமையன்.

*முன்னாதம், s. See கரலட்சணம்.

முன்னம், s. Thought, intention, கருத்து. 2. Mind, மனம். 3. A tree, Mimosa, சிவப்பிணம். (சது.) 4. See முன்.

முன்னர், s. [poetice.] Mind, மனம். 2. See முன்.

முன்னு, கிறேன், முன்னினேன், வேன், முன்ன, v. n. To precede, to come near. 2. [also உன்னு.] To think, நினைக்க. (p.)

முன்னல், v. noun. Thinking, சிந்தித்தல். (சது.) 2. Preceding, முந்துதல்.

முன்னாமை. [negative.] Non-precedence. 2. Absence of thoughts, நினைவின்மை.

முன்னை, s. [vul. மின்னை.] A tree whose leaf is used for pot-herbs and whose root is medicinal; entire-leaved Premna, Premna integrifolia; L. தழுதாழை. 2. See முன். —The different varieties are எருமைமுன்னை, காட்டுமுன்னை, பசுமுன்னை, பெருமுன்னை, which see.

மூ

மூ. A syllabic letter formed of ம் and ஊ.

மூ, adj. Antique, old. 2. Three, third, as மூ.

மூதாதை, s. A grand-father, பாட்டன்.

மூதாய், s. Grand-mother, பாட்டி.

மூதேவி, s. The goddess of ill luck, misery, or deformity,—the elder sister of Lukshmi. 2. A deformed person.

முன்கோபியின்முகத்திலேமூதேவிகுடியிருப்பாள். The மூதேவி will dwell on the face of a passionate fellow.

மூவிணை, s. Three yoke of oxen; [ex இணை.] (c.)

மூவரசர், s. The three famous kings. See அரசர்.

மூவர், s. Three persons. 2. The Triad.

அவர்கண்மூவரும். All three of them.

மூவிடம், s. [in gram.] Three places, as தன்மை, முன்னிலை, படர்க்கை. (இடம், கடை.)

மூவறிவுயிர், s. Creatures of three senses. (p.)

மூவாண்டை, s. Three years. 2. adj. Of three years; [ex ஆண்டை.]

மூவிசை, s. The three different parts in music. See இசை.

மூவிடம், s. The three persons in grammar. See இடம்.

மூவிராசாக்கள்திருநாள், s. [R. C. usage.] A festival in honor of the three wise men from the East, who came to worship Jesus at Bethlehem.

மூவிலைவேல், s. A trident, சூலம். (சது.)

மூவினம், s. The three-fold class of consonants. See இனம். 2. The three chief kinds of gregarious cattle—cows, buffaloes, and sheep or goats.

மூவுலகம், s. The three worlds. See உலகம்.

மூவுலகாளி, s. God—For this and similar compounds see under உலகம்.

மூவெயில், s. [com. முப்புரம்.] Three cities of the Asuras. See எயில்.

மூவைந்து—மூவாறு—மூவேழு—மூவெட்டு—மூவொன்பது, s. [in arithm.] Three times 5, 6, 7, 8, 9, in multiplication.

*மூகம், s. Dumbness, மௌனம். W. p. 667. Mooka. 2. [fig.] A dumb person.

மூகன், s. A demon, the name of an Asura, ஒரசுரன். (Sa. Mooka.) 2. (சது.) A dumb man, ஊமன். [Tel. usage.]

மூகை, s. A dumb person, ஊமை.

மூகையெழுத்து, s. [in gram. also ஊமையெழுத்து.] A mute letter.

மூக்கறட்டை—மூக்கிரட்டை, s. A plant, Boerhaavia procumbens, சாறணை.

மூக்கரவலை — மூக்கரவலை, s. A shrub, Prickly Ganga, or goat-rue, Tephrosia spinosa, கொள்ளுக்காய்வேளை.

மூ, க்கிறேன், த்தேன், ப்பேன், மூக்க, v. n. To become old, to be older than others, to be senior, முதுமையாக. (c.) 2. To end, முடிய.

மூத்தபிள்ளை. The first-born.

மூத்தமகன். The first-born son.

மூத்தமருமகன். A son-in-law married to the eldest daughter.

மூத்ததிருப்பதிகம், s. A small poem by புனிதவதி, a poetess.

மூத்தது, *appel. n.* That which is older than the other.

மூத்ததமோழைஇளையதகாளை. The oldest is without horns, the youngest is a bull. [*prov.*]

மூத்தவன். [*fem.* மூத்தவள்.] One who is older than others; a superior.

மூத்தார், s. [*hon.*] The husband's elder brother, புருஷன்தமையன்.

மூத்தாள், s. Elder sister, அக்காள். 2. The elder sister of Lukshmi, as மூதேவி. 3. An old woman, கிழவி. 4. A mistress, as தலைவி.

மூத்தோர், *appel. n.* [*pl.*] Old men, elders; honorable and eminent persons.

மூத்தோர்சொல்வார்த்தைஅமிர்தம். The advice given by seniors is nectar. (*Avv.*)

மூத்தோன். An elderly man, from 48 to 64. See பருவம். 2. An elder brother, அண்ணன். 3. The elder son of Siva, விநாயகன். 4. A senior.

மூப்பு, *v. noun.* Seniority, முதுமை. 2. Superiority, pre-eminence, தலைமை.

எல்லாம்அவனுடையமூப்பிலேவிட்டிருக்கிறது......All things are left to his management.

அவனெனக்குமூப்பாயிருக்கிறான். He is older than I am. 2. He is my head.

மூப்பர், s. [*pl.*] Elders in age, or dignity. 2. [*Chris. usage.*] Deacons, *commonly* சபைமூப்பர்.

மூப்பன், s. A head man of the low castes. 2. An elder, a president, தலைவன்.

மூப்பானசுவாமி, s. A principal officer in the Travancore country. (*Beschi.*)

மூப்பி, s. [*pl.* மூப்பிகள், மூப்பிமார்.] A mistress; a woman of distinction.

மூப்புமுகனை, s. [*prov.*] The influence of seniority, priority, superintendence.

மூவாமுதல், s. An epithet of the Deity, as never growing old, and never ceasing to be, கடவுள். (*p.*)

மூவாமருந்து, s. A preservative. (*p.*)

மூக்கிறைச்சி, s. A kind of herb, ஓர் பூடு.

மூக்கு, s. Nose, nostril, நாசி. 2. A bird's beak, பறவைமூக்கு. 3. Spout of a pot, or kettle, கலயத்தின்மூக்கு. 4. Lip of a cup or lamp, விளக்கின்மூக்கு. 5. Chit-point of a seed, தானியத்தின்மூக்கு.

இல்லிமூக்கு—சில்லிமூக்கு, s. A bleeding nose.

மூக்கடைப்பு, *v. noun.* Hinderance of breath through the nostrils.

மூக்கணாங்கயிறு-மூக்காங்கயிறு, s. The rope or string which is put through a bullock's nose for a bridle.

மூக்காங்கயிறுகுத்துகிறது. Perforating a bullock's nose for the string.

மூக்கந்தண்டு, s. [*com.* மூக்காந்தண்டு.] Bridge of the nose.

மூக்கரிகத்தி, s. [*poet.* குனிசி.] An instrument for nipping betel-leaves. (சது.)

மூக்கறிவு, s. Knowing by smell.

மூக்கறை, s. A person with an amputated nose; *in contempt,* மூக்கறைப்பயல்.

மூக்கறைச்சி — மூக்கறைப்பெண், s. [*masc.* மூக்கறையன்.] A woman deprived of her nose by amputation or disease.

மூக்கறையனுக்குவாழ்க்கைப்பட்டால்முன்னும்போகவிடான்பின்னும்போகவிடான். A woman whose husband has no nose can neither go forward nor backward; *applied to a fickle-minded master.*

மூக்கன், s. A man with a large nose. See காக்கைமூக்கன்.

மூக்காங்கொழுந்து—மூக்குக்கொழுந்து, s. End of the nose.

மூக்காலேபோகிறசீவன். A living being which breathes its last by the nose; *said of men in contempt.*

மூக்காலேயழுதல், *v. noun.* Snivelling, crying through the nose.

மூக்கிலி, *appel. n.* A plant, Portalaca meridiana, சொக்கனிப்பூடு. 2. As மூக்கறை.

மூக்குக்கண்ணாடி, s. [*high dialect* சுலோசனம்.] A pair of spectacles.

மூக்குக்குத்துதல், *v. noun.* Perforating the nose of a child born after the death of two previous children, to preserve its life.

மூக்குச்சளி — மூக்கூளை, s. Mucus of the nose.

மூக்குச்சாத்திரம், s. See சரசாஸ்திரம்.

மூக்குச்சிந்த — மூக்குச்சீற, *inf.* [*also* சளிசிந்த.] To blow the nose.

மூக்குத்தளுக்கு, s. A gold-ring worn in one nostril, by some women.

மூக்குத்தி, s. A nose-ornament, or jewel.

மூக்குத்திபோட்டிருக்கிறாள். She wears a nose-jewel.

மூக்குத்தூள்—மூக்குப்பொடி, s. Snuff.

மூக்குப்பிளவை, s. An ulcer on the nose.

மூக்குப்பூருதல், *v. noun.* [*vul.*] Perforating the nose.

மூக்குமயிர், s. Hair in the nostrils.

மூக்குமயிர்பிடுங்கினலேபாரங்குறையுமா. Will one's weight be diminished by pulling out the hair from the nostrils?—*said of mean savings.* [*prov.*]

மூக்குவாளி, s. A ring worn in one nostril.

மூக்குறிஞ்ச, *inf.* See உறிஞ்சு, v.

மூக்கைச்சுளித்தல் — மூக்கைநெறித்தல், *v. noun.* Turning up the nose.

மூக்கைத்தீட்டுதல். Whetting the beak as a bird.

மூக்கையுமுகத்தையுங்காட்டுதல். Showing an alluring face, as a courtezan. 2. Looking sullen, displeased, &c.

பிள்ளைமூக்கையுமுகத்தையுங்காட்டிக்கொண்டிருந்தாலேபோதும். If the child would only shew its [pretty] face and nose, it would suffice; *said by a mother after its death.*

மூக்கொற்றி, s. A gold ring set with a stone or jewel.

மூக்கொற்றிக்காய், s. The unripe fruit of the Thumbergia racemosa, used in food.

மூக்கொற்றிக்கோரை, s. A grass, Scirpus antarcticus.

மூக்கொற்றிப்பூடு—மூக்கொற்றிப்பூண்டு, s. A plant, Inula Indica.

மூங்கர் — மூங்கையர், s. [*pl.*] Dumb persons, ஊமர். (*p.*)

மூங்கில், s. [*com. used* மூங்கி.] The common graceful bambû, Bambûsa arundinacea, வேய்.—There are கல்மூங்கில், that which is hard; குழாய்மூங்கில், that with a hollow stem; also விஷமூங்கில், and வேலிமூங்கில் which see.

மூங்கிற்பாயுமூட்டுப்பெண்டாட்டியும். A bambû mat and an obstinate wife. [*prov.*]

மூங்கிலரிசி, s. The seed of the bambû freed from the husk; sometimes eaten.

மூங்கிலுப்பு, s. A medicinal salt found in certain female bambûs, composed of silex and potash, Tabasheer. [Ains. v. 1. p. 419.]

மூங்கிற்குத்து — மூங்கிற்போத்து, s. A cluster of bambû-saplings. See குத்து.

மூங்கிற்குழல்-மூங்கிற்குழாய், s. Tube of a bambû.

மூங்கிற்புதர், s. A thicket of bambû-canes.

மூங்கிற்றடி, s. [*sometimes* மூங்கிற்கழி.] A bambû-cane or stick.

பாம்புக்கிராசாமூங்கிற்றடி. A bambû-rod is a king for a snake.

மூங்கிற்றப்பை, s. [*com.* மூங்கிடப்பை.] A split bambû; [*ex* தப்பை.]

மூங்கினெல், s. The unhusked bambû-seed; [*ex* நெல்.]

மூங்கின்முத்து, s. Pearls said to be produced from the bambû. See முத்தச்சனிப்பு.

மூங்கு, s. A kind of lentil, Phaseolus mungo, சிறுபயறு. [*prob. a corrup. of Sa. Moorkha.*] (*Beschi*)

மூங்கை, s. Dumbness, ஊமை. Compare மூகம். (சது.)

மூங்கையான், s. A dumb man. (*p.*)

மூசாப்பு, s. Cloudiness, duskiness as மந்தாரம். 2. Difficult breathing, முட்டுமூச்சு.

மூசாப்பாயிருத்தல், *v. noun.* Gathering of clouds in stormy weather.

மூசாப்புவாங்குதல். The dispersing of clouds.

மூசாலே, s. Stupidity, சோம்பு. 2. That which is void of beauty, neatness, &c., அந்தசந்தமற்றது. (*p.*)

மூச, கிறேன், மூசினேன், வேன், மூச, *v. n.* To swarm, throng, cover as flies, மொய்க்க. 2. [*com.* ஊச.] To be spoiled or destroyed, கெட. (சது.)

கறிமூசிப்போயிற்று. The curry is spoiled. [*Madras usage.*]

மூசுண்டை, s. [*loc.*] A spoiled cake.

மூசல், *v. noun.* Swarming, thronging. 2. Being spoiled; dying.

மூசுமூசென, *inf.* [*also* மொசுமொசென.] To make a reiterated, craunching sound—as cattle in eating seeds, and grain, ஒலிக்குறிப்பு.

•மூசை, s. A crucible; an earthen mould for casting melted metals, மட்குகை. W. p. 669. MOOSHA.

மூச்சு, s. Respiration, breath, சுவாசம். (*c.*) 2. Life, strength, ஆண்மை.

ஈசொருமூச்சப்போடு. Give an impulse, *used in pounding.*

என்னொரேமூச்சாய்வாசிக்கிறாய். Why are you reading in one breath?

அவர்கள்முழுமூச்சாய்வந்துவிழுந்தார்கள்......They rushed on breathlessly.

எனக்குமூச்சடைக்கிறது. I have difficulty of breathing.

மூச்சடக்க, *inf.* To draw in the breath.

மூச்சடைப்பு — மூச்சுத்தாங்குதல், *v. noun.* [*also* மூச்சடைப்பான்.] Difficult and short respiration, asthma, ஓர்நோய்.

மூச்சன், *s.* [*prov.*] A powerful, strong person, பலாஷ்டிகன்.

மூச்சுக்காட்ட, *inf.* To shew signs of courage.

மூச்சுக்காட்டாமற்போ. Go without making the least noise.

மூச்சுக்குத்து, *s.* A kind of gout.

மூச்சுப்பறிய, *inf.* To escape, as air, or breath.

மூச்சுப்பிடிக்க, *inf.* [*v. noun* மூச்சுப்பிடிப்பு.] To stop, or suppress the breath; [*also* மூச்சுப்பொறுக்க.] 2. To be short of breath.

மூச்சுப்பேச்சு, *s.* [*com.* பேச்சுமூச்சு.] Talk. [*in the negative.*] Absolute silence.

அந்தஊரிலேஅதைக்குறித்தப்பேச்சுமூச்சில்லை... There is no talk of that affair in the village.

மூச்சுவாங்க — மூச்செடுக்க, *inf.* To fetch breath, to inhale.

மூச்சுவிட—மூச்செறிய, *inf.* [*v. noun* மூச்செறிவு.] To breathe, to respire.

மூச்சுவிடாமற்பேசுகிறான். He speaks without drawing his breath.

மூச்சொடுங்க — மூச்சடங்க, *inf.* To breathe short, as when dying.

*மூர்ச்சை, *s.* A swoon. See மூர்ச்சை.

*மூஷாதுத்தம், *s.* Blue vitriol, verdigris, துசு. W. p. 669. MOOSHATUTT'HA.

*மூஷிகம், *s.* A country; a rat, &c. See மூடிகம்.

மூஞ்சி, *s.* The face of a beast—as குரங்குமூஞ்சி, பன்றிமூஞ்சி; *also vul.* of children and others.

மூஞ்சியிலேகாறியுமிழ்ந்தான். He hawked and spit in his face.

மூஞ்சிசுண்ட, *inf.* To contract the face through anger or scorn.

மூஞ்சியைக்காட்ட, *inf.* To pout.

கோணல்மூஞ்சி, *s.* [*com.* கோணமூஞ்சி.] Grimace.

மூஞ்சு, கிறேன், மூஞ்சினேன், வேன், மூஞ்ச, *v. n.* [*also* மூசு.] To press, throng, swarm, மொய்க்க. (சது.)

மூஞ்சல், *v. noun.* Swarming.

மூஞ்சூறு—மூஞ்சூறு, *s.* A musk-rat, or scented mouse, சுசுந்தரி. (*c.*)

மூஞ்சூற்றுமுள்ளான், *s.* A bulbous rooted-creeper, ஓர்கிழங்குக்கொடி.

மூஞ்சை, *s.* [*vul.*] A pouting, sullen countenance, கோணியமுகம்.

மூஞ்சையன், *s.* A pouter, a sulky fellow.

*மூடம், *s.* [*also* மோடம்.] Foolishness, stupidity, மதிகேடு. W. p. 667. MOOD'HA. 2. An obscure or dark sky, மந்தாரம்.

இன்றைக்குமூடமாயிருக்கிறது.......The sky is overcast to-day.

மூடகருப்பம், *s.* A bad presentation of a child at birth, கஷ்டப்பிரசவம்.

மூடக்கொத்தான், *s.* [*com.* மூடக்கற்றான்—முடக்கொத்தான்.] A twining plant.

மூடதை—மூடத்தனம், *s.* Stupidity, dulness, ignorance. [*Sa. Mood'hata.*]

மூடர், *s.* [*sing.* மூடன்.] Foolish or ignorant persons, stupid persons. 2. Low caste persons, inferiors, கீழ்மக்கள்.

மூடாத்துமா, *s.* A dolt, fool, a stupid soul; [*ex* ஆத்துமா.]

மூடாந்தகாரம், *s.* Excessive mental darkness.

நிர்மூடன், *s.* A great fool. See நிர்.

*மூடிகம்—மூஷிகம், *s.* A rat, எலி. 2. The rat-vehicle of Ganésa, எலிவாகனம். 3. The bandicoot, as பெருச்சாளி. 4. A part of the Malyalam country between Quilon and Cape Comorin. W. p. 669. MOOSHIKA.

மூஷிகவாகனன், *s.* Ganesa, விநாயகன்.

மூடு, கிறேன், மூடினேன், வேன், மூட, *v. a.* To shut, shut in, inclose; shut the eyes, mouth, &c., அடைக்க, பொத்த. 2. To cover, hide, screen, obscure, shroud, veil; to over-lay with gold, மறைக்க. 3. *v. n.* To be filled up, covered, levelled, as—new made furrows by rain, நிரவ; [*from. Sa. Muda,* to cover.]

வாயைமூடு. Hold your tongue.

அஞ்ஞானமெங்குமூடியிருக்கிறது. Spiritual ignorance extends everywhere.

மூடினமுத்துமூன்றுலோகம்பெறும்மூடாததுமுக்கால்காசும்பெறாது A pearl kept covered [concealed] is worth three worlds, one exposed is not worth three fourths of a cash; *said of the secrets in science.* [*prov.*]

மூடி, *appel. n.* (*lit.*) That which covers; a cover, lid, top, மூடுகருவி. 2. Half a cocoa-nut, as தேங்காய்மூடி.

மூடிக்கொள்ளுதல், *v. noun.* Covering one's self. 2. [*fig.*] Being long covered, as with darkness, &c.

மூடிவைத்தல். Covering some thing. 2. Concealing secrets.

என்மூடிமூடிவைக்கிறாய்.........Why do you conceal the matter?

மூடுகுப்பாயம், *s.* [*prov.*] A mantle or long coat.

மூடுசன்னி, *s.* A species of apoplexy, catalepsy. See சன்னி.

மூடுசாந்து, *s.* A plastered roof.

மூடுசீலை, *s.* A wrapper, a cloth-cover.

மூடுசூளை, *s.* A brick-kiln.

மூடுதிரை, *s.* [*colloq.* மூடுதார்.] A coverlet, a covering cloth.

மூடுபனி, *s.* A fog, mist, haze.

மூடுமந்திரம், *s.* Secret incantations.

மூடல், *v. noun.* Covering over.

மூடை, *s.* A sack, a bag for a beast, பொதிப்பை.

மூட்டம், *s.* That which is covered, மூடியிருப்பது. (சது.) 2. A fire covered so as to yield much smoke, மூடுதழல். 3. A heap of corn covered with straw and mud, மூடுகை. 4. A bonfire, as an *Indra*-bonfire, kindled the day before the பொங்கல், போகிமூட்டம்; [*ex* மூடு, *v.*] 5. Readiness, ஆயத்தம்.

வானமூட்டமாயிருக்கிறது. It is cloudy (*R.*)

கொசுமூட்டம், *s.* A fire to smoke away musquitoes.

மூட்டங்கட்டுதல், *v. noun.* Making a pit for melting metals. 2. Setting a-going, commencing an undertaking. 3. Preparing, fitting, arranging.

மூட்டங்கலைத்தல் — மூட்டம்பிரித்தல், *v. noun.* Breaking up a covering.

மூட்டம்பண்ண, *inf.* To prepare, or make ready.

மூட்டு, கிறேன், மூட்டினேன், வேன், மூட்ட, *v. a.* To join, link, or sew together, இசைக்க. 2. To kindle, மூளச்செய்ய. 3. To cause to increase—as a flame, அதிகப்படச்செய்ய. 4. To raise a quarrel; to stir up anger, சண்டைமூட்ட. (*c.*)

இரண்டையுமூட்டித்தை. Stitch these two together.

நெருப்பைமூட்டிவிடு. Kindle the fire.

அவன்மூட்டிக்கொண்டிருக்கிறான். He is assiduously engaged.

மூட்டல், *v. noun.* Conjoining. 2. Increasing, cherishing (சது.)

மூட்டு, *v. noun.* Excitement, provocation, எழுச்சி. 2. A joint, articulation, a knuckle, பொருத்து. 3. The bridle or bit of a horse, குதிரைக்கடிவாளம். 4. (*R.*) A covering, as மூட்டம்.

அவன்மூட்டுப்பருத்தவன். He is a stout person.

மூட்டிலடித்தல். Beating upon the knuckles or joints.

மூட்டுச்சாட்டு. [*prov.*] Scandal, கோள்.

மூட்டுப்பூச்சி—மூட்டைப்பூச்சி, *s.* [*also* முசுட்டுப்பூச்சி.] A bug.

மூட்டை, *s.* Wallet, bag, sachel, knapsack; a load carried in a sack, a bale, சாமான்சுமை; [*Tel.* మూట.] 2. A bug, முசுட்டுப்பூச்சி.

மூட்டைக்காரன், *s.* A porter.

மூட்டைத்திருப்ப, *inf.* To take off, and put on again, the roof of a house. 2. To twist one's neck. (*R.*)

மூட்டைக்காரனுக்குமுழங்காலிற்புத்தி.........A porter's mind is in his knees.

மூணு, *s.* [*vul. for* மூன்று.] Three.

மூதண்டகஷாயம், *s.* See கஷாயம்.

மூதரி — மூதலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*contract. of* முதலை.] To confront. (*c.*)

அவனையெனக்குமூதலித்துவிடு. Let him speak to me in person.

மூதா, *s.* A beetle, Acarus, தம்பலப்பூச்சி. (சது.)

மூதாக்கள், *s.* See மூது.

மூதிரி, *s.* A buffalo, எருமை. (சது.)

மூதிரை, *s.* The sixth lunar mansion, as திருவாதிரை. (சது.)

மூது, *adj.* Old; mature, as முதுமை. (*p.*)

மூதணங்கு, *s.* A goddess. See காடுகாள்.

மூதறிஞர், *s.* [*pl.*] Wise men of vast knowledge.

மூதறிவு, *s.* Mature understanding.

மூதாட்கள், *s.* [*com.* மூதாக்கள்.] Fathers, ancestors, முதியோர்.

மூதாட்டி, *s.* An aged woman.

மூதாளன், *s.* An aged man, a senior.

மூதுணர்ந்தோர், *appel. n.* As முதுவர்.

மூதுணர்வு, *s.* Ripe understanding.

மூதுரை, s. An old saying, as பழமொழி. 2. The name of a moral treatise by Avvyar.

மூதூர், s. An old town. (p.)

மூதை, s. A goddess, as மூதணங்கு.

மூதை. s. A ground cleared of wood. See முதை. 2. See மூற. (p.)

மூத்தல். Being old. See மூ, v.

*மூத்திரம், s. Urine, சிறுநீர். W. p. 667. Mootra.

எனக்குமூத்திரம்வருகிறது. I feel urgency to urine.

மூத்திரக்கிருச்சம், s. Straugury, நீர்க்கட்டு; [ex கிருச்சம், pain.]

மூத்திரக்குடுக்கை, s. A vessel of urine; *said of one incontinent of urine.*

மூத்திரக்குளவி, s. A kind of hornet said to sip urine.

மூத்திரங்கழிய, inf. To urine involuntarily.

மூத்திரசங்கம், s. Flux of urine, diabetes, நீரிழிவு.

மூத்திரபுடம், s. The abdomen, the lower part of the belly, அடிவயிறு.

மூத்திரமார்க்கம், s. [in anat.] The urethra.

மூத்திரம்பெய்ய, inf. [com. மூத்திரம் பேய] To make water.

மூத்திரவிசர்ச்சனி, s. [in anat.] A urinary muscle, *Accelerator urinæ.*

மூத்திராசயம் — மூத்திரப்பை, s. The urinary vessel or bladder; [ex ஆசயம்.]

முப்தி—முப்தி, s. [Arab.] A Mohammedan law officer, a *mufti.*

மூப்பு, s. Eldership, &c. See மூ, v.

மூய், கிறேன், ந்தேன், வேன், மூய, v. a. To cover, மூட. (சது.)

மூய்தல், v. noun. Covering, மூடல்.

மூரல், s. Teeth, பல். 2. Laughing, smiling, சிரிப்பு. 3. Boiled rice, சோறு. (சது.)

மூரல்செய்ய, inf. To laugh, சிரிக்க. (p.)

மூரி, s. Laziness, apathy, indolence, சோம்பல். 2. An ox, a bullock, எருது. 3. A buffalo, எருமை. 4. A crack, a breach, செறிவு. 5. Antiquity, oldness, பழமை. 6. Greatness, பெருமை. 7. Strength, வலி. (சது.) 8. Unevenness of a palm-leaf, ஓலைமூரி.

மூரிமுரித்தல், v. noun. Stretching one's self, நெட்டைமுறித்தல்.

மூரியோலை, s. [also முறியோலை.] An uneven palm-leaf, முடக்கோலை.

*மூர்க்கம், s. Foolishness, ignorance, stupidity, மூடத்தனம். W. p. 667 Moorkha. 2. Rage, fury, wrath, violence, force, சண்டகோபம். 3. Obstinacy, opposition from hatred, சலஞ்சாதிப்பு. 4. An earth-worm, a belly-worm, நாகப்பூச்சி.

அவனுடையமூர்க்கமெல்லாமடங்கிப்போய்விட்டது... His mettlesomeness is reduced.

சதைமூர்க்கம், s. Lustiness, stoutness.

மூர்க்கக்குதிரை, s. A vicious horse.

மூர்க்கத்தனம்—மூர்க்ககுணம், s. Obstinacy, opposition.

மூர்க்கவெறி, s. Fury, ungovernable passion.

மூர்க்கர், s. [sing. மூர்க்கன்.] Angry persons. 2. (சது.) Low, ignorant people, கீழ்மக்கள்.

மூர்க்கரோடிணங்கேல். Join not with vicious persons. (Avv.)

மூர்க்கனுமுதலையுங்கொண்டதுவிடா. An obstinate man and a crocodile will not lose hold of what they have seized. [prov.]

மூர்க்கன், s. A kind of snake. See கொம்பேறிமூர்க்கன். 2. See மூர்க்கர்.

மூர்க்கை, s. An obstiuate woman.

*மூர்ச்சனம்—மூர்ச்சனை, s. Swooning, loss of thought—as மூர்ச்சை. W. p. 667. Moorchana.

*மூர்ச்சனை, s. A tone or semitone of the gamut, இராகஞ்சைவினிலை.

மூர்ச்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To swoon away, to fall into a swoon.

மூர்ச்சிப்பு, v. noun. A swoon, a swooning, a fainting fit, loss of consciousness.

*மூர்ச்சை—மூச்சை, s. Fainting, loss of consciousness, அறிவுமயக்கம். W. p. 667. Moorch'ha.

அவன்மூர்ச்சையாய்க்கிடக்கிறான். He is lying in a swoon.

மூர்ச்சைதீர்த்துவிடுமருந்து. A medicine to remedy a swoon.

மூர்ச்சைதெளிந்தெழுந்திருக்கிறது. Recovering out of a swoon and rising.

மூர்ச்சைவாயு, s. A wind in the body supposed to cause swooning.

*மூர்த்தம், s. A division of time, two Hindu hours, இரண்டுநாழிகைப்பொழுது. 2. [vul.] One-thirtieth of a natural day, or forty-eight minutes. 3. [in astrol.] A propitious time. See முகூர்த்தம். 4. That which has form, figure, shape, or body. See மூர்த்தி. 5. The head, தலை. W. p 668. Moorddhan.

அஷ்டமூர்த்தம் or மூர்த்தம், அ. The eight forms assumed by Siva in manifesting his nature and perfections: 1. பூமி, the earth; 2. நீர், water; 3. தேயு, fire; 4. வாயு, wind; 5. ஆகாயம், air; [These five are also called, பஞ்சபூதம், five elements.] 6. சூரியன், The sun; 7. சந்திரன், the moon; 8. ஆன்மா, the soul.

*மூர்த்தன்னியம், s. Excitement, animation, உணர்ச்சி.

*மூர்த்தி, s. The body, figure or shape, உடல், உருவம். W. p. 668. Moortti. 2. A form of deity, தேவன். 3. One of the five feminine forms of Siva, corresponding to சத்திபேதாதம் 4. Argha, அருகன். 5. Siva, சிவன். 6. Buddha, புத்தன்.

உம்முடையமூர்த்திவந்ததால். By your gracious auspices; (lit.) by your forms. (R.)

மும்மூர்த்திகள், s. The Hindu Triad. See மு, adj.

மூர்த்திகரம், s. Divinity, divine nature, essence, தெய்வீகம்.

மூர்த்திகன், s. Kumara, the younger son of Siva, குமரன். 2. Bhairava, a form of Siva, வைரவன்.

மூர்த்திகரிப்பிக்க, inf. To put on a form. 2. To inspire an image with its god; to consecrate an image.

மூர்த்திமான், s. Deity in any form of body.

*மூர்த்தினி, s. The head, தலை. 2. [in geom.] The base. W. p. 668. Moorddhan.

*மூலம், s. A root or bulb, the root of a tree, &c., வேர். 2. Origin, commencement, ஆதி. 3. Cause, foundation, instrumentality, காரணம். 4. The nineteenth lunar asterism, containing four stars of the scorpion's tail, மூலநாள். 5 Text of a book, உரையில்லாப்பாடம். W. p. 668. Moola. 6. A disease, the piles, hemorrhoids, மூலரோகம். 7. The first region of the human body. See மூலாதாரம்.—Note. Of the piles are, இரத்தமூலம், bleeding piles: உள்மூலம். Tenesmus; சீமூலம், piles attended with discharge of matter; புறமூலம்—வெளிமூலம், external hemorrhoid; வறள்மூலம், costiveness.

அவன்மூலமாய். By his means.

இவனேயதற்குமூலம். He is the cause of it.

பணமேயகங்காரமூலம். Money is the root of pride.

அஷ்டமூலம். The eight different medicinal roots, viz.: 1. சுக்கு, dry ginger; 2. அரத்தை, of two kinds, சிற்றரத்தை, Alpinia Galanga minor, பேரரத்தை, Alpinia Galanga major; 3. செவ்வியம், Piper nigrum; 4 சித்திரமூலம், Plumbago Zeylanica; 5. கண்டுபாரங்கி, சிறுதேக்கு, a kind of medicinal root; 6. கோரைக்கிழங்கு, Cyperus juncifolius; 7. நன்னாரிவேர், Indian Sarsaparilla; 8. காஞ்சொறிவேர், Tragia involucrata.

தசமூலம். Ten kinds of medicinal roots used in a tonic medicament: 1. வாகை, Mimosa flexuosa; 2. முல்லை, Jasminum angustifol; 3. பாதிரி, Bignonia chelenoides; 4. நெருஞ்சி, Tribulus terrestris; 5. பேராமுட்டி, Pavonia odorata; 6. குமிழ், Cratæva religiosa; 7. சிற்றாமுட்டி, Pavonia Zeylanica; 8. சிறுவழுதலை, Solanum Indicum; 9. கண்டங்கத்தரி, Solanum Jaquini; 10. குமிழ், Gmelina Asiatica. (R.)

பஞ்சமூலம். Five kinds of medicinal plants, called together, தசமூலம், in two classes. I. சிறுபஞ்சமூலம், the minor kind: 1. கண்டங்கத்தரிவேர், Solanum jacquini; 2. சிறுவழுதலைவேர், Solanum Indicum; 3. சிறுமல்லிவேர், Jasminum angustifol; 4. பெருமல்லிவேர், Jasminum undulatum; 5. நெருஞ்சிவேர், Tribulus terrestris. II. பெரும்பஞ்சமூலம், The major kinds: 1. வில்வவேர், Cratæva religiosa; 2. பெருங்குமிழ், Gmelina tomentosa; 3. தழுதாழை, Celerodendron phlomoides; 4. பாதிரிவேர், Bignonia chelenoides; 5. வாகை, Mimosa flexuosa. (சது).—Note. For five other medicinal roots, see பஞ்சமூலவைரவம் under வைரவம்.

மூலகந்தம், s. A grass, Andropogan muricatum, வெட்டிவேர்; [ex கந்தம், fragrance.] 2. The roots of trees and plants.

மூலகம், s. A root, கிழங்கு. 2. The radish—as முள்ளங்கி. (Sa. Moolaka.)

மூலகாரியம், s. The first, prominent, principal thing.

மூலகுணம், s. An irascible disposition.

மூலக்கடுப்பு, v. noun. Pain from piles. See கடுப்பு.

மூலக்கரப்பன், s. A spreading eruption.

மூலக்காரன், s. One who has the piles. 2. [com. மூலகுணக்காரன்.] A hasty tempered man.

மூலக்கிரந்தி, s. A kind of disease from morbid humors in the body.

மூலக்கூறு, s. The radical parts of any substance; or its essential nature.

மூலக்கிராணி, s. Hemorrhoids or piles with flux. See கிராணி.

மூலக்கொதி, s. A kind of disease or pain from the piles, said to cause peevishness, and anger.

மூலசம், s. All the vegetable productions which have roots or a bulb, [ex சம்.]

மூலச்சூடு, s. As மூலக்கொதி.

மூலச்சோதி, s. The original or primeval light, i. e. God, கடவுள்.

மூலதனம்—மூலத்திரவியம், s. Capital or stock, முதற்பணம். 2. A treasure accumulated by ancestors, பிதிரார்ச்சிதம்.

மூலதரம்பம், s. A Sanscrit treatise on Architecture, சிற்பநூல்.

மூலதத்துவம், s. Principle, பிரகிருதி.

மூலத்தானம்—மூலஸ்தானம், s. The interior of a temple. See கர்ப்பக்கிரகம். 2. A king's residence, அரண்மனை.

மூலத்துருவம், s. Epoch-longitude of a planet. See துருவம்.

மூலநாள், s. The nineteenth lunar mansion, as மூலம்.

மூலநோக்காடு—மூலநோய்—மூலவியாதி, s. The piles.

மூலபஞ்சாட்சரம், s. The five mysterious letters, சிவாயநம, a Saiva formula.

மூலபதம், s. The root of a word. See பிண்டம்.

மூலபலம்—மூலப்படை, s. The main body of an army.

மூலபலாதிகள், s. Roots, fruits, &c., eaten by ascetics in forests; [ex பலம், fruits et ஆதி, first.]

மூலபாடம், s. An original text without a commentary.

மூலபாடை—மூலபாஷை, s. The original language—said by Buddhists to be the Pali.

மூலப்பகுதி—மூலப்பிரகிருதி, s. Maya as the cause of visible creation.

மூலப்பொருள், s. The original or first cause, God, கடவுள். (p.)

மூலமந்திரம், s. The chief mantra of each sect, as distinguished from the Gayatri common to all, especially to the brahmans.

மூலமலம், s. The original principle of good and evil, causing successive births. See ஆணவம்.

மூலமுளை, s. A hemorrhoidal shoot.

மூலவாயு, s. Wind in the intestines.

மூலவாயுவையெழுப்புதல், v. noun. Driving upwards the internal wind.

மூலவிக்கிரகம், s. The chief or stationary idol in a temple, usually of unwrought black granite—oppos. to உற்சவமூர்த்தம்.

மூலவிருள், s. The original darkness of the soul. See ஆணவம்.

மூலவேர், s. The first or principal root of a tree, or its stem.

மூலாக்கிரம், s. The root and the top. See ஆமூலாக்கிரம்.

மூலாக்கினி, s. The warmth of the stomach, as சடராக்கினி. 2. A technical term of Saiva-yogis.

[illegible]. I feel very hungry.

[illegible]. If I am exasperated it will appear.

மூலாக்கினியையெழுப்புதல். Urging the internal heat towards the head.

மூலாசனம், s. The eating of roots; [ex அசனம்.]

மூலாட்சரம், s. [poet. மூலாக்கரம்.] The primitive letter from which all the letters of the alphabet are derived.

மூலாதாரம், s. The first region of the human body, the posteriors including the hip. See ஆதாரம்.

மூலி, s. Any plant. 2. A tree as having roots, வேருடைமரம். (Sa. Moolin.) 3. A medicinal root, as மூலிகை.

மூலிகம்—மூலிகை—மூலிகங்கள், s. The root of a tree, also respectively roots of trees and shrubs for medicine.

வனமூலிகை, s. Roots of the open fields. See வனம்.

*மூலியம், s. Price, விலை. W. p. 668. Moolya. 2. [com. for மூலம்.] Means, cause.

இதையாருடையமூலியமாய்வாங்கினாய் ..... Through whom did you buy this?

மூலை, s. Corner, angle, கோணம். [Tel. மூல.] 2. A house, வீடு. 3. One of the intermediate points of the compass.

[illegible]. He tries to drag one from the house, i. e. into a quarrel.

[illegible]. I took my bed in a corner. [privately.]

தென்கிழக்குமூலை. South-east.

தென்மேற்குமூலை. South-west.

வடகிழக்குமூலை. North-east.

வடமேற்குமூலை. North-west.

மூலைக்காற்று, s. Wind blowing from an intermediate point.

மூலைக்குடா, s. A distant room in a large house, a place or corner in a large field.

மூலைக்குமுட்டப்படுக்க, inf. To be fit for nothing, to be cast aside.

மூலைக்கை, s. A beam from a corner to the ridge of a roof.

மூலைத்திசை, s. Intermediate points of the compass, distinct from நேர்த்திசை.

மூலைமுடுக்கு, s. A crooked way, a nook.

மூலையரம், s. A three-sided rasp.

மூலைவோட, inf. To run out too far as a corner, to run out of square.

மூலைவோட்டம்—மூலைமாறுகல், v. noun. A diagonal extending out of square.

மூலைமாறுக்கு, s. A diagonal position.

மூலைவேர், s. The root which runs in a diagonal direction.

மூழ், கிறேன், மூழ்ந்தேன், வேன், மூழ, v. n. To end, முடிய. (சது.)—For similar compounds, see முழு.

மூழி—மூழை, s. A ladle made from the half-shell of a cocoa-nut, சிரட்டை. 2. A spatula, துடுப்பு. 3. A churning stick, மத்து. (சது.)

மூழ், s. [prov. corrup. of முகிழ்.] The opening bud of a flower.

மூழ்கு, கிறேன், மூழ்கினேன், வேன், மூழ்க, v. n. [poetic form of முழுகு.] To bathe, submerge, rise above and cover as water. 2. To sink as a ship, அமிழ்தல். 3. To be ruined, கெட.

மூழ்கல், v. noun. Bathing. (சூடா.) 2. Sinking. 3. Perishing.

மூழ்த்து, கிறேன், மூழ்த்தினேன், வேன், மூழ்த்த, v. a. [com. முழுத்த.] To press or heap upon, அமிழ்த்த வைக்க. (சது.)

*மூளி, s. A person defective in any part or member, உறுப்புக்குறை. 2. Anything split or broken, பின்னமானது. 3. [fig.] One who wears no jewels in the ear.

மூளிக்காதுடனேவந்தாள் .....She came with naked ears.

மூளிக்காதன், s. An earless person. 2. [fig.] A மூளி man, as மூளி, 3.

மூளிக்காதுள்ள. Earless.

மூளிக்குடம், s. A pitcher broken at the mouth.

மூளிநாய், s. A dog with cropped ears.

மூளிமுக்காடு, s. A female's hood covering only the head, distinguished from முக்காடு.

மூளியுதடு, s. A hare-lip, &c. See உதடு.

மூளியோடு, s. A chipped tile.

மூளு—மூள், கிறேன், மூண்டேன், வேன், மூள, v. n. To kindle, to catch fire, கொளுந்த. (c.)

எசமானுடையகோபம்வேலைக்காரன்மேல்மூண்டது . . . . The master's wrath was kindled against his servant.

மூளவைக்க. Set it on fire.

மூளல்—மூளுதல், v. noun. Kindling as fire, anger, &c.

மூளை, s. Brains, marrow, medullary substance as a constituent part of the body. See தாது. (c.)

மூளையைச்சிதறடிக்க, inf. To dash out another's brains.

மூளைவறண்டவன், appel. n. An eccentric man, (lit.) one whose brains have become dry.

மூன்று, s. [adj. and s. vul. மூணு.] Three.

மூன்றக்கினி, s. The three household fires, as முத்தீ.

மூன்றிலொருகூறு, s. A third part.

[illegible]. See [illegible].

மூன்றவத்தை, s. Three states of the mind, as திரிகுணம்.

மூன்றாங்கட்டு, s. The third and last bandage to a broken limb—a phrase implying a decisive opinion.

மூன்றாங்கால், s. The first foot of the marriage பந்தல், which is set up on the third day before the wedding, a lucky day—the third, fifth or seventh being always chosen. 2. Consanguinity of the third degree. (c.)

மூன்றாம்பாட்டன், s. [com. முப்பாட்டன்.] The grand-father's grand-father.

மூன்றாம்முறைக்காய்ச்சல், s. Tertian fever.

மூன்றாமடிக்க, inf. To fold three times.

மூன்றாவது, appel. n. That which is third. 2. [as an adv.] Thirdly.

மெ

மெ. A syllabic letter formed of ம் and எ.

மெச்சு, கிறேன், மெச்சினேன், வேன், மெச்ச, v. a. [also மெய்ச்ச.] To admire greatly, to wonder, வியக்க. 2. To praise, to extol highly, to flatter, புகழ. 3. To esteem, மதிக்க.

தன்னைமெச்சிக்கொள்ளுகிறான்.........He boasts himself.

மெச்சாதவர்கள், appel. n. Welcome guests, friends, சிநேகிதர்.

மெச்சல்—மெச்சு, v. noun. Approbation, commendation, உவப்பு.

மெட்டு, s. Rise or fall in music, a musical interval, இசைமெட்டு. 2. The bridge of a fiddle, வயிலின்மெட்டு. [Tel.] 3. Wood or jungle which surrounds a village, கிராமத்தைச்சூழ்ந்தகாடு. (Beschi.) 4. A place where toll, or custom is paid, ஆயத்துறை.

பெரியமெட்டு, s. The chief place where custom is paid.

மெட்டுச்சேவகன், s. [sometimes மெட்டுக்காரன்.] The keeper of the entrance of such a place; also a toll-gatherer. (Govt. usage.)

•மெது-மெதுவு, s. [a corrup. of மிருது.] Softness. 2. Bluntness of an edge, &c. 3. Gentleness, mildness. (c.)

மெதுவாக்க, inf. To make soft, to soften.

 வெளிச்சங்காட்ட, inf. To show a light, as at sea. 2. To brandish a torch in order to illuminate one's path. 3. To shine. 4. To appear, as a light.
 வெளிச்சமான, adj. Bright. 2. Clear, evident.
 வெளிச்சம்போட, inf. To make things appear in a favorable light, to make false pretensions, used in cant.

வெளிது. [symb. appel.] That which is white; [ex வெள்] (p.)

வெளில், s. Squirrel, அணில். 2. A stake for tying a beast, கட்டுத்தறி. 3. A post to which elephants are tied, யானைத்தறி. 4. A stake to which a churning stick is fastened, தயிர்கடைமத்து. 5. Whiteness, வெண்மை. (சது.)

வெளிவிருத்தம், s. A kind of stanza. See பா.

வெளிறு, s. Ignorance, அறிவின்மை. 2. A tree, Cordia, நறுவிலிமரம். 3. A tree having no core, வயிரமில்லாமரம். 4. Whiteness, வெண்மை. (சது.)
 வெளிறர், s. [pl.] Ignorant men, அறிவில்லார். (சது.)
 வெளிற்றுமரம், s. Trees without a core, called அலிமரம்.
 வெளிற்றுரை, s. An unmeaning word, ignorant notions, வெற்றுரை.

வெளிறு, கிறது, வெளிறினது, ம், வெளிற, v. n. [com. வெளிர்ப்போக.] To grow white, வெண்மையாக. (c.)

வெளு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To whiten, to bleach, wash clothes, வெள்ளையாக்க. 2. [fig.] To drub, அடிக்க. 3. க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To dawn, விடிய. 4. To become white, வெண்மையாக. (c.)
 அவனெனக்குவெளுக்கிறதில்லை. He does not wash my clothes.
 அவனைநன்றாய்வெளுத்துவிட்டேன். I heartily beat him.
 கிழக்குவெளுக்கிறது. The day breaks (lit.) the east dawns.
 வெளுத்ததுணி, s. Any piece of cloth that is washed, clean cloth.
 வெளுத்துக்காட்ட, inf. To grow pale or white.
 வெளுத்துப்போயிற்று. It grew pale.
 வெளுப்பு, v. noun. Whiteness, வெண்மை. 2. Paleness, as of the face from sickness, முகவெளுப்பு. 3. The dawn of day, விடியல்.

வெளுவெளுக்க, inf. To become whitened, or pale, வெளுத்துவர.

வெளேரென, inf. To appear very white at a distance. (c.)
 வெளேல்வெளேலென்றிருக்கிறது. It is very white.

வெள், adj. White; the root of வெண்மை, and வெள்ளை.
 வெட்பாடம், s. [prov.] A lesson learnt merely by rote, as வாய்ப்பாடம்.
 வெட்பாலை, s. A plant. See பாலை.
 வெட்பாவட்டை, s. A species of பாவட்டை plant.
 வெள்வரி, s. Cowries, small shells, பலகறை. (சது.)
 வெள்வெடி, s. Blank cartridge, சத்தவெடி.
 வெள்வெங்காயம் — வெள்ளைவெங்காயம், s. As வெள்ளுள்ளி.
 வெள்வெட்சி, s. A plant. See வெட்சி.
 வெள்வேலன் — வெள்வேலோன், s. A king, he who bears the bright lance; [ex வேல், a spear.]
 வெள்வேல், s. A species of வேல் tree, Acacia leucophlœa. Roxb.
 வெள்ளடி, s. Any thing plain. 2. Simplicity.
 வெள்ளடிச்சேவல், s. A fighting cock with spurs uncut.
 வெள்ளலரி, s. The white oleander. See அலரி.
 வெள்ளல்லி, s. The white water lily. See அல்லி.

வெள்ளறிவு, *s.* Superficial knowledge, simplicity, பேதமையறிவு.

வெள்ளறிவன், *s.* A person of little wit. (பஞ்)

வெள்ளறுகு, *s.* A plant, Exacum hyssopifolium. [*ex* அறுகு.]

வெள்ளாடு, *s.* A goat. See ஆடு.

வெள்ளாட்டுக்கடா, *s.* A he-goat.

வெள்ளாட்டுக்குட்டி, *s.* A kid.

வெள்ளாத்தை, *s.* A large kind of snake, ஓர்மலைப்பாம்பு. (*Old. Dic.*)

வெள்ளாமை, *s.* The white sea-turtle. See பறையாமை.

வெள்ளாம்பல், *s.* The white water-lily. See ஆம்பல்.

வெள்ளாவி, *s.* Steam used for cleansing or bleaching clothes. (*c.*)

வெள்ளாவிகட்ட — வெள்ளாவிவைக்க, *inf.* To put clothes in or over a pot for steaming or boiling.

வெள்ளாவிரை, *s.* A kind of ஆவிரை shrub.

வெள்ளிடி, *s.* Any evil coming suddenly like the thunder-bolt of summer clouds.

வெள்ளிடை, *s.* An open place or field, வெளி. (சது.)

வெள்ளிலை, *s.* The betel-leaf, வெற்றிலை.

வெள்ளிறு—வெள்ளிறுமீன், *s.* A fish. See வெண்மீன்.

வெள்ளீயம், *s.* Pewter; கல்லீயம்.

வெள்ளீரல், *s.* The lungs, வெள்ளையீரல்.

வெள்ளுப்பு, *s.* White salt.

வெள்ளுருட்டு, *v. noun.* Mere frightening, threatening.

வெள்ளுழவு. Ploughing for sowing while the land is not too dry or wet.

வெள்ளுழவுப்பயிர், *s.* Young grain in land that was properly moist when the seed was sown, so that the furrows are visible.

வெள்ளுள்ளி, *s.* Garlic. Allium sativum.

வெள்ளுமத்தை, *s.* A kind of datura. See ஊமத்தை.

வெள்ளெருக்கு, *s.* A white species of milky shrub. See under எருக்கு.

வெள்ளெருது, *s.* A white ox on which Siva rides. See நந்தி.

வெள்ளெலி, *s.* A white kind of rat.

வெள்ளெலும்பு, *s.* A blanched bone.

வெள்ளெழுத்து, *s.* Purblindness. See சாலேசரம்.

வெள்கு, கிறேன், வெள்கினேன், வேன், வெள்க, *v. n.* To fear, அஞ்ச. 2. To be ashamed, வெட்க. (*p.*)

வெள்கல், *v. noun.* Being afraid. 2. Bashfulness, வெட்கம். (சது.)

வெள்ளம், *s.* An inundation, a flood, a deluge, a strong current, நீர்ப்பெருக்கம். 2. Sea, கடல். 3. Abundance, மிகுதி. 4. A number, ஓரெண். (சது.) 5. [*colloq.*] Truth —*oppos. to* கள்ளம், மெய்.

ஆற்றிலேவெள்ளம்வருகிறது. There is a fresh current in the river.

இதுபோதும், வெள்ளம். It is more than enough.

எத்தனைவெள்ளஞ்சேனை. How many வெள்ளம் of armies!

இதுகள்ளமாவெள்ளமா Is it true or false?

வெள்ளக் ... *s.* Total inundation of a place or land.

வெள்ளச்சேதம், *s.* Loss by inundation.

வெள்ளமெடுக்க, *inf.* To overflow with water.

வெள்ளம்போட, *inf.* [*prov.*] To inundate, to deluge.

வெள்ளன், *s.* An honest man.—*oppos. to* கள்ளன்.

வெள்ளரி, *s.* A kind of melon, Cucumis sativus. (*c.*)

காட்டுவெள்ளரி, *s.* A variety. See under சாடு.

வெள்ளாஞ்செட்டி. See வெள்ளான்.

வெள்ளாட்டி, *s.* A slave-girl, a female slave, அடிமைப்பெண். (சலடி.) 2. A female servant, வேலைப்பெண்.

வெள்ளாண்மை, *s.* [*com.* வெள்ளாமை.] Cultivation, tilling the ground. 2. Corn nearly ripe in the field.

வெள்ளாழன் — வெள்ளாளன், *s.* [*also* வேளாளன். *fem.* வெள்ளாழச்சி.] A man of the agricultural tribe, பூவைசியன். (*c.*) There are different varieties of this tribe, சொல்லைகட்டிவெள்ளாழர், சைவவெள்ளாழர், தருகவெள்ளாழர், சந்தானவெள்ளாழர், சோழியவெள்ளாழர், பாண்டிவெள்ளாழர், மலைமாவெள்ளாழர்; see these.

வெள்ளான், *s.* A *Vellala*, as வெள்ளாழன்.

வெள்ளான்குடி, *s.* [*com.* வெள்ளாங்குடி.] A village of farmers.

வெள்ளான்செட்டி, *s.* [*com.* வெள்ளாஞ்செட்டி.] A *chettie* man among agriculturists, a trading *Vellala*.

வெள்ளான்பிள்ளை, *s.* [*com.* வெள்ளாம்பிள்ளை.] A subdivision of the agricultural tribe.

வெள்ளி, *s.* Silver, வெண்பொன். 2. The planet Venus, சுக்கிரன். 3. Friday, as வெள்ளிக்கிழமை. (*c.*) 4. Whiteness, வெண்மை. (சது.)

வெள்ளியினன்றுபோனாள். She set out on a journey on Friday, *deemed inauspicious for a woman.*

வெள்ளிக்காறு, *s.* Silver in bars.

வெள்ளிக்கிழமை, *s.* Friday.

வெள்ளிநகை, *s.* Silver-jewels.

வெள்ளிநாணயம், *s.* Silver-coin.

வெள்ளிப்பணிதி, *s.* Wrought silver-plate.

வெள்ளிநிமிளை, *s.* Silver-colored bismuth.

வெள்ளிப்பாளம், *s.* Silver in mass.

வெள்ளிபூச்சு, *s.* Silver-plating.

வெள்ளிபூத்தல், *v. noun.* Rising of the stars, especially Venus.

வெள்ளிப்பிரிவு, *s.* The declination of the planet Venus.

வெள்ளிமடந்தான்கெண்டை, *s.* A kind of கெண்டை fish.

வெள்ளிமலை, *s.* Kylasu; the silver-mountain, as வெண்மலை, &c. கைலாசம்.

வெள்ளிக்கோல், *s.* A steel-yard, ஓர் நிறைகோல். (*c.*)

தனியேசந்தைக்குப்போனநாய்வெள்ளிக்கோலாலடிபட்டுவரும். A dog which goes alone to the market will be beaten with a steel-yard.

வெள்ளில், *s.* Wood-apple-tree, விளா. 2. A bier, பாடை, சூர்ப்பி. (சது.)

வெள்ளிலோத்திரம், *s.* The bark of the above, விளாம்பட்டை.

வெள்ளென, *adv.* Early in the morning; swiftly, in haste. (*c.*)

அதிகவெள்ளெனவா. Come very early in the morning.

வெள்ளை, *s.* Whiteness, வெண்மை. 2. (*fig.*) Plain-heartedness, transparency, apparentness, தெளிவு. 3. Chunam, சுண்ணாம்பு. 4. *Fluor albus,* the whites, வெட்டை. 5. Clothes washed by a *dobie*, வண்ணான்வெள்ளை. 6. Conch or chank, சங்கு. 7. A goat, வெள்ளாடு. 8. A kid, வெள்ளாட்டுக்குட்டி. 9. Silver, வெள்ளி. 10. White lead. 11. A kind of stanza, as வெண்பா; [*ex* வெள்.]

இதுதூயவெள்ளையாயிருக்கிறது. It is pure white.

வெள்ளைக்குள்ளேகள்ளமில்லை. A pure person is without fraud. [*prov.*]

வண்ணான்வெள்ளைகொண்டுவரவில்லை. The washerman did not bring the clothes clean.

அவளுக்குவெள்ளையாயிருக்கிறது. She has a flux of the whites.

வீடுவெள்ளையடித்திருக்கிறது........The house is white-washed.

பாட்டுவெள்ளையாயிருக்கவேணும். The poetical composition must be plain.

வெள்ளைகொடுக்கவினைதீரும்.........By giving chunam, sins will be propitiated. [*prov.*]

வெள்ளைக்கரடி, *s.* A white bear.

வெள்ளைக்கரு, *s.* White of an egg. See கரு.

வெள்ளைக்கர்ப்பூரம், *s.* Crude camphor.

வெள்ளைக்கவி, *s.* A eulogist who gets another to begin his poem. 2. An ode thus composed.

வெள்ளைக்காகிதம், *s.* Blank paper.

வெள்ளைக்காக்கணம்—காக்குறட்டை, *s.* A variety of the காக்கட்டான் shrub.

வெள்ளைக்காரர், *s.* White-men, Europeans.

வெள்ளைக்கிளி, *s.* A white kind of parrot, the Cockatoo.

வெள்ளைக்கீரி, *s.* A sort of mungoose.

வெள்ளைக்குங்கிலியம், *s.* White resin.

வெள்ளைக்குதிரை, *s.* A white horse, &c. See under குதிரை.

வெள்ளைக்குப்போட, *inf.* To give clothes to be washed by the washerman.

வெள்ளைக்குன்றி, *s.* See வெண்குன்றி.

வெள்ளைச்சாரணை, *s.* A variety of Trianthema monogyna. See சாரணை.

வெள்ளைச்செவ்வந்தி, *s.* A flowering plant. See செவ்வந்தி.

வெள்ளைச்சொல், *s.* A common word.

வெள்ளைச்சோளம், *s.* White maize.

வெள்ளைத்தமிழ், *s.* Plain Tamil.

வெள்ளைத்தினை, *s.* White millet. See தினை.

வெள்ளைநிறத்தாள் — வெள்ளைமெய்யாள், *appel. n.* An epithet of Sarasvati, as white, சரஸ்வதி.

வெள்ளைபூண, *inf.* [*com.* வெள்ளைகட்ட.] To put on white garments. (*p.*)

வெள்ளைப்பசளை, *s.* A variety of the பசளை creeper

வெள்ளைப்பஸ்பம், s. Calcined powder of metals.

வெள்ளைப்பாஷாணம், s. Rat's bane, or white oxide of arsenic, as வெலிப்பாஷாணம்.

வெள்ளைப்பூண்டு, s. Garlic, as வெள்ளுள்ளி, Allium sativum.

வெள்ளைப்போளம், s. Myrrh. See போளம்.

வெள்ளைப்பொன்னுவிரை, s. A plant. See ஆவிரை.

வெள்ளைமந்தாரை, s. A variety of the Bauhinia tree. See மந்தாரை.

வெள்ளைமாதளை, s. A pomegranate whose fruit has white seeds.

வெள்ளையடிக்க, inf. To white-wash with chunam, சுண்ணாம்படிக்க.

வெள்ளையவிழ்க்க, inf. To loosen a canopy, or cloth spread over a room.

வெள்ளையானை, s. A white elephant.

வெள்ளையானையூர்தி — வெள்ளைவாரணன், appel. n. An epithet of Indra and Ayenar, as conveyed on a white elephant, இந்திரன், ஐயனார்.

வெள்ளையுஞ்சொள்ளையும். White apparel—used in burlesque.

வெள்ளைவண்ணாத்தை, s. A dull greyish insect flying by night as well as by day, தீப்பூச்சி.

வெள்ளைவீச, inf. To make signals, with a white flag to a vessel, &c.

வெள்ளைவெளேர். Exceedingly white.

வெள்ளைவெளேரென்றிருக்கிறது...........It is exceedingly white.

வெள்ளைவைக்க—வெள்ளைபூச, inf. To mix slaked lime with coarse plaster, before polishing.

வெறி, s. Drunkenness, fury from liquor, மயக்கம். 2. [fig] Anger, கோபம். (c.) 3. Confusion, perturbation, giddiness, கலக்கம். 4. Fermented palm-tree-sap, கள். 5. Fear, அச்சம். 6. A sheep, ஆடு. 7. Swiftness, சீக்கிரம். 8. A bad smell, நாற்றம். 9. A devil, பிசாசம். 10. The dance of a *pujari* possessed by an evil spirit, வேலனாடல். (சது.)

வெறிகொள்ளல் — வெறியெடுத்தல், v. noun. Being drunk or mad from liquor, or anger; growing violent.

வெறிக்குணம், s. An angry temper, கோபக்குணம்.

வெறியன், s. A drunkard; a mad man.

வெறியாட, inf. To be drunk, to act like a drunken person. 2. To shake and gesticulate as though possessed, through incantations.

வெறியாட்டு, v. noun. The agitation, and shaking, &c., of one possessed, சன்னதம்.

வெறியாட்டாளர், s. Bacchanalian dancers, தேவராட்டாடுவோர்.

வெறியோட, inf. To be in despair, as one who has lost a very dear friend, நம்பிக்கையற. 2. To become empty, as a house by the death of its inhabitants, வெறுமையாக. 3. To be overcome as by the sight of excessive brilliancy, திகைக்க.

மின்னருங்கண்கள்வெறியோடிவிட்டனவே...... The sight dazzled the luminous eyes. (பாரத.)

வெறி, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be pressed or urged, நெருங்க. (p.)

வெறிதல், v. noun. Pressing, thronging. (சது.)

வெறி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be drunk, or intoxicated, வெறிகொள்ள. 2. To be tantalized, to pant after, உணவுக்கேமாற. 3. To stare, திகைக்க. 4. To become lonely, solitary—as a palace, or a king's court in his absence, வெறுமையாக. (c.)

அவனுக்குவெறித்தது. He is intoxicated.

காலம்வெறித்துக்கிடக்கிறது. It is a time of dearth.

வெறிக்கவுஞ்சினக்கவும்பார்க்கிறான். He looks furious.

மரம்வெறித்துக்கிடக்கிறது. The tree has been lopped. (R.)

வெறிக்கப்பார்க்க, inf. To stare at one as terrified.

வெறித்தகாலம்—வெறிப்புக்காலம், s. A time of famine.

வெறித்தநாய், s. A mad dog. 2. [fig.] A reproachful term for an indigent person, who at the sight of good food looks at it eagerly, like a dog.

வெறித்துப்பார்க்க, inf. To stare. 2. To look with an angry face.

வெறிப்பு, v. noun. Drunkenness, மதுமயக்கம். 2. Great eagerness, or longing, as a consequence of privation. 3. Famine, பஞ்சம்.

வெறிப்பெடுக்க, inf. To be madly fond of any thing.

வெறிது, s. Ignorance, அறிவின்மை. (சது) 2. See under வெறுமை.

வெறு, adj. [in combin.] Empty, void, poor.

வெறுங்கடுதாசி, s. A blank paper.

வெறுங்கால், s. A bare foot.

வெறுங்குடம், s. An empty pot—as an ill-omen, &c. See குடம்.

வெறுங்கை, s. Empty handed, பொருளின்மை.

வெறுங்கோது, s. Refuse. 2. [prov.] One of no ability, மூடன்.

வெறுஞ்சோறு, s. Boiled rice without curry, &c.

வெறுநுகம், s. The fifteenth lunar mansion, சோதிநாள். (சது.)

வெறுந்தண்ணீர், s. Water only.

வெறுந்தப்பறை, s. A complete error.

வெறுந்தலை, s. [appel. வெறுந்தலையர்.] A bare head as an inauspicious sight, requiring a சாந்தி to remove its effects.

வெறுமனை, s. Unoccupied building ground. 2. An empty house.

வெறுமனே. In vain, without advantage; *chiefly used by Brahmans.*

வெறும்பானை, s. An empty pot, or vessel.

வெறும்பானையிலீப்புகுந்ததுபோல. Like a fly in an empty vessel.

வெறும்பிலுக்கு, s. Foppery without means to support it.

வெறும்பிலுக்குவண்ணான்மாற்று.... Dressing in garments borrowed from a washerman is but vain foppery.

வெறும்பிழை, s. A complete error.

வெறும்பொய், s. A down-right-lie.

வெறும்புறங்கூறல், v. noun. Public invective.

வெறுவாய்கூற, inf. To babble.

வெறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dislike, renounce, be disgusted with, have aversion to, பிரியவீனப்பட. 2. To hate, detest, பகைக்க. 3. To deny, மறுக்க. (c.)

எனக்குமவனுக்கும்வெறுத்திருக்கிறது. There is aversion between him and me.

உலகத்தைவெறுத்துப்போட்டேன். I renounced the world.

எனக்குவெறுக்கிறது. It turns my stomach.

எனக்குமனம்வெறுத்துப்போயிற்று. I am quite disgusted with it.

வெறுக்கச்சாப்பட, inf. To eat to satiety.

வெறுப்பு, v. noun. Disgust, dislike, aversion, discontent, வேண்டாமை.—*oppos. to* விருப்பு. 2. Affliction, துன்பம். 3. Fear, அச்சம். 4. Confusion, கலக்கம். 4. Wrath, கோபம். 5. Closeness, செறிவு. (சது.)

என்பேரிலேவெறுப்புஞ்சலிப்புமாயிருக்கிறான்.... He has a dislike and aversion to me.

வெறுப்பின்மை, s. Absence of dislike. See ஆசைத்துறப்பு.

வெறுப்புக்காட்ட, inf. To show aversion, disaffection.

வெறுக்கை, s. Wealth, gold, பொன். 2. Felicity, செல்வம். 3. Excellent possessions, விழுப்பொருள். (சது.)

வெறுமை, s. Emptiness, vapidness, nothingness, சூனியம். (c.)

வெறுமையிரு—வெறுமனேயிரு. Be quiet.

வீடுவெறுமையாயிருக்கிறது. There is no one in the house.

வெறுமைப்பட்டவன், appel. n. A poor man.

வெறிது, [symb. appel.] That which is empty, வெறுமையானது. 2. [vul. வெறிச்சு.] Emptiness.

வெற்பு, s. A hill, a mountain, மலை. (சது.)

வெற்பன், s. A chief of a hill-country, குறிஞ்சிநிலத்தலைவன்.

நீடுகல்வெற்பன். A prince of the extended, rocky mountain. (குறள்.)

வெற்றி-வெற்றம், s. [poetice வென்றி.] Conquest, victory, success; [ex வெல்.] (சது.)

வெற்றிகாண, inf. To gain a victory, to overcome, to surpass. 2. To win, to gain.

வெற்றிகொள்ள, inf. To conquer, to obtain a victory.

வெற்றிக்கரந்தைமஞ்சரி, s. A panegyric on an army crowned with garlands of கரந்தை flowers, and marching to attack an enemy.

வெற்றிக்கொடி, s. The flag of victory.

வெற்றிசூட, inf. To wear the conqueror's wreath. 2. To conquer. (p.)

வெற்றித்தம்பம், s. A post set up as a monument of victory, a trophy.

வெற்றிப்பாடு, s. Victory. (உபதி.)

வெற்றிப்புகழ், s. Eulogy after a triumph.

வெற்றிமாலை, s. A chaplet of victory.

வெற்றிமாலை, அ. or அஷ்டவெற்றிமாலை, The eight kinds of conqueror's wreaths: 1. பகைநிரைகவர்ந்தவற்குவெட்சிமாலை, a wreath of the Ixora coccinia; 2. பகைவர்கவர்ந்த தன்னிரைமீட்டவற்குக்கரந்தைமாலை, one of Ocimum basilicum; 3. பகைமேற்சென்றவற்குவஞ்சிமாலை, one from the tree called *Vanchi*; 4. வரும்பகைமுன்னெதிரூன்றினவற்குக்காஞ்சிமாலை, one made of the Ulmus integrifolia; 5 தன்னரண்காத்தவற்குநொச்சிமாலை, one of the Vitex negundo; 6. பகைவரரண்தன்வசமாக்கினவற்குஉழிஞைமாலை, that of the Illecebrum lanatum; 7. பொருதவற்குத்தும்பைமாலை, one from the Phlomus Indica; 8. போர்வென்றவற்குவாகைமாலை, from the Mimosa flexuosa.

வெற்றிவேந்தர், s. Vanquishers, conquerors.

வெற்றிவேல், s. A conquering lance.

வெற்றிவேற்கை, s. A moral treatise by அதிவீரராமபாண்டியன், beginning with this phrase.

வெற்று, adj. [*a change of* வெறு.] Empty, vain.

வெற்ருள் — வெற்றுமனிதன், s. An extra hand, one not employed.

வெற்றிலை, s. Betel-leaf, (*lit.*) the bare leaf.

வெற்றிலைக்கால் — வெற்றிலைத்தோட்டம், s. Betel-garden.

வெற்றிலைச்சுருள், s. A roll of betel-leaf for chewing.

வெற்றிலைத்தட்டம், s. A betel-salver.

வெற்றிலைப்பட்டி, s. See பட்டி.

வெற்றிலைவைக்க, inf. To send betel [with areca-nut, &c.] to friends as an invitation to one's wedding.

வெற்றுக்கால், s. As வெறுங்கால்.

வெற்றுடம்பு, s. A naked body. 2. One without renown. (*p.*)

வெற்றெனத்தொடுத்தல், v. noun. Connecting words to no purpose, writing in too high style. See குறகுற்றம் under குற்றம்.

வெற்ருேலை, s. A blank palm-leaf.

வென்றி, s. Victory, triumph, வெற்றி.

வென்றிமாலை, s. Wreaths of conquerors, as வெற்றிமாலை. 2. The author of செந்திற்புராணம்.

வென்றியன், s. A victor. (*p.*)

வென்ருேன், appel. n. A conqueror. See under வெல்

வே

வே. A syllabic compound of வ் and ஏ.

வே, s. Spying, reconnoitering, espionage, வேவு. (சது.)

•வேகசரம், s. A camel, ஒட்டகம். W. p. 805. VEGASARA.

•வேகடம்—வேகடை, s. The art of removing the rust of metals, and spots on precious stones, மணியழுக்கசற்றுகை. 2. Fancy work, பொலிவேலை. 3. Youthfulness, யௌவனம். 4. A kind of fish, ஓர்மீன்; [*ex Sa.* *Vekat'a.* W. p. 804.]

வேகடைத்தாள், s. Tinselled paper, குருநாப்பட்டை.

வேகடையாள், s. A fop, a beau.

வேகடைவேலை, s. Unsubstantial work.

•வேகம், s. Swiftness, nimbleness, velocity, activity, கடுமை. 2. Heat, fervor, ardor, zeal, vehemence, eagerness, impetuosity, உக்கிரம். 3. Anger, pride, உத்தண்டம். (c.)

மனோவேகம். Swiftness of thought.

வேகவதி, s. A river near Conjeveram, கம்பாநதி. 2. The *Vaigui* river near Madura, வைகையாறு (சது.)

வேகாளம், s. Swiftness, அதிவிரைவு. 2. Anger, கோபம். (c.)

•வேகி, s. One who is agile, quick, nimble, வேகமுடையோன்; [*ex* வேகம்.]

வே, கிறேன், வெந்தேன், வேகுவேன், or வேவேன், வேக, or வேவ, v. n. [*neg.* வேகேன், and வேவேன்.] To heat, காய. 2. To seethe, to burn—as bricks in a kiln; to be hot, as water, எரிய. 3. To be inflamed with anger, or lust, உக்கிரங்கொள்ள (c.)

வேகிறது—வெந்தபோகிறது. It is very sultry.

நன்றாய்வெந்திருக்கவேணும். It must be well boiled.

வீடுவெந்துபோனது. The house is burnt.

வாய்வயிறுவேகச்செய்கிறது.......Inflaming the mouth and stomach, as with medicine.

வேகவைக்க, inf. To set on the fire to boil.

வேக்காடு, s. A burning or boiling. 2. Burning heat, சூடு. 3. A burn, a scald, வெந்தபுண்.

செங்கல்வேக்காடுபெற்றது........The bricks are not properly burnt.

வேக்காளம், s. Heat, sultriness, அதிகாங்கை.

•வேங்கடம், s. Tripati, a place sacred to Vishnu. See வடவேங்கடம். 2. [*also* தென்வேங்கடம்] Alagar hills near Madura.

வேங்கை, s. The large streaked tiger, *commonly*, வேங்கைப்புலி. 2. The Kino tree, Pterocarpus bilobus, வேங்கைமரம். 3. Gold, பொன். (*p*)

•வேசகம், s. The end of an elephant's tail, யானைநுனிவால். 2. A tail of an animal in general, வால். (சது)

வேசக், s. [*Hind.*] Weariness, களை.

வேசடை — வேசாடை, s. [*Tel.*] Weariness, sorrow, துக்கம்.

•வேசம், s. [*also* வேஷம்.] Decoration, disguise, masquerade. W. p. 808. VESA.

வேசரம், s. Telugu language, தெலுங்குபாஷை. (*p.*)

•வேசரி, s. A mule, கோவேறுகழுதை. [*Sa. Vesara.*] 2. An ass, கழுதை. (சது.)

•வேசனம், s. A town in a cultivated country, மருதநிலத்தூர். (சது.)

வேசாடை, s. Sorrow. See வேசடை.

வேசாறு, கிறேன், வேசாறினேன், வேன், வேசாற, v. n. [*Tel.* வேசாட.] To be dispirited, dejected, bereft of energy, சோர. (c.)

அவன்மெத்தவேசாறிப்போனான். He is much wearied.

•வேசி—வேசை, s. A harlot, a whore, விலைமகள். [*Sa. Vesya.*]

வேசிக்கள்ளன், s. A whoremonger.

வேசித்தனம், s. Harlotry, whoredom, fornication.

வேசையர், s. [*pl.*] Harlots.

•வேஷம் — வேடம், s. [*as* வேசம்.] Showy garb, disguise, வேறுருக்கொள்ளுதல்; [*ex Sa. Vesha.*] 2. An ear-ornament, as வேடகம்.

வேஷங்காட்ட, inf. To dissemble, to sham.

வேஷதாரி—வேஷக்காரன், s. An actor.

வேஷமாற, inf. To disguise one's self.

வேஷமெடுக்க, inf. To assume a garb.

வேஷம்போட, inf. To put on a disguise.

சன்னியாசிவேஷம், s. The dress of a Hindu ascetic.

•வேடகம், s. One of the sixteen kinds of ear-jewels. See காதணி. (சது.)

வேடன், s. [*fem.* வேடச்சி. *pl.* வேடர்.] A hunter, forester, fowler, வேடுவன். (c.)—*Note.* This name is given to any wild people, as the hill-tribes who seem to be the aborigines of India.

வேடர்சேரி, s. A village of hunters.

வேடிக்கை, s. [*Tel.*] A show or spectacle; an exhilarating sight, விநோதம். (c.)

வேடிக்கைக்குவிலையில்லைகதைக்குக்காலில்லை ...... There is no [fixed] price for a show, no limit to a story. *Prov.*

அதுஒருவேடிக்கையாயிருக்கிறது. It is a grand sight.

வேடிக்கைகாட்ட, inf. To make an exhibition for amusement. 2. To act so as to make a spectacle of one's self or others.

வேடு, s. A cloth for filtrating, வடிகட்டுசேலை. 2. Cover to the mouth of a vessel, மூடுசேலை. 3. (*R.*) Hunting, or the chase. 4. A tribe of wild people.

வேடுகட்ட, inf. To tie a cloth over a pot for cooking with steam. 2. To tie a covering on a pot to keep its contents from spilling.

• வேடுவன், s. A hunter, as வேடன்.

வேடை, s. Heat, intense heat, வெப்பம். 2. Desire, thirst, longing, அபேட்சை. (வாதஊர்புரா.)

வேடைக்காலம், s. Hot season, the time of vehement heat. (c.)

வேட்கை, s. Desire, want, appetite, fondness, amorousness, ஆசை; [ex வேள்.] (சது.)

வேட்கைநீர், s. Water for thirst.

வேட்கைத்துணைவி, s. Wife, consort, the dearest one, மனைவி. (p)

வேட்கோவன், s. A potter, குயவன்.

வேட்டகம், s. The house of the bride, and bridegroom respectively, மாமியார்வீடு.

வேட்டம், s. [poetice.] Hunting, the chase, snares, toils for catching game, வேட்டை.

வேட்டஞ்செய்காண்டம், s. A chapter in அரிச்சந்திரபுராணம், wherein is related the hunting adventures of Harichandra.

வேட்டல்-வேட்டாள்-வேட்டார். See under வேள், v.

*வேட்டி—வேஷ்டி, s. Cloth, vestments of a man, சோமன். (c.)

சிரவேஷ்டி, s. A headkerchief, a cloth for covering the head.

வேட்டு, s. The report of a gun, வெடி. See அதிர்வேட்டு.

வேட்டுவன், s, A kind of hornet, குளவி 2. The tenth lunar mansion, மகநாள். 3. A hunter, வேடன். (சது.)

வேட்டை, s. Hunting, fishing, &c, the chase. (c.) 2. (சது.) Affliction, துன்பம். 3. Weariness, இளைப்பு.

வேட்டைக்காரன், s. A hunter.

வேட்டைக்குப்போக, inf. To go a hunting.

வேட்டைப்பல், s. Tusks, வக்கிரதந்தம்.

வேட்டையாட, inf. To chase, to hunt.

மீன்வேட்டை. Angling, fishing.

வேட்பு, s. Desire, விருப்பம். [ex வேள், v.]

வேண, adj. [in combin.] Many, as வேணபொருள், many things. (p.)

வேணகை, s. A surrounding, or outer wall, சுற்றுமதில். (சது.)

வேணவா, s. Impassionate desire, ஆசைப்பெருக்கம்; [ex வேண் et அவா.] (தொல்கா.)

*வேணி, s. A river, நதி. [See திரிவேணி.] 2. Air, ether, ஆகாயம். 3. A street of herdsmen, இடையர்வீதி. 4. Matted hair, மயிர்ச்சடை (சது.) 5. A root of a tree, மரவேர்.

வேணீர், s. Water to allay thirst, தாகநீர்; [ex வேள் et நீர்.] • (p.)

*வேணு, s. Hollowness, tubularity, உட்டுளை. 2. A bambû, மூங்கில். 3. A herdsman's reed or pipe, குழல். 4. A bow, வில். 5. A sword, வாள். (சது.) 6. A knowledge of wind-instruments. See கலைஞானம்.

வேணும். [contrac. of வேண்டும்.] It is wanted.

வேணுமென்றபாக்கியம். All needful prosperity.

வேண், s. One of the twelve districts in which கொடுந்தமிழ் is spoken. See கொடுந்தமிழ்நாடு. 2. rel. part. Poetic form of வேண்டு.

வேண்டு, கிறேன், வேண்டினேன், வேன், வேண்ட, v. a. To beg, entreat, beseech, மன்றாட. 2. To approve, to like, விரும்ப. 3. To want, to need—*Note.* In this latter sense it is principally a defective or impersonal verb. It is conjugated, as வேண்டுகிறது, it is necessary; வேண்டிற்று, was necessary; வேண்டும், com. வேணும், will be necessary; negative, வேண்டாம், com. வேணாம்; rela. part. வேண்டுகிற, வேண்டிய, வேண்டின.

எனக்கதுவேணும். I want it.

சீக்கிரமாய்வரவேணும். You must come in haste.

உனக்கென்னவேண்டும். What do you want?

அவன் உனக்கென்னவேணும். What relation does he bear to you?

வேண்டாது—வேண்டாதே—வேண்டாமல். Not wanting.

வேண்டாதுபோனான். He went away displeased.

வேண்டாத்தலையன், s. An abrupt man.

வேண்டாமை, s. Aversion, dislike.

வேண்டார், appel. n. Foes, பகைவர்.

வேண்டாவெறுப்பு, v. noun. Unwillingness, indifference.

வேண்டி, v. part. Being wanted. 2. [as a prepos.] With, for the sake of.

வேண்டியிருக்கிறது. It is wanted.

வேண்டியதாயிருக்கவில்லை. It is not required.

என்னத்துக்குவேண்டி. With what object?

என்னைவேண்டி. For my sake.

வேண்டிக்கொள்ள, inf. To solicit, to pray.

வேண்டியகாரியம், s. Needful things.

வேண்டியசகாயம், s. All needed help.

வேண்டியழைக்க, inf. To invite with desire.

வேண்டியமட்டும். As much as is wanted.

வேண்டுமானபோது. Whenever you want

வேண்டல்—வேண்டுதல், v. noun. Desiring, supplicating, begging.

*வேதகம், s. Difference, disagreement. See பேதகம்.

வேதகாரர், s. [Tel. மேதரவர்.] Basket-makers, பொருநர். (சது.)

*வேதண்டம், s. An elephant, யானை. [Sa. Ved'anda.] 2. The silver-mountain Kylasa, கைலை. 3. A mountain, மலை. (சது.)

*வேதம், s. The holy books of the Hindus—said to have been revealed by Brahma, but compiled from tradition by *Vyasa.* They are four in number; 1. இருக்கு, *Rig Veda,* chiefly relating to ritual worship; 2. எசுர், *Yajur Veda,* concerning the ceremonies observed in sacrifices; 3. சாமம், *Sama Veda,* containing odes, hymns and chants; 4. அதர்வணம். *Atharvan'a,* with mantras or magical formulas, the least esteemed of the four.

உபவேதம், s. The four secondary sciences. These are அருத்தவேதம், commentary on the Vedas; ஆயுர்வேதம், Physic; காந்தருவவேதம், music; தநுர்வேதம், archery.

வேதகலாபம், s. Religious persecution.

வேதக்காரர், s. Brahmans skilled in one or more of the Vedas. (R.) 2. [Heathen usage.] Roman Catholics.

வேதக்கொடியோன், s. An epithet of Dron'acharya as the Veda-bannered, துரோணாசாரியன். (சது.)

வேதசாஸ்திரம், s. The four Vedas and six Shastras collectively. 2. [corrup. usage.] Theology.

வேதசாஸ்திரி, s. One learned in the Vedas and Shastras. 2. [not authorized.] A theologian.

வேதசாட்சி, s. [R. C. usage.] A martyr.

வேதசாரம், s. [lit. the essence of religion.] The title of a book. 2. A reed, நாணற்புல்.

வேதநாயகன், s. The Deity as lord of the Vedas, பிரமன், கடவுள்.

வேதநூல், s. A religious system.

வேதபாரகர், s. Brahmans, பார்ப்பார். 2. Those who are well versed in the Vedas. See பாரகர். 3. [Chris. usage.] Scribes, expounders of the Jewish law.

வேதபாராயணம், s. Study of the Vedas.

வேதபுஸ்தகம், s. [Christ. usage.] The Bible.

வேதப்புரட்டு, v. noun. Perversion of the Vedas. 2. [in Christ. usage.] Corruption of the true religion, heresy.

வேதமாயாவாதம், s. A religious sect.

வேதமுதல்வி, s. An epithet of Sarasvati, Lukshmi, and Parvati.

வேதமோத, inf. To recite the Vedas; [ex ஓத.]

வேதரஞ்சகன், s. Brahma, பிரமன்.

வேதவியாக்கியானம், s. [Chris. usage.] Expounding the Scriptures.

வேதவியாசர், s. Vyasa, compiler of the Vedas.

வேதன், s. God, கடவுள். 2. Jupiter, வியாழம். 3. Argha, அருகன். (p.)

வேதா, s. God, கடவுள். 2. Brahma, பிரமன். (சது.)

வேதாகமம், s. Authoritative books corresponding with the Vedas. 2. [Chris. usage.] The Bible.

வேதாக்கிரேசர், s. Chief teachers of the *Vedas.*

வேதாக்கினி, s. A sacrificial fire. See அக்கினி.

வேதாங்கம், s. Sciences subordinate to the Vedas, of which there are *six*: 1. மந்திரம், mantras; 2. நிகண்டு, vocabulary; 3. வியாகரணம், grammar; 4. சந்தோபிசிதம், prosody; 5. நிருத்தம், explanation of mystic words; 6. சோதிடம், astronomy, astrology.—According to *Wils.* சிட்சை and கற்பம், are given for the first two.

வேதாந்தம், s. [lit. the end of the Vedas.] A refined system of philosophy taught by Vyasa in the *Uttara-mimamsa,* and reduced by himself to 500 stanzas. It was commented on by *Madevacharya, Sanharacharya,* and *Ramanujacharya,* severally in the *Dwaita, Adwaita,* and *Visishta—adwaita* systems. The first and last allow a distinct existence of matter, but not its eternity. The second denies the real existence of matter, and resolves all existence into God. The *Vedanta,* simply stated, is a system of Pantheism. See அத்வைதம். and துவைதம். 2. The thirty-two *Upanishads,* or appendixes, to the Vedas. See சாஸ்திரம்.

வேதாந்தசூடாமணி, s. A metaphysical treatise by சிவப்பிரகாசதேசிகர்.

வேதாந்தமதஸ்தாபனம், *s.* Establishing the doctrines of the Vedanta system.

வேதாந்தன்—வேதார்த்தன், *s.* God as the object of the Vedas, கடவுள்.

வேதாந்தி, *s.* [*pl.* வேதாந்திகள்.] One skilled in the *Vedanta.*

வேதோக்தம், *s.* That which is scriptural or declared in the Vedas.

•வேதனம், *s.* Knowledge, அறிவு. 2. Hire, கூலி. 3. Salary, monthly wages, சம்பளம். (சது.)

•வேதனை, *s.* Pain, நோய். 2. Affliction, annoyance, வருத்தம். 3. Vexation, அலைக்கை (சது.) 4. Knowledge, as வேதனம்.

வேதனைக்காட்சி, *s.* A term in logic to denote a variety of simple apprehensions.

•வேதன்—வேதா, *s.* Brahma, &c. See under வேதம்.

•வேதாளம்—வேதாளக்கிரகம், *s.* An imp, a fiend, a familiar spirit, a demon, ஓர்பிசாசம்.

•வேதாளி, *s.* A name of Kali, காளி.

வேதாளியர், *s.* Panegyrists, புகழ்வோர். (சது.)

•வேதி, *s.* A sacrificial fire-place, a raised altar, யாகமேடை. 2. A quadrangular spot in a court-yard, சதுரமேடை. 3. A high seat along the out-side of the wall of a house, திண்ணை. 4. An outside wall, மதில். 5. The eighteenth lunar mansion, கேட்டைநாள். (சது.)

•வேதிகை, *s.* A raised altar, as வேதி. [*Sa. Vedika.*] 2. A shield, கேடகம். (சது.)

வேதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* பேதி.] To transmute metals, to change, வேறுக்க. 2. To practise Alchemy, விகாரப்படுத்த. 3. To divide, split, பிளக்க.

வேதித்தல், *v. noun.* Changing; splitting. (சது.)

•வேதிதம், *s.* A tube or any thing hollow, துளையுடைப்பொருள். (சது.)

•வேதியர், *s.* [*sing.* வேதியன்.] Brahmans who read the Vedas, பார்ப்பார். (சது.)

மானவேதியன். The illustrious brahman.

•வேதினம், *s.* A saw, ஈர்வாள்.

வேது, *s.* That which is warm, as வெய்து. 2. A sudorific medicine, வேதுமருந்து. 3. A caustic medicine, காரமருந்து.

வேதுபிடிக்க, *inf.* [*prov.* வேதுகுளிக்க.] To use a sudorific.

•வேதை, *s.* Affliction, துன்பம். [*See* வாதை.] 2. Alchemy, transmutation of metals, பொன்னாக்குகை; [*ex* வேதி, *v.*]

•வேத்திரம், *s.* A ratan, a staff, பிரம்பு. 2. An arrow, அம்பு. (சது.) 3. A tree, இலந்தை, Zizyphus jujuba.

வேத்திரதரன், *s.* A staff-bearer, door-keeper, வாயில்காப்போன். (சது.)

வேந்தவை, *s.* The king's court, இராசசபை; [*ex* வேந்து, *et* அவை.] (நீதிநெறி.)

வேந்தன், *s.* A king, அரசன். 2. Indra, இந்திரன். 3. The sun, சூரியன். 4. The moon, சந்திரன். 5. Jupiter, வியாழம். (சது.)

வேந்து, *s.* A king, as வேந்தன். 2. Royalty, இறைமை. (*p.*)

வேந்துரு, *s.* An ancestor in the sixth degree.

வேந்தோன்றி, *s.* A flower plant, Gloriosa superba, கார்த்திகைக்கிழங்கு

வேப்பாலை, *s.* The oval leaved rose-bay, Nerium anti-dysentericum, *L.* [*Ains. v.* 2. *p.* 461.]

•வேமம், *s.* A loom, நெய்வார்தறி.

•வேம்பு-வேப்பமரம், *s.* [*adjectively,* வேப்பு.] The Margosa or Neem tree, Azadirachta Indica. There are two varieties, கருவேம்பு and மலைவேம்பு; which see; சிவனார்வேம்பு and நிலவேம்பு are two different medicinal plants.

வேம்புவிரும்பக்கரும்பாகும். If it wished, the bitter Margosa might become sugar-cane; i. e. "where's a will there's a way."

அவனுக்குவீடுவேம்பாய்ப்போயிற்று. His house [wife], has become bitter, *used by a married woman.*

வேப்பங்கள், *s.* Sour juice that oozes from some Margosa trees, taken medicinally for venerial eruptions, &c.

வேப்பங்காய், *s.* Its unripe fruit or drupe.

வேப்பமுத்து, *s.* The seeds of the வேம்பு.

வேப்பம்பட்டை, *s.* The bark of the வேம்பு, used as a tonic and febrifuge.

வேப்பம்பலகை, *s.* Boards from the tree.

வேப்பிலை, *s.* The leaves of the வேம்பு used medicinally, and as a charm for possessed persons, or animals, and those bitten by poisonous reptiles.

வேப்பெண்ணெய், *s.* The oil extracted from the seeds.

வேம்பின்றாரோன், *appel. n.* An epithet of the Pandya kings. See நிம்பத்தாரோன்.

வேயர்—வேயல். See வேய்.

வேயாம், *s.* The jujube tree, இலந்தை.

வேயுள்—வேய்தல், *s.* A small niche in a wall, மாடம்; [*ex* வேய்.] (சது.)

வேய், *s.* Any thing hollow, a tube, உட்டுளைப்பொருள். 2. A bambû, மூங்கில். 3. Eaves-dropping, overhearing, ஒற்று. (*p.*)

வேயர்—வேய்கள், *s.* Spies, வேவுகாரர். (சது.)

வேயல், *s.* A bambû, as வேய். (சது.)

வேயிசை, *s.* The sound of a pipe.

வேய்ங்குழல், *s.* A herdsman's pipe. made of bambû, as மூங்கிற்குழல்.

வேய், கிறேன், ந்தேன், வேன், வேய, *v. a.* To roof with straw, leaves, &c., to cover in, as a building, *commonly,* மேய, மூட. 2. To put on, as a crown, or a garland, சூட. 3. To decorate, adorn, அலங்கரிக்க. 4. To dress, to put on jewels, அணிய. (*p.*)

வேய்தல், *v. noun.* Thatching, decorating, dressing, putting on. (சது.)

வேரம், *s.* Obstinacy, resistance, சலஞ்சாதிப்பு. (சது.) 2. Collection of the clouds, as in the morning with the sun behind, மேகக்கூட்டம். (*p.*)

வேரல், *s.* A bambû, மூங்கில். (சது.)

வேரி, *s.* Toddy, honey, sweet juice of fruits, கள். 2. Smell, scent, வாசனை. 3. The scented root of the Andropogan, வெட்டிவேர். (சது.)

வேர், *s.* The root of a tree or plants, மூலம். 2. [*fig.*] Foundation, or cause, காரணம். (*c.*) 3. Sweat, as வேர்வை. 4. Anger, கோபம். (*p.*)

இவனிதக்குவேர். He is the cause of this.

ஆணிவேர், *s.* The tap-root. See ஆணி.

பக்கவேர், *s.* The side-root.

வேரிறங்க—வேர்தரிக்க, *inf.* To strike root.

வேரூன்ற—வேர்பற்ற—வேர்க்கொள்ள, *inf.* To take root.

வேரோட, *inf.* To run out as roots.

இலுப்பைமரம்வெகுதூரமாய்வேரோடும் The இலுப்பை tree extends its roots very far.

வேர்க்கடலை, *s.* Ground-nut of the West Indies. See கடலை.

வேர்க்குச்சு, *s.* A weaver's brush made of grass-roots.

வேர்க்குரு, *s.* [*vul.* வேக்குரு.] Prickly heat; desudation.

வேர்க்குருத்தோன்றுகிறது. Breaking out of the prickly heat.

வேர்க்குறி, *s.* An indication of wrath, சினக்குறிப்பு.

வேர்க்கொம்பு, *s.* Green ginger, இஞ்சி. 2. Dry ginger, சுக்கு.

வேர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To perspire, to sweat, as வியர்க்க. (*c.*) 2. To be angry, to be indignant, கோபிக்க.

எனக்குவேர்க்கிறது. I perspire.

வேர்த்துவடிய, *inf.* To be distilled, as liquors.

வேர்ப்பார், *appel. n.* Those who are angry. (*p.*)

வேர்ப்பு, *v. noun.* Sweat, as வேர்வை. 2. Anger, கோபம்.

வேர்வை, *v. noun.* Sweat, perspiration.

•வேலாவலயம், *s.* The sea, கடல். 2. The earth, பூமி; [*ex* வேலை *et* வலயம்.] (சது.)

வேலி, *s.* A hedge or wall, மதில். (*c.*) 2. Custody, watch, காவல். 3. A particular measure of ground of five மாணி or about five acres, நிலத்தளவையிலொன்று. (*Tanjore usage.*) 4. A village; *also* an affix to the name of some villages, ஊர்.

வேலிக்கால், *s.* Stakes in hedging.

வேலிப்பருத்தி, *s.* Hedge-cotton, Hairy flowered cynanchum. See உத்தமதாளி.

வேலிப்பாகல், *s.* See கொல்லம்பாகல்.

வேலிமூங்கில், *s.* A plant, Justicia Betonica.

வேலியடைக்க—வேலிபோட, *inf.* To set a hedge.

•வேலை, *s.* Work, labor, தொழில். 2. Workmanship, செய்பொருள். (*c.*) 3. Sea, ocean, கடல். 4. Sea-shore, கடற்கரை 5. Time; opportunity, as வேளை. 6. The present time, நிகழ்காலம். (சது.) 7. (சது.) Boundary, எல்லை.

வேலைக்களைக்குப்பிள்ளைமேற்சாக்கு. A shuffling woman makes her child an excuse, *said of an idle wife.* [*prov.*]

ஒருவனிடத்தில் வேலைவாக்குகிறது. Looking after a workman.

வேலைசாய்கிறதா. Is the work going on?

அதஅதிகவேலைகொள்ளும். It requires much work.

எனக்குவேலைபோயிற்று. I lost my situation.

வேலைக்காரன் — வேலையாள், *s.* [*fem.* வேலைக்காரி] A servant, a workman.

வேலைக்குவைக்க, *inf.* To employ.

வேலைப்பரீட்சை, *s.* Trial of one's skill in business. 2. [*com.* வேலை...ம.] Skill in the management of affairs.

வேலைப்பாடு, *v. noun.* Workmanship, that which is wrought.

வேலையினக்கெட்டவன், *appel. n.* A loiterer.

வேலையிற்றுயின்றோன், *appel. n.* Vishnu as sleeping on the sea, விஷ்ணு. (*p.*)

வேலைவைக்க, *inf.* To cause one to work unnecessarily, வீண்வேலையிட. 2. [*prov.*] To make appointments.

வேல், *s.* Dart, spear, lance, javelin, கைவேல். 2. All kinds of armor, ஆயுதப்பொது. 3 [*com.* வேலமரம்.] A tree of three varieties. See கருவேல், குடைவேல், and வெள்வேல். 4. A bambû, மூங்கில்.

ஆலும்வேலும்பல்லுக்குறுதி. The splint of the banyan and வேல் tree, gives strength to the teeth; see under நாலு.

வேலம்பட்டை, *s.* The astringent bark of the வேல் tree, used in making arrack.

வேலன், *s.* Kumara, the younger son of Siva, முருகன். 2. One possessed of a devil, வெறியாட்டாளன். (*சது.*)

வேலனாடல், *v. noun.* A dance by one possessed. See வெறியாடல்.

வேலிறையோன், *appel. n.* Kartikeya as lance-bearer, கார்த்திகேயன்.

வேலாயுதம், *s.* A lance, as வேல்; [*ex* ஆயுதம்]

வேலாயுதன், *s.* Kumara, as வேலன்.

வேவிக்க, *inf.* To boil, to decoct; [*ex* வே.]

வேவு, *s.* Spy, ஒற்று, உளவு. 2. Burning, வேவுகை. (*சது.*)

வேவாள் — வேவுகாரன், *s.* A spy, a scout.

வேவுபார்க்க, *inf.* To spy out, to explore.

வேழம், *s.* An elephant, யானை. 2. Sugar-cane, கரும்பு. 3. A bambû, மூங்கில். 4. A reed, Arundo, கொறுக்கை. (*சது.*)

வேழம்பர், *s.* Pole-dancers, கழைக்கூத்தர். (*சது.*)

வேளன், *s.* A potter, &c., as வேளான்.

வேளா, *s.* A large cetaceous fish, Grampus, வேளாச்சுறு.

வேளாண்மை, *s.* Cultivation of the soil, agriculture, *commonly,* வெள்ளாமை. 2. (*சது.*) A gift, bounty, ஈகை. 3. Liberality, உபகாரம். 4. Truth, மெய். (*p.*)

வேளாண்மைமாந்தரியல்பு, *ம.* The ten virtues of the agriculturist: 1. ஆணைவழிநிற்றல், keeping an oath; 2. அழிந்தோரைநிறுத்தல், raising up the fallen; 3. கைக்கடனாற்றல், being obliging; 4. கசிவகத்தண்மை, having compassion; 5. ஒக்கல்போற்றல், supporting relations; 6. ஒவாமுயற்சி, perseverance; 7. மன்னிறைதருதல், paying taxes; 8. ஒற்றுமைகோடல், being peaceable; 9. விருந்துபுறந்தருதல், hospitality; 10. திருந்தியஒழுக்கம், correct conduct.

வேளாவளி, *s.* One of the thirty-two tunes, the feminine of பூபாளம். See இராகம்.

வேளாளர், *s.* Agriculturists, பூவைசியர். 2. Liberal persons, ஈகையாளர். (*சது.*)

வேளான், *s.* A potter, குயவன். 2. A sub-division of the வேளாளர் tribe.

வேளிர், *s.* Petty kings, rulers of a small country, குறுநிலத்தரசர். (*சது.*)

வேளை, *s.* Time; season; opportunity, காலம். 2. A small shrub, edible and medicinal, Cleome pentaphylla, நர்பூடு.—Of this are two varieties, நைவேளை, or நல்லவேளை, and நாய்வேளை, which see. நாய்வேளை is another species. (*c.*)

வேளைக்குறை — வேளைப்பிழை, *s.* Misfortune, adversity from astrological influence.

வேள், *s.* A man from eighteen to fifty years of age, ஆண்மகன். 2. Kama, the god of love, காமன். 3. Skanda, குமரன். (*சது.*) 4. Desire, lust, ஆசை. 5. A benefit, benefaction, உபகாரம். (*p.*)

வேள், வேட்கிறேன், வேட்டேன், வேட்பேன், வேட்க, *v. a.* To sacrifice, யாகஞ்செய்ய. 2. To long for, to desire earnestly, பேராசைகொள்ள. 3. To marry, விவாகஞ்செய்ய. (*p.*)

வேட்டார் — வேட்டோர், *appel. n.* Friends, சிநேகிதர். 2. Married persons, விவாகமானோர்.

வேட்டாள், *appel. n.* A married woman, மணம்புரிந்தவள்.

வேட்டோன். A man's friend, சிநேகிதன். 2. A husband, புருஷன். (*சது.*)

வேள்புலவரசர், *s.* The inhabitants of a central province in India, சாளுவர். (*சது.*)

வேள்வி, *s.* A sacrifice, an oblation, யாகம். 2. Adoration, worship, ஆராதனை. 3. Beneficence, ஈகை. 4. A sacrificial pit, ஓமகுண்டம். 5. The tenth lunar mansion, மகம். (*சது.*)

வேள்விக்குண்டம், *s.* A sacrificial pit.

வேள்வித்தறி, *s.* A sacrificial post, as யூபஸ்தம்பம்.

வேள்விநாயகன், *s.* An epithet of Indra.

வேள்வியோம்ப, *inf.* To offer burnt sacrifices.

வேள்வியாளர், *s.* Brahmans, பிராமணர். 2. Munificent persons, ஈகையாளர்.

வேள்வு, *s.* Marriage-presents, மணவரிசைப்பண்டம்.

வேள்வெடுக்க, *inf.* To send marriage-presents [eatables] from the house of the bridegroom to that of the bride, and *vice versa.*

வேறல், *v. noun.* [*poetic form of* வெல்லல்] Conquest, vanquishing, வெற்றிகொள்ளல்.

வேறு, *s.* Other, that which is different, distinct from, வேற்றுமையுடையது. [*Lat. Varusanum.*] 2. A symbolic verb. 3. *adj.* Otherwise, மற்ற.

தேகத்துக்குவேறேபோன்மாவுண்டு. The soul exists independently of the body.

வேறுக, *inf.* [*trans.* வேறுக்க.] To be separated, disunited.

வேறிடம், *s.* A separate place, ஏகாந்தம்.

வேறுகாரியம், *s.* Another thing.

வேறுபட, *inf.* [*trans.* வேறுபடுத்த.] To change, to disagree, to be modified; to be declined, as nouns; to become alienated.

வேறுபடச்சொல்லுகிறது. Altercation; (*lit.*) *exchanging words.*

வேறுபாடு, *v. noun.* [*also* வேறுபடல்.] Difference, diversity, disagreement, variation, inflection, alteration, விகற்பம்.

வேறுபாடாக. [*as an adv.*] Otherwise.

வேறே. *adj. and adv.* Different, separately.

வேறேகாரியம், *s.* As வேறுகாரியம்.

வேறேநினைவு, *s.* A different mind. 2. Inattention, absence of mind.

வேறேமார்க்கம், *s.* A different way. 2. Another religion.

வேறேயிருக்க, *inf.* To live separately.

வேறேவைக்க, *inf.* To lay aside.

வேறொருவன், *s.* [*com.* வேறொருத்தன்.] Another man.

வேற்றலம், *s.* Wind, காற்று. (*சது.*)

வேற்று, *adj.* Strange, &c., as வேறு.

வேற்றான், *s.* A stranger. 2. A pariah, *used by himself.*

வேற்றுக்கால், *s.* A different footstep.

வேற்றுக்காற்று, *s.* A different wind. 2. Breaking wind, *crepitus.*

வேற்றுக்குரல், *s.* A strange voice. 2. An unusual sound.

வேற்றுத்தேவன், *s.* A strange god.

வேற்றுநிலைமெய்மயக்கு, *s.* The combination of two consonants of different sound.

வேற்றுப்பொருள், *s.* A varied object or subject, any thing extraneous or different, as a quality from its subject.

வேற்றுப்பொருள்வைப்பு, *s.* A figure in rhetoric. See அலங்காரம்.

வேற்றுமனிதன், *s.* A stranger, an alien, one not of the company in question.

வேற்றுரு, *s.* A disguised form, another shape.

வேற்றுமை, *s.* Difference, distinction, வித்தியாசம். [*vul.* வேத்தமை.] 2. Contrast, a figure in rhetoric. See அலங்காரம். 3. [*in gram.*] Case, termination for case, விபத்தி.

வேற்றுமைகாட்ட, *inf.* To present a different appearance. 2. To point out differences.

வேற்றுமைத்தொகை, *s.* Suppression of the signs of cases in the combination of two words.

வேற்றுமைபண்ண, *inf.* To change. 2. To treat differently from usual. 3. To cause quarrels.

வேற்றுமைப்புணர்ச்சி, *v. noun.* One of the two kinds of புணர்ச்சி, in grammar, when the antecedent-noun has the sign of the case, expressed or uuderstood.

வேற்றுமைமயக்கம், *s.* [*in gram.*] Antiptosis.

வேற்றுமையாயிருக்க, *inf.* To be at variance.

வேற்றுமைவிரி, *s.* [*in gram.*] The signs of the case being expressed in the combination of two words.

வேனல்—வேனில், *s.* Heat, கானல். 2. The hot season. See இளவேனில் and முதுவேனில். (சது.)

வேனற்காலம்—வேனிற்காலம், *s.* The hot season.

வேனிலாளி — வேனிலான், *s.* Kama. காமன். (சது)

வேனின்மாலை, *s.* A poem describing the two divisions of the hot season. See பிரபந்தம்.

*வேன், *s.* [*com. for* வியன்.] Excess.

வை

வை. A syllabic compound of வ் and ஐ.

வை, *s.* Straw, வைக்கோல். 2. Sharpness, keenness, point, கூர்மை. (சது) 3. The earth, as வையகம் (*p.*)

*வைகடிகன், *s.* A jeweller, one who cuts and polishes gems, இரத்தினங்களைச்சாணை தீர்ப்போன். (சது)

*வைகரி, *s.* One of the four kinds of sounds, articulation. See வாக்கு. 2. Accuracy, regulation, திட்டம். (சது.) 3. [*also* வைகரியகங்காரம்] One of the three அகங்காரம், that connected with *Rajata guna.* (சிவ. சித்.)

வைகல், *s.* Dawn of day, விடியல். 2. A day, நாள். 3. The passing day, கழிவுநாள். [*a corrupt use of Sa. Vaikala,* evening.] (சது.)

*வைகல்லியம், *s.* Defect, imperfection, குறைவு. W. p. 809. VAIKALYA.

வைகறை—வைகுறு, *s.* Day-break, விடியல். 2. The morning watch from two in the morning till day-break.

வைகறைதுயிலெழு. Rise early in the morning. (*Avv.*)

வைகறையேவா. Come very early.

*வைகாசம், *s.* [*also* வைசாகம்.] The month of May, *strictly* a part of May and a part of June, வைகாசிமாதம்.

*வைகாசி, *s.* As வைகாசம். (*c.*) 2. The sixteenth lunar mansion, விசாகம்.

*வைகாநசம்—வைகானசம், *s.* One of the two *Vaishnuva* Agamas.

*வைகாநசன், *s.* An inhabitant of jungles, a hermit, வனவாசி. [*Sa. Vaikhanasa.*]

வை, கிறேன், தேன், வேன், வைய, *v. a.* To abuse, to revile, திட்ட. (*c.*)

வையட்டும். Let him rail on.

வையச்சொல்ல, *inf.* To instigate one to scold.

வைதல், *v. noun.* [*com.* வசவு.] Abusing, reviling. (சது.)

வைகு, கிறேன், வைகினேன், வேன், வைக, *v. n.* To stay in a journey at night, இராத்தங்க. (*p.*)

*வைகுண்டம்--வைகுந்தம், *s.* The heaven of Vishnu; also any place or shrine where he is supposed to be, திருமால்பதம். [*Sa. Vaikuntha.*]

வைகுண்டஅம்மானை, *s.* A book describing heaven, written in அம்மானை verse.

வைகுண்டன் — வைகுந்தன் — வைகுந்தநாதன், *s.* Vishnu, விஷ்ணு. (சது)

*வைகுல்லியம் — வைகூலியம், *s.* Contrariety, grudge, hatred, &c, எதிரிடை; [*corrup. of Sa. Vaigun'ya.*]

வைகுல்லியம்பண்ண, *inf.* To be contrary, to repel admonition.

வைகை, *s.* [*also* வேகவதி.] The *Vaigai* river, which passes Madura, மதுரையாறு.

வைகைத்துறைவன், *s.* A title of the Pandyan kings of Madura, பாண்டியன். (சது.)

வைக்கல், *s.* [*vul. for* வைக்கோல்.] Straw.

*வைக்கிராந்தம், *s.* A kind of arsenic, ஓர்பாஷாணம். (*R*)

வை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To put, to lay, place, set aside, deposit, to possess, to have, to endow.

நீஅதைஎங்கேவைத்தாய்.........Where did you place it?

இதைவைத்துக்கொள். Keep this.

அப்படியென்றுவைத்துக்கொள்...... Take it for granted that it is so.

நிறுத்திவைக்கிறது. Delaying or deferring.

கிருபைவைக்கிறது. Showing favor.

நாங்கள்ஆண்டவர்வைத்தபயிர். We are God's husbandry.

வைத்துக்கொடுக்க, *inf.* To deliver safe, a deposit.

வைத்துக்கொள்ள, *inf.* To keep for one's self. 2. [*in comb.*] To suppose, to take for granted.

வைத்துப்போட, *inf.* To leave unsettled or to forsake.

என்னைவைத்துப்போட்டுக் கலியாணமுடித்துக்கொண்டான். He [my brother] has taken a wife and left me [his sister] unmarried.

என்னைவைத்துப்போட்டுப்போனான். He has left me in the lurch.

வைத்துவைக்க, *inf.* To lay up, to reserve.

வைப்பு, *v. noun.* Placing, வைத்திருக்கை. 2. A deposit, any thing reserved for a special purpose, சேமநிதியம். 3. Concubinage, கூத்தியார்வைத்தல். (*c.*) 4. A place, இடம். 5. A town, ஊர். 6. A preparation of medicines, மருந்துவைப்பு.

வைப்பாட்டி, *s.* A concubine; [*ex* ஆட்டி, a woman.]

வைப்பாட்டிவைக்கிறது. Keeping a concubine.

